392

# THE INDIAN PILGRIMS' GUIDE.

## இந்திய
## ஸ்தல யாத்திரை மான்மியம்.

BY

**T. B. DAS ROW, B. A.,**

*Tahsildar, Tanjore Dt.*

**PART II**

தஞ்சாவூர் ஜில்லா, தாசில்தார்,

**T. B. தாஸ் ராவ், B. A.,**

இயற்றியது.

ஏடாம பாகம்

PRINTED BY

THE KESARI PRINTING WORKS, MADRAS.

**1932**

Price Rs. 1—4—0.] [விலை ரூ. 1—4—0.

*(All Rights Reserved.)*



T. B. தாஸ் ராவ், B.A.,

இயற்றியவர்.




## படத்திலிருக்கும் எண்களின் விபரம்

1. எட்லி.
2. துளஜாப்பூர்.
3. திரயம்பகம்.
4. தவுலத்தபாத்.
5. பர்ப்ஹணி.
6. பரலி.
7. சோண்டி.
8. தாருகாவனம்.
9. மாஹூர்.
10. தார்வாமோத்திபாக்.
11. மூர்த்துஜாப்பூர்.
12. ஓங்காரமாந்தாத்தா.
13. ரட்லம்.
14. கோத்ரா.
15. துவா.
16. தாக்கோர்.

THE HINDU'S REVIEW OF PART I. (*Appeared in the Hindu, dated* 18-10-1931.)

The author who has made the grand tour enjoined on the pious Hindu by visiting every important place of pilgrimage in the country has brought out a very useful guide for pilgrims based on his own experience. Starting from Rameswaram and taking Ceylon in his stride he leads the reader according to the ceremonial mode of pilgrimage on a clockwise tour of India. In this first part all places of sacred associations in the Ramnad, Madura and Tinnevelly Districts are described as well as the long itinerary commencing at Tinnevelly and passing through Trivandrum, Trichur, Udipi, Gokharnam, Kolhapur and Satara to Pandarpur of which a detailed and vivid account is given. The cycle will be completed in the next volume. The sacred rivers, the famous shrines, their hoary traditions and modes of worship are minutely described besides which very useful and practical information is given on such matters as rest houses, Railway and carriage routes, distances, conveyances etc. Our Tamil travellers will find it a great help.

---

## 1931௵ ஜூலை௴ 16௳ லோகோபகாரி.

### இந்திய ஸ்தல யாத்திரை மான்மியம்.

*மூர்த்தி தலந்தீர்த்தம் முறையால் தொடங்கினர்க்கோர்*
*வார்த்தை சொல்ல சற்குருவும் வாய்க்கும் பராபரமே.*

என்பது தமிழகத்து ஞானியான தாயுமானார் வாக்கு. இந்த அரிய வாக்கை மேற்கொண்டு ஸ்தல யாத்திரை செய்வோர் இக்காலத்தில் மிகச்சிலர். அதிலும் ஆங்கிலம் படித்தவருள் ஸ்தல யாத்திரை செய்வோர் மிக மிகச் சிலர்; ஆங்கிலம் படித்து அரசாங்கத்தில் உத்தியோகஞ் செய்கிறவர்களிலோ மிகவும் அரியர். ஆனால் ஆங்கிலத்தில் பி.ஏ., பட்டம் பெற்று, அரசாங்கத்தில் தற்காலம் சீகாழி தாசில்தாராயிருக்கும் அன்பர் ஸ்ரீமான் டி. பி. தாஸ் ராவ் இதற்கு விலக்காக விளங்குகிறார். அவர் தெற்கே கன்னியா குமரியிலிருந்து வடக்கே இமயமலை வரை, மேற்கே துவாரகையிலிருந்து கிழக்கே பூரி ஜகந்நாதம்வரை சிவபெருமானும் திருமாலும் பல கோலங்களில் திகழும் திவ்ய ஸ்தலங்கள் பல

வற்றுக்கும் தமது தர்ம பத்னியுடன் சென்று அங்கங்கே கண்ட காட்சிகளையும் அடைந்த அநுபவங்களையும் அழகாக எழுதியிருக்கிறார்.

அன்பர் தாஸ் ராவ் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டிராமல், தஞ்சையை ஆண்ட சரபோஜிராயரின் மகாராஷ்டிர வகுப்பில் பிறந்தவராயிருப்பினும், இந்நூலை அழகான தமிழில் தெளிவான முறையில் எளிய நடையில் எழுதியிருப்பது போற்றத்தக்கது. அவர் மிகுந்த தெய்வ பக்தியுடனும், தேசபக்தியுடனும், பொதுநல ஊக்கத்துடனும் இதனை எழுதியிருக்கிறார். அவர் அங்கங்கே கண்ட காட்சிகளையும் அநுபவங்களையும் ஊர் விநோதங்களையும் எழுதியிருப்பது படிப்பதற்கு இனிய, அரிய பொழுதுபோக்காயிருக்கிறது. ஆயிரக்கணக்கான பணம் செலவிட்டு, அளவற்ற கஷ்டங்களை அடைந்து அறியவேண்டிய பல அரிய விஷயங்களை இந்த நூலைப்படிப்பதால் அறிந்துகொள்ளலாம். இப்பொழுது வெளியாயிருப்பது முதற் பாகம். இரண்டாம் பாகத்தையும் விரைவில் வெளியிடுமாறு தமிழ் மக்கள் இந்தப் புத்தகத்தை வாங்கிப்படித்து ஆசிரியருக்கு ஊக்கமூட்டுவார்களென்று நம்புகிறோம். மேலே கண்ட ஆசிரியரிடத்திலும் சுதேசமித்திரன் புத்தகசாலைகளிலும் கிடைக்கும். 280 பக்கமுள்ள இப்புத்தகத்தின் விலை ரூபாய் 1—4—0. தான்.

---

## 1931ஸ் புரட்டாசிமீ ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்.

### இந்திய ஸ்தலயாத்திரை மான்மியம்—முதற்பாகம்.

[ஆசிரியர். T. B. தாஸராவ், B.A., தாசில்தார், சீகாழி, தஞ்சை ஜில்லா, விலை ரூ. 1—4—0.]

சிற்றின்பத்தைக் கடந்து பேரின்பம் எய்தற்குத் துறைகள் பல. அவற்றுள் மண்ணுலகில் பக்தர்களைக் காக்கும்பொருட்டுக் கடவுளே உருத்தாங்கித் திருக்கோயில் கொண்டிருக்கும் திவ்வியத் தலங்களுக்குச் சென்று பரமனை வழிபட்டு தரிசிப்பது ஒன்றாகும். ஆனால் புண்ணிய பூமியாகிய நம் நாட்டில் ஆண்டவன் உறையும் ஆலயங்கள் அநேகம். ஆலயங்கள் அனைத்தையும் தரிசிப்பதற்குப் பொருள்வசதி முதலிய எல்லா சௌகரியங்களையுமுடைய சிலருக்கே கைகூடும். பாஷை, ஆசாரம் முதலியவைகளால் வேறுபட்டுள்ள நாடுகளுக்குச்சென்று, ஆண்டுள்ள ஆலயங்களைச் செவ்வனே கண்ணுறுதற்கு வழிகாட்டும் நூல் ஒன்று அவசியம் இருக்கவேண்டும். இதுகாறும் தமிழகத்தில் இதற்காக வெளிவந்துள்ள நூல்கள், புராதனப் புராணங்களிலுள்ள தலங்களின் மகிமை பெருமைகளை ஒன்று சேர்த்து எழுதியவைகளே தவிர நேராகக் கண்டு எழுதியவைகள் அல்ல. ஆனால் இந்நூலோ இதனது ஆசிரியர் எல்லா தேசங்களுக்கும் சென்று நேரில்கண்டு, அதனால் அடைந்த ஆனந்தத்தை அனைவரும் யாதொரு சிரமமுமின்றி அடைய வேண்டுமென்ற உயரிய நோக்குடன் எழுதப்பட்டதாகும். இம்முதல் பாகத்தில், இராமேசுவரம் முதல், மதுரை, திருநெல்வேலி, திருவனந்தபுரம், திருச்சூர், உடுப்பி,

கோகர்ணம், கோலாப்பூர், ஸாத்தாரா, பண்டரிபுரம் முதலிய தலங்களை யும், இவைகளுக் கடுத்தாற்போலுள்ள மற்றைய தலங்களைப்பற்றியும் வரையப்பட்டிருக்கின்றது. போக்குவரவுக்கான பாதைகளும், தங்கு மிடங்களும், சரித்திர சம்பந்தமான குறிப்புகளும் வரையப்பட்டிருக் கின்றன. மேலும் இதில் பார்ப்பதற்குரிய கண்காட்சிச்சாலை முதலிய வைகளைப்பற்றியும் எழுதப்பட்டிருக்கின்றது. சுருங்கக்கூறின் இதை ஒரு இந்திய தல சரித்திரமென்றே கூறலாம். இதனது எளிய நடை யும், தூய தமிழும் போற்றத்தக்கது. யாத்திரிகர்களுக்குப் பெரும் பயனை யளிக்குமென்று நம்புகிறோம்.

---

## திராவிடன்.

### இந்திய ஸ்தல யாத்திரை மான்மியம்.

இப்பெயர் புனைந்த புத்தகம் ஒன்று நமது பார்வைக்கு வரப்பெற் றோம். இஃது தஞ்சாவூர் ஜில்லாவில் தாசில்தாராகவிருக்கும் டி. பி. தாஸராவ் பி.ஏ., அவர்களால் இயற்றப்பெற்றது. இவருக்குத் தாய் பாஷை மராட்டியே ஆயினும் தேச பாஷையாகிய தமிழிலும் தக்க பாண் டித்தியம் பெற்றிருப்பது சந்தோஷப்படத்தக்க விஷயம். தமிழைத் தாய் பாஷையாக உடையவர்களுக்கே தமிழ்வரும் என்று சொல்வதற்கு இல்லை. இப்புத்தகத்தில் சுமார் 50 ஸ்தலங்களின் விஷயங்கள் இருக் கின்றன. ஸ்தலங்கள் இருக்கும் இடங்களையும் இருப்புப்பாதை சௌ கரியங்களையும் விரிவாகக் கூறியிருக்கின்றார். இதன் ஆசிரியர் பல ஸ்தலங்களுக்கும் சென்று கண்ட குறிப்புகளை இங்கு குறிப்பிட்டிருக் கின்றார். இருப்புப் பாதையின் அமைப்பைப்பற்றிய சித்திரப்படம் ஒன்று சேர்க்கப்பட்டிருக்கின்றது கம்பர், சேக்கிழார் முதலிய பெரி யோர்களின் மேற்கோள் பாடல்களும் காணப்படுகின்றன. ஸ்தல யாத் திரை செய்ய விரும்புவோருக்கு இது இன்றியமையாத தோழனாக இருக் கும். பக்தியில்லாதவர்களுக்கும்கூட படிக்கப் படிக்க இன்பத்தைத் தரக்கூடிய விஷயங்கள் பலவிருக்கின்றன. புத்தகம் 240 பக்கமும் 10 அத்தியாயமும் கொண்டன. மூன்று அத்தியாயமே நாம் திருப்பிப் பார்க்க நேரிட்டது. மிக அருமையான பல சரித்திரக் குறிப்புகள், புராண விசேஷங்கள், கிழக்கதைகள், அவர் சொந்த அபிப்பிராயங்கள், சில சொற்களுக்கு அர்த்தங்கள், இயற்கை வர்ணிப்பு, சமுதாயம், சீர் திருத்தம், தானதர்மங்கள் முதலிய பல விஷயங்களை அங்கும் இங்கும் குறிப்பிடுகின்றார். இதன் விலை 1—4—0. வேண்டுவோர் ஆசிரியரிடத் திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

டி. பி. தாஸ்ராவ், பி.ஏ.,

தாசில்தார், சீகாழி.

# விஷய சூசிகை.


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | முன்னுரை. | (1)—(2) |
| 2. | முதற்பாகத்தின் முகவுரை. | (3)—(8) |
| 3. | இரண்டாம்பாகத்தின் முகவுரை. | (9)—(11) |
| 4. | பிழை திருத்தம். | (12) |
| 5. | முதலாவது அத்தியாயம் :—பண்டரிபுரம் முதல் பம்பாய் வரை. | 1—37 |
| 6. | இரண்டாவது அத்தியாயம் :—பம்பாய் முதல் நாசிக் பஞ்சவடிவரை. | 38—61 |
| 7. | மூன்றாவது அத்தியாயம் :—நாசிக் பஞ்சவடி முதல் திரயம்பகம் வரை. | 62—146 |
| 8. | நான்காவது அத்தியாயம் :—திரயம்பகம் முதல் மன்மாட் வரை. | 147—171 |
| 9. | ஐந்தாவது அத்தியாயம் :—மன்மாட் முதல் மாஹ-ேர் வரை. | 172—190 |
| 10. | ஆறாவது அத்தியாயம்:—மாஹ-ேர் முதல் ஓங்கார மாந்தாத்தா வரை. | 191—206 |
| 11. | ஏழாவது அத்தியாயம் :—ஓங்கார மாந்தாத்தா முதல் உஜ்ஜயினி வரை. | 207—217 |
| 12. | எட்டாவது அத்தியாயம் :—உஜ்ஜயினி முதல் டாக்கோர் வரை. | 218—226 |
| 13. | ஒன்பதாவது அத்தியாயம் :—டாக்கோர் ஸ்தல வருணனை | 227—259 |
| 14. | ஸ்தலவிவர அட்டவணை. | i—iv |

# முன்னுரை.

" மூர்த்தி தலம் தீர்த்தம் முறையால் தொடங்கினர்க்கோர்
வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே."

இதன் கருத்தை உணர்ந்த நம் முந்தையோர் யாத்திரை செய்வதை ஒரு முக்கிய கடமையாகக் கொண்டிருந்தனர். பண்டைக் காலத்தில் சங்கராச்சாரியார், ஆழ்வார்கள், நாயன்மார்கள், புத்தர், இயேசுகிறிஸ்து, பட்டணத்தடிகள், தாயுமானசுவாமிகள், இராமலிங்க சுவாமிகள் ஆகிய பெரியார்கள் முதற்கொண்டு நம் மூதாதைகள் அனைவரும் யாத்திரை செய்து கருணாநிதியாகிய எம் கடவுளார் பல திருக்கோலங்களோடு ஆங்காங்கு கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கும் தலங்கள்தோறும் சென்று தூய நற்காட்சிகளையும் அருள்களையும் பெற்றனர். அத்தகையினோரது சந்ததியிற் பிறந்தவர்களெனப் பெருமைகொள்ளும் நாமும் அவர்களைப் பின்பற்றுதல் அவசியமாகும்.

" இந்திய ஸ்தல யாத்திரை மான்மியம் " என்னும் இந்நூலில் இந்தியாவை இராமேசுவரத்திலிருந்து தொடங்கி முறையாக (இலங்கையுட்பட) திருச்சூர், மங்களூர், பம்பாய், இமயமலையுச்சி முதலிய வழியாக வலம் வந்து அதன்கண் உள்ள புண்ணிய நதிகளிலாடியும், ஆங்காங்கு உள்ள மூர்த்திகளை சேவித்தும், பயன் பெறவேண்டிய முறைப்படி எழுதப்பட்டிருப்பதால், யாத்திரை செய்பவருக்கும் மற்றோருக்கும் மிகவும் பயன்படத்தக்கதொன்றாகும். மேலும் யாத்திரை செல்லும் வழிகளில் ஆங்காங்கு தங்குமிடங்கள், பாதைகளின் தன்மைகள், அதனதன் தூரங்கள், இருப்புப்பாதை வண்டிகள், மற்றும் வண்டிகள், மோட்டார் வண்டிகள் ஆகிய இவற்றின் வசதிகள் முற்றும் இதன்கண் கூறப்பட்டுள்ளன.

நாகரிகத்தின் வாய்ப்பட்டு யாதினும் ஐயமே கொள்ளும் மக்கள் பலர் வாழும் இக்காலத்தில், இந்நூல் நம் புராதனக் கொள்கைகளின் சிறப்பைப் புதிய முறையில் எடுத்தாளுவது வாசிப்போர் மனத்தே நேரிற் சென்று தரிசித்தாற்போன்று உருவெழுதுகின்றது. இதன் ஆசிரியர் தாம் நேரிற் சென்று ஒவ்வொன்றையும் தரிசித்தும், நீராடியும், உள்ளவாறு எழுதியிருப்பது இந்நூலை வாசிப்பார்க்கு இனிது புலனுகும். இவர் மராட்டி, இந்தி, ஆங்கிலம், தமிழ் ஆகிய மொழிகளில் புலமைவாய்ந்தவராதலின் வடதேசத்தேயுள்ள இதுவரை தமிழில் வெளிவராத அரிய பல சரிதங்களையும், ஆங்காங்கு இந்நூல் சம்பந்தப்பட்டவரை மிக ஆராய்ந்து சேர்த்துள்ளது இதற்கோர் அரும்பெரும் அணிகலன் ஆகின்றது.

தமிழ் மக்கள் இப்புதிய நூலை வழித் துணையாய்க்கொண்டு மலர்மிசையேகினன் மாணடிசேர்ந்து நிலமிசை நீடுவாழ்வாராக.

**சுவாமி பரிபூரணனந்தா,**

ஸ்ரீ ராமகிருஷ்ணமடம்,

மயிலாப்பூர், சென்னை.

# முகவுரை.

நீராடையுடுத்த இந்நிலமகட்கோர் திலகமாயும், இதை யொத்த புண்ணியபூமி வேறிலது என்னும் தனிப்பெரும் புகழைப் பெற்றும், அகண்ட கண்டங்கள் ஐந்தினும் உள்ள பல்வித இயற்கை விநோதங்களைத் தன்னிடம் குறைவற அமையப் பெற்றும் விளங்குவதான நம் இந்தியாவை முறைப்படி வலம் வந்து அதிலுள்ள புண்ணிய தீர்த்தங்களிலாடியும், எல்லாம் வல்ல இறைவன் இக்கலியுகத்திற் பிறந்துழன் றிறக்கும் அத்திமுத லெறும் பீறான உயிரத்தனையும் எளிதில் உய்தற்பொருட்டு, காட்சிக் கெளியனாய்ப் பலவித உருவங்களோடும் பலவிதக் கோலங்களோடும் ஆங்காங்கு கோவில் கொண்டெழுந்தருளியிருக்கும் திவ்விய க்ஷேத்திரங்களை தரிசித்தும், மூர்த்திகளை சேவித்தும் வர வேண்டுமென்ற பேரவா நெடுநாளாக என்மனத்திற் குடிகொண்டிருந்து வருத்திவந்தது. ஆயினும் எண்சாணுடம்பில் ஒரு சாணளவேயிருப்பினும், ஒருநாளுணவை ஒழியாமலும், இருநாளுணவை ஏலாமலும், இந்நிலவுலக மாந்தர்களைப் பேரிடும்பையிலாழ்த்தித் துன்புறுத்திவரும் சோறிடும்பையாய பாழும் வயிற்றோடு வாழுங் கடமை எனக்கும் ஏற்பட்டிருந்தமையின், அரசாங்கப் பெருங் கடலில் அணுவளவாய நீர்த்திவலைபோன்றதும், ஊதியம் அற்பமாயினும் போதிய அவகாசமில்லாததுமான ஓர் அற்ப உத்தியோகத்திலமர்ந்து, அதன் வேலைத் தொல்லையாற் பிணிப்புண்டு, சற்றேனும் அங்குமிங்கும் அகலமுடியாது, எனது பேரவா வீணவாவாகும்படிக் காலங்கழித்து வந்தனன்.

இறுதியில், ஈசன் திருவருளைக் கொண்டு எவ்வகையினும் என் இச்சையைப் பூர்த்திசெய்து கொள்ளவிரும்பி, 1925-ம் வருஷத்தில் 4 மாதகாலம் உத்தரவுபெற்று, அவ்வருஷம் பிப்ரவரி மீ 25வ தஞ்சையினின்று புறப்பட்டு பழனி, மதுரை, இராமேஸ்வரம் முதலிய க்ஷேத்திரங்களை தரிசித்துக்கொண்டு, பரமபவித்திரமான தனுக்கோடி தீர்த்தத்தின் மிருத்திகையைக் கைக்கொண்டு, கப்பலேறி இலங்கை சென்று, அவ்வழகிய தீவிலமைந்துள்ள சிவனடிபாதம் என்றும், சமந்தம் என்றும் வழங்குகிற உயர்ந்த குன்றின் (Adam's Peak) மேலுள்ள * புத்தபாத

* **குறிப்பு:—இதைச் சைவர்கள் பரமசிவன் திருப்பாதம் என்றும், முகமதியர்கள் பாவா ஆதம் என்னும் பெரியாரின் திருவடி என்றும்,**

பீடிகையுள்படப் பலதலங்களுக்குஞ் சென்று தரிசித்தான பிறகு, கொளும்பிலிருந்து புகைக்கப்பலேறி, தூத்துக்குடி சென்று அங்கிருந்து தெற்கிலுள்ள ஸ்தலங்களை தரிசித்துக் கொண்டு வடக்கே திரும்பி, ஆலப்புழை, அம்பலப்புழை, வைக்கம், எர்ணு குளம், திருச்சூர் மார்க்கமாக மங்களூர் சென்று, அங்கு புகை வண்டியை விட்டு மோட்டார்வண்டியிலேறி, உடுப்பி, கோகர்ணம் முதலிய திவ்விய க்ஷேத்திரங்களை தரிசித்துவிட்டு, ஹூப்ளியை அடைந்து மீண்டும் புகைவண்டி யேறி, கோலாப்பூர், ஸாத்தாரா, பூனா மார்க்கமாகப் பண்டரிபுரம் சென்று, ஸ்ரீ பாண்டுரங்கன் திருவருள் பெற்று, நாசிக் பஞ்சவடி சேர்ந்து, அங்கிருந்தபடி வடக்கு நோக்கிப் போகப் போதிய அவகாசமில்லாததாலும், மேலும் சில மாதங்கட்கு உத்தரவு கேட்டும் கிடைக்காமையாலும், பஞ்சவடியினின்று கொஞ்சமும் வடக்கே போக வியலாமல், ஜப்பல்பூர், பிரயாகை, காசி, கயை, ஜகந்நாதம் முதலிய ஸ்தலங் களை தரிசித்துக்கொண்டு கீழ்கரையோடு தெற்கு நோக்கித் திரும்பி பெஜவாடா இராஜமஹேந்திரபுரம் மார்க்கமாக இராமேஸ் வரம் சென்று, ஸ்ரீ ராமலிங்கத்திற்கும், பர்வத வர்த்தனியம்மைக் கும் கங்காபிஷேகம் செய்வித்து யாத்திரையை ஒருவாறு பூர்த்தி செய்துகொண்டனன்.

மீண்டும் 1926-ம் வருஷத்தில் 6 மாதங்கட்கு உத்தரவு பெற்றுக்கொண்டு, அவ்வருஷம் ஏப்ரல்மீ 26௳ தஞ்சையை விட்டுப் புறப்பட்டு, சிதம்பரம், திருக்கழுக்குன்றம், காஞ்சிபுரம், திருத்தணிகை, கிஷ்கிந்தை (விரூபாட்சம்), பீஜாப்பூர், ஷோலாப் பூர், பண்டரிபுரம் மார்க்கமாக பம்பாய் சென்று, அங்கிருந்து புறப்பட்டு சூரத், ப்ரோச் (Broach), பரோடா, உஜ்ஜயின் (அவந்திகை), டில்லி, மீரத் (Meerut), மார்க்கமாக சுவர்க்கத் துவாரமெனப் புகழப்படும் ஹரித்துவாரம் சென்று, அங்கிருந்து

கிறிஸ்துவர்கள் மனிதசிருஷ்டியில் முதன் மனிதரான ஆதாம் என்பவ ரின் அடிச்சுவடு என்றும், புத்தர்கள் தாங்கள் வழிபடும் கடவுளாகிய சமந்தபத்திரரின் சரணகமலத்திருப்பாதம் என்றும், அவரவர்கள் மதத் திற்கேற்றவாறு சொல்லிக் கொள்ளுகின்றனர். ஆகவே இக்குன்றின் மேலிருக்கும் பாதத்தைக் கண்டு வணங்க, இந்துக்கள், புத்தர்கள் கிறிஸ்துவர்கள், முகமதியர்கள், ஆகிய எல்லா மதத்தினரும் கூட்டம் கூட்டமாகச் செல்கின்றனர். எம்மதமும் சம்மதமாகக் கொள்ளும் தலம் இது ஒன்றேயாதலின் இதை தரிசித்தல் மிக்க விசேஷமெனக் கருதப்படுகின்றது.

சுவர்க்க பூமியாகக் கருதப்படும் இமயமலையின் மீதேறிக் கால் நடையாய் நடந்து பஞ்சபிரயாகைகள் எனப்பிரசித்தி பெற்றவைகளுள் தேவபிரயாகை, ருத்திரபிரயாகை, விஷ்ணுபிரயாகை என்னும் மூன்று பிரயாகைகளிலும் தீர்த்தமாடி, ஹரித்துவாரமிருந்து சுமார் 145 மைல் தூரத்தில் மந்தாகினி நதியின் உற்பத்தி ஸ்தானத்திலுள்ளதும், பஞ்ச பாண்டவர்கள் சுவர்க்கத்திற்கேகினதாகக்கருதப்படுவதுமான திருக்கேதார க்ஷேத்திரத்தையும், ஷெ ஹரித்துவாரமிருந்து 183 மைல் தூரத்திலுள்ளதும், அளகாபுரியென்று சொல்லப்படும் திவ்விய பிரதேசத்தின் இடையில், அளகேசன் மகளாகக் கருதப்படும் அளகநந்தை (Alaknanda) யென்னும் விஷ்ணுகங்கையின் உற்பத்தி ஸ்தானத்திற்கருகிலுள்ளதுமான பதரிகாசிரமத்தையும் தரிசித்து, பதரிகாசிரமத்திற்கருகிலுள்ள பிரமகபாலமென்னும் பரமபவித்திரமான குன்றின்மேல் பிதுர்க்கடன்களை முடித்துக்கொண்டு, திருக்கைலாயத்திலுள்ள மானஸ ஸரோவரம் என்னும் தெய்வீக தடாகத்தினின்று இழிந்து வருவதாகக் கருதப்படும் வசுதாரை என்னும் மகத்தான புண்ணிய தீர்த்தத்தில் மூழ்கி, திரும்பும் வழியிலுள்ள கர்ணபிரயாகை, நந்தபிரயாகை என்னும் இரண்டு பிரயாகைகளிலும் ஸ்நானஞ் செய்துகொண்டு ராணிகேத் (Ranikhet), நைனிட்டால் (Naini-tal) மார்க்கமாகக் காத்கோடம் (Khatgodam) என்னும் ஸ்டேஷன் வந்து சேர்ந்து, சுமார் இரண்டு மாதங்கட்குமுன் விட்டுவிலகின இருப்புப்பாதையைக் கண்டுபிடித்து அதிலேறி சீதாப்பூர், மிஸ்ரிக், நைமிசாரணியம், இலட்சுமணபுரி (Lucknow) அயோத்தி, நந்திக்கிராமம் முதலிய புண்ணிய ஸ்தலங்களை தரிசித்துக் கொண்டு, மீண்டும் காசிப்பட்டினம் சேர்ந்து, கங்கையில் தீர்த்தமாடி, விஸ்வேஸ்வரரை சேவித்துக்கொண்டு, விந்தியாவாசினியம்மை உறைவிடமாகக் கொண்டிருக்கும் மிர்ஜாபூர், அலகாபாத் மார்க்கமாக மதுரா (Muttra) சென்று, அங்கும் அதற்கருகிலுள்ள கோகுலம், பிருந்தாவனம், கோவர்த்தனம், இராதாகுண்டம் என்னும் க்ஷேத்திரங்களிலும், அத்தலங்களின் இடையில் ஓடும் பரமபவித்திரமான யமுனைநதியின் இருகரைகளிலும் கிருஷ்ண பரமாத்மாவினுற் செய்யப்பட்ட அனேக லீலாவினோதங்கள் நடந்த இடங்களைக் கண்ணுற்று, தெற்குநோக்கித் திரும்பி, அஜ்மீருக்கடுத்த புஷ்கரதீர்த்தத்தில் ஸ்நானத்தை முடித்துக்

கொண்டு, அங்குக் கோவில் கொண்டுறையும் பிரமதேவரைப் பூசித்து, கதியவார் (Kathiawar) தீபகற்பத்திலுள்ள துவாரகாபுரி, ஸோமநாதபட்டினம் (பிரபாஸ க்ஷேத்திரம்) முதலிய புண்ணிய க்ஷேத்திரங்களையும், அங்கெழுந்தருளியிருக்கும் துவாரகாபதியையும் ஸோமநாதனையும் தரிசித்தானபிறகு, பம்பாய் மார்க்கமாகத் திரும்பி, வழியிலுள்ள திருக்காளத்தி, திருவேங்கடம், திருவண்ணாமலை, திருக்கோவலூர் முதலிய திவ்விய க்ஷேத்திரங்களை தரிசித்து, மீண்டும் இராமேஸ்வரம் சென்று, முன்சொல்லியபடி பர்வதவர்த்தனி சமேத இராமநாதசுவாமிக்கு ஹரித்துவாரமிருந்தும், பதரிகேதாரங்களிலிருந்தும் எடுத்துவந்த கங்கையினால் அபிஷேகம் செய்வித்து யாத்திரையை முடித்தனன்.

ஆகவே, யான் ஒரு கர்ப்பவாச காலமாகிய 10 மாதகாலம் இந்தியா முழுதும் இமஸேதுபரியந்தம் சுற்றிக் கூடியவரையில் காசி, காஞ்சி, மாயா, மதுரா, அயோத்தி, அவந்திகை, துவாரகை ஆகிய சப்த மோட்சபுரிகள் உட்பட நமது புராணங்களின் வாயிலாகப் புண்ணிய க்ஷேத்திரங்களெனத் தெரிந்துகொண்டவைகள் எல்லாவற்றையும் தரிசித்துவிட்டு, ஆங்காங்கு பேசும் மொழிகளையும், பார்க்கவேண்டிய விசேஷங்களையும், மற்றும் என் கண்களுக்குப் புலப்பட்ட அரிய விஷயங்களையும் அப்போதுக்கப்போதே ஒரு புத்தகத்திற் குறித்துக்கொண்டு வந்திருந்ததைக் கண்ணுற்ற என் நண்பர்களிற் பலரின் வேண்டுகோட்கிணங்கியும், இன்றிருந்த ஊரில் நாளையிராமலும், இருக்க இடமின்றியும், உண்ண ஊணின்றியும் வருந்திச் சேகரித்த விஷயங்களை என் சகோதர சகோதரிகளான தமிழ்த்தாய் மக்கட்குதவ நினைத்தும், இப்புத்தகத்தைப் "பஞ்சுபடா நூலையும் பலர் நெருடாப் பாவையும், கீண்டெஞ்சியழுக்கேறுக் கலையையும், சொல்லேருழவரகம் தீயாது சொல்விளையும் செய்யுளையும்" கொண்ட அமிழ்தினுமினிய தமிழ்மொழியில் வெளியிடத் துணிந்தனன்.

ஃவிர இந்நூலில் எழுதியிருக்கும் விஷயங்களை யான் யாத்திரை சென்றபோது இருந்தவண்ணமும் கண்டவண்ணமும் வரைந்திருப்பதால், அப்போது மட்சாலையாயிருந்தது இப்போது கற்சாலையாகவும், கற்சாலை இருப்புப்பாதையாகவும் மாறியிருக்கலாம். அப்போது மாட்டு வண்டியிலும், குதிரை வண்டியிலும் போகவேண்டியிருந்த தலங்கட்கு, இப்போது மோட்டார் வண்டியிலும்

ரயில் வண்டியிலும் போகக்கூடிய வசதிகள் ஏற்பட்டிருக்கலாம். அப்போதிருந்த சத்திரங்களும் தர்மசாலைகளும் இப்போது இல்லாது எடுபட்டிருக்கலாம். அப்போதில்லாத இடங்களிற் புதிதாக சத்திரங்களும் தர்மசாலைகளும் ஏற்பட்டிருக்கலாம். ஆதலின் யாத்ரீகர்கள் இத்தகைய மாறுபாடுகளைக் கண்டவுடன் இப்புத்தகத்திற் காணும் விஷயங்கள் தவறாயிருத்தல் வேண்டுமென்று எண்ணாதிருக்க வேண்டுகின்றேன்.

மேற்சொல்லியவாறு, இந்நூல் எழுதியதன் கருத்து நம் தமிழ்நாட்டிலிருந்து வடநாட்டிற்கு யாத்திரை போகும் தமிழ்த் தாய் மக்கட்கு ஓர் வழிகாட்டிபோல் உதவல் கூடும் என்பது ஒன்றே தவிர, என் தமிழ்ப்பயிற்சி, புராண இதிகாச உணர்ச்சி, பக்தி முதிர்ச்சி ஆகிய இவைகளைக் காட்டவல்ல என்பதை இதைப் படிக்கும் பெரியோர்கள் மனதிற் கொள்ளல்வேண்டும் என்று பன்முறையும் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

மேலும் யான் தமிழ்த்தாயின் உதரத்திற் பிறக்கும் பெரும்பேற்றைப் பெற்றவனல்லன். தமிழிற் சிறிதேனும் பயிற்சியுடையவனுமல்லன். "வேற்றுமொழி பேசுவோரே தமிழில் நூல் எழுதப் புகுந்திருக்கும்போது நாம் நம் தாய்மொழியாய தமிழைப் புறக்கணிப்பது தர்மமன்று" என்னும் ஓர்வித உணர்ச்சி தமிழ்த் தாய்மக்களின் மனத்தில் உதிக்கும் பொருட்டே யான் இந்நூலைத் தமிழில் எழுதத்துணிந்தது. ஆதலின் இந்நூலில் கணக்கற்ற குறைகளும் வழுக்களும் காணப்படுவது இயற்கையே. அவ்வாறு தென்படும் குறைகளையும் வழுக்களையும் முற்றுங்கற்ற மூதறிவுடையோர் எனக்குத் தெளிவுறக்காட்டி, மறு பதிப்பிலாவது திருத்தி வெளியிடுமாறு உதவிபுரிய வேண்டுகின்றனன்.

இராமேசுவரமிருந்து புறப்பட்டு இந்தியாவை வலமாகச் சுற்றி வரும்வழியிலும், உமாதேவியைத் தன் புத்திரியாகவும், எல்லாம்வல்ல இறைவனை கைலாசபதியைத் தன் மருமகனாகவும் பெற்று, குபேரபட்டினமாகிய, அளகாபுரி முதலிய தேவ நகரங்களையும், தேவதாரு முதலிய வானுலகவிருட்சங்களையும், கண்டகி, கௌசிகி, கோமதி, கங்கை, யமுனை, ஸரஸ்வதி, * அளகநந்தை, சுவர்க்கத்துவாரி முதலிய சுவர்க்கலோக நதிகளையும், மானஸ ஸரோவரம் முதலிய தெய்வீக தடாகங்களையும், ஜோசிமடம்,

* குறிப்பு:— அளகநந்தை = குபேரன்மகள்.

* துலிம்மடம் (Tulim Math) முதலிய பிரபலமான மடங்களையும் தன்னுள் ஐக்கியம் செய்துகொண்டிருக்கும் சுமேரு, பொன்மலை, பர்வதராஜன், ஹேமகூடம் என்னும் பல திருநாமங்களையுடைய இமயமலையின்பேரிலும், பதரி, கேதாரம் போகும் மார்க்கத்திலும் மற்றும் இந்தியாவின் பலபாகங்களிலும் உள்ள தீர்த்த க்ஷேத்திரங்களைப்பற்றி எனக்கெட்டின மட்டில் விரித்துக் கூறப்புகுந்தேனாதலின், ஒரே புத்தகத்தில் எழுதிமுடிக்க இடங்கொடுக்கவில்லை. இதையொத்த மற்றும் சிலபாகங்கள் கூடிய சீக்கிரம் வெளிவரும். அவைகளையும் ஆஸ்திக நண்பர்கள் அனைவரும் அன்புடன் ஆதரிப்பார்களென நம்புகின்றனன்.

இப்புத்தகத்தை இயற்றுமாறு என்னை அடிக்கடி தூண்டி, எனக்குப் போதிய ஊக்கமளித்துவந்த கும்பகோணம் பட்டினம் உயர்தரக் கல்விச்சாலை (The Town High School) தலைமைத் தமிழ்ப் பண்டிதர் திருவாளர் பாலசுப்பிரமணியபிள்ளை அவர்கள், கும்பகோணத்திற்கடுத்த கொண்டாங்குடி திருவாளர் இராசமாணிக்கம் பிள்ளை அவர்கள், மன்னார்குடி தமிழ்ப் பண்டிதர் திருவாளர் ம. நா. சோமசுந்தரம் பிள்ளை அவர்கள், இப்புத்தகத்தை அச்சிட்டு வரும்போது அச்சுப் பிழைகளை ஆய்ந்து திருத்திக்கொடுப்பதில் எனக்குப் பேருதவிபுரிந்து வந்த தஞ்சை திருவாளர் கனகசபாபதி பிள்ளை அவர்கள் ஆகிய இவர்கட்கும், பேரன்போடு இப்புத்தகத்திற்கு முன்னுரை உதவியவரும், இந்நிலவுலகில் வாழும் ஜீவகோடிகளின் உபகாரார்த்தமாய், "பரோபகாரம் இதம் சரீரம்" என்னும் ஆன்றோர் மொழிக்கிணங்கத் "தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராய்" வாழ்ந்து வரும் சென்னை ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்துத் தொண்டர்களுட் சிறந்த தமிழறிஞருமான ஸ்ரீ பரிபூரணானந்த சுவாமிகட்கும், மற்றும் பொதுவாய் இப்புத்தகத்தை எழுதி அச்சிட்டு வெளியிடுவதில் எனக்குப் பல்வகையானும் ஊக்கமூட்டி வந்த என் அன்புள்ள நண்பர்கள் அனைவருக்கும் யான் சொல்லாற் சொல்லொணாக் கடமைப்பட்டுள்ளேன்.

இங்ஙனம்,

T. B. தாஸ் ராவ்.

---

* குறிப்பு:—துலிம்மடம் என்பது திபேத் தேசத்திலுள்ள மடங்களுள் முதன்மையானது.

# இரண்டாம் பாகத்தின் முகவுரை.

இந்நூலின் முதற்பாகம் பூலோக வைகுண்டமென வானுலகத்தாராலும் புகழப்படும் பண்டரீபுர வருணனையோடு முடிவு பெற்றது. மகா புண்ணிய பூமியாகிய நம் பரதகண்டத்தை முறைப்படி வலம் வரும் மார்க்கத்தில் முதற்பாகத்தில் வருணித்துள்ளது சுமார் நாலிலொரு கூறுகலாம். ஆயினும், அதில் தமிழ் நாட்டுத் தலங்கள் மிகுந்திருந்தமையானும், தமிழ் நாட்டுத் தலங்களைப்பற்றிய விஷயங்களை தமிழ்நாட்டினருக்கு விரித்துக்கூறுவது அவசியமின்மையானும், அப்பாகத்தைக் கூடியவரையில் சுருக்கியே எழுதி முடித்தனன். இப்பாகத்தில் விவரித்துள்ள ஸ்தலங்கள் அனைத்தும் மகாராஷ்டிரம், ஹிந்தி முதலிய வேற்று மொழிகள் வழங்கும் பிரதேசத்தில் இருக்கின்றனவாதலானும், அவைகளுள் அனேகம் இருப்புப்பாதை மார்க்கத்திலிராமல் அதிகதூரம் விலகி இருக்கின்றனவாதலானும், அவைகளுக்குப் போகும் மார்க்கங்களையும், ஆங்குச் சென்றபின் காணவேண்டிய காட்சிகள், ஆடவேண்டிய தீர்த்தங்கள், சேவிக்கவேண்டிய மூர்த்திகள் இவைகளை ஆங்காங்குள்ளோரிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளுதல் எளிதல்லவாதலாலும், அவைகளைப்பற்றிச் சற்று விரித்தே கூறப்புகுந்தமையின் இப்பாகத்தில் பூர்வத்தில் எடுத்துக்கொண்ட பூவலயாத்திரையில் அதிகதூரம் செல்லவியலாது போயிற்று.

ஆக்கல், அளித்தல், அழித்தல் என்னும் முத்தொழில்களையும் மேற்கொண்டு நடாத்தும் மும்மூர்த்திகளாகிய பிரமன், விஷ்ணு, உருத்திரன் ஆகிய இவர்களுள் நடுநாயகமாக விளங்குபவரும், ஜீவகோடிகள் சற்றும் விரும்பாதுபெற்று அவதியுறும் பிறப்பிறப்புக்களையளிக்கும் மற்றிருவர்போலன்றி, இக்கலியுகத்தில் அவ்விருவர்களால் அளிக்கப்படும் பிறப்பிறப்பெனும் பேரலைகளையுடைய பெரும்பவக்கடலில் ஆழ்ந்து வருந்திக் கரைசேர வழி தெரியாது விழிக்கின்ற 84 லட்சம் யோனிபேத ஜீவராசிகளையும், தம் கருணை யென்னும் கயிற்றால் சேர்த்துக்கட்டித் தம் பொன்னிணையடிகளான தெப்பத்தில் ஏற்றிக்கொள்ளும் கருணைசாகர மூர்த்தியாகிய மகாவிஷ்ணுவின் பரிபூரணவதார புருஷரானவரும், உலகப்பிரசித்திபெற்ற சூரியகுலத்தையும் இக்ஷ்வாகு

வமிசத்தையும், ஈடேற்றிவைத்தவரும், "ஏகவசனம், ஏகபாணம், ஏகபத்தினி" என்னும் இணையற்ற நியமம்பூண்டுப் பெரும்புகழ் பெற்ற ஏகநாயகருமான புருஷோத்தமர் சக்கரவர்த்தித் திருமகனார் தம் தந்தையின் ஆணையைத் தலைமேற்றாங்கித் தவம்புரியக் கானகம் சென்றகாலத்து, இத்தரணியிலுள்ள தலங்கள் எல்லாவற்றுள்ளும் தம்மிருக்கைக் கேற்றவையெனத் தேர்ந்தெடுத்த நாசிக் பஞ்சவடி க்ஷேத்திரங்களையும், அவைகளுக்கிடையில் அதிகம்பீரமாய் ஓடிக்கொண்டிருக்கும் கௌதமிகங்கையையும் வருணிக்கத்தொடங்கினதும் என்னையும் அறியாது புத்தகம் விரிந்ததற்காக வருந்துகின்றேனாயினும், அத்தலங்களுக்கேகும் நம் சகோதரர்கள் பிறர் உதவி சிறிதுமின்றித் தங்கள் தங்கள் சிராத்த தான ஸ்நான தரிசனாதி காரியங்களை முடித்துக்கொள்ளவேண்டிய முழு விவரமும் வரைந்திருப்பதால் அவர்கள் என்னை ஒருவாறு மன்னிப்பார்களெனும் துணிவும் கொண்டுள்ளேன்.

மேலும், நம் தென்னாட்டினின்று வடநாட்டிற்குத் தீர்த்த யாத்திரை போவோர் மிகச் சிலரே. அவர்களுள் வடநாட்டில் வழங்கும் மொழிகளைத் தெரிந்திருப்போர் மிக மிகச் சிலரே. அச்சிலரும் அம்மொழிகளை எழுதப்படிக்கத் தெரிந்திருப்பது மிக அரிது. அவ்வாறு தெரிந்தோர்களிருப்பினும், தாம் கண்டும் கேட்டும் தெரிந்துகொண்ட விஷயங்களைத் தமிழில் வெளியிட வேண்டிய விருப்பமும் அவகாசமும் இருப்போர் அரிதினும் அரிதாகும். ஆயினும், மேற்சொல்லியவையெல்லாம் சிற்றறிவினனாகிய எனக்குப் பொருந்தியிருந்தமையின், வடநாட்டில் மறைந்து புதைந்து கிடக்கும் தீர்த்த க்ஷேத்திர மணிகளை ஒரு நூலிற் கோத்துதவுதல் எல்லாம்வல்ல ஈசன் திருவருட்பணியாமென மேற்கொண்டு இந்நூல் எழுதப் புகுந்தேனாதலின், சந்தர்ப்பம் நேர்ந்தகாலத்தில் அத்தலங்களுக்குரிய சரித்திர விவரங்களையும் (Historical facts), ஸ்தல மான்மியங்களையும், ஆங்காங்கு உயிர் வாழ்ந்திருந்த பெரியார்களின் அரிய செயல்களையும் திரட்டிக் கூடியவரையில் விரித்தே கூறத் துணிந்தனன்.

இப்பாகம் வைகுந்தபதியாகிய பாண்டுரங்கன் திருக்கோயில் கொண்டுறையும் பண்டரீ க்ஷேத்திரத்தில் தொடங்கி, அதே வைகுண்டபதி ஸ்ரீரண்சோட் நாத் (Ranchodnath) என்னும் திரு

நாமத்தோடு எழுந்தருளியிருக்கும் டங்கபுரம் என்னும் திவ்விய தேசத்தோடு முடிவடைகின்றது.

அடுத்த பாகம் அக்கண்ணன் இருந்து அரசாண்ட துவரையம்பதி (துவாரகை), சித்தப்பூர் (மாதுர்கயை) புஷ்கரம், தர்ம க்ஷேத்திரமாகிய குருக்ஷேத்திரம், ஹரிதுவாரம், சுவர்க்கபூமி யெனக் கருதப்படும் இமயமலையின் மேலிருக்கும் பதரிகேதார க்ஷேத்திரங்கள், கங்கோத்திரி, ஜம்னோத்திரி முதலிய பரமபாவன ஸ்தலங்கள், அவைகளுக்குப் போகும் மார்க்கங்கள் முதலியவைகளின் விவரங்களோடு கூடிய சீக்கிரம் வெளிவரும்.

இப்பாகத்தில்,

सौराष्ट्रे सोमनाथंच श्रीशैल्ये मल्लिकार्जुनं
उज्जयिन्यां महांकालं ओंकारममलेश्वरं
परल्यां वैजनाथंच डाकिन्यां भीमशङ्करं
सेतुबंधे तु रामेशं नागेशं दारुकावने
वाराणस्यांतु विश्वेशं त्र्यंबकं गौतमीतटे
हिमालये तु केदारं घृष्णेशं च शिलालये ॥

என்னும் சுலோகத்தின்படி நம் பரதகண்டத்தில் உள்ள 12 ஜோதி லிங்கங்களுள் (1) மகாகாளேசுவரர் (2) அமலேசுவரர் (3) வைஜநாதர் (4) பீமசங்கரர் (5) நாகேசர் (6) திரயம்பகேசர் (7) குஷ்ணேசுவரர் ஆகிய ஏழிலிங்கங்களிருக்கும் ஸ்தலங்கள், சப்த மோட்சபுரிகளுள் ஒன்றாகிய அவந்திகை, பாணலிங்கங்களின் உற்பத்தி ஸ்தானமான ஓங்கார மாந்தாதா ஆகிய புண்ணிய ஸ்தலங்களின் முழுவிவரமும் அடங்கியிருப்பதால் இதையும் புண்ணிய தாயக புத்தகமென்றே கருதல்வேண்டும்.

இங்ஙனம்

சீகாழி.
1-1-32.

T. B. தாஸ் ராவ்.

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 22 | 5 | சகோதார்கள் | சகோதரர்கள் |
| 32 | 12 | (2) ஒஜர் | (3) ஒஜர் |
| 33 | 13 | (5) | (4) |
| 42 | 22 | திரிவரிது வலாலதனுக் | திரிவரிதுவலாலதனுக் |
| 45 | 7 | லாவது | வாவது |
| 48 | 10 | ஹரப்ளி | ஹ-ெப்ளி |
| | 12 | ஷை | ஷை |
| | 13 | ஷை | ஷை |
| | 32 | ஷை | ஷை |
| 59 | 29 | உடையில் | இடையில் |
| 62 | 1 | கண்ணினே | கண்ணிணே. |
| 103 | 23 | நூலிழைத்து | நூலிழைத்த |
| 105 | 26 | நரஹரிலேரானர் | நரஹரி ஸோனர் |
| 114 | 5 | கரித்தேலாடையினர் | கரித்தோலாடையினர் |
| | 31 | தம்மினின்தும் | தம்மினின்றும் |
| 183 | 3 | சாகையைங் சேர்ந்த | சாகையைச்சேர்ந்த |
| 184 | 24 | இத்தவம் | இத்தலம் |
| 253 | 7 | கழிந்தபின்ன | கழிந்த பின்னர் |

ஓம் ஸ்ரீபாண்டுரெங்கப் பரப்பிரம்மணே நம:

# இந்திய ஸ்தல யாத்திரை மான்மியம்.

## இரண்டாம் பாகம்.

### அத்தியாயம். 1.

#### விநாயகர் காப்பு.

மண்ணுல கத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெலாம் எளிதின் முற்றுறக்
கண்ணுத லுடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடிப் பணிந்து போற்றுவாம்.

#### அம்பாள் வணக்கம்.

பரந்தெழுந்த சமண்முதலாம் பரசமய விருணீங்கச்
சிரந்தழுவு சைவநெறித் திருநீற்றி னொளிவிளங்க
அரந்தைகெடப் புகலியர்கோ னமுதுசெயத் திருமுலைப்பால்
சுரந்தளித்த சிவகாம சுந்தரிபூங் கழல்போற்றி.

அலைவாய்க்கடலில் ஆரவாரித் தெழும் அலைகளின் அரவமானது எவ்வாறு ஒருகணப் பொழுதேனும் அடங்கி ஒய்வதில்லையோ, அவ்வாறே இந்நாட்டின் எல்லாப் பாகங்களினின்றும் வந்து கூடி, அநந்நிய பாவத்தோடு, ஏகோபித்த மனத்தையுடையவர்களாய்த் தங்கள் தங்கள் தாய்தந்தையர், மனைவிமக்கள், உற்றார் பெற்றார், வீடுவாசல், மாடுகன்று, மண் பொன் முதலியவைகள் யாவற்றையும் முற்றும் மறந்து, உற்றாரார், பெற்றாரார், உடன்பிறப்பார், மற்றாரிருந்தாலென் மாளும்போது தவுவரோவெனக் கற்றுவிழந்த கன்றதுபோல் கனிந்துருகி,

பண்ணுலுன் னருட்புகழைப் பாடுகின்றார்
பணிகின்றார் நின்னழகைப் பார்த்துப் பார்த்துக்
கண்ணார வுளங்குளிரக் களித்தாநந்தக்
கண்ணீர்கொண் டாடுகின்றார் கருணைவாழ்வை

எண்ணுநின் றுனேயெந்தா யெந்தாயெந்தா
யென்கின்றுர் நின்னன்ப ரெல்லாமென்றன்
அண்ணுநா ஞெருபாவி வஞ்சநெஞ்சால்
அலேகின்றே னென்செய்கே னந்தோவந்தோ.

எனக் கடவுள் மாட்டுக் கரைகடந்த பத்திசெலுத்திப் பவக்கடலே எளிதிற் கடந்து கரையேறின நம் அருட்பிரகாச வள்ளலார் அறிவிலும் ஆன்மஞானத்திலும் சிறுராகிய மற்றுர்பொருட்டு மனமுடைந்து புலம்பி விண்ணப்பித்திருப்பதுபோல், ஸ்ரீபாண்டு ரங்கப் பெருந்தகைமைப் பெருமானது பரம பவித்திரமான நாம சங்கீர்த்தனத்தில் மனம், வாக்கு, காயம், என்னும் திரிகரண சுத்தியாக ஈடுபட்டு "விட்டல்; விட்டல்; ஜெய ஜெய விட்டல்" என்றும் "ஜெய; புண்டலீகவரத! ஹரிவிட்டல்!" என்றும் வாய்திறந்துக் கதறி பஜனேசெய்யும் கோஷமானது, இராப்பக லெனும் பேதமின்றி, வானுறவோங்கி வளம்பெற வளர்ந்து, வானவர் நாட்டினும் வழிசெய்துகொண்டு போவதைக் கண்டும் கேட்டும் ஆனந்தித்து, எம்பெருமான் திருநாம கோஷப்பெரும் வாரிதியில் மூழ்கி, மிதந்து, நீந்தி, எழுந்து மீண்டும் பண்டரிபுரம் ரெயில்வே ஸ்டேஷன் சென்று, புகைவண்டியேறிக் குர்துவாடி சேர்ந்து பூனு-பம்பாய்ப் பக்கம் போகுமுன், குர்துவாடி ஜங்ஷனி லிருந்து **லாத்தூர்** (Latur) போகும் **பார்ஸி லேட் ரேயில்வே** (The Barsi Light Railway) என்னும் இருப்புப்பாதை வழியாகச் சென்று அங்குள்ள **பார்ஸி** (Barsi), துளஜாப்பூர் (Tulajapur), ஜோகாயி (Jogayee) முதலிய க்ஷேத்திரங்களே தரிசித்து மீளுதல் நலம். ஆங்குப் போக விரும்பாதோர் பூனு-பம்பாய் போகும் வண்டியேறிப் பிரயாணத்தைத் தொடரலாம்.

## பார்ஸி (Barsi).

இவ்வூர் குர்துவாடி ஜங்கஷனிலிருந்து சுமார் 22 மைல் தூரத் திலுள்ள ஓர் ரெயில்வே ஸ்டேஷன். இதை இங்குள்ளோர் துவாதசி க்ஷேத்திரம் என்னும் திருநாமமிட்டழைக்கின்றனர். இது புராணப் பிரசித்திபெற்ற விஷ்ணு பக்த சிகாமணியாகிய அம்பரீஷ சக்கரவர்த்தியின் இராசதானியாக விருந்ததென்றும், இத்தலத்திற்முன் முற்காலத்தில் துர்வாச மகரிஷியானவர், ஓர் துவாதசியன்று அம்பரீஷனிடத்திற் சென்று "இற்றையுண்டி நின்

பால்" எனக் கூறி ஸ்நானத்திற்குப் போயினரென்றும், துவாதசிப் பாரணைவேளை வந்தும் முனிவர் வாராமைகண்ட அரசன் எம்பெருமானுடைய பூசையை முடித்துத் தானும் உணவுகொள்ள ஆசமனம் செய்துகொண்டிருந்த வேளையில் அங்கு வந்த முனிவர், அவன்மேல் அடங்கா முனிவுகொண்டுத் தம் சடையிலொன்றை அறுத்தெறிந்து அவ்வரசனை அழித்து வரும்படி ஏவினர் என்றும், அதையறிந்த சரணாகதவத்ஸலரான மகாவிஷ்ணுவானவர், தம் பக்தனைப் பாதுகாக்கும் வண்ணம் தம் சக்கரத்தையனுப்ப, அச்சக்கரம் தம்மைக் கொல்ல வருவதையறிந்த முனிவர், பிரமா விஷ்ணு மகேசுவரன் முதலியோரிடம் சென்று சரணடைந்தும் பயன்படாது, மீண்டும் அம்பரீஷனிடமே வந்து சரண்புகுந்தனர் என்றும், அவ்வரசன் அச்சக்கரத்தைப் பூமிக்குள் ஐக்கியமாகும் படிக்கட்டளையிட, * அது அவ்வாறே பூமிக்குட்சென்று மறைந்து விட்டதென்றும், இது காரணம்பற்றியே இத்தலம் துவாதசி க்ஷேத்திரமெனப் பிரசித்தி பெற்றதென்றும் சொல்லிக்கொள்ளுகின்றனர்.

இத்தலத்தில் மகாவிஷ்ணுவின் கோவில் இருக்கின்றது. இங்குறையும் திருமாலுக்கு **பகவான்** என்னும் திருநாமம் வழங்குகின்றது. ஹரி ஹர பிரமாதிகளுக்குப் பொதுவாகிய இச்சிறப்புப் பெயர் மகாவிஷ்ணுவுக்கு வேறெத்தலத்தும் வழங்கி வருவதாகத் தெரியவில்லை. இக்கோவிலில் அம்பரீஷனுக்கும் துர்வாஸருக்கும் சந்நிதிகள் ஏற்பட்டிருக்கின்றன. தரிசனம் விசேஷம்.

## துளஜாப்பூர்.

இங்குப் போக விரும்புவோர் பார்ஷியிலிருந்து லாத்தூர் (Latur) போகும் மார்க்கத்திலுள்ள எட்ஷி (Yedsi) என்னும் ஸ்டேஷனில் இறங்கவேண்டும். பார்ஷியிலிருந்து எட்ஷி சுமார் 20 மைல் தூரத்தில் இருக்கின்றது. துளஜாப்பூர் போகும் வழியிலுள்ள **தாராசி** (Dharasi) பட்டினம் வரையில் குதிரை வண்டிகள் போய்வந்துகொண்டிருக்கின்றன. மோட்டார்வண்டிகளும் போகின்றன. தாராசியிலிருந்து துள

*குறிப்பு:—மகாவிஷ்ணுவின் சக்கரம் போய் மறைந்தவிடத்தைப்பற்றிய விவரம் இப்புத்தகம் முதற்பாகம் 208-வது பக்கத்திற் காணலாம்.

ஜாப்பூர் போவதற்குத் தனிமையாக வண்டி பேசிக்கொள்ள வேண்டி நேரிடுகின்றது. ஏட்ஸி ஆங்கில எல்லையிலும், தாராசி நிஜாம் எல்லையிலும் இருக்கின்றது. தாராசி பட்டினத்திற்கு முகம்மதியர் உஸ்மானுபாத் (Osmanabad) என்னும் பேரிட்டு அழைக்கின்றனர். இவ்விதமாகவே அனேக பட்டினங்களுக்குத் தொன்றுதொட்டு வழங்கிவந்த பெயரைமாற்றி முகம்மதியப் பெயரிட்டழைத்துவருகின்றனர். பேரிலும் பேறுளதென நினைப்போர் பேர்மாத்திரமே பேறுபெறுவர் என்பதில் ஐயமில்லை.

இத்தலம் வருவோர் குர்துவாடி-சென்னைப் பாதையில் குர்துவாடியிலிருந்து 49 மைல்தூரத்திலுள்ள ஷோலாப்பூர் (Sholapur) பட்டினமிருந்தும் வரலாம். நல்ல கற்சாலை இருக்கின்றது. மோட்டார் வண்டிகள் வாடகைக்கு ஓடிக்கொண்டிருக்கின்றன.

இத்தலத்தில் கோவில்கொண்டெழுந்தருளியிருக்கும் அம்பாள் பவானிதேவிக்கு நம் தென்னாட்டில் **மூப்பன்** என்று வழங்கி வரும் ஜாதிபோன்ற ஓர் வகுப்பார் பூசை செய்கின்றனர். அவர்கள் பிராமணரல்லாதாராயினும் அகிலலோக ஜனனியாகிய அம்பாள் அவர்கள் பூசையை மனமுவந்தேற்காது புறக்கணிப்பதாகத் தெரியவில்லை. யாத்ரீகர்கள் பிராமணர்களாயினும் அவர்களைத் தங்கள் இல்லங்களுக்கு அழைத்துச்சென்று, பிராமணர்கள் மூலமாக அவர்களுக்கு வேண்டிய சாப்பாடு முதலிய வசதிகளைச் செய்துகொடுத்து உதவுகின்றனர். பிராமணர்கள் அவர்களில்லத்திற் சென்றிருக்க மனங்கொள்ளாது பிராமணர்களில்லந் தேடிப் போயிருப்பினும், தேவியின் பூசையை அவர்களைக் கொண்டே செய்யவேண்டியிருத்தலின் அவர்கள்பாற் சென்றே தீரவேண்டியிருக்கின்றது.

இங்கிருக்கும் பிராமணர்கள் பரம ஏழைகளாக இருத்தலின், வறுமைக்கேற்ற வஞ்சமும் அவர்களிடம் குடிகொண்டிருக்கின்றது. பிராமண போஜனத்திற்கழைத்தால் அவர்கள் தங்கள் மனையிலுள்ள மனைவி மக்கள் எல்லாரையும் உடன்கொண்டுவராது வருவதில்லை. யாரும் பிராமணர்கள் அவர்களிடம் பொருள் கொடுத்துச் சாப்பிடப்போவரேல், அவர்களோடு தாங்களும் இருந்து உண்ணுவதாய் நடித்துத் தாங்கள் கால்வயிறு நிறைபவும் சாப்பிடாது, விருந்தினர் இலையில் முதற்சோறுகொண்டு ஆசு

மனஞ்செய்யுமுன் தங்கள் சாப்பாட்டை முடித்துக்கொண்டு அவர்களேயும் வயிறுநிறைய உண்ணவிடாது எழுப்பிவிடுகின்றனர். * விருந்தினர்கள் திருப்தியடையாது மனங்கொதித்துப் பசிதீராது சென்றபின் தாங்களும் தங்கள் மக்களும் உண்டு களிக்கின்றனர். "மோப்பக் குழையு மனிச்சம் முகந்திரிந்து நோக்கக் குழையும் விருந்து." என்னும் உத்தரவேத வாக்கியத்தை இங்குள்ளோர் அறியார்போலும். தெய்வப்புலவர் சொல்லியது தம்மிடம் பொருள்கொடாது உண்ணவரும் விருந்து. ஆனல் இங்கு வருவோர் பொருள்கொடுத்துண்ணுவோராதலின் இவர்கள் செய்வது கொடுமையினும் கொடுமையேயாம். "கொடிது! கொடிது! வறுமை கொடிது!" என்னும் நம் மூதாட்டியாரின் முதுமொழி எக்காலத்தும் எவ்விடத்தும் பொய்யாமொழியன்றோ.

இங்கு அம்பாளேப் பூசிப்போர் பிராமணரல்லாதாராக இருப்பதோடு அவர்கள் ஸ்நானம் செய்து மடியுடனும் பூசிப்பதாகத் தெரியவில்லே. அம்பாள் தரிசனத்திற்காக வருவோர் நியமநிஷ்டையோடு நைவேத்தியம் செய்துகொண்டுவரினும் அந்தப் பூசாரிகள் மூலமாகவே பூசைசெய்யவேண்டி நேருகின்றது.

பூசை செய்வோர் தாழ்ந்த ஜாதியாராகக் கருதப்படினும், அவர்களும் திருநீறு உருத்திராக்கமாலேகள் முதலியவெளிவேஷங்களேத் தரித்துக்கொள்ளாமலும், ஸ்நானம் செய்யாமலும் உட்சென்று பூசைசெய்யினும், இத்தலத்துறையும் அம்பிகை மகாவரப்பிரசாதியென்பதில் ஐயமில்லே. தேவிக்காக ஏற்பட்டிருக்கும் † மூன்றரைப் பீடங்களுள் இது ஒன்ருகவிருப்பதுமன்றி மகாராஷ்

* குறிப்பு :—இச்சம்பவத்தை அங்கு யாத்திரை சென்ற ஓர் பிராமணரே நேரிற் பார்த்து மனம்நொந்து மனம்பொருது வெளியிட்டிருக்கின்றனர்.

† குறிப்பு :— தேவியின் மூன்றரைப் பீடங்களாவன :—(1) கோலாப்பூர் என்ற கரவீரம். (2) துளஜாப்பூர் (3) மாஹுர் என்ற மாதாப்பூர் (4) ஜோகாயி. இவைகளுள் முதன் மூன்றும் பூர்ண பீடங்களாகவும், நான்காவது அர்த்த (அரை) பீடமாகவும் கருதப்படுகின்றது. கோலாப்பூரைப்பற்றிய விவரம் இப்புத்தகத்தின் முதற்பாகம் 150 முதல் 174 வரை பக்கங்களிற் காணலாம். மற்ற இரண்டு ஸ்தலங்களின் வருணனே இப்புத்தகத்திலேயே பிற்பாகத்திற்காணலாம்.

டிரதேசத்து இராஜசிம்ஹமான ஆதி சிவாஜி மகாராஜா அவர்களுடன் நேரிற் பேசிக்கொண்டிருந்து, அவருக்கு முகமதியர்களால் நேர்ந்த அனேக ஆபத்துக்களிலிருந்து அவரைக் கண்ணை இமை காப்பதுபோல் காத்து இரட்சித்த தேவி இங்கிருக்கும் அம்பாள் பவானியே. இதுகாரணம்பற்றியே அம்மன்னர் தம் உடைவாளுக்கும் **பவானி** என்னும் நாமத்தையேகொடுத்திருந்தனர். அவ் வீரகட்கம் தற்காலத்தில் **லண்டன்** நகரத்திலுள்ள பொருட்காட்சிச்சாலையில் (Museum) வைத்திருப்பதாகச் சிலர் சொல்லிக் கொள்ளுகின்றனர். ஆனால் அங்கிருக்கும் வாள் சிவாஜி மகாராஜா வைத்திருந்ததன்று என்பதும், மகாவிஷ்ணுவின் அவதாரங்களான இராமர் கையிலிருந்த கோதண்டம், பரசுராமருடைய பரசு, பலராமருடைய மேழி முதலியவை எவ்வாறு அந்தந்த அவதார புருஷர்களோடு மறைந்துபோயினவோ, அவ்வாறே சிவாம்சமான சிவாஜிச் செம்மலின் கரத்திலிருந்துவந்த கட்கமும் மறைந்துவிட்டதென்பதுமே பலருடைய கொள்கை.

இவ்வூரில் ஜலக்கஷ்டம் அதிகம். கோவிலுக்குள்ளிருக்கும் ஓர் சிறு புஷ்கரணியும், கோவிலிலிருந்து சுமார் 50 கெஜ தூரத்திலுள்ள மற்றோர் சிறு கூபமுமே இவ்வூரிலுள்ள ஜலாதாரங்கள். இவைகளிலுள்ள ஜலம் கோடைக்காலங்களில் பாசிபிடித்து மிகவும் அசுத்தமாய்விடுகின்றது. கோவிலின் உட்புறத்தில் ஒரு கோமுகத்தின் வழியாக ஜலம் எப்போதும் வந்துகொண்டிருக்கின்றது. இது குடிக்க உபயோகப்படுகின்றது. எங்கிருந்து வருகிறதென்று யாவருக்குமே தெரியாத இவ்வற்புதமான நீர்த்தாரை இங்கில்லாவிடின், இத்தலத்துள்ளோர் கோடைக்காலங்களிற் குடி தண்ணீரின்றி மாண்டு மடியவேண்டியிருக்கும். என்னே தேவியின் கிருபை ! இக்கோவிலிற் பூசை செய்வோர் விருப்போடு சென்று பூசை செய்வதற்கு இந்த ஜலக்கஷ்டமே முதற்காரணமெனத் தோற்றுகிறது.

இக்கோவிலில் எழுந்தருளியிருக்கும் அம்பாள் சிம்மவாகினியாய் அதிசுந்தர ரூபத்தோடு விளங்குகின்றனள். சாலக்கிராமச் சிலையிற் செய்த மூர்த்தி. பார்ப்போர் மனம் பரவசமாகின்றது. இக்கோவிலில் இப்பக்கங்களிலுள்ள மற்ற அம்பாள் கோவில்களில் செய்வதுபோல் அம்பாளுக்குச் செந்தூரம் பூசுவதில்லை

காலை 6 மணி முதல் பகல் 12 மணி வரையினும், பிறகு மாலை 4 மணி முதல் இரவு 9 மணி வரையினும் கோவிலின் கதவு திறந்திருக்கின்றது. தரிசனம் செய்யலாம். எக்காலத்தும் கூட்டம் அதிகமாகவே இருக்கின்றது. அம்பாள் பவானி தேவியின் தரிசனமானபிறகு மீண்டும் ஏட்வசி ஸ்டேஷன் சென்று ரயிலேறி லாத்தூர் (Latur) ஸ்டேஷனுக்குச் சீட்டு வாங்கிக்கொண்டு போக வேண்டும்.

## ஜோகாயி (Jogayee).

இவ்வூர் லாத்தூர் ஸ்டேஷனிலிருந்து 12 மைல் தூரத்தில் இருக்கின்றது. இக்கோவிலில் எழுந்தருளியிருப்பது லோக மாதாவான தேவி ஜகதம்பிகையேயாயினும், கோவிலுக்குள் அம்பிகையின் விக்கிரகமாவது சிலையாவது இல்லை. முகபிம்பம் மாத்திரம் இருக்கின்றது. அபிஷேகாதிகள் தனியாக இருக்கின்ற தேவியின் பாதுகைகளுக்கு நடக்கின்றன. இவ்வம்மையை ஆராதிப்போர் விசேஷமாகக் கொங்கணவர்களே. இக்கோவில் **சங்கர் ராவ் * வக்கீல்** என்னும் ஓர் கொங்கணியப் பிரபுவின் விசாரணையில் இருந்துவருகின்றது. நவராத்திரியில் விசேஷ வைபவத்துடன் உற்சவம் நடக்கின்றது. ஏராளமான ஜனங்கள் கூடுகின்றனர். இவ்வூருக்கு முகமதியர் மோமினபாத் (Mominabad) என்னும் பெயரிட்டிருக்கின்றனர். இங்குக் கோவில் பூசை செய்யும் பிராமணர்களிடம் முதலிலேயே தட்சிணை முதலியவற்றைக் கண்டித்துப் பேசிக் கொள்ளல்வேண்டும். தவறினால் பிறகு எவ்வளவு கொடுப்பினும் அவர்கள் திருப்தி அடைவதில்லை. ஊர் முகம்மதியர் ஆளுகைக்குட்பட்டிருத்தலின் கோவில் சம்பந்தமான விஷயங்களை வெளியிற் சொல்லிக்கொள்ளுவதற்கும் இடமில்லை. முகமதிய அதிகாரிகளிடம் பிராது சொல்லிக்கொள்ளப் போனால், அவர்கள் உடனே முகத்திலறைந்தது போல், "உங்களை யார் இங்கு யாத்திரை வரச்சொன்னது? வந்த பிறகு ஏன் வம்புவளர்க்கிறீர்கள்? நீங்களிருக்குமிடத்தில் கடவுளில்லையா?" என்று சொல்லித் துரத்திவிடுகின்றனர். ஆனால் இங்கிருக்கும் பிராமணர்களுக்கும் முகமதியர்களுக்கும் அஞ்சி

* குறிப்பு :—வக்கீல் என்பது குடும்பத்தின் பெயர். நீதிவாதி என்று பொருள்படும் மொழியன்று.

யாத்திரைக்கு வராதிருத்தல் கோழைத்தனமாம். முன்ஜாக்கிரதையோடிருத்தல் அவசியம் என்பது ஒன்றையே இங்கு வற்புறுத்தப்பட்டது.

எல்லாச் சிவன்கோயில்களினுமுள்ளது சிவலிங்கமே யாயினும், நம் தென்னாட்டிலுள்ள * திருவிடைமருதூரெனும் மத்தியார்ச்சுன க்ஷேத்திரத்தில் கோவில் கொண்டுறையும் சிவபிரானுக்கு எவ்வாறு **மகாலிங்கம்** என்னும் சிறந்த பொதுப்பெயர் கிடைத்திருக்கின்றதோ, அவ்வாறே இத்தலத்துறையும் அம்பிகைக்கு **அம்பாள்** என்னும் பொதுப்பெயர் கிடைத்துள்ளது. மற்ற அம்பிகைகளினின்றும் வேற்றுமைப்படுத்தும்பொருட்டு இவ்வம்மையை இங்குள்ளோர் † **ஜோகாயின்சே அம்பே.** என்னும் திருநாமமிட்டு அழைக்கின்றனர்.

அம்பாளை தரிசித்துவிட்டு மீண்டும் லாத்தூர் ஸ்டேஷன் சென்று, ரயிலேறி, குர்துவாடி ஜங்ஷன் சேர்ந்து, அங்கு வண்டி மாற்றி வடக்கு நோக்கிப் போகும் வண்டியிலேறி பூனைப்பட்டினம் போதல்வேண்டும். பூனைப்போவதற்குமுன் அதற்கு முன்னுள்ள போரிப்யல் (Boribyal), லோணி (Loni) ஸ்டேஷன்களில் இறங்கி ‡ அஷ்டவிநாயக மூர்த்திகளுள் சித்திவிநாயகர், சிந்தா

* குறிப்பு :—திருவிடைமருதூர் கும்பகோணத்திற்குக் கிழக்கில் 6 மைலினுள்ள ஓர் ரெயில்வே ஸ்டேஷன். சுவாமி : மகாலிங்கம்; மருதப்பர். அம்பாள் : பிரஹத்சுந்தரகுஜாம்பாள் ; நல்முலைநாயகி. தீர்த்தம் : காவிரி. விருட்சம் : மருது. மூவராலும் பதிகம் பெற்றது.

† குறிப்பு :—ஜோகாயின்சே அம்பே = ஜோகாயியின் அம்பாள்.

‡ குறிப்பு :—அஷ்டவிநாயக மூர்த்திகளாவன :—(1) கணநாயக கஜமுக கணபதி. (2) சித்தி விநாயகர். (3) வல்லாளேசுவரர். (4) விநாயகர். (5) சிந்தாமணி விநாயகர். (6) கிரிஜாத்மகர். (7) விக்கினேசுவரர். (8) கணபதி. இவைகளுள் (2) முதல் (8) வரை மூர்த்திகளின் விவரத்தை இப்புத்தகத்திலும், முதன் மூர்த்தியின் விவரத்தை இப்புத்தகம் கடைசிப்பாகத்திலும் காணலாம். ஆனால் நம் தென்னாட்டினும், (1) கற்பக விநாயகர் (2) சித்தி விநாயகர் (3) இஷ்ட சித்தி விநாயகர் (4) ஆபத்துக்காத்த விநாயகர் (5) பொல்லாப்பிள்ளையார் (6) மாற்றுரைத்தப் பிள்ளையார் (7) வினையறுத்தப் பிள்ளையார், (8) வீரகத்திப் பிள்ளையார் (9) கள்ளப்பிள்ளையார் முதலிய பல திருநாமங்களுடைய விநாயகமூர்த்திகள் ஆங்காங்கிருப்பதைக் காணலாம்.

மணி விநாயகர் ஆகிய இரு மூர்த்திகளையும் தரிசித்துச் செல்ல லாம். அவகாசமில்லாதோர் நேராய்ப்போகலாம்.

### சித்தடேக் (Siddhatek).

இத்தலம் போகவிரும்புவோர் குர்துவாடி ஜங்ஷனிலிருந்து 62 மைல் தூரத்தில் உள்ளதும் **தோண்ட்** (Dhond) ஜங்ஷனுக்கு முந்தியதுமான **போரிப்யல்** (Boribyal) என்னும் ஸ்டேஷனில் இறங்கி 6 மைல் போகவேண்டும். ஸ்டேஷனில் வண்டிகள் கிடைப்பது அரிது. அனேகமாய் ஊரிலிருந்து வண்டி பிடித்துவர நேரிடும். இத்தலத்துறையும் விநாயகர் தரிசனத்தால் சர்வசித்தியும் கிடைக்குமாதலின் இவருக்கு **சித்திவிநாயகர்** என்னும் காரணப்பெயர் வந்திருக்கின்றது.

### தேவூர் (Thevur).

இத்தலம் போகவிரும்புவோர் குர்துவாடி ஜங்ஷனிலிருந்து 105 மைலிலும், தோண்ட் (Dhond) ஜங்ஷனிலிருந்து 37 மைலிலும் உள்ள **லோணி** (Loni) என்னும் ஸ்டேஷனில் இறங்கி 5 மைல் போகவேண்டும். ஸ்டேஷனிலிருந்து இருப்புப்பாதை வழியாக 2 மைல் தெற்கே போய், அங்கிருந்து குறுக்குப்பாதை வழியாக 3 மைல் போகவேண்டும். இத்தலம் மூலா, மூட்டா (The Mula and The Muta) நதிகளின் இடையில் அமைந்திருக்கின்றது. இங்கிருக்கும் விநாயகர் தம்மை நாடி வருவோரின் சர்வ மனோபீஷ்டங்களையும் அவர்கள் நினைத்த மாத்திரத்தில் முடித்து வைப்பவராதலின், இவரைச் **சிந்தாமணி** விநாயகர் எனச் சொல்லுகின்றனர். இவ்விநாயகர் சந்நிதியில் மகாராஷ்டிர தேசத்தில் மடியாப் புகழ்பெற்ற **மாதவராவ் பேஷ்வே** என்பவர் அடங்கியுள்ளார். அவருடைய தரும பத்தினியாகிய **இரமாபாயி** அம்மணியும் தம் கணவருடன் உடன்கட்டையேறி சுவர்க்கம் பெற்றார்.

### * பூனா பட்டினம்.

இது குர்துவாடியிலிருந்து 115 மைலிலும் பம்பாயிலிருந்து 119 மைலிலும் இருக்கும் பெரிய ஜங்ஷன். சென்னை-தென் மகா

---

* குறிப்பு:—இப்புத்தகம் முதற்பாகத்தில் இப்பட்டினத்தைப்பற்றி எழுதுங்கால் புத்தகம் விரியுமென்றஞ்சி சில விஷயங்களைக் கூறாது விடுத்தனமாதலாலும், பண்டரிபுரத்திலிருந்து மீளுங்காலையில் இப்பட்டினத்தின் வழியே போகவேண்டி நேருகிறதாதலாலும், இப்பட்டினத்தைப் பற்றிய மற்றும் சில விஷயங்களை இங்கு எழுதத்துணிந்தனம்.

ராஷ்டிர ரெயில்வேயின் (The Madras & Southern Mahratta Railway) பங்களூர் கிளைப்பாதை இவ்விடத்திற்றான் பிரிகின்றது.

* இப்பட்டினம் மகாராஷ்டிர தேசத்தாரின் புண்ணிய கிராமம் எனக் கருதப்படுகின்றது. மகாராஷ்டிர தேசத்தின் பஞ்ச பிராணன்களாகக் கருதப்படும். (1) நீதிபதி மாதவராவ் கோவிந்த ரானடே (Justice Madhava Row Govinda Ranadae) (2) நிபந்த மாலாகர விஷ்ணு சாஸ்திரி சிப்ளூண்கர் (Chiplunkar) (3) பிரின்சிபல் (Pricipal) கோபால்ராவ் ஆகர்க்கர் (Agarkar) (4) பூவுலகில் என்றும் பொன்றாப் புகழ்பெற்ற புண்ணிய மூர்த்தியாகிய லோகமான்னிய பாலகங்காதர திலகர் (5) இந்திய தேசிய ஊழியச் சங்கத்தை (The Servants of India Society) நிலைநாட்டினவரும் கல்வித் துறையின் கரைகண்டுழைத்தவருமான கோபாலகிருஷ்ண கோகலே, இவர்களைப் பெற்றதும், வளர்த்ததும், பிரசித்திபெறச் செய்ததும் இப்புண்ணிய நகரமேயாதலின் மகாராஷ்டிர தேசத்தார் இதைத் தங்கள் கண்ணின் கருமணியாக நினைக்கின்றனர்.

மேலும் தர்மயுத்தம் நேர்ந்த காலத்துத் தம் தந்தையென்றும் பாராது போர்புரியத் துணிந்த மகாராஷ்டிர தேச மன்னர் குலதிலகப் பெண் சிம்மமாகிய ஜிஜாபாயியம்மையார் வயிற்றில், இப்பட்டினத்தருகில் இருக்கும் சிவனேரிக் கோட்டையில் சிவாம்சமாய்ப் பிறந்து, உத்தமோத்தம சற்குண புருஷரான தாதாஜி கோண்டதேவ் என்னும் பெரியாரிடம் வித்தைபயின்று, †மாதுர் பக்தி, குருபக்தி, தேசபக்தி, ஈசுவர பக்தி ஆகிய நால்வகை பக்திகளிலும் மிகுந்து, பிற்காலத்தில் முகமதியர்களுக்கு சிம்மசொப்பனமாய் விளங்கி, பாண்டுரங்க பக்தர்களில் பரம சிரேஷ்டரான ஸ்ரீ துக்காராம் சுவாமிகளின் கீர்த்தன அபங்கங்களைச் செவிவாய்

* குறிப்பு :—புண்ணியகிராம் என்பது புணியகிராம் என்று இடைக்குறைந்து, பிற்காலத்தில் புன்யாகிராம் என மருவி நின்றதெனத் தெரிகிறது. மகாராஷ்டிர தேசத்தார் இதை இக்காலத்தும் புன்யா அல்லது புனு என்று தான் சொல்லுகின்றனர்.

† குறிப்பு :—அக்காலத்தில் மிலேச்சர்களெனக் கருதப்பட்ட முகம்மதிய அரசரிடம் தொண்டு செய்துவந்த தம் தந்தையாரிடம் நம் சிவாஜி மன்னரானவர் அதிகமாக அன்புபூண்டு ஒழுகினவரல்லராதலின் பிதுர் பக்தி என்பதை ஈண்டு சேர்க்காமல் விடப்பட்டது.

மடுத்துண்டு களித்து, ஸ்ரீஸமர்த்தராமதாஸ்சுவாமிகளிடம் குருவுபதேசம்பெற்று நமது தாய்நாட்டைப் புறமதஸ்தர்களிடமிருந்து மீட்டு இந்நாட்டை ஒருகுடைக்கீழ்க்கொண்டுவந்த அதிவீரதீர தூய நற்குண க்ஷத்திரிய துரைராஜ சிம்மமாகிய ஆதிசிவாஜிமகாராஜர் இப்பட்டினத்தின் பலபாகங்களுள் மிகப்புராதனமாகிய **கஸ்பா பேட்** (Cusbahpet) என்னும் பாகத்தில் தம் இளமைப்பருவத்தைக் கழித்துவந்த காரணம்பற்றி, இக்காலத்தில் சுவராஜ்ஜியம், சுவராஜ்ஜியம் என்று எங்கும் புகழ்ந்து பேசப்படும் விருட்சத்தின் விதையானது இந்நகரில் முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னமேயே விதைக்கப்பட்டதென்று இங்குள்ளோர் எல்லாரிடமும் சொல்லிப் பெருமைகொள்ளுகின்றனர்.

இப்பட்டினம் (1) கஸ்பாபேட் (2) சனிவார்பேட் (3) புதவார்பேட் (4) ரவிவார்பேட் (5) சுக்கிரவார்பேட் (6) நாராயண் பேட் (7) சதாசிவ்பேட் (8) கணேசபேட் (9) குருவார்பேட் அல்லது பேதாள்பேட் (வேதாளப்பேட்டை) (10) ராஸ்தாபேட் (11) சோமவார்பேட் (12) ந்யாஹால்பேட் (Nyahalpet) (13) காகாச்சிபேட் (14) பவானிபேட் (15) முஸபர்ஜங்பேட் (16) கஞ்ச்பேட் (Ganjpet) (17) கோர்ப்படேபேட் (Ghorpadepet) (18) மங்கள்வார்பேட் என்னும் 18 பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவைகளைத்தவிர பாம்புடிபேட் (Bambudipet), கர்க்கி, கணேச கிண்ட் என்னும் மற்றும் சில பாகங்களும் உள.

## 1. கஸ்பாபேட்

இப்பாகத்தில் பார்க்கக்கூடிய கட்டிடங்களாவன:— (1) ஆதி சிவாஜிமகாராஜாவின் அருமைத் தாயாரான ஜிஜாபாயியம்மையாரால் கட்டப்பட்ட ஸ்ரீ மகாகணபதியின் கோவில். (2) சிவாஜி மகாராஜாவின் ஞாபகார்த்த உருவக்கற்சிலை. (3) அம்பர்கானா தோட்டம். (4) புரந்தரர் அரண்மனை. (5) பேட்டை அரண்மனை. (6) ஷேக்ஸல்லா என்னும் முகமதியப் பெரியாரின் தர்கா (Durga).

(1) **ஸ்ரீமகா கணபதியின் கோவில்:—** இக்கோவிலில் எழுந்தருளியிருக்கும் கஜானனர் சுவயம்புவான மூர்த்தி. கணபதியின் மூர்த்தி சுவயம்புவாய்க் கிடைப்பது அருமையாதலின் தரிசனம் மிக்க விசேஷம். முற்காலத்தில் இவ்விடத்தில் மாடுகளை மேய்த்

துக்கொண்டிருந்த சிறுவர்களிற் சிலர் அங்கிருந்த கற்பாறையில் இம்மூர்த்தி இருந்ததைக் கண்டு அதைத் தங்கள் பசுக்களின் பாலினல் அபிஷேகம் செய்து, அங்கிருந்த காட்டுப்புஷ்பங்களால் அருச்சித்து ஆராதித்துவந்தனர். இவ்வாறு சில நாட்கள் சென்றபின், அதையறிந்த மற்றவர்களும் அவ்விடம் சென்று விநாயகரைப் பூசித்து வேண்டிய இஷ்டசித்திகளைப் பெறலாயினர். அக்காலத்தில் அருகிலிருந்த **லால் மஹால்** என்னும் அரண்மனையில் தம் அருமைப்புதல்வனோடு வசித்துவந்த சுயராஜ்ஜிய ஜனனியாகிய ஜிஜாபாயி அம்மையார் இதைக் கேள்வியுற்று, அங்கு சென்று, அம்மூர்த்தியைத் தம் இஷ்ட தெய்வமாகக்கொண்டு, அதற்கு ஓர் அழகிய கோவில் கட்டி வைத்தனர். அந்த மகாகணபதியின் பூசனையின் பயனாய்ப் பிற்காலத்தில் சிவாஜியானவர் பரமோத்கிருஷ்டமான நிலையை அடைந்தனர் என்னும் காரணத்தால் அவரை இக்காலத்தும் பூனவாசிகளும் மற்ற மகாராஷ்டிரர்களும் மிக்க பயபக்தியோடு பூசித்து வருவதுமன்றித் தங்கள் தங்கள் இல்லங்களில் நடக்கும் சுபகாரியங்களுக்கு முதல் அழைப்பு மகாகணபதிக்கென்னும் வழக்கத்தை அனுஷ்டித்து வருகின்றனர். கலியாணம் முதலிய சுபசோபனங்களை நடத்துவோர் முதலில் மேளவாத்தியங்களோடு இக்கோவிலுக்குச் சென்று, பூசித்து, மணவோலையை கணநாதர் முன் வாசித்துவிட்டுத்தான் தங்கள் காரியங்களைத் தொடங்குகின்றனர். விநாயகசதுர்த்தித் திருவிழா வெகு விசேஷமாய் நடக்கின்றது.

(2) **சிவாஜி மகாராஜாவின் உருவச்சிலை** :—கி. பி. 1914ம் வருஷம் முதல் 1918ம் வருஷம் வரையில் நடந்த பெரிய ஜர்மன் யுத்தத்தில் மகாராஷ்டிர வீரர்கள் செய்த அதியற்புத வீரச்செயல்களின் ஞாபகார்த்தம் இந்தோர், கோலாப்பூர், குவாலியர் முதலிய தேசத்து அரசர்களும் மற்றும் அனேக சீமான்களும் சேர்ந்து ஓர் பெரிய அரண்மனை போன்ற கட்டிடம் கட்டி, அதில் சிவாஜி மகாராஜாவின் உருவச்சிலையை ஸ்தாபித்தற்பொருட்டு, இங்கிலாந்திலிருந்து இந்தியாவிற்கு வந்த இளவரசர் 1921ம் வருஷத்தில் அஸ்திவாரக்கல்லை நிலைநாட்டினர். உருவச்சிலை பார்க்கத்தக்கது.

(3) **அம்பர்கான தோட்டம்** :—இத்தோட்டத்தின் கண்ணுள்ள **லால் மஹால்** என்னும் அரண்மனையிற்றான் ஆதி சிவாஜி

மன்னரானவர் இருந்து வளர்ந்து மகாராஷ்டிரக் கொடியை மேற்றாக்கினராதலின் இத்தலத்தை இங்குள்ளோர் அதிபுனிதமானதாகப் போற்றிவருகின்றனர். இங்கு நகர பரிபாலன சபையார் (The Municipality) பட்டினத்து ஜனங்கள் மாலை நேரத்தில் வந்திருந்து காற்று வாங்குவதற்காக ஓர் அழகான தோட்டத்தை நிர்மாணம் செய்திருக்கின்றனர்.

**(4) புரந்தரர் அரண்மனை, (5) பேட்டே அரண்மனை :—** இவைகள் முறையே மஹாதாஜிபன்த் புரந்தர் என்பவராலும் திரியம்பகராவ் மாமா பேட்டே என்பவராலும் கட்டப்பட்டனவென்று தெரிகிறது.

**(5) ஷேக்ஸல்லாவின் பள்ளிவாசல் :—** இது இரண்டு பாகமாக இருக்கின்றது. ஒன்று பெரிய ஷேக்ஸல்லாவின் தர்காஎன்றும், மற்றது சின்ன ஷேக்ஸல்லாவின் தர்கா என்றும் சொல்லப்படுகின்றது. இவைகளிருக்குமிடத்தில் முற்காலத்தில் ஸ்ரீநாராயணேசுவரர் கோவிலும் ஸ்ரீ புண்ணியேசுவரர் கோவிலும் இருந்தனவென்றும், சுமார் 600—700 வருஷங்களுக்கு முன் டில்லியிலிருந்து இங்கு வந்த ஹிஸ்ஸா முகயதீன் கலால் என்னும் பக்கிரியும் அவருடன்கூட வந்தவர்களும் சேர்ந்து, அக்கோவில்களை இடித்துத் தகர்த்துத் தள்ளிவிட்டு, இப்பள்ளிவாசல்களைக் கட்டி, ஒன்றிற்கு ஷேக்ஸல்லா என்றும், மற்றொன்றிற்கு ஷேக்ஹிஸ்ஸா என்றும் பேரிட்டதாகத் தெரிகின்றது. இது நடந்தது முகமதியரின் ஆளுகை மும்முரமாயிருந்த காலத்திலெனத் தெரிகின்றது.

## 2. சனிவார்பேட்.

இந்தப் பாகத்தில் இருக்கும் விசேஷமான கட்டிடங்களாவன :—(1) சனிவார் * வாடா என்னும் பிரசித்திபெற்ற அரண்மனை (2) அமிருதேசுவரர் கோவில் (3) பஞ்சராப்போல் (The Panjrapole).

**(1) சனிவார் வாடா :—** ஆதி சிவாஜி மகாராஜாவின் காலத்திற்குப் பிறகு பேஷ்வேக்கள் வந்து மகாராஷ்டிர அரசாட்சியை உன்னதஸ்திதிக்குக் கொண்டுவந்த காலத்தில், அவர்கள் இந்நகரைத் தங்கள் இராஜதானியாகக் கொண்டிருந்தனர். பேஷ்வேக்

* குறிபபு :—வாடா=அரண்மனை.

களுள் பிரக்கியாதிபெற்றவரான முதலாவது பாஜிராவு(Baji Row the First) என்பவர் 1730-ம் வருஷத்தில் இவ்வரண்மனையைக் கட்டிமுடித்து அதைத் தமது திக்விஜயத்திற்குக் கேந்திரஸ்தான மாக வைத்திருந்தனரென்று தெரிகிறது.

அக்காலத்தில் ஓர் நாள் பாஜிராவ் பேஷ்வேயானவர் தம் உன்னத அசுவத்தின்மேல் ஆரோகணித்துப் போய்க்கொண்டி ருந்ததாகவும், அச்சமயத்தில் இவ்வரண்மனை கட்டப்பட்டிருக்கு மிடம் ஓர் காடாக இருந்ததாகவும், அக்காட்டிலுள்ள ஓர் முயல் ஓர் நாயைத் துரத்திக்கொண்டுபோய் இறுதியில் அதைக் கடித்துக் கொன்றதாகவும், அவ்வதிசய சம்பவத்தைக் கண்ணுற்ற பாஜிரா வானவர், அக்காட்டு மண்ணிற்கு, அதில் வசிக்கும் பிராணிகளுக்கு அளவற்ற வீரத்தை உண்டாக்கக்கூடிய ஓர் வித * அபூர்வ சக்தி இருக்கவேண்டுமென்றுணர்ந்து, அதையே தம் அரண்மனை கட்டு வதற்குத் தகுந்தவிடமென்று தேர்ந்தனரென்றும் சொல்லப்படு கின்றது.

இக்கதைக்கேற்ப இவ்வரண்மனையில் இருந்து ஆண்டுவந்த பாலாஜிபாஜிராவ், சவாயிமாதவராவ் இவர்கள் காலம் முடிய மகாராஷ்டிரர்களுடைய நிலைமை மகோன்னத ஸ்திதியிலிருந்து வந்ததென்றும், பிறகுவந்த இரண்டாவது பாஜிராவ் இவ்வரண் மனையைவிட்டு புதவார்வாடா அல்லது விசிராம்பாக் (Vishram Bagh) என்னும் வேறோரு அரண்மனையைக் கட்டிக்கொண்டு போயினபின், அவர் செய்த மதியீனகாரியத்தால் மகாராஷ்டிர ராஜ்ஜியம் 1818-ம் வருஷத்தில் நிலைகுலைந்ததென்றும் சொல்லிக் கொள்ளுகின்றனர்.

* குறிப்பு :—இவ்வித அபூர்வ சக்தி முற்காலத்தில், உஜ்ஜயினி நக ரத்தில் கோவில் கொண்டுறையும் மகாகாளியின் வரப்பிரசாதத்தினால், நாடாறுமாதம் காடாறுமாதமாக இரண்டாயிரம் ஆண்டுகள் அரசுபுரிந் திருந்த விக்கிரமாதித்த சக்கரவர்த்தியின் முப்பத்திரண்டு பதுமைக ளுள்ள தெய்வீக சிம்மாசனம் பூமிக்குள் மறைந்திருந்த பாகத்தின் மண் ணிற்கு இருந்ததாகவும், தற்காலத்தில் திருநெல்வேலி ஜில்லா ஒட்ட பிடாரத்திற்கருகிலிருக்கும் பாஞ்சாலங்குரிச்சி என்னும் சிற்றூரின் மண் ணிற்கு இருப்பதாகவும் நம்பப்படுகின்றது. பாஞ்சாலங்குரிச்சி என் னும் சிற்றூர் ஊமையன் என்னும் சிற்றரசன் அரண்மனை கட்டி ஆண் டிருந்தவிடம்.

முதலாவது பாஜிராவ் இந்த அரண்மனையைக் கட்டும்போது அதில் விநோத விசித்திர வேலைகள் ஒன்றும் செய்யாது சாதாரணமான கட்டிடமாகக் கட்டிமுடித்தனர். இவருக்குப் பிறகு பேஷ்வே அதிகாரம் வகித்த நாநாசாகிபு என்னும் பாலாஜி பாஜிராவ் என்பவர் இவ்வரண்மனையை வளர்த்துக்கட்டி அதியற்புதமான சித்திர விசித்திர வேலைகளைச் செய்தும், பொன்வெள்ளிப் பூச்சுகளைப் பூசியும், இவ்வரண்மனை இப்பூவுலகில் மாத்திரமன்றி மூவுலகினுமுள்ள கட்டிடங்களிற் சிறந்த கட்டிடமாகத் தோற்றும்படி அமைத்தனர். தஞ்சாவூரில் அரசாண்டிருந்த நாயக்கர்வமிசத்து மன்னர்கள் எவ்வாறு தங்கள் அரண்மனையிற் கட்டியிருந்த உன்னத உப்பரிகையின் மீதேறித் திருவரங்கம் பெரியகோயிலின் கோபுர தரிசனம் செய்தபிறகுதான் சாப்பிடுவது என்னும் நியமத்தைக் கைக்கொண்டிருந்தனர்களோ, அவ்வாறே சவாயி மாதவராவ் பேஷ்வே என்பவர் இவ்வரண்மனையின் உப்பரிகையின் மீதேறி * ஆலந்தியிலுள்ள ஞானேசுவரர், பாண்டுரங்கர் இவர்களுடைய கோவில்களின் கோபுரதரிசனம் செய்தபிறகுதான் தம் நித்திய கர்மங்களைச் செய்வதென்னும் நியமத்தோடிருந்து வந்தனர் என்று தெரிகிறது.

இந்த அரண்மனைக்கு (1) டில்லி † தரவாஜா (2) கணேச தரவாஜா (3) மஸ்தானி அல்லது நாடகசாலா தரவாஜா (4) ‡ கிடக்கி தரவாஜா (5) $ ஜாம்பூள் தரவாஜா ஆக 5 பெரும் வாயில்கள் இருந்தன. (1) டில்லி தரவாஜா என்பது டில்லிப்பக்கம் பார்த்திருப்பது. (2) கணேச தரவாஜா என்பது கணேசர் கோவிலுக்குப் போவது. (3) மஸ்தானி அல்லது நாடகசாலா தரவாஜா என்பது நாடகசாலைக்குப் போவது. பிற்காலத்தில் இப்பாகத்தில் முதல் பாஜிராவானவர் அதிரூபலாவண்ணியமான மஸ்தானி என்னும் ஸ்திரீயைக்கொண்டு வந்து வைத்திருந்த காரணத்தால் இப்பெயர் உண்டாயிற்று. (4) கிடக்கி தரவாஜா என்பது எப்போதும் மூடியிருந்து அதிலுள்ள பலகணிவாயில் வழியாக ஜனங்கள் போய் வந்துகொண்டிருந்ததால் அப்பெயர் உண்டா

* குறிப்பு :—இத்தலத்தின் விவரம் இப்புத்தகம் முற்பாகம் 197-198-வது பக்கங்களிற் காணலாம். † குறிப்பு :—தரவாஜா=வாயில்.

‡ குறிப்பு :—கிடக்கி=பலகணி.

$ குறிப்பு :—ஜாம்பூள்=நாகப்பழம்.

யிற்று. அதனருகில் ஓர் விளாமரம் முளைத்திருப்பதால் அதற்குத் தற்காலத்தில் * **கவட்டீச்சா தர்வாஜா** என்னும் நாமம் வந்துள்ளது. (5) ஜாம்பூள் தரவாஜா என்பதன் அருகில் வளர்ந்திருக்கும் நாகமரத்தினல் அப்பெயர் வந்ததெனத் தெரிகிறது.

அவ்வரண்மனையில் (1) கணபதி மஹால் அல்லது தர்பார் ஹால், (2) நாநாவின் † திவான்கானு, (3) ‡ அரசே மஹால், (4) $ ஜூனு அரசே மஹால், (5) தாதாசாகிபு அல்லது ரகுநாத ராவ் பேஷ்வே திவான்கானு, (6) முதல் பாஜி ராவு பேஷ்வேதிவான்கானு, (7) நாராயணராவ் மஹால் (8) § ஹஸ்தி தந்திமஹால்.

இத்தகைய அனேக அத்தாணி மண்டபங்களும் ஆஸ்தான மண்டபங்களும், கண்ணுடியினுலும் யானைக்கொம்பினுலும் அற்புத வேலை செய்யப்பட்டிருந்த சபாமண்டபங்களும் நிறைந்திருந்த அரண்மனை 1827 ம் ஆண்டு ஜனவரி மீ 27௳ அடங்காத தீக்கிரையாகி அழிந்து விட்டதெனக் கேட்போர் யார்தான் மனம் பதைத்துப் பரதவியாதிருப்பர். சக்கரவர்த்தித் திருமகனர் இருந்து அரசுபுரிந்த அயோத்திமாநகரும், கிருஷ்ண பரமாத்மாவானவர் கோபிகளோடு குதூகலமாயிருந்த துவாரகா பட்டினமும், ஜனகன் ஆண்ட மிதிலையும், யுதிஷ்டிரனிருந்து செங்கோல் செலுத்தின அஸ்திஞபுரமும் எவ்வாறு பூமியின்கணில்லாது மறைந்து, அவைகளுக்குப் பதிலாக போலிப் பட்டினங்கள் ஏற்பட்டுள்ளனவோ, அவ்வாறே இவ்வரண்மனையும் எரிவாய்ப்பட்டொழிந்து பிற்காலத்தில் சமீபத்தில் நடந்த பெரும் யுத்தத்தில் காயமடைந்த போர்வீரர்களின் வைத்தியசாலையாகவும், கோர்ட்டு கச்சேரிகளின் இருப்பிடமாகவும் உபயோகப்பட்டுவந்து, இறுதியில் பம்பாய் கவர்னராகவிருந்த ஸர் ஜார்ஜ் லாய்ட் (Sir George Lloyd) என்னும் பிரபுவின் முயற்சியினுலும், பரமகருணநிதியான நம் இளவரசரின் அஸ்த விசேஷத்தாலும், தற்காலத்தில் இவ்வரண்மனை மகாராஷ்டிரர்களின் பூர்வநிலையை ஒருவாறு ஞாபகமூட்டிக்கொண்டு உயிர்த்தாங்கி நிற்கின்றது.

---

* குறிப்பு :—கவட்டீச்சா=விளாமரத்தின்.

† குறிப்பு :—திவான்கானு=சபாமண்டபம்.

‡ குறிப்பு :—அரசே=கண்ணுடி ; மஹால்=மண்டபம் அல்லது கூடம். $ ஜூனு=பழய.

§ ஹஸ்திதந்தி=யானைத்தந்தம்.

(2) **அமிருதேசுவரர் கோவில்** :—இவ்வாலயம் முதல் பாஜி ராவ் பேஷ்வே அவர்களின் சகோதரியும், அம்பாஜிபன்த் பாரா மதிகர் (Ambaji Pant Baramathikar) என்பவரின் பத்தினியு மான ஸ்ரீமதி பிவுபாய் (Bhivu Bai) அம்மையாரால் கட்டப் பட்டு, மூட்டாநதியின் கரையில் அதிசுந்தரமாக அமைந்துள்ளது.

## 3. புதவார்பேட்.

இதற்கு முகமதியர்கள் **மோஹிஞபாத்** என்னும் நாமம் கொடுத்திருந்தனர் என்று தெரிகின்றது. இது இப்பட்டினத் தின் முக்கியமான பாகமாகவும், கடைத்தெருக்கள் நிறைந்தும் ஜனநெருக்க முள்ளதாகவும் இருக்கின்றது. இப்பாகத்தில் பார்க்க வேண்டிய கட்டிடங்களாவன :—

(1) நாநாபடணி என்பவரின் அரண்மனே, (2) கிர்லோஸ்கர் நாடகமேடை, (3) ஆனந்தோத்பவ நாடகசாலே, (4) புதவார் தோட்டம், (5) தாம்படி ஜோகேசுவரியின் கோவில், (6) மோரேபி தாதா என்பவரின் அரண்மனே, (7) கொத்தவால் சாவடி (8) வில் வத்தோட்டம், (9) ஆனந்தாசிரமம், (10) ஜான் ஸ்மெயில் மெமோ ரியல் ஹால் (John Smail Memorial Hall), (11) ஹுஜூர் தோட்டம் (Huzur Bagh), (12) நூதன ஆரிய பூஷண நாடகசாலே (The New Arya Bhushana Theatre).

* **தாம்படி ஜோகேசுவரி கோவில்** :—கஸ்பா பேட்டி லுள்ள மகாகணபதியின் கோவிலேப்போலவே, இவ்வம்மையின் கோவிலே யும் இங்குள்ளோர் அதிக விசேஷமாகக் கொண்டாடுகின்றனர். மணம் உபநயனம் முதலிய சுபகாரியங்களேச் செய்வோர் முதலில் இக்கோவிலுக்கு மேள வாத்தியங்களுடன் சென்று பூசித்துவந்த பிறகுதான் அக்காரியங்களேத் தொடங்குகின்றனர். இவ்வம் மைக்கு எக்காலத்தும் செந்தூரம் பூசியிருப்பதால் † தாம்படி

---

* குறிப்பு :—இப்பட்டினத்தின் அனேக பாகங்களிலுள்ள எல்லாக் கட்டிடங்களேயும் விவரிக்கப்புகின் புத்தகம் அளவுக்கு மிஞ்சி விரியுமென் றஞ்சி, கோவில்களேப்பற்றி மட்டும் சிறிதுரைத்து, மற்றவைகளேப்பற்றி ஒன்றும் சொல்லாது விடப்பட்டது. அவைகளேப்பற்றி அறியவிரும்பு வோர் பூஞப்பட்டினம் சென்றபிறகு அங்குள்ளோரைக் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம். † குறிப்பு :—தாம்படி=சிவப்பு.

ஜோகேஸ்வரி என்றழைக்கின்றனர். நவராத்திரிகாலத்தில் அதி வைபவத்தோடு உற்சவம் நடக்கின்றது.

## 4. ரவிவார் பேட்.

இப்பாகத்திலுள்ள கட்டிடங்களாவன :— (1) சர்தார் **படக்கே** என்பவரின் அரண்மனை, (2) போஹரி (Bohari) ஜாதியாரின் மடம், (3) சோமேசுவரர் கோவில், (4) ஜும்மா மசிது, (5) சர்தார் கோர்ப்படே என்பவரின் அரண்மனை.

**சோமேசுவரர் கோவில்** :—இக் கோவிலில் யாத்ரீகர்கள் தங்குவதற்காக தர்மசாலை ஒன்று கட்டப்பட்டிருக்கிறது. தெரிசனம் விசேஷம்.

## 5. சுக்கிரவார் பேட்.

இப்பாகத்திலுள்ள கட்டிடங்களாவன:—(1) துளசி * பாக் (Tulsi Bagh), (2) ரே மார்க்கெட் (The Ray Market), (3) இராமேசுவரர் கோவில், (4) சுக்கிரவார அரண்மனை, (5) இலட்சுமி விலாச நாடகசாலை, (6) ஆரியன் சினிமா மேடை, (7) விஜயாநந்த நாடகசாலை, (8) இம்பீரியல் பாங்கி நகரக்கிளை (The Imperial Bank, City Branch), (9) நீதிபதி மாதவராவ் கோவிந்த ரானடே என்னும் பெரியாரின் அரண்மனை. (10) சர்வ ஜனசபை (The Public Hall).

(1) **துளசி பாக்** (The Tulsi Bagh):—இதில் இராமர் கோவில் ஒன்றும், விநாயகர் கோவில் ஒன்றும், சிவன் கோவில் ஒன்றும் கட்டப்பட்டிருக்கின்றன. இராமர் கோவிலிலுள்ள இராமர், இலட்சுமணர், ஜானகி, முதலிய மூர்த்திகள் தூவெண்மையான சலவைக்கல்லினுற் செய்யப்பட்டு, அதிசுந்தரமாய் விளங்குகின்றன. இராமர் சந்நிதியில் அஞ்சலியஸ்தராய் நிற்கும் ஆஞ்சனேயர் மாத்திரம் கருநிறத்தோடு ஒளிர்கின்றனர். ஸ்ரீராமநவமியில் உற்சவம் நடக்கின்றது.

(2) **இராமேசுவரர் கோவில்** :—மகா சிவராத்திரியில் உற்சவம். தெரிசன விசேஷம்.

## 6. நாரயண பேட்.

இதிலுள்ள பிரதானக் கட்டிடங்களாவன :—(1) மகா கணபதியின் கோவில், (2) அஷ்டபுஜதேவியின் கோவில் (3) ஸ்ரீலோக

* குறிப்பு:—பாக்=தோட்டம்.

மான்ய பால கங்காதர திலகர் பெருமானின் அரண்மனை, (4) நிபந் தமாலாகர விஷ்ணுசாஸ்திரி சிபுளூண்கர் என்பவரின் வாசஸ் தானம், (5) மாணகேசுவர மகாவிஷ்ணுவின் ஆலயம், (6) மூட்டா நதியின் மேல் போட்டிருக்கும் மரப்பாலம்.

**ஸ்ரீலோகமான்னிய திலகர் அரண்மனை** :—இப்பெருங்கட் டிடம் ஆதியில் பரோடா சமஸ்தானத்திற்குச் சொந்தமாயிருந்து காயக்கவாட் வாடா (Gaikwar Palace) என்னும் பேரோடு இருந்துவந்தது. பிறகு பரோடா மகாராஜாவானவர் ஸ்ரீலோக மான்னியர் அதில் வசிப்பின் தம்முடைய அரண்மனைக்கு ஓர் பெருங்கீர்த்தியுண்டாமென்று கருதி, திலகர் பெருமானிடம் 1905-ம் வருஷத்தில் அதை விற்றனர். லோகமான்னியர் அதை வாங்கி **மஹாராட்டா** (The mahratta) என்னும் ஆங்கிலப்பத்திரிகையை யும், **கேஸரி** (The Kesari) என்றும் மகாராஷ்டிர தேசீயப்பத்திரி கையையும் அதில் அச்சடித்து வெளியிடுவதற்காக அச்சுயந்திர சாலையை ஸ்தாபிக்கும்பொருட்டு, அக்கட்டிடத்தில் அனேக ஆயிரம் ரூபாய்களைச் செலவழித்து வேண்டிய மாறுதல்களைச் செய்து, அப் பட்டினத்திலும் தேசத்திலும் அபூர்வ சக்தியுடன் தேசபக்தியை வளர்த்துவந்தனர் என்பது யாவரும் நன்கறிந்த விஷயம். இக் காலத்தும் அதில் அனேக தேசீய சபைகள் கூடுகின்றன. இக்கட்டி டத்தில் உள்ள விசாலமான சபைக்கூடத்தில் ஸ்ரீதிலகர் அவர் களின் உருவக்கற்சிலையும் (Statue) நம் தாய்நாட்டிற்காகத் தங் கள் தங்கள் உடல் பொருள் ஆவி முதலியவற்றைத் திரணமாத்திர மாக நினைத்துப் பாடுபட்ட அனேகம் பெரியார்களின் அழகிய உருவப்படங்களும் வைக்கப்பட்டிருக்கின்றனவாதலின் பூனப்பட் டினம்போவோர் இக்கட்டிடத்தைப் பாராது போவரேல் பழம் நீக்கித் தோல்கொண்டவராவர்.

## 7. சதாசிவ பேட்.

இப்பட்டினத்திலுள்ள எல்லாப் பாகங்களிலும் இப்பாகம் குடியிருப்பதற்கு வசதியானது. காற்று ஜலம் முதலிய சௌகரி யங்கள் அதிகம். வீதிகள் விசாலமாகவும், வீடுகள் நெருக்க மின்றித் தோட்டம் துரவுகளுடனும் இருக்கின்றன.

இப்பாகத்திலுள்ள பிரதான கட்டிடங்களாவன :—(1) விசி ராம் தோட்ட அரண்மனை (2) ஸ்ரீநரஸோபாவின் கோவில் (3)

குன்யா முரலிதரர் கோவில் (Khunya Muralidhar Temple) (4) ஹீராபாக் (Hira Bagh) (5) டெக்கன் சபாமண்டபம் (The Deccan Sabha) (6) டெக்கன் லிபரல் கிளப் (The Deccan Liberal Club) (7) சித்திரசாலே நீராவி அச்சுக்கூடம் (The Chitrasála Steam Press) (8) டெக்கன் ட்ரேடிங் வர்க்ஸ் (The Deccan Trading works) (9) நாத்திபாய் தாக்கர்ஸி பெண்கள் உயர் தரக் கல்விச்சாலே (The Natheboy Thackersey Girls High School) (10) பூனு சேவைசாதன் (The Poona Sevasadan).

(1) நரஸோபாவின் கோவில்:—சனிவார் பேட்டையில் கார்க்கோள்பூர் என்னும் ஓர் பாகத்தில் இக்கோவில் இருக்கின்றது. இதில் இரணியகசிபுவைத் தம் வாயாற்கடித்து வயிற்றைப் பிளந்து அவன் உதிரத்தைப் பருகும் அவசரத்தில் நரசிம்மப் பெருமாள் எழுந்தருளியிருக்கின்ருர். தரிசனம் விசேஷம்.

(2) குன்யா முரலிதரர் கோவில்:—இக்கோவிலிலிருக்கும் வேணுகான கோபாலகிருஷ்ணமூர்த்தி அதியற்புதமான சுந்தர வதனத்தோடு காட்சிகொடுத்துப் பார்ப்போர் மனதைப் பரவசப் படுத்துகிறது. இக்கோவில் மேற்சொன்ன நரஸோபாவின் கோவிலின் அருகில் இருக்கின்றது.

## 8. கணேச பேட்.

இப்பாகத்திலிருக்கும் கட்டிடங்களாவன:—(1) டேல்யா மாருதி கோவில் (2) ஆரியபூஷண நாடகசாலே (3) கல்நாகம்.

டேல்யாமாருதி கோவில்:—இந்நகரைப் பரிபாலிக்கும் தேவதைகளுள் இங்குறையும் ஆஞ்சனேயர் சிரேஷ்டர். கி. பி. 1761 ம் ஆண்டில் இந்துஸ்தானத்தில் மகாராஷ்டிரர்களுக்கும் ஆப்கானியர்களுக்கும் பானிபட் (Panipat) என்னுமிடத்தில் ஓர் கடும் போர் விளைந்து, இருதிறத்தாரும் மிக்க வீராவேசத்தோடு போர் புரிந்தனர். அக்காலத்தில் ஓர் நாள் இம்மூர்த்தி நீர் ததும்பிய கண்களோடு சற்று நேரம் கம்பித்ததைக்கண்ட ஜனங்கள் தங்கள் வீரர்களுக்குப் போரில் அபஜயம் நேர்ந்திருக்க வேண்டுமென்று நினைத்துப் புலம்பலாயினர். அதற்கேற்ப அன்று யுத்தகளத்தில் மகாராஷ்டிர வீரர்கள் முறியடிக்கப்பட்டனர் என்னும் சேதி வரக் கண்ட பூனுவாசிகள் இப்பவனபுத்திரரிடம் அதிக கவனம் செலுத்திப் பயபத்தியோடு வழிப்பட்டு வணங்கிவரலாயினர். அன்று

கம்பித்து நடுங்கின காரணம்பற்றி இவருக்கு * டேல்யா மாருதி என்னும் திருநாமமிட்டழைக்கலாயினர் என்று தெரிகிறது.

## 9. வேதாள பேட்.

இதற்கு ஆதியில் குருவார்பேட் என்ற நாமமிருந்ததென்றும் இங்கு வேதாளத்தின் கோவில் கட்டி முடிந்த பிறகு, இதன் பேர் வேதாள பேட் என்று மாறிற்றென்றும் தெரிகிறது. இங்கு பார்க்கவேண்டிய விசேஷ ஸ்தலங்களாவன :—(1) வேதாளத்தின் கோவில், (2) பாரஸ நாதர் கோவில்.

(1) வேதாளத்தின் கோவில் :—வேதாளம் என்பது பூதம், பிசாசம் முதலியவைகளின் அரசனாகக் கருதப்படுகின்றது. இக்கோவிலின் ஓர் பக்கத்தில் வேதாளத்தின் பாதுகைகள் இருக்கின்றன. மற்றோர் பக்கத்தில் நம் தென்னாட்டிலுள்ள † சுவேதாரணியம் என்னும் திருவெண்காட்டில் எழுந்தருளியிருக்கும் அகோர வீரபத்திர மூர்த்திபோன்ற ஓர் மூர்த்தி செந்தூர தூளிதத்துடன் இரத்தமயமாய் நிற்கின்றது. ஆதிகாலத்தில் பேஷ்வே அரசாட்சியில் யுத்தகாலத்தில் உபயோகிப்பதற்காகச் செய்த பீரங்கிகள் இனிதமையும் பொருட்டு, இவ்வேதாளத்தை தியானித்துச் செய்ய அவர்கள் மனோபீஷ்டம் குறைவற நிறைவேறினமையின், அவர்களாற் செய்து வைக்கப்பட்ட ஓர் பெரிய வெண்கலமணி இக்கோவிலில் தொங்கவிடப்பட்டிருக்கின்றது. இத்தனை பெரிய மணி இப்பக்கத்தில் மற்றெக்கோவிலிலும் இருப்பதாகத் தெரியவில்லை.

(2) பாரஸநாதர் கோவில் :—இது சமண மதத்தினருக்காக ஏற்பட்ட கோவில்.

## 10. ராஸ்தாபேட். (Rastahpet).

முதன் முதலில் இதன் பேர் சிவபுரி என்று ஏற்பட்டிருந்து, பிற்காலத்தில் ராஸ்தே குடும்பத்தார் இங்கு அவர்களுடைய

* டேல்யா=அசைந்தாடுதல்.

† குறிப்பு :— இத்தலம் சீகாழிக்குத் தென்கிழக்கில் 8 மைல் தூரத்தில் இருக்கிறது. நல்ல சாலையிருக்கிறது. சுவாமி : சுவேதாரணியேசுவரர், அம்பாள் :-பிரமவித்யாநாயகி. தீர்த்தம் :-முக்குளம். விருட்சங்கள் :-கொன்றை, ஆல், வில்வம்.

அரண்மனையைக் கட்டின பிறகு இப்பாகத்திற்கு ராஸ்தாபேட் என்னும் பேருண்டாயிற்று என்று தெரிகிறது.

ஆதிகாலத்தில் ஸாஹு சத்ரபதி (Sahu Chatrapati) மஹாராஜா காலத்தில் பிக்காஜி ஷாமராஜர், சதாசிவ ஷாமராஜர் என்னும் இருசகோதார்கள் இருந்தனர். அவர்களுக்கு அக்காலத்திலே ஏராளமான சொத்துக்களிருந்ததுடன், ஏழைகளுக்கு அனேகவித தான தர்மங்களைச் செய்து புகழ்படைத்திருந்தனர். மேலும், அவர்கள் செய்துவந்த தொழிலை மிகவும் நாணயமாகவும் கராராகவும் நடத்திவந்தமையின், அவர்களுக்கிருந்த கோக்கலே என்னும் குடும்பப் பெயர் மறைந்து * ராஸ்தே என்னும் பெயர் உண்டாயிற்று. அவர்கள் அனேக இலட்சம் ரூபாய்கள் செலவழித்துக் கட்டியிருக்கும் அரண்மனை நூற்றுக்கணக்கான வருஷங்களாகியும் அழிவடையாது இப்போது கட்டி முடித்த கட்டிடத்தைப்போல் விளங்கானிற்கின்றது. இவ்வரண்மனையில் ஓர் சிவன் கோவிலும், ஓர் இராமர் கோவிலும் கட்டப்பட்டுள்ளன. இராமர் கோவிலில் இருக்கும் இராமர் விக்கிரகம் அதியற்புதமான சுந்தரரூபத்தோடு விளங்கிப் பார்ப்போர் மனதைப் பற்றிக் கவர்கின்றது. இப்பட்டினம் வருவோர் இவ்வரண்மனையைப் பார்ப்பதும், இம்மூர்த்தியை தரிசிப்பதும் மிக அவசியம். தவிர இப்பாகத்தில் குடியேறியிருப்பவர்களில் அனேகர் நம்தென்னாட்டினராக இருக்கின்றனர். யாத்திரைக்காரர்கள் தம் தாய்மொழியாகிய தமிழ்மொழி பேசுவோரைக் காணவேண்டுமென்ற அவாக்கொள்ளின் இங்குச் சென்றுவரலாம்.

இங்கு பிரதிவருஷம் ஆவணி மாதத்தில் சிராள (ஸ்ரீபால்) ஷேட் என்பவரின் ஞாபகார்த்தகமாகப் பெருந்திருவிழா நடக்கின்றது. சிராள ஷேட் என்பவர் லிங்காயத்து ஜாதியைச் சேர்ந்த பெரியார்.

## 11. சோமவார் பேட்.

இதற்கு முற்காலத்தில் ஷஹாப்பூர் என்னும் பேர் இருந்திருந்ததாகத் தெரிகிறது. பிறகு எக்காரணத்தினால் இப்பெயர் கிடைத்ததென விளங்கவில்லை. மற்றப்பாகங்களுக்கு மற்றக் கிழ

* குறிப்பு :—ராஸ்தே=சத்திய சந்தர்.

மைகளின் பேர் கொடுத்தபொழுது இதற்கும் சோமவாரத்தின் பேர் கொடுத்தனர்போலும். இப்பாகத்திலுள்ள (1) நாகேசுவரர்கோவிலும், (2) மகாவிஷ்ணுவின் கோவிலும் தெரிசிக்கத் தகுந்தவை.

(1) நாகேசுவரர் கோவில் :—இது இப்பட்டினத்திலிருக்கும் அதிபுராதனக் கோவில்களுள் ஒன்று.

(2) மகாவிஷ்ணுவின் கோவில் :—இது கோசாவிப்புரம் என்னும் பாகத்தில் இருக்கின்றது. இது கி. பி. 1846 ம் வருஷத்தில் ஸ்ரீ நரபதிகிரி கோசாவி சுவாமிகளுடைய குருநாதரான காசிகிரி கோசாவி சுவாமிகளாற் கட்டப்பட்டதெனத் தெரிகிறது. இதிலிருக்கும் விக்கிரகங்கள் மிக அழகாக இருக்கின்றன. இதற்கருகில் யாத்ரீகர்கள் தங்கக்கூடிய தர்மசாலை ஒன்று இருக்கின்றது.

## 12. ஙியாஹால்பேட் (Nyahalpet).

முற்காலத்தில் இப்பட்டினத்தில் வசித்துவந்த ஸ்ரீமான் ஸர்தார் காஸகிவாலே என்பவர் தம்மிடம் அதிவிசுவாசத்துடன் வேலைபார்த்துவந்த தம் சேவகரான (Nyahalchand) என்பவரின் ஞாபகார்த்தமாக இப்பாகத்தை உண்டாக்கியதால் இதற்கு இப்பெயர் கிடைத்தது. இங்குப் பார்க்கவேண்டியது ஒன்றுமில்லை.

## 13. நாநாவின்பேட்.

நாநாபடணிஸ் (Nana Pattani) என்பவர் இப்பாகத்தை உண்டாக்கியதால் இப்பாகத்திற்கு இப்பெயர் கிடைத்ததெனத் தெரிகிறது. இப்பாகத்தில் பார்க்கவேண்டிய ஸ்தலங்களாவன :— (1) அக்கினி தானே மும்மூர்த்தி வடிவமாய் நின்று முத்தொழிலையும் செய்யும் என்று கருதும் அக்கினிபூதவாதி மதத்தினரான பார்ஸி ஜாதியார் வணங்கும் அக்கினிபகவான் கோவில். இதை இங்குள்ளோர் அக்யாரி (Agyari) என்று சொல்லுகின்றனர். (2) விட்டோபாவின் கோவில் (3) குதிரைப்பந்தய மேடை (The Race Course). இந்தப் பேட்டையில் பார்ஸீ ஜாதியார், கிறிஸ்துவர்கள், முகமதியர்கள், யூதர்கள் முதலிய எல்லா மதத்தினர்களும் வசிக்கின்றனர்.

## 14. பவானிபேட்.

இப்பாகத்திற்கு முதலில் போர்பன் (Boreban) என்ற பெயர் இருந்ததாகவும், இதில் சர்வலோக ஜனனியாகிய ஜகதம்பிகை

பவானி தேவியின் கோவில் கட்டப்பட்டபிறகு இதற்கு இப் பெயர் கிடைத்ததென்றும் தெரிகிறது. இக்கோவிலுக்கருகில் யாத்திரைக்காரர்கள் தங்குவதற்கு வசதியான ஓர் தர்மசாலே இருக்கின்றது. நவராத்திரி காலத்தில் பெருந்திருவிழா நடை பெறுகின்றது. அம்பாள்பேரால் ஆயிரக்கணக்கான ஆடு கோழி கள் பலியிடப்படுகின்றன. உயிர்ப்பிராணிகளைத் துடிதுடிக்க வெட்டிப் பலியிடும் இக்கொடுமையான பழக்கம் நம் இந்தியாவி னின்று விரைவில் நீங்குமாறு ஈசன் அருள்புரிவாராக.

## 15. முஜபர்ஜங்பேட் (Muzaffarjungpet).

இந்தப்பேட்டை ஸ்ரீமான் மாலோஜிராஜே கோர்ப்படே (Ghorpade) அவர்களின் சேனுதிபதியாயிருந்த முஜபர்ஜங் என்பவரால் நிருமிக்கபபட்டதால், இதற்கு இப்பெயர் உண்டா யிற்றெனத் தெரிகிறது.

## 16. கஞ்ச்பேட் (Ganjpet).

இதில் பார்க்கத்தக்கதொன்றும் இல்லே.

## 17. கோர்ப்படேபேட் (Ghorpadepet).

மாதவராவ் பேஷ்வே யிடத்தில் தளகர்த்தராயிருந்த மாலோஜி ராஜே போன்ஸ்லே என்பவர் தம் சேனைகளினிடையில் ஜரிகைக்கொடிபோட்டு நடாத்தும் கௌரவம் பெற்றிருந்த கார ணம்பற்றி **கோர்ப்படே** என்னும் சிறப்புப் பெயர் பெற்றிருந்தார். அவர் இப்பாகத்தை நிருமித்துத் தம் அரண்மனையைக் கட்டிய தால் இப்பாகத்திற்கு இப்பெயர் கிடைத்ததெனத் தெரிகிறது. தற்காலத்தில் அவ்வரண்மனை இடிந்து பாழாய்க் கிடக்கின்றது. இப்பாகத்தில் ஏழைகள், கூலிக்காரர்கள், சக்கிலியர்கள் முதலி யோர் வசிக்கின்றனர்.

## 18. மங்களவார்பேட்.

இப்பாகத்திற்கு ஆதியில் **ஷாயிஸ்தேபுரம்** என்னும் பேர் இருந்ததாகத் தெரிகின்றது. டில்லி பாதுஷாக்களில் மதத் துவேஷமென்னும் மதம்பிடித்திருந்தவரும், ஆதி சிவாஜிமகா ராஜரை அனேகவிதமாய் வருத்திவந்தவருமான அவுரங்கசீப் பாதுஷாவின் சிற்றன்னையின் கணவரான ஷாயிஸ்டகான் (Shaistakhan) என்பவர் அவுரங்கசீபால் ஏவப்பட்டு சிவாஜி மகா

ராஜாவைப் பிடித்துக் கைதுசெய்யும் எண்ணத்தோடு பூனாவுக்கு வந்தபோது, இப்பாகத்தில் தங்கியிருந்த காரணம்பற்றி இதற்கு அப்பெயர் வந்ததாகவும், பிற்காலத்தில் மகாராஷ்டிரர்கள் அவ் வமங்கல நாமத்தைநீக்கி மங்கலமான மங்களவார்பேட் என்னும் பெயரிட்டனர் என்றும் தெரிகின்றது. இப்பாகத்தில் அனேக பெரிய மாளிகைகள் இருந்து இடிந்துபோன சின்னங்கள் இருக்கின்றன.

## பாம்புடிபேட் (Bhambudipet).

இது முற்காலத்தில் தனியாகச் சிறு கிராமமாகவிருந்து தற்காலத்தில் பூனாப்பட்டினத்தோடு சேர்க்கப்பட்டிருக்கிறது. இதற்கும் பூனாவுக்கும் இடையில் மூட்டா (Muta) நதி ஓடுகின்றது. பூனாவிலிருந்து இப்பேட்டைக்குப்போக, * **லக்கடிபூல்** (Lakkadi-pool), † தகடிபூல் (Dagadipool), லாயிட்பூல் (Lloydpool) என்னும் மூன்று வாராவதிகள் இருக்கின்றன. இவைகளுள் முதலாவது அதியற்புதமான வேலைப்பாடுள்ளது. பார்ப்பது அவசியம். இப்பாகத்தில் அனேக ஐரோப்பியர்களுடைய அழகான மாளிகைகளும், ஸ்ரீபாஞ்சாலேசுவரர் கோவிலும் இருக்கின்றன.

ஆதிகாலத்தில் இங்கு வசித்திருந்த விட்டோஜி ஹோல்கார் என்பவரை இரண்டாவது பாஜிராவ் பேஷ்வேயானவர் பிடித்து வரும்படிச் செய்து, மகாகுரூரமான மனத்தோடு யானையின் காலின்கீழ் கொடுத்து நெருடச்செய்தனர் என்றும், பழிக்குப்பழி வாங்கும் எண்ணத்தோடு மேற்சொல்லிய விட்டோஜி ஹோல்கார் என்பவரின் சகோதரர் யசவந்தராவ் ஹோல்கார் என்பவர் அங்குள்ளோரைத் திரட்டியழைத்துக்கொண்டு பாஜிராவைக் கொல்வதற்கு முயல, அதற்குப்பயந்தோடின பாஜிராவ் ‡ 1802ம் வருஷம் டிசம்பர் மாதத்தில் ஆங்கிலேயரிடம் சரண்புகுந்து, தாம் சர்வசுதந்திரமாய் ஆண்டுவந்த மகாராஷ்டிர தேசத்தை ஒப்படைத்துவிட்டனர் என்றும் இங்குள்ளோர் இன்னமும் சொல்லிப் பரிதபிக்கின்றனர்.

---

* குறிப்பு :—லக்கடி=மரம் ; பூல்=பாலம். † தகடி=கருங்கல்.

‡ குறிப்பு:—நம் தென்னாட்டிலுள்ள நெற்களஞ்சியமான தஞ்சை நாடும் அநேகமாய் இக்காலத்திலேயே ஆங்கில அரசாங்கத்தாரிடம் தஞ்சமென்றேகிற்று என்பதை ஆழ்ந்துநோக்கின், அக்காலம் பொதுவாக மகாராஷ்டிரர்களுக்கு விநாசகாலமாக இருந்ததாகத் தோற்றுகிறது.

ஸ்ரீ பாஞ்சாலேசுவரர் கோவில் :—இக்கோவில் ஒரு சிறு குன்றிற்குடைந்தெடுக்கப்பட்ட குகையில் இருக்கின்றது. கோவிலுக்கருகில் செல்லுமளவும் கோவில் இருக்கும் இடமே தெரியாமல் மறைந்திருக்கின்றது. கோவிலிருக்கும் குன்றின் அடிவாரத்திற் சென்றவுடன், நாடகமேடைகளில் விட்டிருக்கும் திரைகளைத் தூக்கியவுடன் நாடகபாத்திரர்கள் நடிக்கும் காட்சி எவ்வாறு திடீரெனச் சபையோர் கண்களுக்குப் புலப்படுகின்றதோ, அவ்வாறே இக்கோவிலும் விசாலமான சபாமண்டபத்துடனும், அதிவிசித்திரமான செதுக்குச் சிற்பவேலைகளுடனும் பார்ப்போர் கண்களுக்குத் தென்படுகின்றது. பஞ்சபாண்டவர்கள் தங்கள் அஞ்ஞாதவாச காலத்தில் இப்பாகத்தில் கரந்துறைந்திருந்து இக்கோவிலைக் கட்டிமுடித்தனர் என்று சொல்லிக்கொள்ளுகின்றனர்.

### சது: சிருங்கிதேவி கோவில்.

இந்தக்கோவில் பூனாவிலிருந்து சுமார் 3 மைல் தூரத்தில் ஒரு சிறு மேட்டின்மேல் இருக்கின்றது. ஏறிப்போக 80 படிகள் இருக்கின்றன. கி. பி. 18ம் நூற்றாண்டின் இறுதியில் துல்லப ஷேட் என்னும் ஓர் சீமான் இங்கு வசித்துவந்ததாகவும், அவர் பிரதி வருஷமும் நாசிக் பட்டினத்திலிருந்து சுமார் 30 மைல் தூரத்திலுள்ள சப்த சிருங்கிதேவியின் ஆலயத்துக்குச் சென்று தரிசித்துவரும் நியமத்தைக் கைக்கொண்டிருந்தனர் என்றும், அவர் வயோதிகப்பருவத்தில் சுமார் 100 மைலுக்கப்பாலிருக்கும் தேவியை நேரிற்சென்று தரிசிக்கவியலாது வருந்தினதைக்கண்ட ஜகதம்பிகையானவள், தன் பக்தன் படும் துயரத்தை அகற்ற எண்ணி அவர் கனவில் தோன்றி, தான் அருகிலிருக்கும் இக்குன்றின்மேல் சது : சிருங்கி என்னும் திருநாமத்தோடு எழுந்தருளியிருப்பதாகவும், அங்குவந்து தரிசித்துப்போமாறும் கட்டளையிட்டு மறைந்தனளென்றும், அவ்வாறே அவர் இம்மேட்டின் மேற் சென்று பார்த்தபோது, இப்போதிங்குக் கோவில்கொண்டுறையும் தேவி எழுந்தருளியிருந்ததைக் கண்டனர் என்றும், அக்காலம் முதல் இக்காலம்வரை இந்த தேவி மகா வரப்பிரசாதியெனும் புகழ்பெற்று, தன்னை நாடிவரும் பக்த கோடிகளுக்கு அருள்புரிந்து வருகின்றனளென்றும் சொல்லப்படுகின்றது. இக்கோவிலுக்கு அருகில் பிரயாணிகள் தங்கு

வதற்கு வசதியான தர்மசாலை ஒன்று இருக்கின்றது. நவராத்திரியில் உற்சவம் நடக்கின்றது.

## கணேசகிண்ட் கணபதி.

இக்கோவில் சது: சிருங்கி தேவியின் கோவிலிருக்கும் மேட்டின் அடிவாரத்தில் இருக்கின்றது. ஷெ தேவியின் தரிசனார்த்தம் போவோர் இங்கும் சென்று தரிசித்து வரலாம்.

## பார்வதிக்குன்று (The Parvati Hill).

இவ்வழகிய குன்றானது ஊருக்குவெளியில் கண்ணுக்கினிய காட்சியளிக்கும் ஓர் அழகான இடத்தில் அமைந்திருக்கின்றது. இது பூமிமட்டத்திலிருந்து சுமார் 260 அடி உயரமிருக்கும். இக்குன்றிற்குக் காலையிலும் மாலையிலும் முகமதியர் கிறிஸ்துவர் முதலிய எல்லா மதத்தினரும் கூட்டங்கூட்டமாகச் செல்கின்றனர். அங்குச் செல்வோர் அனைவருக்கும் "ஏ யதா மாம் ப்ரபத்யன்தே தாம் ஸ்ததைவ பஜாம்யஹம்." என்று பகவான் அருளிச் செய்த திருவாக்கின்படி, அவரவர்கள் மனோபீஷ்டம் நிறைவேறுகின்றது என்பதிற் சற்றேனும் ஐயமில்லை. நிர்மலமான காற்றை நாடிச்செல்வோர் அதிபரிசுத்தமான பவன ஸ்பரிசம் பெறுகின்றனர். தேகப் பயிற்சியை நாடிச் செல்வோர் அக்குன்றின்மேற்போகக் கட்டப்பட்டிருக்கும் 108 படிகள் ஏறிப்போவதினாலுண்டாகும் சிரமத்தினால், தேகத்தில் வேர்வை ஆறுகப் பெருகி ஓடி சரீர சுத்தியடைந்துத் தாம் வேண்டிய பலனை உடனே அடைகின்றனர். கண்ணுக்கினிய காட்சி காணப் போவோர் குன்றின்மேல் சிறிது தூரம் சென்றவுடன் நாலாபக்கங்களிலும் பார்த்து, கண்கொள்ளா இயற்கைக் காட்சியைக் கண்டு களிப்புறுகின்றனர். ஏகாந்தத்தைத் தேடுவோர் மலையின் எப்பாகத்திலும் தங்கள் கோரிக்கையை நிறைவேற்றிக்கொள்ளுகின்றனர். தென்னாட்டிலுள்ள திருச்சினப்பள்ளியெனும் * திரிசிரபுர க்ஷேத்திரத்தில் தம்மிடத்து மிக்க அன்புடைய தனகுப்தன் மனைவியின் பொருட்டுச் சிவபெருமான் அவள் பிரசவகாலத்தில் காவிரிப் பெருக்கால் வரத்தடைப்பட்ட அவள் தாய்போற்

* குறிப்பு:—இத்தலமிருக்குமிடம் உலகப் பிரசித்தம். சுவாமி: தாயுமானவர். அம்பாள்: மட்டுவார்குழலி. தீர்த்தம்: காவிரி; நன்றுடையான்; தீயதில்லான் முதலியன.

சென்று மருத்துவம் பார்த்துத் தாயுமானபிரான் கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கும் மலைக்கோட்டையைப் போலவே, இங்கிருக்கும் இப்பார்வதிக் குன்றும் கேட்டதெல்லாம் தருவதுமன்றி, நினைப்பதெல்லாமருளி ஜனங்களின் குறைகளை நிவர்த்திசெய்து வைக்கின்றது. இப்பர்வதத்தைப்பற்றிக் கர்ண பரம்பரையாக இரண்டு சரித்திரங்கள் இருந்துவருகின்றன.

முதலாவது சரித்திரம்:—முன் திரேதாயுகத்தில் ரகுவம்சத்தை உத்தாரணம் செய்யப் பிறந்த ரகுகுலோத்தமரான ராகவனைப்போல், இக்கலியுகத்தில் கலியின் வலியினால் கண்டதுண்டமாக்கப்பட்டுக் கவலையடைந்திருந்த பாரத மாதாவின் மனக் கவலை தீர, மகாராஷ்டிர பூமியில் பிறந்து மாண்பெய்திய மன்னர் பிரான் சிவாஜிச் செம்மலின் பௌத்திரரும், சாம்பாஜி மகாராஜரின் ஜேஷ்ட சிரஞ்சீவியுமான ஸாஹு மகாராஜர் சாகுந்தருணத்தில், தம் ஆப்த நண்பரான நாநா சாகிபு என்னும் பாலாஜி பாஜிராவை அருகில் அழைத்து, "நம் பாட்டனாரின் பராக்கிரமச் செயல்களால் நமக்குக் கிடைத்த இப்பாரத நாட்டை நாம் உம்மிடம் ஒப்புவிக்கின்றோம். நீர் அதை உம் உயிர் நிலையாய்க் கருதிப் பரிபாலித்து வருவீராக." எனச் சொல்லினர். அவ்வாணையைச் சிரமேற்கொண்டு பாலாஜி பாஜிராவானவர்,

வண்மை யில்லையோர் வறுமை யின்மையால்
திண்மை யில்லைநேர் செறுந ரின்மையால்
உண்மை யில்லைபொய் யுரையி லாமையால்
வெண்மை யில்லைபல் கேள்வி மேவலால்.

எனக் கவியரசராய கம்ப நாட்டாழ்வார் மிகக் கவின்பெறப் புகழ்ந்து பாடியுள்ள அயோத்திநாட்டின் அரசாட்சியை, ஐயன் ஆணையால் அடையப்பெற்ற சேனையர் தருமத்தின் தேவாகவும் செம்மையின் ஆணியாகவும் இராமபிரானாலேயே புகழ்ந்து போற்றப்பட்ட பரதாழ்வார், எவ்வாறு நந்தியம்பதியிடை நாதன் பாதுக்கம் செந்தனிக்கோன் முறை செலுத்தும்படி வைத்திருந்தனரோ, அவ்வாறே பாலாஜி பாஜிர்ராவு பேஷ்வேயும் சிவாம்சமான சிவனேரிச் சிவராய மூர்த்தியின் பாதுகைகளை சாட்சாது திரிபுராந்தகன் திருவடிகளாகவே எண்ணி, இப்பர்வதத்தில் பிரதிஷ்டை செய்து, அவைகளை நாடோறும் பத்திர புஷ்பாதிகளால் அருச்

சித்து வணங்கிவந்தனர். இந்நல் வழக்கம் இருந்து வந்தவரை ஈசன் கிருபையும் இருந்துவந்தது. இறுதியில் பேஷ்வே அதிகாரம் வகித்த பாஜிராவானவர் தம் மூதாதைகளைவிடத் தாம் அதிக புத்திசாலியாக எண்ணித் தான் என்னும் அகங்காரமேலீட்டினால், தாம் அந்தணர்குலத்துதித்தவராயிருக்க க்ஷத்திரிய குலத்திற் பிறந்த சிவாஜி மன்னரின் பாதுகைகளைத் தாம் வணங்கத் தகுமோவென நினைத்து, "விநாசகாலம் விபரீத புத்தி." "கேடுவரும் பின்னே மதிகெட்டுவரும் முன்னே." என்னும் ஆன்றோர் மொழிகளின்படி, அப்பர்வதக் கோவிலிலிருந்த அப்பரம பவித்திரமான பாதுகைகளை எடுத்துவிட்டு, அவ்விடத்தில் ஓர் சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்தனர். பாஜிராவு எக்காலத்தில் இம்மதியீனச் செய்கையைச் செய்தனரோ, அக்காலமே மகாராஷ்டிர அரசாட்சி மடிந்து மண்ணுறுங் காலமாய் முடிந்தது.

இரண்டாவது சரித்திரம்:—வெகு நீண்ட காலமாய் இப்பர்வதத்தின் சிகரத்தில் * பர்வத்தி என்னும் பேர்கொண்ட தேவியின் கோவில் இருந்துவந்தது. அதை அங்குள்ள வேடர் முதலிய தாழ்ந்த ஜாதியார் ஆராதித்து வந்தனர். அவ்வம்பிகையைப் பூசிக்கும் பூசாரி தினந்தோறும் காலையில் மலைக்குப்போய் தேவியின் பூசையை முடித்துவருவதை †மோத்திபாக் (Moti Bagh) என்னும் பூங்காவிலிருந்து கவனித்து வந்த நாநா சாஹிபு பேஷ்வே அவர்களின் மனைவி ஓர்நாள் அப்பூசாரியை விளித்து, நாடோறும் அவன் அப்பர்வதத்திற்கு எதைக் கருதிச் சென்று வருகின்றனனென வினவ, அவன் தான் பர்வத்தி தேவியின் பூசையின் நிமித்தம் போகிறதாகவும், அவ்வம்பிகை மகா வரப்பிரசாதி என்றும் சொல்லிச் சென்றனன். அக்காலத்தில் நாநா சாஹிபு பேஷ்வே அவர்கள் தாய் காசிபாய் அம்மையார் தம்மை நெடுநாளாய்ப் பீடித்து வருத்திவந்த ஓர் கொடும்பிணியால் துன்புற்றிருந்தனர். "மாமியார் துன்பம் மருமகட்கின்பம்." என்ற நவீன நாகரிகச்சட்ட விதிபோலன்றி, தம் மாமியார் பேரில் மிக வாஞ்சையோடிருந்த அவ்வம்மையார், தம் மனதில் தேவியை

*குறிப்பு:—பர்வத்தி என்னும் மொழி பர்வதத்தின் மேலுறைபவள் என்று பொருள்படும். பார்வதி என்னும் மொழி பர்வத்தி என்று வழக்கில் மருவிநின்றது என்றும் கொள்ளலாம்.

† குறிப்பு :—மோத்தி=முத்து ; பாக்=தோட்டம்.

நினைத்துத் தம் மாமியார் பிணி நீங்கிச் சுகம்பெறின், தாம் தேவிக்கு ஆலயங்கட்டி வைத்துத் தொண்டுபுரிந்து வருவதாக வாசாதத்தம் செய்துகொடுத்து, அப்பூசாரியிடம் நீறுபெற்று, தம் மாமியாரிடம் சென்று நடந்ததை வெளியிட்டு, தாம் கொண்டு வந்த நீற்றை அவர் நெற்றியிலிட்டனர். "அருத்தமதாவது நீறு, அவலம் அறுப்பது நீறு, வருத்தம் தணிப்பது நீறு, வானம் அளிப்பது நீறு." என்று வற்புறுத்தியிருக்கும்வண்ணம் வெள்ளெனும்பைப் பெண்ணுக்கின வெண்ணீற்றுக்கு அச்சிறு உடற்பிணியை அகற்றுவது அருமையாகுமா? நீறு பூசிய நிமிடத் திருந்தே காசிபாயியம்மையாரின் பிணி சொல்லாதோடத் தொடங்கிற்று.

இதையறிந்த பேஷ்வே அவர்கள் சுமார் 10 லட்சம் ரூபாய்கள் வரையில் செலவுசெய்து இவ்வழகிய கோவிலை அமைத்தனர். இக்கோவிலில் தேவியின் சந்நிதியைத் தவிர, தேவதேவேசுவரர் என்னும் சிறந்த திருநாமம்படைத்த ஈசுவரன் சந்நிதியும் இருக்கின்றது. இங்கெழுந்தருளியிருக்கும் ஈசுவரன் ஒரு தொடையின்மேல் உமையும், மற்றத்தொடையின்மேல் கஜானன மூர்த்தியும் வீற்றிருக்கப்பெற்ற அவசரத்தில் காட்சிகொடுக்கின்றார். ஈசுவர விக்கிரகம் முழுவெள்ளியினாலும், உமா கணபதி விக்கிரகங்கள் முழுத்தங்கத்தினாலும் செய்யப்பட்டுள்ளன. வெள்ளி விக்கிரகம் 2 மணங்கு நிறையும், தங்க விக்கிரகங்கள் இரண்டும் சேர்ந்து 2 மணங்கு நிறையும் இருக்கின்றனவெனச் சொல்லிக்கொள்ளுகின்றனர். இக்கோவிலுக்குப் பின்புறத்தில் மகாவிஷ்ணுவின் கோவில் ஒன்று இருக்கின்றது.

இக்கோவிலுக்குப் போக ஏற்பட்டிருக்கும் படிகள் அகலமாகவும் சுத்தமாகவும் இருக்கின்றன. 1877ம் வருஷத்தில் இந்தியாவிற்கு விஜயம் செய்திருந்த இளவரசர் (ஏழாம் எட்வார்ட் சக்கரவர்த்தி) யானையின்மேல் ஆரோகணித்து இம்மலைக்குச் சென்றதாகவும், யானையின் அடிசறுக்கி அபாயம் நேர்ந்ததாகவும், இளவரசர் ஏழைகளிடம் இரக்கங்கொண்ட தயாநிதியாயிருந்தமையின் அவருக்கு யாதொரு துன்பமும் நேரவில்லை யென்றும் சொல்லிக்கொள்ளுகின்றனர். எல்லாம வல்ல இறைவன் தம் அடியார்கட்கு ஏவலாளாய் வந்து அனேக இழிதொழில்கள் புரிந்திருப்பினும், மன்னர்கட்கு மன்னனாகவும், சக்கரவர்த்திகட்குச் சக்கர

வர்த்தியாகவும இருக்கின்றார் என்பதை ஆண்டியாயினும் அரசராயினும் மனதில் வைத்தல் அவசியம்.

இப்பர்வதத்தின் அடிவாரத்தில் கட்டப்பட்டிருந்த சபா மண்டபத்தில் பிரதிவருஷம் ஆவணி மாதத்தில் இப்பக்கங்களிலுள்ள எல்லா தேசங்களிலிருந்தும், வைதீகம், வியாகரணம், ஜோதிஷம், வேதாந்தம், தத்துவஞானம் முதலிய சாஸ்திரங்களில் தேர்ச்சிபெற்ற பிரபல வித்வான்கள் வந்து கூடி ஓர் சிக்ந்த வித்வத்சபை நடத்திவந்தனர். அவர்களுக்கு அக்காலத்தில் இருந்த அரசர்கள் இலட்சக்கணக்காக சன்மானம் செய்துவந்தனர் என்றும், கி. பி. 1818-ம் வருஷத்தில் பேஷ்வேக்களின் சுவாதீனம் பராதீனமானவுடன் இச்சபை நிறுத்தப்பட்டதென்றும் தெரிகிறது. இக்காலத்தில் இத்தகைய சபைகள் இல்லாதுபோயின காரணத்தாலேயே வித்வான்களும் வேரற்றுப்போயினர். வித்வான்கள் இல்லாதுபோகவே, கலைவாணியும் தனக்கிவ்வுலகில் தங்க இடமில்லாது தவித்து நான்முகன் நாவிற்குடிபுகுந்தனள் போலும்.

* ஸிந்தேசமாதி :—பூனாவிலிருந்து சுமார் 3 மைல் தூரத்திலிருக்கும் வானவடி என்னும் கிராமத்தில் முற்காலத்தில் நரவீரசூரராய் விளங்கிய மகாதாஜிஸிந்தே என்னும் புண்ணிய புருஷர் அடங்கியிருக்கின்றார். இம்மகாவீரர் முகமதிய மன்னர்களையெல்லாம் கண்ணில் விரல்விட்டாட்டிக் கலக்கிக்கொண்டிருந்தனர். அவர் தம் போர்நலத்தை ஸவாயி மாதவராவ் அவர்களுக்கு தத்தம் செய்யுமாறு பூனாவுக்கு வந்தவர், மகாராஷ்டிரர்களுடைய துரதிர்ஷ்டத்தால் வழியிலிருந்த வானவடியில் வானுலகம்சென்றனர். இவருடைய புத்திரர் தௌலத்ராவ் சிந்தே என்பவர் தம் தகப்பனுருக்கு ஓர் சமாதி கட்டத்தொடங்கின வேலை முடிவுபெறாது நின்றுவிட்டதாகவும், அவருடைய குமாரர் ஜனகோஜிசிந்தே என்பவர்அவ்வேலையைப் பூர்த்திசெய்ய விரும்பிக் கட்டிடத்தின் வேலை முடிவதற்கு முன் அவர் காலமும் முடிந்துவிட்டதென்றும், இறுதியாக, குவாலியர் நாட்டின் அரசரான அலிஜா பகதூர் சிந்தே என்பவர் அக்கட்டிடத்தை மிக அழகாகக் கட்டிமுடித்துத் தம் முன்னோர்களின் மனோபீஷ்டத்தை நிறைவேற்றி வைத்தனர் என்றும்

* குறிப்பு :—இதை இவ்விடத்தில் ஸிந்தியான்சி சத்ரி (Scind'anchi Chatri) என்று சொல்லுகின்றனர். சத்ரி=குடை.

தெரிகிறது. இச்சமாதிக்கருகில் ஓர் ஆஞ்சனேயர் கோவிலும், ஓர் சிவன் கோவிலும் இருக்கின்றது. பூனைப்பட்டினம் வருவோர் இவ்வற்புதமான சமாதிக் கட்டிடத்தைப் பார்ப்பது அவசியம். அதன் அழகிய வேலைத்திறம் நேரிற் பார்த்தால்தான் தெரிந்து கொள்ளலாம்.

ஸ்ரீ ரகுவீரனோடும் ஸ்ரீ பாண்டுரங்கனோடும் நேரிற் பேசும் பெரும்பாக்கியத்தைப் பெற்றிருந்த மகான்களான ஸமர்த்த இராமதாஸ சுவாமிகளும், துக்காராம் சுவாமிகளும் இப்புண்ணிய நகரத்திற்கு அடிக்கடி வந்து, தங்கள் உபதேசங்களையும் கீர்த்தனங்களையும் செய்துவந்த காரணம்பற்றி இதை மகா புண்ணிய பூமியெனக் கொள்ளல்வேண்டும். இங்கிருந்தபடி (1) கிரிஜாத்மகிரி (2) சிவனேரி (2) ஒஜர் (Ozar) (4) ராஞ்சண காவ்ம் (5) * ஆலந்தி (6) * தேஹூ முதலிய ஸ்தலங்களுக்குப்போய் மீளுதல் நலம்.

(1) **கிரிஜாத்மகிரி** :— இதை † லேண்யாத்ரி என்றும் சொல்லுகின்றனர். இக் குன்றானது பூனாவிலிருந்தும், பூனாவிலிருந்து பம்பாய் போகிற இருப்புப்பாதையிலுள்ள தாலேகாவ்ம் என்னும் ஸ்டேஷனிலிருந்தும் சுமார் 50 மைல் தூரத்திலுள்ள ஜூன்னர் (Zunnar) என்னும் கிராமத்திலிருந்து 2 மைலில் இருக்கின்றது. பூனாவிலிருந்து ஜூன்னருக்கு மோட்டார் வண்டிகள் போகின்றன. தாலேகாவ்மிலிருந்து கட்டைவண்டிகள் தான் கிடைக்கும். இக்குன்றின் உச்சியில் குடைந்தெடுக்கப்பட்ட ஓர் சிறு குகையில் ஓர் மரக்கவசம் இருக்கின்றது. அதைத்தான் அங்கு செல்வோர் சாட்சாது கிரிஜாத்மகரெனக் கருதி வணங்குகின்றனர். அம் மரக்கவசம் சுமார் 500 வருஷங்களுக்குமுன் முதற்கொண்டு அதே நிலையில் இருக்கிறதாகவும், இங்கு தரிசிப்பது கணேசருடைய பின்பாகமென்றும், அவருடைய முகம் குன்றின் மற்றப் பாகத்திலிருக்கிறதாகவும், அங்கு போவது அசாத்தியம் என்றும், இக்குன்று முழுவதுமே கணநாதருடைய அங்கமென்றும் சொல்லிக்கொள்ளுகின்றனர். குன்றின்மேல் ஏறிப்போகப் படிகள் செதுக்கப்பட்டிருக்கின்றன.

---

* குறிப்பு :— ஆலந்தி, தேஹூ, இவைகளைப்பற்றிய விவரங்களை இப்புத்தகம் முதற்பாகம் 197-முதல் 202-வரை பக்கங்களிற் காணலாம்.

† லேண்யாத்ரி—குகைமலை.

(2) **சிவனேரி** :—இவ்வூர் ஜுன்னரிலிருந்து சுமார் 2 மைல் தூரத்திலிருக்கின்றது. இங்குள்ள கோட்டை மகர்ராஷ்டிர மன்னர் குலதிலகரும், சிவாம்சமாய்ப் பிறந்து ஜகத்தை உத்தாரணம் செய்தவருமான சிவாஜி மன்னரின் ஜன்ம ஸ்தானமாதலின், இதை இங்குள்ளோர் மகாவிஷ்ணுவின் அவதாரமான ஸ்ரீரகுவீரன் ஜனித்த அயோத்திமா நகரைப்போன்ற புண்ணியதாயக க்ஷேத்திரமாகக் கருதுகின்றனர். சரித்திர ஆராய்ச்சியிற் பற்றுடையோர் போய்வருதல் அவசியம்.

(3) ஓஜர் (Ozar) :—இவ்வூர் ஜுன்னர் கிராமத்திலிருந்து கிழக்கில் 6 மைலில் இருக்கின்றது. இங்குறையும் விக்கினேசுவரர் இப்பாகத்தில் பிரசித்திபெற்ற அஷ்ட விநாயகமூர்த்திகளுள் ஒருவராகக் கருதப்படுகின்றனர். தரிசனம் விசேஷம்.

(5) ராஞ்சணகாவ்ம் :—இவ்வூர் பூனுவிலிருந்து கோடநதி (Ghodanathi)க்குப் போகும் வழியில் இருக்கின்றது. கோடநதிக்கு மோட்டார் போகின்றது. இத்தலத்துறையும் கணபதியும் அஷ்ட விநாயகர்களுள் ஒருவர்.

அவகாசமிருப்போரும், அவசியமென்றெண்ணுவோரும், பூனுவிலிருந்து பம்பாய் போவதற்குமுன், வழியிலுள்ள (1) பீமசங்கரம், (2) பாலி, (3) டோலவ்லி, (4) அம்பர்நாத், (5) தானு, (6) மாத்துங்கா (Matunga) முதலிய புண்ணிய க்ஷேத்திரங்களை தரிசித்தும், (1) கானேரி, (2) கார்லா கல்வெட்டுக்குகைகளைப் பார்த்தும் செல்லலாம்.

(1) பீமசங்கரம் :—இது பிரசித்திபெற்ற 12 ஜோதிலிங்கங்களுள் ஒன்ருதலின் தரிசனம் மிக்க விசேஷம். இதை தரிசிக்கப் போவோர் பூனுவிலிருந்து 57 மைலிலும் பம்பாயிலிருந்து 62 மைலிலும் உள்ள கர்ஜத் (Karjat) ஜங்க்ஷனில் இறங்கி அங்கிருந்து கோபவ்லி (Khopaoli) போகிற கிளை வண்டியிலேறி, காண்டேஷ் (Khandesh) என்னும் நகரம் சென்று, அங்கிருந்து 8 மைல் தூரம் மலையில் ஏறிப்போகவேண்டும். கோபவ்லி கர்ஜத்திலிருந்து 9 மைல். காண்டேஷ் கோபவ்லியிலிருந்து 40 மைல். காண்டேஷ் வருவோர் கர்ஜத்திற்கு அடுத்த ஜங்ஷனை நேரல் (Neral) பட்டினத்தினின்றும் வரலாம். தூரம் 16 மைல்தான். ஆனல் வழி சரியானவழியல்ல. காட்டுப்பாதை. மிருக பயமுண்டு.

முன் சொன்ன ஜுன்னர் (Zunnar) என்னும் ஊரிலிருந்து நேராகக் கோவிலுக்குப் போகப் பாதையிருக்கின்றது. ஆனால் தூரம் 90 மைல். சிவராத்திரி சமயத்தில் தரிசனார்த்தம் கூட்டம் கூட்டமாக ஜனங்கள் போவதால், மோட்டார்களும் குதிரை வண்டிகளும் வாடகைக்குக் கிடைக்கின்றன. காண்டேஷிலிருந்து மலை மீதேறிப் போக டோலிகள் கிடைக்கின்றன.

(2) பாலி :—இவ்வூர் போர் (Bhore) சமஸ்தானத்தைச் சேர்ந்தது. இவ்வூர் போவோர் முன்சொன்ன கோபவ்லிக்குப் போய், அங்கிருந்து தரம்தர் (Dharamtar) நாகோட்டன் (Nagottan) போகிற சாலைவழிப்போகவேண்டும். இத்தலத்தில் அஷ்ட விநாயகமூர்த்திகளுள் ஒருவரான ஸ்ரீவல்லாள விநாயகர் எழுந்தருளியிருக்கின்றார். இவருடைய மூலஸ்தானம் திரயம்பக க்ஷேத்திரத்தில் இருப்பதாகச் சொல்லுவாரும் உளர். விநாயக சதுர்த்தி காலத்தில் கர்ஜத்திலிருந்தும் கோபவ்லியிலிருந்தும் மோட்டார்கள் கிடைக்கின்றன.

(3) டோலவ்லி :—இவ்வூர் கர்ஜத் கோபவ்லி கிளைப்பாதையில் கர்ஜத்திலிருந்து 6 மைலிலுள்ள ஓர் ரெயில்வே ஸ்டேஷன். இங்குறையும் விநாயகர் அஷ்ட விநாயகருள் ஒருவராதலின் தரிசனம் விசேஷம். கோவில் ஊருக்கு வெளியில் சுமார் 2 மைல் தூரத்தில் இருக்கின்றது.

(4) அம்பர்நாத் :—இது ஓர் பிரபலமான சிவ க்ஷேத்திரம். இத்தலம் போவோர் பூனாவிலிருந்து 82 மைல் தூரத்தில் உள்ளதும், கல்யாண் ஜங்க்ஷனுக்கு முந்திய ஸ்டேஷனுமான அம்பர்நாத் என்னும், ஸ்டேஷனில் இறங்கவேண்டும். இது கல்யாண் ஜில்லாவைச் சேர்ந்த ஓர் சிற்றூர். ஊருக்குக் கிழக்கில் சுமார் ஒரு மைல் தூரத்தில் உள்ள பழமையான சிவன்கோவில் பார்ப்பதற்கு அழகாகவும், சிற்பவேலைகள் நிறைந்ததாகவும் இருக்கின்றது. இது ஓர் அழகான பள்ளத்தாக்கில் கட்டப்பட்டிருக்கின்றது. இதிலுள்ள சிற்ப வேலைகள் சுமார் 1000 வருஷங்களுக்கு முந்தின காலத்தில் செய்தவையெனத் தெரிகின்றது. இச்சிறு கோவிலுக்கு மூன்று வாயில்கள் உள. உள்ளிருக்கும் மகாமண்டபத்தின் தூண்களிற் செய்திருக்கும் செதுக்கு வேலைகள் மிக அற்புதமானவை. அவ்வளவு அற்புதச் சிற்பவேலைகள் இப்பக்

கத்தில் எல்லோரா (Ellora), அஜன்டா (Ajanta) முதலிய கல்வெட்டுக் குகைகளிற் காணப்படுகின்றனவே தவிர வேறெங்கும் காணப்படவில்லை. கோவிலின் வெளிப் பக்கங்களிலும், சிறந்த சிற்பவேலைகள் செய்யப்பட்டுள்ளன. தமது தொடையில் தாங்கிய பார்வதி தேவியாரோடு காணப்படும் சிவபிரானின் திருவுருவச்சிலைகளும், காளிதேவியாரின் சிலைகளுமே அதிகமாகக் காணப்படுகின்றன. இக்கோவிலுக்கு அருகிலுள்ள ஓர் மலைக்குகையில் ஓர் பெரியார் நீண்டகாலம் வசித்திருந்து அனேக அற்புதங்களைச் செய்துவந்தனர் என்று சொல்லப்படுகின்றது. இவ்வூர் சிற்றூராதலாலும், பிரயாணிகள் தங்குவதற்கு வசதியான இடங்களில்லாமையாலும், காலை வண்டியில் வந்திறங்கி தெரிசித்துவிட்டு மாலை வண்டியில் ஏறிப் பிரயாணத்தைத் தொடருதல் நலம். ஆனால் இங்கிருந்து நான்கு மைல் தூரத்தில் உள்ள கல்யாண் நகரத்திற்குச் சென்று தங்கியிருந்து போகலாம். இந்த ஸ்டேஷன் குர்துவாடி ஜங்ஷனிலிருந்து 200 மைல் தூரத்திலும், பம்பாயிலிருந்து 34 மைல் தூரத்திலும் இருக்கின்றது.

## கல்யாண்.

இது பார்க்கத்தகுந்த ஓர் சிறிய பட்டினம். இதில் தாலூகா கச்சேரி, சப்கோர்ட்டு, போலீஸ் ஸ்டேஷன், ருக்மணிபாய் வைத்தியசாலை முதலிய கட்டிடங்கள் இருக்கின்றன. இவ்வூருக்கருகில் உப்பங்கழிகள் இருக்கின்றன. சிறிது நேரம் தோணியேறிச் சென்று உலாவி வருவதற்குத் தகுந்தவை. இது ஓர் பழமையான துறைமுகம்.

## தானா.

இது கல்யாணிலிருந்து 13 மைலிலும், பம்பாயிலிருந்து 21 மைலிலும் உள்ள ஓர் ரெயில்வேஸ்டேஷன். இங்கிருந்து 6 மைல் தூரத்தில் பிரசித்திபெற்ற * கன்னேரி குகைகள் (The Kenneri caves) இருக்கின்றன. இவை செதுக்கு வேலைகளிற் சிறந்து விளங்குகின்றன. இங்கிருக்கும் நீர்க்கழி ஸால்ஸெட்டு என்னும் தீவை பூபாகத்தினின்றும் பிரிக்கின்றது. திரியம்பக க்ஷேத்திரத்

* குறிப்பு :—இக்குகைகளைப்பற்றிய விவரங்களை போரிவ்லி (Borivli) என்னும் ஊர் விவரத்திற் காணலாம்.

திலுள்ள பிரமகிரியினின்று உற்பத்தியாகும். வைதரணியென்னும் பரமபாவனமான நதி இத்தலத்தெல்லையிற்றான் கடலிற் கலக்கின்றது. சங்கமஸ்நான விசேஷம். எலும்புகளை நொறுக்கிப் பொடியாக்கும் இயந்திரசாலையும், பம்பாய் பைத்தியக்காரர் ஆஸ்பத்திரியும் (The Lunatic Asylum or Mental Hospital) இங்கிருக்கின்றன. ஊரிலிருந்து 4 மைல் தூரத்திலுள்ள பூக்கூர்ணி ஏரியிலிருந்து இப்பட்டினத்திற்குக் குடிதண்ணீர் கொண்டுவருகின்றனர். ஸ்டேஷனுக்கருகில் ஓர் தர்மசாலையிருக்கின்றது.

## கார்லா.

இவ்வூர் ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து ஒன்றரை மைல் தூரத்தில் இருக்கின்றது. குகைகள் மூன்று மைல் தூரத்தில் இருக்கின்றன. மாட்டு வண்டிகள் கிடைக்கும். இக்குகைகள், நம் நாட்டில் கல்வெட்டு வேலையானது பரிபூரண நிலையை அடைந்திருந்த காலத்துச் செதுக்கப்பட்டனவாகையாலும், இந்தக்குகைகளை வேலைசெய்த பிறகு அவ்வருமையான வேலை போற்றுவாரின்றி க்ஷீணதசைக்கு வந்து மறைந்துவிட்டமையாலும், இவைகளைவிட மேலான வேலைப்பாடுள்ள குகைகள் எங்கும் இருப்பதாகச் சொல்லமுடியாது.

இந்த ஊர் ரெயில்வேஸ்டேஷனுக்குச் சற்று தூரத்தில் ரவிவர்மா படங்கள் செய்யப்படும் அச்சுயந்திரசாலை (The Ravi varma Fine Art Lithographic Press) இருக்கின்றது. சித்திரம் எழுதுவதில் தனக்கு ஒப்பாரும், தன்னில் மிக்காரும் இந்நிலவுலகில் எங்கும் இல்லையெனும் பெரும்புகழ்பெற்ற ரவிவர்மாவெனும் சித்திரமன்னரின் படங்களை இவ்விடத்திற்றான் தயார் செய்கிறார்கள். இவ்வச்சுயந்திரசாலையினின்று ஒருமைல் தெற்கில் "மோஜா" குகைகள் என்று சொல்லப்படும் வெகு பழமையான குகைகள் இருக்கின்றன. அவைகளுக்குப் பக்கத்தில் அதிகெம்பீரமான தோற்றத்தோடு இருக்கும். "லோஹோகாட்" (Lohogad) "விஜாபூர்" (Vizapur) என்னும் பிரசித்திபெற்ற கற்கோட்டைகள் இருக்கின்றன. இவைகளையும் மகாராஷ்டிரதேசத்து மன்னர் குல திலகமாகிய ஆதிசிவாஜி மகாராஜாவே கட்டிவைத்தனர் என்று சொல்லப்படுகின்றது. உயிரற்ற கற்களைக்கொண்டு அம்மன்னர்பிரானல் கட்டப்பட்ட கணக்கிலடங்காக் கற்கோட்டை

கள் இன்னமும் அழியாதிருக்க, பகுத்தறிவிற்குறைவில்லாப்படை வீரர்களைக்கொண்டு நிலைநிறுத்தப்பட்ட அரசாட்சி அவ்வீரர்களிடமே பிற்காலத்தில் ஏற்பட்ட ஒற்றுமைக்குறைவினாலும், அவர்களுள் பலர் தம்மவரேயாயினும், அவர்கள் ஆக்கம்பேணாது, அழுக்காறுகொண்டு அக்கிரமம் செய்தமையாலும், அறையிலேயே பீடித்த கொடும்பிணியினால், அன்று பிறந்த குழவி மாய்வது போல், அழிந்துபோனதை நினைத்தால் யார்தான் வருந்தாதிருக்க முடியும்.

## மாத்துங்கா (Matunga).

இத்தலத்திருக்கும் ஸ்ரீவிட்டோபாவின் கோவில் பார்க்கத் தக்கது. தரிசனம் விசேஷம். ஒவ்வொருவருஷமும் ஆஷாட சுத்த ஏகாதசியன்று ஒரு பெருஞ்சந்தை கூடுகிறதும் தவிர, ஒரு சிறந்த உற்சவம் நடக்கின்றது. ஆயிரக்கணக்கான ஜனங்கள்வந்து கூடுகிறார்கள். ஸ்ரீ பண்டரீநாதன் கோவிலுக்கருகில் பிரயாணிகள் தங்குவதற்கு வசதியான தர்மசாலை ஒன்று இருக்கின்றது. இந்தஸ்டேஷன் பம்பாயிலிருந்து 7 மைல் தூரத்திலும் கல்யாண் ஜங்ஷனிலிருந்து 27 மைல் தூரத்திலும் இருக்கின்றது.

# அத்தியாயம். 2.

செய்யகதி ரா தவன்போ லெழுந்தமுகில்
கருங்கடற்றெண் டிரைநீர் தேக்க
மையகங்கு லிருளென்ன வானமெலாம்
பரந்துருமு வழங்கி யார்த்துத்
துய்யமுடிச் சையமிசை மதிநிலா
வெள்ளமெனச் சொரிநீர் மாரி
வையமுழு துய்யவரைக் கையெனவெள்
ளருவிநீர் வழங்கு மம்மா.

வே று.

பொன்னுல குவரி யாடைப் புவியினு முளதோ வென்னத்
துன்னுமா ளிகையு நீடு சூளிகைப் பரப்புந் தாவில்
மின்னுதோ ரணமுஞ் சூழும் வீதியும் வேலை யார்ப்பு
மன்னுநம் * மும்பை மூதூர் வளம்பல விளம்ப லாமோ.

பம்பாய்.

அழகிய தேவலோகம் (The Fair Heaven) என மேல் நாட்டாராலும் புகழப்படும் இப்பட்டினம் பம்பாய் இராஜதானியின் தலைநகர் என்பதும், இது இந்தியாவிலுள்ள அநேக பெரும் பட்டினங்களுள் வியாபாரத்திலும் ஜனத்திரளிலும் முதன்மையானது என்பதும் யாவரும் நன்கறிந்தவிஷயம். இது மேல் சமுத்திரக் கரையிலுள்ள ஒரு பிரதானத் துறைமுகம். இந்தியாவிற்கும் அன்னிய நாடுகளுக்கும் உள்ள கப்பல் போக்குவரவுகளுக்கு இதுதான் பெரிய துறைமுகம். இந்தியாவின் அரசாட்சித் தலைவரான இராஜப்பிரதிநிதி (The Viceroy of India) புதிதாக இந்தியாவுக்கு வரும்போதும், தம் ஆட்டிசிக்காலம் முடிந்து தம் சுயநாட்டிற்கு மீளும்போதும், இத்துறைமுகத்தையே உபயோகப்படுத்துவது வழக்கமாக ஏற்பட்டிருப்பதால், இதற்கு, "இராஜப் பிரதிநிதித் தலைவாயில் (The Viceroy 's Gate)" என்னும் காரணச் சிறப்புப் பெயர் கிடைத்திருக்கிறது.

* குறிப்பு:—மும்பை = பம்பாய்.

புகைக்கப்பல்களும் மற்றும் பெரிய வியாபாரக்கப்பல்களும் இத்துறைமுகத்தில் கரையோரத்தில் வந்து நிற்கக்கூடிய வசதிகள் இயற்கையிலேயே ஏற்பட்டிருப்பதால் (Natural Harbour), ஜனங்கள் ஏறி இறங்குவதற்கும், மற்றும் வியாபாரச் சரக்குகளை ஏற்றுமதி இறக்குமதி செய்வதற்கும், இங்கு ஏற்பட்டுள்ள சௌகரியங்கள் இவ்வுலகத்திலேயே வேறெங்கும் இருக்கும் என்று சொல்லமுடியாது. இத்துறைமுகத்தில் ஏற்றுமதியாகும் பொருள்களில் பருத்தியே முதன்மையானது. இந்நாட்டிலிருந்து அயல் நாடுகளுக்கு ஏற்றுமதியாகும் ஏராளமான பருத்தி ஏற்றுமதியைக் குறைப்பதற்காகவே, காந்தியடிகளும் அவரைப் பின்பற்றும் தேசஊழியத்தொண்டர்களிற் பலரும் பஞ்சு படாத பாடு பட்டுவருகின்றனர். அவர்கள் பாடு நற்பாடாக ஈசன் அருள் புரிவாராக.

கி. பி. 1661 ம் ஆண்டில் இப்பட்டினம் போர்த்துகல் தேசத்தாரால் இரண்டாவது (Charles II) மன்னருக்கு அவர் மனைவியாரான காதரைன் (Catherine of Braganza) அம்மையாருக்காகக் கொடுக்கப்பட்ட ஸ்ரீதனத்தில் சேர்ந்து கிடைத்தது என்றும், அம்மன்னர் இதை ஒரு பொருட்டாக எண்ணாமல் 1668 ம் ஆண்டில் கீழ் இந்தியச் சங்கத்தாருக்கு (The East India Company) வருஷம் ஒன்றுக்கு 10 பவுன் பகுதிக்கு விட்டனர் என்றும், 1773 ம் ஆண்டில் இந்தியப் பிரதிநிதியின் ஆளுகைக்குட் படுத்தப்பட்டதென்றும், அக்காலம் முதல் ஆங்கில அரசாட்சிக்குட்பட்டுப் பெரும்பட்டினமாக வளர்ந்து வந்தது என்றும் தெரிகின்றது. ஆயினும் 1774 முதல் 1782 ம் ஆண்டுவரை நடந்து வந்த மகாராஷ்டிர யுத்தங்களுக்குப் பிறகுதான் இப்பட்டினத்தின்பேரில் கவலையற்ற உரிமை பாராட்ட முடிந்தது என்று தெரிகிறது. அக்காலத்திலிருந்த மகாராஷ்டிர வீரர்களுக்குள்ளும், சிற்றரசர்களுக்குள்ளும் ஏற்பட்ட அனேக கலவரங்களும், சச்சரவுகளும் இல்லாதிருந்திருக்குமாயின், இப்பட்டினத்தின் சரித்திரம் வேறு விதமாயிருந்திருக்கும் என்று நினைப்பாரும் உளர்.

முற்காலத்தில் சக்கரவர்த்தித் திருமகனார் தம் மனைவியாரைத் [illegible]ராம் இல்லாத காலத்தில் அபகரித்துச்சென்ற இராவணனை வதைத்து அவரை மீட்டுக்கொண்டு வருவதற்காகக் கடலைக்கடந்து இலங்கை செல்லவேண்டியிருந்தபோது, இராமரும் அவருடைய

எழுபது வெள்ளம் வானரசேனைகளும் போகக்கூடிய வாராவதி ஒன்று எவ்வாறு வானரவீரர்களால் உள்நாட்டிலிருந்து பிடுங்கிக் கொண்டுவந்து கடலில் எறியப்பட்ட * மலைகளின்பேரில் கட்டப் பட்டதோ, அவ்வாறே இப்பட்டினமும் கடலோரத்திலுள்ள பல சிறு தீவுகளின்மேல் கட்டப்பட்டுள்ளது. இக்காரணம்பற்றியே மேற்சொல்லியபடி கப்பல்கள் பட்டினத்தருகில் வந்து தங்கக்கூடிய வசதிகள் இப்பட்டினத்திற்கு ஏற்பட்டிருக்கின்றன. இத்தீவுகள் எல்லாம் சேர்ந்துத் தற்காலத்தில் தென்வடலான ஒரு சிறு தீப கற்பமாக மாறியிருக்கின்றன. அதன் தெற்குக்கோடி கொலாபா (Colaba) என்னும் இடத்தில் முடிகின்றது. மேற்சொல்லியவாறு இப்பெரும்பட்டினமானது கடலோரத்திலுள்ள அனேக தீவு களின்பேரில் அமைந்திருப்பதால், நாலாபக்கங்களிலிருந்தும்கடற் காற்று வீசி வெப்பத்தைத் தணிக்கின்றது இவ்வூரில் சீதோஷ்ண ஸ்திதி எக்காலத்தும் அநேகமாய்ச் சமமாக இருப்பதால் ஜனங் கள் வசிப்பதற்கு வசதியான பெரும் பட்டினங்களுள் இதை முதன்மையானதாகவே சொல்லலாம்.

இப்பட்டினத்திலுள்ள மாளிகைகள் எல்லாம் ஏழு அல்லது எட்டு உப்பரிகைகளுக்குக் குறையாமல் உயர்ந்து இருப்பதாலும், இங்குள்ள தெருக்களிற் சிற்சில தவிர மற்றவை அதிக விசாலமாக இல்லாமலிருப்பதாலும், பகல் 12 மணிநேரமொழிய மற்றக்காலங் களில் கதிரவனொளி பூமியிற்படுவதில்லை. தெருக்களில் நடமாடு வோர் வெய்யிலின் கொடுமையால் துன்புறுவதில்லை. இந்நகரி லுள்ள உயர்ந்த மாளிகைகளைப் பார்த்து அமெரிக்கா முதலிய பிற நாடுகளில் ந்யூயார்க் (New York) முதலிய பெரும் பட்டினங் களிலுள்ள நூற்றுக்கணக்கான உப்பரிகைகளோடு கூடிய கட்டி டங்கள் எவ்வாறிருக்கும் என்று ஒருவாறு நிதானித்துக்கொள்ள லாம். தவிர இப்பட்டினத்திலுள்ள மாளிகைகளுக்கு நம் தென் னாட்டு இல்லங்களுக்கு இருப்பதுபோல் திண்ணை, தாழ்வாரம், ஆளோடி முதலியவை கிடையா. நான்கு அடி சதுரத்திற்கு

* குறிப்பு:—இது காரணம்பற்றியே இராமசேதுவுக்கு அருகிலுள்ள தஞ்சாவூர், இராமநாதபுரம் ஜில்லாக்களில் உயர்ந்த குன்றுகளே இல் லாமற்போயின என்றும், அங்கிருந்த குன்றுகளை எல்லாம் வானரவீரர் கள் பிடுங்கிக்கொண்டுபோய் சேதுபந்தனம் செய்வதற்காகக் கடலிற் போட்டுவிட்டார்கள் என்றும் கருதப்படுகின்றது.

மர்தம் ஒன்றிற்கு நாற்பது ரூபாய்க்கு குறையாமல் வாடகை கிடைக்குமாதலாலும், நம் இந்தியாவில் முன்னிருந்து வழங்கி வந்த ஒரு ரூபாய் நோட்டளவு விஸ்தீரணமுள்ள கீழ்நிலம் ஒரு ரூபாய் விலை பெறுமாதலாலும், ஒரு அங்குலச் சதுரமும் ஒருவரும் வீணாகப் போட்டுவைக்க மனங்கொள்ளார். ஒவ்வோர் க்கட்டிடத்திலும் கீழ்பாகம் முழுவதும் கடைகளாகவே இருக்கும். ஆதலின் எந்தத் தெருவில் வசிப்பினும் ஆங்காங்கே அருகில் வேண்டிய பொருள்களை வாங்கிக்கொள்ளுதல் கூடும். ஜனங்கள் குடியிருப்பதெல்லாம் மேலிருக்கும் உப்பரிகைகளில் தான். மேலே போகப் போக ஏறிப்போவது கஷ்டமானதால் வாடகைக் குறைவு. இந்தியாவில் உள்ள எல்லாப் பெரும் பட்டினங்களை விட இப்பட்டினத்தில் பலவித வியாபாரமும் கைத்தொழில்களும் நிறைந்திருப்பதால், நடுப்பகல் நேரம் தவிர மற்றக் காலங்களில் எந்தத் தெருவிற் போனாலும் திருவிழாக் கூட்டமாக இருக்கும். நம் தென்னாட்டில் மாட்டு வண்டிகளும் ஜட்கா வண்டிகளும் இருப்பதுபோல், இப்பட்டினத்தில் விக்டோரியா என்னும் பேர்கொண்ட நான்கு சக்கரங்கள் உள்ள பீட்டன் (Phaeton) வண்டிகளும் மோட்டார் வண்டிகளும் ஏராளமாக இருக்கின்றன. எக்காலத்தும் குறைந்த வாடகைக்குக் கிடைக்கும். இவைகளைத் தவிர டிராம் வண்டிகளும் (Tram Cars) எல்லாத் தெருக்களிலும் வாடகைக்கு ஓடுகின்றன. அவைகளில் ஏறிப்போகக் கூலியும் சென்னையைவிட மிகக்குறைவு, இப்பட்டினத்தில் வெகு நீண்ட காலம்வரை குதிரைகளினால் ஈர்க்கப்பட்ட டிராம் வண்டிகள் இருந்துவந்தன என்று தெரிகின்றது. இவைகளைத் தவிர பம்பாய்-பரோடா-மத்திய இந்திய (The Bombay Baroda and Central India Railway) இருப்புப்பாதையில் கோலாபா (Colaba) ஸ்டேஷனிலிருந்து விரார் ஜங்ஷன்வரையில் 10 நிமிஷங்களுக்கொரு முறையும், பெரிய இந்திய தீப கற்ப இருப்புப் பாதையில் விக்டோரியா டர்மினஸ் (The Victoria Terminus) ஸ்டேஷனிலிருந்து கல்யாண் ஜங்ஷன் வரையில் அரைமணிக் கொருமுறையும், ரயில் வண்டிகள் போய்வந்து கொண்டிருக்கின்றன. பத்து நிமிஷச் சாவகாசத்திலும், அரைமணிச் சாவகாசத்திலும் வண்டிகள் போயினும், அவைகளில் நிறையக் கூட்டமில்லாதிருப்பதில்லை. இதைக் கொண்டு இப்பட்டினம் வியாபார மிகுதியிலும் ஜனத்திரளிலும்

எத்துணைச் சிறந்ததாயிருக்க வேண்டும் என்று ஒருவாறு யூகித்து அறிந்துகொள்ளல் வேண்டுமே தவிர இப்பட்டினத்தின் பெருமையும் விசேஷமும் இச்சிறு புத்தகத்தில் எழுதி முடியக்கூடியதல்ல. ஆயினும் கவியரசராகிய கம்பரால் வெகு அழகாகவும் அருமையாகவும் எழுதப்பட்டுள்ள அடியிற்கண்ட நகர வருணனையானது இந்நகருக்கே முழுதும் பொருந்தும் என்று கூறுவது சற்றேனும் உயர்வு நவிற்சியாகாது.

நிலமகண் முகமோ திலகமோ கண்ணோ
    நிறைநெடு மங்கல நாணோ,
இலகுபூண் முலைமே லாரமோ வுயிரி
    னிருக்கையோ திருமகட் கினிய
மலர்கொலோ மாயோன் மார்பினன் மணிகள்
    வைத்தபொற் பெட்டியோ வானோர்
உலகின்மே லுலகமோ வூழியி னிறுதி
    யுறையுளோ யாதென வுரைப்பாம்.

உமைக்கொரு பாகத் தொருவனு மிருவர்க்
    கொருதனிக் கொழுநனு மலர்மேல்
கமைப்பெருஞ் செல்வக் கடவுளு முதலோர்
    கண்டிலா நகரது காண்பான்,
அமைப்பருங் காதன் முன்பிடித் துந்த
    வந்தரஞ் சந்திரா தித்தர்
இமைப்பிலர் திரிவரிது வலாலதனுக்
    கியம்பலா முவமைமற் றியாதோ.

அயின்முகக் குலிசத் தமரர்கோ னகரு
    மளகையு மென் றிவை யயனார்
பயிலுற வுற்ற படிபெரும் பாலுமிப்
    பெருந்திரு நகர் படைப்பான்
மயன்முதற் றெய்வத் தச்சருந் தத்த
    மனத்தொழி லுணினர் மறந்தார்,
புயலுறு குடுமி நெடுநிலை மாடத்
    திந்நகர் புகலுமா றெவனோ.

அரைசெலா மவண வணியெலா மவண
வரும்பெறன் மணியெலா மவண,
புரைசைமால் களிறும் புரவியுந் தேரும்
பூதலத் தியாவையு மவண,
விரைசுவார் முனிவர் விண்ணவ ரியக்கர்
விஞ்சையர் முதலினோ ரெவரும்,
உரைசெய்வா ராறு ரானபோ தத்னுக்
குவமைதா னரிதரோ வுளதோ.

அன்னமா மதிலுக் காழிமால் வரையை
யலைகடல் சூழ்ந்தன வகழி,
பொன்விலை மகளிர் மனமெனக் கீழ்போய்ப்
புன்கவி யெனத்தெளி வின்றிக்,
கன்னிய ரல்குற் றடமென யார்க்கும்
படிவருங் காப்பின தாகி,
நன்னெறி விலக்கும் பொறியென வெறியுங்
கராத்தது நவிலலுற் றதுநாம்.

வேறு.

தாவில்பொற் றலத்தினற் றவத்தினோர் கடங்குதாட்
பூவுயிர்த்த கற்பகப் பொதும்பர்புக் கொதுங்குமால்
ஆவியொத்த வன்புசேவல் கூவவந் தணைந்திடா
ஓவியப்பு ருவின்மா டிருக்கவூடு பேடையே.

ஏழ்பொழிற்கு மேழ்நிலத்த லஞ்சமைத்த தென்னநூல்
ஊழுறக்கு வித்தமைத்த வும்பர்செம்பொன் வேய்ந்துமீச்
சூழ்சுடர்ச் சிரத்துநண் மணித்தசும்பு தோன்றலால்
வாழ்நிலக் குலக்கொழுந்தை மௌலிசூட்டி யன்னவே.

வேறு.

புள்ளியம் புறவிறை பொருந்து மாளிகை
தள்ளருந் தமனியத் தகடு வேய்ந்தன
எள்ளருங் கதிரவ னிளவெ யிற்குழாம்
வெள்ளியங் கிரிமிசை விரிந்த போலுமே.

* புக்கவர் கண்ணிணை பொருந் துருதொளி
தொக்குடன் றயங்கிவிண் ணவரிற் றோன்றலால்
திக்குற நினைப்பினிற் செல்லுந் தெய்வவீ
டொக்கநின் றிமைப்பன வும்பர் நாட்டினும்.

குழலிசை மடந்தையர் குதலைக் கோதையர்
மழலையங் குழலிசை மகர யாழிசை
எழிலிசை மடந்தைய ரின்சொ லின்னிசை
பழையர்தஞ் சேரியிற் பொருநர் பாட்டிசை.

அரங்கிடை மடந்தைய ராகுவா ரவர்
கருங்கடைக் கண்ணயில் காமர் நெஞ்சினை
உருங்குவ மற்றவ ருயிர்க ளன்னவர்
மருங்குல்போற் றேய்வன வளர்வ தாசையே.

**(கம்பராமாயணம் - நகரப்படலம்).**

இப்பெரும் பட்டினத்தில் இவ்விந்தியாவிலுள்ள எல்லாஜாதியாரும் எல்லா மதத்தினரும் ஏகோபித்த மனத்தினராய் வசித்து வருகின்றனர். பார்ஸி ஜாதியார் மற்றப்பட்டினங்களில் இருப்பதைவிட இப்பட்டினத்தில் அதிகமாக இருக்கின்றனர்.

அவர்கள் அக்கினியைத் தொழுபவர்களாதலின் பிரேதங்களை அக்கினிக்கு இரையாக்குவதில்லை. பூமிக்குள்ளும் புதைப்பதில்லை. பம்பாயின் மேற்பாகத்தில் உள்ள சௌப்பாத்தி (chowpathi) என்னும் இடத்திலிருக்கின்ற "மௌனஸ்தம்பம்" (The Tower of Silence) என்னும் உயர்ந்த கட்டிடத்திலுள்ள ஓர் பெருங்கிணறுபோன்ற பள்ளத்தில் போட்டுச் சென்று விடுகின்றனர். அங்குப் போடப்படுகிற சவங்கள் நூற்றுக்கணக்கான காக்கை, கழுகு, பருந்துமுதலிய பட்சிகளுக்கு இரையாகின்றன. இவர்கள் அனுஷ்டிக்கும் முறையானது, நம்மவர்கள் உரைப்பதுபோல், "நேற்றிருந்தார் இன்று வெந்து நீறுனர்." என்று கூறவாவது,

* குறிப்பு :—புக்கவர் கண்ணிணை பொருந்துருதுற்ற ஓரொளி கம்பர் காலத்திருந்திருப்பினும் இருந்திராவிடினும், இக்காலத்தில் மின்னெனவும் வெய்யிற்பிழம்பெனவும் ஐயுறக்கூடிய மின்சார விளக்குகள் (Electric Lights) தோன்றியபின் அவசியம் இருக்கின்றதென்பதை யாவரும் நன்கறிவார்கள்.

“ மண்ணாசை கொண்டனைநீ மண்ணாளு மன்னரெலாம்
மண்ணா லழிதன் மதித்திலையே—எண்ணாது
மண்கொண்டார் மாண்டார்தம் மாய்ந்தவுடல் வைக்கவயன்
மண்கொண்டார் தம்மிருப்பில் வைத்திலரே. ”

என்றவாறு, மண்ணிற்பிறந்தார் மீண்டும் மண்ணிற்கே இரையாயினார் என்று சொல்லி ஒருவாறு மனத்தைத் திடப்படுத்திக்கொள்ளலாவது இடந்தருவதில்லை. ஆனால் இவர்களிடமிருந்து வரும் வழக்கம் தென்னாட்டினருக்கு நூதனமாகவும் விந்தையாகவும் தோன்றினும், நம்மவர்களில் அனேகர் தாம் உயிர்வாழ்ந்திருக்கும்போது எவ்வாறு ஒருவருக்கும் ஒரு பயனையும் செய்யாது, உதிபோல் உண்டு, உறங்கி, உயிர் நீக்கின்றனரோ, அவ்வாறே நம் பிரேதங்களும் தீயினாற் சுட்டெரிக்கப்பட்டோ, ஆழ்ந்த குழியிற் புதைக்கப்பட்டோ ஒரு பிராணிக்கும் ஒரு விதத்தானும் பயன்படாதொழிகின்றன. அதுபோலல்லாது அவர்கள் பிரேதங்களை உயிர்ப்பிராணிகளுக்கு உணவாக்குதலின், ஒருவாறு சீரியதென்றே கொள்ளல்வேண்டியிருக்கின்றது. மேலும் அவர்கள் அக்குழிக்குப் பிரேதங்களைச் சுமந்து செல்லும்போது ஒருவரோடொருவர் வார்த்தையாடாமல் மௌனமாகச் செல்கின்றனர். அப்பிரேதக் குழிக்கு “மௌனஸ்தம்பம்” என்னும் பேர் வந்தது பிரேதங்களைத் தூக்கிச் செல்வோர் வாய்பேசாமற் போவதினாலோ, அல்லது அதிற்போய்ச் சேர்வோர் எக்காலத்தும் பேசா மௌனநிலையை யடைந்தவராதல்பற்றியோ தெரியவில்லை. மேற்சொல்லிய பார்ஸி ஜாதியார் நடை உடை பாவனையிலும், ஒழுக்கத்திலும், தோற்றத்திலும், வியாபாரத்திறமையிலும் அநேகமாய் மேல்நாட்டாரை ஒத்திருக்கின்றனர்.

இவ்வகுப்பாரின் பெண்கள் அழகில் மிகச் சிறந்தவர்கள். இவர்களுள் கருநிறமுடையோர் காணக்கிடையார். புராணத் திருமலை நாதர் என்னும் புலவர் பெருமான் தாம் பாடிய மதுரைச் சொக்கநாதருலாவில்

“ பொய்வாழ் வடைந்தோர் புலன்கள்போ லொன்றேடொன்
றெவ்வா தலைகின்ற வோதியார்—பவ்வத்
துலைக மயக்க மொழிந்தோர் மனம்போற்
கலகஞ் சிறிதறியாக் கண்ணார். ”

—"தண்மை
விளக்குந் தவமடைந்தோர் வெவ்வினைபோ லாளும்
இளைக்கவடிக் கொண்ட விடையார்—விளைத்த
அளவிலரும் பாலாழி யாலால் மென்னக்
களவு பிறந்துடைய கண்ணார்—அளிகள்
கடியாத தார்முடிக்கக் காமன் றனக்கு
முடியாத வெல்லா முடிக்கப்—படிமுழுதும்
கூடிமுடிக்குங் கொடியவிருள் போலமுடிக்
கூடிமுடிக்குங் குழலினார்—நீடிவளர்
முல்லையரும் புக்கும் முருந்துக்கும் பேரொளிகள்
இல்லையென வீறு மிளங்கையார்—"

"காம ரதக்கரும்பு காமச் சுவையமிர்தம்
காமன் றனக்குள்ள கட்டாண்மை—காமன்றன்
சேமத் தனஞ்செல்வஞ் செங்கோ லவன்கொற்றத்
தாமத் தரளத் தனிமவுலி—தேமுற்றுத்
தாது நெகிழுஞ் சதகோடி செங்குமுதம்
வாதி லழியச்சிவந்த வாயினார்—பூதலத்தோர்
முன்னாசல் கொண்டுமன மோகமுறவேண்டும்
பொன்னாச லன்னமணிப் பொற்குழையார்".

"அலகின் மறையோ ரறிவி னுயர்வோர்—மன்னும்
உலைய வுலக முலைய—நலமகலச்
செங்கோ லொழித்தெவர்க்குந் தீங்கு புரிவேந்தர்
வெங்கோ லினுங்கொடிய வேற்கண்ணார்—பொங்கி
மலையைக் கடிந்தெடுத்து வச்சிரத்தா லோங்கி
உலைவின் மகத்துக் குரித்தாய்ப்—பலகண்
படைத்துக் கருகிப் பனைக்களிற்றின் மேலாய்
மடற்கொத்து மாலை வனைந்து— திடத்தால்
புரந்தரனைப் போலப் பொலிந்து முனிவோர்
முரண்கெடுக்க விம்மு முலையார்—நிரந்தரமும்
வஞ்சம் புரிவேந்தர் மண்டலத்துள் வாழ்வோர்தம்
நெஞ்சம்போ னின்றலையு நேரிடையார்—அஞ்சிவரும்
கோகனகந் தண்டரளக் கோவைதனைப். பூத்ததென
மோகந் தருவதன மூரலார்."

என்று பலவிதமான நீதிகளையும், உவமைகளையும் ஒருங்கே திரட்டிக் கசக்கிப்பிழிந்த இரசமான வருணனையானது, இப்பார்ஸி மாதர்கட்கே முழுதும் பொருந்தும் என்பதிற் சற்றேனும் ஐயமில்லை.

இப்பெரும் பட்டினத்தின் கீழ்பாகத்தில் கடல் பூமியைக் குடைந்துகொண்டு உள்ளே சென்றிருப்பதாலும், கப்பல்கள் உள்ளே வரும்வழியைத் தவிர மற்றெல்லாப் பாகத்திலும் அச் சிறுகுடாவானது பூமியாற் சூழப்பட்டிருப்பதாலும், எத்தனை கப்பல்கள் வரினும் புயற்காற்றினாலோ கடற்கொந்தளிப்பினாலோ கப்பல்களுக்கு நேருகிற அபாயம் ஒன்றுமின்றி, எவ்வளவு காலமாயினும் இத்துறைமுகத்தில் தங்கி நிற்கலாம். இத்தகைய அதிவினோதமான இயற்கையமைப்பின் பொருட்டே இதையொத்த துறைமுகம் இவ்வுலகத்திலேயே வேறில்லை யென்று சொல்ல இடந்தருகின்றது. நம் அருமையான பாரதநாட்டிற்கு அமைந்திருக்கும் அனேக இயற்கை வசதிகளில் இதை முதன்மை யானதாகவே சொல்லல்வேண்டும்.

இப் பட்டினவாசிகளுக்கு வேண்டிய பால்விற்பனைக்காக அனேகர் அனேகவிடங்களில் நூற்றுக் கணக்கான பசுக்களையும் எருமைகளைவும் வைத்துப் பாதுகாக்கின்றனர். பசுநிரைகளைவிட எருமைக்கூட்டங்களே அதிகம். இங்கிருக்கும் பசுக்களும் எருமைகளும் மிகப்பெரியவையாய் இருக்கின்றன. பசுக்கள்பட்டினம் படியால் 4 - 5 படிக்குக் குறையாமலும், எருமைகள் 4 - 5 மரக்கால்களுக்குக் குறையாமலும் கறக்கின்றன. அவைகளுக்கு கோதுமை வைக்கோல், கோதுமைத்தவிடு, உளுந்து, கடலை முதலிய நவதானியங்களைத் தீனியாக வைக்கின்றார்கள். மாடுகள் எல்லாம் வெளியிற்போய் மேய்வதற்கு இடமில்லாது கட்டுத் தறியிலேயே கட்டிக் கிடந்தாலும் இளைத்துப்போகாது நல்லஸ்திதியில் இருக்கின்றன.

நம் பக்கங்களிற்போடுகிற நாடகக்கொட்டகைகள் போன்ற பெருங்கொட்டகைகள் போட்டு, அவைகளின் நடுவில் இரண்டு வரிசைகளாக மாடுகளைக் கட்டிவைக்கின்றனர். அனேகமாய் 20 மாடுகளுக்காக ஓர் ஆள் நியமிக்கப்பட்டிருக்கின்றான். ஆங்காங்கே தண்ணீர்க்குழாய்களும் பெரிய தண்ணீர்த் தொட்டிகளும்

இருக்கின்றன. ஒவ்வொருவனும் தன்னிடம் ஒப்புவிக்கப்பட்டிருக்கின்ற மாடுகளையெல்லாம் ஒவ்வொரு நாள் காலையிலும் தண்ணீர்த் தொட்டிகளிடம் கொண்டுபோய்ச் சுத்தமாகக் கழுவிவிடுகிறான். அவர்கள் காலத்திற்செய்யும் வேலைகளை நோக்கினல் அரசாங்க ஆணைக்குட்பட்ட கச்சேரிகளிலும் அவ்வளவு சுறுசுறுப்பாய் வேலை நடக்கிறதென்று சொல்லமுடியாது. பாலைக்கறந்து மோட்டார் வண்டிகளில் வைத்துக்கொண்டு கொடுக்கவேண்டிய இடங்களுக்குக் குறித்த நேரத்திற் கொண்டுபோய்க் கொடுத்துவிடுகிறார்கள்.

இவ்விடத்திலிருக்கும் எருமைகள் * ஹரப்ளி பட்டினத்திலிருக்கும் எருமைகளைப்போலவே கறுத்தும் பெருத்துமிருப்பினும் ஹரப்ளி எருமைகளைப்போன்று பார்க்க பயங்கரமானவையன்று. ஹரப்ளி எருமைகளுக்குக் கொம்புகள் அளவுக்குமிஞ்சி நீண்டிருப்பதால் பார்ப்பதற்கு விகாரமாக இருக்கின்றன. ஆனல் இங்குள்ள எருமைகளின் கொம்புகளோ, நம்நாட்டிலுள்ள செம்மறிக்கிடாக்களின் கொம்புகளைப்போல், சுருண்டு வளைந்துகொண்டிருப்பதால் பார்க்க அழகாகவே இருக்கின்றன.

இப்பெரும் பட்டினத்தில் காணவேண்டிய காட்சிகளும் பார்க்கவேண்டிய கட்டிடங்களும், கைத்தொழிற்சாலைகளும் கணக்கிலவாயினும், அவைகளுள் அடியிற்கண்டவை மிகச்சிறந்தவை :

(1) பொருட்காட்சிச் சாலை (The Museum).

(2) கலங்கரை விளக்கு (The Light House). இதைப் பார்க்கப் போர்ட் (Port) ஆபீசரின் உத்திரவு தேவை.

(3) கொலாபா ஞாபகச்சின்ன மாதாக்கோவில் (The Colaba Memorial Church). இது முதல் ஆப்கானியர் யுத்தத்தில் இறந்தவர்களின் ஞாபகார்த்தமாகக் கட்டப்பட்டதாகத் தெரிகிறது.

(4) எல்பின்ஸ்டன் சர்க்கிளில் நகரமண்டபத்தில் இருக்கிற அரசாங்க ஆசியாச் சங்கத்தின் பம்பாய்க் கிளையினரால் ஏற்படுத்தப்பட்டுள்ள புத்தகசாலையும் காட்சிச்சாலையும் (The Library and Museum of the Bombay Branch of the Royal Asiatic

* குறிப்பு:—ஹரப்ளி எருமைகளைப்பற்றிய விவரம் இபபுத்தகத்தின் முதற்பாகம் 139வது பக்கத்தில் காணலாம்.

Society in the Town Hall). உள்ளே போக ஒரு அங்கத்தினரின் உதவி வேண்டும்.

(5) மாட்சிமை பொருந்திய மன்னரின் நாணயச்சாலை (His Majesty's Mint). நாணயச்சாலை அதிகாரியின் (Mint Master) உத்திரவு பெறல்வேண்டும்.

(6) மாதாக்கோவில்வாசல் தெருவில் (The Church Gate Street) உள்ள ஸெயின்ட் தாமஸ் மாதாக்கோவில் (The St. Thomas Cathedral).

(7) ஷெ தெருவிலுள்ள பெரிய தபாலாபீசு (The General Post Office). இதிலும், மற்றும் இங்குள்ள பெருங்கட்டிடங்களிற் பலவிலும், மேன்மாடங்களுக்குப் போய்வருவதற்கு யந்திரவிசையினுற் கொண்டுசெலுத்தப்பட்ட தொட்டில்கள் (The Lifts) இருக்கின்றன.

(8) கோட்டைக்குள்ளிருக்கும் எல்பின்ஸ்டன் பூங்காவனம் (The Elphinstone Gardens).

(9) எஸ்பிளனேடிலுள்ள ஆர்தர் கிராபோர்ட் மார்க்கெட் (The Arthur Crawford Market).

இந்தியாவின் தெற்குக்கோடியில் உள்ள புண்ணியக்ஷேத்திரமாகிய கன்னியாகுமரியில், எல்லாம் வல்ல இறைவனை கைலாசபதியை மணக்கவேண்டித் தவஞ் செய்துறையும் கன்னிகாபரமேஸ்வரியாகிய ஜெகதம்பிகையின் வேண்டுகோளின்படி, சிவபிரான் இன்னமும் தேடித்திரிந்துகொண்டிருப்பதாகச் சொல்லப்படும் * காம்பில்லாத மாங்காய், கண் இல்லாத தேங்காய், கணுவில்லாத கரும்பு, இம்மூன்று விந்தையான பொருள்களைத் தவிர இவ்விந்தியாவின் எப்பாகத்திலும் கிடைக்கும் எல்லாப் பொருள்களும் இப் பெரிய மார்க்கெட்டில் எக்காலத்தும் குறைவின்றிக் கிடைக்கும்.

(10) சர்க்கார் துறைமுகமும் தொழிற் சாலையும் (The Government Dockyard and the Factory). திங்கள் வியாழக்கிழமைகளில் அங்கிருக்கும் அதிகாரியின் உத்திரவின்பேரில் பார்க்கலாம்.

(11) எஸ்பிளனேடிலுள்ள தந்தி ஆபீசு.

* குறிப்பு :—இவ்வரிய வஸ்துக்களைப்பற்றிய முழு விவரமும் இப் புத்தகம் முதற்பாகம் 50 வது பக்கத்திற் காணலாம்.

(12) மேயோ சாலையிலுள்ள கவர்ன்மென்ட் கச்சேரி (The Secretariate Office).

(13) ஷெ சாலையிலுள்ள உயர்தர நீதிமன்றத்தின் கட்டிடம் (The High Court Buildings).

(14) எஸ்பிளனேடில் இருக்கும் அரசர் பிரானுடையவும் விக்டோரியா மகாராணியாருடையவும் உருவச்சிலைகள்.

(15) எஸ்பிளனேடில் உள்ள ராஜாபாய் சர்வகலாசாலை ஸ்தம்பமும் புத்தகசாலையும் (The Raja Bai University Tower and Library).

(16) ஸஸூன் தொழிற் கல்விச்சாலை (The Sassoon Mechanics Institute).

(17) ஸர் கோவாஸ்ஜி சர்வகலாசாலைக்கூடம் (Sir Cowasjee University Hall).

(18) பெரிய இந்திய தீபகற்ப இருப்புப்பாதை முடிவடைகிற விக்டோரியா ஸ்டேஷன் (The Victoria Terminus Station).

(19) பம்பாய்-பரோடா-மத்திய இந்திய இருப்புப்பாதையின் தலைமைக் கச்சேரிகள். இவை மாதாக்கோவில்வாசல் தெருவில் இருக்கின்றன.

(20) நகரபரிபாலன சபைக் கட்டிடம் (The Municipal Buildings).

(21) ஜேஹர்மஹால் எஸ்டேட் கட்டிடம் (The Jehr Mahal Estate Bulding).

(22) ஸேயின்ட் ஜேவியர் கலாசாலை (The St. Xavier's College).

(23) செவிலித்தாய்மாரைப் பழக்கும் சாலை (The Nurses' Training School).

(24) புலேஸ்வரத்திலிருக்கும் நாதியற்ற கால்நடைகளைச் சேர்த்துவைத்துப் போற்றுமிடம் (The Panjrapole).

(25) பைகல்லாவில் இருக்கும் கிரான்ட் வைத்தியக்கலாசாலையும் ஜெம்ஸட்ஜி ஜிஜி பாய் வைத்தியசாலையும் (The Grant Medical College and the Jamsetjee Jeejee Boy Hospital). கலாசாலைத் தலைவரிடம் உத்திரவு பெறல்வேண்டும்.

(26) சௌப்பாத்தியில் இருக்கும் மௌனஸ்தம்பம் (The Tower of Silence).

(27) மலையாளக்குன்றும் தொங்கு தோட்டமும் (The Malabar Hill and the Hanging Gardens).

பம்பாயில், பைகல்லா, பரேல், தாதர், சௌப்பாத்தி, கிர்காவ்ம், எஸ்பிளனேட் கோட்டை, கொலாபா முதலிய அனேக பாகங்கள் அடங்கியிருக்கின்றன. இவற்றுள் பரேல் என்னுமிடத்தில் ரெயில்வே தொழிற்சாலைகளும், கவர்னர் தங்குமிடமும், ரோமன்கதோலிக் கன்னிகாமடமும் இருக்கின்றன.

இவைகள் எல்லாவற்றையும்விட மிகச்சிறந்தது,
தண்ணமுத மதிகுளிர்ந்த கிரணம்வீசத்
தடம்பொழிற்பூ மணம்வீசத் தென்றல்வீச
வெண்ணமுதப் பளிக்குநிலா முற்றத்தேயின்
னிசைவீசத் தனிபனிநீ ரெடுத்துவீசப்
பெண்ணமுத மனையவர்வின் ணமுதமூட்டப்
பெறுகின்ற சுகமனைத்தும் பிற்பட்டோடக்
கண்ணமுதத் துடம்புயிர்மற் றனைத்துமின்பங்
கலந்துகொளத் தருங்கமலை விலாசமீதே.

எனப் பல்வகையானும் போற்றத்தகும் டாஜ்மஹால் ஹோட்டல் (The Taj Mahal Hotel) என்னும் பெருங்கட்டிடம். இது கடற்கரையோரத்தில் அமைந்து, இந்தியா முழுவதும் ஒரு குடைக்கீழ்க்கொண்டு ஆளும் மன்னவரின் மாண்புபொருந்திய அரண்மனைபோன்று விளங்குகின்றது. அதிற்பிரகாசிக்கும் அநேகம் ஆயிரம் மின்சாரவிளக்குகளோடு அக்கட்டிடத்தை இரவில் பார்ப்போர், நட்சத்திர மண்டலத்தின் ஓர் பாகம் சிதறுண்டு பூமியில் விழுந்துவிட்டதோ என்று ஐயுறும்படி ஒரே ஜோதிமயமாய் ஒளிர்கின்றது. இதில் தங்குவோர்க்கு நாள் ஒன்றுக்கு ஒரு தங்கப்பவுன் கட்டணம் என்றால், அங்கு தங்குவோர் யாராயிருத்தல் வேண்டும்; அவர்களுக்கு என்ன என்ன வசதிகள் கிடைக்கும் என்பதை இதைப்படிப்போர்களே ஒருவாறு யூகித்துக் கொள்ளவேண்டுமேதவிர, எழுத ஏடுங்காணாது; சொல்லக்காலமும் போதாது. கல்விகேள்விகளிலும், கவிபாடுந் திறமையிலும், சொற்பொழிவு செய்வதிலும், தேசாபிமானத்திலும் மிகச்சிறந்தவரென

உலகமெங்கும் பெரும்புகழ்பெற்ற, ஸரோஜினிதேவியாரை, சென்ற 1930-ம் வருஷம் அரசாங்கத்தார் சிறைப்படுத்தியதாகக் கேள்வியுற்ற கோடானு கோடி ஜனங்களுள், டாஜ்மஹால் ஹோட்டலில் தங்கி இருந்து சுகம் பெற்ற சரீரம் சிறைவாசம் செய்ய நேர்ந்ததே என்று வருந்தாதாரிலர். ஆதலின் ஒரு மனிதன் இவ்வுலகிற் பெறவேண்டிய சுகமனைத்தையும், டாஜ்மஹால் ஹோட்டலில் ஒரு நாள் தங்கினால் பெறலாம் என்றுரைத்தல் சற்றேனும் மிகையாகாது.

இவ்வூரில் எல்லா ஜாதியாருக்கும் அநேகம் கோவில்கள் இருக்கின்றன. இந்துக்கள் கோவில்களுள் ஸ்ரீ பதரிநாதர் கோவில், மும்மாதேவி கோவில், ஸ்ரீ லட்சுமி நாராயணர் கோவில், ஸ்ரீ கோகுலநாதசுவாமி அவர்களின் துவாரகாநாதர் கோவில், ஜானகிபாய் அம்மாளால் கட்டப்பட்ட சிவன் கோவில் முதலியன தரிசிக்கத்தக்கவை. இவைகளுள் பதரிநாதர் கோவில் மலபார் ஹில்லுக்குப் போகும்பாதையிலும், மற்றவை பட்டினத்தின் நடுப் பாகத்திலும் இருக்கின்றன. தவிர, சில வருஷங்களுக்குமுன் நம் தென்னாட்டுக் கோவில்கள்போற் கட்டப்பட்ட ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோவிலும் தரிசிக்கத்தக்கது. இக்கோவிலில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் சிலையானது, காஞ்சீபுரத்திலிருந்து சில வைஷ்ணவ பிராமணர்களால் சாலைவழியாகக் கொண்டு போகப்பட்டதென்று தெரிகிறது. சிலையாகச் செய்த பிறகு ரயிலிலேற்றல் தகாதென அவ்வாறு செய்தனர் என்று சொல்லப்படுகின்றது.

பம்பாயிலிருந்தபடி அடியிற் சொல்லப்பட்டிருக்கிற ஸ்தலங்களைப் போய்ப்பார்த்துவிட்டுத் திரும்புதல் நலம். பிரயாணிகள் தங்குவதற்கு இப்பட்டினத்தின் மத்தியில் மாதவபாக் (Madhav Bagh), ஹீராபாக் (Hira Bagh) என்னும் பெரிய தர்மசாலைகள் இருப்பதுடன் அநேக உண்டிக்கிரகங்களும் (Hotels) இருக்கின்றன.

## பைக்கல்லா (Byculla).

இந்த ஊர் பம்பாய் விக்டோரியா டர்மினஸ் ஸ்டேஷனிலிருந்து சுமார் 3 மைலில் தூரத்தில் இருக்கிறது. இதுவும் பம்பாய் பட்டினத்தின் ஒருபாகமாக இருக்கின்றது. மலபார் கம்பாலா குன்றுகளுக்கும், ப்ரீச்கண்டி (Breach Candy) மஹாலட்-

சுமி, மஜாகன் (Mazagon) முதலிய இடங்களுக்குப் போவோர் இந்த ஸ்டேஷனில் இறங்குதல் நலம். இந்த ஸ்டேஷனிலிருந்து சுமார் கால்மைல் தூரத்திலுள்ள விக்டோரியா தோட்டத்தைப் (The Victoria Gardens) பார்ப்பது அவசியம். இத்தோட்டத்திற்குள்ளேயே உயிர்ப் பிராணிகளின் தொகுதியும் (The Menagerie), இறந்த பிராணிகளின் காட்சிச்சாலை (The Museum)யும் இருக்கின்றன. ஆதலின் சென்னையில் ஒவ்வொன்றையும் பார்க்க வெவ்வேறு இடங்களுக்குப் போய் அலையவேண்டி இருப்பதுபோலன்றி, அவைகள் மூன்றையும் ஒரே இடத்தில் ஒரே தடவையில் கண்டு களிக்கலாம். இத்தோட்டத்திற்குள் ஆல்பர்ட் உருவச்சிலை (Albert Statue) இருக்கின்றது. பட்டாளத்தினின்று பாண்டு (Band) வாத்தியக்காரர் சிற்சில தினங்களில் இங்கு வந்து தங்கள் வாத்தியங்களில் அருமையான கீதங்கள் வாசித்து வருவோரை மகிழ்விக்கின்றனர். விக்டோரியா கைத்தொழிற்சாலை (The Victoria Technical Institute) இங்குதான் இருக்கின்றது.

## தாதர் (Dadar).

இந்த ஊர் ஸ்டேஷனில்தான் பம்பாய் பரோடா மத்திய இந்திய இருப்புப்பாதையும் பெரிய இந்திய தீபகற்ப இருப்புப் பாதையும் ஒன்று சேர்கின்றன. ஒரு பாதையில் இருக்கும் ஸ்டேஷன்களிலிருந்து மற்றப்பாதையில் இருக்கும் ஊர்களுக்குப் போவோர் இங்கு வண்டி மாற்றவேண்டியது. இவ்விரண்டு இருப்புப்பாதைகளின் ஸ்டேஷன்களுக்கு இடையில் பிரயாணிகள் தங்குவதற்கு வசதியான தர்மசாலை ஒன்று கட்டப்பட்டிருக்கின்றது. இங்கிருந்து பார்க்கவேண்டியவை :—(1) மட்பாண்டங்கள் ஜாடிகள் முதலியன செய்யும்சாலை (The Pottery Works), (2) மாஹ்ரா தோட்டங்கள் (The Mahra Gardens), பருத்தி நூற்சாலைகள், நெசவுத்தொழிற் சாலைகள். இதுவும் பம்பாய்ப் பட்டினத்திற்குள் அடங்கினதே. இந்த ஸ்டேஷன் விக்டோரியா டர்மினஸ் ஸ்டேஷனிலிருந்து 6 மைல் தூரத்திலும், கொலாபா ஸ்டேஷனிலிருந்து 8 மைல் தூரத்திலும் இருக்கின்றது.

## எலிபான்டா (Elephanta).

இது பம்பாய்ப் பட்டினத்திலிருந்து சுமார் 6 மைல் தூரத்திலுள்ள ஓர் சிறு தீவு. அதன் சுற்றளவு சுமார் 5 மைல் தூரம்

இருக்கும். இதற்கு முற்காலத்தில் தாராபுரி என்னும் பேர் இருந்ததாகவும், இந்தத் தீவில் போய் இறங்குமிடத்தில் அனேகம் பெரிய யானைகளின் பிம்பங்கள் இருப்பதால், இத்தீவிற்குப் பிற்காலத்தில் வந்த போர்த்துகல் தேசத்தார் எலிபாண்டா (Elephanta) என்னும் பேர் கொடுத்தனர் என்றும் தெரிகிறது.

இத்தீவிற்குப்போக விரும்புவோர் பம்பாயிலுள்ள அலெக்ஸாந்தர் டாக்ஸ் (Alexander Docks) என்னும் துறைமுகத்திலிருந்து தினந்தோறும் காலைஏழுமணிக்குப் புறப்படும் புகைப்படகிற்போய், அதிலேயே பகல் 10 மணிக்குத் திரும்பிவந்து விடலாம். படகு நிற்கும் இடத்திலிருந்து குகைகள் இருக்கும் இடத்திற்குப் போக நல்ல சாலை இருக்கின்றது. வழியில் உள்ள ஆபீசில் நபர் ஒன்றுக்கு நான்கு அணுவீதம் கட்டணம் வசூலிக்கின்றனர். அதில் இரண்டு சிறு குன்றுகளிருக்கின்றன. மேற்பக்கமிருக்கும் குன்று மற்றதைவிட சற்றுப் பெரிது. இந்தச் சிறு தீவிலிருக்கின்ற அனேகம் கல்வெட்டுக் குகைகளையும் அவைகளிற் செய்திருக்கின்ற அழகியசிற்பவேலைகளையும் பார்க்கநேத்திரானந்தத்தைத் தருகின்றது. இக்குகைகளில் நான்கு முற்றும் வேலை முடிந்திருக்கின்றன. ஐந்தாவது வேலை முடிவு பெறுமலும் மண் செடி கொடிகளால் மூடப்பட்டும் இருக்கின்றது. இவைகளுள் மேலண்டைக் குன்றில் செதுக்கப்பட்டிருக்கின்ற பெரிய குகையே (The Great Cave) சிறந்த வேலைப்பாடுள்ளது. அதன் விஸ்தீரணம் வெளிப்பக்கத்தில் 130 அடிச் சதுரமும், உட்பாகத்தில் சுமார் 90 அடிச் சதுரமும் இருக்கின்றது. அதற்கு மூன்றுவாயில்கள் உள்ளன. பிரதானவாயிலில் சுவர்போன்ற மூன்று பெரிய ஸ்தம்பங்களிருக்கின்றன. குகையின் உட்பாகமும், அனேகம் நீண்ட ஸ்தம்பங்களிருப்பதால் அனேக அறைகள் போன்ற பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. இதன் நடுவில், ஆக்கல், காத்தல், அழித்தல், என்னும் முத்தொழில்களுக்கும் அதிபதிகளான மும்மூர்த்திகளின் சிலைகள் இருக்கின்றன. ஆதலின் இதற்குத் திரிமூர்த்திக்குகை என்றும் பேர் உண்டு. குகைக்கு வலதுபாகத்தில் மகாலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றது. அதற்கு முன் மண்டபத்தில் அனேக துவாரபாலகர்களின் மூர்த்திகளும், இதர தேவர்களுடையமூர்த்திகளும் செதுக்கப்பட்டிருக்கின்றன. இம்மூர்த்திகள் சுமார் 11 அல்லது 12 அடி உயரத்திற்குக் குறையாமல் இருக்கின்றன. இக்

குகைகள் வெட்டினகாலம் சுமார் 2000 வருஷத்திற்கு முன் இருக்கவேண்டும் என்று தெரிகிறதால், அக்காலத்து இருந்த மனிதர்கள் 11-12 அடி உயரமுள்ளவர்களாக இருந்திருத்தல் வேண்டுமென ஊகிக்க இடந்தருகின்றது. மேற்சொல்லிய திரிமூர்த்தி மண்டபத்திற்குக் கீழ்புறத்திலுள்ள மண்டபத்தில் உமையொரு பாகராய்க் காட்சியருளுகிற சிவபிரானின் திருவுருவச்சிலை செதுக்கப்பட்டிருக்கின்றது. இச்சிலை சுமார் 17 அடி உயரமானதாய் அதிகெம்பீரமான தோற்றத்துடன் இருக்கின்றது. மேலண்டை மண்டபத்தில் பார்வதி பரமசிவனுடைய சிலைகள் தனித் தனியாகச் செதுக்கப்பட்டிருக்கின்றன. மற்றொரு மண்டபத்தில் பர்வத ராஜபுத்திரிக்கும் கைலாசபதிக்கும் நடந்த திருமணக்கோலக்காட்சி செதுக்கப்பட்டிருக்கின்றது. இதில் பரமசிவன் பக்கத்தில் சுவேதகஜாரூடனாகிய தேவேந்திரனும், கமலாசனனாகிய பிரமதேவரும் இருக்கின்றனர். பார்வதியின் பக்கத்தில் கருடவாகனத்தில் எழுந்தருளியிருக்கும் மகாவிஷ்ணுவும், மற்றதேவர்களும் இருக்கின்றனர். இக்குகையின் மேலக்கடைசியில் இருக்கின்ற மண்டபத்தில் சிவபெருமான் * பைரவரூபமாய் சிரசிற் கபாலந்தாங்கியும், மார்பில் தலையோடுகள் கோர்க்கப்பட்ட மாலையோடும் செதுக்கப்பட்டிருக்கின்றார். இங்குள்ள குகைகளில் உள்ள சிலைகள் எல்லாம் ஒரே கல்லினின்று செதுக்கப்பட்டனவாயிருக்கின்றன. ஆயினும் அவைகள் ஒன்றோடொன்று நெருங்கியிருப்பதையும், அவைகளின் பின்புறத்திலாவது பக்கத்திலாவது மனிதர்கள் நின்று வேலை செய்யக்கூடிய அளவு இடமில்லாதிருப்பதையும், இவைகளுள் ஒன்றாவது யாதொரு பின்னமும் அடையாதிருப்பதையும் ஆழ்ந்து நோக்கில், இவைகளைச் செதுக்கினோர் இவ்வுலகவாசிகளாயிருத்தல் கூடும் என்று நம்புதற்கிடமில்லை. வானுலகத்தோர் இங்கு வந்து இத்தகைய வேலைகளைச் செய்தனர் என்றியம்புதல் சாஸ்திர ஆராய்ச்சிக்கு விருத்தமாயிருத்தலின், இவ்வுலகத்தோரே இவ்வேலைகளைச் செய்திருத்தல்வேண்டுமெனச் சிலர்சாதிப்பதையும் ஒப்பவேண்டியிருக்கின்றது. அவ்வாறே ஒப்பினும் அவ்வேலை செய்தவர்கள் அபரிமிதமான சக்திவாய்ந்தவர்களாயிருந்திருக்கவேண்டும் என்பதையும், அத்தகைய சிறந்த வேலைக்காரர்

---

* குறிப்பு :—இம்மூர்த்திக்கு இரக்தபிட்சாடன மூர்த்தி என்னும் திருநாமமும் உண்டு.

கள் வேறு எந்தக் கண்டத்திலும், எந்தத்தேசத்திலும், எந்தக் காலத்திலும் இருந்ததில்லை என்பதையும் அந்நிய தேசத்தாரும் ஒப்பியே தீரவேண்டும். இதைத் தவிர இன்னமும் அனேகம் கோவில்கள் இருக்கின்றன. இங்கு மகாசிவராத்திரியன்று ஒரு மேளா (கூட்டம்) கூடுகின்றது. உற்சவமும் நடக்கின்றது.

## ஸால்ஸேட் (Salsette).

இதுவும் எலிபான்டா (Elephanta) வைப்போன்ற ஓர் சிறு தீவு. இதில் கேனேரி என்னுமிடத்தில் அனேக சைத்திய (Chaitya) குகைகள் இருக்கின்றன. இக்குகைகள் கி. பி. ஐந்தாவது நூற்றாண்டிலும், அதற்கு முந்திய காலத்திலும் ஏற்பட்டவையெனத் தெரிகிறது. தவிர, இத்தீவில் கௌதம புத்தருடைய ஓர் பல் இருந்ததாகக் கருதப்பட்டு, கி. பி. நான்காவது நூற்றாண்டில் இது அதிக மகிமையோடு விளங்கி வந்தது. இக்காலத்தும் இலங்கைத்தீவின் நடுப்பாகத்தில் உள்ள கண்டியில் இருக்கிற கோவில்களுள் ஒன்றில் ஷை பெரியாருடைய பற்களில் ஒன்று இருப்பதாகக் கருதப்படுகின்றது. அதை அங்கிருக்கும் புத்த சமயிகள் மிகுந்த பயபக்தியுடன் பூஜைசெய்துப் போற்றி வருகின்றனர்.

## கோரேகாவ்ம் (Goregaon).

இவ்வூர் பம்பாயிலிருந்து பரோடா போகிற பம்பாய்-பரோடா மத்திய இந்திய இருப்புப்பாதையில் கொலாபா ஸ்டேஷனிலிருந்து 18 மைல் தூரத்தில் இருக்கின்றது. இங்கு ஜோகேஸ்வரி தேவிக்காக ஏற்பட்ட ஓர் அழகான கல்வெட்டுக் குகைக் கோவில் இருக்கின்றது. பார்க்கத் தகுந்தது. அம்பாள் தரிசனம் மிக்க விசேஷம். கோவிலின் உட்புறம் 120 அடி சதுரமுள்ளது. ரெயில்வே ஸ்டேஷனுக்கருகில் ஓர் தர்மசாலையிருக்கிறது. பிரயாணிகள் தங்க வசதியுண்டு.

## போரிவ்லி (Borivli).

இதற்கு டைசூர் (Dysur) என்ற பேரும் உண்டு. இவ்வூரும் மேற்சொல்லிய இருப்புப்பாதையில் கோரேகாவ்ம் (Goregaon) என்னுமிடத்திலிருந்து ஐந்துமைல் தூரத்தில் இருக்கின்றது. இங்கிருந்து சற்று தூரத்தில் ஜெஸூட் (Jesuit) பாதிரிமார்களின்

இடிந்துபோன மடங்களும், மான்ட்பெஜீர் (Montpezir) குகைகளும் இருக்கின்றன. இவ்வூர் ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து சுமார் 4 மைல் தூரத்தில் பிரசித்திபெற்ற கன்னேரி குகைகள் இருக்கின்றன. இந்த குகைகளை புத்த சமயிகள் 9வது அல்லது 10வது நூற்றாண்டில் செதுக்கினதாகத் தெரிகின்றது. அதிலிருக்கும் பெரிய கோவிலானது சுமார் 90 அடி நீளமும் 40 அடி அகலமும் இருக்கின்றது. நடுமண்டபம் 40 அடி உயரமிருக்கின்றது. அதற்கு எட்டுப்பட்டையான 34 ஸ்தம்பங்கள் இருக்கின்றன. தர்பார் (Durbar) குகை என்பது விஸ்தீர்ணத்தில் அதைவிடச் சற்றுப்பெரிதாக இருப்பினும், உயரத்தில் 9 அடிதான் இருக்கிறது. சுமார் ஆயிரம் வருஷங்களுக்குமுன் பூசின சுண்ணும்புப்பூச்சும், அதன் மேலுள்ள வர்ணமும் இக்காலம் வரை அனேக இடங்களில் அழிவடையாமல் இருக்கின்றன. இங்கிருக்கும் அனேக குண்டங்களில் மலையிலிருந்து ஊறும் ஊற்று ஜலம் நிறைந்திருக்கின்றது. அவைகளுள் சிறந்தது துளசி தலாவ் (Tulsi Talao) என்பது. இங்கிருக்கும் குன்றின்மேல் ஏறிப்பார்த்தால், தெற்கில் பம்பாயும், வடக்கில் பஸீனும் (Bassein), மேற்கில் சமுத்திரமும் சிறந்த காட்சியை அளிக்கின்றன. ரெயில்வே ஸ்டேஷனில் தங்குவதற்காக ஒரு அறையும் அதற்கருகில் ஒரு தர்மசாலையும் இருக்கின்றது.

## நல்லா ஸோப்பரா (Nalla Sopara).

இவ்வூர் ஷை பம்பாய் - பரோடா மத்திய இந்திய இருப்புப் பாதையில், பம்பாயிலிருந்து 36 மைல் தூரத்திலும், போரிவ்லியிலிருந்து 13 மைல் தூரத்திலும் இருக்கின்றது. இங்கிருந்து கோதுமை முதலிய நவதானியங்களும் காய்கறிகளும் பம்பாய்க்கு ஏற்றுமதியாகின்றன.

இவ்வூர் ஸ்டேஷனிலிருந்து சுமார் 5 மைல் தூரத்தில் உள்ள நிர்மலம் என்னும் இடத்தில் 8 பழமையான கோவில்கள் இருக்கின்றன. இந்த நிர்மலமான இடத்தில் ஸ்ரீ ஜகத்குரு சங்கராசாரிய சுவாமிகளுள் *ஒருவர் அடங்கியிருப்பதாகச் சொல்லப்படுகின்

* குறிப்பு:—இவர் கேரளதேசத்தில் சிவகுரு என்பாருக்குப் புதல்வராய்ப் பிறந்து இரண்டாவது குருவாய் விளங்கினவர் எனத் தெரிகிறது.

றது. அதன் ஞாபகார்த்தமாக இவ்விடத்தில் ஒவ்வொரு வருஷம் கார்த்திகைமாதம் ஏகாதசியன்று ஓர் பெருஞ்சந்தை கூடுகின்றது. அதற்குத் தென்தேசத்திலிருந்தும் ஜனங்கள் வருகின்றனர்.

ஸ்டேஷனிலிருந்து $1\frac{1}{2}$ மைல் தூரத்தில் உள்ள ஜிர்தான் (Jirdhan) குன்றில் ஆதிகாலத்தில் பஞ்சபாண்டவர்கள் இருந்து தவஞ்செய்ததாகக் கருதப்படுகிற சில வெகு பழமையான குகைகள் இருக்கின்றன. பார்க்கத்தக்கவை. மேற்சொல்லிய சந்தை கூடும் காலத்தில் மக்கட்பேறில்லாதார் அக்குகைகளுள் ஒன்றனுட்சென்று கடவுளை ஆராதிக்கின்றனர்.

ஸ்டேஷனுக்கு அருகிலுள்ள தூங்கார் குன்றும் (Toongar Hill) தரிசனத்திற்கேற்ற புண்ணியஸ்தலமாகக் கருதப்படுகின்றது.

இதன்மேல் நான்கு கோவில்கள் இருக்கின்றன. * மகாபலேசுவரம், இகத்புரி, மாதிரான் என்னும் கோடைக்கால வாசஸ்தானங்களுக்குப் போகப் போதிய பொருளில்லாதார் இக்குன்றில் வந்து வசிக்கின்றனர். இக்குன்றின்மேல் புலி, கரடி, காட்டுப்பன்றி முதலிய காட்டு மிருகங்கள் வசிப்பதால், பிரயாணிகள் தனியாகவாவது இராக்காலங்களிலாவது வெளியில் நெடுந்தூரம் போதல் உசிதமன்று.

இவ்வூருக்கருகாமையில் இருக்கின்ற † புருட்ராஜாக்கா கோட் என்னும் புத்தசமயிகளால் கட்டப்பட்டுள்ள ஸ்தம்பம் பார்க்கத் தக்கது.

நிர்மலம் என்னும் இடத்தில் 4 தர்மசாலைகள் இருக்கின்றன. ஸோப்பராவிலேயே பிரயாணிகள் தங்கக்கூடிய கட்டிடங்கள் அனேகம் இருக்கின்றன.

பம்பாய்ப் பட்டினத்தில் தங்குவதற்கு அனேக தர்மசாலைகளும் ஹோட்டல்களும் இருக்கின்றன. விக்டோரியா டர்மினஸ் ஸ்டேஷனுக்கு எதிரிலேயே ஒரு தர்மசாலையும் ஒரு ஹோட்டலும்

* குறிப்பு :—மகாபலேசுவரத்தைப்பற்றிய விவரம் இப்புததகம் முதற்பாகம் 190 வது பக்கத்திற் காணலாம். மற்ற இரண்டு இடங்களைப்பற்றி இப்பாகத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

† குறிப்பு :—இதற்கு புருட்ராஜாவின் கோட் அல்லது ஸ்தூபி என்று பொருள்.

இருக்கின்றது. ஆனால் பட்டினத்தின் நடுவில் இருப்பது அவ்வளவு வசதியாயிராதாதலின் பக்கத்திலுள்ள தாதர், கோரேகாவ்ம் என்னும் ஊர்களிலுள்ள தர்மசாலைகளுள் ஒன்றில் தங்கிக்கொண்டு 10 நிமிஷத்திற் கொருமுறை போகும் ரயில்வண்டிகளில் ஏறிப்போய்ப் பட்டினத்தைப் பார்த்துத் திரும்புதல் நலம்.

பூவலம்போக விரும்புவோர் பம்பாயிலிருந்து வடக்கு நோக்கிச்செல்லுகிற பம்பாய் பரோடா மத்திய இந்திய இருப்புப்பாதை வழியாக **சூரத்** (Surat), **ப்ரோச்** (Broach) முதலிய பட்டினங்கள் மார்க்கமாகப் பிரயாணத்தைத் தொடருதலே முறையாயினும், பம்பாய்க்கு வடகீழ்திசையில் இருக்கின்ற நாசிக், பஞ்சவடி, திரியம்பகம், ஓங்காரம், உஜ்ஜயினி (அவந்திகை) முதலிய புண்ணிய க்ஷேத்திரங்களை தரிசிப்பது மிக்க அவசியமாதலின், பம்பாயிலிருந்து மன்மாட் (Manmad) புஸாவல் (Bhusaval) மார்க்கமாகப் போகிற பெரிய இந்திய தீபகற்ப இருப்புப்பாதை (The Great Indian Peninsula Railway) வண்டியிலேறிப் பிரயாணம் செய்து, காண்ட்வா (Khandwa) என்னும் ஜங்ஷனில் வண்டி மாற்றி வடக்கே திரும்பிவிடலாம்.

## காஸாரா (Kasara).

இவ்வூர் புண்ணிய க்ஷேத்திரங்களுள் ஒன்றல்லவாயினும் இங்குத் தங்கி மேற்குத் தொடர்ச்சிமலையின் வடக்குக் கோடியாகிய தல்காட் (Thal Ghat) என்னும் பாகத்தில் இருப்புப்பாதை எப்படி போடப்பட்டிருக்கின்றது என்பதையும், அதில் வண்டித் தொடர் எப்படிப் போகின்றது என்பதையும் பார்த்தல் அவசியம். தென்னாட்டில் நீலகிரிமலை வண்டித்தொடரில் ஏறிப் பிரயாணஞ் செய்தவர்கள் இங்கு தங்கவேண்டிய அவசியமில்லை.

மலையில் ஏறவேண்டிய ஏற்றம் சமுத்திரமட்டத்தின்மேல் 177 அடி உயரத்தில் உள்ள வாசிண்ட் (Vasind) என்னும் ஸ்டேஷனில் ஆரம்பிக்கின்றது. காஸரா 930 அடி உயரத்தில் இருக்கிறது காஸராவிற்கும் இகத்புரி (Igatpuri) க்கும் உடையில் உள்ள 10 மைல் தூரத்தில் வண்டித் தொடர் பின்னும் 1050 அடி உயரம் ஏறவேண்டியிருக்கின்றது. ஆகவே சராசரி 50 அடி உயரத்தில் ஒரு அடி உயரம் ஏறவேண்டியிருக்கின்றது. சிற்சில இடங்களில் கடுமை

யான ஏற்றமாக இருக்கின்றபடியால், 37 அடிக்கு ஒரு அடி ஏற்றமும் ஏற்படுகின்றது. காஸாரா ஸ்டேஷனிலிருந்து 4½ மைல் தூரத்தில் வண்டி திரும்புவதற்காக ஒருஸ்டேஷன் (Reversing Station. கட்டப்பட்டிருக்கின்றது. அங்குப்போனதும் வண்டித்தொடரின் பின்பக்கமிருக்கும் எஞ்சினை முன்பக்கத்தில் மாட்டி வண்டி வந்த திசையிலேயே வேறு மார்க்கமாகக்கொண்டு போகின்றனர். இந்த ஸ்டேஷனைக் கடந்த பிறகு சுமார் 5 மைல் தூரத்திற்கு 37 அடிக்கு ஒரு அடி உயருகிற கடுமையான ஏற்றத்தில் வண்டி ஏறிப் போகின்றது. இதன் இடையில் சுமார் 190 அடி உயரத்தில் உள்ள ஒரு பாலத்தின்மேல் வண்டிபோகின்றது. வண்டியில் இருந்து கீழேபார்க்கும் பிரயாணிகளுக்குக் குடல் நடுக்கமுண்டாகின்றது. இரண்டு தென்னை அளவு உயரம், மூன்று தென்னை அளவு உயரம் என்று தென்னை மரங்களையே மிக்க உயரமானவையாகக் கருதும் நம் தென்னாட்டினருக்கு, 190 அடி உயரம் என்பதை ஒருவாறு நிதானித்துக் கொள்ளல் சிரமமாயிருக்கக்கூடும். நம் தமிழ்நாட்டிற்கு நடு நாயகமாக விளங்கும் தஞ்சைமா நகரில் சிவபத்தியிற் சிறந்த சோழர் குல திலகமாகிய இராஜராஜ சோழன் என்னும் அரசனால் கட்டப்பட்டிருக்கும் பிரகந்நாயகி சமேத ஸ்ரீ பிரஹதீசுவரர் கோவிலின் விமானத்தைப் பார்த்திருப்பவர்கள் ஒருவாறு அனுமானித்துக் கொள்ளலாம். இக்கோவிலின்பேர் பெரியகோவில். சுவாமியின்பேர் பிரஹதீசுவரர் (* பெரிய ஈசுவரர்). அம்பாள் பெயர் பிரஹந்நாயகி (பெரியநாயகி). நந்திகேசுவரரோ இவ்வுலகில் உள்ளவர்களுள் பெரியவர். கோவிலின் விமானமோ புண்ணிய பூமியான இப்பாரத நாட்டின்கண் உள்ளவைகளுள் உயர்ந்தது. ஆகவே இந்நகரில் உள்ளவை எல்லாம் பெரிதாக இருந்தும், அங்கு ஆண்டுவந்த மன்னர்களின் ஆட்சி நீடித்திருக்க இயலாமற்போனது வருந்தத் தக்கதே.

காஸாராவிலிருந்து இகத்புரி போவதற்குள் 12 குகைப்பாதைகள் (Tunnels) இருக்கின்றன. அவைகள் எல்லாவற்றின் நீளம் சுமார் 1½ மைலிருக்கும். இவ்வூர் ஸ்டேஷன் பம்பாயிலிருந்து

* குறிப்பு :—இதிலிருந்து சிறிய ஈசுவரர் ஒருவர் இருப்பதாக நினைத்தல் தவறு.

75 மைல் தூரத்திலும், இகத்புரியிலிருந்து 10 மைல் தூரத்திலும் இருக்கின்றது. இவ்வூரில் பிரயாணிகள் தங்குவதற்கு வசதியான தர்மசாலை இருக்கின்றது.

## இகத்புரி (Igatpuri).

இவ்வூரும் தரிசிக்கவேண்டிய க்ஷேத்திரமல்லாவிடினும், நீண்டதூரம் பிரயாணம் செய்துவந்தவர்கள் இங்கு சிலநாள் தங்கி இளைப்பாறிப் போதல் நலம். பிரயாணிகள் தங்குவதற்கு ஊருக்குள் மூன்று தர்மசாலைகள் இருக்கின்றன. இவ்வூர் தல் காட் (Thal Ghat) என்னும் மலைத் தொடரின் உச்சியில் அமைந்திருப்பதால் நல்ல கோடைக்காலத்திலும் உஷ்ணமிருப்பதில்லை. பம்பாயிலிருந்து அனேக கனவான்கள் இதைக் கோடைக்காலவாசஸ்தானமாக வைத்திருக்கின்றனர். இங்கு ரெயில்வே கம்பெனியார் தொழிற் சாலைகளும் சில மாதாக்கோவில்களும் இருக்கின்றன.

இவ்வூருக்கு அரைமைல் தூரத்தில் உள்ள ஓர் பெரிய ஏரியில் எக்காலத்தும் பரிசுத்தமான தண்ணீர் நிறைந்திருக்கின்றது. இதிலிருந்து இவ்வூருக்கும் காஸாராவுக்கும் குடிதண்ணீர் கொண்டு போகின்றனர். இவ்வூரிலிருந்து 3 மைல் தூரத்தில் உள்ள பிம்ப்ரி (Pimpri) என்னும் ஊரில் வருஷத்திற்கொருமுறை பெரிய சந்தை நடக்கின்றது. அதற்கு ஆயிரக்கணக்கான ஜனங்கள் கூடுகின்றனர். இவ்வூர் பம்பாயிலிருந்து 85 மைல் தூரத்தில் இருக்கின்றது.

பம்பாயிலிருந்து புறப்பட்டு காஸாரா இகத்புரி, இவ்விரண்டு ஊர்களுக்கும் போகவிரும்பாதார் நேராக நாசிக்ரோட் (Nasik Road) ஸ்டேஷனுக்குச் சீட்டு (Ticket) பெற்றுக்கொண்டு, நாசிக், பஞ்சவடி க்ஷேத்திரங்களுக்குப் போகலாம். நாசிக்ரோட் ஸ்டேஷன் பம்மாயிலிருந்து 117 மைல் தூரத்தில் இருக்கின்றது. ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து நாசிக் பட்டினம் 5 மைல். வாடகைக்கு தாங்கா (Tonga) என்னும் குதிரை வண்டிகளும், மோட்டார் வண்டிகளும் ஏராளமாய்க் கிடைக்கின்றன. இவைகளைத் தவிர, டிராம்வண்டி (Tram cars) களும் போகின்றன.

# அத்தியாயம். 3.

*செந்துவர் வாய்க்கருங் கண்ணிணை வெண்ணகைத் தேன்மொழியார்*
*வந்து வலஞ்செய்து மாநட மாட மலிந்தசெல்வக்*
*கந்த மலிபொழில் சூழ்பஞ்ச வடிநாசிக் கதனையென்றுஞ்*
*சிந்தைசெய் வாரைப் பிரியா திருக்குந் திருமங்கையே.*

## நாசிக், பஞ்சவடி.

இவ்விரு புண்ணிய தலங்களும், "புவியினுக்கணியாய் ஆன்ற பொருள் தந்து புலத்திற்ருகி, அவியகத்துறைகள் தாங்கி ஐந்திணை நெறியளாவிச், சவியுறத்தெளிந்து தண்ணென்றொழுக்கமும் தழுவிச்சான்றோர், கவியெனக்" கிடக்கும் கோதாவிரியின் இரு கரைகளிலும் உள்ளன. இக்கோதாவிரி நதியானது, சாட்சாது கௌரி தேவியின் திருமணக்காலத்தில் பிரமதேவரின் கமண்டலத்தினின்று வெளிப்பட்டு, மகாபலிச்சக்கரவர்த்தியின் யாகசாலையில் தோன்றின வாமனத் திருமாலின் சரணகமலங்களாற் பவித்திரமடைந்து, ஸ்ரீ கைலாசபதியின் சிரசிலுள்ள ஜடாமகுடத்தில் தங்கியிருந்து, கௌதம முனிவரின் வேண்டுகோளுக்கிணங்கி, பிரமகிரி பர்வதத்தினின்றிழிந்து, தன்னுடைய நாமத்தாலேயே பொலிந்துவிளங்கும் கோதாவிரி ஜில்லாவின் எல்லையிற் கடலிற் கலக்கின்றது. இந்த கோதாவிரியானது, இமயமலையின் உச்சியிலுள்ளதும், பாகீரதியின் உற்பத்தி ஸ்தானமாயிருக்கும் பெரும் பேற்றைப் பெற்றதுமான **கங்கோத்திரி** என்னும் அழகிய குன்றிற் பிறந்து, பூமியின் உட்பாகத்தில் அந்தர்வாகினியாய்வந்து, நாசிக் பட்டினத்திலிருந்து 18 மைல் தூரத்தில் இருக்கும் திரியம்பகேஸ்வரத்திலுள்ள பிரமகிரியினின்று வெளிப்பட்டு வருவதாகக் கருதப்படும் காரணத்தால், இந்நதிக்கு **விருத்த கங்கை** என்னும் பெயரும் உண்டு. இதை கங்கையின் மூத்த சகோதரியாகக்கருதி, பர்வதவர்த்தனி சமேத இராமநாத சுவாமிக்கு அபிஷேகம் செய்விக்க கங்கை எடுத்துச்செல்வோர், இந்நதியின் கரையில் தங்கி, தாம் எடுத்துவந்த கங்கையில் ஒரு சிறிதளவெடுத்து கோதாவிரியில்விட்டு, அதினின்று ஓர் சிறிதளவு எடுத்துத் தம் கலசத்திலுள்ள கங்கா ஜலத்தோடு கலந்துகொள்ளல் வேண்டுமென்ற விதி ஏற்பட்டிருக்கின்றது. அவ்வாறு கலப்பதற்காக கங்கை நீர்

அடைத்துள்ள கலசத்தைத் திறக்கும்போது, தன்னுடைய மூத்த சகோதரியைக் காணும் பாக்கியம் தனக்குக் கிட்டிற்றேயெனும் ஆனந்தமேலீட்டினால் கங்கா ஜலமானது தானாகவே கலசத்தினின்றும் பொங்கிவழியும் என்று கருதப்படுகின்றது. இதுகாரணம் பற்றியே கங்கை, யமுனை, சரஸ்வதி, கோதாவிரி, நர்மதை, சிந்து, காவிரி ஆகிய சப்த புண்ணிய நதிகளில், கங்கையும் கோதாவிரியும் சமுத்திரத்திற் கலக்குமிடங்களுக்கிடையில் மற்ற நதிகள் வந்து கலந்து இவ்விருநதிகளின் சங்கமங்களையும் வேறுபடுத்தாதிருக்கின்றனபோலும். இத்தகைய புண்ணிய நதியின் இருமருங்கிலும் அமைந்து விளங்கும் இவ்விரு மகத்தான புண்ணிய க்ஷேத்திரங்களின் மகிமையையும் பெருமையையும் முற்றும் எழுதுவதும் சொல்லுவதும் முடியாதகாரியமாயினும், இப்புத்தகத்திற்கூடியவரையில் சுருக்கிச் சொல்லப்பட்டுள்ளது.

இவ்விரு க்ஷேத்திரங்களும் மகா பிரசித்தமான ஹரிஹராத்மக க்ஷேத்திரங்கள் என்பது யாவரும் நன்கறிந்த விஷயம். இவ்விருதலங்களுக்கிடையில் கோதாவிரி நதி அதி கம்பீரமான தோற்றத்துடன் முதலிற் சற்றுதூரம் உத்தர தட்சிண வாகினியாய் ஓடிப் பின்பு கிழக்கே திரும்பிவிடுகின்றது. நாசிக் பட்டினமானது ஆற்றிற்கு மேற்கிலும் தெற்கிலும் அமைந்திருக்கின்றது. பஞ்சவடி கிழக்கிலும் வடக்கிலும் இருக்கின்றது. நாசிக்பட்டினத்தின் விஸ்தீரணம் சற்றேறக்குறைய 7 சதுர மைல் என்று தெரிகின்றது. இது முதலில் சங்கமனேர் ஜில்லாவில் ஒரு தாலூகாவின் தலைநகராக இருந்து, பிற்காலத்தில் ஜில்லாவின் தலைநகராக மாறியிருக்கின்றது. இந்நகரம் சீதோஷ்ண ஸ்திதியில் சமமானதாகவும் வாசத்திற்குச் சிறந்ததாகவும் இருக்கின்றது. ஜனவரி மாதத்தில் சற்றே அதிகக்குளிர்ச்சியும், ஏப்பிரல் மாதத்தில் சற்றே அதிக உஷ்ணமும் இருப்பதைத் தவிர்த்து, மற்றெல்லா மாதங்களிலும் குளிரும் அதிகமின்றி, உஷ்ணமும் அதிகமின்றி, நல்ல ஆரோக்கியமான காற்று வீசிக்கொண்டு இருப்பதால் நோயாளிகளுக்கும் இது வாசத்திற்கு எற்ற இடமாக இருக்கின்றது. இவ்விடம் அடிக்கும் காற்று சுத்தமானதாகவும், வறட்சியானதாகவும் (Dry Breeze) இருப்பதால் க்ஷய ரோகிகளுக்கு விசேஷமான சுகத்தைக் கொடுக்கின்றதாகச் சொல்லப்படுகின்றது.

இவ்விரு தலங்களின் இடையில் ஓடும் கோதாவிரியின் இரு மருங்கிலும் கணக்கற்ற ஸ்நான கட்டங்களும், கோவில்களும், பெருத்த சீமான்களுடைய மாளிகைகளும் கட்டப்பட்டிருப்பதால், பார்வைக்கு அதியற்புதமான கண் கொள்ளாக் காக்ஷியாக இருக்கின்றது. ஜீவன்முக்த க்ஷேத்திரமாகிய காசியையும் இதற்கு ஈடாகச் சொல்லமுடியாது. காசியில் கங்கையின் மேல்புறமாகிய ஒரு பக்கத்தில்மாத்திரம் கட்டிடங்களும் ஸ்நான கட்டங்களும் அமைந்திருக்கின்றனவேயொழிய, மற்றப்பக்கத்தில் பெருங்காடாகத் தெரிகின்றது. மேலும் காசியில் கங்கையின் மேல் கரையில் இறப்போர்க்கு முக்தியும், கீழ்கரையில் இறப்போர்க்குக் கழுதை பிறப்பும் கிடைப்பதாகச் சொல்லப்படுகின்றது. ஆனால் இப்புண்ணியநதியின் எப்பாகமும் பவித்திரமானதே. எவ்வாறு கோதாவிரியானவள் கங்கைக்கு மூத்த சகோதரியாகக் கருதப்படுகின்றனளோ, அவ்வாறே இவ்விரு புண்ணிய தலங்களும் காசியைவிட எத்தனையோ மடங்கு விசேஷமானவைகளாகக் கருதப்படுகின்றன. காசியில் சர்வேசுவரனை பரமசிவன் விசுவநாதரூபமாய் இருந்து, அங்கிறக்கும் பிராணிகளின் வலது செவியில் தாரக மந்திரோபதேசம் செய்து, அவர்களுடைய பஞ்சமகாபாதகங்களையும் போக்கி, முத்தியை அருளுகின்றனன். எல்லாம் வல்ல அவ்விறைவனையே பீடித்து வருத்திவந்த * பிரமஹத்தியானது காசியுள்பட எத்தலத்தும் தீராது, இத்தலத்தில் நிவர்த்தியானதாகத் தெரிகிறது.

நாசிக் பட்டினத்திலிருந்து பஞ்சவடிக்குப் போவோர் கோதாவிரியைக்கடந்துபோக, **விக்டோரியா வாராவதி** (Victoria Bridge) என்னும் பேருள்ள ஓர் பெரும்பாலம் கட்டப்பட்டிருக்கின்றது. இது 1897 ம் வருஷத்தில் கட்டப்பட்டதாகவும், இதைக் கட்டுவதற்குக் காரண பூதராயிருந்தவர் சீமான் காசிநாத மகாதேவ தத்தே என்றும் தெரிகிறது. இது ஒரு முனிசிபல் பட்டினம். இப்பட்டினத்தில் நல்ல பழங்களும் காய்கறிகளும் எக்காலத்தும் ஏராளமாய்க் கிடைப்பதுடன், அழகான வேலைப்பாடுள்ள பித்தளை வெண்கலம் செம்பு முதலிய உலோகங்களினால் செய்யப்

---

* **குறிப்பு:—பரமசிவனைப்பீடித்து வருத்திவந்த பிரமஹத்தி நீங்கின விவரம் இத்தல வருணனையில், ஸ்ரீ கபாலேசுரவர் மகாத்மியம் சொல்லுமிடத்திற் காணலாம்.**

பட்ட பாத்திரங்களும் அவரவர்களுக்கு வேண்டிய உருவத்திலும் தோற்றத்திலும் கிடைக்கின்றன.

## சரித்திர வரலாறு.

வட இந்தியாவில் இருக்கும் பரத்பூர் (Bharatpur) பட்டினத்தில் உள்ள கற்கம்பத்தில் வெட்டியிருக்கும் சிலாசாசனங்களிலிருந்து, இப்பட்டினம் கி. மு. 200ம் வருஷத்திற்கு முன்னமேயே பிரபலமாக இருந்ததாகத் தெரிகின்றது. அதில் வசுக என்பவரின் மனைவி நாசிக்பட்டினத்தில் கோசம்ரட்சணார்த்தம் சில ஏற்பாடுகள் செய்ததாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆதலின் அக்காலத்திலேயே இப்பட்டினம் ஒரு புண்ணிய க்ஷேத்திரமாக இருந்திருக்கவேண்டும் என்றும், பசுக்களைப் பாதுகாத்தலை ஜனங்கள் ஒரு முக்கிய கடமையாகக்கொண்டிருந்தனர் என்றும் நன்கு விளங்குகின்றது.

மேலும் இப்பட்டினத்திற்கு அருகாமையில் இருக்கின்ற பாண்டவ குகைகளில் 18, 19வது குகைகளில் சுமார் கி. மு. 125ம் ஆண்டிற்குப் பின்னும் 100ம் ஆண்டிற்கு முன்னும் ஏற்பட்டதாகத் தெரிகிற சிலாசாசனங்களிலும்,இப்பட்டினத்தைப்பற்றிய சில விஷயங்கள் குறிக்கப்பட்டுள்ளன. சுமார் 500 - 600 வருஷங்களுக்குப்பிறகு, அதாவது கி. பி. 5வது அல்லது 6வது நூற்றாண்டுகளில் வெட்டியதாகக் கருதப்படுகிற சிலாசாசனங்களில், இப்பட்டினத்திற்கு மேற்கில் சுமார் 6 மைல் தூரத்தில் கோதாவிரி நதி தீரத்தில் உள்ள கோவர்த்தனம் என்னும் பட்டினத்தைப்பற்றிக் கூறப்பட்டுள்ளதே தவிர, நாசிக்பட்டினத்தைப்பற்றி ஒருவிஷயமும் குறிக்கப்படவில்லை.

அதிலிருந்து அச்சமயத்தில் ஆண்டிருந்த அரசர்கள் கோவர்த்தனத்தைத் தங்கள் தலைநகராகக்கொண்டிருந்திருத்தல் வேண்டுமென ஊகிக்கவேண்டியிருக்கின்றது. தவிர, கி. பி. இரண்டாவது நூற்றாண்டில் உலகப்பிரசித்திபெற்றிருந்த மிஸ்ரதேசத்தவரான பூகோளசாஸ்திரி தாலமி என்பவரால் இப்பட்டினம் நாசிகா என்னும் பேருடன் குறிக்கப்பட்டுள்ளதெனத் தெரிகின்றது. கி. பி. 5 வது நூற்றாண்டின் இறுதியில் உயிர்வாழ்ந்திருந்த பிரபல ஜோதிஷ சாஸ்திரி வராஹமிசிரரும் நாசிக் என்னும் பட்டினம் ஜம்புத்தீவின மத்தியபாகத்தில் உள்ளது என்று குறிப்பிட்டிருக்கின்

ரூர். இதற்குப் பிறகு இப்பட்டினத்தில் சாலுக்கியர், ராட்டோடே (Rhatode), சாந்தோர் (Chandore), தேவகிரி முதலிய க்ஷத்திரிய வம்சத்து அரசர்கள் அரசாண்டிருந்தனர் என்று தெரிகின்றது.

11 வது - 12 வது நூற்றாண்டுகளில் இந்நகரில் சமணர்களுடைய ஆக்கிரமிப்பும், அதன் பிறகு முகமதியர்களுடைய ஆக்கிரமிப்பும் இருந்து, அவர்களிடமிருந்து மகாராஷ்டிரர்கள் மீட்டு, இறுதியில் ஆங்கிலேயரிடம் ஒப்படைத்து விட்டனர் என்று தெரிகின்றது. சமணர்கள் இதை பத்மநகரம் என்றும், ஜனஸ்தானம் என்றும் அழைத்து வந்தனர். முகம்மதியர் இதை குலசனாபாத் (Gulachanabad) என்னும் பேரிட்டழைத்து வந்தனர்.

ஆகவே ஒருவராலும் மறுக்கப்படாத சாட்சியங்களின் மூலமாகவும், சரித்திரங்களின் மூலமாகவும், இது ஓர் மிகவும் பழமையான பட்டினம் என்றும், கிறிஸ்து பிறப்பதற்கு 200—300 வருஷங்களுக்கு முன்னமேயே உன்னத ஸ்திதியிலிருந்து வந்ததென்றும் தெரிகின்றது.

தவிர, புராணவாயிலாகவும் இது நான்கு யுகங்களிலும் வேறு வேறு நாமங்களுடன் இருந்து, தன்னை நாடிவரும் ஜீவகோடிகளுக்கு, புத்தி முத்தி இரண்டையும் தவறாது அளித்துவந்ததெனத் தெரிகின்றது.

## கோதாவிரி உற்பத்தி.

**தொண்டனேன் பட்ட தென்னே தூயகௌ தமியின் நன்னீர்**
**கொண்டிருக் கோதி யாட்டிக் குங்குமக் குழம்பு சாத்தி**
**இண்டைகொண் டேற நோக்கி ஈசனை யெம்பி ரானைக்**
**கண்டனைக் கண்டி ராதே காலத்தைக் கழித்த வாறே.**

இருநான்கோடிரண்டு திசைகளுக்கும் இறைவனாகிய முழுமுதற்கடவுள், நிலம், நீர், தீ, காற்று, அம்பரம் என்னும் பஞ்ச மகாபூதங்களை சிருஷ்டித்து, அவைகளுக்கோர் விசிஷ்ட சக்தியையும் கொடுத்தருளினர். இதுகாரணம்பற்றியே வேதகாலம் முதல் இவ்வைந்து பூதங்களும் தேவதாரூபமாகக் கருதப்பட்டு வருகின்றன. அவ்வைந்திலும் இரண்டாவதான நீரானது கங்காரூபமாய் அவ்விறைவனின் திருமுடியின்மேல் எழுந்தருளியிருக்கும் காரணம்பற்றி, மற்ற நான்கு பூதங்களினும் மேலானதாகக் கருதப்படு

கின்றது. ஆகவே கங்கைக்கும் மூத்தவளெனக் கருதப்படும் இந்த கௌதமி கங்கை, கங்கையினும் பரமபவித்திரையாக்க் கருதப்படுகின்றனள்.

பரமசிவனுக்கும் பார்வதி தேவியாருக்கும் திருமணம் நடந்த காலத்தில், வேத பிராமணர்களை சிருஷ்டித்தவரும், பிராமணர்களுக்கு பிராமணரானவருமான பிரமதேவரே புரோகிதராக இருந்து சகல வைதீக காரியங்களையும் நடத்திவந்தனர். அக்காலத்தில் சப்தபதி சமயத்தில் உமாதேவியார் அடியெடுத்து வைத்தவுடன், அவருடைய *காற்பெருவிரல் பிரமதேவர் கண்ணிற்படவே, அவர் அவ்விரலின் அழகிலீடுபட்டு சற்றுத்தயங்க, அக்கணமே அவர் இந்திரியம் ஸ்கலிதமாயிற்று. அதையறிந்த பிரமதேவர் வெட்கித் தலைகுனிந்து வெளியிற் சென்றுவிட்டனர். அவரது பரிதாப நிலையை உணர்ந்த கைலாசபதி, அவரை அழைத்து, அவருக்குத் தம்மையும் அறியாமல் நேரிட்ட விபத்தினின்றும் நீக்கக் கருதியவராய், சுவர்க்கமத்தியபாதாளம் என்னும் மூவுலகங்களினும் உள்ள சகல புண்ணிய தீர்த்தங்களின் சாரத்தை ஒன்றாகத்திரட்டி, ஒரு கமண்டலத்திலிட்டு அவரிடம் கொடுத்தனர். அதை பிரமதேவர் அதிபயபக்தியோடும் பெற்று,

---

* குறிப்பு:—இச்சிறு சம்பவத்திலிருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயங்கள் சில உள. உமாதேவியை பிரமதேவர் அதற்கு முன் பார்த்திருந்திருக்கமுடியாது என்று வெளியாவதால், கலியாணமாகாக் கன்னிகைகள் ஆடவர்கள்முன் எக்காரணம்பற்றியும் வரலாகாது என்றும், கலியாண காலத்தில் மணமகனுக்கும் மணமகளுக்கும் எதிரிலிருந்து வைதீக காரியங்கள் செய்துகொண்டிருந்த பிரமதேவரே சப்தபதி நடந்த வேளையிற்றான் பார்வதி தேவியாரின் காற்பெருவிரலைக் கண்ணுற்றனர் என்பதிலிருந்து, மற்ற அவயவங்கள் வெளிப்படையாகத் தெரியாமல் மூடப்பட்டிருந்திருக்கவேண்டும் என்றும், வைதீக பிராமணர்கள்கூட மணப்பெண்ணின் முகம் முதலிய மற்ற அவயவங்களை ஏறிட்டுப்பார்ப்பது தவறு என்றும், வைதீகத் தொழில் செய்யும் பிராமணர்கள் மாசுமறுவற்ற மனத்தையுடையவர்களாக இருத்தல்வேண்டும் என்றும், ஒருக்கால் யாது காரணத்தாலாயினும் அவர்கள் தங்கள் மகா பரிசுத்தமான நிலையிலிருந்து வழுவ நேரிடின், அவர்கள் தாங்களாகவே அத்தொழிலினின்று விலகிக்கொள்ளல்வேண்டும் என்றும் நன்கு புலனாகின்றது.

அதன் மகிமையினால் தமக்கேற்பட்ட பாதகத்தையும் போக்கிக்கொண்டு, எஞ்சியகமண்டலதீர்த்தத்தை வைத்திருந்தனர்.

பிற்காலத்தில் விஷ்ணு பக்தர்களிற் சிறந்தவரான பிரகலாதாழ்வாரின் பௌத்திரனான மகாபலிச்சக்கரவர்த்தியானவன் தன்னுடைய தவவலிமையால் தேவேந்திராதி தேவர்களையும் யுத்தத்தில் ஜெயித்து, மூன்று உலகங்களிலும் தன்னை ஒறுப்பார் ஒருவருமில்லையென வெற்றி முரசறைந்து விளங்கினான். அவனை அடக்கவேண்டி, பரம கருணாநிதியாகிய மகாவிஷ்ணுவானவர், கசியபமகரிஷிக்குப் புத்திரனாகவந்து, வாமனரூபங்கொண்டு, மகாபலிச் சக்கரவர்த்தி நடத்திவந்த யாககுண்டத்திற்குச் சென்று, அவனிடம் தம் காலால் மூன்றடி மண்வேண்டினர். தன்னிடம்வந்து இரப்போர்க்கு இல்லையென்னாது, வேண்டுவார் வேண்டுவதைக்கொடுத்துவந்த பாரி வள்ளலையொத்த மகாபலியானவன், மாயத்தில் நிபுணரான திருமாலின் வஞ்சத்தை உணராது, அவர்கேட்டபடிக் கொடுப்பதாக வாக்களித்தனன். உடனே அம்மாயோன் வாமனரூபத்தை விட்டு, * திரிவிக்கிரம ரூபங்கொண்டு பூமியை ஓரடியாலும், ஆகாயத்தை மற்றோரடியாலும் அளந்து மூன்றாமடிக்கு இடமின்மையால், அவன் வேண்டிக்

* குறிப்பு:—ஓரடியால் மண்ணை அளந்து, மற்றோரடியால் ஆகாயத்தை அளந்து, மூன்றாவது அடிக்கு மாவலியிடம் மண்கேட்கும் பாவனையாய், ஓரடியைப் பூமியில் வைத்தும், ஓரடியை அம்பரத்திற் றூக்கியும் நிற்கும் திருக்கோலத்தோடு, சீகாழியைச் சேர்ந்ததும் தாடாளன்கோவில் என்று தற்காலத்தில் வழங்கப்படுவதும், திருமங்கை மன்னனால் மங்களாசாசனம் செய்யப்பெற்றதுமான திருக்காழிச் சீராம விண்ணகரம் என்னும் திவ்விய தேசத்தில், எம்பெருமான் கிழக்கு நோக்கிய திருமுக மண்டலத்தோடு சேவைசாதிக்கின்றதைச் சென்று தரிசித்து அவன் திருவருள் பெறலாம். பெருமாள்: தாடாளன்; திரிவிக்கிரமன். தாயார்: உலகநாயகி; மட்டவிழும் பூங்குழலி. புட்கலாவர்த்த விமானம். சக்கர தீர்த்தம். சங்கபுஷ்கரணி. சீகாழி சென்னையிலிருந்து மாயூரம்போகும் இருப்புப்பாதையிலுள்ள ஓர் ரெயில்வே ஸ்டேஷன்.

விழுப்புரமிருந்து காட்பாடிக்குப்போகும் இருப்புப்பாதையில் உள்ள திருக்கோவலூரிலும், இந்த திவ்விய திருக்கோலதரிசனம் பெறலாம். பெருமாள்: தெகளீசன்; ஆயனார்; திரிவிக்கிரமன். தாயார்: பூங்கோவல் நாச்சியார், பூகவல்லித் தாயார்: ஸ்ரீகரவிமானம், ஸ்ரீகர புஷ்கரணி. ஆழ்வார்கள் நால்வரால் மங்களாசாசனம்.

கொண்டபடி அவன் சிரசில் அடிவைத்து, அவனைப் பாதலத்தில் அழுத்திவிட, அவன் அங்குசென்று அரசுரிமை கொண்டுள்ளான் என்பது, "குறளாயணுகி, மூவடிமண்கொண்டு, நெடுகி, மூவுலகும் திறலானளந்து, மாவலியைச் சிறையிற்படுத்து வியந்தான்." என்னும் பாசுரத்தால் எளிதில் அறியக்கிடக்கின்றது.

அவ்வாறு மகாவிஷ்ணுவின் வலதுதிருப்பாதம் சுவர்க்கலோகத்தை அணுகியதைக் கண்ட பிரமதேவர், அதைத் தம் கமண்டலத்திலிருந்த பரமபவித்திரமான உதகத்தினால் பாதப்பிரட்சாளனம் செய்ய, அந்தத் திருப்பாத தீர்த்தத்தைப் பரமசிவனானவர் தம் சிரசில் தரித்துக்கொண்டனர் என்றும், அப்புனித கங்கையே இக்கோதாவரி கங்கையென்றும் சொல்லப்படுகின்றது.

இவ்வாறு கங்கையானவள் ஸ்ரீ சங்கரருடைய ஜடாமகுடத்தில் மறைந்திருந்ததைக்கண்டு "வன்மையுள்வன்மை மடவார்ப் பொறை." என்னும் தெய்வப்புலவர் திருவாக்கிற்கிணங்க, மனம் பொருத தாட்சாயணி தமக்கேற்பட்டிருக்கும் மனச்சங்கடத்தை, எவ்விதத்தாலும் அகற்றும்படி, தம் மூத்தகுமாரரும், யாவர்க்கு எத்தகைய துன்பம் நேரிடினும், அதை அகற்றிவைக்கக் கங்கணங் கட்டிக்கொண்டுப் பிறந்திருப்பவருமான * கஜானனக் கடவுளிடம் வேண்டிக்கொண்டனர்.

அக்காலத்தில் பூவுலகில் வானம்பெய்யாது, வளங்குறுகி, விளைவஃகி, ஓர் பெருங்கருப்பு ஏற்பட்டிருந்தது. ஆனால் பரமதபோநிதியாகிய கௌதம முனிவரை ஆசிரயித்திருந்த அதிதிகளுக்கு மட்டும், அவர் தம் தவவலிமையினால், காலையில் விதைத்த தானியத்தை நடுப்பகலுக்குள் முளைத்து, வளர்ந்து, கதிரீன்று, பழுத்து, உலரும்படிச்செய்து, அவற்றை அறுத்துத்தானியமாக்கிச் சமைத்துப்புசிக்கும்படிக் கொடுத்துக்கொண்டிருந்தனர்.

இஃதிற்றாக, மேற்சொல்லியவாறு விக்கினேசுவரர் தம் தாயின் மனக்குறையை நீக்கக் கருதியவராய், தம் தாயிடம் சென்று, தாம் வேதசாஸ்திர விற்பன்னரான ஓர் விப்பிரரூபந் தாங்கி கௌதம முனிவர் ஆசிரமத்திற் போய்த் தங்கியிருப்ப

---

* **குறிப்பு:—** கற்புடைய பெண்டீர் தமக்குப் பிறரால்நேரிடும் தீங்கினைத் தம் கொழுநரைக்கொண்டு தீர்த்துக்கொள்ளுதலும், தம் கணவரிடமே குறையேற்பட்டால், தம் புதல்வரைக்கொண்டு தீர்த்துக்கொள்ளுதலும் முறையாமென்று இச்சிறு சம்பவத்தினின்று வெளியாகின்றது.

தாகவும், தம் தாயின் சேடியருள் ஒருவளான ஜயா என்பவளை ஒரு பசு ரூபத்தோடு கௌதம முனிவர் ஆசிரமத்திற்கு அனுப்பி, அங்கு அதிதிகளுக்காகப் பயிராக்கப்பட்டுச் செழித்து வளரும் தானியப்பயிரை மேய்ந்தழிக்கும்படிச் செய்யவேண்டும் என்றும், அதைக்கண்ட கௌதமர் அப்பசுவை அப்பயிரினின்றும் அகற்ற ஓர் புல்லை எறியினும் அதே காரணமாக வைத்துக்கொண்டு அப்பசு அவ்வாசிரமத்திலேயே உயிர் நீத்தல் வேண்டும் என்றும், சொல்லித்திட்டஞ்செய்துவிட்டுத்தாம் கணேச பண்டிதர் என்னும் திருநாமத்தோடு கௌதமர் ஆசிரமத்திற்குச் சென்று, அங்கிருந்த அதிதிகள் யாவரினும் மேலான வேத சாஸ்திர நிபுணராய் விளங்கிவந்தார்.

* அக்காலத்தில் முன்னமே பேசித்தீர்மானித்திருந்தபடி

---

* குறிப்பு:— கௌதம முனிவர் தம்மை அண்டிவந்த அதிதிகளை ஆதரிப்பதன் பொருட்டு நாடோறும் அதிகாலையில் ஓர் பிடிதானியத்தை மணல் மேட்டில் விதைத்துச் சென்று, தம் நித்திய கர்மானுஷ்டானாதிகளை முடித்துக்கொண்டு வந்து பார்க்குங்கால், அவையெல்லாம் முளைத்துச் செழித்துப்பயிராகிக் கதிரீன்று முதிர்ந்து பழுத்திருப்பதைக்கண்டு, அவற்றை அறுத்துத்தானியமாக்கிச் சமைத்துப்புசிக்கச்செய்தனர் என்றும், அவர்கள் அதனால் 12 வருஷங்கள் சுகமாகக் காலங்கழித்தார்கள் என்றும், அதன் பின்பு தேசம் க்ஷாமம் நீங்கி க்ஷேமமடைந்ததைக் கண்ட கௌதமர் அவ்வதிதிகளை நோக்கி, "இனி நீங்கள் உங்கள் வாசஸ்தலத்திற்குச் செல்லலாம்." எனக்கட்டளையிட, அவர்கள் கௌதமரின் பிரிவாற்றுமையினாலோ, அல்லது கௌதமரையும் தங்களோடு அழைத்துச் சென்றால் அங்கும் தாங்கள் வருந்தாது உயிர்வாழலாம் என்ற சுயநலங் கருதியோ, கௌதமரையும் தங்களோடு உடன்வரும்படி வேண்டினார்கள் என்றும், அவர் அதற்கிணங்காமையால், "மறவற்க மாசற்றார் கேண்மை, துறவற்க துன்பத்துட்டுப்பாயார் நட்பு." என்னும்பொய்யா மொழியையும் அறவே மறந்து, அவர்கள் மாயப்பசு வொன்றை நிருமித்து, அப்பயிரை அழிக்கச் செய்தார்கள் என்றும், அதைக்கண்ட கௌதமர் அதைத் தம் கையிலிருந்த தருப்பைப்புல்லால் ஓச்ச, அது அக்கணமே அப்பயிரின் நடுவிலேயே வீழ்ந்து இறந்ததென்றும், அதனால் கௌதமர் கோஹத்தி செய்தவரானார் என்றும், அவரோடு கூடுதலும் உறவாடுதலும் தகாதகாரியமெனக் கூறிச்சென்றார்கள் என்றும், சொல்லுவாருமுளர். இதையே உலக வழக்கத்தில் "கௌதமர் பசு நியாயம்." எனச் சொல்லிக்கொள்ளுகின்றனர் என்று தெரிகிறது.

ஜயா என்னும் உமாதேவியின்தோழியானவள் ஓர் மாயப்பசுவின் உருவமெடுத்து வந்து கௌதமமுனிவரின் ஆசிரமத்திற்கருகில் விளைந்திருந்த பயிரை மேய்ந்தழிக்கலானாள். அதைக்கண்ணுற்ற கௌதமர், அப்பசுவை அப்பயிரினின்றும் ஒட்ட எண்ணியவராய் ஓர் சிறு தருப்பைப்புல்லை எடுத்து எறிந்தனர். முன்னமே செய்திருந்த சங்கேதத்தின் பிரகாரம், பசுரூபங்கொண்டிருந்த ஜயாவானவள் அக்கணமே பூமியில் விழுந்து உயிர் நீத்தனள். அதைக்கண்டு அங்குக் கூடியிருந்த பிராமணர்கள் எல்லோரும், கௌதமரிஷி கோஹத்திசெய்துவிட்டனர் என்றும், அவர் அந்நாள் முதல் அதிதியாராதனை செய்வதற்குரியர் அல்லர் என்றும் ஆரவாரிக்கத் தொடங்கினர். அதைக்கண்ட கௌதமரும் மனமுடைந்து வருந்தித் தாம் அம் மகாபாதகத்தினின்றும் மீண்டு கடைத்தேற வழியாதென்று ஆராயலாயினர். அச்சமயத்தில் அங்கு கணேசபண்டிதர் என்னும் விப்பிரோத்தமர் வேடத்தோடிருந்த ஐங்கரக்கடவுள், சம்புவின்சடையிற் கரந்திருக்கும் கோதாவரி கங்கையை அவரிடம் யாசித்துப் பூதலத்திற் கொண்டுவந்தால் கௌதமருடைய பாதகம் நிரசனமாவதும் தவிர, இந்நிலவுலகிலுள்ள எல்லாஜீவகோடிகளும் அதன் ஸ்நானத்தால் பாபரகிதர்களாகி உய்வதற்கிடமுண்டு எனப் போதிக்க, கௌதமரும் அதைக்கேட்டு மனமகிழ்ந்து, பார்வதி மணாளனை நோக்கிக் கடுந்தவம் புரிந்து, அவரிடமிருந்து கோதாவரியை இரந்து பெற்றனர். ஸ்ரீ சங்கரருடைய ஜடாமகுடத்தினின்றிழிந்த கோதாவரியானவள் பிரமாத்திரி என்னும் பர்வதத்தினின்று பிரவகித்து கௌதமராசிரமத்தினிடையே போந்தனள். நிரஞ்சனிதேவியின் நித்தியக்குறையும் நீங்கிற்று.

கௌதம முனிவரின் முயற்சியால் பிருதிவிலோகத்தில் தோன்றியவளாதலின் கௌதம கங்கையெனப் பேர்பெற்றனள் என்றும், கங்கையென்னும் பதம், இமயமலையினின்றிழிந்து வரும் பகீரதகங்கைக்கும், கோதாவரிகங்கைக்கும் பொதுவாகிய பெயர் என்றும் தெரிகின்றது.

आद्यासा गौतमी गँगा द्वितीया जान्हवी स्मृता ॥

என்னும் சுலோகத்தினின்று முதற்பிறந்தவள் கௌதமி என்றும், இரண்டாவது ஜனித்தவள் ஜான்ஹவி என்றும் அறியக்

கிடக்கின்றது. தவிர, பிரமதேவருடைய திருக்கரங்களாற் பூஜிக்கப்பெற்றும், கங்கா ஜனகனுடைய சரணகமலத் திருப்பாத தீர்த்தமாய் விளங்கியும், கங்காதரனுடைய ஜடாமகுடமாகிய மகோன்னத ஸ்தானத்தில் உறைந்தும், வந்த காரணம்பற்றி கௌதமிக்கு விருத்தகங்கை என்ற நாமம் கிடைத்திருக்கின்றதெனச் சொல்லுவாருமுளர்.

कृतेलक्षद्वयेऽतीते मान्धातरि शके सति ।
कूर्मेचैवावतारेच सिंहस्थेच बृहस्पतौ ॥

என்னும் சுலோகத்தினின்று கிருதயுகத்தின் மத்தியில் இரண்டு லட்சம் வருஷங்கள் கழிந்தபின்னர், இக்ஷ்வாகுவம்சத்தில், இரண்டாம் யுவநாசவனுக்குப் புத்திரனாய்ப் பிறந்து, எக்காலத்தும் பொன்றாப் புகழ்பெற்று அரசாண்டுவந்த **மாந்தாதா** என்னும் சக்கரவர்த்தியின் காலத்தில், மகாவிஷ்ணு கூர்மாவதாரமெடுத்த சமயத்தில், குரு சிம்மராசிக்கேகினபோது, மாகசுத்த தசமியன்று நடுப்பகலில் இந்நிலவுலக மாந்தர்களை உத்தாரணம் செய்யும் பொருட்டு கௌதமாசிரமத்தில் பரமபவித்திரையான கௌதமியென்பாள் உற்பவித்தனள் என்று தெரிகின்றது.

## கோதாவிரியின் மகாத்மியம்.

அலைகளாற் சூழப்பட்ட அகண்டபூமியாகிய ஜம்புத்தீபம் முழுவதிலும் உள்ள எல்லா ஜீவகோடிகளும், தாங்கள் செய்திருந்த மகாபாதகங்களினின்றும் விடுபட்டு பிறவிக்கடலைக் கடந்து முத்தியங்கரையைச் சேர்வதற்கு முக்கிய சாதனமான இந்நதியானது, விஷ்ணு, பிரமா, மகேசுவரன் ஆகிய மும்மூர்த்திகளிடத்தும், முறையே பிறந்து வளர்ந்து ஆதரிக்கப்பட்டதாதலின், வைஷ்ணவி, ப்ராம்ஹி (Bramhi), மகேசுவரி, கங்கா, கௌதமி, கோதாவரி, நந்தா, சுநந்தா என்னும் பலதிருநாமங்களை உடைத்தாயிருக்கின்றது. இத்தகைய அதி மேம்பாடான மகிமையுடையதாய் இருத்தல்பற்றி இந்நிலவுலகில் உள்ள எல்லாத்தீர்த்தங்களிலும் இது மேன்மையானதாகக் கருதப்படுகின்றது. கேவலம் நினைத்தமாத்திரத்தினால் பஞ்சமகாபாதகங்களையும் பஞ்சிற்பட்ட தீயைப்போல் பஸ்மமாக்கக்கூடியது.

க்ஷத்திரிய குலத்திலுதித்த பகீரத சக்கரவர்த்தியால் தன் மூதாதைகள் முத்தியடைவதை உத்தேசித்து, இந்நிலவுலகிற்குக்

கொண்டுவந்த பகீரத கங்கையானது, பிரமகுல சிரேஷ்டரான கௌதமமுனிவரால் உலகமுழுவதும் உய்தற்பொருட்டு பரோபகார எண்ணத்துடன் கொண்டுவந்த கௌதமிகங்கைக்கு எவ்வகையானும் ஈடாகாது என்பது சொல்லாமலே விளங்கும்.

மேலும் தேவகுருவான பிரகஸ்பதியானவர் சிம்மராசியிலிருக்கும்போது இப் பூமண்டலத்திலுள்ள சர்வ தீர்த்தங்களும், நதநதிகளும், சாகர மகாசாகரங்களும், இந்திராதி தேவர்களனைவரும், தங்கள் தங்கள் நாயகிகளோடும், கணங்களோடும் இந்நதியில் வந்து உறைவதாகக் கருதப்படுகிறபடியால்,

षष्टिर्वर्ष सहस्राणि भागिरथ्य वगाहनं ।
सकृद् गोदावरीस्नानं सिंहास्थेच बृहस्पतौ ॥

என்னும் சுலோகத்தின்படி, பாகீரதியில் அறுபதினாயிர வருஷகாலம் ஸ்நானம்செய்வதும், பிரகஸ்பதி சிம்மராசியிலிருக்கும் தருணத்தில் கோதாவரியில் ஒருமுறை ஸ்நானம்செய்வதும் ஒரேபலனைத் தருகின்றதெனத் தெரிகின்றது.

சக்கரவர்த்தித் திருமகனார், இளையபெருமாளோடும், தம் தர்மபத்தினியான சீதாபிராட்டியாரோடும், தம் தந்தையின் ஆணையின்படி நாட்டைவிட்டுப் பதினான்கு வருஷங்கள் காட்டில் வசிக்க நேர்ந்தகாலத்தில், இப்பரதகண்டத்திலுள்ள எல்லா ஸ்தலங்களையும்விட இது மேன்மையானதென்றும், தம் வாசத்திற்குரியதென்றும் எக்காலத்தில் கருதினரோ, அக்காலத்திலேயே இந்தப் புண்ணிய க்ஷேத்திரத்தின் மகா உத்கிருஷ்டமானநிலை, மறுக்கப்படாத தாரக முத்திரையோடு உலகத்தினர்க்கு வெளியிடப்பட்டதென்று கொள்ளல்வேண்டுமன்றோ!

மகாவிஷ்ணுவின் பரிபூரணாவதாரமான கோதண்டராமப்பிரபுவும், அனாதிசித்த உபஜோதிலிங்கங்களுள் முதன்மையான ஸ்ரீகபாலேசுவரரும் இத்தலத்தைத் தங்கள் உறைவிடமாகக் கொண்ட காரணம்பற்றி, இது பரமபவித்திரமான ஹரிஹராத்மக க்ஷேத்திரமாகக் கருதப்படுகின்றது.

தேவிபாகவதத்தில் இருபத்தோராவது அத்தியாயத்தில்,

काशी पुरीच केदारो महाकालोऽथ नासिकं ।
त्र्यंबकंच महाक्षेत्रं पंचदीपा इमे भुवि ॥

என்று சொல்லியிருக்கிறபடி, காசி, திருக்கோதாரம், உஜ்ஜயினி, நாசிக், த்ரயம்பகேசுவரம், ஆகிய இவ்வைந்து க்ஷேத்திரங்களும் சித்தியென்னும் ஸ்தானத்திக்குப் போகவழிகாட்டும் பஞ்ச தீபங்களாகக் கருதப்படுவதைத் தெரிந்து, மகாராஷ்டிர மன்னர் குலதிலகமாகிய ஆதிசிவாஜி மகாராஜாவின் குருநாதராகிய ஸ்ரீ ஸமர்த்த * இராமதாஸ்சுவாமிகள் இத்தலத்தில் தங்கியிருந்து, காயத்திரிபுரஸ்சரணம் செய்து சித்திபெற்றனரெனத் தெரிகின்றது. தவிர மஹாசாதுக்களான ரகுநாத்பட்ஜி (Raghunath Bhatjee), கேசவ சுவாமிகள் (Keshavaswamijee), அஜ்கர்பாபா (Ajgar Baba), ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவிராஜகாசாரிய சச்சிதானந்தசுவாமிகள், பிரமானந்த சுவாமிகள், தட்சிணத்தில் இருக்கும் சிருங்கேரி மடாதிபதிகளான சங்கராசாரியசுவாமிகளில் இருவர் இத்தலத்தில் அடங்கியுள்ளார்கள். சாது யசுவந்தராவ் மகராஜ் (Jaswanth Row Mah raj) என்னும் பெரியாரும் இத்தலத்திலேயே தம்வாழ்நாளைக் கழித்து உயிர்நீத்தனர். ஆகவே இத்தலங்களிரண்டும் பரமபூஜனைக் கருகமுள்ளவையாகவும், மகா புண்ணிய தாயகமானவையாகவும், சிராத்த, தானுதிகர்மங்களுக்கு அதி சிரேயஸ்கரமானவையாகவும் இருக்கின்றன.

कालिंदि पश्चिमा पुराया गंगाचोत्तर वाहिनी ।
दुर्लभा दक्षिणा गोदा पयोष्णी पूर्व वाहिनी ॥
दक्षिणाभि मुखा गोदा तत्र दानं सुदुर्लभं ।
रेवातीरे तपः कुर्यान् मरणं जान्हवी तटे ।
दानं दद्यात् कुरुक्षेत्रे तत् त्रयं गौतमी तटे ॥

என்னும் சுலோகத்தின்படி காளிந்தி யென்னும் யமுனையானது மேற்குநோக்கி ஓடுவதும், கங்கை வாரணசி க்ஷேத்திரத்தில் ஓடுவதுபோல் வடக்குமுகமாகப் போவதும், இப்புண்ணிய தலத்திற்போவதுபோல் கோதாவரி தெற்குமுகமாக ஓடுவதும், †பயோஷ்ணி நதியானது கிழக்குநோக்கி ஓடுவதும், அதிபுண்ணிய

* குறிப்பு :—இந்த சுவாமிகளுடைய சரிதம் இப்புத்தகம் மூதற் பாகம் 185 முதல் 190 வரை பக்கங்களிற் காணலாம்.

† குறிப்பு :—பயோஷ்ணி என்பது விதர்ப்பதேசத்தில் பிரவகித்து வரதநதியிற்கலக்கும் ஓர் நதி. வரதநதி என்பது அதே விதர்ப்பதேசத்தில் உற்பவித்து கோதாவரியில் கலக்கும் ஓர்நதி.

தாயகமானவையாம். நர்மதாதீரத்தில் தவம்புரிவதும், ஜான்ஹவி தீரத்தில் இறப்பதும், குருக்ஷேத்திரத்தில் தானதருமங்கள் செய்வதும், உத்தமமென்று கருதப்படும். ஆனால் கோதாவரி தீரமோ மேற்சொல்லிய மூன்று கர்மங்களுக்கும் அதி உத்கிருஷ்டமானதென முறையிடப்பட்டிருக்கின்றது.

## நாசிக்பட்டினத்தின் புராண வரலாறு.

இப்புண்ணிய க்ஷேத்திரத்தில் ஒவ்வோர் யுகத்திலும் ஒவ்வொரு விசேஷம் நடந்து, அதன் காரணத்தாலுண்டான வேறு வேறு பேருடன் இது சதுர்யுகங்களிலும் மிகப்பிரசித்தியடைந்த பரம பவித்திர ஸ்தானமாக இருந்துவந்ததெனத்தெரிகிறது. கிருதயுகத்தில் கௌதம முனிவருடைய தவவலிமையினால் இந்தபரிசுத்தமான பிரதேசத்தில் கோதாவரி விராசமானமாயினளென்னும் காரணம்பற்றி இதற்கு **கோதாக்ஷேத்திரம்** என்னும் பேரும், அதன்பிறகு பரமசிவனும், மகாவிஷ்ணுவும் இந்த க்ஷேத்திரத்தைத் தங்கள் உறைவிடமாகக் கொண்டிருந்த காரணம்பற்றி இதற்கு **ஹரிஹர க்ஷேத்திரம்** என்னும் பேரும், திரேதாயுகத்தில் மகாவிஷ்ணுவின் தசாவாதாரங்களுள் பரிபூரணவதார புருஷோத்தமனான இராமச்சந்திர பிரபுவானவர் தம் நாட்டைவிட்டுக் காட்டில் உறைய நேர்ந்தகாலத்தில், பஞ்சவடியைத் தம் வாசஸ்தானமாகக் கொண்டு, கோதாவரி தீரத்தில் சிராத்த தானாதி கர்மங்களைச் செய்து, தம்முடைய அருமைப்பிதா தசரதசக்கரவர்த்தியுள்பட தம்முடைய எல்லாப் பிதுர்கணங்களையும் உத்தாரணம் செய்த காரணம்பற்றி இதற்கு **இராமக்ஷேத்திரம்** என்னும் பேரும், அதேயுகத்தில் பிரமதேவரானவர் பத்மதீர்த்த தீரத்தில் பத்மாசனம்போட்டு தவம்புரிந்த காரணம்பற்றி இதற்கு **பத்மநகரம்** என்னும் பேரும், அதன் பிறகு விசிரவசுவின் புத்திரர்களான கரன், தூஷணன், திரிசிரன் என்னும் கொடிய அரக்கர்கள் இத்தலத்தில் வாசஞ்செய்துகொண்டு, அத்தலவாசிகளுக்கும் அங்குறைந்த முனிவர்களுக்கும் இருடிகளுக்கும் கண்டகர்களாக இருந்து வந்த காரணம்பற்றி இதற்கு **திரிகண்டகம்** என்னும் பேரும், இராமபிரான் அவ்வரக்கர்களுக்குக் கடைகணைத் தோன்றி அவர்களை அழித்து அங்கிருந்தோர்க்கு அபயமளித்து

* குறிப்பு :—ரேவா என்பது நர்மதை நதி.

நிர்ப்பயமாய் வாழும்படி செய்தகாரணம்பற்றி இதற்கு ஜனஸ்தானம் என்னும் பேரும் உண்டாயினவெனத் தெரிகின்றது.

விடியல்காண்டலி னீண்டுதெ னுயிர்கண்ட வெய்யாள்
படியிலாண் மருங்குள் ளவெனை யவன்பாரான்,
கடிதினேடி னெனெடுத் தொல்லைக்கரந் தவள்காதல்
வடிவினுனுடன் வாழ்வதே வாழ்வென மதியா.

வந்துநோக்கினள் வள்ளல்போ யொருமணித் தடத்தான்
சந்திநோக்கின னிருந்தது கண்டனள் தம்பி
இந்துநோக்கிய நுதலியைக் காத்தய லிருண்ட
கந்தநோக்கிய சோலையி லிருந்தது காணாள்.

தனியிருந்தனள் சமைந்ததென் சிந்தனை தாழ்வுற்
றினியிருந்தெனக் கெண்ணுவ தில்லென வெண்ணாத்
துனியிருந்தவன் மனத்தின டோகையைத் தொடர்ந்தாள்
கனியிரும் பொழில்காத்த யலிருந்தவன் கண்டான்.

நில்லடீஇயெனக் கடுகினன் பெண்ணென நினைந்தான்
வில்லெடாதவள் வயங்கெரி யாமென விரிந்த
சில்லலோதியைச் செங்கையிற் றிருகுறப் பற்றி
ஒல்வயிற்றுதைத் தொளிகிளர் சுற்றுவா ளுருவி.

ஊக்கித்தாங்கி விண்படர் வெம்மென் றுருத் தெழுவாளை
நூக்கிநொய்தினின் வெய்திழை யேலென றுவலா
மூக்குங்காதும் வெம்முரண் முலைக்கண்களு முறையால்
போக்கிப்போக்கிய சினத்தொடும் புரிகுழல் விட்டான்.

அக்கணத்தவள் வாய்திறந் தரற்றிய வமலை
திக்கனைத்தினுஞ் சென்றது தேவர்தஞ் செவியும்
புக்கதுற்றது புகல்வதென் மூக்கெனும் புழையூ
டுக்கசோரியி னீரமுற் றுருகிய துலகம்.

கொலைதுமித்துயர் கொடுங்கதிர் வாளினக் கொடியாள்
முலைதுமித்துயர் மூக்கினை நீக்கிய மூத்தம்
மலைதுமித்தென விராவணன் மணியுடை மகுடத்
தலைதுமித்தற்கு நாட்கொண்ட தொத்ததோர் தன்மை.

(கம்பராமாயணம் சூர்ப்பணகைப்படலம்)

மேற்கண்ட செய்யுட்களில் கம்பநாட்டாழ்வார் வெகு அழகாக வரைந்துள்ளபடி, இளையபெருமாளான இலட்சுமண சுவாமியானவர் இலங்கை வேந்தனான இராவணனுடைய இளைய சகோதரி

யான சூர்ப்பணகை யென்பாளின் நாசிகையைத் தமது வாளால் அறுத்தவிடமாதலால் இதற்கு * நாசிக் என்னும் பேருண்டாயிற்று. இறுதியில், தொண்டர் அருள்விரித்த சேக்கிழாரான்ற தமிழ்ப்பாடற் றிருவிருத்தச் செய்யுள்களுள் அடியிற்கண்டவற்றில்

காடெல்லாங் கழைக்கரும்பு காவெல்லாங் குழைக்கரும்பு
மாடெல்லாங் கருங்குவளை வயலெல்லா நெருங்குவளை
கோடெல்லா மடவனனங் குளமெல்லாங் கடலன்ன
நாடெல்லா நீர்நாடு தனையொவ்வா நலமெல்லாம்.

மாமதின் மஞ்சு சூழுமாளிகை நிரைவிண் சூழுந்
தூமணி வாயில் சூழுஞ் சோலையில் வாசஞ் சூழுந்
தேமல ரளகஞ் சூழுஞ் சிலமதி தெருவிற் சூழுந்
தாமகிழ்ந் தமரர் சூழுஞ் சதமக னகரந் தாழ.

கடகரி துறையி லாடுங் களிமயில் புறவி லாடு
மடர்மணி யரங்கி லாடு மரிவையர் குழல்வண் டாடும்
படரொளி மறுகி லாடும் பயில்கொடி கதிர்மீ தாடுந்
தடநெடும் புவிகொண் டாடுந் தனிநகர் வளமை யீதால்.

மிக அழகாக வருணித்துள்ளபடி, இந்நகரின் சிறந்ததோற்றத்தையும், அதிரமணியமான காட்சியையும், இந்நகரில் ஓயாது வீசும் ஆரோக்கியமான மந்தமாருதத்தையும் பார்த்த டில்லி சக்கரவர்த்தியாகிய அவுரங்கசீப் பாதுஷாவானவர் இதற்கு குலசனுபாத் என்னும் அழகிய திருநாமத்தைச் சூட்டினார் என்று தெரிகிறது.

## தீர்த்தயாத்திரையின் பலன்.

पुत्र द्रव्यादि संत्यज्य तीर्थं व्रजति यो नरः ।
ब्रह्माद्या देवता तस्य तुष्टिं पुष्टिं ददातिहि ॥
यत्र स्नानं जपो होमः श्राद्ध दानादिकं कृतं ।
एकैकशोमुनि श्रेष्ठाः पुनात्यासप्तमं कुलं ॥
अज्ञानेनापि यस्येह तीर्थयात्रा दिकंभवेत् ।
सर्वकामसमृद्धः स्यात् स्वर्गे लोके महीयते ॥

என்று கருட கூர்ம மத்ஸ்யாதி புராணங்களில் முறையிட்டுள்ள

* குறிப்பு :— நம்மனைவருக்கும் ஏகமாதாவான பாரதமாதாவின் நாசிகை இருக்கக்கூடியவிடத்தில் இத்தலம் அமைந்திருப்பதால், இதற்கு நாசிக் என்னும் பேர் வந்திருப்பதாகச் சொல்லுவாருமுளர்.

படி, யாவன் ஒருவன் தன்புத்திர திரவியாதிகளைத் தியஜித்து விட்டுத் தீர்த்தயாத்திரை செய்கின்றானோ, அவனுக்கு, பிரமாதி தேவர்கள் அவனுடைய ஸர்வாபீஷ்டங்களையும் பூர்த்திசெய்து வைக்கின்றனர் என்றும், யாவன் ஒருவன் ஓர் புண்ணியதீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, அதன் தீரத்தில் ஜபம், ஹோமம், சிராத்த தானாதிகளைச் செய்கின்றானோ அவனை அக்கிரியைகளுள் ஒவ்வொன்றும் அவனுடைய ஏழுதலைமுறைகள்வரையில் புனிதனாக்குகின்றதென்றும், யாவன் ஒருவனுக்குத் தனக்கே தெரியாமலேனும், அகஸ்மாத்தாகவேனும் தீர்த்தயாத்திரை கிடைக்கின்றதோ அவனுக்கு சுவர்க்கலோகம் தானாகவே கிடைக்கின்றதென்றும் தெரியக் கிடக்கின்றது.

## கோதாவரியின் ஸ்நானபலன்.

पंचानामपि भूतानामापः श्रेष्टतमामताः ।
तत्रापितीर्थे भूतास्तुतस्मादापः पराःस्मृताः ॥
तासां भागीरथी श्रेष्ठा तस्याया गौतमत्वया ॥
आनीतासा तदा गंगा अस्यानान्यच्छु भावहं ॥

என்று பிரமபுராணத்தில் சொல்லியிருக்கின்றபடி பஞ்ச மகா பூதங்களில் அப்பு சிரேஷ்டமானதென்றும், அதிலும் புண்ணிய தீர்த்தமாக உபயோகப்படுவது சிறந்ததென்றும், அவ்வித புண்ணிய தீர்த்தங்களிலும் கங்கை விசேஷமானதென்றும், அக்கங்கையினும் கௌதமி நதியானது அதிமேம்பாடான மகிமையை உடையதென்றும் வெளியாகின்றது. இப்புவியில் இதைவிட சுபதாயகமான தீர்த்தம் வேறில்லையென்பது திண்ணம். இப்புனித நதிசெல்லும் பூமியானது இப்பரத கண்டத்திற் பரம பவித்திரமானதென்று கருதப்படுகின்றது.

சிம்மராசியில் குரு இருக்கும் ஒரு வருஷம் முழுவதும் கோதாவரி ஸ்நானத்திற்கு எடுத்தது. அச்சமயத்தில் கோதாவரியில் செய்யும் ஒரு ஸ்நானத்தினால் அஸ்வமேதயாகம் செய்த பலனும், இலட்சம் கோதானங்கள் செய்த பலனும் கிடைக்கும் என்பது புராணப் பிரசித்தம்.

சுத்த வெள்ளியினாற்செய்த சிம்மத்தின்மேல், தங்கத்தினாற் செய்த பிரஹஸ்பதி பகவானை ஆரோகணிப்பித்து, அதன் பக்கத்தில்

வெள்ளியினுற் செய்யப்பட்ட ஓர் கோதாவரி மூர்த்தியையும் வைத்துப் பூசித்து வந்தால், சிம்மகுருவின் காலத்தில் கோதாவரியில் ஸ்நானம் செய்த பலன் கிடைக்கிறதென்று சொல்லப்படுகின்றது.

## யாத்திரை செய்யும் முறை.

சாதாரணமாக கோதாவரி தீரத்திலிருந்து 2 மைல் வரையில் கோதாவரியின் சக்தி வியாபிக்கின்றது. ஆகவே அந்த எல்லைக்குள் எங்கிருந்தாவது ஜபம், தவம், ஹோமம் முதலியவைகளைச் செய்யலாம் என்ற முறை இருக்கின்றது. கோதாவரி தீர்த்தத்தின் தரிசனம் செய்தவுடன் யாத்ரீகர்கள் முண்டனம் செய்து கொள்ளல்வேண்டும். யாவன் ஒருவன் கோதாவரி தீரம் வந்து முண்டனம் செய்துகொள்ளவில்லையோ, அவன் தீர்த்தத் துரோகியாவதும் தவிர, தன்னுடைய குடும்பசகிதமாக ரௌரவாதி நரகத்தில் கற்பகாலம்வரை இருந்து வருந்தவேண்டி நேரிடும் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால் ஒரு முறை தீர்த்த யாத்திரை செய்து 10 மாதம் கழித்து மறுபடியும் அதே தீர்த்த ஸ்நானத்திற்கு வருவோர் மீண்டும் முண்டனுதி கர்மங்களைச் செய்து தீரவேண்டும். 10 மாதத்திற்குள் யாத்திரைசெய்தால் ஷை கர்மங்களைச் செய்யவேண்டிய அவசியமில்லையெனத் தெரிகிறது.

ஆகவே நாசிக் பஞ்சவடிக்குத் தீர்த்த யாத்திரைக்காக வருபவர்கள், கோதாவரியை தரிசித்த மாத்திரத்தில் தீர்த்த பூஜை செய்து,முண்டனம் சிராத்ததானுதி கர்மங்களைமுடித்துக்கொண்டு, பஞ்சவடியிலுள்ள ஸ்ரீராமர் சந்நிதிக்குச் சென்று அவர் தரிசனம் பெறல்வேண்டும். பிறகு திரயம்பகம் சென்று குசாவர்த்தத்தில் சிராத்ததானுதி கருமங்களை முடித்துக்கொண்டு, திரயம்பகேஸ்வரரின் தரிசனம் பெறல்வேண்டும். திரயம்பகேஸ்வரரின் தரிசனம் பெற்ற பிறகு, மீண்டும் பஞ்சவடிவந்து ஸ்ரீரகுவீரன் சந்நிதிக்குச் செல்லல்வேண்டும். இந்த முறையை அனுஷ்டிக்காது யாராவது யாத்திரை செய்தால், அவருக்கு யாத்திரையின் பலன் கிட்டுவதில்லை.

पूर्वं गंगाततो विष्णुः स्थितः किं दुर्लभं भवेत् ।
आजन्ममरणा द्वासाद्वाराणस्यां तुयत् फलं ॥
तत्फलं याममात्रेण पंचवट्यां निवासिनः ।
पूर्वं रामं ततो देवं त्र्यंबकं लोकशंकरम् ॥
गंगाद्वारंचतद्दृष्ट्वाको वा पापैर्न मुच्यते ॥

என்று சொல்லியுள்ளபடி எத்தலத்தில் முதலில் கங்கையும், பிறகு மகாவிஷ்ணுவும் வந்து உறைகின்றனரோ, அத்தகைய மகிமைவாய்ந்த ஸ்தலம் உலகத்தில் கிடைப்பதருமை. அந்த விசேஷமான பெருமை வாய்ந்த இத்தலத்தில் ஒரு ஜாம நேரம் வசித்தால் வாரணாசியில் பிறந்தது முதல் இறக்கும்வரை வசித்த பலன் கிட்டும் என்று தெரிகின்றது. முதலில் ஸ்ரீராம தரிசனம்; பிறகு கங்காத்துவாரத்தின் தரிசனம்; இம் முறைப்படி தரிசித்தவர்கள் எத்தகைய மகாபாதகத்தினின்றும் விமுக்தமாவார்கள் என்பது திண்ணம்.

### நாசிக் பஞ்சவடியிலுள்ள தீர்த்தங்கள்.

நாசிக் பட்டினத்திற்கு மேற்கில் 6-மைல் தூரத்திலுள்ள **கோவர்த்தனம், கங்காப்பூர்** முதல், பஞ்சவடிக்கு அக்கினி திசையில் 1½-மைல் தூரத்தில் உள்ள தபோவனம்வரை கோதாவரி நதியின் மத்தியிலும், அதன் தீரத்திலும், 24 தீர்த்தங்கள் இருக்கின்றன. அவைகளுள் கங்காப்பூருக்கும் நாசிக் பட்டினத்திற்கும் இடையில் 11-ம் நாசிக் பட்டினத்தில் உள்ள சுந்தரநாராயணப் பெருமாள் கோவிலுக்கும் முக்தேஸ்வரர் கோவிலுக்கும் இடையில் 10-ம் அதற்குக் கீழ்புறத்தில் 3-ம் இருக்கின்றன.

(1) **கோவர்த்தன தீர்த்தம்**:—இந்தத் தீர்த்தம் கங்காப்பூருக்கு அருகில் இருக்கின்றது. இத்தீர்த்தக்கரையில் ஒரு கோதானம் செய்தால் மற்ற இடங்களில் ஆயிரம் கோதானம் செய்யும் பலனைத்தருகின்றது என்று சொல்லப்படுகின்றது. இங்கு பூர்வத்தில் ஜாபாலி என்னும் ஓர் பிராமணன் இருந்ததாகவும், அவன் வேளாண்மைத்தொழில் செய்து வந்தமைபற்றி அவனிடத்தில் அனேகம் பசுக்களும் எருதுகளும் இருந்ததாகவும், அவன் அவ்வாயில்லாப் பிராணிகளுக்குக் கொடுந்துன்பமிழைத்துவந்த காரணத்தால், அவைகள் அவனிடமிருந்து நீங்கிப் போக யோசித்துக் காமதேனுவினிடம் சென்று தங்கள் குறைகளைச் சொல்லிக்கொண்டனவென்றும், காமதேனுவானது நந்திகேசுவரரிடம் அழைத்துச் சென்றதாகவும், அவர் சிவபிரானிடம் அழைத்துச் சென்று முறையிட்டதாகவும், சிவபிரான் பூவுலகில் உள்ள எல்லாப் பசுக்களையும் எருதுகளையும் கைலாயத்திற்கு வந்து விடும்படி கட்டளையிட்டதாகவும், பூமியில் கோக்களின்றி

யாகயஞ்ஞாதிகள் நடைபெறுது நின்றுவிட்டனவென்றும், அத னல் இடுக்கணடைந்த முனிவர்கள், தேவர்கள் எல்லோரும் பிரம தேவரிடம் சென்று முறையிட, அவர் அவர்களுடன் முதலில் விஷ்ணுவினிடமும், பிறகு பரமசிவனிடமும் சென்று, தேவர் களின் குறையைத் தெரிவித்தனர் என்றும், அவர்களைச் சிவ பிரான் நந்தியிடம் அனுப்பினதாகவும், நந்தியெம்பெருமான் கருணைகூர்ந்து கைலாயத்தில் இன்புற்று வாழ்ந்திருந்த எல்லாப் பசுக்களையும் எருதுகளையும் இத்தலத்திற்கு அனுப்பியதாகவும் புராணவாயிலாய்த் தெரிகின்றது.

இம்மாதிரியாகவே மகாவிஷ்ணுவானவர் கிருஷ்ணவதாரத் தில் பசு நிரைகளுக்கு இந்திரனல் உண்டான துன்பத்தினின் றும் காப்பதற்காகத் தம் சுண்டுவிரலால் தூக்கிப்பிடித்த குன் றிற்கும் * கோவர்த்தனகிரியென்னும் பெயர் வந்திருப்பதை ஒப்பிடுக. இங்கிருக்கும் சிவாலயத்திற் சென்று தரிசிப்பது மற்ற இடங்களில் சுவர்ணத்தினுற்செய்த ஓர் பர்வதத்தை தானம் செய்த பலனை கொடுக்கின்றது என்று சொல்லப்படுகின்றது.

(2) பித்ருதீர்த்தம்:—இந்தத் தீர்த்தம் கோவர்த்தன தீர்த்தத் தின் தெற்கில் இருக்கின்றது. இதில் ஸ்நானம் செய்து பிதுர்க் கடன்களை முடிப்போர் சுவர்க்கத்தில் வசிக்க இடம் ஒதுக்கி வைக் கப்படும் என்று கருதப்படுகின்றது.

(3) காலவ (Galava) தீர்த்தம்:—இது பித்ரு தீர்த்தத்தின் அருகில் இருக்கின்றது. சர்வ பாபவிமோசனம். காலவமுனிவர் தவஞ்செய்த விடம்.

(4) பிரம தீர்த்தம்:—இது காலவ தீர்த்தத்தின் கிழக்கில் இருக்கின்றது. பிரமலோக பிராப்தி. ஈசுவரதரிசனம் கிட்டும்.

(5) இரணவிமோசன தீர்த்தம்:—இது பிரமதீர்த்தத்தின் அரு கில் இருக்கின்றது. இதில் ஸ்நானம் செய்வோர் சகலவிதமான இரணங்களினின்று விமுக்தமடைகிறுர்கள்.

(6) கண்ணுவ தீர்த்தம் அல்லது க்ஷுதாதீர்த்தம்:—இது இரணவிமோசன தீர்த்தத்தின் அருகில் இருக்கின்றது. கண்ணுவ முனிவர் ஓர் நாள் தமது ஆசிரமத்தைவிட்டு நெடுந்தூரம் சென்ற

---

* குறிப்பு:—இதைப்பற்றிய விவரம் இதற்குப்பின் வெளிவரும் பாகத்தில் மதுராபுரி (Muttra) விவர அத்தியாயத்திற் காணலாம்.

மையின் பசிமேலீட்டினல் வருந்தியும், அருகிலிருந்த சமணப் பெரியாரிடம் அதிதியாய்ப்போக மனமின்றி, இந்தவிடத்தி லிருந்து கங்கையையும், அன்னபூரணியையும் தியானித்துத் தமக் குண்டாயிருக்கும் கொடும்பசியைத் தீர்க்கும்படி வேண்டினர். அவர்களும் அவர் வேண்டுதற்கிணங்கி அவர் முன்தோன்றி, அவர் பசியைத் தீர்த்து வைத்தனர் என்றும், அதுகாரணம்பற்றி இப் புண்ணிய தீர்த்தத்தில் ஸ்நானம் செய்வோர் எக்காலத்தும் பசிப் பிணியால் துன்புறார் என்றும் சொல்லப்படுகின்றது.

(7) பாபநாசன தீர்த்தம் :—இது கங்காப்பூரிலிருந்து கிழக் கில் ஒரு மைல் தூரத்திலுள்ள சோமேசுவரர் ஆலயத்தின் ஸ்நான கட்டத்தருகில் இருக்கின்றது. சர்வபாபவிமோசனம்.

(8) விசுவாமித்திர தீர்த்தம்:—இது பாபநாசன தீர்த்தத்தின் அருகில் இருக்கின்றது. இந்தத் தீர்த்தத்தின் அருகில் விசுவா மித்திர முனிவர் இறந்துகிடந்த ஓர் நாயின் சவத்தைக்கொண்டு யாகம் செய்து இந்திராதி தேவர்களைத் திருப்தி செய்வித்துப் பூவுலகில் அப்போது எற்பட்டிருந்த பஞ்சத்தை நீக்கினர் என்று சொல்லப்படுகின்றது.

(9) சுவேத தீர்த்தம் :—இந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம் செய் வதனல் புத்திரப்பேறு உண்டாகிறதென்று கருதப்படுகின்றது. இவ்விடத்தில் சுவேதன் என்னும் நாமமுள்ள ஓர் பிராமணன் வசித்து வந்ததாகவும், அவன் சிவபூஜை செய்துகொண்டிருந்த காலத்து, காலன் அவன் உயிரைக்கவர்ந்து சென்றதாகவும், அது காரணம்பற்றி சிவபிரான் கூற்றுவனைக் கடிந்து அவன் உயிரைக் கவர்ந்துகொண்டதாகவும், பூவுலகில் ஜனங்கள் இறவாது பிறந்து கொண்டே இருந்தமையின் பூதேவியானவள் சுமக்கவாற்றாது மகாவிஷ்ணுவிடம் முறையிட, அவரும் சிவபிரானிடம் சென்று அவரால் உண்டான தீங்கைத் தெரிவிக்க, * அவர் நமனை எழுப்

* குறிப்பு:—தென்னட்டில் தஞ்சாவூர் ஜில்லாவில் உள்ள திருக்கட வூர் என்னும் புண்ணிய க்ஷேத்திரத்தில் சிவபூஜை செய்திருந்த மார்க் கண்டேயரைப் பாசக்கயிறு போட்டிழுத்த குற்றத்திற்காக, அத்தலத் தெழுந்தருளியிருக்கும் காலசம்ஹார மூர்த்தியானவர் இலிங்கத்தினின் றும் தோன்றி அக்காலனை உதைத்துக் கொன்று காலவுபாதி இல்லாமற் செய்தனர் என்னும் சரித்திரத்தை ஒப்பிடுக. இத்தலம் மாயூரமிருந்து

பிப் பின்னொரு காலத்திலும் சிவபூஜை செய்பவர்களிடமும், விஷ்ணு பூஜை செய்பவர்களிடமும் அணுகுவதில்லையென வாக்குறுதி பெற்றுக்கொண்டுப் போகவிட்டனர் என்றும் சொல்லப்படுகின்றது.

(10) கோடிதீர்த்தம்:—இது நாசிக் பட்டினத்திலிருந்து $1\frac{1}{2}$ மைல் தூரத்திலும், கங்காப்பூரிலிருந்து $4\frac{1}{2}$ மைல் தூரத்திலும் இருக்கின்றது. இதன் அருகில் கோடீசுவரர் ஆலயம் இருக்கின்றது. முற்காலத்தில் இவ்விடத்தில் சிவபிரானுக்கும் அந்தகாசுரனுக்கும் ஒரு பெரும்போர் நடந்ததாகவும், அக்காலத்தில் பரமசிவனுடைய சரீரத்தினின்று வெளிப்பட்ட வேர்வையானது ஓர் சிற்றாறாகப் பெருகி கோதாவரியோடு கலந்ததாகவும், அவ்வாறே கோடிதீர்த்தமாய் விளங்குகிறதென்றும், சாட்சாது கைலாசபதியின் சரீரத்தினின்று தோன்றிய விசேஷத்தால் இது ஒரு கோடிதீர்த்தங்களுக்கும் ஒப்பாகுமென்றும் கூறப்படுகின்றது.

(11) அக்கினிதீர்த்தம்:— இது நாசிக் பட்டினத்திலிருந்து சுமார் அரை மைல் தூரத்தில் சந்நியாசி மடத்தின் அருகில் இருக்கின்றது. இதன் ஸ்நானத்தால் அக்கினிபாதை நிவர்த்தியாகின்றதெனக் கருதப்படுகின்றது.

(12) பிரமதீர்த்தம்:— நாசிக் பட்டினத்திற்குத் தென்மேற்கில் பத்ரிகா நதியின் சங்கமத்தினருகில் இருக்கின்றது. இதன் ஸ்நானத்தால் கூர்மையான அறிவு கிடைக்கின்றதென்றும், பிரமதேவர் தம் சிருஷ்டித்தொழிலைச் செவ்வனே நடாத்தும்பொருட்டு இந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து சிவனருள் பெற்றனர் என்றும் சொல்லிக்கொள்ளுகின்றனர்.

(13) சுக்கிலதீர்த்தம்:— இது பிரமதீர்த்தத்திற்கும் இராமகுண்டத்திற்கும் இடையில் இருக்கின்றது. இதில் ஸ்நானம் செய்வோர் வெண்மையான எள்ளைத் தம் சரீரத்தின் மேல் தெளித்துக் கொண்டு ஸ்நானம் செய்வது வழக்கமாக இருந்து வருகிறது. காரணம் தெரியவில்லை.

---

தரங்கம்பாடிக்குப் போகும் இருப்புப்பாதையில் இருக்கின்றது. இதற்கு பிரம்மரந்திர க்ஷேத்திரம் என்னும் திருநாமமும் உண்டு. சுவாமி: அமிர்தகடேசர். அம்பாள்: அபிராமியம்மை. தீர்த்தம்: அமிர்த புஷ்கரணி; கங்கை; காலதீர்த்தம் முதலியன. விருட்சம்: வில்வம்; ஜாதி. மூவராலும் பதிகம் பெற்றது,

(14) அஸ்திவிலய தீர்த்தம் :—இது இராமகுண்டத்தின் மேற்கில் இருக்கின்றது. இந்தியாவில் எல்லாப் பாகங்களினின்றும் வரும் யாத்ரீகர்கள் தாங்கள் கொண்டுவரும் இறந்துபோனவர்களின் அஸ்திகளை இதில் போடுகின்றனர். அவ்வெலும்புகள் இந்த தீர்த்தத்திற்குள் விழுந்த ஒரு முகூர்த்தத்திற்குள் ($1\frac{1}{2}$-மணி) ஜலமாக மாறிவிடுவதை இக்காலத்தும் பிரத்தியட்சமாய்க் காணலாம்.

(15) இராமகயா தீர்த்தம் :—இது இராமகுண்டத்திற்கும், ஸ்ரீ நாரோசங்கார் கோவிலுக்கும் இடையில் இருக்கின்றது. இதன் எதிரில் (16) அருணா தீர்த்தம், (17) சூரிய தீர்த்தம், (18) சக்கர தீர்த்தம், (19) அசுவினி தீர்த்தம், (20) * தசாசுவமேத தீர்த்தம் ஆகிய ஐந்து தீர்த்தங்களும் இருக்கின்றன. அருணா தீர்த்தமென்பது கோதாவரியில் அருணாநதி சங்கமம் ஆகுமிடம்.

முற்காலத்தில் மகாவிஷ்ணுவானவர் பரமசிவனை யணுகி "என்னை எல்லோரும் அசுராந்தகன் என்னும் பெரும் பேருடன் அழைக்கின்றனர். ஆனால் என்னிடம் இருக்கும் ஆயுதங்களோ கதையும் சார்ங்கமும்தான். மிகச் சமீபத்திலிருக்கும் சத்துருக்களைக் கதையால் கொல்லுவேன். அதிதூரத்திலிருக்கும் அரக்கர்களை என்சார்ங்கத்திற் பூட்டி எய்கிற பாணங்களாற் கொல்லலாம். அதிசமீபத்திலும் அதிதூரத்திலுமில்லாது இருக்கின்ற அசுரர்களைக் கொல்லத்தக்க ஆயுதம் என் கைவசமில்லை. ஆதலின் அவர்களை அழிக்கத்தக்க சக்கராயுதம் ஒன்றை அளித்தருளல் வேண்டும்." என வேண்டியதாகவும், அவ்வாறே சிவபெருமான் ஜலந்தராசுரனைக் கொன்றுவிட்டு மீண்டுவந்து தம் திருக்கரத்தில் தங்கியிருந்த † சுதரிசனம் என்னும் சக்கராயுதத்தைக்

---

* குறிப்பு :—தசாசுவமேத தீர்த்தத்தைப்பற்றிய விஷயம் தசாசுவமேத குண்டத்தின் விவரத்திற் காணலாம்.

† குறிப்பு:—ஓர் காலத்தில் மஹா விஷ்ணுவானவர் ஓரரசன் வேண்டுகோளின்படி சிவபக்தியிற் சிறந்தவரான ததீசிமகா முனிவரைக் கொன்று வரும்படித் தம் சக்கரத்தை விடுத்ததாகவும், அது அம்முனிவருடைய வச்சிரயாக்கையிற் பட்டதும் வாய்மழுங்கிப் பயனற்று விழுந்துவிட்டதைக் கண்ட திருமால், சிவபிரானிடமிருக்கும் சலந்தராசுரசம்ஹாரம் செய்த சக்கரத்தைப் பெறக்கருதி, தென்னாட்டிலுள்ள திருவீழிமிழலை என்னும் புண்ணியஸ்தலத்தில் அவரை நாடோறும் ஆயிரம்

கொடுத்தனர் என்றும், அதன் ஞாபகார்த்தம் மஹாவிஷ்ணுவால் உண்டாக்கப்பட்ட தீர்த்தம் சக்கர தீர்த்தம் என்றும் சொல்லப்படுகின்றது.

---

தாமரை மலர்களால் அருச்சித்து வந்ததாகவும், ஓர் நாள் திரிபுராந்தகன் அத்திருமாலுக்குத் திருவருள்புரியக் கருதி, அவ்வாயிரம் மலர்களுள் ஓர் மலரை மறைத்துவிட, மகாவிஷ்ணுவானவர் அது தெரியாது பூசிக்கத் தொடங்கி பூசைநடுவில் ஓர் மலர் குறைந்தமை கண்டு, தம் கண்களில் ஒன்றைத் தம் கைகளால் அகழ்ந்தெடுத்து அக்கண்மலரால் தம் அருச்சனையை முடித்தனர் என்றும், அது கண்ட சுந்தரகுசாம்பிகாசமேத வீழியழகேசர் மனமகிழ்ந்து, சுதரிசனமென்னும் அச்சக்கரத்தை மகாவிஷ்ணுவுக்குக் கொடுத்தருளினர் என்று ஒரு சரித்திரமும் உண்டு. இச்சரித்திரத்தை,

நீற்றினை நிறையப் பூசி நித்தலா யிரம்பூக் கொண்டு
ஏற்றுழி யொருநா ளொன்று குறையக்கண் நிறைய விட்ட
ஆற்றலுக் காழி நல்கி யவன்கொணர்ந் திழிச்சுங் கோயில்
வீற்றிருந் தளிப்பர் வீழி மிழலையுள் விகிர்த னாரே.

தரையொடு திவிதல நலிதரு தகுதிற லுறுசல தரனது
வரையன தலைவிசை யொடுவரு திகிரியை அரிபெற அருளினன்
உரைமலி தருசுர நதிமதி பொதிசடை யவனுறை பதிமிகு
திரைமலி கடல்மண லணிதரு பெறுதிடர் வளர்திரு மிழலையே.

என்னும் தேவாரத் திருப்பதிகங்களானும்,

பண்செய்தசொன்மங்கைபாகாவெண்பாற்கடற்பள்ளிகொண்டோன்
திண்செய்தசக்கரங்கொள்வானருச்சனைசெய்திட்டநாள்
விண்செய்தநின்னருட்சேவடிமேற்படவேண்டியவன்
கண்செய்தநற்றவம்யாதோகருத்திற்கணிப்பரிதே.

என்னும் திருவருட்பாமாலையானும் அறிக.

திருவீழிமிழலை என்னும் புண்ணிய க்ஷேத்திரம், மாயூரமிருந்து திருவாரூருக்குப் போகும் இருப்புப்பாதையில் உள்ள பூந்தோட்டம் என்னும் ஸ்டேஷனிலிருந்து மேற்கில் சுமார் 6 மைல் தூரத்தில், தற்காலத்தில் அரசலாறு எனவழங்கும் அரிசொல்லாற்றின் இடது கரையில் இருக்கின்றது. சுவாமி: வீழியழகர். அம்பாள்: சுந்தர குஜாம்பிகை. தீர்த்தம்: விஷ்ணு தீர்த்தம். விருட்சம்: வீழி. மூவராலும் பதிகம் பெற்றது.

சூரியனானவன் துவஷ்டாவின் புதல்வியான * சஞ்ஞிகையென்பாளை மணந்து, அவளிடம் யமுனையென்னும் புத்திரியையும், வைவசுவதமனு, யமன் என்னும் இருபுத்திரர்களையும் பெற்றனன். அப்படியிருக்கச் சஞ்ஞிகையானவள் சூரியனின் தேககாந்தியைச் சகிக்க முடியாது, தன்னிழலைத் தன் வடிவாகச் செய்து சூரியனிடத்தில் விட்டுவிட்டு, அவனுக்குத் தெரியாமலே தந்தை வீடு சேர்ந்தனள். தந்தையான துவஷ்டாவானவன் தன் மகளை விளித்து, "பெண்ணே நீ உன்கணவன் வீட்டிற்குச் செல். பெண்களுக்கு எக்காலத்தும் சுயேச்சையில்லை. ஒரு பெண் கன்னிகையாயிருக்கும்போது தன் தகப்பனிடத்தும், விவாகமான பிறகு கணவனிடத்தும், கணவனுக்குப் பிறகு பிள்ளைகளிடத்தும் அடங்கியிருக்கக் கடமைப்பட்டவள். ஆதலின் நீ என் வீட்டிலிருக்க நான் இடங்கொடேன்." என்றுரைத்துப் போம்படி யேவ, அவள் தன் தந்தையின் இல்லத்தை விட்டுக் கண்ணுவமுனிவர் ஆசிரமத்தில் வந்து தங்கியிருந்தனள்.

இவளிப்படி இருக்க, சூரியனுக்குச் சாயாதேவியிடத்தில் சாவணி, சனி என்னும் புத்திரர்களும் † பத்திரை என்னும் புத்திரியும் பிறந்தனர். இப்படி இருக்கும் காலத்தில், சாயையானவள் தன் பிள்ளைகளிடம் மிக்க அன்போடிருந்து, உஷையின் மக்களைத் துன்புறுத்திவந்ததைக் கண்ட யமன் சாயையைத் தன் காலால் முதுகில் உதைக்க, அவள் தன்னை உதைத்த கால் முடமாகக் கடவதென்று சபித்தனள். அச்சாபத்தை ஏற்ற யமன் சூரியனிடம் சென்று, "இப்போதிருப்பவள் என் தாயன்று, என் தாயாயிருப்பின் யானும் உதைத்திரேன்; அவளும் என்னை சபித்திராள்." என்று முறையிட, சூரியனும் உண்மையை அறிந்து, தன் மனைவியான உஷையைத் தேடிக்கொண்டு கண்ணுவர் ஆசிரமம் வந்தனன். அவன் வருவதைக் கண்ட உஷையானவள் ஒரு பெண் குதிரை வேடம் பூண்டு ஓடத்தொடங்கினள். அதைக் கண்ணுற்ற சூரியனும் ஓர் ஆண் குதிரை வேடம் பூண்டு அவளைத் துரத்தினன். அதன் பயனாகச் சாயையினிடத்தில் அசுவினி குமாரர்கள் என்னும் இரண்டு புத்திரர்கள் பிறந்தார்கள். அச்சமயத்தில் கோதாவரி தீரத்தில் வேதாத்தியயனம் செய்துகொண்டிருந்த

*குறிப்பு:—இப்பெண்ணிற்கு உஷை என்னும் நாமமும் உண்டு.

† குறிப்பு:— இப்பெண்ணிற்கு வைத்ருதி என்னும் நாமமும் உண்டு.

* பார்ப்பனச் சிறுவர்கள் ஐவர் உஷை ஓடுவதையும், சூரியன் துரத்துவதையும் பார்த்துச் சிரித்தனர். அதைக் கண்ட சூரியன் அவர்கள் ஐவரும் அசேதனமான ஆலவிருட்சங்களாகும்படி சபித்தனன். அவர்கள் அக்கொடுஞ்சாபத்தின் பயனாக ஐந்து வடவிருட்சங்களாக மாறி நின்றனர். இதுகாரணம் பற்றியே, இத்தலத்திற்குப் பஞ்சவடி என்னும் பெயர் வழங்கலாயிற்று. சூரியன் அங்கு வந்தமையால் சூரிய தீர்த்தமும், அசுவினி குமாரர்கள் அங்கு ஜனித்தமையால் அசுவினி தீர்த்தமும் உண்டாயின வென்றும், யமுனையானவள் இத்தலத்தில் அருணையாக மாறியிருப்பதாகவும் கருதப்படுகிறது.

இராமகுண்டத்திற்கும் சரஸ்வதி சங்கமத்திற்கும் இடையிலுள்ள பாகத்திற்கு (21) பிரயாகை அல்லது ஹோமஸ்தானம் என்னும் பெயர் வந்திருப்பதாகத் தெரிகின்றது. இதனருகில் தான் அசுவினி தீர்த்தம் இருக்கின்றது. நீலகண்டேசுவரர் கோவிலின் அருகில் தசாசுவமேத கட்டம் என்னும் பரம பவித்திர கட்டமும், அப்பெயருள்ள தீர்த்தமும் இருக்கின்றன. சீதாபிராட்டியாருடைய தந்தையான ஜனக மகாராஜனால் இவ்விடத்தில் 10 அசுவமேத யாகங்கள் செய்யப்பட்டனவென்றும், அருகிலிருக்கும் நீலகண்டேசுவரர் அவரால் பிரதிஷ்டை செய்யப்பட்டவரென்றும் தெரிகின்றது. ஸ்ரீராமரானவர் தம் பிதாவின் சிராத்த கருமாதிகளை முடித்த இடத்திற்கு † இராமகயா தீர்த்தமென்று

---

*குறிப்பு:—உஷை யென்பாள் பெண் குதிரை வடிவத்தோடு சூரியனால் துரத்தப்பட்டுவந்தபோது அங்கு ஓர் முனிவர் ஆசிரமமிருப்பதைக் கண்டு அதிற்போய் புகுந்தனள் என்றும், அப்போது அம்முனிவரின் சீடர்கள் ஐவர்கள் அப்பெண் குதிரையை ஆசிரமத்தினின்றும் துரத்தினர் என்றும், அதைக்கண்ட சூரியன் தன் நாயகியைத் தான் கிட்டின சமயத்தில் அவளைத் துரத்திவிட்டனரே என்றும் சினங்கொண்டு சபித்தனன் என்றும், அதையறிந்த முனிவரானவர் அங்கு குதிரை உருவந் தாங்கி வந்தவன் சூரியன் என்றறிந்து, அவனை வணங்கித் தம் சீடர்கள் அக் கொடுஞ் சாபத்தினின்றும் விமோசன மாவதெக்காலமென வினவ, பிற்காலத்தில் ஸ்ரீ ரகுநாயகன் தம் பத்தினியோடு அங்கு வருங்காலத்தில் அவருடைய வீட்சணியத்தினால் சாபம் நீங்கும் என்றும், உரைத்துப் போயினன் என்றும் ஓர் சரித்திரம் உண்டு.

† குறிப்பு :—தென்னாட்டில் பிரசித்திபெற்ற தியாகராஜ க்ஷேத்திர

சொல்லப்படுகின்றது. கிழக்கில் முக்தேசுவரர் ஆலயத்தின் அருகில் (22) மேக தீர்த்தம், (23) கோடி தீர்த்தம் என்னும் இரண்டு தீர்த்தங்கள் இருக்கின்றன. அதற்குச் சற்று கீழ்புறத்தில், கோதாவரியின் இடதுபுறத்தில் (24) அஹில்யா சங்கம தீர்த்தம் இருக்கின்றது. இவ்விடத்தில் அஹில்யா என்றும் ஓர் சிற்றாறு கோதாவரியோடு கலக்கின்றது.

மேற் சொல்லிய 24 தீர்த்தங்களைத் தவிர, நாசிக்பட்டினத்திற்குத் தென்கீழ் திசையில் சுமார் அரை மைல் தூரத்தில் * கபிலசங்கம தீர்த்தம் இருக்கின்றது. இதன் கரையில் கபிலமுனிவர் தவம் புரிந்த காரணம் பற்றி இப்பெயர் வந்ததெனத்தெரிகின்றது. இக் கபில சங்கமத்தில், பிரமயோனி, விஷ்ணுயோனி, உருத்திரயோனி என்னும் பெயருள்ள மூன்று கற்பிலங்கள் இருக்கின்றன. சர்வபாபரஹிதர்களாய் இருப்பவர்கள் தான் இவ்யோனிகளுள் நுழைந்து வெளிவரக்கூடும் என்றும், அவ்வாறு ஒரு முறை அவைகளுள் நுழைந்து வெளிவந்தவர்களுக்குப் பிறவி என்பதே ஒழிந்து போகின்றது என்றும் சொல்லிக் கொள்ளுகின்றனர். இவைகளுக்கருகில் அக்கினி தீர்த்தம், முக்தி தீர்த்தம், சௌபாக்கிய தீர்த்தம் என்னும் மூன்று தீர்த்தங்களும், இவை

---

மாகிய திருவாரூருக்கு வடகிழக்கில் சுமார் 2 மைல் தூரத்தில், இராமகயை என்னும் ஓர் சிற்றூர் இருக்கின்றது. அங்குதான் இராமர் தம் தகப்பனாரின் சிராத்தம் செய்தனர் என்று அங்குள்ளோர் சொல்லிக்கொள்ளுகின்றனர். இராமர் தாம் காட்டிலுறைந்த 14 வருஷகாலத்தில், அனேக சிராத்தங்கள் செய்ய நேர்ந்திருக்குமாதலின் இந்த இராமகயையிலும் ஒரு சிராத்தம் செய்திருத்தல் கூடும் என்று சொல்லவேண்டுமே தவிர, அங்குள்ளோர் சொல்லுவது தவறாயிருத்தல் வேண்டுமென்று நினைப்பதற்குத் தகுந்த முகாந்திரமில்லை.

* குறிப்பு :—முற்காலத்தில் இப்பரதகண்டத்தில் அரசாண்டிருந்த சுவாயம்பு மனுவின் மரபினனும், ஸநத்குமாரரிடம் பிரமஞானோபதேசம் பெற்றவனுமான, பிருது சக்கரவர்த்தியானவன் இந்நாட்டில் பஞ்சம் வந்த காரணத்தால் பூமியைக் கபிலா என்னும் பசுவாகவும் மனுவைக் கன்றாகவும் செய்து, அப்பசுவின் பாலைக்கறந்து சராசரங்களுக்கு உண்ணூட்டினன் என்றும், அவன் பால் கறந்தகாலத்தில் தரையில் சிந்திய பால் ஓர் சிற்றாறாகப் பெருகி ஓடி கோதாவரியில் கலந்ததென்றும், அக்காரணம்பற்றி இதற்குக் கபிலாநதியென்னும் நாமம் உண்டாயது என்றும் சொல்லுவாருமுளர்.

களுக்குத் தெற்கில் சுமார் ஒரு மைல் தூரத்தில் பாபவிநாசனி தீர்த்தம் என்னும் மற்றோர் தீர்த்தமும், அதனருகில் அனேகம் பெரியார்களுடைய சமாதிகளும் இருக்கின்றன.

## கோதாவரியிலுள்ள குண்டங்கள்.

நாசிக்பட்டினத்திலிருந்து பஞ்சவடிபோவதற்காக கோதாவரியாற்றின் மேல் "விக்டோரியாவாராவதி" என்னும் ஓர் பாலங் கட்டி யுள்ளார்கள். அதற்கு 10 கணவாய்கள் இருக்கின்றன. அவற்றுள் 6-வது கணவாயின் கீழ் எப்பொழுதும் ஜலம் ஓடிக் கொண்டிருக்கும்படியான ஏற்பாடு செய்திருக்கின்றனர். அதற்கு அருகில் ஸவாயி மாதவராவ் பேஷ்வே அவர்களுடைய தாயாரான கோபிகாபாயி அம்மையார் தாமிருந்து ஸ்நானம், ஜபம், ஈசுவரார்ச்சனை முதலியவைகளைச் செய்தற்பொருட்டு, ஒரு சிறு சதுரமான கட்டிடம் கட்டியுள்ளார். அதன் முன்புறத்தில் இலட்சுமண குண்டம் இருக்கின்றது. இதில் அனேகம் ஊற்றுக்கண்களிருப்பதால், கோதாவரியில் அறவே ஜலமில்லாதுபோயினும் இதன் ஜலம் வற்றுவதில்லை. இதன்முன் தனுஷ்குண்டமும், அதன் முன்புறம் இராமகுண்டமும் இருக்கின்றது. இந்த இராமகுண்டத்தில் ஸ்ரீராமரும் ஜானகிதேவியாரும் இலட்சுமணப் பெருமாளும் பஞ்சவடியில் வசித்த காலத்தில் ஸ்நானம் செய்துகொண்டிருந்த காரணம்பற்றி இதை எல்லாவற்றிலும் விசேஷமானதாகக் கருதுகின்றனர். அஸ்திவிலய தீர்த்தமும் இதிற்முன் இருக்கின்றது.

இக்குண்டத்தின் ஈசானிய பாகத்தில் அருணா நதியானது ஒரு கோமுகத்தின் வழியாக கோதாவரியில் வந்து கலக்கின்றது. புத்திரப்பேறு பெற நினைப்பவர்களும், தமக்கிருக்கும் குழந்தைகள் நீடித்த ஆயுளோடிருக்கவேண்டுவோரும், மற்றெல்லாவித போகபாக்கியங்களைப்பெற நினைப்பவர்களும், தம்பதிகளிருவரும் ஒரே ஆடையை யுடுத்திக்கொண்டு இணைபிரியாது ஸ்நானம் செய்வார்கள். இதை ஏகவஸ்திர ஸ்நானம் என்று சொல்லுவார்கள். இதே இடத்தில் இந்த க்ஷேத்திரத்திற்கு யாத்திரை வருவோர் பூசணிக்காய், தேங்காய், விளா, பலா, வாழை, மாதுளை, மா ஆகிய சப்த பலவர்க்காதிகளுடன் கங்கையைச் சந்தித்தல், பூர்வாங்க உத்திராங்க பூர்வகமாய் தேக சுத்தி, வபனம் முதலியவைகளைச்

செய்துகொண்டு * திரிபிண்ட சிராத்தம், † நாக நாராயணபலி முதலிய கர்மங்களை முடிக்கின்றனர்.

இராமகுண்டத்தின் வடக்கில் 10 அடி தூரத்தில் சீதாகுண்டமும், அதற்குத்தெற்கில் 20 அடி தூரத்தில் அஹலியா குண்டமும் இருக்கின்றது. 18-வது நூற்றாண்டில் இந்தோர்(Indore) நாட்டை நீதிவழுவாது அதிபராக்கிரமத்தோடு அரசாண்டிருந்த அதிவீரதீர ஹோல்கார் குலதிலகமாகிய ‡ அஹலியாபாய் அம்மையாரால் இக்குண்டம் கட்டப்பட்டதென்று தெரிகிறது. அஹலியா குண்டத்தின் மேற்கில் சாரங்கபாணிகுண்டம் இருக்கின்றது. இதை சாரங்கபாணி யென்னும் நாமம்பூண்ட தட்சிண தேசத்து பிராமணர் ஒருவர் கட்டினதாகத் தெரிகின்றது. அஹலியா குண்டத்தின் தெற்கில் § ஹனுமான்குண்ட மிருக்கின்றது.

---

* குறிப்பு :— தங்களுடைய முன்னோர்களில் ஆணிலும், பெண்ணிலும், பாலியம், யௌவனம், வயோதிகம் என்னும் பருவங்களில் எதிலேனும், இறந்து அவர்களுடைய உத்தரக்கிரியைகள் முதலியன நடைபெறாத காரணத்தால், அவர்கள் பூதபைசாச ரூபங்களோடு தங்கள் மரபிலுதித்தோரைப் பீடித்துக்கொண்டிருப்பாராகில், அவர்களுக்காக நல்ல புண்ணிய க்ஷேத்திரங்களிலுள்ள தேவாலயங்களில், புண்ணியநதிகளின் சங்கமங்களில், புண்ணியாசிரமங்களில் அல்லது பரமபவித்திரமான அசுவத்த விருட்சங்களின் கீழ் திரிபிண்டாத்மக சிராத்தாதிகளைச் செய்து, அப்பீடையினின்று விமுக்தி அடையவேண்டும் என்பது விதியாதலின், அவ்வித கர்மத்திற்கு திரிபிண்ட சிராத்தம் என்னும் பெயர் வழங்குகின்றது.

† குறிப்பு:—யாவருக்காயினும் முன்ஜென்மங்களிற் செய்த சர்ப்பவதை முதலியதோஷங்களினால், குழந்தைகளில்லாமலோ, அல்லது குழந்தைகள் பிறந்து நீடித்திராமலோ, அல்லது பூதபைசாச பீடைகளால் கருத்தரிக்காமலோ, அல்லது பிறந்த குழந்தைகள் நோயினாற்பீடிக்கப்பட்டோ இருப்பின், அந்த தோஷபரிகாரார்த்தம் புண்ணிய க்ஷேத்திரங்களிலும், தேவாலயங்களிலும் செய்யும் பூஜைக்கு நாக நாராயணபலி என்று சொல்லப்படுகின்றது.

‡ குறிப்பு :—அஹலியாபாயியம்மையாரைப்பற்றி மற்றும்சில விவரங்களை இப்புத்தகம் முதற்பாகம் 192, 227-வது பக்கங்களிற் காணலாம்.

§ குறிப்பு :—இதற்கு அங்கு தூர்த்தோடியாயா நுதி குண்டம் என்னும் பேர் வழங்குகின்றது.

சாரங்கபாணி குண்டத்திற்குத் தெற்கில் சுமார் 10 அடி தூரத்தில் ஐந்து கோவிற்குண்டம் என்றும் சூரியகுண்டம் என்றும் பெயர் வழங்குகின்ற குண்டம் இருக்கின்றது. இதனருகில் ஐந்து சிறு கோவில்கள் இருக்கின்றன.

அருணா நதியின் சங்கமத்திற்கெதிரில் ஆனந்ததன தீர்த்தம் இருக்கின்றது. இவ்விடத்தில் முற்காலத்தில் ஆனந்ததனர் என்னும் யோகீசுவரர் ஒருவர் அன்னபானாதிகளின்றி ஆத்மசம்யமனம் செய்து, அருந்தவம்புரிந்து, அரனருள்பெற்று அடங்கினரென்றும், இத் தீர்த்தம் அவர் நாமத்தால் ஏற்பட்டதாதலின் இதில் ஸ்நானம் செய்வோர் தனம், தானியம், கீர்த்தி, புத்திர பௌத்திராதி சம்பத்துகள், ஆரோக்கிய ஐசுவரியாதி இஷ்டசித்திகளையெல்லாம் ஈண்டே குறைவறப் பெறுவர் என்று கருதப்படுகின்றது. இத் தீர்த்தத்தின் ஸ்நானத்தினால் புயஸ்ரவன் என்னும் பிராமணனுடைய குஷ்டரோகம் நீங்கிற்று என்று சொல்லப்படுகிறது.

முன்னொருகாலத்தில் இந்திரன் சிவபிரானைக்காண கைலைக்குச் சென்றனன். அவன் வரும் வழியில் கைலாசபதியானவர் ஒருருத்திரவடிவேற்று நின்றனர். அவரை அரனென்றறியாத சசிகேள்வன் தன் கையிலிருந்த வச்சிராயுதத்தால் அவருடலிற் றாக்க, அது அக்கணமே பொடிப்பொடியாய்த் தகர்ந்துதிர்ந்தது. இந்திரன் செயலைக்கண்டு சினங்கொண்ட ஈசன், தம் உடலினின்று உண்டாகிய வேர்வையை வழித்தெறிந்துவிட்டுத் தம் உண்மையான உருவத்தைக்காட்டினர். அதுகண்டு பெரிதும் பயந்த இந்திரன் அவரைப் பன்முறையும் வணங்கி, அபசாரமன்னிப்பும் பெற்று அகன்றனன். விமலனெறிந்த வியர்வை கடலினிடை வீழ்ந்து ஓர் குழந்தை வடிவெடுக்க, அக்குழந்தை கடலரசனால் போற்றப்பட்டு வளர்ந்து, காளைப்பருவமுற்று, அவுணர்களுக்கரசனாய் ஆற்றல்மிக்கு, மயனைக்கொண்டு அமரேசனுறையும் அமராவதிக்கு மேம்பட்ட அழகுடைய ஓர் நகரத்தை நிருமிக்கச்செய்து, காலநேமியின் புத்திரியான பிருந்தையைமணந்து, தேவர்கள் அனைவரையும் வென்று, ஏறேறுவோர் ஒருவரே எஞ்சிநிற்க, அவரையும் வெல்வான்பொருட்டுக் கைலைக்குப் புறப்பட்டனன். தன் கற்பழிந்தாலன்றித் தன் கணவன் இறவாவகையாக வரம்பெற்று கற்பிற்கணிகலமாய் விளங்கிய பிருந்தை, தன்னாலியன்றமட்டும்

தடுத்தும் கேளாது சென்ற தன் கணவன் கதி யென்னுமோ வென்று கவலையுற்றிருந்தனள். அவளைக் கற்பழிப்பான் கருதிய கமலக்கண்ணன் சலந்தரன் வடிவேற்றுத் தம் கணங்களை அசுர கணங்களாக மாற்றித் தம்முடன்கொண்டு சென்றனர். அவரைத் தன் கணவனே என்று கருதிய பிருந்தை உபசரித்து அழைத்துச்சென்று உடன் கொண்டுறைந்தனள். இங்கிவள் கற்பழியவே, அங்கு ஜலந்தராசுரன் முன் சிவபிரான் மாய பிராமணன் வேடம் பூண்டுவந்து, பூமியில் விருத்தாகாரமான ஓர் கோட்டைக் கீறி, அச்சக்கரத்தை எடுக்கவியலுமேல் அடல்விடை அண்ணலையும் அன்று அடர்த்து அடக்கக்கூடுமெனச் சொல்லினர். அவன் அதை அலட்சியமாய் நினைத்துத் தனது இருகரங்களாலும் எடுத்து மார்பிலும் தோளிலும் வைத்து இறுதியில் தன் தலை மேற்றாங்கினன். அது அவன் தலையை இரு கூறாகப் பிளந்து அவனை மாய்த்துவிட்டு இறைவன் திருக்கரத்தெய்தியது.

இஃதிவ்வாறாக பிருந்தையுடன் சுகித்திருந்த பெருமாளின் மாயத்திருவிளையாட்டை அறிந்த பிருந்தையானவள், "யான் எவ்வாறு என் பதியைவிட்டு வருந்துகின்றேனோ, அவ்வாறே * நீயும் உன் சதியைவிட்டு நீங்கி வருந்தக்கடவை" என்று சபித்துவிட்டுத் தீக்குளித்திறந்தனள். " தீயவை செய்தார் கெடுதல் நிழல் தன்னை வீயாதடியுறைந்தற்று," என்னும் தெய்வநூல் நீதிமொழிக்கிணங்க பிருந்தையைக் கற்பழித்த தோஷத்தால் திருமால் தன் உருக்குலைந்து,"ஓவியத்தெழுத வொண்ணா வுருவத்தாய்" என்னும் சொல்வன்மையிற் சிறந்த கம்பரின் சொற்சோர்வுபடா வண்ணம், ஓவியத்தில் எழுதவியலாத அழகியவுருவம்போய், ஓவியத்தில் எழுதத் தகாத அறுவறுப்பான உருவம் பெற்றுப் பெரிதும் ஏங்கிச் சிவபிரானிடம் சென்றுத் தம் சுயரூபத்தைப் பெறும் வழி வேண்டினர். அப்பரமன் அவர் கோர ரூபத்தைக்கண்டு மனம் பொறாராய், முன் தம் பிரமஹத்தியை நீக்கிவைத்த கௌதமி கங்கையை நினைத்து, அதன் மகிமையை அரிக்கெடுத்தோதி அதில் அவருறையும் வைகுண்ட நகரத்துடன் சென்று மூழ்கும்படிச் சொல்லினர். மகாவிஷ்ணுவும் அவ்வாறே இத்தலத்தில் வந்து கோதாவரியில் மூழ்கி மீண்டும் தம் சுந்தர ரூபத்தைப்பெற்றனர்.

* குறிப்பு :—இக் கொடுஞ் சாபத்தின் பயனாகவே பிற்காலத்தில் இராமர் சீதையைவிட்டுப் பிரிந்து வருந்தியலைய நேர்ந்தது.

தவிர, அவர் நகரமும் அதற்கு முன்னில்லாத ஓர் அழகைப்பெற்றது. ஆதலின் அவருக்கு சுந்தரராஜன் என்ற திருநாமமும், இந்நகருக்கு சுந்தரபுரி என்ற பெயரும் உண்டாயிற்றென்று சொல்லப்படுகின்றது.

நீலகண்டேசுவரர் கோவிலுக்கும் * கோரேராமர் சந்நிதிக்கும் எதிரில் † தசாசுவமேத குண்டம் என்றும் கோரேராமர்குண்டம் என்றும் வழங்குகிற இருகுண்டங்கள் இருக்கின்றன. இத்தீர்த்த மிருக்குமிடத்தில் முற்காலத்தில் பிரமதேவர் 10 அசுவமேத யாகங்களைச் செய்து உலகசிருஷ்டித்துவத்தைப் பெற்றனர் என்று சொல்லப்படுகின்றது.

இதற்குத் தெற்கிலும், நாரோசங்கரர் கோவிலுக்கு எதிரிலும் இராமகயாகுண்டம் இருக்கின்றது. இதற்கருகில் கோதாவரியின் குறுக்காக நாசிக் பட்டினத்திலிருந்து பஞ்சவடிக்குப் போக ஒரு கற்பாதை (Causeway) போடப்பட்டிருக்கிறது. இதற்கு அப்பக்கங்களில் ஸாண்டவா என்று பேர். விக்டோரியா வாராவதி எவ்வாறு சுந்தரநாராயணர் கோவிலுக்கும் கபாலேசுவரர் கோவிலுக்கும் இடையில் இருக்கின்றதோ, அவ்வாறே இக்கற்பாதையும் நாரோசங்கரர் கோவிலுக்கும் தாரகேசுவரர் கோவிலுக்கும் இடையில் இருக்கின்றது. இதனருகிலும் இதைச் சுற்றிலும் மழைக்காலமல்லாத மற்றக்காலங்களில் காய்கறிக் கடைகள் ஏராளமாய்க் கூடுகின்றன. வெளியூர்களிலிருந்து வருவோர்க்கு ஓர் பெருஞ் சந்தைபோல் தோற்றுகின்றது.

இக்கற்பாதைக்குத் தெற்கில் ஸின்தோட்யா (Sinthodya) மகாதேவர் குண்டம் என்னும் பேஷ்வே குண்டம் இருக்கின்றது. இக்குண்டத்தில் (1) வாகாடி, (Vaghadi) என்ற வருணை, (2) ஸரஸ்வதி, (3) காயத்திரி, (4) சாவித்திரி, (5) சிரத்தா, என்னும் ஐந்து சிற்றாறுகள் வந்து சங்கமமாகின்றன. இக்குண்டத்திற்குத்

---

* குறிப்பு:—கோரே ராமர்=வெண்மையான ராமர்.

† குறிப்பு:— ஜீவன் முக்த க்ஷேத்திரமாகிய காசியிலுள்ள 64 ஸ்நான கட்டங்களில் பிரதானமானவைகளாவன (1) அசிகட்டம். (2) பஞ்சகங்கை கட்டம். (3) மணிகர்ணிகை கட்டம். (4) தசாசுவமேத கட்டம். (5) வாருண கட்டம். என்னும் 5 கட்டங்களில் ஒன்று தசாசுவமேத கட்டமாய் இருப்பதையும் ஒப்பிடுக.

தெற்கில் கண்டோபாவின் குண்டம் இருக்கின்றது. இதற்குத் தெற்கில் ஓகா (Okha) குண்டமும், அதற்குத் தெற்கில் வைசம்பாயன குண்டமும் இருக்கின்றது.

ஓகாகுண்டத்தில் பிரதி வருஷமும் ஒருஸ்திரீயாவது ஒரு குழந்தையாவது விழுந்து இறப்பது வழக்கமாக இருந்துவருவதால் அதில் ஓர் பிரமராக்ஷதன் இருப்பதாகவும், அவன் அதில் மூழ்குவோரை இம்சிப்பதாகவும் கருதப்படுகின்றது. வைசம்பாயனர் குண்டத்திற்கெதிரில் மிக்க விசேஷமானதாகக் கருதப்படுகிற முக்தேசுவரர் குண்டம் இருக்கின்றது.

பஞ்சவடிக் கரையில் அருணை நதி சங்கமத்தின் பக்கத்தில் இந்திர குண்டம் இருக்கின்றது. கௌதமருடைய மனைவியான அகலிகையை மாறுவேஷத்தினுல் மோசஞ் செய்து புணர்ந்த காரணத்தால் கௌதமரிடம் சாபம் பெற்ற இந்திரன் மீண்டும் தன்னிருப்பிடம் போக வியலாது இக் குண்டத்தில் ஸ்நானம் செய்து தேவேந்திர பட்டினம் போகும் சக்திபெற்றான் என்று சொல்லப்படுகின்றது. இக்குண்டத்திலுள்ள நீர் குடிப்பதற்கு மிகவும் நன்றாக இருக்கின்றது.

## நாசிக் பஞ்சவடியிலுள்ள தேவாலயங்கள்.

(1) சுந்தரநாராயணர் கோவில்:—இது நாசிக் பட்டினத்திலிருந்து விக்டோரியா வாராவதி ஆரம்பமாகும் இடத்தில் நதி தீரத்தில் இருக்கின்றது, இதில் ஸ்ரீ தேவி பூதேவி சமேதராய் ஸ்ரீ சுந்தரநாராயணப் பெருமாள் கிழக்கு நோக்கிய திருமுக மண்டலத்துடன் அடியார்களுக்குச் சேவை சாதித்து அருள்புரிகின்றார். இந்தக் கோயில் இருக்கும் இடத்தில் ஆதியில் ஒரு சிறு கோவில் இருந்ததாகவும், முகமதியர்கள் பட்டினத்தை ஆக்கிரமித்துக் கொண்ட காலத்தில் அதை இடித்து மசூதியாகக் கட்டினதாகவும், பிற்காலத்தில் கி. பி. 1756ம் வருஷத்தில் கங்காதர யஷ்வந்த சந்திரசூடர் என்பவர் அதை இடித்துவிட்டு இப்போது இருக்கும் கோவிலைக் கட்டினதாகவும் சொல்லப்படுகின்றது. இதில் கார்த்திகை மாதம் வைகுண்ட சதுர்த்தசியன்று பிராமண போஜனம் நடக்கின்றது.

(2) * உமாமகேசுவரர் கோவில்:—சுந்தர நாராயணர் கோவிலிலிருந்து சுமார் 70கெஜ தூரத்தில் இருக்கின்றது. இதில் வலதுபாகத்தில் கங்கை, இடதுபாகத்தில் பார்வதி ஆகிய இரு தேவிமார்களுடனும் ஈசுவரன் காட்சி கொடுக்கின்றார். இதிலிருக்கும் விக்கிரகங்கள் மகாராஷ்டிரர்கள் கர்நாடக தேசத்தின் மேற் படையெடுத்துச் சென்றிருந்தபோது அங்கிருந்துகொண்டு வரப்பட்டவை என்று சொல்லிக் கொள்ளுகின்றனர்.

(3) நீலகண்டேசுவரர் கோவில் :—இது கோதாவரியின் வலது கரையில் இருக்கின்றது. இதில் இருக்கும் சிவலிங்கமானது வெகு புராதனமானதாகத் தெரிகிறது. ஸ்ரீ ரகுவீரனுடைய மாமனர் ஜனகமகாராஜாவினுடைய காலம் முதல் இருப்பதாகச் சொல்லிக் கொள்ளுகின்றனர்.

(4) † பஞ்சரத்னேசுவரர் கோவில் :—நீலகண்டேசுவரர்

---

* குறிப்பு:—உமாமகேசுவரர் ஆலயத்தின் சரித்திரம் பின்வருமாறும் சொல்லிக்கொள்ளுகின்றனர்:—

ஆதிகாலத்தில் உமை யென்னும் பெயர் கொண்ட ஓர் வேசி யிருந்தனள். அவள் பார்வைக்கு வெகு சுந்தரவதியாயிருந்தமையின் அனேக சீமான்கள் அவள் அழகிலீடுபட்டு அவளுக்குத் தங்கள் பொருளைக் கொடுத்துக் கெட்டழிந்தனர். அவள் வயோதிக தசையை அடைந்த பின்னர், தன்னுடைய வாழ்நாள் முழுவதும் உலக இன்பத்திலேயே கழிந்துபோனதற்காக மனம் வருந்தித், தான் அதுவரையில் சேகரித்திருந்த ஏராளமான திரவியத்தையும் எடுத்துக்கொண்டு கோதாவரி தீரத்திற்கேகி, அங்கிருந்த விப்பிரோத்தமர்களை வந்தனை வழிபாடுடன் பூசித்துத் தான் தன் பாவம் தொலைந்து கடைத்தேறுதற்கு வழி காட்டும்படி வேண்டினவளாய், தன்னிடமிருந்த திரவியம் முழுவதையும் அவர்கள் சுவாதீனப்படுத்திவிட்டு கௌதமியில் ஸ்நானஞ் செய்து உயிர் துறந்தனள். அவ்வேதியர்கள் அப்பொருளைக் கொண்டு கௌதமி தீரத்தில் இந்தக் கோயிலைக்கட்டி, அதில் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து அதன் நித்திய பூஜைக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து விட்டு, மற்றும் சில பொருள்களை கூன், குருடு, செவிடு முதலியவர்களுக்கு தானம் செய்து, மிகுந்திருந்ததைத் தாங்கள் பங்கிட்டு எடுத்துக்கொண்டனர். உமை என்பாளின் பொருளைக் கொண்டு கட்டின தேவாலயமாதலின் இதற்கு உமேசுவரர் கோவில் என்றும் உமாமகேசுவரர் கோவில் என்றும் பெயர் வழங்குகின்றது.

† குறிப்பு :—மகாபாரதம் எழுதிய வியாசர் தாம் எடுத்துக்

கோவிலிலிருந்து கரையின்மேல் ஏறிப்போனால் இதைக் காண லாம். இது ஒரு சாதாரணமான வீடுபோன்ற கட்டிடமாக இருக் கின்றது. இதில் இருக்கும் சிவலிங்கமும் ஸ்ரீ ராமர் காலம் முதல் இருப்பதாகவும், இதை ஸ்ரீ ரகுவீரன் சுவர்ணமணி, இந் திரநீலமணி, மரகதமணி, மாணிக்கமணி, முத்து ஆகிய ஐந்துவித மணிகளாற் பூசித்தனர் என்றும் சொல்லப்படுகின்றது. இதற்கு ஐந்து முகங்கள் வைத்த வெள்ளிக்கவசமிருக்கின்றது. அதைச் சிற்சில விசேஷதினங்களில் சாத்துகின்றனர். வைகுண்ட சதுர்த்தசியன்று அக் கவசத்தைத் தவறாமல் சாத்துகின்றனர்.

(5) * கோரே ராமர் கோவில்:—இது பஞ்சரத்னேசுவரர் கோவிலுக்குக் கிழக்கில் 10கெஜ தூரத்தில் இருக்கின்றது. இதில் ஸ்ரீராமர், இலட்சுமணர், ஜானகி, பரதர், சத்ருக்னர் ஆகிய ஐவர் களுடைய மூர்த்திகள் இருக்கின்றன. இவ்வைந்து மூர்த்திகளும் தூவெண்மையான சலவைக்கல்லினாற் செய்யப்பட்டு, அதிசுந்தர மாக விளங்குகின்றன. இவைகளைத் தவிர, இந்தக் கோவிலின் இடதுபாகத்தில் எட்டு துதிக்கைகளையுடைய விநாயகருடனும், வலதுபக்கத்தில் அஷ்டபுஜ மஹிஷாசுரமர்த்தனியுடனும் சிவபார் வதியின் விக்கிரகங்கள் இருக்கின்றன. கர்ப்பக்கிரஹத்திற்குச் சுமார் 50 அடி-தூரத்தில் ஆஞ்சனேயர் அஞ்சலியஸ்தராய் நிற்கின் றார். ஒவ்வொரு ஏகாதசியன்றும் திருப்பல்லக்கில் ஸ்ரீராம ருடைய புறப்பாடு நடக்கின்றது.

---

கொண்ட பெருங்காரியம் பெருங்காவியமாதலின், அது இடையூறின்றி இனிதே முடிவடைதற் பொருட்டு, இவ்விடத்தில் சிவபிரானை நோக்கித் தவம் புரிந்தனர் என்றும், அவர் தவத்திற்கிரங்கி சிவபிரான் அவர்முன் தோன்றி, அவர் வேண்டிய வரங்களைக்கொடுத்ததுமன்றி, தற்காலம் பாரத மகாகாவியத்தில் பஞ்சரத்னங்களாய் விளங்கும் (1) விஷ்ணு மகாத்மியம் (2) விஷ்ணு ஸஹஸ்ரநாமம் (3) ஸனத்ஸுஜாத வியாக் யானம் (4) பகவத்கீதை (5) உத்தரகீதை ஆகிய இவைகளை உப தேசித்து மறைந்தனர் என்றும், இது காரணம்பற்றி இவருக்குப் பஞ்ச ரத்னேசுவரர் என்னும் நாமம் வழங்குகின்றதென்றும் சொல்லுவாரும் உளர். கிருஷ்ணபரமாத்மா உபதேசம் செய்ததாகக் கருதப்படும் கீதையை சிவபிரான் உபதேசித்தனர் என்று சொல்வதைச் சில வீர வைஷ்ணவர்கள் ஒப்பாராயினும், பஞ்சரத்னேசுவரர் என்னும் ஓர் மூர்த்தி உண்டானதற்கு இது ஓர் தகுந்த காரணமாகத் தெரிகின்றது.

* குறிப்பு:—கோரே=வெண்மை நிறத்தவர்.

(6) * முரலிதரர் கோவில்:—இது கோரே ராமர் கோவிலுக்குச் சுமார் 20 கெஜ தூரத்தில் இருக்கின்றது. இக் கோவிலில் இருபக்கங்களிலும் இரண்டு கன்றுகளையுடைய ஓர் புனிற்றாவின் முன் வேணுகானஞ் செய்துகொண்டு நிற்கும் கிருஷ்ணமூர்த்தியின் விக்கிரகம் தரிசிக்கத் தகுந்தது. வெள்ளைச் சலவைக்கல்லினால் மிக அழகாகச் செய்யப்பட்டுள்ளது. சிற்சில சமயங்களில் அர்த்தநாரி நடேசுவர மூர்த்தி (உமையொருபாகத் தாண்டவ மூர்த்தி) போல் விளங்கும்படி இராதாகிருஷ்ண அலங்காரம் செய்கின்றனர். அந்த அவசரத்தில் தரிசிப்பது தேடித்தேடொணாக் காட்சியைத் தேடிக்கண்டுகொண்டதுபோன்ற மகிழ்ச்சியை அளிக்கின்றது. பிரதிவருஷமும் கோகுலாஷ்டமி உற்சவம் நடக்கின்றது.

(7) இலட்சுமி நாராயணர் கோவில் (8) தாரகேசுவரர் கோவில்:—இவைகள் இரண்டும் நாரோசங்கரர் கோவிலுக்கு அருகில் இருக்கின்றன.

(9) பாலாஜி கோவில் (வேங்கடாஜலபதியின் கோவில்):-இது கோதாவரி ஸரஸ்வதி இந்நதிகளின் ஸங்கமஸ்தானத்தில் இருக்கின்றது. வலதுபக்கத்தில் † பூதேவி இடதுபக்கத்தில் ஸ்ரீதேவி ஆக இரு தேவிமாருடன் பாலாஜி சேவைசாதிக்கின்றனர். தென்னாட்டுத் திருப்பதியில் உள்ள பாலாஜியைப்போலவே இப்பக்கத்தில் இவரும் பூரணமான இலட்சுமிகடாட்சத்தோடு தக்க ஐசுவரியவானாக இருக்கிறார். தங்கக்கிரீடம், கல்லிழைத்த நகைகள் முதலியன 50000 ரூபாய் பெறுமானவையும், வெள்ளியினால் செய்த அபிஷேக ஆரத்தி பாத்திரங்கள் சுமார் 3000 ரூபாய் பெறுமானவையும் இருக்கின்றன. பாப்பாஜி பாபா (Bapaji Baba) என்னும் வீரவைஷ்ணவர் ஒருவர் ‡ இலட்சரூபாய் செலவழித்து

---

* குறிப்பு:—முரலிதரர் = வேணுகோபாலர்.

† குறிப்பு:—இம்மூர்த்தியை இவ்விடத்தில் இராமதேவி என்னும் பெயரோடு அழைக்கின்றனர்.

‡ குறிப்பு:—நம் தென்னாட்டில் தன வைசியர் என்னும் பேர்பெற்று, தனத்தை முற்றிலும் தம்முள் வசியம் செய்து கொண்டு, 10 லட்சம் முதல் 50 லட்சம் வரை லட்சங்களை லட்சியமின்றிச் செலவழித்துத் திருப்பணி செய்து, கும்பாபிஷேகத்திற்கு மட்டும் ஒரு லட்சம் வரை செலவு செய்து புதுப்பித்திருக்கும் அனேக கோவில்களைப் பார்த்திருக்

இக்கோயிலைக் கட்டினதாகத் தெரிகின்றது. இக் கோயிலைக் கட்டினவரான பாப்பாஜி பாபாவின் பாட்டனரான கணபதி ராவ் என்பவர் தட்சண தேசத்திற்குத் தீர்த்தயாத்திரையின் பொருட்டுச் சென்றிருந்தபோது, திருநெல்வேலியில் உள்ள தாம் பிரவர்ணி நதியில் ஸ்நானம் செய்த சமயத்தில் இந்த விக்கிரகத்தைக் கண்டெடுத்து, அதைமறைத்து எடுத்து வந்து தமதில்லத்தில் ஓர் பாகத்தில் வைத்துப் பூசித்து வந்ததாகவும், அவர் புத்திரனை திம்மய்யா என்பவருக்கு எம்பெருமான் கனவில் தோன்றிக் கட்டளையிட்டு அருளியபடி, அவர் இம் மூர்த்தியை இப்பட்டினத்திற்குக் கொண்டுவந்து ஒரு சிறு கோவில் கட்டி அதில் பிரதிஷ்டை செய்ததாகவும், இறுதியாக பாப்பாஜி பாபா இப்போதிருக்கும் கோவிலைக் கட்டினர் என்றும் சொல்லிக் கொள்ளுகின்றனர். மகாராஷ்டிரதேசத்தை ஆண்டுவந்த பேஷ்வேக்களில் ஒருவர் இதற்கு 11 கிராமங்களை சர்வமானியம் செய்ததாகவும், அவைகளிலிருந்து தற்காலத்திலும் சுமார் 7000 ரூபாய் வரையில் வருமானம் வருகிறதாகவும், இதைத் தவிர, அரசாங்கத்தார் வருஷம் ஒன்றுக்குச் சுமார் 2250 ரூபாய் மோகினியாகக் கொடுப்பதாகவும் தெரிகிறது. இக்கோவிலில் பிரதி வருஷமும் நவராத்திரி உற்சவம் வெகு சிறப்பாய் நடந்து வருகிறது. முதல் நாள் சக்கரத்தாழ்வாரைப் பெரிய இரதத்தில் ஆரோகணிக்கச் செய்து, அவருக்கு இரதோற்சவம் நடக்கின்றது. பிறகு 2வது முதல் 9வது நாட்கள் வரை, சிம்மம், குதிரை, யானை, சந்திரப்பிரபை, சூரியப்பிரபை, ஆஞ்சனேயர், கருடன், மயில், ஆதிசேஷன் ஆகிய ஒன்பது வாகனங்களில் பெருமாளை ஏழச்செய்து உற்சவம் நடத்துகின்றனர். 10வது நாள் பெருமாளுக்கு இரதோற்சவம்

---

கும் நமக்கு, ஒரு லட்சம் ரூபாய் செலவழித்துக் கோயில்கட்டினது அவ்வளவு சிறப்பித்துப் பாராட்டுவதற்கேற்றதன்றென எண்ண இடமுண்டு. ஆனல் வடநாட்டில் உள்ள கோவில்கள் எல்லாம், கோவிலுக்குப் போவோர் கோவிலினுள்ளிருக்கும் ஈசனைப் பாராமலும், கோவிலின் மதில்களையும், கோபுரங்களையும், அதிற்செய்திருக்கும் சிற்ப வேலைகளையும் பார்த்துக் காலங்கழித்து விட்டு ஏமாந்துத் திரும்பிவிடாதபடி, மிகச் சிறியவைகளாகக் கட்டப்பட்டிருக்கின்றன. ஆதலின் அப்பக்கத்தில் ஒரு லட்ச ரூபாய் செலவழித்துக் கட்டின கோவில் மிக்க விசேஷமானதாகவே கருதப்படுகின்றது.

நடக்கின்றது. 11வது தினமாகிய ஏகாதசியன்று பெருமாள் கோதாவரிக்கு எழுந்தருளி தீர்த்தம் சாதிக்கின்றார்.

(10) திலபாண்டேசுவரர் கோவில்:—இக்கோவிலிலுள்ள சிவலிங்கம் சுமார் 2 அடி உயரம் இருக்கின்றது. இத்தலத்திருக்கும் சிவலிங்கங்களுள் இதுதான் உருவத்திற் பெரியது. இவ்விலிங்கமானது பிரதிவருஷமும் ஒரு * எள்ளளவு வளருகிறதென்றும், இவ்விதமாக வருஷம் ஒன்றுக்கு எள்ளளவு வளர்ந்து அண்டமுகட்டைச் சேருகிற காலத்தில் மகாப்பிரளயகாலருத்திரருள்பட சகல அண்டபிண்ட சராசரங்களும் நாசமடையும் என்றும் கருதப்படுகின்றது. பிரதோஷகாலங்களில் பிரமாதி தேவர்கள், இந்திராதி திக்குப்பாலகர்கள், சௌனகாதிமகரிஷிகள், அரம்பையாதி அப்ஸரஸ்திரீகள், அனல அனிலாதி அஷ்டவசுக்கள், யட்சர், கின்னரர், கிம்புருடர், கந்தருவர், நாகர் ஆகிய எல்லோரும் திலபாண்டேசுவரரின் தரிசனார்த்தம் வருகின்றனர் என்றும், அன்று இக்கோவிலுக்கு வருவோர் ஒரே இடத்தில் ஏககாலத்தில் எல்லாத் தேவர்களையும், எல்லா ரிஷிகளையும் தரிசித்த பலன் கிடைக்கிறதென்றும் கருதப்படுகின்றது. சுவாமி சந்நிதிக்கெதிரில் நந்தியெம்பெருமான் எழுந்தருளியிருக்கின்றார். இக் கோவிலைச்சுற்றிலும் அம்பாள்,விட்டோபா, நரசிம்மசுவாமி, வாமனர் ஆகிய இவர்களுடைய கோவில்கள் இருக்கின்றன. மகா சிவராத்திரி தினத்தன்றும், ஆவணிமாதத்தின் பிரதி சோமவார தினத்தன்றும், பகல் 3 மணி சுமாருக்கு வெள்ளியினாற் செய்த திலபாண்டேசுவரரின் முகபிம்பத்தைப் பல்லக்கில்வைத்துத் திருவிழா நடத்துகின்றனர். மகா சிவராத்திரியன்றும் வைகுண்ட சதுர்த்தசியன்றும் இரவில் அர்த்தநாரீசுவர அலங்காரம் செய்கின்றனர்.

(11) முக்தேசுவரர் கோவில்:—ஹில்லி * தரவாஜா, நாம்வ் தரவாஜா என்னும் இரு வாயில்களுக்கிடையில், கோதாவரி தீரத்தில் உள்ள ஓர் மேடையே இக்கோவில் என்றும், அதன்மேலிருக்கும் சிவலிங்கமே முக்தேசுவரர் என்றும் சொல்லிக்கொள்ளுகின்றனர். இதனருகில் மேகதீர்த்தம், கோடிதீர்த்தம் என்னும் இரண்டு தீர்த்தங்கள் இருக்கின்றன.

---

* குறிப்பு:—திலம்=எள்.

* குறிப்பு:—தரவாஜா=வாயில்.

(12) விட்டோபா கோவில்:—இக்கோவில் விக்டோரியா பாலத்தின் அருகில், கோதாவரியின் இடது கரையில் இருக்கின்றது. முன்னொருகாலத்தில் குரு சிம்மராசியில் இருக்கும் சமயத்தில், சில வேதியர்கள் கோதாவரி ஸ்நானத்திற்காக வந்தனர். அவர்கள் வந்து அங்கிருந்த காலவர் (Galava) என்னும் பெரியாரின் ஆசிரமத்தில் ஏழுநாள் தங்கியிருந்து, தீர்த்தயாத்திரையையும், மற்றும் செய்யவேண்டிய சிராத்ததானாதிகளையும் செய்து முடித்துவிட்டு, தங்களிருப்பிடத்திற்குப் புறப்பட்ட சமயத்தில், காலவர் அவர்களைநோக்கித் தாம் அண்டர்கள் புகழும் * பண்டரிபுரம்சென்று, ஸ்ரீ பாண்டுரங்கனை தரிசிக்கப்போவதாய் எண்ணங் கொண்டிருப்பதாய்ச் சொல்லி, அங்கெழுந்தருளியிருக்கும் பக்தவத்ஸலனான பண்டரி நாதருடையவும், அந்த க்ஷேத்திரத்தில் உத்தர தட்சிண வாகினியாய் ஓடும் பரமபவித்திரமான பீமாநதியினுடையவும் மகிமையைப்பற்றி வருணித்தனர். அதைக்கேட்ட வேதியர்கள் தங்களையும் உடன்கொண்டு போகும்படி வேண்டிக்கொண்டனர். அதுகேட்ட காலவர் அவர்கள் பக்தியை மெச்சி அவர்கள் வேண்டுதற்கிணங்கினாராயினும், அவர்களுள் மிகவும் வயது சென்றவராயிருந்த விசுவநாத சர்மா என்பவர் வயோதிகத்தினால் நடக்கச் சக்தியற்றிருந்தமைகண்டு, அவரை அவ்விடத்திலேயே விட்டுப்போவது நலம் என்று சொல்ல, அதற்கு அப்பிராமணர்களும் உடன்பட்டு அவரைத் தனியேவிட்டு மற்றவர்களும் காலவரும் பண்டரிபுரத்திற்குச் சென்றனர். தாம் விருத்தராய் இருந்த காரணத்தைமுன்னிட்டுத் தம்மை விட்டுச் சென்றார்கள் என்பதை உணர்ந்த விசுவநாத சர்மா என்னும் உத்தம பக்தியையுடைய பிராமணர் தமக்குப் பண்டரீ தரிசனம் கிடைக்கவில்லையே என்று மனம் வருந்தித் தாம் ஸ்ரீ விட்டோபாவின் தரிசனம் செய்யாது உண்பதில்லையென உண்ணாவிரதம் பூண்டனர். அன்னபானாதிகள் ஒன்றுமின்றி ஜிதேந்திரியராய் ஒருவழிப்பட்ட மனத்தோடு ஸ்ரீ புண்டரீகவரதனை இரவும் பகலும் தியானித்துக்கொண்டு காலம் கழித்தனர். அடியார்க்கெளியவரும், அடியார்களுக்கு நேரும் இன்பதுன்பங்கள் தம்முடையனவென்று கருதும் பரமகருணா

* குறிப்பு:—இப்புண்ணிய ஸ்தலத்தைப்பற்றிய முழு விவரமும் இப்புத்தகம் முதற்பாகம் 203 முதல் 246 வரை பக்கங்களிற்காணலாம்.

நிதியான பண்டரிநாதன், இவ்வேழை வேதியரின் மனோதிடத்தை யறிந்து, வியந்து, தாம் ஓர் வயதுசென்ற பிராமணர்வேடந்தாங்கி அறுசுவையுண்டி, பால், பழம் முதலியவைகளைச் சில பாத்திரங்களில் எடுத்துக்கொண்டு, விசுவநாத சர்மாவின்முன் தோன்றி அவரைவிளித்து, "ஓ! பிராமணரே! ஏன் இந்த விருத்தாப்பிய காலத்தில் உணவருந்தாது உடலைவாட்டுகின்றீர்? சுவரைவைத்துக் கொண்டன்றோ சித்திரம் எழுதவேண்டும். எண்ணரிய பிறவிகளில் இம்மானிடப் பிறவி கிடைப்பது அரிதினும் அரிதன்றோ. இப் பிறவிதப்பினால் எப்பிறவிவாய்க்கும்; யாதாகும் என்று நீர் அறிவீரா? மானிடஜன்மத்தில் மகா உத்கிருஷ்டமான பிராமண ஜன்மம் பெற்றிருக்கின்றீர். அதிலும் வேதசாஸ்த்திர பாரங்கதராகவும் இருக்கின்றீர். பெறுதற்கரிய பிறவியைப் பெற்றபின், அப்பிறவியினாலெய்தும் அரும்பயனைப் பெறாது அப்பிறவியை யொழித்தல் பெரும் பேதமையன்றோ. "பேதமை என்பது மாதர்க்கணிகலம்." என்னும் ஆன்றோர்மொழி உமது பேதமையினால், பேதமையென்பது வேதியர்க்கணிகலம் என மாறிவிடும் போல் தோற்றுகின்றதே! அங்ஙனம் உமக்கு விட்டல்நாதனை தரிசிக்கவேண்டிய உண்மையான தாகம் இருந்திருப்பின், நீர் உம்மை அழைத்துச்செல்லும்படி உமது சினேகிதர்களை மன்றாடிக் கேட்டுக்கொண்டிருக்கலாகாதா? இப்போது அவர்கள் போனபின்பு சுமார் 250 மைல் தூரத்திலிருக்கும் பண்டரிபுரத்திலுறையும் பாண்டுரங்கனை தரிசித்தாலொழிய உண்பதில்லை யென்று முரட்டுப்பிடிவாதம் செய்வதில் என்னபயன். தவிர, பண்டரிநாதனை தரிசிக்க விருப்பங்கொண்ட நீர் யான் உமக்காகக் கொண்டுவந்திருக்கும் பக்குவான்னங்களைப் புசித்துப் பாலைப்பருகி, சரீரத்தை திடப்படுத்திக்கொண்டு, உம்மாற்கூடியவரையில் நடந்து அவரிருக்குமிடத்தை அணுகுவதன்றோ அறச்செயல். அஃதின்றி இத்துணை தூரத்திலிருந்துகொண்டு, அவர்பேரிற் பழிசுமத்தி அன்னபானாதிகளின்றி இவ்விருத்த சடலத்தை நஷ்டமாக்குவது தற்கொலைபுரிவதாகும் மறச்செயலன்றோ. வேதபாராயணஞ் செய்த வேதியராகிய உமக்கு வேதமொழிகளை விரித்துரைப்பது வீண்மொழியாகும். பண்டரிபுரத்திலிருந்து இங்குவந்து சேவைசாதிப்பார் என்ற முழுநம்பிக்கை உமக்கிருந்திருந்தால், அங்குபோக வேண்டுமென்ற ஆவல் கொண்டதேன்? உமதில்லத்தை விட்டு

இங்குவரவேண்டிய காரணமென்ன?" எனப் பல நீதிமொழிகளையும், சில சமயோசித வழிகளையும் உரைத்து அவர் மெய்யன்பைச் சோதித்தனர்.

கண்ணன் வாயினின்றும் வந்த கருணைமொழிகளைக் கேட்ட விசுவநாதசர்மாவென்னும் விப்பிரோத்தமர் அவருடைய தரிசன மாத்திரத்தாலேயே அருட்பிரகாசம் பெற்றாராய்ப் பின்வருமாறு மறுமொழி பகர்ந்தனர். "ஹே! பிரமகுலதிலகரே! நீர் என்மீது இரக்கங்கொண்டு இத்தனை பண்டுபலகாராதிகளையும், அன்னபானாதிகளையும் சுமந்து வந்ததற்காக உமக்கு என்ன கைம்மாறு செய்யப் போகின்றேன். தெய்வப்புலமைத் திருவள்ளுவனாரும் "வருவிருந்து வைகலு மோம்புவான் வாழ்க்கை பருவந்து பாழ்படுதலின்று." எனவும், "செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான் நல் விருந்து வானத்தவர்க்கு." எனவும் நீதிமொழிகள் புகன்று இல்வாழ்வோர் தம்மில்லந்தேடி வரும் விருந்தை ஓம்புவான் பணித்துள்ளனரே தவிர,

**இருக்கு மிடந்தேடி என்பசிக்கே யன்னம்**
**உருக்க முடன் கொண்டுவந்தால் உண்பேன்—பெருக்க**
**அழைத்தாலும் போகேன் அரனே என்தேகம்**
**இளைத்தாலும் போகேன் இனி.**

என்றபடி தானிருக்குமிடந்தேடி வந்து அன்னமளிக்கவேண்டும் என்ற பிடிவாதத்தோடு இருந்தவிடம் விட்டகலாதிருக்கும் விருந்தைத் தேடிப்போகச் சொல்லவில்லையே. அன்றியும், "உருக்க முடன் கொண்டுவந்தால் உண்பேன்" என்று உரைக்கும் அதிதிகளிருக்குமிடந்தேடி அன்னமெடுத்துச் செல்வதே அவசியமில்லாதிருக்க, "உருக்கமுடன் கொணர்ந்தாலும் உண்ணேன்." என்னும் உண்ணுவிரதம் கொண்டிருக்கும் ஏழைப் பிராமணனிருப்பிடந்தேடி, இத்துணைச் சிறந்த உணவைக்கொண்டு வந்த உம்மைப் புகழாதிருப்பதெங்ஙனம்! ஆயினும் விட்டல் நாதனை தரிசித்தாலொழிய உணவு கொள்ளுவதில்லையென்று உண்மையான உறுதி கொண்டுள்ளேன். நீர் சொல்லுகிறபடி என் நண்பர்களோடு போகவியலாமற்போன மகாபாபியான எனக்குப் பாண்டுரங்கன் திருப்பாத தரிசனம் கிடைப்பதருமையே. "ஆயினுமுன்

மண்ணு ருயிர்களுக்கும் வானவர்க்கும் தானிரங்கி
உண்ணுக் கொடுவிடமும் உண்டனையே—எண்ணுமல்

வேய்த்தவள வெற்பெடுத்த வெய்யவரக் கன்றனக்கும்
வாய்த்த வரமெல்லாம் வழங்கினையே—சாய்த்தமன

வீம்புடைய வன்முனிவர் வேள்விசெய்து விட்டகொடும்
பாம்பையெல்லாம் தோளிற் பரித்தனையே—நாம்பெரியர்

எஞ்சேமென் ஞுணவத்தா லேற்ற விருவரையும்
அஞ்சேலென் றுட்கொண் டருளினையே—அஞ்சுபன்றித்

தோயாக் குருளைகளின் துன்பம்பொரு தன்று
தாயாய் முலைப்பாலுந் தந்தனையே—வாயிசைக்குப்

பாண்டியன்முன் சொல்லிவந்த பாணன்பொருட் டடிமை
வேண்டி விறகெடுத்து விற்றனையே—ஆண்டொருநாள்

வாய்முடியாத் துன்புகொண்ட வந்திக்கோ ராளாகித்
தூய்முடிமேன் மண்ணுஞ் சுமந்தனையே—ஆய்துயர

மாதவஞ்சேர் மாணிக்க வாசகருக் காய்குதிரைச்
சேவகன்போல் வீதிதனிற் சென்றனையே—மாவிசையன்

வில்லடிக் கெஞ்சம் விரும்பியதல்லா லெறிந்த
கல்லடிக்கு முள்ளங் களித்தனையே—மல்லலுறும்

வில்வக் கிளையுதிர்த்த வெய்ய முசுக்கலையைச்
செல்வத் துரைமகனுய்ச் செய்தனையே—சொல்லகலின்

நீளுகின்ற நெய்யருந்த நேரெலியை மூவுலகும்
ஆளுகின்ற மன்னவனு யாக்கினையே—கோளகல

வாய்ச்சங்கு நூலிழைத்து வாய்ச்சிலம்பி தன்னையுயர்
கோச்செங்கட் சோழனெனக் கூட்டினையே—ஏச்சறுநல்

ஆறடுத்த வாசீசர்க் காம்பசியைக் கண்டுகெட்டுச்
சோறெடுத்துப் பின்னே சுமந்தனையே—கூறுகின்ற

தொன்மைபெருஞ் சுந்தரர்க்குத் தோழனென்று பெண்பரவை
நன்மனைக்குத் தூது நடந்தனையே—நன்மைபெற

இற்றென்ற விற்றென்னு வெத்தனையோ பேர்கள்செய்த
குற்றங் குணமாகக் கொண்டனையே—

** ** ** **

இப்பாரி லுன்மேலன் பில்லெனினு மன்பனென
ஒப்பாரி யேனு முடையேன் காண்—தப்பாய்ந்த

*மட்டுவிடே னுண்ருண் மறக்கினும் வெண்ணீற்றுநெறி*
*விட்டுவிடே னென்றனைக்கை விட்டுவிடேல்—துட்டனென*

*மாலும் திசைமுகனும் வானவரும் வந்துதடுத்*
*தாலுஞ் சிறியேனைத் தள்ளிவிடேல்—சாலுலக*

*வாதனைகொண்டோ னென்றுமற் றெவரா ஞலும்வந்து*
*போதனைசெய்தாலு மெனைப் போக்கிவிடேல்—நீதயவு*

*சூழ்ந்திடுக வென்னையுநின் ருெண்டருடன் சேர்த்தருள்க*
*வாழ்ந்திடுக நின்ருள் மலர்.*

(வடலூர் அருட்பெருஞ்சோதி ஸ்ரீராமலிங்கசுவாமிகள்
அருளிச் செய்த திருவருட்பா).

என்று ஓர் தென்தேயத்துப் பெரியார் தம் நெஞ்சொடுகிளந்து நெக்குநெக்குருகிப் பாடியுள்ளபடி, சம்ஹார கர்த்தாவாகிய பரம சிவனே அடியார்களின் பொருட்டு அனேகம் செய்யவொண்ணுத் தொழில்களைச் செய்திருக்கும்போது, தம்மை நினைந்து வழிபடும் அடியார்களைக் காத்தலையே தம்தொழிலாகக் கொண்டிருக்கும் இரட்சண்ணிய கர்த்தாவான புண்டலீகவரதன் என்னை இக்கதியில் இறக்கவிடுவாரா? நான் இவ்வாறிறப்பது அவருக்குச் சம்மதமாயின் அது மறச்செயலாவ தெங்ஙனம்? யான் இங்ஙனம் உண்ணு விரதம் பூண்டிருப்பதும், "தம்பாங்கர், ஒண்கையிற்ரு னென் றின்றி உண்ணின்று உயிர்களை ஊழ்த் திண்கயிற்ரு லாட்டுகின்ற சித்தனும், வண்கையுடைத்தானசைந்தான் மற்றைச்சகமசையு மென்று மறை தேனசையச் சொல்லுகின்ற" தேவதேனுமான திருமாலின் திருவருட்பணியேயாமென்று நாம் ஏன் கொள்ளலாகாது. பக்தவத்ஸலரான பாண்டுரங்கன், தம்மை மனம், வாக்கு, காயம் என்னும் திரிகரணங்களில் ஒன்றினுலேனும் ஒருமையோடு வழிபட்ட அடியார்களின் பல்வித மனோரதங்களைப்பூர்த்தி செய்து வைத்த பரமதயாளுவன்றோ. அதே பாண்டுரங்கன் இளமைப்பருவம் முதல் தம் பக்தியில் ஈடுபட்டிருந்த இரக்குடாபாயி என்னும் இளம்பெண்ணிற்குத் தம் நாமத்தையே பூண்ட சர்வ சாதுவான விட்டோபா சாது என்பவரை மணமகனுய்த் தேடிக் கொடுத்தும், அவர் அருமைப் புதல்வரான * ஸ்ரீ ஞானதேவ்

* குறிப்பு, ஞானதேவ் சுவாமிகளுடைய மற்றும் சில விவரங்களை இப்புத்தகம் முதற்பாகம் 197, 198-வது பக்கங்களிற் காணலாம்.

சுவாமிகளுக்காக அவர் வீற்றிருந்த குட்டிச்சுவரை நடக்கச்செய்தும், அவரை பிராமணரல்லரென்று அகம்பாவ தர்க்கம் செய்த அந்தணர்கள் முன்னிலையில், தண்ணீர் நிறைந்த தோற்பைகளைச் சுமந்துசென்ற எருமைக்கடாவைக் கொண்டு பிரம ஞானோபதேசம் செய்வித்தும், அவருடைய ஆசாரியர் வீட்டில் நடந்த திதியன்று அவருடைய பிதுர்க்களை நேரில் அனுப்பி உண்ணச்செய்தும், ஸ்ரீ உத்தவாம்சரான நாம்தேவ் சுவாமிகள் குழந்தையா யிருக்கும்போது, அவர் கொண்டுவந்த அன்னத்தைத் தாமுண்டு, அவரை உண்பித்தும், அவருக்கு அளவிலாப்பொருளை யுதவி ஓர் சீமானுடைய மகளை மணக்கச்செய்தும், அவருக்கோர் கூலியாளாகச்சென்று அவரிருக்க ஓர் அழகிய பந்தல் அமைத்துக் கொடுத்தும், ஸ்ரீ ஏகநாத சுவாமிகள் வீட்டில் பரிசாரகன்வேலை செய்தும், சக்குபாயி அம்மையார் வீட்டிற்கேகி, அவ்வில்லத்தில் ஏற்பட்டிருந்த பிணக்குகளைத் தீர்த்தருளியும், முகமதிய அரசனால் மானமழிய நேர்ந்ததற்காக அஞ்சித் தம்மைச் சரணடைந்த கானுபாத்ராவைத் தம்முள் ஐக்கியம் செய்துகொண்டும், * ஸ்ரீ துக்காராம் சுவாமிகளுக்காக அவர் நிலத்தை உழுது பயிரிட்டும், பித்தளைச் செம்பைச் தங்கச் செம்பாய்ச் செய்தும், ஓர் பிராமணன் அகத்தில் உணவுகொள்ளத் தாமே நேரில் அதிதியாய்ச் சென்றும், அவர் வழக்கப்படி பண்டரீபுரம் வரவியலாமல் பிணிவாய்ப்பட்டிருந்த காரணத்தால், தாமே அவரில்லஞ்சென்று தரிசனங்கொடுத்தும், பின்னும் எண்ணிறந்த லீலாவினோதங்களைச் செய்து தம்மையே நம்பித் தம் நாமத்தையே பஜித்துவந்த தம் அடியார்களான ஸ்ரீ நிவிருத்திதேவ், ஸ்ரீ சோபான்தேவ், ஸ்ரீ சாங்கதேவ், ஸ்ரீ மோர்யாதேவ், ஸ்ரீ முகுந்தராஜர், ஸ்ரீ நரஹரிலோரானர், ஸ்ரீ ஹரிதாஸர், ஸ்ரீ விஸோபாகேசர், ஸ்ரீ கோராகும்பார், ஸ்ரீ ஸாம்வதாமாளி, ஸ்ரீ கிருஷ்ணபா அப்பா, ஸ்ரீ பரசாபாகவதர், ஸ்ரீ ஜாலந்தரநாதர், ஸ்ரீ கோரட்சநாதர், ஸ்ரீ மச்சேந்திரநாதர், ஸ்ரீ காஹினிநாதர், ஸ்ரீ தனநாதர், ஸ்ரீ கோபிசந்தராஜா, ஸ்ரீ ஸாஹஸேனர், ஸ்ரீ பானுதாஸர், ஸ்ரீ கூர்மதாஸர், ஸ்ரீ ரோகிதாஸர், ஸ்ரீ சூரதாஸர், ஸ்ரீ மாதவதாஸர், ஸ்ரீ புரந்தரதாஸர்,

* இப் பெரியாருடைய மற்றும் சில விவரங்களை இப்புத்தகம் முதற்பாகம் 199 முதல் 202 வரை பக்கங்களிற் காணலாம்.

ஸ்ரீ கனகதாஸர், ஸ்ரீ வரதராஜர், ஸ்ரீமுக்தாபாயி, ஸ்ரீகர்மாபாயி, ஸ்ரீ மீராபாயி, ஸ்ரீ நிராபாயி, ஸ்ரீ கிரிபாயி, ஸ்ரீ ரேணுகானந்தனர், ஸ்ரீ ஆனந்தமூர்த்தி, ஸ்ரீ கபீர், ஸ்ரீ கமால், ஸ்ரீ கமாலி, ஸ்ரீ சோகா * மஹார், ஸ்ரீ பாஜிபட்டாணி, ஸ்ரீ ஷேக்முகமது, ஸ்ரீ லத்திப்கான், ஸ்ரீ முகமதுபட்டாணி, ஸ்ரீ ஸஜனகசாயி முதலிய நூற்றுக்கணக்கான அடியார்களைக் காத்து இரட்சித்த கருணாநிதியன்றோ. அவ்வாறிருக்க ஏழையாகிய அடியேனை ஏன் புறக்கணிக்கவேண்டும். அங்ஙனம் யான் அவர் கிருபாநோகத்திற்கு இலக்காகத்தகாதவனாயின் உயிர்வாழ்ந்திருத்தலின் இறத்தலே நலமன்றோ? மேலும் பூலோக வைகுண்டட'தியெனப் பேர்கொண்டு திகழும் புருஷோத்தமன் "நமக்கு முன்னங்காதரவு † செய்து நலங்கற்பித்துப் பின் பெரியவாதரவு செய்யு நங்களய்யனன்றோ. நித்தலுமிங்கே யிரவுமெல்லும் எளியேம் பிழைத்தபிழை ஆயிரமுந்தான் பொறுக்கும் அய்யனன்றோ. நமக்குச்சாலவுறும் வெம்பிணியும் வேதனையும் வேசறிக்கையுந்துயரும் நம்பசியுந்தீர்த்தருளும் நற்றாயன்றோ. ஆர்வமுடன் ஆர்ந்த நமக்கு இவ்விடத்தும் அவ்விடத்தும் எவ்விடத்தும் நேர்ந்தவுயிர்போற்கிடைத்த நேசனன்றோ."

"ஆதலின் யான் இருப்பினும் இறப்பினும் பகவான் விட்டல் நாதனின் தரிசனம் பெற்றாலொழிய தாகசாந்தியும் செய்வதில்லை. இது சத்தியம். இதற்கு மேல் உம்மோடு பேசுவதற்கு என் சரீரத்தில் சக்தியில்லை. என்னை வீணாகத் தொந்திரவு செய்யாது உமதில்லத்திற்கேகலாம்." என்று இறுதியான உறுதிவிடை பகர்ந்தனர். அதைச் செவிமடுத்த எம்பெருமான் அக்கணமே, தம் ஆயிரக்கணக்கான அடியார்களும், கணங்களும், சௌனகாதி மகரிஷிகளும், சித்தசாரணர்களும் புடைசூழ இராதாருக்மணி

* குறிப்பு:—ஸ்ரீ சோகாமஹார் என்பவர் நம் திருநாளைப் போவார் போன்ற ஓர் ஆதி திராவிட பக்தர். இம்மகான்களுடைய் திவ்ய ஜீவிய சரிதங்களை ஈசன் திருவருளிருப்பின் ஒவ்வொன்றாக மொழி பெயர்த்துத் தமிழுலகிற்குதவ நினைந்துள்ளேன். அவருள்ளம் யாதோ அறிகிலேன். இம் மகான்களுள் முகமதியர்கள் உள்பட எல்லா ஜாதியினரும், புலால் விற்பனை செய்பவர் முதலிய பல தொழிலினரும் இருப்பது உணர்தற்பாலது. ஸ்ரீஸஜனகசாயி என்பவர் புலால் விற்றவர்.

† குறிப்பு:—காதரவு செய்தல்—அச்சுறுத்தல்.

சமேதராய் பிரமாதி தேவர்களும் தேடித்தேடொணுத்திவ்விய தரிசனமளித்தனர். அதைக் கண்ட விசுவநாத சர்மா அவர் திருப்பாதகமலங்களில் அனேகமுறை வீழ்ந்து வணங்கி, "ஹே கிருபாஸாகரா! தயாநிதே! தீனபந்தோ! தேவாதிதேவா! அடியேன் உம்முடைய பாதாரவிந்தங்களில் அநன்னிய பாவத்தோடு சரணடைகின்றேன். ஏழையாகிய என்னை ஏற்றுக்கொள்ளும். உம்முடைய அகணித லீலாவிநோதங்களினிடையில் அடியேனையும் ஓர் பொருட்டாக எண்ணி ஈங்கெழுந்தருளினது என் முன்னோர்கள் செய்த நல்வினையின் பயனேயாதல்வேண்டும். பக்தர்களுடைய பவபந்தங்களைப் பறக்கடிப்பவையும், சித்தர்களால் நிரந்தரமும் சேவிக்கப்பெற்றவையும், சர்வமனோபீஷ்டங்களைப் பூர்த்திசெய்து வைப்பவையும், வேதசாஸ்திர புராணுதிகளால் புகழப்பெற்றவையும், இந்திரப் பிரபூதி தேவர்களாலும் காண்டற்கரியனவுமான உமது சரணகமலப் பொற்பாதங்களை யான் வணங்குகின்றேன். ஏ! பரமபவித்திர பாசுரகானலோலா! சுராசுரர்களும், முனிசிரேஷ்டர்களும், மாதமும்மாரி பெய்வதற்குக் காரணபூதர்களான வேதமோதிய வேதியர்களும், சர்வ ஜகத்தினுடையவும் வேதங்களுடையவும் சாரம் நீரே என்று புகழ்கின்ற புண்டலீக வரதா! ஹே புராணப்பிரபு! நீரே சனுதனர். நீரே மாயாவிரஹிதர். நீரே நரஹரி. நீரே முரஹரி. ஹே! லக்ஷ்மிகாந்தா! சம்சாரசாகரத்திற்கிடந்து கரையேற வழி தெரியாது பரிதபிக்கும் என்னை உம் பொன்னிணை அடிகளான தெப்பத்தில் ஏற்றிக்கொள்ளும். அடியேனுடைய ஜீவிய யாத்திரை இன்றோடு முடிவடையட்டும். என் மீதிரங்கிக் கிருபை புரியவேண்டும்." எனப் பலவாறு துதித்த பரமபக்தனை விசுவனுத சர்மாவை அளவற்ற கருணைப் பிரவாகத்தோடு கடாட்சித்து பகவான் "ததாஸ்து" என்று திருவாய் மலர்ந்தருளிப் பின்னும் சொல்லுகின்றார்; "ஹே! பரம பாகவத சிகாமணியே! உனக்காகப் பண்டரீபுரம் விட்டுவந்த நாம் இவ்விடத்திலேயே தங்கியிருந்து நம் திருப்பாத தீர்த்தமான பரம பாவன புண்ணிய நதியாகிய கௌதமியின் ஸ்நானத்தை உத்தேசித்து வரும் உன்போன்ற அடியார்கட்கு அருள்புரிவதாக நினைந்துள்ளோம். உன்னைத் தனியாக விட்டுச்சென்ற உன் நண்பர்களும், உன்னைவிட்டு வரும்படி உரைத்த காலவரும் பண்டரீபுரவழியிற் பாதிவழியும் சென்றார்களில்லை. ஔவைப் பிராட்டி

யார் கஜானனன் உதவியினுல் கைலேயை அடைந்ததுபோல் நீ உன் பக்திமேலீட்டினுல் எம்மை இவணிருந்தபடி கண்டு களித்தாய்.'' என்றுரைத்து மறைந்தனர்.

அக்காலம் முதல் இக்காலம் வரை ஸ்ரீ விட்டோபாவானவர் இத்தலத்தையே உறைவிடமாகக் கொண்டு, கௌதமியையே பீமாவாகப் பாவித்துத் தம்மை நாடிவரும் பக்தகோடிகளுக்குச் சேவை சாதித்தருள்கின்றனர். அவர் இருமருங்கிலும் இராதையும் ருக்மணி தேவியும் இருக்கின்றனர். ஆஷாட சுத்த ஏகாதசியன்று பண்டரீ க்ஷேத்திரத்தில் நடைபெறுவது போலவே இங்கும் பெருந்திருவிழா நடை பெறுகின்றது. துவாதசியன்று பிராமண போஜனம் நடக்கின்றது. இக்கோயிலுக்கருகில், கிரி, புரி, தீர்த்தர், பாரதி என்னும் நால்வகை வட இந்திய சாதுக்களுடைய மடம் இருக்கின்றது. அதில் இராமர் இலட்சுமணர் ஜானகி முதலியோருடைய விக்கிரகங்கள் வைத்துப் பூசித்து வருகின்றனர். கோவிலின் தென்புறத்தில் ஐந்துமுக ஹனுமாரின் சந்நிதி இருக்கின்றது. இத்தகைய ஐந்துமுக ஆஞ்சனேயரின் சந்நிதி பண்டரி புரத்திலும் இருக்கின்றது.

(13) **கங்காமந்திரம்**:—இக்கோவில் இராமகுண்டத்தின் அருகில் இருக்கின்றது. இது பன்னிரண்டு வருஷத்திற் கொருமுறை தேவகுருவான பிரகஸ்பதியானவர் சிம்மராசியில் வரும்போது திறக்கப்பட்டு அவ்வருஷ முழுவதும் திறந்திருக்கின்றது. தவிர கார்த்திகைப் பௌர்ணிமியன்று தீபோற்சவம் செய்வதற்காகத் திறக்கின்றனர். இக்கோவிலின் எதிரிலிருக்கின்ற ஸ்ரீ பாணேசுவர மகாலிங்கத்திற்கு ஜலதாரம்முதலிய பீடாபரிகாரார்த்தம் ததியன்னம் நிவேதனம் செய்கின்றனர். இதற்கருகில் கோபிகாபாயி அம்மையாரால் கட்டப்பட்ட ஓர் பெரிய தர்மசாலே இருக்கின்றது. இக்கோவிலுக்கருகிலேயே * விஷ்ணு பஞ்சாயத்தன் என்று வடஇந்தியாவில் புகழ்ந்துரைக்கப்படும் மூர்த்திகள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள ஓர் சிறுகோவில் இருக்கின்றது.

(14) **தர்கேட்கரின் கங்காமந்திரம்**, (Tarkhedkar's Ganga Mandhir):—இக்கோவில் இராமகுண்டத்தின் அருகில் பேஷ்வேக்

---

* குறிப்பு:— இதைப்பற்றிய விவரம் இப்புத்தகத்தின் முதற்பாகம் 233-வது பக்கத்திற் காணலாம்.

களுடைய தர்மசாலையின் மேல்பாகத்தில் கட்டப்பட்டுள்ளது. அதன் வாயில் தர்மசாலையின் உட்புறமாகவே இருக்கின்றது. இக்கோவில் ஸ்ரீமான் துவரகாநாத் ராகோபா தர்கேட்கர் என்பவரால் கி. பி. 1896-ம் வருஷத்தில் தம்முடைய அருமைத்தாயின் ஞாபகார்த்தமாகக் கட்டப்பட்டதெனத் தெரிகின்றது. இதிலிருக்கும் தேவியின் சிலை மாசுமறுவற்ற வெள்ளைச் சலவைக்கல்லாற் செய்யப்பட்டு அதிசுந்தரமாக விளங்குகின்றது.

(15) அகலியாபாயியின் இராமமந்திரம்:—இராமகுண்டத்தின் ஈசானியத்தில் சுமார் 70 அடி தூரத்தில் இவ்வழகிய கோவில் இருக்கின்றது. அதன் பக்கத்தில் ஓர் சிவன் கோவிலும், தர்மசாலையும் இருக்கின்றன. இந்தோர் நாட்டை ஆண்டுவந்த தருமமூர்த்தியான அகலியாபாய் மகாராணியார் கி. பி. 1785-ம் ஆண்டில் சுமார் 25000 ரூபாய் செலவழித்து இக்கோயிலைக் கட்டினரெனத் தெரிகின்றது. இதிலிருக்கும் இராமர், இலட்சுமணர், ஜானகி, இவர்களின் விக்கிரகங்கள் இராமகுண்டத்தினின்று கிடைத்ததாகச் சொல்லிக்கொள்ளுகின்றனர். ஆதலின் தெரிசனம் மிக்க விசேஷம். இக்கோவிலில் அகலியாபாயி ஆஞ்சனேயர் இவர்களுடைய சிலைகளும் இருக்கின்றன.

(16) ஸ்ரீ கபாலேசுவரர் கோவில்:—இது இராமகுண்டத்தினருகில் கோதாவரியின் இடதுகரையில் இருக்கின்றது. பஞ்சவடியிலுள்ள அனேக தேவாலயங்களுள் இது மிகப் புராதனமும் பிரதானமுமானது.

ஆதிகாலத்தில் பிரமதேவருக்கு சிரங்கள் ஐந்திருந்தன. அவர் தமக்கிருந்த நான்கு முகங்களாலும் நான்கு வேதங்களையும் பாராயணம் செய்துகொண்டு, உபரியாயிருந்த ஐந்தாவது முகத்தினால் மகாவிஷ்ணுவைத் தம் பிதாவென்றும் மதியாது, "நீர் மச்சம், கூர்மம், வராகம், நரசிம்மம், முதலிய தாழ்ந்த யோனிகளிற் பிறந்தவரன்றோ. ஜலந்தராசுரனுடைய தர்மபத்தினியான கற்பிற்கரசி பிருந்தையென்பாளை ஏமாற்றிக் கற்பழித்தவரன்றோ. உமது தாயாரான ரேணுகாதேவியை சிரச்சேதம் செய்த படுபாவியன்றோ. திருட்டுத்தொழிலிலும், சமயத்திற்கேற்ற மாயாவேஷம் போடுவதிலும், சொன்னசொல்லை மாற்றுவதிலும், ஸ்திரீகமனஞ் செய்வதிலும் உம்மை வெல்வார் யாவருளர். "தாயாருடன்பிறந்த

வம்பனே நெய்திருடி" என்றும், "ஒப்பரியமாமனுறிதிருடி" என்றும் முறையே விநாயகருக்கும் வேலவருக்கும் வசைமொழிகள் பிறந்தது உம்மாலன்றோ. தன்னைக் கொல்லவந்த அரக்கனைக் கொல்லச் சென்ற சமயம்பார்த்து, அவன் போன வழியையும் பெரும் பாறைகளால் அடைத்துவிட்டு, அவன் நாட்டையும் கவர்ந்துகொண்ட தம்பியின் சொற்கேட்டு, உம்முடைய பரமபக்தனை வாலியை தருமயுத்தம் செய்யாமலும் மறைந்து நின்று கொன்ற மகாசுத்த வீரரன்றோ. வாரணம்பொருத மார்புடனும், வரையினையெடுத்த தோளுடனும், நாரதமுனிவர்க் கேற்ப நயம்படவுரைத்த நாவுடனும், தாரணிமவுலி பத்துடனும், சங்கரன் கொடுத்த வாளுடனும், திக்கோடு முலகனைத்தும் செருக்கடந்த வீரத்துடனும், ஈரேழுலகங்களையும் வென்றுத் தனக்கு நிகரானோர் ஒருவருமில்லையென எக்காலும் பொன்றாப் புகழெய்தி மனுவாதிய மன்னவர்களுள் ஒருவருக்கும் கிட்டாத "ஈசுவரன்" என்னும் திருநாமம் பெற்று, பிரமாதி தேவர்களிடத்தும் இடம் பொருள் ஏவல் முதலியனகொண்டு, இலங்கையில் அரசாண்டிருந்த பிரதாப இலங்கேசுவரன் நாட்டை ஆண்டிருந்த வரையில், அவனிடமிருந்து அன்னபானாதிகள், மாடமாளிகைகள், மனைவி மக்கள் ஆகிய இல்லறத்திற்குரிய எல்லாவிதச் சுகங்களையும் பெற்றிருந்து, இறுதியில், போர்வினை வந்து மூண்டகாலத்தில், தடாகம் நிறையத் தண்ணீர் இருந்தும் தாமரையிலையின் மேல் ஒதுங்கின தண்ணீர்த் துளியானது தன்னந்தனிமையில் தத்தளிப்பதுபோல், "மந்திரச் சுற்றத்தாரும் வாணுதல் சுற்றத்தாரும், தந்திரச் சுற்றத்தாரும், தன்கிளைச் சுற்றத்தாரும், எந்திரப் பொறியினிற்ப, யாவருமின்றித்" தவிக்க நேர்ந்த காலத்துப் போர்க்கோலஞ் செய்து விட்டார்க்குயிர் கொடாது,

மலரின்மே லிருந்த வள்ளல் வழுவிலா வரத்தி னானீ
உலைவிலாத் தருமம் பூண்டா யுலகுள தனையு முள்ளாய்
தலைவனீ யுலகுக் கெல்லா முனக்கது தக்கதே யால்
புலையுறு மரண மெய்த லெனக்கது புகழதே யால்.

கருத்திலா விறைவன் றீமை கருதினா லதனைக் காத்துத்
திருத்தலா மாகி னன்றோ திருத்துத றீரா தாயின்
பொருத்துறு பொருளுண் டாமோ பொருதொழிற் குரிய ராகி
ஒருத்தரின் முன்னஞ் சாத லுண்டவர்க் குரியதம்மா,

தும்பியந் தொடையல் வீரன் சுடுகணை துரப்பச் சுற்றும்
வெம்புவெஞ் சேனை யோடும் வேறுள கிளைஞ ரோடும்
உம்பரும் பிறரும் போற்ற வொருவன் மூவுலகை யாண்டு
தம்பிய ரின்றி மாண்டு கிடப்பனோ தமையன் மண்மேல்.

அணையின்றி யயர்ந்த வெற்றி யஞ்சினுர் நகைய தாகப்
பிணையொன்று கண்ணாள் பங்கன் பெருங்கிரி நெருங்கப் பேர்த்த
பணையொன்று திரடோள் கால பாசத்தாற் பிணிப்பக் கூசித்
துணையின்றிச் சேற னன்றே தோற்றுள கூற்றின் சூழல்.

செம்பிட்டுச் செய்த விஞ்சித் திருநகர்ச் செல்வந் தேறி
வம்பிட்ட தெரியலெம்மு னுயிர்கொண்ட பகையை வாழ்த்தி
அம்பிட்டுத் துன்னங் கொண்ட புண்ணுடை நெஞ்சோ டைய
தும்பிட்டு வாழ்கிலேன் யான் கூற்றையு மாடல் கொண்டேன்.

அய்யநீ யயோத்தி வேந்தற் கடைக்கல மாகி யாங்கே
உய்கிலை யென்னின் மற்றிவ் வரக்கரா யுள்ளோ ரெல்லாம்
மொய்கணை மாரி யாலே யிறந்து பாழ் முழுதும் பட்டால்
கய்யினு லெண்ணீர் நல்கிக் கடன்கழிப் பாரைக் காட்டாய்.

(கம்பராமாயணம் கும்பகர்ணன் வதைப்படலம்)

என்று கும்பகர்ணன் கொடுத்த ஸ்தோத்திர நிந்தைமொழிகளாகிய சவுக்கடிகளைப் பெற்ற பின்பும், "வில்லம்பு சொல்லம் பிரண்டுண்டு மேதினியில் வில்லம்பிற் சொல்லம்பே மேலதிகம்—வில்லம்பு பட்டுதடா என்மார்பிற் பார்வேந்தே யுன் குலத்தைச் சுட்டுதடா வென் வாயிற் சொல்." என்றபடி வில்லம்புபெறுவதைவிடச் சொல்லம்பு பெறுவது இழிவெனக் கருதாது, தன்முன் பிறந்தோரிருவரையும் தனியே விட்டுத் தன்னுயிர் பெரிதென நினைத்து வந்து அடைக்கலம் புகுந்தவனும், உண்ட வீட்டிற்கு இரண்டகஞ் செய்தவனும், குலத்தைக்கெடுக்க வந்த கோடரிக்காம் பானவனுமான விபீஷணனை

வெம்முனை விளைதவி னன்று வேறொரு
சும்மையா னுயிர்கொளத் துணிதலா லன்று
தம்முனைத் துறந்தது தரும நீதியோ
செம்மையி லரக்கரில் யாவர் சீரியோர்.

தகையறு தம்முனைத் தாயைத் தந்தையை
மிகையுறு குரவரை யுலகின் வேந்தனைப்

பகையுற வருதலுந் துறந்த பண்பிது
நகையுற லன்றியு நயக்கற் பாலதோ.

வார்க்குறு வனைகழற் றம்முன் வாழ்ந்தநாள்
சீர்க்குற வாயிடைச் செறுநர் சீறிய
போர்க்குற வன்றியே புகுந்தபோ திவன்
ஆர்க்குற வாகுவன் அருளி னாழியாய்.

விண்டொழி யொருநிலை நிற்பர் மெய்ம்முகம்
கண்டொழி யொருநிலை நிற்பர் கைப்பொருள்
கொண்டொழி யொருநிலை நிற்பர் கூழுடன்
உண்டொழி யொருநிலை நிற்ப ருற்றவர்.

வேதமும் வேள்வியு மயக்கி வேதியர்க்
கேதமு மிமையவர்க் கிடரு மீட்டிய
பாதகர் நம்வயிற் படர்வரா மெனின்
தீதில ராய்நமக் கன்பு செய்வரோ.

மேனனி விளைவது விளம்பல் வேண்டுமோ
கானகத் திறைவியோ டுறையுங் காலையின்
மானென வந்தவன் வரவை மானுமிவ்
வேனையன் வரவுமென் றினைய கூறினான்.

(கம்பராமாயணம் விபீஷணன் அடைக்கலப்படலம்)

என்று சுக்கிரீவன், சாம்பன், முதலியோர் பல நீதி நியாயங்களை எடுத்துச்சொல்லித் தடுத்தும் சேர்த்துக்கொண்டு, உம் தம்பிகளில் ஒருவனுக்கிக்கொண்ட சத்சங்கசற்குணரன்றோ. உம்முடைய பிறிவாற்றாமையால் நல்ல உடை ஊணுறக்கமின்றி உம்மையே நினைந்து ஒரு வருஷகாலம் உருகியிருந்த என் அன்னையும், பெண்மைக்கெல்லாம் காணியும், கற்பினுக்கணியும், பொற்பின் ஆணியும், அமிழ்தின் வந்த அமிழ்தும், அறத்தின் தாயுமான ஜானகிதேவியை,

பெண்மையும் பெருமையும் பிறப்புங் கற்பெனும்
திண்மையும் ஒழுக்கமும் தெளிவுஞ் சீர்மையும்
உண்மையும் நீயெனு மொருத்தி தோன்றலால்
வண்மையின் மன்னவன் புகழின் மாய்ந்ததால்.

(மீட்சிப் படலம்)

என்றுரைத்தும், மற்றும் கூறத்தகாத பல கடுஞ்சொற்களை வாய் கூசாதுகூறியும் அவரைத் தீயிலிட்ட இரும்பினுங்கடிய மனத்தவ ரன்றோ! அவ்வாறு தீயினிடை மூழ்கித்தூயவராய் வெளிவந்தவரை, ஓர் வண்ணான் தெரியாது தன் மந்தபுத்தியினால் சொன்ன வசை மொழியைப் பொறுது, கர்ப்பவதியென்பதையும் கருதாது, காட்டிலோட்டிய கல்லினுங் கொடிய மனமுடைய கார்க்கோடக னன்றோ. கேட்டதை இல்லையென்னாது கொடுத்துவந்த பெருங் கொடையாளனாகிய மாவலியிடம் சென்றிரந்து மூவடி மண் கொண்டு, உடனே அவனை அவன் கொடுத்த கொடையைக் கொண்டே பாதலத்திலழுத்திய மகாபாதகரன்றோ. உமது மனை விக்குப் பெண்களுக்குரிய ஒழுக்கங்களைக் கற்பித்து தீர்க்க சுமங் கிலியாயிருக்கவென்று ஆசீர்வதித்து அனேக ஆடையாபரணாதி களைக் கொடுத்துதவின மகாபதிவிரதா சிகாமணியாகிய அநசூயா தேவியிடம் சென்று, “எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந்நன்றி கொன்றமகற்கு.” “எளிதென இல்லிறப் பான் எய்தும் எஞ்ஞான்றும் விளியாது நிற்கும் பழி.” என்னும் அறமொழிகளை அறவே மறந்து நிர்வாணபிட்சை கேட்கத் துணிந்த காமுகக் கள்ளரன்றோ!” எனப் பலவாறு நிந்தித்துக் கொண்டிருந்தனர்.

அவ்வசைமொழிகளைக்கேட்ட சங்கரன் மனம்பொறாது, பிரம தேவரை விளித்து, “இராசதகுணம் பொருந்திய உம்மிடமிருந்து இத்தகைய இழிமொழிகள் வெளிவருவது வியப்பன்று. ஆயி னும் இது உமக்கு அடுக்காது. மகாவிஷ்ணுவானவர் சர்வ லோகரக்ஷகர் என்பதை மனதில் வையும். நரக பீதியுள்ளவன் நாராயணனை நம்பியேயாகவேண்டும். விஷ்ணு நிந்தை செய்பவன் சூரிய சந்திரர்களுள்ளளவும் ரௌரவாதி நரகங்களில் வசிக்க நேரி டும். பிரமஹத்தி செய்வோர், மத்திய பிராசனம் செய்வோர், குருபத்தினியை கமனஞ் செய்வோர், களவாடுவோர், ஆகிய இவர்கள் மகாபாதகர்களெனக் கருதப்படுவர். அவர்களோடு சகவாசம் செய்வோரும் பாதகர்களே. ஆனால் விஷ்ணு நிந்தை செய்வோர் இந்த பஞ்சமாபாதகர்களினும் கொடிய பாதகர்களா வர். அவர்களுக்காயினும் பிராயச்சித்தம் உண்டு. விஷ்ணு துரோகிக்குப் பிராயச்சித்தமே கிடையாது. ஆனால் நீர் உம்மிடம் உற்பத்தியான பெண்ணையே கண்ணில்லாக் காமத்தினாற் கலங்கி

மனைவியாக்கிக்கொண்ட மகாபுருஷரன்றோ ! கேட்பாரற்றிருந்தால் இதையும் செய்வீர் ; இன்னமும் செய்வீர்." என்று கடிந்து கூறினர். அதைக் கேட்ட பிரமதேவர் சம்புவைப்பார்த்து, "நீர் தானென்ன பரமசாதுவோ! சுடுகாட்டுச் சாம்பலை யணிபவர், பன்னக பூஷணர், கரித்தோலாடையினர், நிர்வாணமாகப் பிச்சை யெடுத்துத் திரிந்தவர், உமது சரீரத்தில் ஒருபாதியை உமைக்குக் கொடுத்து, மற்றப் பாதியை மாலுக்குக் கொடுத்துவிட்டு, ஏமாந்திருப்பவர், காலனையும் காமனையும், மாமனையும் கொன்றவர், கல்லடியும், சொல்லடியும், வில்லடியும் பட்டவர், மங்கையென்னும் சங்கையின்றி கங்கையைக் கரந்தவர், அஞ்சலஞ்சலென்று சொல்லி அஞ்செழுத்தை யீபவர், பிட்டுக்கு மண்சுமந்துப் பிரம்படியும் பெற்றவர், சூதிலாத பரவையில்லம் தூதுசென்றிரந்தவர்." எனப்பலவாறு நிந்திக்கத்தொடங்கினர். அவ்வசை மொழிகளைக் கேட்டு சினங்கொண்ட காமாந்தகன் * ஐம்முகப் பிரமாவின் ஓர் சிரசைக்கிள்ளி நான்முகனுக்கினர். அப்படிக் கிள்ளப்பட்ட சிரசானது தம் கையிலேயே ஒட்டிக்கொண்டதைக் கண்ட சிவபெருமான் கைலையினின்றிழிந்துவரும் வழியிலுள்ளதும், இமயமலையின் உச்சியில் விஷ்ணுகங்கையின் உற்பத்தி ஸ்தானத்திலுள்ளதுமான பதரிகாசிரமம் வந்ததும், அங்குக் கோயில்கொண்டுறையும் பதரிநாராயணன் திருவருளால் அக்கபாலம் நழுவி விழுந்து இக்காலத்துப் பிதுர்க்கடன்களை முடிக்க அதிமேன்மையான இடமாகக் கருதப்படும் பிரமகபாலமாய் விளங்கியது. இது காரணம் பற்றியே ஈசுவரனுக்குக் † கபாலி என்ற நாமம் விளங்கிவருகின்றது.

---

* குறிப்பு:—முற்காலத்தில் ஓர் நாள் கைலாயத்தில் பார்வதிதேவியார் தம் தோழிகளுடன் சொக்கட்டானுடிக் கொண்டிருந்த சமயத்தில் பிரமதேவர் அங்குவரவே, அவருடைய ஐந்து முகங்களையும் அதிதூரத்திற் கண்ணுற்ற தேவியானவர், அகோரம் முதலிய ஐந்துமுகங்களையுடைய தம் பதியாகிய சிவபிரானே வருகின்றனரோவென ஐயுற்று அதிவிரைவில் ஆட்டத்தை நிறுத்தி எழுந்து நின்றதைக் கண்ட அவர் தோழிகள் பரிகசித்ததும், மனம் பொறாராய்த் தம் கணவரிடம் தெரிவித்ததாகவும், தம்மினின்றும் வேற்றுமை தோன்ற பிரமதேவரின் நடுத்தலையைத் தம் கையாற் கிள்ளிவிட்டனர் என்றும் சொல்லுவாரும் உளர்.

† குறிப்பு:—பிரமா சிருஷ்டி காலத்திற்றோன்றி சம்ஹார காலத்திலொடுங்குபவராதலின், அவ்வாறழிகின்ற பிரமதேவர்கள் கபாலங்களை

கையிலிருந்த கபாலம் விழுந்தும் தம்மைத் தொடர்ந்து வந்த பிரமஹத்தி நீங்காமையால், இமயமலையிலும் இப்பரத கண்டத்திலும் உள்ள அனேக தீர்த்தங்களிலாடியும் பயன்காணுது, இந்த புண்ணிய க்ஷேத்திரம் வந்து சேர்ந்து, கோதாவரி தீரத்திலுள்ள தேவசர்மாவென்னும் ஓர் பிராமணன் இல்லத்தில் தங்கி இருந்தனர். அப்போது அவ்வீட்டு மாட்டுத்தொழுவத்தில் கட்டியிருந்த ஓர் இளங்காளைக் கன்றானது தன் தாயாகிய பசுவைப் பார்த்து, "என்தாயே! இந்த வீட்டு எஜமானனுன பிராமணன் செல்வச் செருக்கினுல் மதம்பிடித்து அகந்தைமிகுந்திருக்கின்றான். நாளையதினம் காலையில் அவன் என்னை பலவந்தமாய்ப் பிடித்துக் கட்டி, என் மூக்கைக் குத்தி துவாரம்செய்து மூக்குக் கயிறு போடுவதாக நினைத்திருக்கின்றான். நான் அக்கட்டுகளை அறுத்துக்கொண்டு சூலாயுதம்போன்ற என் கொம்புகளால் அவனைக் குத்திக் கொன்றுவிடத் தீர்மானித்துள்ளேன்." என்று கூறிற்று. அதைக்கேட்ட தாய்ப்பசுவானது தனது அருமைத் திருமகனை நோக்கி, "அடா என் கண்மணியே! நீ அவ்விதம் செய்தல் அடாது. அடாது செய்தோர் படாதுபடுவர். அந்த பிராமணர் உனக்கு உணவுகொடுத்து உதவுவதன்றி, உனக்கு நேரும் பல தீங்குகளினின்றும் காக்கின்றவராதலின்,

"தவமது செய்தே பெற்றெடுத்தவன் முதற்பிதா
தனை வளர்த்தவன் ஒருபிதா,
தயையாக வித்தையைச் சாற்றினோ னொருபிதா,
சாந்தசற் குருவொரு பிதா,
அவமறுத் தாள்கின்ற அரசொரு பிதா நல்ல,
ஆபத்து வேளை தன்னில்
அஞ்சலென் றுற்றதுயர் தீர்த்துளோ னொருபிதா,
அன்புளோ னவனொரு பிதா."

என்றபடி உலக தர்மத்தினுல் இரண்டுவகையில் அவர் உனக்குப் பிதாவாகின்றனரன்றோ. பசுக்கள், எருமைகள் முதலிய கால்

யெல்லாம் ஓர்மாலையாகத் தொடுத்து, சிவபிரான் அணிந்துள்ளார் என்றும், அது காரணம்பற்றி அவருக்குக் கபாலி என்னும் நாமம் வந்ததெனக் கூறுவாருமுளர். இதை நமது வாகீசப்பெருமான் "நூறு கோடி பிரமர்களொங்கினுர், ஆறுகோடி நாராயணரங்ஙனே." என மிக அழகாகக் கூறியுள்ளார்.

நடைகள் எல்லாம் மனிதர்களின் செல்வமாகக் கருதப்படுகின்றன. ஆனைமுதல் ஆடுவரை மிருகங்களை ஆக்கியோன் அவைகளை மனிதர்கள் சுவாதீனத்திலல்லவோ விட்டிருக்கின்றனன். உன் தமையன், உன் தந்தை, உன் மாமன், உன் சுற்றத்தார் எல்லாரையும் காத்து இரட்சித்தவரன்றோ அவர். அவர் உனக்குத் தீமையே செய்யினும் நன்மையே செய்யினும் பொறுத்திருப்பதே உனது கடமை. அவர் அகந்தை மிகுந்து அல்லவை செய்யின் அவரைக்கடிவார் அனேகருளர். அரசு அன்று கொல்லும். தெய்வம் நின்று கொல்லும். அரசரின் தொழிலையும் தெய்வத்தின் கடனையும் நீ மேற்கொள்ளற்க. இதனை யிதனாலிவன்முடிக்குமென்றாய்ந்து அதனை அவன் கண்விடு." எனப் பல்வகையான நீதி மொழிகள் புகன்றது. அதைக்கேட்ட ரிஷபமானது "ஓ என்னருமைத் தாயே! நீ சொல்லுவது ஒன்றும் ஒப்பத்தக்கதாயில்லை. நான் குழவியாயிருந்தபோது, உன் உதிரமாகிய பாலைக் குடித்து உஜ்ஜீவித்தேன். எனக்கு வயது வந்தவுடன் காட்டிலிருக்கும் புல்லைத்தின்று வளர்கின்றேன். இந்த பிராமணன் எனக்கு அன்னம் கொடுக்கின்றான் என்று நீ சொல்லுவது எனக்கு விளங்கவில்லை. அம்மா உன் சம்மந்தமான பணியொன்றிருப்பின் உரை. நீ காலாலிடும் வேலையைத் தலையாற் செய்துமுடிக்கின்றேன். தவிர, நான் இளங்கன்றாயிருந்தபோது இந்த பிராமணன் உன்னுடைய மூன்று காம்புகளினின்றும் பாலை ஒட்டக்கறந்துகொண்டு ஒரு காம்பின்பாலே எனக்கு விடுத்தனன். அப்படிச் செய்ததும் ஒரு மாதகாலமேயாம். அதன் பிறகு உன் நான்கு காம்புகளிலும் உள்ள பாலைக்கறந்து, என்னைத் தவிக்கவிட்டதை நீ அறியாயோ. உனக்கென்மீதிருந்த பேரன்பினால் உன்னால் கூடியவரையில் அடக்கி ஒடுக்கி வைத்திருந்த பாலன்றோ எனக்கு உணவாயிற்று. அவன் என்னை அவதிக்குள்ளாக்க நினைந்துள்ளானாதலின் நான் அவனை ஒறுக்காதொழியேன்." என விடை பகர்ந்தது. கோபத்தினால் மதியிழந்து பேசும் தன் மதலையை நோக்கி, "ஏ! குழந்தாய்! நீ எல்லா நீதிசாஸ்திரங்களையும் படித்துப் பாவபுண்ணியம் தெரிந்தவன்போல் பேசுகின்றாய். பிரமஹத்தி செய்வோன் தாமிஸ்ராதி நரகங்களிற் சேர்ந்துழல நேருமன்றோ. தன் சுவஹிதத்தை நாடுபவன் இத்தகைய பாதகங்களைச்செய்ய அஞ்சவேண்டாமோ. பிராமணர்கள் பிறரை வைதாலும், கடிந்தாலும்,

தடிந்தாலும் அவற்றை ஆசி மொழிகளாகக் கருதல் வேண்டுமென்று கிருஷ்ண பரமாத்மாவானவர் தம் குலத்தவரான யாதவர்கட்கு உபதேசித்திருக்கின்றார். எல்லாம் வல்ல சிவபிரானே பிரமதேவர் தெரிந்தோ தெரியாமலோ சொல்லிய சில வசை மொழிகளைப் பொறுக்காது, "ஆறுவது சினம்." "செல்லாவிடத்துச் சினம் தீது செல்லிடத்தும் இல்லதனிற் றீய பிற." என்னும் தெய்வத் திருவாக்கினை முழுதும் மறந்து, கமலாசனன் சிரங்களுளொன்றைக் கொய்து, நாடோடியாய்த் திரிந்து, நலிந்து, மெலிந்து, ஒடுங்கியிருப்பதைப் பிரத்யட்சமாய் நீ காணவில்லையா? உன்னை வாகனமாகக் கொண்டு நடாத்துபவரின் கதி இஃதாயின் உன் கதி யென்னும்." என்று மறுபடியும் தடுத்துச் சொல்லிற்று. அதைக் கேட்ட காளையானது, "பிள்ளை மனம் கல்லாயினும் பெற்ற மனம் பித்துள்ள தாய்மாரிற் சிறந்த என் அம்மா! உன் உதரத்திலுதித்த நல்வினைப் பயனாலும், உன் கிருபையினாலும், இந்த அண்டபிண்ட சரர்சாங்களின் வரலாறுகளையும், மகிமைகளையும் நான் நன்கு அறிந்துள்ளேன். பிரமஹத்தி என்னைப் பீடித்தால் யான் உடனே நாசிக் க்ஷேத்திரம் சென்று கோதாவரி தீரத்தில் அருணாவருணாசங்கமங்களுக் கிடையில், பூர்வவாகினியாய் வரும் ஸரஸ்வதியில் ஸ்நானம்செய்து என் பிரமஹத்தியைத் தொலைத்து விடுவேன். ஸ்ரீ சங்கரரானவர் தமோகுண விசிஷ்டராதலினும், "சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு நிலத்தறைந்தான் கை பிழையாதற்று." என்னும் ஆன்றோர் மொழிக்கிணங்க, பிரமதேவர் மகா விஷ்ணுவை நிந்தித்தால், அனேக கொடிய அசுரர்களையும் அரக்கர்களையும், தம் மாயையினால் அனேகவித அவதாரங்களெடுத்துக் கொன்ற மகாவிஷ்ணுவானவர் தம்மாலியன்றதைச் செய்துகொள்ளட்டுமென்று நினைத்து வாளாவிராமல், தமக்குத்தாமே தீங்கு தேடிக்கொண்டு, தாம் செய்த வினைப்பயனைத் தாமே அனுபவிக்கவேண்டும் என்ற நுட்பமான உண்மையினைச் சிற்றறிவினராகிய ஜீவகோடிகள் உய்த்துணர்ந்துகொள்ளவேண்டி, இவ்வாறு துன்புற்றலைந்து திரிகின்றனரே தவிர, அவர் தம்மை இப்பழியினின்றும் விமுக்தராக்கிக்கொள்ள வழி தெரியாமலன்று. சர்வபாதகங்களும் அவர் நாமம் கேட்ட மாத்திரத்தில் சூரியனைக்கண்ட பனிபோல் பறந்தோடுமன்றோ. யான் சொல்லும் கௌதமியும் அவர் சடை

யிற் கரந்திருந்து வெளிவந்தவளாயிருக்க, அவள் மகிமை அவருக்குத் தெரியாதிருக்குமோ. பிரமஹத்தியாதி மகாபாதகங்களை நீக்கவல்ல சக்தியை கௌதமிக்குக்கொடுத்தவர் அவரே அன்றோ." என மறுமொழிபகர்ந்தது. அதைக்கேட்டதாய்ப்பசுவானது, "ஏ! மகனே. நீ தாய்க்கு மிஞ்சிய தனயனாக மாறிவிட்டாய். உன் இஷ்டம்போல் செய்து, அதனால் வரும் துன்பத்தை அனுபவி." என்று சொல்லிமுடித்தது. அதற்குள் பொழுதும் புலர்ந்தது. பொழுது விடிந்துக் கதிரவன் தோன்றியவுடன், தேவசர்மா தம் ஆட்களைவிட்டு அவ்விளங்கன்றைப் பிடித்துவரச்செய்து வலியகயிறுகளாற் பிணித்து மூக்கைக்குத்திக் கயிறுபோடச் சொல்லினர். அக்கணமே அக்காளை சீற்றங்கொண்டு, தன்னைப் பிணித்துள்ள பாசங்களை அறுத்துக்கொண்டு, தன் கூரிய கொம்புகளால் பிராமணனை அடிவயிற்றிற் குத்திக்கொன்றது. "குதிரைக் கொருகாதம் கொம்பினத்திற் கெண்காதம்; எதிர்பேசும் பெண்களுக்கோ எட்டு லக்ஷம் காதமம்மா." என்னும் உலகமொழியை உணராது அருகில் நின்ற பார்ப்பனனும் பரலோகம் சேர்ந்தனன். "பிறர்க் கின்னா முற்பகற்செய்யிற் றமக்கின்னா பிற்பகற்றாமே வரும்." என்னும் உத்தரவேத வாக்கியத்தின்படி பிராமணனுயிர் உடலினின்று பிரிந்த அக்கணமே, தூவெண்மையாயிருந்த தூரியத்துடல் பிரமஹத்தியால் பீடிக்கப்பட்டுக் காண்பதற்கு அருவருப்பான கருநிற மெய்தியது. அதைக்கண்டு சற்றும் மனந்தளராது, அவ்வேற்றிளங் கன்றானது ஓட்டமாக ஓடி ஸரஸ்வதி சங்கமத்திலும் அதற்கருகிலுள்ள அஸ்திவிலய தீர்த்தத்திலும் ஸ்நானஞ்செய்து எழும்போதே அதன் சரீரம் சந்திரபிம்பம்போல் தூவெண்மை நிறத்தோடு ஒளிர்ந்தது. ஆனால் தான் மூச்சுவிடுவதற்காக ஜலத்தின் மேல் வைத்திருந்த அதன் மூக்கின் நுனியும் உதடுகளிலுமுள்ள *கறுப்புநிறம்மட்டும் மாறாதிருந்தது. அக்காளையைப் பின்தொடர்ந்து சென்ற அடல்விடையூர்தியும் அங்கு நடந்தவற்றையெல்லாம் கண்டு, இந்நிலவுலகிலுள்ள ஜீவகோடிகளின் உத்தாரணார்த்தம் தம் ஜடாமகுடத்தினின்று கீழிறக்கிவிட்ட கௌதமியின் மகிமையை மிருகஜாதிகளும் நன்கறிந்து பயன்பெறுகின்றனவே

---

* குறிப்பு:—இதுகாரணம்பற்றியே ரிஷபங்களுக்கு இக்காலத்தும் மூக்கின் நுனிப்பாகமும் உதடுகளும் கருநிறத்தோடு இருக்கின்றன போலும்.

என்று வியந்து களிகொண்டவராய்த் தாமும் அப்புனித கங்கையில் நீராடி பிரமஹத்தி நீங்கினவராய், இனியும் அங்கு வரும் பக்த கோடிகளை பவக்கடலினின்றுக் கரையேற்றி முத்தியங்கரையிற் சேர்ப்பிக்கக் கருதியவராய், அவ்விடத்திலேயே கபாலேசுவரர் என்னும் நாமத்தோடு கோவில்கொண்டெழுந்தருளினர். இவருடைய தரிசனத்தால் கிடைக்கும் பலன் அளவிடற்பாலதன்று. ஜீவன்முக்த க்ஷேத்திரமாகிய காசியிலுறைந்து, கங்கையில் மூழ்கி, வாயுபட்சணம்செய்து, காசிவிஸ்வநாதரைப் பணிதலாற் கிடைக்கக்கூடிய பலனைவிட, ஆயிரமடங்கு கபாலேசுவரர் சந்நிதியில் நிற்பதனாற் கிட்டுமெனின் பிறிதுரைப்பதேன்.

ஆதிகாலத்தில் * அனந்தசயனம் என்னும் சிற்றூரின்கண் வேதாந்தபாரக தீட்சதர் என்பார் ஒரு தனவான் இருந்தார். அவருடைய தொல்லைத் தீவினைப்பயனாக, சரீரத்திற் பெருவியாதியுண்டாகிக் கபமும் காசமும் மேலிட்டு வருந்தினர். தவிர, அவருக்கிருந்த செல்வமுழுவதும் கள்வர் கைவயப்பட்டுவிட்டது. ஆகவே அவரும் அவர் குடும்பத்தினரும் மிடிவாய்ப்பட்டும் பிணிவாய்ப்பட்டும் மிக்க மெலிந்துருகித் துன்புற்றனர். அக்காலத்தில் தீர்த்த யாத்திரை செய்துகொண்டு அவ்வழியே வந்த விஷ்ணுசர்மாவெனும் புண்ணியசிலர் அவண் சின்னாள் தங்கி இருந்ததைக் கேள்வியுற்ற தீட்சதர் அவரைக்கண்டு, தம் தற்கால நிலைமையைத் தெரிவித்துத் தாம் சிவனருள்பெற்றுய்ய வழி காட்டும்படி வேண்டினர். அதற்கு அவ்விப்பிரோத்தமர் தீட்சதரிடம் கருணைகொண்டவராய், † கபாலேசுவர ஸ்தோத்திர மந்தி

* குறிப்பு:—இவ்வூர் தக்ஷிணதேசத்தில் அனந்தசயனமென வழங்கும் திருவனந்தபுரம் அன்று. இது தற்காலத்தில் ஆநந்தவல்லி என்னும் நாமத்தோடு வழங்குகிறது. இது நாசிக்பட்டினத்தின் அருகிலிருக்கிறது.

† குறிப்பு :—இந்த ஸ்தோத்திர மந்திரத்தை இங்கெடுத்து எழுதப் புகின் விரியுமென்றஞ்சி விடப்பட்டது. அந்த ஸதோத்திரம் முழுவதையும் கசக்கிப் பிழிந்து, அதன் இரசத்தைக் கடுகைத்துளைத்தெழு கடலையும் புகட்டியவாறு நமது அப்பர் பெருமான்,

அயன்நெடு மாலிந்திரன் சந்தி ராதித்த ரமரரெல்லாம்
சயசய வென்றமுப் போதும் பணிவன தண்கடல்சூழ்
வியன்நில முற்றுக்கும் விண்ணுக்கும் நாகர் வியனகர்க்கும்
இயபர மாவான இன்னம்ப ரான்ற னிணையடியே.

என்னும் திருவின்னம்பர் திருப்பதிகத்திற் பெய்து பாடியுள்ளார்.

ரத்தை உபதேசஞ் செய்தனர். தீட்சதரும் நாசிக்பட்டினம் சென்று கபாலேசுவரர் சந்நிதியில் ஒருமைப்பட்ட மனத்துடன் அந்த ஸ்தோத்திரத்தை ஜபித்தனர். சில மாதங்களுக்குள் ஈசனருளினல் எல்லா பாக்கியமும் பெற்று, உடற்பிணி மனப் பிணியாதிய நீங்கி சுகமாக வாழ்ந்தனர் என்று சொல்லப்படுகிறது.

பிரணவத்தின் பொருளறியாது விழித்த பிரமதேவர் குழந்தையாகிய குமாரக்கடவுளிடம் குட்டுண்டு சிறைப்பட்ட வாறு, மற்றையோரும் அவதிப்படாது பரப்பிரமமாகிய பால சுப்பிரமணியத்தை ஞானகுருவென்றறிந்துய்யும் நிமித்தமும், ஞான தீட்சையில் இளமை முதுமை யென்னும் வேற்றுமையின் றித் தந்தையும் புதல்வரிடத்து ஞானம் பெறலாம் என்னும் உண் மையை வெளிப்படுத்தும் நிமித்தமும், ஞானோபதேசத்தைப் பெற விரும்பும் சீடர்களினிலக்கணம் இத்தன்மைத்தென எவரு மறிந்து உலகில் உய்யும் பொருட்டும், ஐந்தொழிலில் அனுக்கிர கத்தையும் ஒரு தொழிலாகக் கொண்டுள்ள சிவபிரான் தாம் தந்தையாயிருப்பதன்றித் தாயுமானவாறு, ஆசிரியரானதன்றி சீடனுமாய்ச் சிறந்ததோர் அருணடகம் நடித்துக்காட்டியதும், சுதனே குருவாய்ச் சுவாமிநாதன் என்னும் பேர்கொண்டு பெரும் புகழ் பெற்றதுமான * சுவாமிமலே க்ஷேத்திரத்தில் குருநாதனுய் விளங்கும் குமரன் எங்குமிருப்பதுபோல், பிதாவின் பின்பக்க மிராது, தனிப்பெருங் கடவுளாய் குன்றின்மீதமர்ந்திருப்பதைப் போல், இத்தலத்தும் நந்தியெம்பெருமான் தம் பெருமா ளுகிய சிவபெருமானுக்கு, அவரைப்பிடித்திருந்த பிரமஹத்தி தோஷத்தை நிவர்த்தித்துக்கொள்ள ஓர் தக்க வழிகாட்டி குரு ஸ்தானம்பெற்ற காரணத்தால், எக்கோவிலிலும் இருப்பதுபோல், இக்கோவிலில் சிவலிங்கத்தின் முன் இல்லாதிருப்பதை இக் காலத்தும் பிரத்தியட்சமாய்க் காணலாம்.

---

* குறிப்பு :—முருகவேளின் ஆறுபடைவீடுகளுள் ஒன்ருகிய திருவே ரகம் எனக்கருதப்படும் சுவாமிமலே க்ஷேத்திரமானது, கும்பகோணத்தி லிருந்து மேற்கில் 4 மைல் தூரத்திலிருக்கின்றது. கும்பகோணத் திற்கு மேற்கில் 4 மைல் தூரத்திலுள்ள சுவாமிமலே என்னும் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து 1 மைல் தூரத்திலிருப்பினும், இடையில் இரண்டு ஆறுகள் குறுக்கிடுவதாலும், அவ்வாறுகளுக்குப் பாலமின்மையானும், கும்பகோணத்தில் இறங்கிச் சாலேவழிபோவதே நலம்.

மகா சிவராத்திரியன்றும், பிரதி திங்கட்கிழமையன்றும் சுவாமியின் வெள்ளி முகபடாத்தைப் பல்லக்கில் வைத்து பவனி வருகின்றனர். கார்த்திகைமாதம் வைகுண்ட சதுர்த்தசியன்று ஆனந்தத் திருநடனஞ்செய்யும் அர்த்தநாரி நடேசுவரராக அலங்காரஞ் செய்கின்றனர். தரிசித்தல் மிக்க விசேஷம்.

(17) கோதாவரி மந்திரம் :—இக்கோவில் ஸ்ரீ கபாலேசுவரர் கோவிலுக்கு மேற்பக்கத்திலுள்ள ஸ்நான கட்டத்தின்மீது இருக்கின்றது. இதிலிருக்கும் சிலை தூய வெள்ளைச்சலவைக் கல்லினுற் செய்யப்பட்டு ஐந்தடி உயரமிருக்கின்றது. பார்ப்பதற்கு வெகு சுந்தரமாகவும், கோதாவரி தேவியே எதிரில்வந்து நிற்பது போலும் இருக்கின்றது.

(18) ஸ்ரீ தண்டாயுதபாணி கோவில் :—இது சுகேண்கர் என்பவரின் மாளிகையின் எதிரில் இருக்கின்றது. இதில் இப்பக்கங்களில் கார்த்திக்சுவாமி என வழங்கும் தண்டாயுதபாணி எழுந்தருளி இருக்கின்றனர்,

(19) * காளே ராமர் கோவில் :—இதுதான் இத்தலத்திலுள்ள பிரதானமான இராமர்கோவில். இரகுவீரனனவர் இத்தலத்தில் தங்கி இருந்தபோது எவ்விடத்தில் வசித்தனரோ அதே இடத்தில் இக்கோயில் கட்டப்பட்டிருக்கிறதாகச் சொல்லிக் கொள்ளுகின்றனர். இக் கோயிலைச்சுற்றிலும் நம் தென்னுட்டில் இருப்பதுபோல் சுமார் 17 அடி உயரமுள்ள மதிற்சுவர் இருக்கின்றது. இதற்கு நான்கு வாயில்கள் இருக்கின்றன. கோவிலின் கர்ப்பக்கிரகத்தில் இராமர், இலட்சுமணர், சீதாபிராட்டியார் ஆக மூவருடைய விக்கிரகங்கள் நல்ல கறுப்புச் சலவைக் கல்லினுற் செய்யப்பட்டு அதி சுந்தரமாய் விளங்குகின்றன. இதற்கு முன்புறம் 40 ஸ்தம்பங்களுடன் சுமார் 75 அடி நீளமும் 32 அடி அகலமும் உள்ள ஓர் அழகான சபாமண்டபம் இருக்கின்றது. அதன் நடுவில் ஆஞ்சனேயர் அஞ்சலியஸ்தராய் நிற்கின்றுர். தினம் ஒன்றுக்கு 2000 ஆட்கள் வேலை செய்து, இக்கோவிலை 12 வருஷகாலத்தில் கட்டி முடித்தனர் என்றும், கோவில் கட்டுவதற்காக † இரு

---

* குறிப்பு :—காளே = கறுப்பு.

† குறிப்பு :—வேலைசெய்த ஆட்களின் தொகையையும் செலவழிந்த தொகையையும் எடுத்துக் கணக்கிடில், அக்காலத்தில் சராசரி ஆள் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு சுமார் 4 அணுகூலி இருந்திருப்பதாகத் தெரிகிறது.

பத்துமூன்று லட்சம் ரூபாய்கள் செலவழிந்ததென்றும் சொல்லிக்கொள்ளுகின்றனர். இவ்வளவு விலையுயர்ந்த வேலைப்பாடுள்ள கோவில் இப்பக்கத்தில் எங்கும் இல்லையெனவே சொல்லலாம். இக்கோவிலில் பிரதிவருஷம் சைத்ரசுத்தத்தில் ஸ்ரீராமநவமி உற்சவம் வெகு சிறப்பாய் நடைபெறுகின்றது. ஏகாதசி தினத்தன்று இரதோற்சவம் நடக்கின்றது. அன்று பகல் 3 மணி சுமாருக்கு இரதத்தில் இராமரையும், விமானத்தில் ஆஞ்சனேயரையும் ஆரோகணிப்பித்து இராமகுண்டம் வரையில் இழுத்துச் சென்று, அங்கு தீர்த்தவாரி பூஜை முதலியவை நடத்தி, இரவில் இரதத்தை மீண்டும் கோவிலுக்கு ஈர்த்துச் செல்லுகின்றனர். பிரதி ஏகாதசி தினம் இராமருடைய பாதுகைகளைப் பல்லக்கில் வைத்துப் பிரகாரத்தில் பிரதட்சணமாக வருகின்றனர். நவராத்திரி உற்சவத்தில் 10-வது தினத்தில் பல்லக்கைப் பாதுகைகளோடு வெளியில் எடுத்துச் சென்று பவனி சுற்றிவருகின்றனர். மகரசங்கராந்தி தினத்தன்று ஆயிரக்கணக்கான ஆண்பிள்ளைகள் இராமர் தரிசனத்திற்காகக் கூடுகின்றனர். மறுநாள் ஸ்திரீகள் சீதா பிராட்டியாருக்காக மஞ்சள் குங்குமம் * எள்ளு சர்க்கரை இவைகளைத் தட்டுகளில் வைத்து எடுத்துச் செல்லுகின்றனர்.

இக்கோவிலின் உற்சவாதி செலவுகளுக்காகச் சில கிராமங்களை சர்வமானியம் விட நினைத்த பேஷ்வேக்களுள் ஒருவர் அதற்கு வேண்டிய இனும் சாசனத்தை எழுதி எடுத்துக்கொண்டு ஸ்ரீராமர் தெரிசனத்திற்காக ஓர் இராமநவமி தினத்தன்று வந்ததாகவும், அவர் வருகைக்காகக் காத்திராமல் இராமர் பிறந்த முகூர்த்தம் நெருங்கினவுடன் † கோவிலார் உற்சவத்தை நடத்தி

* குறிப்பு :—மகாராஷ்டிரர்களுக்குள் சங்கராந்தி தினத்தன்று எள்ளும் சர்க்கரையும் முதலிற் சாப்பிடுவதும், புதிய மணமக்களுக்கு மேளதாளத்துடன் கொண்டுபோய்க் கொடுப்பதும் வழக்கமாக இக்காலத்தும் இருந்துவருவதைக் காணலாம்.

† குறிப்பு :—நம் தென்னாட்டில் இக்காலத்தும் சிற்சில கோவில்களில் பெரிய உத்தியோகஸ்தர்களின் வருகையையும், பஞ்சாயத்தார் முதலியவர்களின் வருகையையும் எதிர்பார்த்து, சுவாமிபுறப்பாட்டையும், திருக்கலியாண உற்சவங்களில் திருமங்கலிய தாரணத்தையும் மண்டபதீபாராதனைகளையும், தேர்வடம் பிடித்தல் முதலிய விசேஷ காரியங்களையும், குறிப்பிட்ட முகூர்த்தம் தவறிப்போயினும், நிறுத்திவைக்கும் வழக்கம் இருந்துவருவதைக் காணலாம். மனிதர்களின் சௌகரியத்திற்காகக் கடவுளைக் காக்கவைப்பது வர்ஜிக்கத்தக்க வழக்கம்.

விட்டதாகவும் தாம் வருவது, தெரிந்திருந்தும் தம் வரவை எதிர் பார்த்திராமல் உற்சவத்தை நடத்தியது தம்மை அவமதித்தற் காகவென்று எண்ணி, அவர் தாம் கொண்டுவந்த இனும் சாச னத்தை ஸ்ரீ பாலாஜி (வேங்கடாஜலபதிப் பெருமாள்) யின் கோவில் பேருக்கு மாற்றி எழுதிவைத்துவிட்டுச் சென்றதாகவும் சொல்லிக்கொள்ளுகின்றனர்.

இக்கோவிலில் ஸ்ரீராமநவமி உற்சவத்தில் பிரதிதினமும், மற்றக் காலங்களில் விசேஷ தினங்களிலும், ஹரிகதா காலட் சேபங்களும், புராணப் பிரசங்கங்களும் நடைபெறுகின்றன. முற் காலத்தில் * ஸ்ரீ ஸமர்த்த இராமதாஸ் சுவாமிகள் காயத்திரிமந் திரத்தை முறைப்படி ஜபித்து புரஸ்சரணம் செய்வதற்காகத் தங்கியிருந்தபோது, இக்கோவிலில் நடந்துவந்த புராணப் பிரசங் கங்களை நாள் தவறாமல் சென்று சிரவணஞ் செய்துவந்தனர். ஓர் நாள் ஆஞ்சனேயரானவர் சுவாமிகள் எதிரில் தோன்றி, " உமது இராமாயணப் பிரசங்கத்தைக் கேட்க அவாக்கொண்டுள்ளேன். நீர் இராமர் சந்நிதியில் சின்னாள் பிரசிங்கிக்கவேண்டும்." என வேண்டினர். அதைக் கேட்ட சுவாமிகள் திகைத்துக் கதிரவன் முன் காலோயாது ஓடிக்கொண்டே சகல வேத சாஸ்திரங்களையும் ஐயந்திரிபறக் கற்றுணர்ந்த மகாபண்டிதரும், இராமாயண சரிதம் நடந்தேறிய காலத்து இராமருடன் கூடவே இருந்து இராம இரா வண யுத்தத்தை நேரிற் பார்த்தும் நடத்தியும் இருப்பவரும், ஸ்ரீ ரகுவீரனுலேயே,

**இல்லாத வுலகத்தெங்கு மிங்கிவ னிசைகள்கூரக்**
**கல்லாத கலையும்வேதக் கடலுமே யென்னுங்காட்சி**
**சொல்லாலே தோன்றிற்றன்றே யார்கொலிச் சொல்லின்செல்வன்**
**வில்லார்தோ ளிளையவீர விரிஞ்சனே விடைவல்லானே.**

**மற்றுமிவ் வுலகத்துள்ள முனிவர்வா னவர்களாரிச்**
**சொற்றிற முடையார் மற்றைச் சுருதியின் றுெகுதியாவும்**
**முற்றறி தருமிம்மாணி மொழிக்கெதிர் முதல்வராய**
**பெற்றியர் மூவர்க்கேயும் பேராற்ற லரிதுமன்னே.**

**(கம்பராமாயணம் அனுமப்படலம்)**

---

* இப்பெரியாருடைய மற்றும் சில விவரங்களை இப்புத்தகம் முதற் பாகம் 199-முதல் 20?-வரை பக்கங்களிற் காணலாம்.

என்று சொல்வன்மையில் மும்மூர்த்திகளும் உமக்கீடாகார் என்று புகழப்பெற்றவருமாகிய உம்முடைய முன்னிலையில், சிற்றறிவினனாகிய யான் இராமாயணப் பிரசங்கம் எவ்வாறு செய்ய வல்லேன் எனப்பணிவோடு கூறிய சுவாமிகளை அன்போடெடுத்தணைத்து "சொற்றிறத்தில் நீர் ஒன்றும் குறைந்தவர் அன்று. நீரே யான். யானே நீர். ஆயினும் உமது சொற்பொழிவில் வழுக்கள்யாதும் உண்டாமாயின் யான் உமதருகிருந்து உணர்த்துவேன். நீர் அஞ்சவேண்டிய அவசியமில்லை." என்று ஆஞ்சனேயர் அருண்மொழி கூறினர். அவ்வாதரமொழிகேட்டு மனத்தை ஒருவாறு திடஞ்செய்துகொண்ட சுவாமிகள், மறுநாள் புராணம் வாசித்த பாகவதரிடம் அணுகி, தாம் இராமாயணம் பிரசங்கம் செய்வதாகச்சொல்லி அவரிடம் அனுமதிபெற்று, ஆஞ்சனேயர் அநுக்கிரகத்தால் அங்கிருப்போர் அனைவரும் கேட்டுமகிழ்ந்து வியக்கும்படி அபூர்வமான வாசக சக்தியுடன் பிரசங்கித்தனர். அஞ்சனாதேவியின் அருமைப்புதல்வரும் ஓர் பார்ப்பனச்சிறுவன் வேடம்பூண்டு அவர்முன்னிருந்து அவர்வாயினின்று வரும் அமுதமொழிகளை அதியார்வத்தோடு கேட்டிருந்தனர். இவ்வாறிரண்டொரு நாட்கள் கழிய, ஓர்நாள் சுவாமிகள் அஞ்சிலே யொன்று பெற்றான் அஞ்சிலே ஒன்றைத்தாவி அஞ்சிலே யொன்றாறாக ஆரியர்க்காகவேகி அஞ்சிலே யொன்றுபெற்ற அணங்கைத் தேடுதற்பொருட்டு இலங்கைக்குச் சென்றிருந்தபோது, இலங்கைமுழுதுந் தேடி அலைந்தும் தேவியைக்காணப் பெறாராய், மனம் வருந்தி, இராவணனுடைய இருப்பிடம் சென்று, ஒருவருக்கும் தெரியாது அங்கிருந்த கணேரி மரங்கள் ஒன்றின்மீதேறிக்கொண்டு அவ்வரண்மனையின் அனேக அறைகளுள் எதிலேனும் ஒளித்துவைத்திருத்தல் கூடுமெனப் பல பக்கங்களிலும் பார்த்திருந்தனர் எனக்கூறி முடித்தனர். அதைச் செவியுற்ற பார்ப்பன ரூபத்தோடிருந்த பவனபுத்திரர் எழுந்து நின்று அம்மரத்தின் புஷ்பங்கள் எந்நிறமாயிருந்தன வெனச் சொல்ல வியலுமோ என்றுகேட்க, சுவாமிகள் தூவெண்மையான நிறத்தோடிருந்தனவென விடை பகர்ந்தனர். உடனே அப்பிரமசாரி "நீர் சொல்லுவது தவறு. அம்மரத்தின் புஷ்பங்கள் வெண்ணிறத்தவையன்று. செந்நிறத்தவையே." எனப் புகன்றனன். சுவாமிகள் அதைக்கேட்டும் மனந்தளராது அவை வெண்ணிறத்தவையேயெனச்சாதித்தனர். இவ்வார்த்தையைக் கேட்டிருந்த

மற்றவர்கள், அப் பார்ப்பனச் சிறுவனை விளித்து, "அம் மரத்தையோ, அப்புஷ்பங்களையோ நீயும் பார்த்தவனல்லன். சுவாமிகளும் கண்டவரல்லர். அங்ஙனமிருக்க நீ சுவாமிகளிடம் வீண் வாதம்செய்தல் அழகன்று. அவர் சொல்லுகின்ற வண்ணம் அப்புஷ்பங்கள் வெண்ணிறத்தவையேயென அவர் படித்த புத்தகங்களிற் கூறப்பட்டுள்ளது போலும். ஒன்றுமறியாத நீ ஏன் அப்பெரியாரிடம் அகந்தைமொழி பேசுகின்றாய்?" என அதட்டினர். அதைக்கேட்ட சுவாமிகள் அப் பார்ப்பனப்பையனைப் பலரும் கடிந்து பேசாதிருக்குமாறு கையமர்த்தினர். புராணம் படித்தலும் அன்று முற்றுப்பெற்றது. பிறகு ஆஞ்சனேயர் சுவாமிகளைத் தனிமையிலழைத்து, "நாம் நேரில் பார்த்துப் புஷ்பங்களின் நிறத்தைக் கூறியதைக் கேட்டபிறகும், நீர் அதை எந்த ஆதாரத்தைக் கொண்டு மறுக்க முன்வந்தீர்?" எனக்கேட்க, அதுவும் உமது கிருபையினாற்றான் என மிகவும் பணிவுடன் மறுமொழிகூறினர் சுவாமிகள். ஆஞ்சனேயர் அதைக்கேட்டு வியப்புற்று, "அங்ஙனமாயின் நீர் நம்மோடு இலங்கைக்கு வருவீரேல் உமக்குப் புஷ்பங்களின் உண்மையான நிறத்தைக்காட்டுவேன்." என அழைத்தனர். அதற்கு சுவாமிகள் "நான் இங்கிருந்து தினந்தோறும் ஸ்ரீ ராமச்சந்திர பிரபுவை வணங்கி வழிபாடுசெய்து புராணம் வாசித்தல் வேண்டுமென முன்கட்டளையிட்ட நீர் இப்போது இலங்கைக்கழைப்பது முறையோ. நான் உம்மோடு இலங்கைக்கு வருவேனாயின் என் பூசைக்கு பங்கம் நேருமாதலின் என்னை மன்னித்தல் வேண்டும்." என வேண்டினர். ஆஞ்சனேயரும் "அப்படியேயாகுக. ஆயினும் யான் இலங்கைசென்று உமது பூசைமுடியுமுன் அப்புஷ்பங்களைக் கொண்டுவருவேன்." எனக்கூறி இலங்கைக்குச் சென்றனர். அங்குச்சென்ற அனுமார் விபீஷணனைக்கண்டு அளவளாவி, நடந்தவரலாற்றை நவின்றனர். அதைக்கேட்ட விபீஷணன் குறுநகைபுரிந்து, "இறுமாப்பெய்தியிருந்த இராக்கதரை எளிதிலடக்கி இலங்கையைத் தீக்கிரையாக்கின இராமதூதரான நீர் இராமதாஸரிடத்தில் ஏமாறினீரே!" என, அஞ்சனைபுத்திரர் அவன் சொன்னதையும் நம்பாது அவணிருந்த சோலைக்குட் சென்று மரத்தை நோக்கினர். கறுத்து அடர்ந்து நீண்டு சுருண்டிருக்கும் கூந்தலையுடைய ஓர் அழகியமாது, தன் தலையில் மல்லிகைமலரைச் சூடித் தன் அழகுக்கோர் அழகுசெய்து நிற்பதுபோல், அடர்ந்து

செழித்து வளர்ந்திருக்கும் அம்மரமானது தூவெண்மையான மலர்களைத்தாங்கி நின்றதைக் கண்டனர். அதைக்கண்டதும் பெரிதும் வியப்பெய்தினவராய்ச்சிலமலர்களோடுமீண்டனர். இராம பூசைக்கு ஆயத்தமாயிருந்த சுவாமிகளிடம் அம்மலர்களை ஈந்து தாம் பிராட்டியாரைத்தேடச் சென்றிருந்தபோது அம்மலர்கள் தம் கண்களுக்குச் சிவந்த நிறத்தோடு காணப்பட்டதன் காரணம் கூறவியலுமோவெனக் கேட்டனர். சுவாமிகளும் "உமது கிருபா நோக்கம் உள்ளளவும் என்னாலெதுசெய்ய வியலாது. நீர் இலங்கைக்குச் சென்றிருந்தகாலத்துப் பாதகனை இராவணன் பிராட்டியாரைக் கரந்துவைத்திருந்த காரணத்தால் நீர் கோபாக்கிராந்தராயிருந்தீர். உமது கண்களிரண்டும் புண்ணுற்ற குருதிசோரப்பொறியொடு பொடிப்ப நோக்கினவாதலின் மஞ்சட்காமாலை கொண்டோர்க்கு எவ்வாறு எல்லாப் பொருள்களும் மஞ்சள் நிறத்தனவாய்த்தோற்றுமோ, அவ்வாறே உதிரக்காமாலை கொண்ட உமக்கு வெண்மைநிறம் உதிரநிறமாய் மாறித் தோற்றியிருத்தல் வேண்டும்." எனவுரைத்து, குமரவேள் குன்றவில்லிக்குக் குருநாதனைய் விளங்கியவாறு, இராமதூதருடைய அம்சமான இராமதாஸர் உண்மையான பக்தியின் உயர்வை * விளக்கிக்காட்டினர். ஆஞ்சனேயரும் அதைக்கேட்டு அகமகிழ்ந்து அவருடைய அருமையான பக்தியைமிகவும் மெச்சிக்கொண்டனர் எனச் சொல்லப்படுகின்றது.

(20) சீதா குப்ஹ (Seetha Gupha; சீதையின் குகை):— இது மேற்சொல்லிய இராமர் கோவிலுக்கு அருகில் † ஐந்து ஆலமரங்களுக்கிடையில் இருக்கின்றது. இங்கு இவ்வைந்து ஆலமரங்களிருப்பதே இத்தலத்திற்குப் பஞ்சவடி எனப்பெயர் வந்ததன் காரணம் எனத்தெரிகின்றது. இவ்வைந்து மரங்களும் மிகப்பழமையானவை. அவைகளுள் ஒன்றிற்காவது தாய்மரம் சொரூபத்தில் இல்லை. பிற்காலத்தில் இறங்கிய விழுதுகளும், அவைகளை ஆதாரமாகக்கொண்டு படர்ந்த கிளைகளுமே தற்காலத்தில் மரங்களாக நிற்கின்றன. இவைகளின் இடையில் மேற்பாகத்தில் மண்டபமும்

* குறிப்பு:—இச்சம்பவம் நிகழ்ந்தது சாலிவாகன சகாப்தம் 1554-ம் ஆண்டு ஆங்கிரஸகாம ஸம்வத்சரத்தின் ஸ்ரீராமநவமி உத்சவத்தில் எனத்தெரிகிறது.

† குறிப்பு:—ஐந்து ஆலமரங்கள் உண்டாகியதன் காரணம் இப் புத்தகம் 87-வது பக்கத்திற் காண்க.

உட்பாகத்தில் குகையும் இருக்கின்றது. குகைக்குள் நுழைவதற்கு முன் இரண்டு சிறு அறைகளைக் கடக்கவேண்டி இருக்கின்றது. இரண்டாவது அறையின் பின்புறச் சுவரில் குகைக்குள் போவதற்குரிய வழியிருக்கின்றது. குகைக்குள் சென்றபிறகு பூமியின்கீழ் இருக்கும் சுரங்கத்தில் இறங்குவதற்கு ஏழுபடிகள் இருக்கின்றன. குகைப் பாதையானது சுமார் 5 - அடி அகலமும் 7 - அடி உயரமும் இருக்கின்றது. குகையின் அடிப்பாகமும் பக்கச்சுவர்களும் கற்பாறையிலிருந்து வாள்போட்டறுத்து உண்டாக்கினவைபோல் சுத்தமாகவும் வழுவழுப்பாகவும் இருக்கின்றன. படிகள் வழியாக இறங்கி சுமார் 20 - கெஜம் உள்ளே சென்றால், சுமார் 10 அடி நீளமும் 10 அடி அகலமும் உள்ள ஓர் சிறு அறை தென்படுகிறது. அதன் பின்புறச் சுவரில் சுமார் 2 அடி உயரமுள்ள ஓர் சிறு கற்பீடத்தின்மேல் இராமர், இலட்சுமணர், ஜானகி இவர்களின் மூர்த்திகள் இருக்கின்றன. இவ்வறையின் இடதுபக்கச்சுவரில் சுமார் $2\frac{1}{2}$ அடி அகலமும் $1\frac{3}{4}$ அடி உயரமும் உள்ள ஓர் சிறு துவாரம் தெரிகின்றது. அதன் வழியே நுழைந்து சென்றால் சுமார் 9 அடி நீளம் 5 அடி அகலம் 10அடி உயரமும் உள்ள ஓர் சிறு அறைக்குப் போகலாம். அதன் இடதுபுறச்சுவரில் முன் சொல்லப்பட்ட துவாரம்போன்ற ஓர் வழி இருக்கின்றது. அதன் வழியாக அடங்கி ஒடுங்கி நுழைந்து சென்றால் 7 அடி அகலமும் 9 அடி நீளமும் உள்ள மற்றோர் அறைக்குப் போகலாம். அதன் நடுவில் மகாலிங்கம் இருக்கின்றது. அவ்விலிங்கத்தின் பின்புறத்தில் பின்னும் போக ஓர் வழியிருந்ததாகவும், அதைத்தற்காலத்தில் அடைத்திருக்கின்றனர் என்றும், அவ்வழியே சென்றால் நாசிக்பட்டினத்திலிருந்து சுமார் 6 மைல் தூரத்திலுள்ள இராமசேஷபர்வதத்திற்குப் போகலாம் என்றும், இராமர் தம் வனவாசகாலத்தில் பஞ்சவடியில் தங்கியிருந்தபோது இவ்வழி சென்று இராமசேஷ பர்வதத்தில் சயனித்திருந்து வந்துகொண்டிருந்ததாகவும், அவருக்குப் படுக்கையாக உதவல்வேண்டி அப்பர்வதத்தில் முளைத்தபுல் செங்குத்தாய் முளைக்காமல் கதிர்கள் முதிர்ந்த நெற்பயிற்போன்று படுக்கையில் (Horizontally) முளைத்தனவென்றும், அவ்வாறு முளைத்திருப்பதை * இக்காலத்தும் காணலாம் என்றும் சொல்லப்படுகின்றது.

* குறிப்பு :—நாம் பஞ்சவடியில் தங்கியிருந்த சின்னாட்களில் திர

இக்குகைப்பாதையிலும் இக்குகையிலுள்ள அறைகளிலும் இருள் சூழ்ந்திருப்பதால் அதைப்பார்க்கச் செல்வோர் கையில் தீபம் எடுத்துச்செல்லுதல் நலம்.

இராமர் இத்தலத்தில் வசித்த காலத்தில் வெளியிற் செல்ல நேர்ந்தபோது, சீதாபிராட்டியாரை இக்குகைக்குள் இருக்கச் செய்து, இளையபெருமாளை வாயிலிற் காவலாய்வைத்துச் செல்லுவது வழக்கமாயிருந்ததென்றும், கரதூஷணாதிகளுடன் யுத்தம் செய்யச்சென்றபோதும், இராவணனுடைய அம்மானும் இராமரைச் சீதையைவிட்டுப் பிரிக்கவந்த பொன்மானுமான மாரீசனைப் பின்தொடர்ந்தபோதும், தம் தேவியை இக்குகையிலேயே விட்டுச் சென்றிருந்தனர் என்றும், இராவணன் சீதையை இதினின்று தான் அபகரித்துச் சென்றனனென்றும் சொல்லப்படுகின்றது. இக்குகைக்குள் சென்று பார்ப்பதற்கு ஆள் ஒன்றுக்குக் காலணா கொடுக்கவேண்டியிருக்கின்றது.

இராமர்சரிதத்தைப் பொய்க்கதையென்போர் இக்குகையையும், அதன் அபூர்வ அமைப்பையும் நேரில்வந்து காண்பரேல், மனிதர்களின் * மெய் பொய்யாவதுபோல், அவர்கள் பொய்யும் மெய்யாய்த் திரியுமென்பதிற் சற்றேனும் ஐயமில்லை. அதன் அமைப்பை ஆழ்ந்து நோக்கில் தெய்வத்தச்சனால் நிருமிக்கப்பட்டதாயிருத்தல்வேண்டுமெனத் தோன்றுவதன்றி, இவ்வுலகத்தச்சர்கள் அதை அமைக்கவல்லார் அல்லர் என்பது தெள்ளிதிற் புலப்படும். ஒருக்கால் அதை அமைக்கவல்ல அபூர்வத்திறமையுள்ள தச்சர்கள் இருந்திருப்பினும், அவர்கள் யாருக்காக யார் சிலவில் பூமிக்குள் இருள் சூழ்ந்தவிடத்தில் இருபது கஜத்திற்குமேல் நீண்ட குகைப்பாதையையும், தேக்குமரத்தினாற் செய்யப்பட்ட பெட்டிகள்போன்ற பல அறைகளையும் நிருமித்தனர் என்பதையும், அக்குகையைச்சுற்றி யார் 5 ஆலமரங்களை நட்டுப் பயிராக்கினர் என்பதையும், அல்லது அம்மரங்களிருந்த இடத்தைத்தேடி

---

யம்பகம், கங்காப்பூர் தபோவனம் முதலிய இடங்களுக்குச் சென்ற நாட்கள் தவிர மற்ற நாட்களில் அதிக மழை பெய்ததால் இப்பர்வதத்திற்குச் செல்லவியலாமற் போயிற்று.

* குறிப்பு :—காயம் (Permanent) இல்லாச் சரீரத்தைக் காயம் என்றும், மெய்யல்லாச் சடலத்தை மெய்யென்றும் உரைப்பது உலகவியல்பு.

அவைகளினிடையில் குகையை அமைத்திருத்தல்கூடுமெனச் சொல்ல முன்வரினும், அம்மரங்களைப் பஞ்சவடி என்னும் ஊர் தோன்றின காலம்முதல் இதுவரையில் பட்டுப்போகாதிருக்கும்படி யார் அனுக்கிரகித்தனர் என்பதையும், அமைதியான மனதோடும், தெளிவான அறிவோடும் ஆழ்ந்து நினைத்துப் பார்ப்பரேல் அவர்கள் கொள்கை முற்றும் தவறெனக் கரதலாமலகமாய் விளங்கும்.

"ஓ! சீதா! ஓ! லட்சுமணா!" என்று மாரீசன்போட்ட மாயாசப்தத்தைக்கேட்டு மதிமயங்கின சீதாதேவி,

**குற்றம் வீந்த குணத்தினெங் கோமகன்**
**மற்றை வாளரக் கன்புரி மாயையால்**
**இற்று வீழ்ந்தன னென்னவு மென்னயல்**
**நிற்றி யோவிளை யோவொரு நீயென்றாள்.**

அதைக்கேட்ட இலக்குணப் பெருமான்,

**பரக்கவென் பகர்வது பகழி பண்ணவன்**
**துரக்கவங் கதுபடத் தொலைந்து சோர்கின்ற**
**அரக்கனவ் வுரையெடுத் தரற்றி னானதற்**
**கிரக்கமுற் றிரங்கலி ரிருத்தி ரீண்டென்றான்.**

அப்போதும் மனக்கவலை நீங்காது, ஜானகி தீயில் வீழ்ந்திறக்க எத்தனித்ததைக்கண்ட சுமித்திராபுத்திரர் அப்பிராட்டியாரிருந்த இடத்தைச்சுற்றிலும் ஒரு கோட்டைக்கிழித்து, எக்காரணத்தைக்கொண்டும் அதைக்கடந்து செல்லாது குகைக்குள்ளேயே இருக்கும்படிச் சொல்லிவிட்டு, அந்தசப்தம் வந்தவழியே இராமரைத் தேடிச்சென்றனர் என்று சொல்லுவதற்குப் பொருத்தமாக இக்காலத்தும் அந்தக்கோடு கிழித்ததாகச் சொல்லப்படுகிற இடத்தில் ஓர் சிறு அருவி அக்குகையைச் சுற்றிக்கொண்டு வளைந்தோடி கௌதமியிற் கலக்கின்றதைக் காணலாம்.

(21) ஸ்ரீ சாரதா சந்திரமௌளீசுவரர் கோவில்:—இது சீதா குகைக்கருகில் மேற்குநோக்கி இருக்கின்றது. இது ஸ்ரீ மது பரமஹம்ஸ பரிவிராஜகாசாரிய யோகீந்திரவரிய ஆத்மானந்த ஸரஸ்வதி சுவாமிகளால் 1916 ம் வருஷத்தில் கட்டப்பட்டதெனத் தெரிகின்றது. இதன் கர்ப்பக்கிரகத்தில் தம் வலதுகாலைத் தரையில் ஊன்றியும், இடதுகாலைத்தூக்கித் தாண்டவன் என்னும்

அசுரனுடைய சிரசின்மேல் வைத்தழுத்திக்கொண்டும் இருக்கிற கோலத்துடன் காட்சிகொடுத்து அருளுகின்றதும், சதுர்ப்புஜங்களோடு கூடியதுமான ஸ்ரீ சாரதாசந்திரமவுலீசுவர விக்கிரகம் இருக்கின்றது. அதன் வாமபாகத்தில் இருகரங்களில் வீணையோடும், சதுர்புஜங்களோடும் கூடிய ஸ்ரீ பார்வதி சாரதாம்பிகையின் விக்கிரகம் இருக்கின்றது. எதிரில் நந்தியும், வலது சுவரோரத்தில் கணபதியும், இடது சுவரிலிலுள்ள மாடத்தில் சிம்மவாகினியான அம்பிகையும் இருக்கின்றனர். இம் மூர்த்திகள் எல்லாம் பார்க்க அதிசுந்தரமாயிருக்கின்றன.

(22) ஸ்ரீ துவாரகா நாதர் கோவில் :—இது கதியவார் தீபகற்பத்திலுள்ள பிரதானத் துறைமுகமான போரிபந்தர் என்னும் பட்டினத்தில் வசித்த ஷாஹ ரகுநாத தாராசந்த் மோட்வாணி (Shaha Raghunath Tarachand Modevani) என்பவரால் கட்டப்பட்டு தற்காலம் ஸ்ரீ கோகுலநாத கோசுவாமி அவர்கள் ஆதீனத்தில் இருக்கின்றது. காலாகாலத்தில் பூசை நடைபெறுகின்றது.

(23) காடர்யா மாருதி மந்திரம் (Kattharya Maruthi Mandhir):—இக்கோவில் பம்பாய் - ஆக்ரா சாலை (Bombay - Agra Road)யில் வாகாடி (Vaghadi) நதி தீரத்தில் இருக்கின்றது. இக் கோவிலில் இருக்கும் அனுமார் விக்கிரகம் சுமார் 9 அடி உயரமிருக்கின்றது.

(24) ஸ்ரீ நரசிம்மப் பெருமாள் கோவில் :—முற்காலத்தில் இத்தலத்தில் ஓர் பிராமணோத்தமர், வேதாத்தியயனத்தில் வழுவாதவராய், சற்குண சம்பன்னராய், ஸ்ரீ நரசிம்ம சுவாமியின் உபாசகராய் வசித்து வந்ததாகவும், அவர் ஓர் நாள் கோதாவரிக்கு ஸ்நானத்திற்குச் சென்றிருந்தபோது, அங்கு அலைந்து திரிந்துகொண்டிருந்த பிரமராட்சதன் ஒருவன் அவரைப் பிடித்து விழுங்கும் எண்ணத்தோடு ஆரவாரித்துக்கொண்டு வருவதைக்கண்டு, பயந்து, முற்காலத்தில் முதலையாற் பிடிபட்ட கஜேந்திராழ்வார் “ஆதிமூலமே!” என்றலறியதுபோல், “ஹே! நரசிம்மா! உம் அடைக்கலம்.” என அலறியதாகவும், உடனே அங்கு நரசிம்மசுவாமி தோன்றி அவ்விராக்கதனைக் கொன்று, அவ்வேதியரைக் காப்பாற்றியதாகவும், அதே இடத்தில் அந்த

நரசிம்மமூர்த்திக்காக இக்கோவில் கட்டப்பட்டதென்றும் சொல்லப்படுகின்றது.

இதுவரையிற் சொல்லப்பட்ட கோவில்களைத்தவிர, கோதாவரி தீரத்திலும், அதன் மத்தியிலும் கணக்கற்ற சிறு கோவில்கள் இருக்கின்றன. அவைகளில் அனேகம் மழைகாலத்திலும் வெள்ளக்காலத்திலும் கோதாவிரியின் ஜலத்தில் மூழ்கி மறைந்து போகின்றன. இவைகளைத்தவிர, நாசிக் பஞ்சவடி பட்டினங்களின் உட்பாகங்களில் அனேக கோவில்கள் இருக்கின்றன.

## சித்தபுருஷர்களுடைய மடங்களும் தர்மசாலைகளும்.

(1) பட்ஜி மடம் (Bhatjee Math):—இது சுந்தரநாராயணப்பெருமாள் கோவிலினருகில் இருக்கிறது. இதில் சுமார் 125 வருஷங்களுக்குமுன் இருந்து, ஜனங்களின் உடற்பிணி உயிர்ப்பிணியாதிகளைத் தீர்ப்பதில் பிரசித்திபெற்ற ஸ்ரீரகுநாத்பட்ஜி என்னும் மகானின் சமாதி இருக்கின்றது. இதன் தெற்கில் ஓர் சிறு சிவாலயமும், அதனருகில் ஓர் அழகான ஸ்நானகட்டமும் இருக்கின்றது.

(2) சுவாமிநாராயணர் மடம்:—இது * சோமவார் பேட்டை (Somwarpet) யில் இருக்கின்றது. சுமார் 300 வருஷங்களுக்கு முன் இருந்து வந்த சுவாமி நாராயணர் என்னும் மகா யோகி இம் மடத்தில் உயிரோடு சமாதிகொண்டனர் என்று சொல்லப்படுகின்றது.

(3) அஜ்கர்பாபாவின் மடம் (Azgar Baba Math):—கஞ்சி நாட்டில் வாழ்ந்துவந்த சீமான் ஒருவர் நம் பட்டினத்தடிகளைப்போன்று, இல்லறத்தில் வெறுப்புக்கொண்டு துறவியாய் இவ்விடம் வந்து சமாதியடைந்தனர் என்றும், அவருடைய ஞாபகச் சின்னமாக இம் மடம் கட்டப்பட்டதென்றும் தெரிகிறது. இது ஸ்ரீ கபாலேசுவரர் கோவிலுக்கருகில் இருக்கின்றது.

(4) ஸ்ரீ சங்கராசாரியர் மடம்:—இது பஞ்சவடியிலுள்ள ஸ்ரீ ராமர்கோவிலுக்குத் தென்கிழக்கில் சுமார் 50 கெஜ தூரத்தில்

---

* குறிப்பு:. இப்பக்கங்களிலுள்ள பட்டினங்களின் உட்பாகங்களுக்குக் கிழமைகளின் பேர்கொடுத்திருப்பது பூனா கோலாப்பூர் ஷோலாப்பூர் முதலிய பட்டினங்களிலும் காணலாம்.

இருக்கின்றது. மைசூர் நாட்டிலுள்ள சிருங்கேரியிலிருக்கும் சாரதாபீட சங்கராசாரிய சுவாமிகள்மடத்தில் கி. பி. 1720க்கு மேல் 1740-க்குள் மடாதிபதியாயிருந்த, ஸ்ரீ ஜகத்குரு சங்கராசாரிய ஸ்ரீமத் சச்சிதானந்த சுவாமிகளும், அவர்களுடைய பிரதம சீடரான ஸ்ரீமத் பிரமானந்தசுவாமிகளும் இம்மடத்தில் அடங்கியிருக்கின்றனர்.

(5) ஸ்ரீ கேசவசுவாமிகளின்மடம்:—இது ஷை இராமர்கோவிலின் வடக்கு வாயிலுக்கெதிரில் இருக்கின்றது. இது மேற்சொல்லப்பட்ட ஸ்ரீரகுநாத பட்ஜி சுவாமிகளுடைய சமகாலத்தவரான ஸ்ரீ கேசவசுவாமிகள் அடங்கின இடம்.

(6) ஸ்ரீ கார்த்திக்சுவாமிகள் மடம்:—இது ஸ்ரீ திலபாண்டேசுவரர் கோவிலின் அருகில் இருக்கின்றது. இது நம் தென்னாட்டினரான காத்தமுத்து செட்டியார் என்பவர் ஒருவரால் கட்டப்பட்டதென்று தெரிகிறது. இம் மடத்தில் பாலசுப்பிரமணியர் சந்நிதி ஒன்று இருக்கின்றது.

(7) ஸ்ரீ தேவிமடம்:—இது ஸ்ரீ திலபாண்டேசுவரர் சந்நிதித் தெருவில் இருக்கின்றது.

(8) ஸ்ரீ சத்தியநாராயணர் மடம்:—இது * சத்தியநாராயணர் வாயில் என்னும் இடத்திற்கருகில் இருக்கின்றது.

(9) ஸ்ரீ யசவந்தராவ் சுவாமிகள் மடம்:—இது கோதாவரி நதியில் ஐந்து கோவில்கள் இருக்குமிடத்திற்கருகில் இருக்கின்றது. யசவந்தராவ் என்னும் மகான் தாசில்தார் உத்தியோகத்திலிருந்து துறவுபூண்டு, கி. பி. 1887 ம் ஆண்டு இவ்விடத்தில் அடங்கினர் என்றும், இம் மடம் அம்மகானுடைய சீடர்கள் சேர்ந்து சுமார்

---

* குறிப்பு:—இப் பக்கங்களில் இருக்கும் பெரும் பட்டினங்களில் சுற்றிலுமிருக்கும் பெரும் பட்டினங்களுக்குப் போகும் சாலைகள் அப்பட்டினங்களைவிட்டு எங்கு புறப்படுகின்றனவோ, அவ்விடங்களுக்கு அந்தந்த பட்டினங்களின் பேராலும், அருகில் இருக்கும் கோவில்முதலிய விசேஷமான கட்டிடங்களின் பேராலும் வாயில்கள் ஏற்பட்டிருப்பதைக் காணலாம். உதாரணமாக டில்லிபட்டினத்திலிருந்து அஜ்மீர் பட்டினம் போகும்சாலை புறப்படுகிற இடத்திற்கு அஜ்மீர்தரவாஜா (Ajmere Gate; அஜ்மீர்வாயில்) என்றுபேர். இப் பழக்கம் அனேகபட்டினங்களில் இருப்பதைக் காணலாம். இதைப்போல் இவ்வூரிலும் டில்லிதரவாஜா நாம்வ் தரவாஜா என்னும் பெயருள்ள வாயில்கள் இருப்பதையும் காணலாம்.

20000 ரூபாய் வரையில் செலவழித்துக் கட்டினர் என்றும் தெரிகின்றது.

(10) கபூர்த்தாலாமடம்:—இதை இப்பாகங்களில் கபூர்த்தாலா சத்ரி (Kapurthala Chhatri) என்று சொல்லுகின்றனர். கபூர்த்தாலா தேசாதிபதியான இரணதீர் சிங் (Ranadhir Singh) என்பவர் 1870 ம் ௵த்தில் சீமைக்குப்போவதாகப் போனவர் வழியில் ஏடன் நகரத்திலேயே மரணமடைந்தனர். அவர் பிரேதத்தை இந்தியாவிற்குக் கொண்டுவந்து இந்த இடத்தில் தகனஞ்செய்தனர் என்றும், அவருடைய ஞாபகார்த்தமாக இம் மடம் கட்டப்பட்டதென்றும் சொல்லப்படுகின்றது. இதற்கருகில் அந்த தேசத்து அரசரால் ஓர் தர்மசாலையும், ஓர் அழகிய கோவிலும் கட்டப்பட்டிருக்கின்றது. கோவிலில் இராமர், இலட்சுமணர், சீதை, கங்கை, கோதாவரி ஆகிய இவர்களின் விக்கிரகங்கள் இருக்கின்றன.

(11) சாந்த்வட்கர் (Chandvadkar) தர்மசாலை:—இது டில்லி வாயிலுக்கும் நாம்வ் (Naon) வாயிலுக்கும் இடையில் இருக்கின்றது.

(12) * நாட்டுக்கோட்டை நகரத்தார் மடம்:—இதுபஞ்சவடியில் ஸ்ரீராமர் கோவிலுக்கு வடமேற்கில் இருக்கின்றது. இதில் தங்குவதற்குச் செட்டிமார்கள் உத்தரவு பெறல்வேண்டும்.

இவைகளைத் தவிர, நாசிக்ரோட் ரெயில்வேஸ்டேஷனுக்கருகில், ரெயில்வே கம்பெனியாரால் கட்டப்பட்ட இரண்டு தர்மசாலைகள் இருக்கின்றன. ஸ்டேஷனிலிருந்து பட்டினத்திற்கு வரும் சாலையின் இருபக்கங்களிலும் அனேக பங்களாக்கள் இருக்கின்றன. அவைகள் சிற்சில சமயங்களில் வாடகைக்குக் கிடைக்கும். இப்பட்டினத்தின் சீதோஷ்ண ஸ்திதி சமமாயிருப்பதால் அனேகர் இங்கு வந்து தங்கியிருந்து சுகவாசம் செய்கின்றனர்.

## பார்க்கவேண்டிய கட்டிடங்களும் காட்சிகளும்.

இப்பட்டினம் ஜில்லாவின் தலை நகராதலின் ஜில்லா கோர்ட் கலெக்டர் ஆபீசு முதலிய கட்டிடங்கள் ஊருக்கு மேற்கில் சமீபத்தில் இருக்கின்றன. மராமத்து இலாகா (The Public Works

---

* குறிப்பு:—நாம் யாத்திரை சென்றிருந்தபோது இதிற்றான் தங்கியிருந்தோம். தங்குவதற்கு மிகவும் வசதியானது.

Department) காட்டு இலாகா (The Forest Department) இவைகளின் கச்சேரிகளும், போலீஸ் ட்ரேயினிங் ஸ்கூல் (The Police Training School) கட்டிடமும் ஊருக்கு வெளியில் சுமார் ஒரு மைல் தூரத்தில் இருக்கின்றன. முன்னிருந்த அரசர்களின் பழய அரண்மனைகளுள் ஒன்று விக்டோரியா வாராவதிக்கருகிலும், மற்றொன்று ஆதித்வார் பேட் (ஞாயிற்றுக்கிழமைப் பேட்டை) என்னும் இடத்திலும் இருக்கின்றது.

இவைகளைத் தவிர, (1) சிவில் வைத்தியசாலை (The Civil Hospital), (2) பாய் தன்கும்வார் பாய் (Bai Dankunvar Bai) அவர்களின் பெண்பிள்ளை வைத்தியசாலை, (3) நாராயணதாஸ் தாகர்சே மூல்ஜி (Narayan Das Thackersey Muljee) என்பவரின் வைத்தியசாலை (இது பஞ்சவடியில் இருக்கின்றது), (4) கங்காப்பூர் போகிறசாலையில் இருக்கும் ஸர் தின்ஷா மாணிக்ஜி பெட்டெட் (Sir Dinshaw Maneckjee Petit) என்பவருடைய மிருக வைத்தியசாலை, (5) பஞ்சவடியிலிருக்கும ஜனன பைபிள் அண்ட் மெடிகல் மிஷன் (Zenana Bible & Medical Mission), (6) ஸ்திரீகள் குழந்தைகள் வைத்தியசாலை, (7) தந்தித்தபாலாபீசுகள், இங்கிலீஷ் உயர்தரக் கல்விச்சாலை (The English High School) (9) ஸேயின்ட் ஜார்ஜ் உயர்தரக் கல்விச்சாலை (The St. George's High School) (10) பட்டினத்திற்குக் குழாய்த்தண்ணீர் கொண்டு வருவதற்காக ஏற்பட்ட கட்டிடம் (The Municipal Water Works) (11) அதன் அருகிலிருக்கும் உகோஜி மராட்டா போர்டிங்ஹோம் (The Ugojee Mahratta Boarding Home), (12) பஞ்சவடியில் உள்ள ஸம்ஸ்கிருத வேத பாடசாலைகள், (13) இந்தியர்கள் பொதுவாசகசாலை (The Native General Library), (14) மிருகதுக்க நிவாரணசாலை (The Panjrapole), (15) கேத்கர் நகரமண்டபம் (The Ketkar Town Hall) முதலியவை பார்க்கத்தக்கவை. இவைகளுள் பொதுவாசகசாலை மிகப்பெரிதாகவும் பொது ஜனங்களுக்குப் பெரிதும் பயன்படத்தக்கதாகவும் இருக்கின்றது. சென்னையில் இருக்கின்ற கான்னிமாரா வாசகசாலைக்கு (The Connemara Library) அடுத்ததாகச் சொல்லலாம்.

சனிவார்பேட் (சனிக்கிழமைப்பேட்டை) என்னுமிடத்தில் ஏழைப்பிள்ளைகளையும் அநாதைக் குழந்தைகளையும் போஷிக்கும் சாலை ஒன்று இருக்கின்றது. இதில் ஜாதிபேதமின்றி எல்லாக்

குழந்தைகளையும் அன்னமிட்டு வளர்க்கின்றனர். இப்பெரிய தருமம் பொதுஜன கைங்கரியமாக நடக்கின்றது. இத்தகைய தர்மசாலைகள் நம் தென்னாட்டிலுள்ள எல்லாப் பெரும்பட்டினங்களிலும் ஆங்காங்குள்ள தர்மசிந்தனையுள்ளசீமான்கள் சேர்ந்து ஸ்தாபிப்பார்கள் என்று நம்பப்படுகின்றது.

## இத்தலத்தில் நடக்கும் உற்சவங்கள்.

(1) சித்திரை மாதம்:—இம்மாதத்தில் நாசிக் பஞ்சவடி க்ஷேத்திரங்களிலுள்ள எல்லா இராமர்கோவில்களிலும் இராமநவமி உற்சவம் நடைபெறுகின்றது. அதில் விசேஷமான நாள் நவமி. ஏகாதசி தினத்தன்று பஞ்சவடி இராமர்கோவிலில் இரதோற்சவம் நடக்கின்றது. பல்லாயிரக்கணக்கான ஜனங்கள் கூடுகின்றனர். சித்திரா பௌர்ணிமியன்று ஹனுமத் ஜயந்தி உற்சவம் நடக்கின்றது.

(2) வைகாசி மாதம்:—அட்சயதிரிதியை தினத்தன்று நூற்றுக்கணக்கான பிராமண ஸ்திரீகளும் மற்ற ஸ்திரீகளும் உயர்ந்த ஆடையாபரணங்களை அணிந்துகொண்டு கோதாவரிநதியில் ஒருங்குகூடி, கும்மிக்கோலாட்டம் அடிக்கின்றனர். இதைத்தவிர பரசுராமஜயந்தி நரசிம்ம ஜயந்தி உற்சவங்களும் நடக்கின்றன.

(3) ஆனி மாதம்:—கங்காதேவியின் கோவில்களில் உற்சவம் நடக்கின்றது. பௌர்ணிமியன்று பஞ்சவடியிலுள்ள ஆலமரங்களுக்கும், சாவித்திரி தேவிக்கும் பூஜை நடக்கின்றது.

(4) ஆடி மாதம்:—விட்டோபாவின் கோவிலில் உற்சவம் நடக்கின்றது. ஏகாதசி விசேஷம்.

(5) ஆவணி மாதம்:—முரலிதரர் கோவிலில் கோகுலாஷ்டமி உற்சவம். அஷ்டமி விசேஷம்.

(6) புரட்டாசி மாதம்:—விநாயகசதுர்த்தி உற்சவம்.

(7) ஐப்பிசி மாதம்:—எல்லாக் கோவில்களிலும் நவராத்திரி உற்சவம். அது பத்திரகாளி கோவிலிலும் பாலாஜி கோவிலிலும் அதிவிமரிசையாக நடைபெறுகின்றது.

(8) கார்த்திகைமாதம்:—வைகுண்ட சதுர்த்தசியன்று சுந்தரநாராயணர் கோவிலில் உற்சவம். பிராமணபோஜனம் நடக்கின்றது. * பௌர்ணிமியன்று ஸ்ரீ கபாலேசுவரர், திலபாண்டேசுவரர், பஞ்

* **குறிப்பு:—இதைத் திரிபுர பௌர்ணிமி யென்றும் சொல்லப்படுகின்றது.**

சரத்னேசுவரர் முதலிய சிவாலயங்களில் தீபோற்சவம் நடக்கின்றது.

(9) மார்கழி மாதம்:—சுக்கிலபட்சம் சஷ்டியன்று கோதாவரி நதியில் ஸ்ரீ கண்டோபாவின் உற்சவம் நடக்கின்றது. ஏகாதசியன்று மகான் யசவந்தராவ் சுவாமிகள் சமாதியில் உற்சவம் நடத்துகின்றனர்.

(10) தை மாதம்:—சங்கராந்தியன்று புருஷர்களும், அடுத்த தினம் ஸ்திரீகளும் பஞ்சவடி இராமர் கோவிலுக்கு தரிசனார்த்தம் திரள் திரளாகச் செல்லுகின்றனர். பட்டினத்திற்கு வடக்கில் இருக்கின்ற மசரூள் (Mhasarule) என்னும் சிற்றூரிலுள்ள சீதா சரோவரம் என்னும் தீர்த்தத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமையும் ஸ்நான விசேஷம். டாங்களி என்னும் கிராமத்தில் பகுள நவமியன்று ஸ்ரீ ஸமர்த்த இராமதாஸ் சுவாமிகளின் ஞாபகார்த்தம் தீர்த்தவிசேஷம்.

(11) மாசி மாதம்:—கோதாவரி உற்சவம். மகா சிவராத்திரியன்று சிவன்கோவில்களில் தரிசனமும், கோதாவரியில் ஸ்நானமும் விசேஷம்.

(12) பங்குனி மாதம்:—பகுளபஞ்சமிக்கு முந்தின புதன் கிழமையன்று சையத்ஸாதக்ஷா ஹுஸேன் (Syed Sadaksha Hussain) என்னும் முகமதியப் பெரியாரின் மசூதியில் அதிவிமரிசையாக உருஸ் உற்சவம் நடக்கின்றது. எல்லா ஜாதியாரும் எல்லா மதத்தினரும் போகின்றனர்.

இத்தலத்திருந்துகொண்டு (1) தபோவனம், (2) கோவர்த்தனம் (3) கங்காப்பூர். (4) டாங்களி (Tankli) *(5) பாண்டவலேணி (6) சாம்பார்லேணி (Chambara Leni) முதலிய ஸ்தலங்களைப் பார்த்துத் திரும்புதல் நலம். ஸ்ரீதிரியம்பக க்ஷேத்திரத்தை தரிசித்து வருதல் அவசியம்.

தபோவனம்:—சனகாதி முனிவர்களும், வசிஷ்டாதி மகரிஷிகளும், நளன், அரிச்சந்திரன் முதலிய சக்கரவர்த்திகளும் இவ்விடத்தில் தவம்புரிந்த காரணத்தால் இதற்குத் தபோவனம் என்னும் அரும்பெயர் கிடைத்ததாகத் தெரிகிறது. இக்ஷ்வாகுவின் புத்

* குறிப்பு:—பாண்டவலேணி=பாண்டவர்குகை, சாம்பார்லேணி (Chambara Leni)=சக்கிலியர்குகை.

திரனை தண்டகன் என்போன் முறைபிறண்டொழுகிய காரணத்தால் தந்தையால் துரத்தப்பட்டு, விந்தியமலையின் அடிவாரம்வந்து சேர்ந்து, அங்கு மதுமந்தம் என்னும் நகரத்தை உண்டாக்கிக்கொண்டு, சுக்கிராசாரியாருடைய பிரதம சீடர்களுள் ஒருவனாய் வாழ்ந்து வந்தனன். அக்காலத்தில் சுக்கிரனுடைய புத்திரியான அழகிற்சிறந்த அரசையென்பாளைக்கண்டு மோகித்துக் காமப்பித்தேறிக் கண்ணிருண்டதால், தன் குருவின் புத்திரி தனக்குத் தங்கையாதல் வேண்டுமென்பதையும் உணராது, பகை பாவம் பழிக்கஞ்சாது, அக்கன்னிகையை வலிதிற்புணர்ந்தனன். அதையுணர்ந்த சுக்கிராசாரியார் சினந்து அவனையும் அவன் நகரத்தையும் தென்னாட்டிலுள்ள * திருமலைராயன் பட்டினத்தை அம்பாள் அனுக்கிரகத்தால் வசைபாடுதலிற் சிறந்து விளங்கிய காளமேகப்புலவர் அழித்ததுபோல் † மண்மாரியால் அழித்தனர். அப்பட்டினமும் அதன் தெற்கேயுள்ள பிரதேசமும் பெருங்காடாக மாறியது. அப்பட்டினமிருந்த இடம் இதுவே என்றும், தண்டகன் வசித்துவந்த காரணம்பற்றி இவ்வனம் தண்டகாரணியமெனப்படுவதாகவும் தெரிகின்றது.

இவ்வனத்தில் ஒரு பெரிய ஆலமரமிருக்கின்றது. அதன் கீழ் இளையபெருமாளுக்காக ஏற்பட்ட ஆலயம் ஒன்று வடக்கு நோக்கிய சந்நிதியுடன் இருக்கின்றது. இவ்வாலமரத்தின் கீழ் ஆதிகாலத்தில் அனேகமகரிஷிகளும், அவர்களுக்குப்பின் இலட்சுமணப்பெருமாளும் இருந்து தவம்புரிந்தனர் என்றும், இம் மரம் அக்காலம்முதல் இக்காலம்வரை இப்போதிருக்கும் ஸ்திதியிலேயே இருந்துவருகின்றது என்றும் சொல்லிக்கொள்ளுகின்றனர். இவ்வாலயத்திற்கருகில் கிழக்குநோக்கிய சந்நிதியுடன் மற்றோர் இலட்சு

---

* குறிப்பு:—இப் பட்டினம் நாகப்பட்டினத்திற்கும் காரைக்காலுக்கும் இடையில் இருக்கின்றது. திருக்கண்ணபுரம் சௌரிராஜப் பெருமாள் பெண்கொண்ட இடமாகக்கருதப்படுகிறது.

† குறிப்பு:—தண்டகனை அழித்தது சக்கரவர்த்தித் திருமகனார் என்று சொல்லுவாருமுளர். ஆனால் இராமாயணத்தில் இராமர் காட்டிற் கேகினகாலத்து தண்டகாரணியஞ் சென்று வசித்துவந்தனர் என்று சொல்லியிருப்பதால், தண்டகாரணியம் இராமர் காட்டிற்கு வருவதற்கு முன்னமேயே இருந்திருக்கவேண்டும் என்று தெரிகிறது. ஆதலின் தண்டகனை இராமர் கொன்றார் என்பது பொருத்தமாகத் தோற்றவில்லை.

மணர் கோவிலும், ஆஞ்சனேயர் கோவிலும், பசுமடமும் இருக்கின்றன.

மேற்சொல்லிய இலட்சுமணர் கோவிலுக்குச் சுமார் 250 கெஜ தூரத்தில் கோதாவரியின் மத்தியில் குகைபோன்ற சிறு பிலத்துவாரம் ஒன்றும், அதனருகில் மூக்கின் நுனிபோன்ற ஓர் சிறு கற்பாறையும் இருக்கின்றது. அக்கற்பாறையானது சூர்ப்பணகையின் அறுபட்ட * மூக்கென்று கருதப்படுகின்றது. தவிர, அங்கிருக்கும் கற்பாறைகளிற் செதுக்கப்பட்ட அனேக குகைகள் இருக்கின்றன. அவைகளெல்லாம் மகரிஷிகள் தவஞ்செய்திருந்த குகைகளெனக் கருதப்படுகின்றன.

இவ்விடத்தில், பிரமயோனி, ருத்திரயோனி, விஷ்ணுயோனி என்னும் கற்பிலங்களும், அக்கினிதீர்த்தம், முக்திதீர்த்தம், சௌபாக்கியதீர்த்தம் என்னும் புண்ணியதீர்த்தங்களும் இருக்கின்றன. இவ்விடத்திற்றான் கபிலகங்கை கோதாவிரியில் சங்கமிக்கின்றது.

மேற்சொல்லிய இலட்சுமணர் கோவிலுக்கு மேற்கில் சுமார் ஒரு பர்லாங்கு தூரத்தில், ஸ்ரீ லட்சுமிநாராயணப் பெருமாளின் கோவிலும், மற்றும் சில சிறு கோவில்களும் இருக்கின்றன. இத்

---

* குறிப்பு.—இராவணன் தங்கையான சூர்ப்பணகை என்பாளுக்கு சபான் என்றொரு மகன் இருந்ததாகவும், அவன் காலகட்கம் பெறவேண்டி சிவபிரானை நோக்கித் தவம்புரிந்திருந்ததாகவும், அவன் தவம் முடிவடைவதற்குமுன் அவனை சுமித்திராசுதன் வதஞ்செய்துவிட்டதாகவும், தன் மகனைக்கொன்ற பழிக்குப்பழி வாங்குவதற்காக சூர்ப்பணகையானவள் இலட்சுமணர்முன் சந்தனமும் குங்குமமும் சாந்தும் பரிமளமும், விந்தையதாய்ப் பூசிமிகுவேடிக்கை யொய்யாரக்கந்தமலர் சூடினதோர்கன்னிகையாய்வந்து நின்று அவரைத் தன் மாயவலையிற் சிக்கவைக்க முயன்றதாகவும், அவர் அவளைப்பார்த்ததும், "காதென்று மூக்கென்று கண்ணொன்று காட்டித்தன் கண்ணெதிரே, மாதென்றுசொல்லி வந்தமாயைதனை மறவிவிட்டதூதென்று எண்ணி" தம் தமையனரிடம் போகும்படிச் சொல்லியனுப்பியதாகவும், அவள் இராமரிடம் சென்று அவர் ஆணையை எதிர்நோக்கி நிற்க, ஏகபத்தினி விரதம்பூண்ட அவ்வேகநாயகன் அவள் முதுகின்மேலேயே அவன் மூக்கையும் காதையும் அரிந்து விட்டோட்டும்படி வரைந்து, அவளை மீண்டும் தம் தம்பியிடம் அனுப்பியதாகவும், அவர் தம் தமயன் கருத்தையறிந்து, அதை அவ்வாறே நிறைவேற்றியதாகவும் தெரிகின்றது.

தலத்தில் எங்குபோயினும், எங்குபார்க்கினும் ஸ்ரீ ராமர் லட்சுமணர் ஜானகி ஹனுமான் இவர்களுடைய கோவில்களாகவே இருக்கின்றன. இவைகளுக்கருகில் வட இந்திய சாதுக்கள் தங்கியிருக்கும் பெரிய தர்மசாலை ஒன்று இருக்கின்றது. இவ்வூருக்குப்போக நல்ல கற்சாலை இருக்கின்றது. வாடகை வண்டிகளும் மோட்டார்களும் எக்காலத்திலும் கிடைக்கும்.

கோவர்த்தனம்:—நாசிக்பட்டினத்திலிருந்து மேற்கில் சுமார் ஆறுமைல் தூரத்தில் கோதாவிரியின் இடதுகரையில், கோவர்த்தனம் என்னும் சிற்றூர் இருக்கின்றது. இது முற்காலத்தில் பெரும்பட்டினமாக இருந்ததாகத்தெரிகின்றது.

கங்காப்பூர்:—இது கோவர்த்தனத்திற்குக் கிழக்கில் சுமார் கால்மைலுக்குள் இருக்கின்றது. பார்ப்போர்க்கு கோவர்த்தனமும் கங்காப்பூரும் ஒரே ஊரின் இரண்டு பாகங்களாகத் தோன்றும். இவ்வூருக்கருகில் கோதாவிரி நதியின் மத்தியபாகத்தில் ஜலமானது சுமார் 20 அடி உயரத்திலிருந்து விழுகின்றது. நதியில் ஜலம் குறைந்திருக்கும் காலங்களில் இச்சிறு நீர்வீழ்ச்சியில் ஸ்நானம் செய்யலாம். வலதுகரையில் ஓர் அழகான ஸ்நானகட்டடமும், ஒரு ஈஸ்வரன்கோவிலும், பிரயாணிகள் தங்குவதற்கு வசதியான ஒரு தர்மசாலையும் இருக்கின்றன. கங்காப்பூரிலிருந்து பார்த்தால் இராமசேஷ பர்வதத்தின் சிகரம் தெரிகின்றது. இவ்வூருக்குப்போக நல்ல கற்சாலை இருக்கின்றது.

டாங்களி (Tankali):—இப்புண்ணிய தலத்திற்றான் ஆதி சிவாஜி மகாராஜா அவர்களுடைய சற்குருநாதரான ஸ்ரீஸமர்த்த இராமதாஸ் சுவாமிகள் 12 வருடங்கள் தங்கியிருந்து, தினந்தோறும் பஞ்சவடிக்குச்சென்று காயத்திரிஜபத்தையும் இராமர்பூஜையையும் தவறாது செய்து வந்தனர் என்று சொல்லப்படுகின்றது. இவ்வூரில் அம்மகானால் பிரதிஷ்டை செய்யப்பட்ட ஹனுமார் கோவில் ஒன்று இருக்கின்றது. அதில் பிரதிவருஷம் சித்திரா பௌர்ணிமியன்று ஹனுமத் ஜயந்தி உற்சவம் நடைபெறுகின்றது. ஆயிரக்கணக்கான ஜனங்கள் கூடுகின்றனர்.

சுவாமிகள் இங்குவந்தபோது பன்னிரண்டாண்டு நிரம்பிய பாலகராயிருந்தனர் என்றும், அவர் சாலிவாஹன சகாப்தம் 1542-ம்ஆண்டு ரௌத்திரிவருஷம் மாகசுத்தம் சஷ்டியன்று முதன்

முதலில் இங்குவந்து சேர்ந்தனர் என்றும், இங்கு தங்கியிருந்த காலத்தில் தினந்தவறாது கோதாவிரிக்குச் சென்று ஸ்நான கர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு, தண்ணீரிலிறங்கி இடையளவு ஜலத்தில் நின்றுகொண்டு காயத்திரிஜபம் செய்துவந்தனர் என்றும், அவர் ஜபம்செய்யுங்காலத்தில் அவரை மீன்கள்கடித்ததனால் நாபிக்கமலத்திற்குக்கீழ் சர்வாங்கமும் புண்ணாகி வெண்ணிறமாய் மாறியிருந்ததென்றும், அதையும் இலட்சியம் செய்யாது 13 கோடிமுறை ஜபத்தை முடித்துப் பூர்த்தி செய்துகொண்டனர் என்றும் சொல்லப்படுகின்றது. இவ்வூருக்குப்போக நல்ல-சாலை இருக்கின்றது.

* பாண்டவலேணி:—இங்குப்போவதற்கு நாசிக்பட்டினத்திலிருந்து 5 மைல்தூரம் வரையில் நல்ல கற்சாலையிருக்கின்றது. அங்கிருந்து குகைகளிருக்கும் அடிவாரம்சுமார் 300 கெஜதூரமிருக்கின்றது. குன்றின்மேல் ஏறிப்போவதற்கு நல்லபாதை இருக்கின்றது. குன்றின் உயரம் சுமார் 100 கெஜம் இருக்கலாம். ஏறிப்போக வலிமையற்றவர்கள் அங்கிருக்கும் வாடகை டோலிகளில் ஏறிச் செல்லலாம். இக்குகைகளை புத்தமதத்தினர்கள் தங்கள் மதத்தைச் சார்ந்தவையென்றும், அங்கு செதுக்கப்பட்டிருக்கும் கற்சிலைகள், ஸ்ரீ கௌதமபுத்தர், போதிசத்வ வஜ்ஜிரபாணி லோகேசுவரர், பத்மபாணி லோகேசுவார், தாராதேவி, ஆகிய இவர்கள்போன்ற புத்தமதத்தை இந்நாட்டில் நிலைநாட்டின பெரியார்களின் சிலைகள் என்றும் சொல்லிக்கொள்ளுகின்றனர். ஆனால், இந்துக்கள் அவைகளைத் தங்கள் சமயத்தைச் சேர்ந்தவைகள் என்றும், அவைகளிலுள்ள சிலைகள் பாரத வீரர்களான பாண்டவர்களுடையவும் பாஞ்சாலதேவியுடையவும் என்று சொல்லிக்கொள்ளுகின்றனர். அவைகள் எம்மதத்தினவாயினும், எக்காலத்தினவாயினும், அவைகளிற் செய்திருக்கும் சிறந்த சிற்பவேலைகளும், கல்வெட்டு எழுத்துக்களும் சுமார் இரண்டாயிரம் வருஷங்களுக்கு முந்தின காலத்தினவாயிருப்பினும், காலகாலன் கட்டளையையும் பொருட்படுத்தாத காலத்தச்சனாற் சிதைக்கப் பெறாது, இன்றேசெய்த வேலைகளைப்போலும், எழுதின எழுத்துக்களைப்போலும் இருப்பதை இன்றும் காணலாம். இக்குகைகளில்

---

குறிப்பு:—பாண்டவலேணி=பாண்டவர் குகை.

பிரதிவருஷமும் ஆவணிமாதம் மூன்ருவது சோமவாரத்தில் திருவிழா நடக்கின்றது.

இங்கு 24 குகைகள் இருக்கின்றன. அவைகளுக்கு மேற்கிலிருந்து வரிசைக்கிரமமாக ஒன்றுமுதல் இருபத்துநான்குவரை எண்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவைகளின் சுவர்களில் வெட்டப்பட்டிருக்கும் சரித்திரங்களைக்கொண்டு, நமது பாரத நாடு ஆதிகாலத்தில் எவ்வளவு உன்னதஸ்திதியில் இருந்தது என்பதையும், அக்காலத்து அரசர்களும் குடிகளும் எத்தகையினராக இருந்தனர் என்பதையும் எளிதிற் காணக்கிடக்கின்றது. அயல் நாட்டாரைப்போல் தீ நீர் நிலம் காற்று முதலியவைகளால் எளிதில் அழியக்கூடிய ஓலை, காகிதம், தகடு முதலியவைகளில் எழுதிவையாது, வெய்யிலினாலும் மழையினாலும் பாதிக்கப்படாத மலைக்குகைகளுள் கருங்கற்சுவர்களில் என்றும் அழிந்தொழியாது, அன்றெழுதியவாறு எஞ்ஞான்றும் தோன்றும்வண்ணம், நம் நாட்டின் புராதனசரித்திரங்களை வரைந்துவைத்த நம் மூதாதையர்களின் ஒப்புயர்வில்லா முன்னேக்கத்தையும் ஆழ்ந்த அறிவினையும் புகழாதார் புன்மக்களே.

(1) முதலாவது குகை :—இது முடிவடையாதிருப்பதால் இதிலிருக்கும் சிலைகள் இன்னவென்று அறிந்துகொள்ளக் கூடவில்லை. ஆயினும் இதிற் செய்யப்பட்டிருக்கும் சிற்பவேலைகள் மிகச் சிறந்தவை. காட்டிலுள்ள மரங்களும் கொடிகளும் அவைகளினிடையில் ஓடித்திரியும் மிருகங்களும் மிக அழகாகச் செதுக்கப்பட்டிருக்கின்றன. பின்னங்கால்களைக் கடிக்கும் ரிஷபங்களும், புறங்கால்களால் தினவு தீர்த்துக்கொள்ளும் புல்வாய்களும், மனிதரை வாயிற் கவ்விக்கொண்டோடும் பாய்மாக்களும், சிரசின்மேல் தூக்கின துதிக்கைகளோடு ஆரவாரித்துக்கொண்டோடும் கஜங்களும், உயிரிலவென்றுரையாவண்ணம் உண்மைத் தோற்றத்தோடு அமைக்கப்பட்டிருக்கின்றன.

(2) இரண்டாவது குகை :—இதில் தர்ம சக்கரம் எனக் கருதப்படும் தாமரைப்பூவின்மேல் வைக்கப்பட்ட காலோடு சிம்மாசனத்தில் வீற்றிருக்கும் கௌதமபுத்தருடைய அழகான மூர்த்திகள் பலவிருக்கின்றன. அவைகளின் வலதுபக்கத்தில் போதிசத்துவ பத்மபாணிதேவரின் மூர்த்திகளும், இடதுபக்கத்தில் வஜ்ஜிர

பாணிதேவரின் மூர்த்திகளும் இருக்கின்றன. பத்மபாணி தேவரின் வலது கையில் சாமரமும் இடதுகையில் பத்மபுஷ்பமும் காணப்படுகின்றன. வஜ்ஜிரபாணி தேவர் முறையே சாமரத்தையும், வஜ்ஜிராயுதத்தையும் கொண்டிருக்கின்றனர். இவர்களுக்கு மேல் கந்தர்வர்களும் அப்ஸர ஸ்திரீகளும் புஷ்பக்கூடைகளுடனும், புஷ்பமாலைகளுடனும் காணப்படுகின்றனர்.

தரையில் ஓர் சிவலிங்கமும் அதன் எதிரில் நந்தியும் இருக்கின்றன. அதை இராமலிங்கம் எனச் சொல்லிக்கொள்ளுகின்றனர். இந்த குகையின் இடதுபாகத்தில் ஓர் நீர்ச்சுனை இருக்கின்றது.

(3) மூன்றாவது குகை:—இது பெரிதாகவும் அழகாகவும் அமைந்திருக்கின்றது. இதில் 18 அறைகள் இருக்கின்றன. இதிலும் இடதுபக்கத்தில் சிங்கத்தோடும், வலதுபக்கத்தில் சக்கரத்தோடும் காணப்படுகின்ற புத்தருடைய மூர்த்தி இருக்கின்றது. இதன் வாயிலுக்கிருபுறங்களிலுமுள்ள வளைவுகளில் ஸ்திரீ புருஷர்களுடையவும் குழந்தைகளுடையவும் பிம்பங்கள் இருக்கின்றன. இக்குகையின் வாயிலின் இருபக்கங்களிலுமுள்ள சுவர்களில் அதிசுந்தரமான சித்திரங்கள் வரையப்பட்டிருக்கின்றன.

(4) நான்காவது குகை:—இது முற்காலத்தில் போஜனசாலையாக உபயோகப்பட்டிருக்கவேண்டும் என்று தெரிகின்றது.

(5) ஐந்தாவது குகை:—இது இளைப்பாறும் இடமாக இருந்திருக்கவேண்டும் என்று தோற்றுகிறது. இதில் பார்க்கவேண்டியது ஒன்றும் இல்லை.

(6) ஆறாவது குகை:—ஐந்தாவது குகைக்கும் இதற்கும் இடையிலுள்ள சுவர் இடிந்துபோயிருக்கிறதால் இரண்டு குகைகளும் ஒன்றாகவே தோற்றுகின்றன. இதிலும் பார்க்கத்தக்கது ஒன்றும் இல்லை.

(7) (8) ஏழாவது எட்டாவது குகைகள்:—இவைகளில் கல்வெட்டு எழுத்துக்களைத் தவிர்த்துப் பார்க்கவேண்டியது ஒன்றும் இல்லை. எட்டாவது குகையில் ஓர் நீர்ச்சுனை இருக்கின்றது.

(9) ஒன்பதாவது குகை:—இது குன்றின்மேலிருந்து கீழே இறங்கும் பாதையில் இருக்கின்றது. இதிற் சில அறைகளும்

கூடங்களும் இருக்கின்றன. அக்குன்றில் ஆடுமாடுகளை மேய்ப்போர் இதைத் தங்கள் கால்நடைகளை அடைக்கும் சாலையாக உபயோகித்து வருகின்றனர் என்று தெரிகிறது. இதன் எதிரில் ஒரு பெரிய நீர்ச்சுனை இருக்கின்றது. உட்பக்கத்தில் யானை, ரிஷபம், மான் முதலிய மிருகங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன.

(10) பத்தாவது குகை:—இது எல்லா விஷயத்திலும் மேற்சொல்லிய மூன்றாவது குகையை ஒத்திருக்கின்றது. இதில் ஓர் சபாமண்டபமும், ஓர் விசாலமான கூடமும், 16 அறைகளும் இருக்கின்றன. இதில் காலபைரவருடைய மூர்த்திகளும், நாட்டியம் செய்யும் அப்ஸர ஸ்திரீகளுடைய பிம்பங்களும், யானை, புலி, எருது, மான் முதலிய மிருகங்களின் உருவங்களும் செதுக்கப்பட்டிருக்கின்றன.

(11) பதினோராவது குகை:—இது பத்தாவது குகையை விடச் சற்று உயரமானவிடத்தில் இருக்கின்றது. இதில் ஒரு சபாமண்டபமும், ஒரு கூடமும், ஒரு அறையும் இருக்கின்றன. அந்த அறைக்குள் சமண மதப்பெரியார்களான 24 தீர்த்தங்கரர்களுள் முதல்வரான * விருஷபதேவரின் மூர்த்தி இருக்கின்றது. இம்மூர்த்தி பத்மாசனத்தில் வீற்றிருக்கும் தோற்றத்தோடு அமைக்கப்பட்டிருக்கின்றது. அவரிருக்கும் ஆசனம் புலித்தோலாகக் காணப்படுகின்றது.

இக்குகையின் வலதுபுறச்சுவரில் ஸ்ரீ ஜெகதம்பிகையின் மூர்த்தியும், அதற்கருகில் ஜைனகந்தருவரான வீரமணிபத்திரரின் மூர்த்தியும் மிக அழகாகச் செதுக்கப்பட்டிருக்கின்றன. அம்பிகையானவள் ஓர் மாமரத்தின்கீழ் ஓர் சிம்மத்தின்பேரில் மண்டிபோட்டு உட்கார்ந்திருப்பதும், அதற்கருகில் தாடி ஜடையோடு கூடிய ஓர் பெரியவர் பூஜை செய்ய நிற்பதும், பார்ப்போர்மனதில் பரம பக்தியைப் பரவச்செய்கின்றது.

---

* குறிப்பு:—ஜைனமதாசாரியார்கள் இருபத்து நால்வர்களின் பெயர்:—(1) விருஷபர் (2) அஜிதர் (3) சம்பவர் (4) அபிநந்தனர் (5) சுமதி (6) பத்மப்பிரபை (7) சுபார்சுவர் (8) பத்மநாதர் (9) புஷ்பதந்தர் (10) சீதளர் (11) சிரேயாம்சர் (12) வாசுபூஜ்யர் (13) விமலர் (14) அநந்தர் (15) தருமர் (16) சாந்திநாதர் (17) குந்து நாதர் (18) அரர் (19) மல்லிநாதர் (20) முனிசுவிரதர் (21) நமிநாதர் (22) நேமிநாதர் (23) பார்சுவர் (24) வர்த்தமானர்.

(12) பன்னிரண்டாவது குகை:—இது இடிந்துபோய் மிகவும் கிலமாயிருக்கின்றது.

(13) (14) பதின்மூன்ருவது பதிநான்காவது குகைகள்:—இவைகளுக்கிடையில் உள்ள சுவர் இடிந்துபோயிருப்பதால் இவை இரண்டும் ஒரு குகையாகவே தோற்றுகின்றது. பதினன்காவது குகையில் ஒரு நீர்ச்சுனையும், அதிலுள்ள அறையில் சீதளாதேவியின் சிலையும் இருக்கின்றது.

(15) பதினைந்தாவது குகை:—இது தோற்றத்திலும் அமைப்பிலும் 6 வது நூற்றாண்டில் செதுக்கப்பட்டதாகக் கருதப்படுகிற அஜண்டா, காணேரி முதலிய இடங்களிலுள்ள குகைகளை ஒத்திருக்கின்றது. இதில் தாமரைப் பூவின்மேல் தம் பாதத்தை வைத்துக்கொண்டு சிம்மாசனத்தில் வீற்றிருக்கும் கௌதம புத்தருடைய மூர்த்தி இருக்கின்றது. தாமரைப் பூவின்கீழ் தர்மசக்கரமும், சிம்மாசனத்தின் பின்பக்கத்தில் புலியின் உருவமும் இருக்கின்றன. தரும சக்கரத்தின் இருமருங்கிலும் மான்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன.

(16) பதினாருவது குகை:—இது 15 வது குகையைவிடச் சற்று உயரத்தில் இருக்கின்றது. இதிலும் முன் சொன்ன மாதிரியே புத்தருடைய உருவம் செதுக்கப்பட்டிருக்கின்றது. அவருக்குப் பக்கத்தில் புலி, வாத்தைப்பிடிக்கும் பாவனையோடுள்ள முதலை, இவைகள் இருக்கின்றன.

(17) பதினேழாவது குகை:—இது அபூர்ணமான ஸ்திதியில் இருக்கிறது. இதில் ஓர் சிவலிங்கமும், தாமரைப்பூவின்மேல் நிற்கும் புத்தருடைய மூர்த்தியும் இருக்கின்றன. இவைகளைத்தவிர அனேக பட்சிஜாதிகளும், மிருகங்களும் செதுக்கப்பட்டிருக்கின்றன. இந்த குகையானது ஒருகாலத்தில் தானியங்களைச் சேமித்து வைக்கக்கூடிய களஞ்சியமாக உபயோகப்பட்டு வந்திருக்கவேண்டுமெனத் தோன்றுகிறது.

(18) பதினேட்டாவது குகை:—இதிலும் மற்ற குகைகளில் இருப்பதுபோலவே புத்தருடைய மூர்த்தியும், பட்சிகள், மிருகங்கள், சர்ப்பங்கள், இவைகளுடைய உருவங்களும் செதுக்கப்பட்டிருக்கின்றன. இக்குகையிலுள்ள புத்தமூர்த்தி கமலத்தின் மத்தியிலுள்ள திரிசூலத்தின் மேல் நிற்கின்றது.

(19) பத்தோன்பதாவது குகை:—இது சாதுக்கள் வசிப்ப தற்காக ஏற்பட்டிருக்கவேண்டும் என்று தோற்றுகின்றது. சாதுக் களுடைய தண்ட கமண்டலங்களை வைப்பதற்காகத் தனியான இடம் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. இதற்கு இரும்பினுல் கதவு நிலைபோடப்பட்டிருக்கிறது.

(20) இருபதாவது குகை:—இதுவும் சாதுக்களின் வாசஸ் தானமாக இருந்து வந்ததெனத் தெரிகின்றது. இதை போபாக்கி (Bopakki) என்னும் பெரியார் கட்டத்தொடங்கி முடிக்காது விட்டனர் என்றும், பிற்காலத்தில் பஸ்கோபர் என்னும் சேனுதி பதியின் மனைவியான வாசு என்னும் பெண்மணி கட்டி முடித்த னர் என்றும் தெரிகின்றது. இது மிகப் பெரிதாகவும், அனேக அறைகள் கூடங்களுடனும் இருக்கின்றது. இதிலும் மற்ற குகை களிலிருப்பதுபோலவே புத்தவிக்கிரகங்களும், மிருகங்கள் பட்சி கள் செடிகொடிகள் இவைகளின் உருவங்களும் செதுக்கப்பட் டிருக்கின்றன.

(21) இருபத்தோராவது குகை:—இது பெரிதாகவும் சுத்த மாகவும் இருக்கின்றது. இதிலிருக்கின்ற சுனையின் நீர் குடிப்பதற் கேற்றதாக இருக்கின்றது. இது முற்காலத்தில் மடப்பளியாக உபயோகப்பட்டதாகத் தெரிகிறது.

(22) இருபத்திரண்டாவது குகை:—இது இடிந்துபோய் சொரூபமில்லாதிருக்கின்றது.

(23) இருபத்துமூன்றுவது குகை:—இது பெரிதாகவும் 5-6 பாகங்களாகப் பிரிக்கப்பட்டும் இருக்கின்றது. இதிலும் புத்தரு டைய மூர்த்திகளும், தாராதேவியின் மூர்த்தி ஒன்றும், கந்தர்வர் களுடையவும், அவர்களுடைய ஸ்திரீகளுடையவும் பிம்பங்களும் செதுக்கப்பட்டிருக்கின்றன. இதிலும் ஓர் நீர்ச்சுனை இருக்கின்றது.

(24) இருபத்துநான்காவது குகை:—இது அனேகமாய் இடிந்துபோயிருப்பதால் உட்செல்லுவதற்கு உசிதமற்றதாக இருக்கின்றது.

சாம்பாரலேணி (Chambhara L^ni) அல்லது
* கஜபன்தி டேன்கடி (Gajapanthi Tenkadi):—

இது நாசிக்பட்டினத்திற்கு வடதிசையில் சுமார் 5-மைல் தூரத்தில் பூமிமட்டத்திலிருந்து சுமார் 600 அடி உயரத்திலுள்ள

* குறிப்பு:—சாம்பாரலேணி=சக்கிலியர்குகை. டேன்கடி=மேடை.

ஓர் சிறு குன்றில் இருக்கின்றது. இதன் அடிவாரத்தில் முற்காலத்தில் ஓர் சக்கிலியர் கோவில் இருந்த காரணம்பற்றி இதற்கு **சக்கிலியர் குகை** என்னும் பேர் வந்திருப்பதாகத் தெரிகிறது. ஆனால் சமண மதத்தினர் இதை "**கஜபந்தி**" என்னும் பேரிட்டழைக்கின்றனர். துவாபரயுகத்தில் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவுக்கு **கஜசுககுமாரர்** என்னும் பேருள்ள ஓர் சகோதரர் இருந்ததாகவும், அவர் இம்மேடையில் முத்தியடைந்ததாகவும், அதனால் இக்குன்றிற்கு **கஜபந்தி** என்னும் பேர் வந்ததாகவும் சொல்லிக் கொள்ளுகின்றனர்.

நாசிக்பட்டினமிருந்து இந்த குன்றிற்குப் போகும்சாலையில் சுமார் நாலரை மைல் தூரத்தில் **மஸரூள்** (Mhasarul) என்னும் ஓர் சிற்றூர் இருக்கின்றது. அதில் ஜைன மதத்தினர்களாற் கட்டப்பட்ட ஓர் அழகான தர்மசாலை இருக்கின்றது. தங்குவதற்கு மிகவும் வசதியானது. அங்கிருந்து சாலையின் வழியே ஒரு பர்லாங்கு தூரம் சென்றவுடன் இக்குன்றிற்குப் போகும் வண்டிப்பாதை தென்படுகின்றது. அதன் வழியே சுமார் இரண்டு பர்லாங்கு சென்றால் வண்டிப்பாதை முடிவடைகின்றது. அதன் பிறகு காற்பாதை வழியே செல்லல்வேண்டியிருக்கின்றது. வண்டிகள் நிறுத்தப்படும் இடத்திலிருந்து குன்றின் அடிவாரம் சுமார் கால் மைல் தூரம் இருக்கின்றது. குன்றின் அடிவாரத்தில் ஒரு குடிதண்ணீர்க் கிணறும், ஒரு சாவடியும் இருக்கின்றது. அடிவாரமிருந்து குன்றின் மேலேறிப்போக 330 படிகள் இருக்கின்றன. வழியிலும் குன்றின் மேலும் நீர்ச்சுனைகள் இருக்கின்றன.

இக்குன்றின்மேல் ஏறிப்போனால் அங்கு முன் சொல்லிய குகைகளைப்போன்ற ஓர் அழகிய குகை இருக்கின்றது. இதன் வாயிலின் இருபக்கத்திலும் துவாரபாலகர்களைப்போன்ற தீர்த்தங்கரர்களுடைய பிம்பங்களும், அவைகளுக்கருகில் இரண்டு ஸ்திரீ பிம்பங்களும் செதுக்கப்பட்டிருக்கின்றன. குகையின் உட்புறத்தில் ஸ்ரீபாரஸ்நாதர், ஆதிநாதர், ஜெகதம்பிகை, கௌதமபுத்தர் முதலியவர்களுடைய மூர்த்திகளும் மற்றும் அனேக தீர்த்தங்கரர்களின் பிம்பங்களும் செதுக்கப்பட்டிருக்கின்றன. செதுக்குவேலை பார்ப்பதற்கு வெகு அழகாக இருக்கின்றது. இக்குன்றும் இதன் மேலுள்ள குகையும் சமண மதத்தர்களால் போற்றப்பட்டு வருகின்றன.

---

# அத்தியாயம். 4.

அண்டமெலாங் கண்ணாகக் கொளினுங் காண்டற்
கணுத்துணையுங் கூடாவென் றனந்த வேதம்
விண்டலறி யோலமிட்டுப் புலம்ப மோன
வெளிக்குள்வெளி யாய்நிறைந்து விளங்கு மொன்றே
கண்டவடி வாயகண்ட மயமா யெங்குங்
கலந்துநின்ற பெருங்கருணைக் கடவு ளேயெஞ்
சண்டவினைத் தொடக்கறச்சின் மயத்தைக் காட்டும்
சற்குருவே த்ரயம்பகத்தே சார்ந்தத் தேவே.

பூத்திடுமெவனுங் காத்திடுபவனும் புள்விலங்குருக் கொடுநேடி
ஏத்திடுமுடியுங் கூத்திடுமடியு மின்னமுங் காண்கிலரென்றுங்
கோத்திடுமடியர் மாலையினளவிற் குலவினையென்று நல்லோர்கள்
சாற்றிடுமதுகேட் டுவந்தனனினது சந்நிதியுற வெனக்கருளே.

## திரயம்பக க்ஷேத்திரம்.

இத்தலத்திற்கு அருகாமையிலுள்ளது, நாசிக்ரோட் ஸ்டேஷனுக்கும் இகத்புரி ஸ்டேஷனுக்கும் இடையிலுள்ளதும், பம்பாயிலிருந்து 101 மைல் தூரத்திலுள்ளதுமான அஸ்வாலி (Asvali) என்னும் ரெயில்வே ஸ்டேஷனையினும், யாத்திரை செய்வோர் நாசிக்பட்டினம் சென்று அங்கு தங்கிக்கொண்டு இங்கு வந்து போவதே நலம். அஸ்வாலி என்பது சிற்றூராதலின் எக்காலத்தும் வண்டிகள் கிடைப்பது அருமை. சாலையும் நாசிக்பட்டினத்திலிருந்து வரும் சாலையைப்போன்ற நல்ல சாலையல்ல.

இங்குப் பிரயாணிகள் தங்குவதற்கு பம்பாய்ப்பட்டினத்திலுள்ளபட்யா (Bhatya) முதலிய ஜாதியாரால்கட்டப்பட்ட அனேகம் தருமசாலைகள் இருக்கின்றன. ஆயினும் இத்தலம் வரும் யாத்ரீகர்களுக்கு வேண்டிய காரியங்களைச் செய்துவைக்கும் க்ஷேத்திரோபாத்தியாயர்கள் அவர்கள் தங்குவதற்குத் தங்கள் தங்கள் இல்லங்களிலேயே இடங்கொடுத்துதவுகின்றனர். இது ஒரு முனிசிபல் பட்டினம். நாசிக்பட்டினத்திற் செய்வதுபோலவே இங்கும் யாத்திரைக்காரர்களிடமிருந்து ஆள் ஒன்றுக்கு நான்கு அணா வீதம் யாத்திரை வரி (Pilgrim Tax) வசூலிக்கின்றனர்.

இவ்விந்தியாவிலுள்ள எல்லா க்ஷேத்திரங்களைப்போலவே இங்கும் மோட்டார்வண்டிகளும் மற்ற வண்டிகளும் வந்து தங்குமிடத்தில் அனேகம் பிராமணர்கள் வந்து காத்திருந்து யாத்ரீகர்களை மிக்க மரியாதையுடன் அழைத்துச் செல்லுகின்றனர். அவ்வந்தணர்களுள் ஒவ்வொருவரிடமும் தம்மிடம் அதற்குமுன் வந்துபோயிருக்கும் யாத்ரீகர்களின் பெயர், தகப்பனார் பெயர், இருப்பிடம் முதலியவை குறிக்கப்பட்டுள்ள பெரும் புத்தகங்கள் இருக்கின்றன. அவைகளில் அப்பெயர்களை அகராதியில் எழுதுவதுபோல் எழுத்து வரிசையாக எழுதிவைத்திருக்கின்றனர். யாத்திரைக்காரர்களைக் கண்டவுடன் அவர்கள் ஒவ்வொருவரும் அவர்கள் பேர் ஊர் முதலிய விவரங்களைக் கேட்டுத்தெரிந்து கொண்டு, அவர்களைச் சேர்ந்தவர்கள் யாராவது அதற்குமுன் தங்கள் வலையிற் சிக்குண்டிருக்கின்றனரோ எனத் தங்கள் தங்கள் புத்தகங்களைப் பள்ளிப்பிள்ளைகள் அகராதியைப் பார்ப்பதுபோல் சோதித்துப் பார்க்கின்றனர். யாருடைய முயற்சி பயன் படுகின்றதோ அவர்கள் அந்தந்த குடும்பத்தினரை அழைத்துச் செல்லுகின்றனர்.

இவ்வாறு தங்களுக்குள் பங்கிட்டுக்கொள்ள வியலாமல் நம் தென்னாட்டு யாத்ரீகர்கள்போன்ற புதிய யாத்ரீகர்களை ஒவ்வொருவரும் தங்கள் தங்களுக்குச் சொந்தமாக எண்ணி, அவர்கள் கைகளையும், மேல் உத்தரீயங்களையும், சட்டைகளையும், மூட்டை முடிச்சுகளையும் பற்பல திசைகளிற் பிடித்திழுத்துப் பல்வகையானும் துன்புறுத்திவிடுகின்றனர். ஆகவே இத்தகைய புண்ணிய தலங்களுக்குச் செல்லும் புதிய யாத்ரீகர்கள், வாங்கின கடனைக் கொடுக்க முடியாத ஒருவன் பல கடன்காரர்களிடமும் அகப்பட்டுத் துன்புறுவதுபோலும்,

**கல்லாத புந்தியுமந்தோ நின்றுளிற் கணப்பொழுதும்**
**நில்லாத நெஞ்சமும் பொல்லாதமாயையு நீண்மதமுங்**
**கொல்லாமற் கொன்றெனைத் தின்னுமற்றின்கின்ற கொள்கையையிங்**
**கெல்லாமறிந்த வுனக்கெளியே னின்றிசைப்ப தென்னே.**

என்று வடலூர் இராமலிங்கசுவாமிகள் சொல்லிப் புலம்பியவண்ணம், "கையொன்றுசெய்ய விழியொன்றுநாடக் கருத்தொன்றெண்ணப் பொய்யொன்று வஞ்சக நாவொன்றுபேசப் புலால்

கமழு மெய்யொன்றுசாரச் செவியொன்றுகேட்க" என்றபடி ஒரு மனிதனுடைய ஓர் மனமானது பற்பல இந்திரியங்களிடத்தும் அகப்பட்டு அளவிலா அவதிக்குள்ளாகித் துன்புறுகின்றது போலும், அங்கிருக்கும் பண்டாக்களென்னும் குண்டாக்களிடம் அகப்பட்டு அவமதிப்புறல் வேண்டியிருக்கின்றது. அதிலும் அந்தந்த க்ஷேத்திரத்தில் வழங்கும் மொழி தெரியாதோர் படும்பாடு சொல்லற்பாலதன்று. ஆதலின் அவ்விதம் வந்து அகப்படுவோர், தங்களைச்சூழ்ந்து நிற்கும் வேதியர்களுள், தங்களிடம் அதிகமாக நெருங்கிவந்து உபத்திரவியாதவர்களும், இருப்பவர்களுள் ஏழையாக விருப்பவர்களும் "அகத்தினழகு முகத்திற்றெரியும்" என்னும் பழமொழியின்படித் தம்மால் தெரிந்துகொள்ளும் வரையில், சாதுக்களாகத் தோன்றுகிறவர்களுமான பிராமணர்களை அழைத்து * அவர்களைத்தங்கள் புரோகிதர்களாகத் தேர்ந்தெடுத்துக்கொள்ளலும், ஏனையோர் ஏதுசொல்லினும் செவிகொடாது செல்லுதலும் அவசியம். அவர்கள் மேற்சொல்லியவாறு தங்கள்மனத்தை ஒருவாறு திடப்படுத்திக்கொண்டுக் கூடிய சீக்கிரத்தில் ஓர்வித முடிவுக்கு வாராதிருப்பின், அவர்கள் ஒருபக்கமும், அவர்கள் மனைவிமக்கள் ஒருபக்கமும், பெட்டிபேழைகள் ஒருபக்கமும், மூட்டைமுடிச்சுகள் ஒரு பக்கமுமாகச் சிதறுண்டு கெட்டலைய நேரும் என்பது திண்ணம்.

---

* குறிப்பு:—இத்தலத்திற்கு நாம் சென்றிருந்தபோது அனேகம் புலிகள் ஒருமானைச் சூழ்ந்துகொள்வதுபோல், கணக்கற்ற பண்டாக்கள் நம்மைச் சூழ்ந்து சுற்றிக்கொண்டனர். அவர்களுள் சற்று தூரத்திலேயே விலகிநின்றவரும், பரமசாதுவாகத் தோன்றினவருமான சதாசிவ கங்காதர ஜோசி என்பவரை நம் பண்டாவாகத் தேர்ந்தெடுத்தோம். கங்காஸ்நானத்திற்காகவந்த நமக்கு கங்காதரர் என்ற நாமமுள்ள பண்டாகிடைத்ததற்காக மனமகிழ்ந்தோம். மற்றவர்களுடன் மல்யுத்தம் செய்ய மனமில்லாது ஒதுங்கி நின்றிருந்த ஒருவரை நாம் பண்டாவாக ஏற்றுக்கொண்டதைக் கண்ட மற்றவர்கள், அவர் பரம ஏழையென்றும், அவரில்லத்தில் இருக்க இடம் கிடைப்பதரிதென்றும், அவருக்குத் தர்ப்பணஞ்செய்து வைக்கவும் தெரியாதென்றும் சொல்லி நம்மை அதைரியப்படுத்தினார்கள். நாம் அதை யெல்லாம் பொருட்படுத்தாது சென்றதன்பயனாக, நாம் தங்கியிருக்க அருமையான இடம் கிடைத்ததுடன் பரமசாதுவான பண்டாவும் நமக்கு வாய்த்தனர். அதற்காக ஸ்ரீதிரயம்பக நாதருக்கு நமது மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்தினோம்.

இவ்விடத்தில் முனிசிபல் ஆபீசு (2) தந்தித்தபாலாபீசு (3) ஆஸ்பத்திரி (4) தரும வாசகசாலை (Free Library) (5) பையன்களும் பெண்களும் வாசிக்கக்கூடிய பள்ளிக்கூடங்கள் (6) சமஸ்கிருத பாடசாலை முதலிய கட்டிடங்களும் இருக்கின்றன.

நாசிக்பட்டினமிருந்துவரும் சாலையில் மூன்றுவது மைலில் சாதபூர் (Satapur) என்னும் கிராமமும், ஆருவது மைலில் * பிம்பள்காவ்ம் (Pimpalgaon) என்னும் கிராமமும், ஒன்பதாவது மைலில் மஹிராவணி என்னும் கிராமமும் இருக்கின்றன. இவைகளைக்கடந்து சென்றால் கம்பாளே (Khambale) அஞ்சன்னேரி, பேகல்வாடி என்னும் சிற்றூர்கள் தென்படுகின்றன. ஆனால் அவைகள் சாலையைவிட்டு ஒதுங்கியிருக்கின்றன. 14-வது மைலில் கணேஷ்கிண்ட் (Ganeshkhind) என்னும் இடம் இருக்கின்றது. அங்கிருந்து பார்த்தால் அஞ்சன்னேரி என்னும் அருமையான குன்று தெரிகின்றது. 16-வது மைலில் பாணகங்கை என்னும் நதி குறுக்கிடுகின்றது. அதன் வலதுபக்கத்தில் பிரயாகை தீர்த்தமும், இடது கரையில் அவதூத சன்னியாசிகளின் மடமும் இருக்கின்றது.

## ஸ்தலமகாத்மியம்.

சப்த மோட்சபுரிகளில் ஒன்றான மாயை என்னும் ஹரித்துவாரமானது எவ்வாறு கங்கையானது இமயமலையினின்றிழிந்து, பூமியை ஸ்பரிசிக்கும் இடத்தில் அமைந்திருக்கின்றதோ, அவ்வாறே இத்தலமும் விருத்தகங்கையான கோதாவரி நதியானது திரியம்பககிரி, பிரமகிரி, என்னும் திருநாமங்கள் பெற்ற புண்ணிய பர்வதத்தினின்றிழியும் இடத்தில் இருக்கின்றது. இதற்குத் திரிஸந்திய க்ஷேத்திரம் என்னும் திருநாமமும் வழங்குகின்றது. இத்தலத்துறையும் திரயம்பகநாதர் † பன்னிரண்டு ஜோதிலிங்கங்களுள் ஒருவராவர்.

ஆதிகாலத்தில் பிரமதேவர் தாமே பெரியவர் என்றும், பரப்பிரம சொரூபத்தின் ஞானகுணாதிசயங்களைத் தாமே நன்குணர்ந்தவர் என்றும், அகந்தைப்பறை அறைந்து திரிந்தனர்.

---

* குறிப்பு:—பிம்பள்=அரசமரம் ; காவ்ம்=ஊர்.

† குறிப்பு:—பன்னிரண்டு ஜோதிலிங்கங்களின் பெயரை இப்புத்தகம் முதற்பாகம் 3-வது பக்கம் அடிப்புறத்திற் காணலாம்.

அதையறிந்த மகாவிஷ்ணுவானவர் சர்வகர்த்தாவாகியும், சர்வஞ்ஞராகியும், சாந்தராகியும், சுபாவப்பிரகாசராகியும், அசலராகியும், ஆதியாகியும், அநாதியாகியும், அதுலராகியும், அவ்வியராகியும், சுத்தராகியும், சூட்சுமராகியும், மகாணுகியும், பிரியரர்கியும், அப்பிரியராகியும் எல்லாம்வல்ல பராசத்தியுடன் கூடியுள்ளவராகியும், சத்யோஜாதம், வாமதேவம், அகோரம், தத்புருஷம், ஈசானம், என்னும் ஐந்து திருமுகங்களுடையவராகியும், ஆன்மாக்களின் பாசச்சேத நிமித்தம் சித்தாந்தமாகிய காருடம், வாமம், பூததந்திரம், பைரவமீருகிய ஆகமபேதங்களை ஈசான மொழிந்த மற்ற நான்கு திருமுகங்களானும், * காமிகம், யோகசம் முதலிய இருபத்தெட்டு ஆகமங்களையும் எஞ்சிநிற்கும் ஈசானம் என்னும் திருமுகத்தானும் திருவாய் மலர்ந்தருளியவராகியும், தூவெண்மையான ஸ்படிக நிறத்தையுடையவரும், ஐந்து திருமுகம், பத்துக் கரங்கள், ஒரு மெய், இரண்டு திருவடிகள் ஆகிய இவைகளோடு கூடியவரும், வலதுகரங்களில் இச்சா ஞானக்கிரியையாகிய மூவிலைச் சூலமும், பராசத்தி ரூபமாகிய மழுவும், கர்த்துருபாவமான வாளும், பீஜாபூரகமும், வச்சிரமும், ஜனனபயத்தைப் போக்குவதான அபயமும், இடது கரங்களில் இருத்திக்குணமாகிய நாகமும், ஸ்தூல சூக்கும பூதங்களை நடாத்தும் மாயாரூபமாகிய பாசமும், குணமாகிய நீலோற்பலமும், அங்குசமும், சுத்தா சுத்த அத்துவாக்களைப் பிரவர்த்திக்கும் குணமான தமருகமும், யோகதாயகமான வரதமும், நாதகுணமாகிய மணியும், சம்ஹாரகுணமாகிய அக்கினியும், திரோதான சத்தியான பரிவட்டமும், அருளாகிய சுகந்தமும், பரையாகிய மாலையும், அனுக்கிரகாங்குரமான புன்முறுவலும், பொருந்தி தியான பூஜாநிமித்தம் சகளத்திருவுருக் கொண்டெழுந்தருளியிருப்பினும், அவையெல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டிருப்பவரும், ஜீவகோடிகட்குப் பெத்த முத்திகளைத் திருவருள் செய்தற்பொருட்டு,

---

* குறிப்பு:—28 ஆகமங்களாவன:—காமிகம், யோகசம், சித்தியம், சாரணம், அசிதம், தீபதம், சூக்குமம், சகஸ்ரம், அம்சுமான், சுப்பிரபேதம், விசயம், நிசுவாசம், சுவாயம்புவம், அனலம், வீரம், இரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், விம்பம், புரோற்கதம், இலளிதம், சித்தம், சந்தானம், சர்வோக்தம், பாரமேசுரம், கிரணம், வாதுளம் என்பனவாம்.

ஆடும் படிகேணல் லம்பத்தி லேயனே
நாடுந் திருவடியி லேநகரம்—கூடு
மகர முதரம் வளர்தோள் சிகரம்
பகருமுகம் வாமுடியப் பார்.

என்றபடி, பஞ்சாட்சரத்தையே தமது அவயவங்களாகவும், ஓங்காரசொரூபத்தையே தமது திருமேனியாகவும் கொண்டு,

உரையுணர்வுக் கெட்டா வொருவன் மிருபஞ்சாக்
கரத்தால் வரைமக டான்பாதி—பரையிடமாக்
காணும்படியே கருணையுருக் கொண்டாடல்
தானெந்தை யார்பாதந் தான்.

என்றுரைத்திருக்குமாறு, உமாதேவியாரும் மற்ற முப்பத்து முக்கோடி தேவர்களும் கண்டு களித்துய்யும்பொருட்டு பஞ்ச கிருத்தியத் திருநடனம் செய்பவருமாகிய தேவாதிதேவனைத் திரிபுராந்தகனை அவருடைய வாகனமாகி, எக்காலத்தும் அவரைச்சுமந்து திரியும் தமக்கே முற்றுமுணர்தல் கூடாதிருக்க, தம் நாபிக் கமலத்திற்றோன்றிப் பிரணவத்தின் பொருளறியாது குழந்தைக் குமரனிடத்தில் குட்டுண்டுச் சிறைவாசம் செய்த பிரமதேவன் அக்குமரனை ஈன்றெடுத்தவரும், நாதவுருவானவரும், நாதாந்த மனோலயத்தில் நடித்தவரும், வேதவுருவானவரும், வேதத்தினுபநிடதவித்தானவரும், பேதவுரு, அபேதவுரு, பேதாபேதவுருவும் பெற்றவருமான அப்பரம கைவல்லிய நவநீதகுண புருஷோத்தமரான எம்பெருமான் குணங்களை அறிந்திருப்பதாகப் பிதற்றுதல் அசம்பாவிதமென மொழிந்தனர்.

அதைக்கேட்ட அந்தணர்,

என்னுடைய தாதையென நீயுனை வியந்தாய்
அன்னதை விடுக்குதி யருந்தவ வலத்தான்
முன்னமொரு தூணிடை முளைத்தனை யவற்றால்
உன்னிலது வேமிக வுயர்ந்த பொருளாமோ.

(கந்தபுராணம் அடிமுடி தேடுபடலம்.)

* குறிப்பு:—அக்கினி அஸ்தத்தால் நகாரத்தையும், பாதபங்கயங்களால் மகாரத்தையும், லம்பஹஸ்தத்தால் சிகாரத்தையும், டமருகஹஸ்தத்தால் வகாரத்தையும், அபயஹஸ்தத்தால் யகாரத்தையும் தோற்றுவித்து அருள்புரிகின்றார் என்று சொல்லுவாருமுளர்.

எனவுரைத்து, ஒருபொருள் தோன்றுவதற்கு ஆதாரமா யிருக்கும் காரணத்தால்மட்டும் தோற்றுவிப்பது தோன்றுவதை விட உயர்ந்ததாகமாட்டாதென நிரூபித்துப் பிறகு,

**துய்யமக னும்பிருகு சொற்ற சபதத்தால்**
**ஐயிரு பிறப்பினை யடிக்கடி யெடுத்தாய்**
**மெய்யவை யனைத்தையும் விதித்தனம் விதித்தெங்**
**கையது சிவந்துளது கண்டிடுதி யென்றூர்.**

**(கந்தபுராணம் அடிமுடி தேடுபடலம்.)**

இவ்வாறு தம்முடைய சிருஷ்டியின் பயனைப் ஐயிரண்டு பிறப் பெடுத்த திருமால் தம்மைவிட உயர்ந்தவராவதெங்ஙனம் என்று வாணிகேளவர் வாதாடினர். அதைக்கேட்ட அரியும்,

**நச்சராப் பூண்டிடு நம்பனுன் சென்னியில்**
**உச்சியந் தலையினை யுகிரினாற் களைதலு**
**மச்சமாய் வீழ்ந்தனை யதுபடைத் தின்னமும்**
**வைச்சிலாய் நன்றுநீ மற்றெமைத் தருவதே.**

என்றுரைத்து, "பசிப்பிணியாற் பீடிக்கப்பட்டு வருந்தும் ஒரு வன் மற்றொருவனைநோக்கி, "உமக்குப் பசியாவரம் தருகின் றேன். எனக்குச் சிறிது பழையசோறு கொடும்" என்று கேட் பதுபோல் இருக்கின்றது உமாபதி கிள்ளிவிட்ட உம்முடைய உச்சிநோக்கின தலையை மீண்டும் படைத்துச் சேர்த்துக்கொள் ளச் சக்தியில்லாத நீர் நம்மைப்படைத்ததாகச் சொல்லுவது." என்று ஏளனம் செய்தனர்.

இங்ஙனம் நான்முகனும் நாரணனும் நானிலத்துத் தாம் தாமே பெரியவர் என்று வாதிட்டுக்கொண்டிருந்த சமயத்து, அழலேந்தியான அம்பிகாபதி அவர்களினிடையில் ஓர் அனற் பிழம்பாய்த் தோன்றி, அவர்களிருவரையும் கையமர்த்தி, அவர் களுள் யாவர் தம்முடைய அடியையாவது முடியையாவது நாடிச் சென்று தேடிப்பிடித்துக் கண்ணுற்று வருகின்றனரோ, அவரே பெரியவர்; அவரே சிறந்தவர்; அவரே முதல்வர் எனத் தீர்ப் பளித்து நின்றனர். அவ்வுரையைச் செவியுற்ற திருமாலும் திசைமுகனும், முறையே பன்றியுருவும் அன்னவுருவுங்கொண்டு அடியையும் முடியையும் தேடலாயினர். இவ்வாறு சென்ற இரு வரும் பல்லாண்டு பல்லாயிரமாண்டுகளாகத் தேடித்திரிந்தும்,

அடியும் காணுது முடியும் காணுது அலுத்து ஒய்ந்து அடங்கி ஒடுங்கித் தத்தம் உண்மைநிலையை உணரலாயினர். இச்சம்பவத்தை ஸ்ரீ கருணைப்பிரகாசவள்ளலார் தாமியற்றிய இஷ்டலிங்கத்திருவகவலில் அடியிற் கண்டவாறு மிக அழகாகப்புனைந்துரைத்துள்ளார்.

விரிகட லாடைப் பெருநில மடந்தைக்
கரும்பெற லாரம் புரைந்தினி தொழுகும்
பொருதிரைப் பொன்னித் திருவரங் கத்துப்
புதுவெயி லெறிக்குங் கதிர்மணி சுமந்த
ஆயிரஞ் சுடிகை மாயிரும் பாந்தட்
பள்ளி மீமிசை யொள்ளொளி மின்னொடு
கருமழை கிடந்த காட்சி போலப்
பிறைநுதற் றிருவோ டறிதுயி லமர்ந்த
புரிவளைத் தடக்கைப் பெரியோன் ருனு
மலர்தலை யுலகம் பலவும் பயந்து
தெய்வத் தாமரைத் திருத்தவி சிருக்கும்
அசைவில் காட்சித் திசைமுகத் தொருவனும்
ஈண்டிய னடியுஞ் சேண்டொடு முடியும்
தனித்தனிக் காண்குது மெனத்தமி லிசையா
இலங்குபிறை மருப்பின் விலங்குரு வெடுத்து
நெடுநிலங் கிளையா வுடன்மிகத் தளர்ந்தும்
நிறைமதி நிறத்துப் பறவையுருப் பரித்து
வானகம் பறந்து மேனிநொந் திளைத்தும்
காண்டல் செல்லாது யாண்டுபல கழிய
மண்டழற் பிழம்பாய்ப் பண்டுநின்றோன்.

தம்பெரு முயற்சி சற்றேனும் பயன்படாது போனதைக் கண்ட பிரமதேவரும், தம் சிருஷ்டித்தொழில் வன்மையினுல் காமதேனுவையும் தாழைப் பூவையும் சிருஷ்டித்துத் தம்முடன் அழைத்துவந்து, தாம் தாணுவின் முடியையடைந்துக் காமதேனுவின் பாலால் அபிஷேகம்செய்து, தாழை மலரைச் சூடிப் பூசனை புரிந்து வந்ததாகப் பொய்வாதம்புரிந்தனர். அதைக் கேட்ட பூவராகமூர்த்தியும் தாம் பல்லாயிரமாண்டுகளாகத் தம் வலியதந்தங்களாற் பூமியைக் கீண்டுப் பற்பல பாதலங்களையும் ஊடுருவிச்சென்றும் முக்கண்ணனுடைய முழந்தாளையும் காணவியலாது வந்திருக்க, இவ்வயன் வலியற்ற ஓர் புள்ளுருக்கொண்டு

போய்ப் புராரியின் சிரசைக் கண்டதாகச் சொல்வது ஓர் பெரும் புளுகாயிருத்தல்வேண்டுமென முறையிட்டனர். அதைக்கேட்ட அயனும் தாம் தயாரித்துக்கொண்டு வந்திருந்த பொய்ச்சாட்சிகளை முன் விட்டனர். அவைகளும் தங்களை ஆக்கியோன் பக்கம் சார்ந்தன. இவ்வாறு நடந்த பொய்ந்நாடகத்தைக் கண்ணுற்றிருந்த காலகண்டர், தாம் பொன் வெள்ளி முதலிய பற்பல மன்றங்களிலிருந்து ஆன்மாக்கள் உய்யும் வண்ணம் ஆனந்த சௌந்தரியத் திருநடனம் புரிந்திருந்தும், இத்தகைய பொய்ம்மன்றத்திலிருக்க நேர்ந்ததைக்கண்டு வியப்புற்று, நான்முகனை நோக்கி "உமது அகந்தையினால் உமது உச்சிச்சிரத்தை யிழந்தும் உமக்கு அறிவு வந்திலதே. நியாயமன்றத்தில் பொய் சொல்லத்துணிந்த நீர் எங்ஙனம் மெய்யுடலை ஆக்கல் கூடும். உமது சிருஷ்டியில் உண்டாகும் மெய்யெல்லாம் பொய்யாகக் கடவன. நீரும் பூதலத்திற் பூசனையில்லா தொழிவீர். உமக்காகப் பொய்ச்சாட்சி சொல்லத்துணிந்த தாழை மலர் இனி எக்காலத்தும் சிவபூசைக்கருகமில்லாது போகக்கடவது. பொய்ம்மொழிபுகன்ற வாய்கொண்ட பாகமான தேனுவின் முகம் தெரிசனைக்குகந்ததல்லாது போகக்கடவது." எனக்கடுஞ்சாபம் ஈந்தனர். * அச்சாபத்தையேற்ற அயனும் அரனை நோக்கி "நீர் கன்

---

* குறிப்பு:— இது காரணம்பற்றியே தாழைமலரானது மடல் பெரிதுள்ளதாயினும் மாதுமைபங்கனுக்குச் சூட்டத்தகாத மலராய் ஒதுக்கப்பட்டதென்றும், கோக்களின் பிற்பாகத்தையே இலக்குமி தன் வாசஸ்தானமாகக்கொண்டு முற்பாகமாகிய முகத்தை விலக்கி விட்டனள் என்றும், அம்முகத்தைக்காணுதல் அமங்கலமென்றும் முறையேற்பட்டுள்ளது. மேலும் அஜ்மீருக்கடுத்த புஷ்கர க்ஷேத்திரத்தைத் தவிர இப்புவியில் எவ்விடத்தும் பிரமதேவருக்குத் தனியான ஆலயமில்லாதிருப்பதற்கும் இச்சம்பவமே காரணம் என்றும் தெரிகின்றது. அக்கொடுஞ் சாபம் புஷ்கரத்தை ஏன் பாதிக்கவில்லை யெனின், புஷ்கரம் என்னும் புண்ணிய க்ஷேத்திரம் சாட்சாது சத்தியலோகமேயெனக் கருதப்படுகிறபடியாலும், பரமசிவன் "பூமியில் எப்பாகத்தும் பூசனையில்லா தொழிக." என மொழிந்து மேலுலகத்தைத் தம் சாபத்திற்குட்படுத்தாது விடுத்தமை பற்றியும்,புஷ்கரத்தில் கோவில் ஏற்பட்டிருப்பது அச்சாபத்திற்கிழுக்காகாது எனக்கொள்ளல்வேண்டியிருக்கின்றது. புண்ணிய தலமாகிய புஷ்கரத்தின் வருணனையை இப்புத்தகம் பிற்பாகத்தில் காணலாம்.

மலையாய் நிற்கக்கடவீர்." என்று எதிர்சாபங்கொடுத்தேகினர். இச்சம்பவத்தால் தமக்கு நேர்ந்த பெரும்பழியோடேகின பிதாமகரும் பிற்காலத்தில் பிறைசூடும் பெருமானை நோக்கித் தவம் புரிய, அவரும் அவர் தவத்திற்கிரங்கி,

*மைக்களமு மான்மழுவும் வரதமுட னபயமுறு*
*மெய்க்கரமு நாற்புயமும் விளங்குபணிக் கொடும்பூணும்*
*செக்கருறு மதிச்சடையுஞ் சேயிழையோர் பாகமுமாய்*
*முக்கணிறை யவர்காண முன்னின்றே யருள் புரிந்தார்.*

(கந்தபுராணம் அடிமுடி தேடுபடலம்)

அவ்வாறு தம்முன் தோன்றி அருள்புரிந்த அடல்விடையூர்தி அண்ணலை நோக்கி, பிரமதேவர் அவரைப் பலவாறு துதித்து அம்மலை தம்மலையாய் விளங்கவேண்டுமென வேண்டி நின்றனர். வேண்டுவார் வேண்டுவதை வேண்டியமட்டும் வெறுப்பின்றியளித்துப் புரக்கும் விமலன் "அவ்வாறே யாகுக" என்றறைந்து மறைந்தனர். இது காரணம்பற்றியே இத்தலத்திருக்கும் பர்வதத்திற்குத் * திரயம்பக கிரியென்றும்,

* குறிப்பு:—இவ்வாறு கரியமாலோர் கரியமாவாகிக் கலங்கி நின்றதும், அண்டபிண்ட சராசரங்களனைத்தையும் படைக்கும் அயன் ஓர் புள்ளுருவாகித் திண்டாடித் திரிந்ததுமான இச்சம்பவத்தைக் கந்தபுராணம் அடிமுடி தேடுபடலத்திலும், கிருதயுகத்தில் அக்கினிவடிவும், திரேதாயுகத்தில் சுவர்ணவடிவும், துவாபரயுகத்தில் தாமிரவடிவும், இக்கலியுகத்தில் கல்வடிவும் தாங்கிநிற்கும் திருவண்ணாமலையென்னும் திருப்பருப்பதமிருக்கப்பெற்றதும், திருஞானசம்பந்த சுவாமிகள், திருநாவுக்கரசு சுவாமிகள் திருப்பதிகங்கள் பெற்றதும், மாணிக்கவாசக சுவாமிகளால் திருவெம்பாவையும் திருவம்மானையும் பாடப்பெற்றதும், அருணகிரிநாதர் அவதரிக்கப்பெற்றதும், தன்னை வலம்வந்த புழு பூனைக் குதிரை முதலியவைகளையும் முத்திபெறச் செய்ததும், சிவபெருமானே வல்லாள மன்னனுக்குப் புத்திரனாய் வந்து உத்தரகிரியை நடத்தப்பெற்றதுமான தென்னாட்டிலுள்ள தேயுலிங்க ஸ்தலமாகிய திருவண்ணாமலையெனும் புண்ணியஸ்தல புராணத்திலும் விரிவாய்க் காணலாம். திருவண்ணாமலை க்ஷேத்திரம் விழுப்புரமிருந்து காட்பாடிக்குப் போகும்இருப்புப்பாதையில் விழுப்புரத்திலிருந்து 41 மைலில் உள்ள ஓர் ரெயில்வே ஸ்டேஷன். "காசியில் இறக்க முத்தி ; கமலையில் (திருவாரூர்) பிறக்க

* பிரமகிரி யென்றும் நாமங்கள் ஏற்பட்டுள்ளன. இதற்கு ஐந்து சிகரங்கள் இருக்கின்றன. அவைகளுக்குச் சிவபிரானின் ஐந்து முகங்களின் நாமங்களாகிய சத்தியோஜாதம், வாமதேவம், அகோரம், தத்புருஷம், ஈசானம் என்னும் நாமங்களே ஏற்பட்டுள்ளன. ஆதலின் இம்மலையை சாட்சாது கைலாசபதியேயெனக் கருதுகின்றனர். "எல்லையில் அருணையை நினைக்க எய்தலாம் முத்தி." என்னும் திருவாக்கிற்கிணங்க இப்பர்வதத்தை நினைத்தமாத்திரம் முக்தி கிடைக்கின்றதென்பது புராணப்பிரசித்தம்.

இம்மலையினின்று கோதாவிரி, அஹில்யா, வைதரணி, பச்சிமவாகினி என்னும் நான்கு நதிகள் உற்பத்தியாகின்றன. அவைகளுள் கோதாவரி நதியானது கிழக்குமுகமாயோடி வங்காளக் குடாக்கடலிற் கலக்கின்றது. அஹில்யா நதியானது ஊருக்குச் சமீபத்திலேயே கோதாவிரியோடு சேர்கின்றது. பச்சிமவாகினி கங்கையானது சக்கரதீர்த்தத்தினருகில் கோதாவிரியிற் கலக்

---

முத்தி; தில்லையைக்காண முத்தி; அருணையை நினைக்க் முத்தி." என்றபடி நினைத்த மாத்திரத்தில் முத்தியை அருளும் அருணையில் வாழும் ஈசன் அருணசலேசுவரர். அம்பிகை: உண்ணுமுலையம்மை. தீர்த்தங்கள்: இந்திர தீர்த்தம் முதலிய எண்ணிறந்தவை. விருட்சம்: மகிழ்.

* குறிப்பு:—நம் தென்னாட்டிலுள்ள சிவதலங்களில் மிகச் சிறந்ததும், சீ, காளம், அத்தி என்னும் மூவகைப் பிராணிகளும் பூசித்து முத்திபெற்ற காரணத்தால் சீகாளத்தி எனப் பேர்பெற்றதும், பாண்டு மைந்தனுன பார்த்தன் அம்சமாய் வேடுவகுலத்திற் பிறந்து, தம் திடபத்தியினல் முத்திபெற்ற திண்ணப்பர் என்னும் கண்ணப்பர் பூசித்ததும், ஷண்முக வித்தியாபீடம் அமையப்பெற்றதுமான வாயுலிங்கக்ஷேத்திரமாகிய திருக்காளத்தி யென்னும் புண்ணியதலத்தில் உத்தரவாகினியாய் ஓடும் சுவர்ணமுகியாற்றின் உற்பத்தி ஸ்தானமும் பிரமகிரி பர்வதமாயிருத்தலைக் காண்க. ஆனல் அது இந்த பிரமகிரியன்று. விராட்புருஷனது ஆறுதார க்ஷேத்திரங்களுள் விசுத்தி க்ஷேத்திரமாகிய திருக்காளத்தி காட்பாடியிலிருந்து கூடூர் (Gudur) போகும் இருப்புப் பாதையில் காட்பாடியிலிருந்து 77-மைல் தூரத்திலுள்ள ஓர் ரெயில்வே ஸ்டேஷன். அரக்கோணத்திலிருந்தும் ரேணுகுன்டா ஜங்ஷன் மார்க்கமாகப்போகலாம். ஈசன்: திருக்காளத்திநாதர்; குடுமித்தேவர். தேவியார்: ஞானப்பூங்கோதை. விநாயகர்: ஐஞ்சந்திவிநாயகர். விருட்சங்கள்: கல்லால்; அகண்டவில்வம். தீர்த்தங்கள்: பொன்முகலி; பிரமதீர்த்தம்; சாசுவதிதீர்த்தம் முதலியன. மூவராலும் பதிகம் பெற்றது.

கின்றது. * வைதரணி நதியானது தெற்குமுகமாயோடி பம்பாய்க் கடுத்த தாறு என்னும் ஜில்லாவின் எல்லையில் கடலில் சங்கமமாகின்றது. இந் நதியில் மூழ்கி திரியம்பகேசனை தரிசித்தவர்கள் யமபுரி வைதரணிக்கஞ்சவேண்டியதில்லையெனச் சொல்லப்படுகின்றது.

## இத்தலத்துள்ள புண்ணிய தீர்த்தங்கள்.

(1) குசாவர்த்த தீர்த்தம்:—இது இவ்வூரின் மத்தியபாகத்தில் இருக்கின்றது. பிரமகிரியினின்று பிரவகித்துவந்த கோதாவரியை இவ்விடத்தில் கௌதமமுனிவரானவர் தம் கையிலிருந்த தருப்பைப் புல்லினால் தடுத்த காரணத்தால் இவ்விடத்திற்கு குசாவர்த்தம் எனப் பேர் வந்திருப்பதாகச் சொல்லப்படுகின்றது. கௌதமரிட்ட தடையை மீறிச்செல்ல வழியறியாத கோதமியானவள் அவ்விடத்திலேயே பூமிக்குள் மறைந்து அந்தர்வாகினியாய்ச்சென்று சக்கர தீர்த்தத்தினருகில் மறுபடியும் வெளியில் பிரகடமாயினளெனச் சொல்லப்படுகின்றது. இது ஓர் பெரிய குண்டமாகக் கட்டப்பட்டிருக்கின்றது. இதை இந்தோர் மகாராஜாவின் உத்தரவின்பேரில் மகாதேவ் பாரனேர்க்கர் ராவ்ஜி என்பார் சுமார் ஏழு லட்சம் ரூபாய் செலவழித்துக் கட்டினர் என்று தெரிகின்றது. இதைச் சுற்றிலும் அழகான படிக்கட்டுகளும், மண்டபங்களும், அனேகம் சிறு கோவில்களும் அமைந்திருக்கின்றன. பிரதி சோமவாரமும் ஸ்ரீதிரயம்பகேசுவரரின் ஐந்து முகங்களுள்ள தங்க முகவணியைப் பல்லக்கில் எழுந்தருளச்செய்து, வாத்திய கோஷங்களுடன் இத்தீர்த்தத்திற்குக் கொண்டுவந்து, தீர்த்தத்தின் மேல் கரையில் இறக்கிவைத்து, அபிஷேக அர்ச்சனைகளைச் செய்து முடித்து, உயர்ந்த ஆபரணங்களால் அலங்கரித்து, மீண்டும் பல்லக்கில் வைத்து எடுத்துச் செல்லுகின்றனர். அச்சமயத்தில்

---

* குறிப்பு:—இப்பெயர்கொண்ட நதி ஒன்று யமபுரத்தருகில் ஓடுகின்றதென்றும், யமபுரத்திற்குக் கொண்டுசெல்லப்படும் ஜீவர்கள் இந்நதியைக்கடந்து செல்வது மிகக் கஷ்டம் என்றும், அதை எளிதிற்கடக்கும் பொருட்டே இவ்வுலகில் இருக்கும்போது கோதானம் செய்தல் என்றும் புராணவாயிலாய்த் தெரிகின்றது. இப்பேர்கொண்ட மற்றொரு நதி நம் பாரத நாட்டின் கீழ்சமுத்திரக்கரையிலுள்ள கலிங்கநாட்டில் ஓடுகின்றது. அதைப்பற்றிய முழுவிவரம் இப்புத்தகத்தின் பின்வரும் பாகங்கள் ஒன்றில் காணலாம்.

அனேக யாத்ரீகர்கள் கூடி ஸ்நானம் செய்து திரயம்பக நாதனை வணங்கி வழிபடுகிறார்கள். ஆதலின் இத்தலம் போவோர் திங்கட்கிழமை யன்று போதல் நலம்.

(2) * கன்கல் (Kankhal) தீர்த்தம்:— இது குசாவர்த்தத்தின் கிழக்கில் இருக்கின்றது. இதன் கரையில் பிராமணர்கள் பிண்டம்போட்டு சிராத்தகாரியங்களைச் செய்கின்றனர்.

(3) கஞ்சன தீர்த்தம்:—இது கன்கல் தீர்த்தத்தின் பக்கத்தில் இருக்கின்றது. இது பிராமணரல்லாதார் பிண்டம் போடுவதற்குரியதாய் வழங்கிவருகிறது.

(4) கங்காதுவாரம்:— இது பிரமகிரி பர்வதத்தின் மேலிருக்கும் கோதாவரியின் உற்பத்தி ஸ்தானம். இதற்குப்போக நல்ல படிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. சுமார் 750 படிகள் இருக்கின்றன. இங்குப் போகவிரும்புவோர் அதிகாலையிற் போதல் நலம். கதிரவன் மேலே கிளம்பிவிட்டால் படிகளிற் கால் வைப்பது கஷ்டம். சுமார் பாதிதூரத்தில் கோபாலராவ் தாணேகர் என்னும் சீமானால் கட்டப்பட்ட ஸ்ரீராமர் ஆலயம் இருக்கின்றது. அதன் எதிரில் இராம லட்சுமண தீர்த்தங்கள் இருக்கின்றன. இது மலைமேலேறிப்போவோர் சற்றுத்தங்கியிருந்து இளைப்பாறிப் போவதற்கேற்ற இடமாக இருக்கின்றது.

மேலேறிச் சென்றதும் பலகுகைகளோடு கூடிய மகோன்னதமான செங்குத்தான மலையொன்று தென்படுகின்றது. அந்தக் குகைகளுள் ஒன்றில் ஓர் அழகிய கங்காதேவியின் மூர்த்தியும், அதன் அருகில் ஓர் கோமுகமும் இருக்கின்றது. அந்த கோமுகத்தின் வழியாக எக்காலத்தும் ஜலம் வந்துகொண்டிருக்கிறது. பிரமகிரியின் சிகரத்தில் உற்பத்தியாகும் கோதாவிரி நதியானது மலையின் உட்புறமாகவே வந்து அந்த கோமுகத்தின் வழியே வெளிப்படுகின்றது எனக்கருதப்படுகின்றது. அந்த கோமுகத்தின் எதிரில் ஓர் தீர்த்தகுண்டமும், அதன் பக்கத்தில்

---

* குறிப்பு:—பாகீரதி கங்கை பூமியை ஸ்பரிசிக்கும் இடத்திலுள்ள ஹரித்துவாரத்தருகிலும் இவ்விடமிருப்பது போலவே "தபோவனம்" என்னும் சாதுக்கள் தவம்புரியத்தக்க பரமபவித்திரமான ஸ்தானமும், "கன்கல்" என்னும் தீர்த்தமும் இருப்பதை ஆழ்ந்து நோக்கின் பாகீரதியும் கோதாவரியும் ஒன்றேயெனக் கொள்ளல் வேண்டியிருக்கின்றது.

ஓர் சிவலிங்கமும் இருக்கின்றது. இக் குண்டத்தைத் திரயம்பக தீர்த்தம் என்று சொல்லுகின்றனர்

இக் குண்டத்தையே குசாவர்த்த தீர்த்தமென்றும், இதனருகிலிருக்கின்ற சிவலிங்கமே திரயம்பகநாதர் என்றும், யாத்ரீகர்கள் எல்லாரும் இங்குவந்து ஸ்நானம் செய்வதும், தரிசிப்பதும் முடியாத காரியமாதலின், அடிவாரத்தில் மற்றொரு குசாவர்த்த தீர்த்தத்தை ஏற்படுத்தி திரயம்பகநாதரைப் பிரதிஷ்டை செய்திருக்கிறதாகச் சொல்லிக்கொள்ளுகின்றனர். இக்குண்டத்தில் எக்காலத்தும் ஜலம் இருப்பதுடன் ஜலம் மிகக் குளிர்ந்தும் தெளிந்தும் ஸ்நானத்திற்கேற்றதாகவும் இருக்கின்றது.

அதற்கருகில் வராகதீர்த்தம் என்னும் ஒரு குண்டமும் இருக்கின்றது. இதற்கும் குசாவர்த்த தீர்த்தத்திற்கும் இடையில் கபோதம், கார்த்திகேயம், கிருத்திகா என்னும் தீர்த்தங்கள் இருப்பதாக பிரம புராணத்தில் கௌதமி மகாத்மியத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால் அவைகள் இப்போது எங்கிருக்கின்றனவெனத் தெரியவில்லை. வராக தீர்த்தத்திற்கு வடக்கில் ஸ்ரீ கோலாம்பிகாதேவியின் சந்நிதி இருக்கின்றது. தெரிசனம் விசேஷம். இங்கு நவராத்திரியில் உற்சவம் நடக்கின்றது. மேற்சொன்ன கங்காதேவியின் சந்நிதிக்குச் சுமார் 100 கெஜ தூரத்தில் கௌதம முனிவரின் குகை இருக்கின்றது. அதில் கௌதமருடையவும் அவர் தர்மபத்தினியான அகலிகையினுடையவும் மூர்த்திகள் இருக்கின்றன.

கௌதமர் குகையில் 100 சிவலிங்கங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன. அவர் குகைக்குச் சுமார் 100 கெஜம் வடக்கில் ஒரு சிறு குகையும், அதற்குப்பக்கத்தில் ஓர் விசாலமான பெருங்குகையும் இருக்கின்றது. சிறு குகையின் நடுவில் ஓர் சிவலிங்கமும், பெருங்குகையில் * நவசித்தர்களுள் ஒருவரான ஸ்ரீ கோரக்கநாதர் மூர்த்தியும் இருக்கின்றது. இந்த பெருங்குகைக்குள் மற்றொரு சிறு குகையும், அதில் ஓர் சிவலிங்கமும் இருக்கின்றது. மலையின் அடிவாரத்தில் ஸ்ரீ நிவிருத்தி நாதர் கோவிலும் கங்கா சாகரம் என்னும் திருக்குளமும் இருக்கின்றன.

---

* குறிப்பு :—நவசித்தர்கள் :—(1) சத்தியநாதர், (2) சதோகநாதர், (3) ஆதிநாதர், (4) அநாதிநாதர், (5) வகுளி நாதர், (6) மதங்க நாதர், (7) மச்சேந்திர நாதர், (8) கடேந்திர நாதர், (9) கோரக்க நாதர்.

இம்மலையின்மேல் குரங்குகள் ஏராளமாக இருக்கின்றன. அவைகளுக்கு உணவளிக்க யாத்திரைக்காரர்கள் கடலை பொரி முதலிய தின்பண்டங்களை வாங்கிக்கொண்டு போகின்றனர்.

(5) வில்வ தீர்த்தம்:—இது ஊருக்கு வடக்கில் இருக்கும் நீலபர்வதத்தின் அடிவாரத்தில் இருக்கின்றது. இதிலிருக்கும் ஜலம் சுத்தமாகவும் தெளிவாகவும் இருக்கின்றது. இதற்குப் பக்கத்தில் ஸ்ரீ வில்வேசுவரரின் ஆலயமும் அழகிய நந்தவனமும் இருக்கின்றன.

(6) பிரயாகை தீர்த்தம்:—இது ஊருக்கு வெளியில் இரண்டு மைல் தூரத்திலுள்ள பாணகங்கையின் வலது பக்கத்தில் இருக்கின்றது. இந்தத் தீர்த்தத்திலுள்ள அழகிய ஸ்நான கட்டத்தையும், அதற்கருகிலுள்ள சாதுக்களின் மடத்தையும் இந்தோர் நாட்டை ஆண்ட தர்மாத்ம தானசூர அகலியாபாய் மகாராணியார் சுமார் 50,000 ரூபாய் செலவழித்துக் கட்டிவைத்தனரெனத் தெரிகின்றது. இப்பக்கங்களில் இம் மன்னர்குல திலக மாது சிரோமணியால் கட்டப்பட்ட தீர்த்த கட்டங்களும், கோவில்களும், தர்மசாலைகளும், மடங்களும் இல்லாத க்ஷேத்திரங்கள் இல்லை.

(7) இந்திர தீர்த்தம்:—இது குசாவர்த்த தீர்த்தத்தின் கீழ்புறத்தில் இருக்கின்றது. இதன்கரையில் இந்திரேசுவரரின் ஆலயம் இருக்கின்றது.

(8) வல்லாள தீர்த்தம்:—இதை இங்கு அரசாண்டிருந்த*வல்லாள மகாராஜனுக்குப் புத்திரனாக அவதரித்த வல்லாளேசுவரர் தம் தந்தைக்கு உத்தரக்கிரியைகளைச்செய்து முடிக்க ஏற்படுத்தின

* குறிப்பு:—மேலே சொல்லியிருக்கிறபடி நம் தொண்டைநாட்டிலுள்ள திருவண்ணாமலைத் திருப்பதிக்கும் இத்தலத்திற்கும் புராணசரித்திர ஒற்றுமைகள் அனேகமிருப்பதைக் காணலாம். "செங்கண்மால் பிரமற்கும் அறிவொணா அங்கியினுருவாகி யழன்றதும்," எல்லாம் வல்ல இறைவன் தம்பக்தனான வல்லாள மன்னனுக்கு ஏற்பட்டிருந்த புத்திரனில்லாக்குறையைத் தாமே புத்திரனாய் அவதரித்து நீக்கியருளி, அம் மன்னனுக்குச் செய்யவேண்டிய சரமக்கிரியைகளையும் தாமே செய்து முடித்ததும் இவ்விருதலங்களிலும் நடந்தனவெனப் புராணங்கள் முறையிடுவதையும், இவ்விரு தலங்களிலும் வல்லாளராஜன் இருந்து அரசாண்ட காலத்திலேற்பட்ட பற்பல சின்னங்களிருப்பதையும் உற்று நோக்கின், இதன் நுட்பத்தை சரித்திர ஆராய்ச்சிக்காரர் தகுந்தபடி ஆராய்ச்சிசெய்து அறிதல் அவசியமெனத் தோற்றுகின்றது.

தாகச் சொல்லப்படுகின்றது. இதன் கரையில் வல்லாளேசுவரரின் ஆலயம் இருக்கின்றது.

(9) கங்காசாகரம்:—இது ஊருக்குமேற்கில் இருக்கும் பெரிய குளம். இதன் ஜலம் ஸ்நானத்திற்குமட்டுமே உபயோகப்படுகின்றது.

(10) கௌதமகுண்டம்:—இது இராமேசுவரர் ஆலயத்தின் அருகில் இருக்கின்றது. இதன் தண்ணீரும் குடிப்பதற்கேற்றதாக இல்லை. இதன் கரையில் கௌதமேசுவரரின் ஆலயம் இருக்கின்றது.

(11) விசோபாகுண்டம்:—இது அகலியாநதி தீரத்தில் இருக்கின்றது. இதை விசாஜிபன்த் கேல்கர் என்பவர் கட்டியதால் இதற்கு இப்பெயருண்டாயிற்றெனத் தெரிகிறது. இதன் ஜலம் குடிப்பதற்கு மிகவும் அருமையானது.

(12) * மோத்திதலாவ்:—இது நீலகங்கைக்கப்பால் இருக்கின்றது. இதை மோத்திபாயி சௌத்ரி என்பார் கட்டினதால் அவர் பேரிடப்பட்டதாகத் தெரிகிறது.

மேற்சொல்லிய தீர்த்தங்களைத்தவிர (1) வாரணசி தீர்த்தம், (2) மணிகர்ணிகா தீர்த்தம், (3) அன்னபூரணி தீர்த்தம், (4) கேதகி தீர்த்தம் முதலிய அனேக தீர்த்தங்களும் இருக்கின்றன. அவைகள் இருக்கும் இடங்களை அங்குள்ளோரைக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

## இத்தலத்துள்ள தேவாலயங்கள்

(1) ஸ்ரீ திரயம்பக நாதர் கோவில்:—இவ்வாலயமே இத்தலத்துள்ளவை எல்லாவற்றினும் சிறந்தது. இது சிறிதாகவிருப்பினும் கறுப்புச் சலவைக்கற்களால் மிகஅழகாகக் கட்டப்பட்டுள்ளது. இதை நாநாசாகிபு பேஷ்வே என்பவர் சுமார் 10 லட்சம் ரூபாய்கள்வரையில் செலவு செய்து கட்டினர் எனத் தெரிகின்றது. இக்கோவிலின் விமானத்தின்மேல் தங்கக்கலசமும், அதற்குமேல் திரிசூலமும் இருக்கின்றது. இக்கோவிலுக்கு நான்கு வாயில்கள் இருக்கின்றன. அவைகளுள் வடக்குவாயிலின் மேல் நகாரா (பேரிகை)க் கட்டிடம் இருக்கின்றது. அர்த்தமண்டபமும் சபாமண்டபமும் அழகாகக்கட்டப்பட்டுள்ளன. இத்தலத்துள்ள இலிங்கம் மற்ற தலங்களிலிருப்பதைப்போல் ஆவிடையாரிற் பதிப்பிக்கப்

* குறிப்பு:—மோத்தி=முத்து; தலாவ்=குண்டம்.

பட்ட பாணமாகவில்லை. இங்கிருக்கும் ஆவிடையார் சுயம்புவாக இருக்கின்றது. அதன்மேல் அங்குஷ்டப் பிரமாணமான மூன்று பாணங்கள் அமைந்திருக்கின்றன. அவைகள் மூன்றும் பிரமா, விஷ்ணு, மகேசன் எனக்கருதப்படுகின்றன. இந்த மூன்று பாணங்களும் ஆவிடையாரும் ஏகரூபமாக சுயம்புவாய் உண்டாயின வெனத் தெரிகிறது. அதிருக்கும் கர்ப்பக் கிரகத்தில் எக்காலத்தும் ஜலம் நிறைந்திருக்கின்றது. அபிஷேக ஆராதனை செய்வதற்குமுன் அங்கிருக்கும் ஜலம் முழுவதையும் இறைத்தாக வேண்டியிருக்கின்றது. அங்கிருக்கும் ஜலத்தை இறைத்தான பிறகு, மறுபடியும் ஜலம் ஊறுவதற்கு முன் சிற்சில சமயங்களில் மேகநாதம் போன்ற ஓர்வித சப்தம் உண்டாகிறதென்றும் சொல்லிக்கொள்ளுகின்றனர்.

இந்த தேவாலயத்தில் ஒரு விலையுயர்ந்த இரத்தினகிரீடம் இருக்கின்றது. இது ஆதிகாலத்தில் மைசூர் அரண்மனையில் இருந்ததாகவும், அதை டில்லிசக்கரவர்த்திகளுள் ஒருவர் கைப்பற்றிச் சென்றதாகவும், டில்லியிலிருந்து பாவுசாகிபு பேஷ்வே என்பவர் கொண்டுவந்து இக்கோவிலுக்குக் கொடுத்தனர் என்றும் தெரிகிறது. இத்தகைய விலையுயர்ந்த * நவரத்தினகிரீடம் வடநாட்டில் மற்றெக்கோவிலிலும் இருப்பதாகத் தெரியவில்லை. இதற்கு நல்ல முத்தினால் துரா என்று சொல்லப்பட்ட அழகிய குச்சம் ஒன்று செய்து சேர்த்திருக்கின்றனர். பார்க்க மிக அழகாயிருக்கின்றது. இதைப் பிரதி சோமவாரமும் பகவானுக்குச் சாத்துகின்றனர். சுவாமி குசாவர்த்த தீர்த்தத்தினின்று திரும்பிவந்தபிறகு கோவில் அதிகாரிகள் இந்த மகுடத்தை எடுத்துக் கையில்வைத்துக்கொண்டு யாத்ரீகர்களிடம் காட்டிப் பணம் வாங்குகின்றனர். ஒரு ரூபாய்க்குமேல் கொடுப்போரின் பேர் இருப்பிடம் முதலியவைகளை தேவஸ்தான புத்தகங்களிற் பதிந்துக்கொள்ளுகின்றனர். சாதாரண நாட்களில் வெள்ளியங்கியைச் சாத்திப் பூசிக்கின்றனர்.

இக்கோவிலில் கார்த்திகைமாதம் பௌர்ணிமியன்று இரதோற்சவம் நடக்கின்றது. அதைக்கண்டு களிக்க ஆயிரக்கணக்

---

*குறிப்பு :—இது அனேகமாய்த் தென்னாட்டிலுள்ள தென்னரங்கம் பெரியகோயிலில் வைகுண்ட ஏகாதசியன்று அரங்கநாதப் பெருமானுக்குச் சாத்தும் இரத்தின அங்கி, இரத்தின கிரீடத்தை ஒத்திருக்கின்றது.

கான ஜனங்கள் கூடுகின்றனர். வருஷந்தோறும் மகாசிவராத்திரி, வைகுண்ட சதுர்த்தசி, கிரகண புண்ணியகாலங்கள் முதலிய தினங்களில் விசேஷபூஜை நடக்கின்றது. தரிசனம் மிகவும் விசேஷம்.

(2) கிருஷ்ணன் கோவில் :—இது குசாவர்த்ததீர்த்தத்தின் பின்புறத்தில் இருக்கின்றது. கிருஷ்ண விக்கிரகம் வெள்ளைச் சலவைக்கல்லினுற் செய்யப்பட்டு மிக அழகாக இருக்கின்றது. கிருஷ்ணஷ்டமியன்று உற்சவம்.

(3) கங்கை கோவில் :—இது குசாவர்த்த தீர்த்தத்தின் வடக்கிலிருக்கின்றது. கங்கையின் மூர்த்தி சிறிதாகவும் சுந்தரமாகவும் இருக்கின்றது. மாசிமாதத்தில் உற்சவம்.

(4) பரசுராமர் கோவில் :—இது கொங்கணியர்களால் மிக அழகாகக் கட்டப்பட்டிருக்கின்றது. இதில் பரசுராமர் சந்நிதியும் ஸ்ரீ நாராயணப் பெருமாளின் சந்நிதியும் இருக்கின்றன. வைகாசிமாதத்தில் பரசுராம ஜய்ந்தியன்று உற்சவம்.

(5) இராமர் கோவில் :—இது பரசுராமர் கோவிலுக்கருகில் இருக்கின்றது. இதில் இராமர், இலட்சுமணர், ஜானகியின் மூர்த்திகள் இருக்கின்றன. சித்திரைமாதத்தில் இராமநவமி உற்சவம்.

(6) இலட்சுமிநாராயணர் கோவில்:—இது கோதாவரி தீரத்தில் மரப்பாலத்தருகில் இருக்கின்றது.

(7) நிவிருத்திநாதர் கோவில்:—இது கங்காசாகரம் என்னும் தீர்த்தத்தின் அருகிலும், கங்காத்துவாரம் போய்வரும் பாதைக்குப் பக்கத்திலும் இருக்கின்றது. இது பூனு பட்டினத்திற்கருகிலுள்ள ஆலந்தியில் இருந்து முத்திபெற்றவரான * ஸ்ரீ ஞானதேவ் சுவாமிகளின் மூத்த சகோதரர் நிவிருத்திநாதர் இவ்விடத்தில் சமாதிகொண்டதாகத் தெரிகிறது. இவர் தந்தை விட்டோபா சாது. தாய் இரக்குமாபாயி. இவ்வாலயத்தின் எதிரில் ஸ்ரீ பிரமானந்த சுவாமிகள் என்னும் பெரியாரின் சமாதி இருக்கின்றது.

மேற்சொல்லிய கோவில்களைத் தவிர (1) கேதாரேசுவார், (2) இந்திரேசுவரர், (3) மகாவிஷ்ணு, (4) காஞ்சனேசுவரர், (5) வல்லாள விநாயகர், (6) இராமேசுவரர், (7) கௌதமேசுவரர், (8)

* குறிப்பு:—இம்மகானைப்பற்றிய விவரம் இப்புத்தகம் முதற்பாகம் 197 - 198-வது பக்கங்களில் காணலாம்.

திரிசந்தேசுவரர், (9) காசிவிசுவநாதர் (10) ஜ்வரேசுவரர், (11) முகுந்தேசுவரர், (12) திரிபுவனேசுவரர், (13) வல்லாளேசுவரர், (14) குசேசுவரர் (15) கர்ப்பூரேசுவரர், (16) திரிசந்தியா தேவி, (17) கனகேசுவரி, (18) புவனேசுவரி ஆகிய இம்மூர்த்திகளின் ஆலயங்களும் இருக்கின்றன. அவைகள் இருக்கும் இடங்களை அங்குள்ளோரைக் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

ஊருக்கு வடக்கில் நீலபர்வதம் என்னும் ஓர் அழகிய குன்று இருக்கின்றது. ஏறிப்போக நல்லபடிகள் இருக்கின்றன. அதன் உச்சியில் ஸ்ரீ தத்தாத்திரேயர் கோவிலும், காலபைரவர் கோவிலும், ஸ்ரீ நீலாம்பிகா தேவியின் கோவிலும் இருக்கின்றன. ஸ்ரீ நீலாம்பிகை கோவிலுக்கு அருகில் நீலதீர்த்தம் என்னும் ஓர் நீர்ச்சுனை இருக்கின்றது. நீர் குளிர்ந்தும் தெளிந்தும் இருக்கின்றது.

गंगाद्वारे, कुशावर्ते, बिल्वके नील पर्वते ।
स्नात्वाचक्क कनखले तीर्थे पुनर्जन्म न विद्यते ॥

என்றுரைத்துள்ளவாறு, இங்குள்ள குசாவர்த்தமும், இமய மலையின் மேலுள்ள கங்காத்துவாரமும், பில்வதீர்த்தமும், தட்சிணத்திலுள்ள நீலபர்வதமும், ஹரித்துவாரத்தருகிலுள்ள கன்கல் தீர்த்தமும் மறுபிறப்பைப் போக்கக்கூடியவை என்பது புராணப் பிரசித்தம். ஆனால் அவை எல்லாம் இந்த புண்ணிய க்ஷேத்திரத்தில் ஒருங்கே அமைந்திருப்பதால், இதன் மகிமையையும் பெருமையையும் எடுத்துச் சொல்லுவதும், இத்தகைய சிறு புத்தகங்களில் எழுதப்புகுவதும், இயலாதகாரியம் என்பது சொல்லாமலே விளங்கும்.

### பிரமகிரி பிரதட்சணம்.

"முந்தி இவ்வுலகமெல்லாம் படைத்தவன் மாலினோடும் எந்தனிநாதனே யென்றிறைஞ்சி நின்றேத்தல் செய்ய, அந்தமில் சோதிதன்னை அடிமுடியறியாவண்ணம், செந்தழலானு" ரான திரியம்பகேஸ்வரரின் ஜோதிசொரூபமான பிரமகிரியை முறைப்படி வலம்வந்து வணங்குதல் மிக்க விசேஷம். பிரதட்சணம் செய்ய விரும்புவோர் அதிகாலையில் எழுந்து, குசாவர்த்தத்தில் ஸ்நான சந்தியாவந்தனுதிகளை முடித்துக்கொண்டு, அதை வலது பக்கம் வைத்துத் திரயம்பகநாதர் ஆலயம் சென்று, அவரை வழிபட்டு,

அவர் திருவருள் பெற்று, பிரயாகை தீர்த்தஞ்சென்று, அதில் நீராடி நீறு புனைந்து புறப்பட்டு, பிரமகிரியை வலம் வைத்துச் சுற்றிப்போகும் மார்க்கத்தோடு செல்லல் வேண்டும். பிரதட்சண வழி சுமார் 20 மைல் தூரமிருக்கின்றது. வழி கரடுமுரடாகவும் கற்களும் முட்களும் நிறைந்தும் இருக்கின்றது. இவ்வழியை நாம் நம் பிறவியைக் கடப்பதற்குச் செய்யவேண்டிய யாத்திரையின் வழியென்றும், இவ்வழியில் காணப்படும் கற்களும் முட்களும், நம் வாணாளில் நாம் அனுபவிக்கவேண்டிய துன்பங்களென்றும், இப்பிரதட்சணத்தை இனிது முடிப்போர், இப்பிறவி யாத்திரையையும் அன்றே முடித்துக்கொள்வர் என்றும் கருதப்படுகிறது. பிரதட்சண மார்க்கத்தில், சரசுவதி, பாரி, (Bari) வைதரணி, கௌதம தீர்த்தம், புஜங்க தீர்த்தம், நரசிம்ம தீர்த்தம், நீலாம்பிகா தீர்த்தம், முகுந்த தீர்த்தம் முதலிய தீர்த்தங்கள் தென்படுகின்றன.

ஹரிஹர பிரதட்சணமென்பது மேற்சொல்லிய பிரமகிரி பிரதட்சணத்தைவிடப் பெரிது. ஹரிஹர பிரதட்சணம் செய்வோர் வைதரணி நதிக்கரையில் முன்சொன்ன மார்க்கத்தோடு சென்று அங்கிருந்து பிரியும் மார்க்கம் வழியாகச் செல்லல் வேண்டும். மீளும்போது புஜங்கதீர்த்தத்தில் வந்து சேர்ந்துகொண்டு முன்போல் பிரதட்சணத்தை முடித்தல் வேண்டும். இதன் சுற்றளவு சுமார் 40 மைல். இவ்வழியில், பிரமகமண்டல தீர்த்தம் ஹரிஹர தீர்த்தம் முதலியவை தென்படுகின்றன.

## குருசிம்ம மேளா.

பிரகஸ்பதியானவர் சிம்மராசிக்கேகுங் காலத்தில் இத்தலத்தில் பல்லாயிரக்கணக்கான சாதுக்கள் வந்து கூடுகின்றனர். அவர்கள் தங்கள் தங்கள் ஆசிரம அனுஷ்டானப்பிரகாரம் கூட்டங்கூடிக்கொண்டும், அந்தந்த ஆசிரமங்களைக் குறிக்கும் கொடிகளைப் பிடித்துக்கொண்டும், ஒவ்வொரு கூட்டத்தாரும் தங்கள் குருவான மஹன்த் (Mahant) என்பவரை நடுவில்வைத்துக்கொண்டும், மற்றவர்கள் சங்கம், கர்ணை, பேரி, மிருதங்கம், டமரம், கொம்பு, முதலிய நானாவித வாத்திய கோஷங்களைச் செய்துகொண்டும், திரள் திரளாகப் போவதைப் பார்க்கின், கைலையங்கிரியில் நந்தி முதலிய சிவகணங்கள் புடைசூழ சாட்சாது கைலாசபதியே பவனிவருகின்றனரெனத் தோற்றும் என்பதில் ஐயமில்லை.

## கோட்டை.

பிரமகிரி பர்வதத்தின்மேல் ஓர் பெருங் கோட்டையிருந்து பிற்காலத்தில் அழிவெய்தியிருக்கவேண்டுமெனத் தோற்றுகிறது. இது சமுத்திரமட்டத்திற்குமேல் 4248 அடி உயரம் இருப்பதாகத் தெரிகிறது. இதற்குப்போக கராச்சிவாசியான லால்சந்த் யசோதானந்த பம்பானி (Lalchand Jasodauanda Bambani) என்பார் அளவற்ற பொருளைச் செலவிட்டுப் படிகள் அமைத்தனர் என்று தெரிகின்றது. மேலே சென்றபிறகு சமதரை தென்படுகின்றது. அங்கு கோதாவரி நதி உற்பத்தியின் மூலமும் திரயம்பகேசுவரரின் ஆலயமும் இருக்கின்றன. அங்கிருக்கும் நீர்ச்சுனையில் உள்ள நீர் பனிக்கட்டியைப்போல மிகக் குளிர்ந்தும் தெளிந்தும் இருக்கின்றது. கோட்டைக்குள் ஓர்விதக் கறுப்புநிறச் செடிகள் நிறைந்திருக்கும் பாகத்தை சங்கரன் தம் ஜடையை உதறி கங்கையைக் கீழேவிட்ட இடம் எனச்சொல்லுகின்றனர். தவிர,அங்கிருக்கும் கற்பாறையும் இயற்கையாகவேயோ, செயற்கையினாலோ சங்கரனுடைய ஜடையைப்போன்ற தோற்றத்துடன் அமைந்திருப்பதை இன்றும் காணலாம். கோட்டையின் வடபாகத்தில் பண்டாரதுர்க்கம் என்னும் களஞ்சியம் இருக்கின்றது. கோட்டை மதிலில் பீரங்கி மருந்து முதலியன வைக்கத்தக்க இடங்கள் அனேகம் இருக்கின்றன.

சாட்சாது ஈசுவர சொரூபமான கருங்கல் மலையின்மேற் கட்டப்பட்டிருக்கும் இக் கற்கோட்டையும் இடிந்து பாழாய்க் கிடப்பதைப் பார்ப்போர், "எத்தேசகாலமுநாம் இறவாதிருப்போமென்று, உற்றுனைத்தான் பாராமல் உருவழிந்தேன் பூரணமே." என்னும் பட்டினத்தடிகள் புலம்பலை நினைந்து உருகிப்புலம்பாதிரார்.

ஸ்ரீ திரயம்பகநாதரை தரிசித்தானபிறகு, மீண்டும் நாசிக் சென்று சப்த சிருங்கி என்னும் ஜகதம்பிகையின் புண்ணிய க்ஷேத்திரத்தை தரிசித்து வரலாம். பஞ்சவடிக்கு சனிக்கிழமைகளிலும், திங்கட்கிழமைகளிலும் வணி என்னும் ஊரிலிருந்து கட்டை வண்டிகள் சாமான்களை ஏற்றிக்கொண்டு வருகின்றன. அவைகளில் ஒன்றைப்பிடித்தால் குறைந்த வாடகையில் போகலாம். வாடகை அதிகம் கொடுப்பினும் செவ்வாய் அல்லது வெள்ளிக் கிழமைகளில் அங்கு போய்ச்சேரும்படிப்போவதுதான் நலம்.

## சப்தசிருங்கி.

பஞ்சவடியிலிருந்து வணிக்குப்போகும் வழியில் 18-வது மைலில் திண்டோரி (Dindori) என்னும் தாலுகாவின் போலீஸ் ஸ்டேஷன் இருக்கின்றது. அங்கிருந்து வணி 8 மைல். ஆகவே பஞ்சவடியிலிருருந்து வணி 26 மைல். வணியிலிருந்து சப்த சிருங்கி தேவியின் கோவில் இருக்கும் குன்று 3 மைல். குன்றின் உச்சிக்குப்போக 2 மைல் தூரம் ஏறிப்போகவேண்டும். படிகள் உயர்ந்திருப்பினும், நல்ல ஸ்திதியில் இருக்கின்றன. இம்மலையின் உச்சிக்கு வருவதற்கு மற்றப்பக்கத்திலுள்ள களவன் (Kalavan) என்னும் ஊரிலிருந்து வண்டிப்பாதை இருக்கின்றது. ஆனால் அது சுற்றுப்பாதையாயிருப்பதால் வணியிலிருந்து போவதே நலம். குன்றின்மேல் ஏறிப் பாதிதூரம் சென்றவுடன் ஸ்ரீ கணேசர் கோவிலும், தீர்த்தமும், குண்டமும் தென்படு கின்றன. அங்கு ஸ்நானம் செய்து, கணநாதரின் தரிசனம் பெற்று, தேவியின் சந்நிதிக்குப்போதல் முறையாகும். அங்கி ருந்து சற்றுதூரத்தில் சப்தசிருங்கி என்னும் ஊர் இருக்கின்றது. இவ்வூரானது சப்த சிருங்கியம்மன் கோயிலிருக்கும் தனிக் குன்றின் அடிவாரத்தில் இருக்கின்றது. இவ்வூரில் ஒர் தர்ம சாலையும், பூசாரி முதலியோருடைய வீடுகளும்தான் இருக் கின்றன. அவ்வூரிலிருந்து மறுபடியும் சுமார் 250 படிகள் ஏறிப் போனால் ஜகத்ஜனனியான ஜகதம்பிகையின் நிவாசஸ்தானம் போய்ச்சேரலாம். அங்கிருக்கும் சிறு குன்றின் சிகரத்தில் தேவி யின் முக்கிய ஸ்தானம் இருப்பதாகச்சொல்லுகின்றனர். அங்கு ஏறிப்போவது அசாத்தியமாதலின், அனைவரும் இங்கிருப்பதையே முக்கிய ஸ்தானமாகக் கருதி வணங்குகின்றனர். அம்பாளின் அழ கிய மூர்த்தி இருக்குமிடம் மலையிலேயே குடைந்தெடுத்த ஒர் பெருங்குகையாக இருக்கின்றது. தனிக்கோவிலாக இல்லை. அக்குகையில் சுமார் 10 பேருக்கு மேல் இருக்க இடமில்லை. ஜகதம்பிகையானவள் 18 புஜங்களோடு மகிஷாசுரமர்த்தன அவ சரத்திற்காணப்படுகின்றாள். மூர்த்தி 10 அடி உயரமாக இருப்ப துடன் சரீரம் முழுவதும் செந்தூரார்ச்சிதமாயிருப்பதால் பார்ப் போர் மனதில் ஏக காலத்தில் பயத்தையும் பக்தியையும் உதிக்கச் செய்கின்றது. பிரதி மங்களவாரமும் சுக்கிரவாரமும் விசேஷ பூஜை நடக்கின்றது. மூர்த்தி மிகப்பெரிதாக இருப்பதால் நடுவில்

சாரம் போட்டதுபோல ஓர் பலகையைப் போட்டுக்கொண்டு அதன் மேலிருந்துகொண்டு ஓர் பூசாரி மேற்பாகத்தையும், கீழிருந்துகொண்டு மற்றோர் பூசாரி கீழ்ப்பாகத்தையும் பூசை செய்கின்றனர். சாதாரண காலங்களில் போவோர் தேவியின் பாதபூஜையைத்தான் செய்யமுடியும்.

பிரதி வருஷம் சித்திரா பௌர்ணிமியிலும், நவராத்திரி காலத்திலும் இக்கோவிலில் உற்சவங்கள் நடக்கின்றன. அவைகளைக்கண்டு களித்து அம்பிகையின் அருள் பெற்றேக அனேகம் ஆயிரம் ஜனங்கள் வந்து கூடுகின்றனர். இந்த உற்சவகாலங்களில், கோவிலுக்குப் பக்கத்திலிருப்பதும் அம்பிகையின் மூல ஸ்தானம் இருப்பதாகக் கருதப்படுவதுமான ஒரே கற்பாறையாலாகிய உயர்ந்த குன்றின் சிகரத்தில், அம்பிகையின் கொடியை நாட்டுவது வழக்கமாக இருந்துவருகிறது. அக்குன்று அதிக வழுவழுப்பாகவும், செங்குத்தாகவும், பிடித்துக்கொண்டு ஏறுவதற்கு ஓர் பிடிப்பும் இல்லாததாகவும் இருப்பதனால், பகலவனொளி எங்கும் பரந்து வீசும் பகற்காலங்களிலேயே ஒருவராலும் ஏற முடியாததாக இருக்கின்றது. அங்ஙனமிருக்க அவ்வூரிலிருக்கும் தாழ்ந்த ஜாதியார்களுள் ஒருவன், கொடியேற்ற தினத்தின் முதல்நாளிரவு 12 மணி சுமாருக்கு கொடிச்சீலை, கொடி கட்டித் தூக்குவதற்கான நீண்டமூங்கில், பூசைக்குவேண்டிய தேங்காய், பழம், பத்திர புஷ்பாதிகள், மஞ்சள், குங்குமம், தீபம், எண்ணெய் முதலியவைகளைக் கோவிற் பூசாரியிடம் பெற்று, தன் மடியிலும் தோண்மேலும் வைத்துக்கொண்டு, தேவியின் அருளால் மருள்கொண்டு, இரவிலேயே ஏகி அக்குன்றின்மீதேறிச் சுமார் 2 மணி நேரத்திற்குள் உச்சிக்குச் சென்று குன்றின்சிகரத்தில் கொடியைநாட்டி, விளக்கேற்றி, அம்பிகையின் பூசையைமுடித்துக்கொண்டு இரவின் இருளும், தன்னுடைய மருளும் கழிவதற்குமுன் கீழே இறங்கிவிடுகின்றனன். இரவு சுமார் 2 மணிக்கே குன்றின்மேலிட்ட விளக்கை யாவரும் கண்டு தரிசிக்கலாம். பொழுது புலர்ந்து வெளிச்சம் வந்தவுடன் குன்றின்மேல் நாட்டப்பட்டிருக்கும் கொடியைக் காணலாம். அவன் மயக்கம் தெளிந்து சுயபுத்தியடைந்தவுடன், அவனை யாராவது என்ன நடந்ததென்றாயினும், அவன் அவ்விரவில் என்ன செய்தான் என்றாயினும் கேட்கின், அவன் தனக்கு ஒன்றும் தெரி

யாதென்றும், யாரோ ஓர் பெண் தன்னை அழைத்துச் சென்ற தாகவும், தான் அப்பெண்ணின் பாதங்களில் வீழ்ந்து வணங்கின தாகவும், கனவு கண்டதாகச் சொல்லுகின்றனன். நடுப்பகலில் யாராயிருப்பினும் வெற்றுளாகவே ஏறமுடியாத அக் குன்றின் மேல், ஒரு மனிதன் தன் சுயபுத்தியை இழந்திருக்கும் நிலையில், கொடிச்சீலை மூங்கில் முதலிய மேற்சொல்லிய பூசைப்பொருள்களுடன் நள்ளிரவில் ஏறிச்சென்று விளக்கேற்றி தேவியின் பூசையை முடித்துக் கொடியை நாட்டிவரும் அதியற்புதமான சம்பவத்தை யாத்ரீகர்கள் இன்றும் கண்கூடாய்க் காணலாம்.

இத்தகைய தெய்வீகச் செயல்கள் அனேகம் இக்கலியில், அதிலும் நம் கண்ணெதிரில் ஆங்காங்கு நிகழ்ந்து வரும் நம் புண்ணிய பூமியிற் பிறக்கும் பெரும்பேறு பெற்ற நம் நண்பர்களிற் சிலர் கடவுள் இல்லையெனும் கடும் நாஸ்திக மதம்பிடித்தொழுக முன்வந்திருப்பது விந்தையினும் விந்தையேயாம். மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகும் கடமைமேற்கொண்ட அறவோராய்ப் பிறந்த நம் சகோதரர்களிற் சிலர், தங்கள் சுய நலங்கருதி, தங்கள் அறநெறியைவிட்டு மறநெறியைக் கடைப்பிடித்து ஒழுகத்தொடங்கிய காரணம்பற்றி அவர்களை வெறுக்கத் தொடங்கிய நம் நண்பர்கள், தங்களைப்படைத்த கடவுளே இல்லையென மறுக்கப்புகுந்தது, தங்களைப் பெற்ற தாய் தந்தையரே இருந்ததில்லை எனவும், வித்தின்றி மரம் முளைத்ததெனவும் கூற முன்வருவதை யொத்திருப்பதுடன், அவலை நினைத்து உரலை இடிப்பது போலவும், பட்சியை நினைத்து மரத்தைச் சுடுவதுபோலவும் இருக்கின்றதே யொழிய, ஆன்ற அறிவுடையோர் செய்யும் செயலாகவும், மொழியும் மொழியாகவும் தோற்றவில்லை.

"உண்டதே யுணவுதான் கண்டதே காட்சியிதை
யுற்றறிய மாட்டார் களாய்
உயிருண்டு பாவபுண் ணியமுண்டு வினைகளுண்
டுறுபிறவி யுண்டு துன்பம்
தொண்டதே செயுநரக வாதையுண் டின்பமுறு
சொர்க்கமுண் டிவையு மன்றித்
தொழுகடவு ளுண்டுகதி யுண்டென்று சிலர்சொலுந்
துர்ப்புத் தியா லுலகிலே
கொண்டதே சாதகம் வெறுத்து மடமாதர்தங்
கொங்கையும் வெறுத் தீர்கையில்

கொண்டதீங் கனியைவிட் டந்தரத் தொருபழங்
கொள்ளுவீ ரென்ப ரந்த
வண்டர்வா யறவொரு மருந் தருள்க
தவசிகாமணியுலக நாதவள்ளல்
மகிழவரு வேளூரி லன்பர்பவ ரோகமற
வளர் வைத்திய நாதனே"

என, நம் தென்னாட்டிற் பரந்து கவிந்திருந்த அஞ்ஞான விருளகற்றும் வண்ணம், மெய்மையே ஓருருவாகித் திரண்டுவந்தாலன்ன, ஞானசூரியனாய் அவதரித்த வடலூர்த் திருவருட்பிரகாசவள்ளலார் சுமார் நூறுவருடங்களுக்குமுன் தீர்க்கதரிசனமாய்க் கூறிய கூற்று வீண் கூற்றாமோ.

இத்தலம் தேவியின் பிரசித்தமான * மூன்றரைப்பீடங்களுள் அர்த்தபீடமாகக் கருதப்படுகின்றது. பேஷ்வேக்களின் அரசாட்சிக் காலத்தில் இக் குன்றின்மேல் கௌடதேசத்து சாது ஒருவர் இருந்து வந்ததாகவும், பாவுசாகிபு பேஷ்வே என்பவர் அவரை அவமதித்த காரணத்தால் அவரிடம் கடுஞ்சாபம் பெற்று பானிபத் (Panipat) யுத்தத்தையும், அது காரணமாக மகாராஷ்டிரர்கள் அந்நாள்வரையில் வகித்துவந்த கேந்திரஸ்தானத்தையும், இழந்தனர் என்றும் சொல்லிக்கொள்ளுகின்றனர். அடியார்களின் அபசாரம் ஆழித்தீயினும் கொடிதன்றோ!

தேவியின் தரிசனம் மாத்திரம் மலையின்மேல் செய்யலாமே தவிர, மற்ற வைதீக காரியங்கள் கீழிருக்கும் வணியென்னும் கிராமத்திற்றான் செய்தல்வேண்டும். வணியிலும் தேவியின் கோவில் இருக்கிறது. அதற்கருகில் ஓர் சிறுகுண்டம் இருக்கின்றது. அதில் ஸ்நானம்செய்து அதன்கரையில் தானதர்மாதிகளைச் செய்யலாம்.

வணியிலிருந்து செவ்வாய்க்கிழமைகளிலும் வெள்ளிக்கிழமைகளிலும் போகும் சாமான் வண்டிகளில் இடமிருந்தால் சொற்ப வாடகையில் நாசிக் போய்ச்சேரலாம். நாசிக் சென்று மீண்டும் புகைவண்டியேறி மன்மாட் (Manmad) செல்லல்வேண்டும்.

---

* குறிப்பு:—மூன்றரைப் பீடங்களாவன:—(1) துளஜாப்பூர், (2) கோலாப்பூர் அல்லது கரவீரம், (3) மாஹூர் அல்லது மாதாப்பூர், (4) சப்தசிருங்கி. சத்திக்கு 64 பீடங்கள் உண்டென்பதும் ஒருசாரார் கொள்கை.

## அத்தியாயம். 5.

கந்தமா தனங்கயிலை மலைகே தாரங்
காளத்தி கழுக்குன்றங் கண்ணு ரண்ணு
மந்தமாம் பொழிற்சாரல் வடபர்ப் பதம்
மகேந்திரமா மலைநீலம் ஏமகூடம்
விந்தமா மலைவேதஞ் சையம் மிக்க
வியன்பொதியின் மலைமேரு உதயம் அத்தம்
இந்துசே கரனுறையும் மலைகள் மற்றும்
ஏத்துவோம் இடர்கெடநின் றேத்து வோமே.

மன்மாட் (Manmad) என்னும் பட்டினம் தரிசிக்கத் தகுந்த க்ஷேத்திரங்களுள் ஒன்றல்லவாயினும் இங்கு இறங்கி இங்குள்ள பெரிய தர்மசாலையில் தங்கிக்கொண்டு, சாண்டோர் (Chandore) அவுரங்கபாத் (Aurangabad) தவுலத்தபாத் (Dauhlatabad) எல்லோரா (Ellora) முதலிய இடங்களுக்குப் போய் வரலாம். இது ஓர் பெரிய ஜங்ஷன். பம்பாயிலிருந்து சென்னைக்குப் போகும் பாதையிலுள்ள தோண்ட் (Dhond) என்னும் ஜங்ஷனுக்குப்போகும் கிளைப்பாதை இந்த ஜங்ஷனில்தான் பிரிகிறது. ஹைதராபாத் (Hyderabad) நாட்டிலுள்ள சிக்கந்தராபாத் (Secunderabad) என்னும்பட்டினத்திற்குப்போகும் நிஜாம்ராஜ்ஜிய இருப்புப்பாதையின் கிளையும் இங்குத்தான் பிரிகின்றது. ரெயில்வே ஸ்டேஷனுக்கருகில் ஒரு பெரிய தர்மசாலை இருக்கின்றது. இங்கு ஜலவசதி காற்று வசதிகளுடன் எத்தனைபேராயினும் இடுக்கணின்றித் தங்கலாம்.

ரெயில்வே ஸ்டேஷனுக்குத் தென்புறத்தில் "ராம்குல்ணி" (Ramgulhni) என்னும் சிறு குன்று இருக்கின்றது. அதன் உச்சியில் சுமார் 90 அடி உயரமுள்ள நாற்கோண ஸ்தம்பம் போன்ற ஒரு கற்பாறை (Natural Obelisk) நிற்கின்றது. பார்க்கத்தக்கது.

இந்த ஜங்ஷன் ஸ்டேஷனிலிருந்து சுமார் 4 மைல்தூரத்தில் அன்காய்தன்கியா (Ankai-Tankia) என்னும் கற்கோட்டை இருக்கின்றது. இது பூமிமட்டத்திலிருந்து சுமார் 800 அடி உயரமுள்ள சிறு குன்றின்மேற் கட்டப்பட்டுள்ளது. இதன்மேல் ஏறிப்போக

நல்லவழி இருக்கிறது. போகும் வழியில் அனேகம் கோவில்களும் நீர்ச்சுனைகளும் இருக்கின்றன. அவைகளுள் முக்கியமானது அகஸ்தியர் கோவில். நீர்ச்சுனைகளில் உள்ள நீர் குளிர்ந்தும் தெளிந்தும் ஸ்நானபானங்களுக்குத் தகுந்ததாக இருக்கின்றது. உச்சியில் ஒரு முகமதியப் பெரியாரின் சமாதி இருக்கின்றது. இது ஓர் பெரும் பட்டினமாக இருப்பதால் எல்லாப் பொருள்களும் எக்காலத்தும் கிடைக்கின்றன.

### சாண்டோர் (Chandore).

இவ்வூர் மன்மாடிலிருந்து 18 மைல்தூரத்தில் இருக்கின்றது. இங்கு நம்மிந்தியநாட்டிற்கு ஓர் அச்சாணிபோன்றுதவி, சுமேருபர்வதமும் தனக்கு ஈடில்லையெனப் பெருமைகொண்டிருக்கும் விந்திய மலையின் வடபாகத்திலுள்ள காண்டேஷ் (Khandesh) தேசத்திலிருந்து தெற்கிலிருக்கும் டேக்கன் (Deccan) என்னும் தட்சிண தேசத்திற்கு வருவதற்கு வசதியான கணவாய் இங்கிருக்கின்றது. இயற்கைக்காட்சி விநோதமானது. இங்கு ஓர் பழமையான கோட்டையும் நாணயச்சாலையும் இருப்பதுடன், அருகில் இந்திராய் வாடி (Indrai Wadi) ராஜ்தார்வாடி (Rajdar Wadi) என்னும் இரண்டு கோட்டைகளும், உலகப்பிரசித்திபெற்ற அஹலியாபாய் ஹோல்கார் என்னும் பெண்ணரசியாற் கட்டப்பட்ட அழகிய அரண்மனையும் இருக்கின்றன. பார்க்கத்தக்கவை.

### * தவுலத்தபாத் (Daulatabad).

இது ஓர் புராதனமான பட்டினம். இதன் மேற்பாகத்தில் இருக்கும் குன்றின்மேலுள்ள உன்னதமான கோட்டை பார்க்கத் தக்கது. இக்கோட்டையை இங்கு அரசாண்டிருந்த முகம்மது டோக்லாக்(Muhammad Toglak) என்பவர் கட்டினதாகத் தெரிகிறது. இது சுமார் 200 கெஜம் குறுக்களவுள்ளதும் 50 கெஜம் உயருள்ளதுமான ஓர் கருங்கற்குன்றின்மேல் கட்டப்பட்டிருக்கின்றது. அக்குன்று மேடுபள்ளங்களின்றி செங்குத்தாகவும் வழவழப்பாகவும் இருப்பதால், கோட்டைவாயில் வழியாலன்றி வேறு எவ்விதத்தாலும் அந்நியர்கள் உள்ளே பிரவேசிக்க முடியாது.

---

* குறிப்பு:—தவுலத்=செல்வம்; பாத்=நகர். தவுலத்தபாத் என்னும் மொழி செல்வம் மிகுந்த பட்டினம் அல்லது செல்வமளிக்கும் பட்டினம் என்று பொருள்படும்.

இத்தகைய ஓர் குன்றின் உச்சியில் உயர்ந்த மதில்களோடு கூடிய கோட்டை கட்டியிருப்பதைப் பார்க்கின், ஓர் பெரிய அரக்கன் தன் தலையில் ஓர் உயர்ந்த தொப்பியை வைத்துக்கொண்டு அசையாது நம்மையே பார்த்துக்கொண்டிருப்பதுபோல் தோற்றுகிறது. இக்கோட்டைக்குள் போகவிரும்புவோர் இக்கோட்டைக்குப் போகும் வழியிலுள்ள * கில்லேதார் (Killedar) இடமிருந்தாவது, அவுரங்கபாத் தாலுக்தார் (Talukdar) இடமிருந்தாவது அனுமதிச்சீட்டு பெறல்வேண்டும். கோட்டைக்குப் போகும்பாதை வளைந்து வளைந்தும் செடிகொடிகள் நிறைந்தும் இருப்பதால், போவது கஷ்டமே. ஆயினும் போய்ப் பார்ப்பது அவசியம். கோட்டைக்குள் அனேக குகைகளும் இடிந்த மண்டபங்களும் இருக்கின்றன. இங்கிருக்கும் குகைகளுள் ஒன்றில் ஸ்ரீ பாண்டுரங்க பக்தர்களில் ஒருவரான ஸ்ரீ ஏகநாத சுவாமிகளின் குருநாதர் ஸ்ரீ ஜனார்த்தன சுவாமிகள் இருந்து தவமியற்றினரெனச் சொல்லிக்கொள்ளுகின்றனர். மகாராஷ்டிர பாஷையின் மோடி அட்சரங்களை முதன்முதலில் உண்டாக்கியவரான ஹேமாடபந்த் என்னும் பெரியார் இவ்வூரிற் பிறந்து வளர்ந்தவரெனத் தெரிகின்றது.

இவ்வூர் வருவோரும், இவ்வூர் வருதற்குரிய ஹைதராபாத் நிஜாம் அரசாங்க இருப்புப்பாதையில் உள்ள மற்றெவ்வூருக்கும் போக விரும்புவோரும், மன்மாட் பட்டினத்திலேயே வேண்டிய அளவு நிஜாம் இராஜ்ஜியத்தின் நாணயங்களைச் சேகரித்து வைத்துக்கொள்ளுதல் அவசியம். இந்த இருப்புப்பாதையிலுள்ள ஸ்டேஷன்களில் பிரயாணச்சீட்டுகள் (Tickets) பெறுவதற்கு நிஜாம் நாணயங்களே தேவையாயிருக்கின்றன. ஆங்கில நாணயங்கள் செலாவணியாவதில்லை. ஆகையால் இங்கு வந்தபிறகு நிஜாம் நாணயங்களில்லாது துன்புறுதிருக்கவேண்டி முன் ஜாக்கிரதையோடு வருதல் அவசியம்.

இப்பட்டினத்திற்கும், இதற்குக் கிழக்கில் 8 மைல் தூரத்தில் உள்ள அவுரங்கபாத் பட்டினத்திற்கும் தண்ணீர் கொண்டு போவதற்காக, இங்கிருந்து இரண்டுமைல் தூரத்தில் மலையடிவாரத்திலுள்ள ஓர் பெரும் பள்ளத்தாக்கில் குறுக்கே ஓர் பெரிய அணைபோட்டு மழைஜலத்தைத் தேக்கிச் சேமித்துவைத்துக்

---

* கில்லேதார் = திறவுகோல் வைத்திருப்பவர்.

கொள்ளுகின்றனர். இந்தப் பள்ளத்தாக்கின் மூன்று புறங்களி லும் உயர்ந்த குன்றுகள் இயற்கையாகவே அமைந்திருக்கின் றன. நான்காவதுபக்கத்தில் மேற்சொல்லிய சுவரை எழுப்பி அப்பள்ளத்தாக்கை ஓர் பெரிய ஏரியைப்போல் செய்திருக்கின் றனர். இது நம் தென்னாடில் காவிரியில் கட்டப்பட்டிருக்கிற கன்னம்பாடி அணையையும், தற்காலத்தில் வேலை நடந்துவருகிற மேட்டூர் அணையையும் நினைப்பூட்டுகின்றது. கோயம்புத்தூர் பட் டினதித்ற்குத் தண்ணீர் கொண்டுவரவும் இம்மாதிரியான ஓர் ஏற்பாடு நடந்துவருவதாகத் தெரிகிறது. இப்பட்டினம் ஹைதரா பாத் அரசாங்க இருப்புப்பாதை (H. E. H. The Nizams Guar anteed State Railway) என்றும், ஹைதராபாத்—கோதவரி பள்ளத்தாக்கு இருப்புப்பாதை (The Hyderabad Godavari Valley Railway) என்றும் வழங்குகிற இருப்புப்பாதையில் மன் மாட் ஜங்ஷனிலிருந்து 63 மைல் தூரத்தில் இருக்கின்றது.

## அவுரங்கபாத்.

இப்பட்டினம் தவுலத்தபாத் நகருக்குக் கிழக்கில் 8 மைல் தூரத்தில் இருக்கின்றது. இது மேற்சொல்லிய ஹைதராபாத் அரசாங்க இருப்புப்பாதையில் தவுலத்தாபாத்துக்கு அடுத்த ஸ்டேஷன். இது ஓர் அழகிய சிறுபட்டினம்.

ஆக்ராபட்டினத்தில் ஷாஜஹான் பாதுஷாவானவர் கட்டி முடித்ததும், உலகத்திலுள்ள ஒன்பது விந்தைகளுள் (The Nine Wonders of The World) ஒன்றென உலக பிரசித்திபெற்றது மான டாஜ்மஹால் என்னும் சிங்காரக்கட்டிடம்போன்ற ஓர் சிறு கட்டிடம் இங்கு கட்டப்பட்டிருக்கிறது. அதை அவுரங்க சீப் கட்டினதாகச் சொல்லிக்கொள்ளுகின்றனர். இக் கட்டிடத் தைத்தவிர மற்றும்பல மசூதிகளும் பள்ளிவாசல்களும் மிக அழ காகக் கட்டப்பட்டுள்ளன. இங்கு இராணுவம் இருக்கின்றது.

ஐக்கிய மாகாணத்தில் (The United Provinces) கீழ் இந் திய இருப்புப்பாதையின் குர்ஜா—ஹாப்பூர் (Khurja—Hapur Branch) கிளையில் உள்ள புலந்தஷார் (Bulandashahr) என் னும் பட்டினத்திற்கு 12 மைல் வடமேற்கில் இப்பெயர்கொண்ட மற்றொரு பட்டினம் இருக்கின்றது. அது அவுரங்கசீபின் சேனா திபதியான சையத் அப்துல் அஜீஜ் (Syed Abdul Azeez) என்

பவரால் நிருமிக்கப்பட்டதென்று தெரிகிறது. அப்பட்டினத்தில் அந்த அஜீஜ் என்பவருடைய அழகிய சமாதி இருக்கின்றது. அதை இப்பட்டினத்தினின்றும் வேற்றுமைப்படுத்துவதற்காக அவுரங்கபாத் சையத் (Aurangabad Syed) என்று சொல்லுகின்றனர்.

எல்லோரா குகைக்கோவில்களுக்குப் போவோர் இங்கிருந்து போவதுதான் நலம். தவுலத்தபாத், எல்லோரா ரோட் (Ellora Road) ஸ்டேஷன்கள் சமீபத்திலிருப்பினும் அவைகளில் எக்காலத்தும் வண்டிகள் கிடைப்பது அருமை.

## எல்லோரா குகைக் கோவில்கள்.
## (The Ellora Rock-cut cave-Temples).

இக்கோவில்களைப் பார்க்கப்போக விரும்புவோர் மேற்சொல்லியுள்ளபடி மன்மாட் பட்டினத்தில் தங்கியிருந்துகொண்டு அவுரங்கபாத் போய், போகவர வண்டி பேசிக்கொண்டு போதல் நலம். அவுரங்கபாத்திலிருந்து 8 மைலில் தவுலத்தபாத் பட்டினமும், அதிலிருந்து சுமார் 5 மைல் தூரத்தில் ரோஸா (Roza) என்னும் குல்தாபாத் (Khuldabad) கோட்டையும் இருக்கின்றன. ரோஸா என்னும் ஊர் ஒரு கற்கோட்டையாற் சூழப்பட்டிருக்கின்றது. தற்காலத்தில் அதிக பாழடைந்த நிலையில் இருக்கின்றது. எல்லோரா போகும் சாலையானது இக்கோட்டையின் தெற்குவாயிலின் வழியாக நுழைந்து, வடக்குவாயிலின் வழியாக வெளிப்புறப்படுகின்றது.

ஊருக்கு வடமேற்கில் ஓர் உன்னதமான மேட்டில் ஹைதராபாத் நிஜாமானவர் வந்தால் தங்குவதற்கு ஓர் அழகியமாளிகை கட்டப்பட்டுள்ளது. இதற்கு அருகில் அவுரங்கபாத் பட்டினத்தை உண்டாக்கியவரான மாலிக் ஆம்பர் (Malick Amber) என்பவரின் சமாதியும், அதற்கு அருகில் கோல்கொண்டா (Golconda) தேசத்தைக் கடைசியாய் ஆண்டிருந்த அப்துல் ஹாஸன் (Abdul Hassan) என்பவரின் சமாதியும் இருக்கின்றன. அதே இடத்தில் அந்த அப்துல் ஹாஸனைப் போரில் வென்று வெற்றி முரசறைந்த அவுரங்க சீப் பாதுஷாவும், அப்துல்ஹாஸனை எந்த காலனுக்கிரையிட்டனரோ அதேகாலனுக்குத் தாமும் ஆளாகி மடிந்து மண்ணுட்கிடக்கின்றார். அவர் சமாதிக்கருகில் அவர்

குருவான கியாஸுடீன் (Giasuddin) என்பாரின் சமாதியும், எதிரில் நிஜாம் தேசத்து முதன் மன்னரான அஸப்ஜா (Asaf Zah) என்பவரின் சமாதியும் இருக்கின்றன. இக்கோட்டையிலிருந்து ஒரு மைல் தூரத்தில் குன்றின் அடிவாரத்தில் குகைகள் இருக்கின்றன.

குன்றிலிருந்து கீழிறங்கினதும், தெற்குவடக்காக ஒரே வரிசையில் 32 குகைகள் இருக்கின்றன. இவைகளுள் தெற்குக் கோடியிலிருந்து முதல் ஒன்பது குகைகளை அங்கிருப்போர் * "தேட்வாடா" என்றழைக்கின்றனர். இவைகள் முற்காலத்தில் தாழ்ந்த வகுப்பினரின் வாசஸ்தானமாக இருந்தனவென்று கருதப்படுகின்றது. இவைகள் இடிந்துபோய்ப் பாழடைந்து கிடக்கின்றன.

பத்தாவது குகை விஸ்வகர்மாவின் குகை என்று சொல்லப்படுகின்றது. விஸ்வகர்மா என்னும் தேவத்தச்சன் தீன்தல் (Tin Thal) என்னும் பதின்மூன்றுவது குகையைக் குடைந்துகொண்டிருந்தபோது, அவன் விரல்களுள் ஒன்றின்மேல் ஒரு கல்விழுந்து அவ்விரல் நசுங்கியதால், விஸ்வகர்மா மயங்கி ஸ்மரணையற்று வீழ்ந்துவிட்டதாகவும், அவனை அங்கிருந்தோர் தூக்கிச்சென்று இப்போது 10-வது குகையாக இருக்கும் இடத்திற்போட்டு, அந்த இடத்தில் அவன்மேல் சூரியவெப்பம் படாதிருக்கும்படி மரக்கிளைகளாலும், இலைகளாலும் ஓர் சிறு பர்னசாலை கட்டியதாகவும், விஸ்வகர்மா மூர்ச்சை தெளிந்து எழுந்து, அப்பர்னசாலையின் அழகிய அமைப்பைக்கண்டு வியந்து, அதே பர்னசாலையை ஓர் கற்குகையாகச் செய்தனன் என்றும் சொல்லப்படுகின்றது. இது காரணம்பற்றி 10-வது குகைக்கு விஸ்வகர்மாவின் குகை என்றும், 13-வது குகைக்கு, † துக்யாகர் (Dukbya Ghar) என்றும் பெயரிட்டிருப்பதாகத் தெரிகிறது.

அங்கிருக்கும் 32 குகைகளுள் சாலைக்கு வடக்கிலுள்ள 16 குகைகளும் புத்தமதத்தைச் சார்ந்தவையாகவும், சாலைக்குத் தெற்கிலுள்ள 16 குகைகளும் இந்துமதக் கோவில்களாகவும் இருக்கின்றன. புத்தமதக்குகைகளுள் சிறந்தது "விஸ்வகர்மா"

---

* குறிப்பு:—தேட்=பஞ்சமன்; வாடா=இருப்பிடம்.

† குறிப்பு:—துக்யாகர்=துக்கவீடு.

குகை. இந்துமதக் குகைகளுள் சிறந்தது "கைலாசம்" என்னும் பெரிய கோவில். கௌதமபுத்தர் விக்கிரக ஆராதனையை போதித்திலராயினும் இக்குகைகளுள் புத்தருடைய விக்கிரகமும் ஸ்ரீ அவலோகிதேசுவரர், ஸ்ரீ மஞ்சுஸ்ரீதேவர், பத்மாதேவி, சுஜாதர் முதலியோருடைய பிம்பங்கள் அனேகம் அனேகவிதமான ஆசனங்களில் காணப்படுகின்றன.

இங்குள்ள குகைகளையும் கார்லாவில் உள்ள குகைகளையும் உற்று நோக்கின், புத்தமதமானது அசோகா சக்கரவர்த்தியின் காலத்திருந்த ஹீனயன ஸ்திதியிலிருந்து பிற்காலத்தில் அனுஷ்டித்துவந்த மகாயன ஸ்திதிக்கு மாறினது நன்றாய்த் தெரிகின்றது. புத்தருடைய விக்கிரகத்தைச் சுற்றிலும் அனேக கந்தர்வர்களும் வித்தியாதரர்களும் செதுக்கப்பட்டிருக்கின்றனர்.

இந்துமதக் குகைகளுள் அவ்வாறே, இந்திரசபை, சத்தியலோகம், யமலோகம், கைலாசம், வைகுண்டம் முதலியவைகளும், தசாவதார மூர்த்திகள், அஷ்டதிக்குப் பாலகர்கள், தேவர்கள், கந்தர்வர்கள், கின்னரர், கிம்புருடர், யட்சர், ஜயர், விஜயர் முதலியோரின் பிம்பங்களும், இராம இராவணயுத்தம், கௌரவபாண்டவ யுத்தம், கீதோபதேசம் முதலிய பௌராணிக விஷயங்களும், யானை, சிங்கம், புலி, கரடி, மான், பசு, எருது முதலிய மிருகங்களின் பிம்பங்களும், அனேகவித அழகிய மரம் செடி கொடிகளும் மிக அழகாகச் செதுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளுள் சிறந்தான "கைலாசம்" என்னும் குகையானது நம் தென்னாட்டில் உள்ள நடுத்தரமான கோவிலைப்போன்று, முன்கோபுரம், அகண்ட பிரகாரங்கள், உயர்ந்த மதில்கள், அர்த்தமண்டபம், மகாமண்டபம், சபா மண்டபம் முதலிய மண்டபங்கள், விமானம், கர்ப்பகிரகம், சுற்றுக்கோவில்கள் முதலியவைகளோடு அதியற்புதமாய் விளங்குகின்றது. கர்ப்பகிரகத்தில் சிவலிங்கமும், நந்தி மண்டபத்தில் நந்தியெம்பெருமானும், சுற்றுக்கோவில்களில் விநாயகர் முதலிய பரிவார தேவதைகளும், எல்லாம் ஒரே மலையினின்று குடைந்து எடுத்திருப்பதைக் காண்போர் எத்தேசத்தவராயினும் எந்நிறத்தவராயினும், எம்மதத்தினராயினும், நம் தாய்நாடான பாரதநாட்டின்கண் முற்காலத்திலிருந்து மாண்ட நாகரிகத்தையும், பல்வித வேலைத்திறனையும், அக்காலத்திருந்தோர்க்கிருந்த புத்தி கூர்மையையும், முன்னேக்கத்தையும், கடவுள்மாட்டிருந்த

கரைகடந்த பத்தியையும், நினைந்து நினைந்து, நெக்குவிட்டுப் பரிதபியாதிரார் என்பது சத்தியம். இக்கோவிலின் பிரகாரங்களையும், பிரகாரங்களிலுள்ள மண்டபங்களையும், அவைகளின் மேலுள்ள 4-5 அடுக்குகளுள்ள உப்பரிகைகளையும் ஒரேமலையிற் குடைந்திருப்பதால், பிரகாரங்களின்மேல் மலையின் மேற்பாகம் நீட்டிக்கொண்டிருப்பது பிரகாரங்கள் முழுவதும் காலில்லாப் பந்தல் போட்டிருப்பதுபோல் தோற்றுகிறது. இத்தகைய அழகிய அற்புதக்காட்சி வேறெங்கும் காண்பது அருமை. இந்த குகைகளுள் ஒன்றில், தஞ்சைமா நகரில் இருக்கும் அரண்மனையின் வடமேற்கு பாகத்தில் கட்டியிருக்கும் சங்கீத மஹால் மண்டபத்தைப் போன்ற ஓர் பெரிய அத்தாணி மண்டபம் இருக்கின்றது. இவ்வளவு பெரிய மண்டபத்தை ஓர் பெரிய அரக்கனின் அடிவயிற்றிலிருந்து அகழ்ந்தெடுப்பதுபோல், ஓர் பெரிய குன்றின் அடிப்பாகத்திலிருந்து குடைந்தெடுத்து நிருமித்திருப்பது காண்டற்கரிய காட்சியாய் விளங்குகின்றது.

இந்த குகைகளிருக்கும் இடத்தினின்று மேற்கில் சுமார் ஒருமைல் தூரத்தில் எல்லோரா என்றும், வேருள் (Verule) என்றும் பெயர் வழங்கும் சிற்றூர் இருக்கின்றது. இவ்வூரில் ஆதிகாலத்தில் புரூரவச்சக்கரவர்த்தியின் மகன் **ஏலன்** அல்லது ஐலன் என்னும் அரசன் அரசாண்டிருந்தான் என்று சொல்லப்படுகின்றது. ஆகவே இவ்வூரும் இக்குகைகளும் கிறிஸ்து பிறப்பதற்கு அனேக நூற்றாண்டுகளுக்கு முன்னர்த் தோன்றியவையெனக் கொள்ளல்வேண்டியிருக்கின்றது. இத்துணைப் பழமையான காலத்தில், இவ்வளவு வேலைப்பாடுள்ள இத்தனை குகைகளை ஒரே மலையினின்று செதுக்கக்கூடிய மிக அதிசய வல்லமை பொருந்திய வேலைக்காரர்கள் இருந்த இந்நாட்டு நாகரிகமும், அறிவாளர்களும், இக்காலத்து இல்லாது மாண்டுமடிந்து போனதைக் காண்போர் எவ்வாறு வருந்தியழாதிருக்கவியலும்! எல்லாம் எமையாளும் ஈசன் செயல்!

## குஷ்ணேசுவரர் (குஸ்ருணேசுவரர்).

வேரூள் என்னும் இவ்வூரில் கட்டப்பட்டிருக்கும் சிவாலயம் இந்தோர் தேசத்தையாண்டிருந்த தருமசொரூபியான அகலியாபாயி மகாராணியாரால் கட்டப்பட்டதென்று தெரிகின்றது. இக்

கோவில் சிவந்த நிறத்தோடுகூடிய கற்பாறைகளால் கட்டப்பட்டிருக்கின்றது. சிவலிங்கமும் நல்ல சிவப்பு நிறத்தோடு ஒளிர்கின்றது. இதுகாரணம்பற்றியே இம்மூர்த்திக்கு குஸ்ருணேசுவரர் என்னும் திருநாமமுண்டானதாகத் தெரிகிறது. குஸ்ருணம் என்பது மகாராஷ்டிர பாஷையில் கேஸரி அல்லது குங்குமம் அல்லது குங்குமப்பூ என்று பொருள்படும். பார்வதிதேவியானவர் முற்காலத்தில் இவ்விலிங்கத்தைக் குங்குமப்பூவினால் செய்தாரெனச் சொல்லப்படுகின்றது.

முன்னொருகாலத்தில் விபுத் சுதர்மா என்னும் ஓர் சிவபத்தியிற் சிறந்த விப்பிரர் தம் தருமபத்தினியாகிய சுதேகியுடன் வாழ்ந்துவந்தனர். அவருக்கு எல்லாவித சம்பத்துகளிருந்தும், புத்திரசம்பத்தில்லாப் பெருங்குறையிருந்து அவரை வருத்திவந்தது. அக்குறையை நீக்குவான்பொருட்டு, அவர் குஷ்ணு (Ghushna) என்னும் மற்றோர் பெண்மணியை மணந்தனர். அப்பெண்மணியும் தம் பதியைவிடப் பதின்மடங்கு சிவபத்தியில் ஆழ்ந்திருந்தனர். இறுதியில் ஈசன் திருவருளால் குஷ்ணுவிற்கு ஓர் ஆண்மகவுண்டாயிற்று. அதைக் கண்ட சுதேகி அழுக்காறென்னும் பெரும்பாவியின் தீயவலைக்குட்பட்டு, சமயம்பார்த்திருந்து ஒரு பாவமுமறியாத அக்குழவியை நமனுலகுக்கனுப்பினள். அனேக ஆண்டுகளாகப் புத்திரனில்லாது வருந்திப்பெற்ற தம் குழந்தை, சுதேகியின் சூதினால் சுரலோகம் சென்றதையறிந்தும், விபுத் சுதர்மாவும், குஷ்ணுவும் "திறனல்ல தற்பிறர் செய்யினும், நோநொந்து அறனல்ல செய்யாமை நன்று. அறிவினுளெல்லாந் தலையென்ப தீய செறுவார்க்குஞ் செய்யாவிடல்." என்னும் தெய்வநூல் வாக்கியங்களைப் பின்பற்றி அவனையன்றியோர் அணுவுமசையாதெனத் தெளிந்து தேறி, மறுபடியும் தேவதேவனாகிய திரிபுராந்தகனையே திரிகரணசுத்தியாய்ப் பூசித்துவந்தனர்.

அவ்விருவர்களுடைய அளவிலாப் பொறுமையைக் கண்டு மகிழ்ந்த அடல்விடையூர்தியும், "வினைநலம் வேண்டியவெல்லாம் தரும்" என்னும் பொய்யாமொழிப் பொய்யாதிருக்கும்படி அவர்கள் முன்தோன்றி அக்குழந்தையை முன்போல் உயிர்பெற்றெழச் செய்தனர். குஷ்ணுவின் தவப்பயனைத் தோன்றியவராதலின் குஷ்ணேசுவரர் என்னும் திருநாமத்தோடிலங்கினர் எனத்தெரிகின்றது.

இவ்விலிங்கம் * துவாதச ஜோதி லிங்கங்களுள் ஒன்றாதலின் தெரிசனம் மிக்க விசேஷம். இக்கோவில் சிற்பவேலைகள் நிறைந்துள்ளதாய் விளங்குகின்றது. தேக்குமரங்கள்போன்ற சிறந்த மரங்களிலும் செய்யமுடியாத அவ்வளவு நுட்பமான செதுக்கு வேலைகள் கற்பாறைகளிற் செய்திருப்பதைக்காணலாம். இக்கோவிலுக்கு மேற்கில் ஒருபர்லாங்கு தூரத்தில் சிற்பவேலையிற் சிறந்த ஓர் சிறு கோவிலிருக்கின்றது. அதில் ஸ்ரீ கஜானனரைப் பிரதிஷ்டை செய்திருக்கிறது. ஆனால் இக்கோவிலின் கர்ப்பகிரகத்தின் மேல் வேலை அறைகுறையாக நின்றுபோயிருக்கின்றது. தற்காலத்தில் விநாயகமூர்த்தியின்மேல் வெய்யில்படாவண்ணம் ஓர் பந்தல் போட்டு வைத்திருக்கின்றனர். அனேக புண்ணியதலங்களில் அனேக லட்சக்கணக்கான ரூபாய்களைச் செலவிட்டு அனேகம் கோவில்களையும் தர்மசாலைகளையும் கட்டிமுடித்தவரும், அறக்கடவுளே ஓர் பெண்ணுருவந்தாங்கி அரசுரிமை புரிந்ததொப்ப, அணுவளவும் அறநிலைவழாது அரசாண்டு வந்த அகலியாபாய் அம்மையார் யாவர் குறையையும் நீக்கவல்ல இத்தேவர் குறையை மட்டும் நீக்காது விட்டது யாதுகாரணம் பற்றியோ அறிகிலேம். ஒருக்கால் அக்கோவிலைக்கட்டி முடிப்பதற்குள் எதிர்பாராத ஓர் இடையூறு நேர்ந்திருத்தல் கூடும் என்று நினைத்தற்கும் இடமின்று. ஏனெனின் அபூர்த்தியான அக்கோவிலில் அவசரப்பட்டு ஐங்கரக்கடவுளை அமைக்கவேண்டிய அவசியமில்லை.

அபிஷேகப் பிரியராகிய சிவபிரான் கோவில்கொண்டுறையும் எத்தலத்திலும் ஜலக்கஷ்டமிருப்ப தருமையாயினும், இத்தலத்தில் அக்கஷ்டம் ஏற்பட்டிருக்கின்றது. கோவிலுக்கருகில் இலா என்னும் ஓர் புண்ணியநதி ஓடினும் அதில் மாரிகாலந்தவிர மற்றக் காலங்களில் ஜலமிருப்பதில்லை. இங்கிருக்கும் பிராமணர்கள் சற்குண சம்பன்னர்களாகவும், நியமநிஷ்டையோடு கூடியவர்களாகவும் இருக்கின்றனர். கோவிலைச்சுற்றிலும் சாவடிகளும் சத்திரங்களும் இருக்கின்றன. இவ்வூரில் வண்டிகள் கிடைப்பது அருமையாதலின் அவுரங்கபாத்திலிருந்தோ தவுலத்தபாத்திலிருந்தோ போகவர வண்டிப்பேசி வருதல் அவசியம். இத்தலம் முகமதியர்கள் ஆளுகைக்கு உட்பட்டிருப்பதால் முட்செடிகளினிடையே

* குறிப்பு:—12 ஜோதிலிங்கங்களின் விவரம் இப்புத்தகம் முதற் பாகம் மூன்றாவது பக்கத்தின் அடியிற் காணலாம்.

முளைத்தெழுந்த முல்லைச்செடிபோல் பேணுவாரற்றும் போற்றுவாரற்றும் இருக்கின்றது.

இத்தலத்தைதரிசித்துவிட்டு மீண்டும் அவுரங்கபாத் அல்லது தவுலத்தபாத் சென்று ரயிலேறிப் பர்ப்ஹணி (Purbhani) ஸ்டேஷனில் இறங்கி பரலிக்குப் போதல்வேண்டும். வேரூள் கிராமத்தில் வண்டிகிடைத்தால் எல்லோரா ரோட் ஸ்டேஷனில் போய் ரயிலேறலாம். பாதை நல்லபாதையன்று. பர்ப்ஹணி ஸ்டேஷன் அவுரங்கபாத்திலிருந்து 90 மைலிலும், மன்மாடிலிருந்து 181 மைலிலும் இருக்கின்றது.

## பரலி.

இத்தலம் பர்ப்ஹணியிலிருந்து 24 மைல் தூரத்தில் இருக்கின்றது. நல்ல வண்டிகள் கிடைப்பது கஷ்டம். சில சமயங்களில் கூண்டில்லாத வண்டிகளே கிடைக்கின்றன. ஆனால் வழியில் கோதாவரிதீரத்தில் பைட்டன் (Paitan) நேவாசே முதலிய க்ஷேத்திரங்கள் இருக்கின்றன. தரிசித்துச் செல்லலாம். பைட்டன் என்னும் இந்த க்ஷேத்திரத்திற்முன் ஆலந்தியிலிருந்த ஞானதேவ் சுவாமிகள் தம் தந்தையாகிய விட்டோபா சாது சுவாமிகளைப் பழித்த வேதியர்கள் முன்னிலையில் தண்ணீர் நிறைந்த தோற்பைகளைச் சுமந்துவந்த எருமைக்கடாவைக் கொண்டு வேதவேதாந்த நுட்பங்களைச் சொல்லும்படிச் செய்தது.

ஆதியில் திருப்பாற் கடல் கடைந்தகாலத்தில் அதிற்றோன்றிய அமுதம் யாவருக்குரியதென தேவாசுரர்களுள் பெருங்கலகம் விளைந்ததைக்கண்ட திருமால் மோகினிவடிவேற்று அசுரர்களைத் தம் மாயையினல் மயக்கியொழித்தபிறகு இத்தலம்வந்து நிவாசம் செய்த காரணம்பற்றி இதற்கு நிவாசம் அல்லது நேவாசே என்னும் பெயர்வந்துளது என்று சொல்லிக்கொள்ளுகின்றனர். இங்கிருக்கும் மகாவிஷ்ணுவின் மூர்த்தி சாட்சாது மோகினியைப் போலவே பார்ப்போரைப் பரவசப்படுத்துகின்றது.

பைட்டனிலிருந்தாவது நிவாசத்திலிருந்தாவது பரலிக்குப் போக வண்டி கிடைத்தால் போகலாம். கிடைக்காவிடின் மீண்டும் மன்மாட் சென்று, அங்கிருந்து தோண்டு (Dhond) போகும் கிளைப்பாதையிலுள்ள புன்தாம்பே (Puntambe) என்று வழங்கும் புண்ணியஸ்தம்பு க்ஷேத்திரத்தின் வழியாய் பரலியை அடை

யலாம். புன்தாம்பே என்னும் ஸ்டேஷன் மன்மாடிலிருந்து 41 மைல் தூரத்திலிருக்கின்றது. இப்புண்ணிய ஸ்தலத்தில் சாங்க தேவ் (Changa Deo) என்னும் வாஜஸநீய சாகையைச்சேர்ந்த விப்பிரோத்தமர் ஒருவர் யோகசமாதி நிஷ்டையில் தேர்ச்சிபெற்றிருந்தமையின், காலன்கையிற் சிக்காது 1400 வருஷம் உயிரோடிருந்தனர் என்று சொல்லிக்கொள்ளுகின்றனர். இவர் பாண்டுரங்க பக்தர்களுள் பரமசிரேஷ்டர்.

பரலியில் இருக்கும் ஸ்ரீ பைஜநாதலிங்கம் 12 ஜோதிலிங்கங்களுள் ஒன்று. ஊர் பெரிதாக இருக்கின்றது. கோவில் ஓர் உன்னத ஸ்தானத்தில் வெகு அழகாகக் கட்டப்பட்டிருக்கின்றது. கோவிற் கட்டிடத்தில் மரவேலை அதிகம். சபாமண்டபத்தில் ஒரு ஆள் அணைத்துப் பிடிக்கக்கூடாத அவ்வளவு பெரியதாகவும், ஓர் உயர்ந்த பனைமரத்தளவு உயரமாகவும் உள்ள * காட்டு மரத்தூண்கள் அனேகம் நிறுத்தப்பட்டிருக்கின்றன. காட்டுமரங்களில் அவ்வளவு ஒழுங்காகவும் உயரமாகவும் உள்ள மரங்களை எங்குக்கண்டு பிடித்தனர்; எவ்வாறு கொண்டுவந்து நாட்டினர், என்பதை ஆழ்ந்து நோக்கின் அக்காலத்திருந்த அரசர்களுடையவும் தொழிலாளர்களுடையவும் கரைகடந்த பக்தியையும், மேலான அறிவையும், மனவூக்கத்தையும், விடாமுயற்சியையும் நினைந்து நினைந்து மனமுருகி பாழ்க நேரிடும் என்பதில் ஐயமில்லை. இக்கோவிலில் யாரும் ஜாதிபேதமின்றிப் போய்ப் பூசை செய்யலாம்.

## ஸ்தல மகாத்மியம்.

ஆதிகாலத்தில் இராவணன் கைலைக்குச்சென்று சாமகானஞ் செய்து சிவபெருமானை மகிழ்வித்து, அவரிடம் ஆத்மலிங்கம் பெற்று இலங்கைக்கு ஏக எத்தனித்தபோது, அது தம் சிரசிற் றூங்கிச் செல்லக்கூடாதவளவு மிகப் பெரிதாயிருந்ததைக் கண்ட இராவணன் மீண்டும் சம்புவைத் துதித்துத் தான் அதைச் சுமந்துச் செல்வதற்குரிய உதவிபுரிய வேண்டுமென வேண்ட, சுந்தர

* குறிப்பு:—இத்தகைய பருத்து உயர்ந்த தூண்கள் நம் தென்னாட்டில் தஞ்சைமாநகரில் நடுநாயகமாய் விளங்கும் அரண்மனையில் மகர்ராஜர்சபை என வழங்கும் மகாராஷ்டிர மன்னர் கொலுமண்டபத்தில் இருக்கின்றன.

மூர்த்தி சுவாமிகளுக்கு நென்மலைகளையும் கொடுத்து, அவைகளை ஆரூருக்கு எடுத்துச் செல்லத் தம் கணங்களாகிய ஆட்களையும் கொடுத்தருளின கருணாமூர்த்தியாகிய * கைலாசபதி, அவ்விலிங்கத்தை இருகூறாகச் செய்து ஒரு காவடியில் வைத்து எடுத்துச் செல்லும்படிக் கட்டளையிட்டருளினர். அவ் வரக்கன் இத்தலம் வந்ததும், தேவர்கள் செய்த சூழ்ச்சியால், அவனுக்கு ஜலபாதையுண்டாக, அத்தருணத்தில் அங்கு விப்பிரவேடந் தரித்து நின்றிருந்த விநாயகமூர்த்தியிடம் தன் காவடியைக் கொடுத்துவிட்டுச் சென்றனன். காவடியை வாங்கிக் கீழே வைக்கவேண்டுமென்ற எண்ணத்துடனேயே அங்கு வந்திருந்த கஜானனர் இராவணன் தம் கண் பார்வையினின்று மறைந்ததும், அக் காவடியைப் பூமியில் வைத்துவிட்டனர். இருகூறாயிருந்த அவ்வாத்மலிங்கத்தின் முன் கூறு பச்சிமகாசி யெனப்படும் † கோகர்ண க்ஷேத்திரத்திலும், பின் கூறு இத்தலத்திலும் தங்கி பூதலத்தை ஊடுருவிப் பாதலம் வரையிற் சென்றது. இங்கிருப்பது ஈசுவரபக்தியிற் சிறந்து விளங்கிய இராவணனால் கைலாசத்தினின்று கொண்டுவரப்பட்ட சிவாத்மலிங்கமாதலின் தரிசனம் மிக்க விசேஷம்.

இங்கிருப்போர் அனேகமாய் ‡ லிங்காயத்துகள் என்னும் வீர சைவர்களே. இவர்கள் பரம நிஷ்டர்கள். சிவபூசையிற் சிறந்தவர்கள். இவர்கள் அதிகாலையில் எழுந்து நீராடி நீறு புனைந்து கரங்களில் அபிஷேகநீர்க் கலசங்களோடும், பூசைக்குரிய பத்திர

* குறிப்பு:—இச் சம்பவம் தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள திருக்கோளிலி என்னும் புண்ணிய க்ஷேத்திரத்தில் நடைபெற்றது. அது தற்காலத்தில் திருக்குவளை என வழங்குகிறது. இத்தலம் திருவாரூரிலிருந்து அறந்தாங்கிக்குப் போகும் இருப்புப் பாதையிலுள்ள திருநெல்லிக்காவல் ஸ்டேஷனிலிருந்து கிழக்கில் 7 மைல் தூரத்தில் இருக்கிறது. நாகப்பட்டினம் என வழங்கும் திருநாகைக்காரோணம் என்னும் திவ்விய க்ஷேத்திரத்திலிருந்தும் போகலாம். சுமார் 8 மைல். இரண்டு ஸ்டேஷன்களிலிருந்தும் நல்ல சாலை இருக்கின்றது. சுவாமி: கோளிலிநாதர். தேவியார்: வண்டமர் பூங்குழலி. தீர்த்தம்: பிரமதீர்த்தம். தியாகர்: அவனிவிடங்கர். நடனம்: பிருங்கநடனம். மூவராலும் பதிகம் பெற்றுள்ளது.

† குறிப்பு.—கோகர்ண க்ஷேத்திரத்தின் முழு விவரமும், இப்புத்தகம் முதற்பாகம் 121-முதல் 138-வரை பக்கங்களிற் காணலாம்.

‡ குறிப்பு:—இவர்களை லிங்கங்கட்டிகள் என்றும் சொல்லுவார்கள்.

புஷ்பாதிகளுடனும் கூட்டங்கூட்டமாய்க் கோவிலுக்குச் செல்வதைப் பார்க்கநேரிடும் கடும் நாஸ்திகர்களும் பரம ஆஸ்திகர்களாக மாறிச் சிவத்தொண்டு புரிவர் என்பதில் ஐயமில்லை. இக்கோவிலின் நான்கு புறங்களிலும் படிக்கட்டுகள் அழகாகக் கட்டப்பட்டுள்ளன. இங்கு மகா சிவராத்திரி காலத்தில் பெருந் திருவிழா நடக்கின்றது.

இவ்வூர் நிஜாம் அரசாட்சிக்குட்பட்டதாகையால் இங்கு நிஜாம் நாணயங்களே செலாவணியாகின்றன. சிற்சில சமயங்களில் பெரியகடைகளில் ஆங்கில முழு ரூபாய்களைமட்டும் நிஜாம் நாணயமதிப்பின்படி எடுத்துக் கொள்ளுகின்றனர். இக்கோவிலின் அருகில் பிரயாணிகள் தங்குவதற்கு வசதியான ஒரு பெரிய மடம் இருக்கின்றது. இங்கு தெலுங்கு, கன்னடம், மகாராஷ்டிரம் ஆகிய மூன்று பாஷைகளும் வழங்குகின்றன. இந்துஸ்தானியும் சிற்சிலர் பேசுகின்றனர்.

ஸ்ரீ பைஜநாதரை தரிசித்துவிட்டு, மீண்டும் பர்ப்ஹணி சென்று, சோண்டி (Chondi) ஸ்டேஷனுக்குச் சீட்டுவாங்கிக் கொண்டு ரயிலேறிப் பூர்ண (Purna) ஜங்ஷன் சேர்ந்ததும், அவ்வண்டியைவிட்டு ஹிங்கோலி (Hingoli) போகும் வண்டியிலேறிச் சோண்டி சென்று இறங்கவேண்டும். பூர்ண ஜங்ஷன் மன்மாடிலிருந்து 199 மைல். பர்ப்ஹணியிலிருந்து 18 மைல். பூர்ணவிலிருந்து சோண்டி 21 மைல்.

## தாருகாவனம்.

சோண்டி ஸ்டேஷனிலிருந்து 14 மைல் தூரத்தில் இப்புண்ணிய க்ஷேத்திரம் இருக்கின்றது. வழி நல்லவழியன்று. மலைப்பாதையாகவும் காட்டுப்பாதையாகவும் இருப்பதாலும், கட்டைவண்டிகளே வாடகைக்குக் கிடைப்பதாலும், வண்டிகளிற் போவதும் கஷ்டமாகவே இருக்கின்றது. நடந்து போவதற்குக் குறுக்குப்பாதை உண்டு. மலையில் ஏறியிறங்கவேண்டியிருப்பதால் நடப்பதும் சுலபமான காரியமன்று.

## ஸ்தல மகாத்மியம்.

பூர்வகாலத்தில் தாருகை, தாருகன் என்னும் ஓர் இராக்கத சதிபதிகள் இருந்தனர். அவர்களுள் தாருகையானவள் கிரிஜா தேவியை நோக்கித் தவம் புரிந்து அனேக வரங்களைப் பெற்று

தன் கணவனையும் அழைத்துக்கொண்டு, இங்குவந்து தான் பெற்ற தவத்தின் மகிமையால் ஓர் அழகியவனத்தை நிருமித்து அதில் தன் கணவனோடு அதியுல்லாசமாய்க் காலங்கழித்து வந்தனள். அவ்விருவரும் வரம் பல பெறினும் தங்கள் குலத்துக்கேற்ற குணங்களை விடாது வேதபிராமணர்களை வதைப்பதையே தங்கள் நித்திய கருமமாக நினைத்து நடத்திவந்தனர். அனேக விப்பிரோத்தமர்களும் சிவனடியார்களும் சிறைவாசம் செய்யலாயினர். அத்தருணத்தில் ஔர்யமுனிவர் என்னும் சிவபத்தியிற் சிறந்ததோர் முனிவரும் அக்கூட்டத்திற் சேர்க்கப்பட்டனர். அவர் சிறைக்கூடத்துட் சென்றதும், அங்கிருந்த அந்தணர்களையும் அழைத்துத் தம்மோடு வைத்துக்கொண்டு சிவபூசை செய்யலாயினர். இதை ஒற்றர்களாலறிந்த தாருகன் அவர்கள் சிவபூசை செய்யவொட்டாது தடுத்தனன். முன்னொருகாலத்தில் * "மருட்டுயர் தீர வன்றர்ச்சித்த மாணி மார்க்கண்டேயர்க்காய், இருட்டிய மேனிவளைவா ளெயிற்றெரிபோலுங்குஞ்சிச் சுருட்டிய நாவில் வெங்கூற்றம் பதைப்ப உதைத்துங்ஙனே உருட்டிய" சேவடியோடுகூடிய அருட்கடலாகிய அடல்விடையேறும் அண்ணலானவர் அதையறிந்து, சிவபூசையிற் குறுக்கிட்டுச் சிவபூசை செய்வோரைத் துன்புறுத்தின தாருகனைத் தம் நெற்றிக்கண்ணால் நீறுக்கித் தம் அடியார்களைக் காத்தனர்.

தாருகையும் தாருகனும் வசித்துவந்த காரணம்பற்றி இவ்வனத்திற்கு தாருகாவனமெனப் பெயர் வழங்கலாயிற்று. இத்தலத்துறையும் சிவலிங்கத்திற்கு நாகநாதர் அல்லது நாகேசர் என்னும் திருநாமம் வழங்குகின்றது. இவ்விலிங்கமும் 12 ஜோதிலிங்கங்களுள் ஒன்றுதலின் தரிசனம் மிக்கவிசேஷம்.

இத்தலத்தில் சிவலிங்கம் தெற்குமுகமாகத் திரும்பி இருக்கின்றது. அதாவது பாணமிருக்கும் பீடத்திலுள்ள கோமுகம் கிழக்குநோக்கி யிருக்கின்றது. கிழக்குநோக்கியிருக்கும் கோமுகத்தோடு கூடிய சிவலிங்கம் காண்பதரிது. நந்தி பலிபீடம் முதலியவை கீழ்புறமாகவே இருக்கின்றன.

ஸ்ரீ நாம்தேவ் சுவாமிகள் ஓர் நாள் இத்தலம் வந்து ஈசுவரன் எதிரிலிருந்துத் தம் பஜனையை நடத்திக்கொண்டிருந்தனர். அக்

---

* குறிப்பு :—இது சம்பந்தமான சரிதத்தை இப்புத்தகம் 82-வது பக்கத்தின் அடியிற் காணலாம்.

காலத்தில் தங்கள் சந்தியாவந்தனுதி நித்தியகர்மானுஷ்டானங்களைச் செய்யவந்த சில பிராமணர்கள் நாம்தேவ் சுவாமிகளை விளித்து ஈசன் சந்நிதியை மறையாதிருந்துத் தம்பஜனையை நடத்தும்படிச் சொல்லினர். ஈசன் எப்பக்கத்தைப் பார்க்கவில்லை; எத்திசையில் அவருக்கு முகமில்லை என்பதை யுணர்த்தின் தாம் அப்பக்கம் செல்வதாகச்சொல்லி வாதாடினர். அவரை ஓர் அதிகப் பிரசங்கியாக நினைத்து வெகுண்ட அந்தணர் எல்லோரும் சேர்ந்து அவரை ஓர் சிறு குழவிபோற்றாக்கிக் கோவிலின் தென்புறங்கொண்டு சேர்த்தனர். அவர்கள் அம்மகானை விட்டு மீண்டும் கோவிலுக்குட்சென்று பார்த்தவளவில், அதுகாறும் வடக்கு முகமாயிருந்த கோமுகம் கிழக்குமுகமாய்த் திரும்பியிருந்ததைக் கண்டு திகைத்து, அவ்வடியார் முன்சென்று, அவர் திருப்பாதங்களில் அடியற்ற மரம்போல் வீழ்ந்து வணங்கிக் கோவிலுக்கு அழைத்துச் சென்றனர். * ஸ்ரீ நாம்தேவ் சுவாமிகளுக்காகத் தெற்கு நோக்கித்திரும்பின தேவ தேவன் இக்காலத்தும் தெற்கு நோக்கியே இருந்துகொண்டு நம் தென்னுட்டைக் கடாட்சித்து இரட்சிக்கின்றனர்.

இத்தலத்தில் தம் பக்தன் சென்றவழித் தாமும் திரும்பிக் காட்சியளித்தவரும், தென்னுட்டிலுள்ள * திருப்புன்கூரென்னும் காஞ்சாரணிய க்ஷேத்திரத்தில் தம்மை நேரிற்கண்டு தரிசிக்க வேண்டும் என்னும் ஆவலோடு தம்மை நாடிவந்த நந்தனர் எனும் திருநாளைப்போவார் நாயனருக்காகத், தம்மைச்சுமந்து திரிபவரும், தமக்குத் துவசமாக உதவுபவரும், தம் சந்நிதியில் எக்காலத்தும் காத்திருந்துக் காவல்புரிபவருமான நந்தியெம்பெருமானைத் தம் சந்நிதியினின்றும் விலகியிருக்கச்செய்து, காட்சியளித்

---

* குறிப்பு:—இதைப்போன்ற சரித்திரம் பண்டரிபுரம் ஸ்ரீமல்லிகார்ச்சுனர் கோவிலிலும் நடந்ததாகச் சொல்லுகின்றனர். இச்சம்பவத்தை இப்புத்தகம் முதற்பாகம் 216-வது பக்கத்திற் காணலாம்.

* குறிப்பு:—இத்தலம் சென்னையிலிருந்து மாயவரம் போகும் இருப்புப்பாதையிலுள்ள வைத்தீசுவரன்கோவில் ஸ்டேஷனிலிருந்து திருப்பந்தணைநல்லூர் போகும் மட்சாலையில் சுமார் $2\frac{1}{2}$ மைல் தூரத்திலிருக்கின்றது. போக வண்டிகள் கிடைக்கும். சுவாமி : சிவலோகநாதர். அம்பாள்: சொக்கநாயகி. தீர்த்தம் : நந்தனர் தீர்த்தம். விருட்சம்: புன்கு. மூவராலும் பதிகம் பெற்றது.

தவருமான சிவலோக நாதனை சிவபெருமானுக்குத் தம் அடியார்களிடமிருக்கும் கருணைப்பிரவாகம் அளவிடற் பாலதோ.

இவ்விலிங்க மிருக்கும் இடம் ஆதிகாலத்தில் அமிர்தோதகத்தில் ஆழ்ந்து மறைந்திருந்ததாகவும், இங்கு சுவாமி தரிசனார்த்தமாகவந்த பஞ்சபாண்டவர்கள் இலிங்கத்தைக் காணாது அங்கிருந்தோரை வினவ, அவர்கள் எக்காலத்தும் இலிங்கம் நீரினுள் மறைந்தே யிருக்கின்றதெனச் சொன்னதும், பீமன் தன் கதையால் அங்கிருந்த நீரைத் தாக்கியப்புறப்படுத்த இலிங்க தரிசனம் கிடைத்ததாகவும், அக்காலம் முதல் இக்காலம்வரை அவ்விலிங்கம் வெளிப்படையாகவும் தரிசனத்திற் கெளிதாகவும் இருக்கின்றதெனச் சொல்லிக்கொள்ளுகின்றனர்.

பூர்வத்தில் நம் தென்னாட்டில் வேதாரணியம் என்று வழங்கும் திருமறைக்காடெனும் அருந்திருப்பதியில் நான்கு வேதங்களும் பக்கத்திலிருக்கும் * நாலுவேதபதியென்னும் சிற்றூரில் வதிந்து, அதற்கடுத்த புஷ்பவனம் என்னும் ஊரிலுள்ள புஷ்பங்களைக் கொய்து அருச்சித்து, அருகிலிருக்கும் நெய்விளக்கென்னும் கிராமத்திலிருந்து நெய்கொணர்ந்து நெய்விளக்கிட்டுப் பூசித்து, இந்நிலவுலகிற் கலிநுழைந்த பின்னர்த் தாங்கள் உறைவது முறையன்றெனத் தேர்ந்து, தாங்கள் சென்று பூசித்த வாயில் வழியாக மானிடர்கள் செல்லத் தகாதென நினைத்து மூடித்தாளிட்டுச்

* குறிப்பு:—வேதாரணியத்திற் கருகில் நாலுவேதபதி, புஷ்பவனம், நெய்விளக்கு என்னும் பேருள்ள கிராமங்கள் இக்காலத்தும் இருக்கின்றன. அவைகளுள் புஷ்பவனம் என்னும் ஊரில் காடே நிறைந்திருப்பினும், அக்காட்டிலுள்ள முட்செடிகளுக்கிடையில் யாரும் பயிர்செய்யாது நந்திபத்திரி செவ்வலரி முதலிய புஷ்பச்செடிகள் தாமே முளைத்தெழுவதை இன்றும் காணலாம். வேதாரணியம் தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள திருத்தருப்பூண்டியிலிருந்து அகத்தியான்பள்ளிக்குப்போகும் இருப்புப் பாதையிலுள்ள ஓர் ரெயில்வே ஸ்டேஷன். சுவாமி: வேதவனேசுவரர் (மறைக்காட்டையர்). தேவி: வீணாவாதமதுரபாஷணி (யாழைப்பழித்த இன்மொழியம்மை). தீர்த்தம்: வேதநதி; மணிகர்ணிகை; சமுத்திரம் முதலியன. விருட்சம்: வன்னி. விநாயகர்: வீரகத்தி விநாயகர். தியாகர்: புவனவிடங்கர். நடனம்: ஹம்ஸநடனம். கர்ப்பகிரகத்தில் இலிங்கமூர்த்திக்குப் பின்புறத்தில் அகஸ்தியருக்கு தரிசனம் கொடுத்த மணவாளத் திருக்கோலம். மூவராலும் பதிகம் பெற்றது.

சென்ற கதவங்களைப் பிற்காலத்தில் தமிழுலகிற்குத் தமிழ்மறை யருளிச்செய்த வாகீசப்பெருமானும் ஞானசம்பந்த சுவாமிகளும் அத்தலத்துறைவோர் வேண்டுகோளுக்கிணங்கி முறையே,

பண்ணி னேர்மொழி யாளுமை பங்கரோ
மண்ணி னார்வலஞ் செய்ம்மறைக் காடரோ
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்ம்மினே.

சதுரம் மறைதான் றுதிசெய்து வணங்கும்
மதுரம் பொழில்சூழ் மறைக்காட் டுறைமைந்தா
இதுநன் கிறைவைத் தருள்செய்க வெனக்குன்
கதவந் திருக்காப் புக்கொள்ளுங் கருத்தாலே.

என்னும் திருப்பதிகங்களைப்பாடி, எவ்வாறு திறந்து மூடச்செய்தனரோ, அவ்வாறே இத்தலத்தும் ஈசனைப் பூசிக்கவந்த ஸ்ரீ நாம் தேவ் சுவாமிகள்போன்ற பெரியார்களில் யாரேனும், அங்கிருந்த நீர்ச்சுனையைத் தம் தவவலியால் அடைத்திருத்தல் வேண்டுமெனவும் சொல்லுகின்றனர். காரணம் எதுவாயினும் ஆகுக. இக்காலத்தும் ஈசனுறையும் இடம் எக்காலத்தும் குளிர்ந்து நீரில் மூழ்கியிருப்பதையொத்திருக்கிறது என்பது கண்கூடு.

மேலும், இத்தலத்தில் சிவலிங்கமிருக்கும் கர்ப்பகிரகம் மலையினுட் குடைந்த ஓர் குகைக்குள் இருக்கின்றது. அக்குகையின் மேல் மற்றொரு கர்ப்பகிரகம் நிருமித்து, அதிலும் ஓர் சிவலிங்கத்தையும் நந்தியெம்பெருமானையும் பிரதிஷ்டைசெய்திருக்கின்றனர். தாருகனாற் சிறையிடப்பட்ட சிவனடியார்கள் சிறைக்கூடத்திற் செய்த சிவபூசையால் வெளித்தோன்றியவராதலின், அவர்கள் சிறைவாசம் செய்த குகையிலேயே சிவபிரான் எழுந்தருளியிருக்கின்றனர் என ஒரு சாரார் கூறுகின்றனர். மற்றவர்கள் பிற்காலத்தில் தங்கள் மதமொழியப் புறமதங்களைப் பின்பற்றுவோருக்கும், அவர்கள் ஆலயங்கட்கும் தீங்கிழைக்கும் மதம்பிடித்தொழுகின முகமதியர்களுக்கு அஞ்சி உண்மையான நாகலிங்கத்தை உட்குகையிலும், போலி லிங்கத்தை மேற்பாகத்தில் கண்ணெதிரிலும் அமைத்து அவர்களை ஏமாற்றிவந்தனர் என்று சொல்லுகின்றனர். இங்கிருப்பதுபோல் உண்மை இலிங்கங்களும் போலிலிங்கங்களும் இப்பக்கத்தில் சௌராஷ்டிர

தேசமெனக் கருதப்படும் கதியவார் (Kathiawar) தீபகற்பத்தின் தெற்குக் கோடியிலுள்ளதும், பிரபலமான ஜோதிலிங்க க்ஷேத்திரமுமான, பிரபாஸமென்னும் சோமநாத க்ஷேத்திரம்போன்ற மற்றும் சிலதலங்களிலுமிருப்பதிலிருந்து பின் சொன்ன காரணமே பொருத்தமுள்ளதாகக் கொள்ளல்வேண்டியிருக்கின்றது.

இத்தலத்திலிருக்கும் பிராமணர்கள் யாத்ரீகர்கள் தங்குவதற்குவேண்டிய இடம்முதலிய எல்லா வசதிகளும் செய்துகொடுக்கின்றனர். இத்தலத்தை தரிசித்தானபிறகு, மீண்டும் சோண்டி ஸ்டேஷன் சென்று ரயிலேறி ஹிங்கோலி (Hingoli) போகும் மார்க்கத்திலிருக்கும் போல்டா (Bolda) ஸ்டேஷனில் இறங்கி மாஹூர் அல்லது மாதாப்பூர் என்னும் புண்ணிய க்ஷேத்திரம் போதல்வேண்டும். போல்டாவுக்கும் சோண்டிக்கும் 12 மைல் தூரம்.

## அத்தியாயம். 6.

வெவ்வினைக் கீடான காயமிது மாயமென
வேதமுத லாகமமெலாம்
மிகுபறை யறைந்துமிது வெயின்மஞ்ச ணிறமெனும்
விவேகர் சொற் கேட்டறிந்தும்
கவ்வைபெறு கடலுலகில் வைரமலை யொத்தவர்
கணத்திடை யிறத்தல் பலகாற்
கண்ணுறக் கண்டுமிப் புலையுடலின் மானமோர்
கடுகளவும் விடுவ தறியேன்
எவ்வமுறு சிறியனே னேழைமதி யென்னமதி
இன்னமதி யென் றுணர்கிலேன்
இந்தமதி கொண்டுநா னெந்தவகை யழியாத
இன்பநிலை கண்டு மகிழ்வேன்
அவ்விய மகற்றியருள் கைலையம் பதிமருவும்
அண்ணலார் மகிழு மணியே
அகிலாண்ட முஞ்சரா சரமுமீன் றருள்பரம
ரேணுகா தேவி யுமையே.

### * மாஹுரிர் (மாதாப்பூர்).

இத்தலம் போல்டா ஸ்டேஷனிலிருந்தும், ஹிங்கோலி ஸ்டேஷனிலிருந்தும் சுமார் 50 மைல் தூரத்தில் இருக்கின்றது. ஹிங்கோலியில் இறங்கியும் போகலாம். எங்கிருந்துபோயினும் பாதை கரடுமுரடான மலைப்பாதைதான். நல்லவண்டிகளும் கிடைப்பது அருமை. கட்டை வண்டிகளிலும் கூண்டில்லா மொட்டைவண்டிகளே கிடைக்கின்றன. இவ்வரிய வண்டிகளுக்கும், போய்வருவதற்கு 25-30 ரூபாய்க்குக் குறையாமல் வாடகை வாங்கிவிடுகின்றனர். யாத்ரீகர்கள் மாதாப்பூரிலிருந்து மீளும்போது வடக்குநோக்

* குறிப்பு:—மாஹுரிர் என்னும் மகாராஷ்டிர மொழி தாய்வீடு எனப் பொருள்படும். உலகமுழுவதையும் தம் உதரத்தில் அடக்கிக் கொண்டிருந்த உலகநாயகனை ஈன்றெடுத்த உலகமாதா இங்குறையும் காரணம்பற்றி இத்தலத்திற்கு மாஹுரிர் அல்லது மாதாப்பூர் என்னும் திருநாமம் வந்துள்ளது. இதைத் தமிழுலகில் மாதுபுரம் எனச் சொல்லுவர்.

கிப் போகக்கூடுமாதலின் அவ்வழிபோக நினைப்போர் போகமாத்திரம் வாடகை பேசிக்கொண்டு போதல் நலம்.

இப்பாகம் முகமதிய அரசரான ஹைதராபாத் நிஜாமுக்குட்பட்டதாயினும் போக்குவரவிற்குரிய வசதிகள் சரிவர இல்லாமையினால், நம் இந்தியநாட்டில் பூர்வத்தில் எங்கும் பரவியிருந்த பண்டைய நல்வழக்கங்களிற் சில இங்கு அழிந்து படாமல் இன்னமும் அனுஷ்டானத்தில் இருந்து வருகின்றன. "இருப்புப்பாதையும் நெருப்பு வண்டியும் சென்றவிடமெல்லாம் வெறுப்புத்தான்." என்றவாறு இருப்புப்பாதை முதலிய நவீன சாதனங்கள் உள்ள இடங்களில் நவீன நாகரிகமென வழங்கும் பல கெட்ட வழக்கங்கள் எளிதிற் பரவிவிடுகின்றன. இப்பக்கங்களில் வசிப்போர் அனைவரும், "இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தற்பொருட்டு." என்னும் உத்தரவேத வாக்கியத்தை நன்கு கடைப்பிடித்தொழுகுபவராய், செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருந்து, அவர்கள் வந்ததும் அவர்களை முகமலர்ச்சியோடு வரவேற்று தம்மிடமிருக்கும் * உப்பிட்ட கூழையாவதிட்டு, தம்வாழ்க்கை பருவந்து பாழ்படாது காத்து, தம்மில்லங்களைச் செய்யாள் அகனமர்ந்துறையும் கோயில்களாகச் செய்கின்றனர். இங்குள்ளோர்

---

* குறிப்பு:—

"உப்பிடாத கூழிடுகினு முண்பேன் உவந்திவ் வேலையை யுணர்ந்து செய்யென நீர்
செப்பிடாத முன் தலையினனடந்து செய்யவல்லன் யான்."

என வடலூர் திருவருட்பிரகாச சுவாமிகள் திருவாய்மலர்ந்துள்ளபடி "உப்பிடாத கூழெனினும் உவந்திடுதல் வேண்டும்" என்பதே உலக வழக்கு. உப்பு வாங்குவதற்கு வேண்டிய காசின்றி உப்புவாங்காதிருப்பினும் தம்மில்லத்திருக்கும் கூழை உப்பின்றியாவது அதிதிகளுக்கிடல் வேண்டியது முறையென்பது கருதியே அவ்வுலக நீதிமொழிப் பிறந்தது. ஆனால் தற்காலத்தில் நம் காருணியம் நிறைந்த கவர்ன்மெண்டார் காந்தியடிகள் கோருதற்கிணங்கி,கடற்கரையோரத்திலுள்ள கிராமங்களில் ஓர் வரியும் கொடாது உப்பெடுத்து உபயோகிக்கலாமெனும் உத்தரவிட்டிருக்கின்றனர். ஏழைகட்கின்றியமையாத இச்சட்டம் உட்பிரதேசங்களுக்கும் கூடிய சீக்கிரத்தில் அமுலுக்கு வரும் என்ற முழுநம்பிக்கையுடைய நாம் எல்லாம் வல்ல இறைவனை நினைந்து "உப்பிட்ட கூழ்" எனக்கூறத் துணிந்தனம்.

அனேகமாய்ப் பகல் ஒரு மணிக்கு மேல்தான் சாப்பிடுகின்றனர். அத்தருணத்தில் எக்குலத்தார் வரினும் எத்தனைபேர் வரினும் முகஞ்சுளிக்காது அன்னமிட்டு நற்பயன் பெறுகின்றனர். உண்போர் உவந்து பொருள் கொடுப்பின், அதை வாங்க மறுப்பதுடன், பொருட் பெறும் நோக்கத்தோடு அன்னமிட்டதாக நினைத்ததுகருதி வருந்துகின்றனர். இனமாகச் சாப்பிட மனம் கொள்ளாத யாத்ரீகர்கள் அவர்கள் குழந்தைகளுக்கு பட்சணங்களுக்காகவும், ஸ்திரீகளுக்கு இரவிக்கை முதலியவை வாங்கிக் கொள்ளவும் எனப் புகல்சொல்லித் தங்களுக்கு இஷ்டமானதைக் கொடுத்துப் போகலாம். இங்கிருப்போரே திருவள்ளுவர் திருவாய் மலர்ந்தருளியபடி மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகும் அந்தணராவர்.

கோலாப்பூர், துளஜாப்பூர், மாஹூர் ஆகிய இம்மூன்றும், அகில லோகங்களையும், அவைகளிலுள்ள அண்டபிண்டாண்ட சராசரங்களனைத்தையும் ஈன்றெடுத்த லோகமாதாவான ஜகதம்பிகையின் பூர்ணபீடக்ஷேத்திரங்கள். கோலாப்பூரில் மகாலட்சுமியாகவும், துளஜாப்பூரில் துளஜாபவானியாகவும், இத்தலத்தில் ரேணுகாதேவியாகவும் நம் அன்னையார் எழுந்தருளியிருக்கின்றனர்.

## ஸ்தல மகாத்மியம்.

இது பூர்வத்தில் பரசுராமர் தந்தையாரான ஜமதக்கினி முனிவரின் வாசஸ்தானமாக இருந்தது. இக்காலத்தும் அவர் ஆசிரமம் மலையின்மேல் இருக்கின்றது. மலையடிவாரத்தில் பிரவரா என்னும் புண்ணிய நதி ஓடுகின்றது. ஆதிகாலத்தில் மகாவிஷ்ணுவானவர் மோகினி வடிவம்பூண்டு அசுரர்களைத் தம் சுந்தரவடிவத்தால் மயக்கி ஒதுக்கிவிட்டு தேவர்கட்குமட்டும் அமுதத்தைப் பங்கிட்டுக் கொடுத்தபோது, வஞ்சத்தால் தேவருடன் கூடி அமுதுண்ட இராகு கேதுக்களைச் சூரியசந்திரர்கள் செய்த குறிப்பாலுணர்ந்து தம் கரத்திலிருந்த சட்டுவத்தால் அவர்கள் சிரங்களைத் துணிக்க, அவர்கள் உட்கொண்டிருந்த அமுதமானது அவர்கள் உடலினின்றும் வெளிப்பட்டு ஓர் நதியாகப் பெருகிஓடிற்றென்றும், அந்நதியே இப் பிரவரா நதியென்றும் சொல்லப்படுகின்றது. இந்நதி கிழக்கு நோக்கியோடி கோதாவிரியோடு கலக்கின்றது. இதற்குச் சற்று தூரத்தில் கோதாவிரி நதி தீரத்தில், அமுதத்தைப்

பங்கிட்ட மோகினி வடிவங்கொண்ட திருமாலானவர் சென்று வதிந்ததாகச் சொல்லப்படுகிற நிவாஸ க்ஷேத்திர மிருக்கின்றது. இப்புராதனப் பௌராணிக க்ஷேத்திரங்களைக்கொண்டு, மகா விஷ்ணுவானவர் அமுதத்தைப் பங்கிட்ட இடம் இங்குத்தானிருத்தல்வேண்டுமென நினைக்க இடந்தருகிறது.

இவ்விடத்துள்ள ஒரு குன்றின் உச்சியில் ரேணுகாதேவியின் பூர்வ ஸ்தானமும், அதன் எதிரிலிருக்கின்ற மற்றோர் குன்றின் உச்சியில் ஸ்ரீ தத்தாத்திரேயருடைய கோவிலும் இருக்கின்றது. ஸ்ரீ தத்ததேவருக்குக் காசியில் ஸ்நானமும், கோலாப்பூரில் போஜனமும், இவ்விடத்தில் நித்திரையும் எனச் சொல்லிக்கொள்ளுகின்றனர். அவர் கோலாப்பூர், காசியைவிட இங்கு அதிக காலம் தாமசிப்பதால் இதையே அவர் முக்கிய ஸ்தானமாகக் கொள்ளுகின்றனர்.

இவ்விரண்டு குன்றுகளிலும் ஜலம் ஒரு துளியும் கிடையாது. மலையின் அடிவாரத்தில் ஒரு சிறு குண்டம் இருக்கின்றது. அதில் ஏக காலத்தில் ஒரு குடம் ஜலத்திற்குமேல் இருப்பதில்லை. இது குடிதண்ணீருக்காக மட்டும் உபயோகப்படுகின்றது. இதில் யாரையும் ஸ்நானம் செய்ய விடுவதில்லை. கோவிற் பூஜைக்கு இக் குண்டத்தின் நீரையே கொண்டுபோகின்றனர். மலையின்மேல் ஏறுவதற்குச் சுமார் 500-600 படிகள் இருக்கின்றன. ஜலம் அடிவாரத்திலிருந்து வரவேண்டியிருக்கும் காரணத்தால், தேவிக்காவது தத்தாத்திரேயருக்காவது ஜலத்தினால் அபிஷேகம் செய்வதாயிருந்தால் 3 முதல் 5 ரூபாய் வரையில் வாங்குகின்றனர். சாதாரண காலங்களில் இங்கு அபிஷேகம் செய்வதில்லை. அபிஷேக அர்ச்சனையெல்லாம் அடிவாரத்திலிருக்கும் அம்மன் கோவிலிற்றான். இங்கு தினந்தோறும் ஓர் பூசாரி ஒரு சிறு கலசத்தில் ஜலத்துடனும், ஒரு போளி யென்னும் பலகாரமாகிய நைவேத்தியத்துடனும் வந்து பூஜை செய்துவிட்டுச் செல்கின்றனன். பிராமணர்களைக் கொண்டு பூஜைசெய்விக்க வேண்டுமாயின் கீழிருந்து அழைத்து வருதல் வேண்டும்.

மலையின்மேல் ஏறிப் போவதற்கு வண்டிப்பாதையும் இருக்கின்றது. ஆனால் பாதை மேடு பள்ளமாயும் கரடு முரடாயும் இருப்பதால் நடந்து செல்வதே நலம். வண்டியிற் போவோர் தங்கள் உயிரையும், வண்டி மாடுகளையும் இன்ஷியூர் (Insure)

செய்துவிட்டுத்தான் போகவேண்டும். எந்த நேரத்தில் எவ்விடத்தில் வண்டியும் மாடுகளும் தலை கீழாக விழும் என்பதும், விழுந்த வண்டி மாடுகள் என்னாகும் என்பதையும் சொல்ல முடியாது. வண்டி மாடுகளின் கதி அஃதாயின் வண்டிக்குள்ளிருக்கும் பிரயாணிகளைப்பற்றிச் சொல்வது அவசியமில்லை. மருந்துக்கும் எலும்பு கிடைக்காது.

ரேணுகாதேவியின் கோவிலிலிருந்து தத்தாத்திரேயர் கோவிலுக்குப் போக நல்ல பாதை யிருக்கின்றது. ஆனால் இறங்கி ஏற வேண்டும். தத்தாத்திரேயர் கோவிலில் வெளிப்பக்கத்தில் அவர் பாதுகைகளும், உட்பக்கத்தில் தத்தமூர்த்தியும் இருக்கின்றன. மூர்த்தியை தரிசிக்க விரும்புவோர் பூசை நேரத்தில் போதல் வேண்டும்; அல்லது அக்கோவிலின் விசாரணை கர்த்தாவான மஹன்திடம் அனுமதி பெறல்வேண்டும்.

மலையடிவாரத்தில் ஊருக்குச் சற்று தூரத்தில் மாதுர் தீர்த்தம் என்னும் தீர்த்தம் இருக்கின்றது. மழைக்காலங்களில் மலையினின்று வரும் ஜலத்தை மறித்துக் குறுக்கணைகள் போட்டுப் பள்ளத்தாக்கில் நிறுத்தியிருக்கின்றனர். இந்தத் தீர்த்தத்திற்றான் பரசுராமர் தத்தாத்திரேயரின் கட்டளையின்படி தம் தாயாராகிய ரேணுகாதேவிக்கு அந்தியக் கடன்களை முடித்தனர் என்றும், * சித்தபூர் என்னும் மாதுர்கயா க்ஷேத்திரத்திற்குப் போய்த் தங்கள் தாயின் சிராத்த பிண்ட தானாதி கர்மங்களைச் செய்ய வியலாதோர் அக்கர்மங்களை இங்குச் செய்திடின் அங்குச் செய்த பலன் கிட்டுமென்றும் சொல்லிக்கொள்ளுகின்றனர். இந்தத் தீர்த்தத்தில் கோடையில் ஜலம் வற்றிப்போகிறது. ஆங்காங்குள்ள சிறு ஊற்றுக்களிலுள்ள ஜலத்தை உபயோகிக்க நேருகின்றது. இத் தீர்த்தத்திற்கு அழகான படிக்கட்டுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளும் எட்டுப் பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருப்பதால், ஏக காலத்தில் எட்டு வகுப்பார் ஒருவரோடொருவர் கலந்து கொள்ளாமல் ஜலமெடுத்துச் செல்லலாம். நம் நாட்டில் ஜாதி

* குறிப்பு:—சித்தபூர் என்னும் புண்ணிய க்ஷேத்திரம், ஆமதாபாத்திலிருந்து அஜ்மீர் (Ahmedabad to Ajmere) பட்டினத்திற்குப் போகும் இருப்புப்பாதையில், மெஹ்ஸானா (Mehsana) என்னும் ஜங்ஷனிலிருந்து நான்காவது ஸ்டேஷன். இதன் முழு விவரமும் பிற்பாகத்திற் காணலாம்.

வேற்றுமை கேந்திரஸ்தானத்தை அடைந்திருந்த காலத்து இத்தகைய பிரிவுகள் ஏற்பட்டிருத்தல் வேண்டும் எனத் தோற்றுகின்றது.

இவ்வளவு ஜலக்கஷ்ட மிருக்குமிடத்திலும், மலையின் உச்சியில் சுமார் $2\frac{1}{2}$ மைல் சுற்றளவுள்ள ஓர் பெருங் கற்கோட்டை கட்டப்பட்டிருக்கின்றது. கீழிருந்து சுமார் 400-500 அடி உயரத்திற்கு ஜலம் கொண்டுபோய், அப் பெருங் கோட்டையைக் கட்டி முடித்த அக்காலத்திருந்த மன்னர்களுடையவும், தொழிலாளர்களுடையவும் மனவூக்கத்தையும் விடாமுயற்சியையும் என்னென்று புகழ்வது. அத்தகைய கோட்டை ஒன்று இக்காலத்துக் கட்டவேண்டுமெனின், நமது மாட்சிமை தங்கிய ஆங்கில அரசாங்கத்தாரின் பொக்கிஷங்கள் எல்லாவற்றினுமுள்ள ரூபாய்களும் போதாது. கட்டக்கூடிய மனிதர்களும் இல்லை.

போல்டாவிலிருந்து வரும் வழியில் துக்காராம் பாபா என்னும் பெரியார் ஒருவர் இருந்து சமாதிகொண்ட ஏஹேள் காவ்ம் என்னும் ஓர் சிற்றூர் இருக்கின்றது. ஆனால் இங்கு அடங்கியுள்ளவர் ஸ்ரீ பாண்டுரங்க பக்தர்களிற் பரம சிரேஷ்டரும், * தேஹு என்னும் புண்ணிய தலத்தில் இருந்து வந்தவருமான துக்காராம் சுவாமிகளன்று. இவர் பிராமண குலத்திற் பிறந்தவர். இம்மகான் உயிருடனிருந்த காலத்தில் அனேக அற்புதங்களைச் செய்தவர் என்றும், இக்காலத்தும் இவர் சமாதியை தரிசிப்போர் தாம் வேண்டியவற்றை வேண்டியவாறு பெறுகின்றனர் என்றும் சொல்லப்படுகின்றது.

முற்காலத்தில் இவ்வூரில் நடந்த ஓர் பிராமண சமாராதனைக்கு இவரை அழைத்துவிட்டு, இவர் வருவதற்குமுன் பிராமணர்கள் அவசரப்பட்டுச் சாப்பிட உட்கார்ந்ததாகவும், அவர்கள் இலைகளிற் பரிமாறியிருந்த அன்னம் முழுவதும் புழுக்களாய் மாறி நெளியத்தொடங்கினவென்றும், அதைக்கண்ணுற்ற அந்தணர்கள் யாவரும் தாங்கள் செய்த அபசாரத்தை நினைந்து வருந்தி, அவரிருந்தவிடம் தேடிச்சென்று, அவர் திருப்பாதங்களில் வீழ்ந்து நமஸ்கரித்து, தாங்கள்செய்த பெரும்பிழையைப் பொறுத்தருளல் வேண்டுமென வேண்டிநின்ற அவர்கள் வேண்டுதற்

---

* குறிப்பு:—இத்தலத்தைப் பற்றிய விவரம் இப்புத்தகம் முதற்பாகம் 199-முதல் 202-வரை பக்கங்களிற் காணலாம்.

கிணங்கி, அப்பெரியார் எழுந்தருளி அவர்களோடிருந்து அன்னம் புசித்ததாகவும், அன்னமிருந்த பாத்திரங்களில் முன்னெடுத் திருந்த அளவு குறையாது சமைத்தபோதிருந்தபடி அன்னம் நிறைந்திருந்ததெனவும் சொல்லிக்கொள்ளுகின்றனர். அண்டர் பிரான் ஆலயம் தொழாவிடினும், அடியார்கள் ஆலயந்தொழுவது சாலவும் நன்று.

முற்காலத்தில் ரிசிகமுனிபுத்திரரான ஜமதக்கினியென்னும் மகரிஷியானவர் தம் தர்மபத்தினியான இரேணுகையுடனும், தம் புத்திரர்களான உறுமதி உற்சாகன் விசுவாசன் பரசுராமன் என்னும் நால்வருடனும் இங்கு வசித்துவந்தனர். ஜமதக்கினி முனிவரின் தாய் சத்தியவதிதேவி. கௌதமாசிரமத்தில் * இந்திரன் கௌதமர் வேடம்பூண்டு சென்று அகலிகையைக் கற்பழித்தது போல், முனிமைந்தனை சித்திரரதன் என்னும் கந்தர்வன் ஓர் நாள் ஜமதக்கினிமுனிவர் ஆசிரமத்தில்லாதிருந்தகாலத்து அவர் போல் வேடம்பூண்டு, ஆசிரமம் சேர்ந்து, ரேணுகையுடன் கூடிச் சுகித்திருந்தனன். அத்தருணத்தில் உண்மையான ஜமதக்கினி முனிவர் வந்ததைக்கண்ட சித்திரரதன் அவர் கோபச்சாபத்திற் கிலக்காகாது அஞ்சியோடினன். நடந்த விஷயத்தையறிந்த முனி வர் அடங்காக் கோபங்கொண்டு, தம் புத்திரர்களில் ஒவ்வொரு வரையும் முறையே அழைத்துத் தம்பத்தினியை வெட்டிவீழ்த் தும்படிக் கட்டளையிட்டனர். முதன் மூன்றுமைந்தர்களான உறு மதி உற்சாகன் விசுவாசன் என்பார் தங்களைப் பெற்றதாயைக் கொல்ல மறுத்தோடினர். அதனல் முனிவரின் முனிவு முன்னி லும் பன்மடங்கு முளைத்தெழுந்தது. ஆதியிலேயே ஜமதக்கினி முனிவர் கோபத்தின் அவதாரபுருஷர். ஆறுவதுசினம் என்னும்

---

*குறிப்பு:—தேவேந்திரன் கௌதமர் வேடம்பூண்டு அகலிகையைக் கற்பழித்ததையும், மகாவிஷ்ணு ஜலந்தரன் வேடம்பூண்டு பிருந்தை யோடு கூடியிருந்ததையும், சித்திரரதன் ஜமதக்கினி வேடம்பூண்டுரேணு கையைக் கெடுத்ததையும் ஆழ்ந்து நோக்கின், ஒருவர்போல் மற்றொருவர் மாறுவேடம் பூணும் சக்தி வானுலகத்தவர்க்கிருந்தது பெருந்தீங்குவிளை தற்கிடங் கொடுத்ததெனத் தெரிகிறது. அஃது அங்ஙனமாக, இந்நில வுலகமாந்தர்களில் ஓர் நாட்டார் மற்றோர் நாட்டாரைப்போல் வேடம் பூணமுயல்வது தற்காலத்தில்லாவிடினும் பிற்காலத்திலேனும் பெருந் தீங்குவிளைக்கும் என்பதில் ஐயமில்லை.

அறமொழியை அறவேமறந்தவர். "மறத்தல் வெகுளியை யார் மாட்டும் தீய பிறத்தல் அதனுன்வரும்" என்னும் அருண்மொழியைக் கனவிலும் நினையாதவர். தம் தந்தையின் கோபாக்கினியானது தம் தமையன்மாரிட்ட நெய்யால் கொழுந்துவிட்டெரிவதைக்கண்ட பரசுராமர் தம் தந்தையின் சினத்தை எவ்வாற்றானும் தணிக்காதுவிடின், சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி, இனமென்னும் ஏமப்புணையைச் சுடுவதுமன்றி, ஈரேழுபதினன்கு உலகங்களையும் சுட்டெரித்துவிடுமென்று தேர்ந்து, தம்மனத்தை ஒருவாறு தேற்றிக்கொண்டு, "தந்தைசொன் மிக்கமந்திரமில்லை" என்னும் நீதிநெறியைக் கடைப்பிடித்து, * தம் தாயைக்கொன்றுத் தம் தந்தையின் கோபத்தைத் தணிவித்துப், பிறகு, தாமுட்கொண்ட மூத்தோர் சொல்வார்த்தை யென்னும் அமுதத்தைத் தம் தாய்க்குமளித்து, உயிர்ப்பிக்கவேண்டுமென உறுதிசெய்து கொண்டு, தாமே தம் தந்தையின் பாதங்களில் வீழ்ந்து வணங்கித் தம் தாய் உயிர்பெற்றெழ வரம்வேண்டி நின்றனர். முனிவரும் தம் இளமகனிடம் கனிவுகொண்டவராய்த் தம் மனைவியை உயிர் பெற்றெழச்செய்தனர்.

"நன்மையும் தீமையும் நாடிநலம்புரிந்த தன்மையானாளப் படும்" "துன்பமுறவரினும்செய்க; துணிவாற்றி இன்பம் பயக்கும் வினை" என்னும் சிறந்த தமிழ்மறை மொழிகளின்படி, பரசுராமர் முன்பின் நேரவிருப்பதை நன்காராய்ந்து துணிந்து செய்த கருமத்தால், தம் தந்தைக் கோபத்தால் தம் நற்றவமிழந்து இறுதியில் முத்தியெய்தாதொழிதலையும், தம் முன்பிறந்தோர் மூவரும், தம் தந்தையின் கோபத்தீயினாற் சுடுபட்டழிதலையும் காத்ததுமன்றி, தம் தாயின் பழியையும் நீக்கி இறுதியில் உயிரையும் காத்தருளினர். பரசுராமர் என்பார், தம் மூதாதைகளுள் ஒருவரும், பாகீரதிநதி தீரத்திலுள்ள மகாபத்ம நகரத்திலிருந்தவருமான பிருகுமுனிவர் வைகுந்தஞ் சென்று திருமகளுடன் சயனித்திருந்த திருமாலின் திருமார்பிலுதைக்க, அத்திருப்பாத மர்த்தனத்தை அடையப்பெற்ற அனந்தசயனர் உடனே எழுந்து, தம் மார்பகத்திற் பதிந்துள்ள கௌஸ்துப

* குறிப்பு:— கார்த்த வீரியார்ச்சுனன் என்னும் அரசனைக்கண்டு மோகித்த குற்றத்திற்காக இரேணுகைக்கு இக் கதிநேர்ந்ததெனவும் சொல்லுகின்றனர்.

மணியிற் பட்ட திருவடிகள் நோவுமேயெனப் பரிதபித்துப் பொற்றாமரைப்போதினும் மெல்லிய தம் திருக்கரங்களால் தடவிக் கொடுத்தவரும், அஷ்டாஷ்ட சிவமூர்த்திகளில் ஒருவரானவரும், சிவபிரானை இகழ்ந்து சிரித்த பிரமனது நடுத்தலையைக்கிள்ளி யெறிந்தவருமான பைரவமூர்த்தியானவர், தம் கையிலேந்திய கபாலத்துடனும், தமக்குச் சிவபிரானால் அனுக்கிரகிக்கப்பட்ட காலவேகன், கன்முகன், சோமகன், ஆலகாலன், அதிபலன் என்னும் கணநாதர்களோடும் வைகுந்தமடைந்துத் தம்மை இன்னாரென்றறியாதெதிர்த்த விஷ்வக்சேனரென்னும் துவார பாலகரையும் தம் சூலநுதியாற் குத்தித் தம் தோண்மேற்சாத் திக்கொண்டு, திருமகள் நிலமகள் என்னும் இரு தேவிமார் இரு புறமிருந்துக் கால்வருட, பல தலைகளையுடைய பன்னக சயனத் திற் படுத்துக் கண்வளரும் சிதரன் முன்சென்று உதிரபலி கேட்க, உதிரபலி கொடுப்பதெங்ஙனம் என நினைத்துச் சற்றே னும் தயங்காது மயங்காது, தம் இருமாதருடன் துண்ணென எழுந்து வணங்கி, தம் நகத்தினால் தம் நெற்றியின்கண் உள்ள நரம்பொன்றைப் பிளந்து உதிரபலி கொடுத்தவருமான பரம கருணாமூர்த்தியாகிய மகாவிஷ்ணுவின் அவதாரமன்றோ. அவர் இச்சிறு காரியத்தை ஆய்ந்து ஓர்ந்து தேர்ந்து தெளிந்துச் செய் தனர் என்பதில் வியப்பொன்றுமில்லை.

பின்னொருகாலத்தில் நருமதை நதிதீரத்திலுள்ள ஹைஹய நாட்டரசனும், கிருதவீரியன் புத்திரனும், ஷட்சக்கரவர்த்திகளில் ஒருவனுமான * கார்த்தவீரியார்ச்சுனன் ஓர்நாள் கானகத்தில் வேட்டையாடிக் களைப்படைந்தவனாய் ஜமதக்கினி ஆசிரமம் வந்து சேர்ந்தனன். அவன் வரவைக்கண்ணுற்ற முனிவர் அவனை அன் போடு வரவேற்று, காமதேனுவைக்கொண்டு அவ்வரசனுக்கும் அவன் பரிவாரங்களுக்கும் அரிய விருந்திட்டனர். அதைக்கண்ட அம்மன்னன், முற்காலத்தில் வசிஷ்டராசிரமத்திற்குவந்த விசுவா மித்திரர் செய்ததுபோல் † அக்காமதேனுவைத் தம்முடன் அனுப்

* குறிப்பு:—இவனுக்கு ஸஹஸ்ரார்ச்சுனன் என்னும் நாமமும் வழங்குகிறது.

† குறிப்பு:—கார்த்தவீரியாச்சுனன் ஜமதக்கினிமுனிவர் மறுத்ததை மீறிக் காமதேனுவை உடன்கொண்டு சென்றதாகவும், அதையறிந்த முனிவர் வெறுப்படைந்துத் தம் ஆசிரமத்தைவிட்டு வெளியேறி தவஞ்

யும்படிக் கேட்டனன். ஜமதக்கினி முனிவர் மறுக்க, மன்னன் அடங்காக் கோபங்கொண்டு அவரைத் தம் வாளுக்கு இரையாக்கினன். அதைக்கண்ணுற்ற ரேணுகாதேவியார், அலறிவிழுந்து உருண்டு புரண்டு அழுது புலம்பிக்கொண்டிருக்குந் தருணத்தில், வெளியிலிருந்துவந்த தம் புத்திரனாகிய பரசுராமரிடம் நடந்ததை நவின்றுக் காட்டாற்று வெள்ளம் பெருகுவதுபோல், மேலும் மேலும் பெருகும் தமது துக்கத்தை ஆற்றமாட்டாதவராய், தம் கணவரை நினைந்து நினைந்து இருபத்தொருமுறை தம் மார்பிலறைந்துகொண்டு வீழ்ந்திறந்தனர்.

ஆதியில் வைகுந்தத்தில் தாம் வசித்திருந்தபோது தம்மைப் பெற்றோர் ஒருவருமின்றி, தாய் தந்தையரற்ற அநாதி என்னும் பழிப்புக்கிடமாக உயிர்வாழ்ந்திருந்து, தமக்கு நேர்ந்திருந்த அப் பெருங்குறையை ஒருவாறு நீக்கிக்கொள்ளக் கருதி, இம்மண்ணுலகில் தமக்கேற்ற தாய் தந்தையரைத்தேடி, விண்ணவர்க்கும் தம் வினைப்பயனை நீக்கலரிது என்னும் நுட்பமான வேதாந்த உண்மையை விளக்கும்பொருட்டும், சிறிது காலமாவது தாம் தம் தாய்தந்தையரை "அம்மா; அப்பா" என அன்புடனழைத்து, ஆனந்தித்திருக்கும் பாக்கியம் தாமும் அனுபவிக்க எண்ணியும், இப்பிறப்பெடுத்திருந்தும், இக்கொடிய மன்னனுடைய கடிய செய்கையால் தாம் தம் பெற்றோரை ஒரே காலத்திலிழந்து அவதியுறும்படி நேர்ந்ததே என நினைத்துத் தம் தாய் இருபத்தொரு முறை மார்பிலடித்துக்கொண்டு மாண்டதன் நிமித்தம், தாமும் கார்த்தவீரியார்ச்சுனனையும் அவன் குலத்துதிப்போரையும் இருபத்தொரு தலைமுறைவரையிற் கொன்றழித்து, க்ஷத்திரியக்கருவென்பதே பூமியிலில்லாதொழிப்பதாக விரதம்பூண்டு, அவ்வாறே

---

செய்ய இமயமலைக்குச் சென்றுவிட்டதாகவும், அவர் ஆசிரமத்தைவிட்டு வெளியேறினதை அறிந்த கார்த்தவீரியார்ச்சுனன் அங்குசென்று ரேணுகாதேவியைத் தன் கைவசப்படுத்த முயன்றதாகவும், அந்நேரத்தில் அங்குவந்த பரசுராமர். அவனைத் தம் நவியத்திற்கு இரையாக்கியதாகவும், அதையறிந்த கார்த்தவீரியார்ச்சுனனுடைய புத்திரன், தன் தகப்பனைக் கொன்ற பரசுராமருடைய தந்தையாகிய ஜமதக்கினி முனிவரிருப்பிடந் தேடிச்சென்று அவரைக் கொன்றதாகவும், அது காரணம்பற்றி பரசுராமர் க்ஷத்திரியரைக்கொன்று கருவறுக்க முன் வந்தனரென்றும் சொல்லுவாரும் உளர்.

செய்து * முடித்தனர். தாம் கொன்ற க்ஷத்திரியர்களுடைய உதிரத்தைத் தற்காலத்தில் குருக்ஷேத்திரமென வழங்கும் புண்ணிய க்ஷேத்திரத்திலுள்ள † ஸ்யமந்தபஞ்சகம் என்னும் ஐந்து தடாகங்களில் நிரப்பி, அவ்வுதிரோதகத்தால் தாம் செய்யவேண்டியிருந்த பிதிர்க்கடன்களைச்செய்து முடித்தனர் என்பது புராணப் பிரசித்தம்.

இவ்வாறு க்ஷத்திரியப்பூண்டில்லாதுபோன காரணத்தால் இராவணாதியரக்கர்களுக்கு கார்த்தவீரியார்ச்சுனனைப்போன்ற சுத்த க்ஷத்திரியவீரர்களிடம் ஏற்பட்டிருந்த அச்சம் நீங்கி மற்றுமுள்ள கோ, பிராமணாதி முனிவர்களைத் துன்புறுத்தலாயினர் என்பதும், அவர்களைக்கொன்று பூபாரத்தை நீக்கவெண்ணி அவதரித்த இராமர் இலட்சுமணர்களை விசுவாமித்திரர் இராஜ போகத்தினின்றும் பிரித்துத் தனியே அழைத்துச்சென்று, தனுர்வேதாதி க்ஷத்திரிய தர்மங்களைப்புகட்டி, அவர்களை சுத்த க்ஷத்திரியர்களாக்கி க்ஷத்திரியக்கொடியை மீண்டும் பரவ

---

* குறிப்பு :—க்ஷத்திரியர்களைக் கருவறுத்த பரசுராமர் இறுதியில் தம் திரேகசுத்திக்காகத் தீர்த்தயாத்திரைசெய்து, ஆத்மசுத்திக்காகக் கொங்கண தேசத்திலுள்ள வாசிஷ்ட நதிதீரம் சென்று தவம்புரிந்துறைந்தனர் என்பது ஒரு சார்பார்கொள்கை.

தசரத ராமனானவர் மிதிலையினின்று கலியாணராமனாய் மீண்ட காலத்தில், எதிர்த்தோன்றின பரசுராமரிடமிருந்த விஷ்ணு தனுசைப் பெற்று,

“பூதலத் தரசை யெல்லாம் பொன்றுவித் தனை யென்றாலும்
வேதவித் தாய மேலோன் மைந்தனீ விரதம் பூண்டாய்
ஆதலிற் கொல்ல லாகா தம்பிது பிழைப்ப தன்றால்
யாதிதற் கிலக்க மாவ தியம்புதி விரைவி னென்று”

கேட்டு, அவர் வேண்டிக்கொண்டபடி, அவர் அரும்பாடுபட்டுச் சேமித்திருந்த நற்றவம் முழுவதையும் நசிக்கச்செய்து, அவரைப் பராபவப் படுத்தி அனுப்பியபின், பரசுராமர், தம் முகத்தை வெளியிற்காட்ட வெட்கி, வருணனிடம் சென்று, தமக்குச் சிறிது பூமிகொடுக்கும்படிக் கேட்டு வாங்கி, அதில் இருந்து தவம்புரிந்துக் காலங்கழித்தனர் என்பது மற்றொரு சார்பார்கொள்கை.

† குறிப்பு :—இந்தப் புண்ணியதீர்த்தத்தின் முழுவிவரத்தை இதற்குப் பின் வரும்பாகத்தில் காணலாம்.

வைத்தனர் என்பதும் இராமாயணவாயிலாய் நாம் அறிந்த விஷயமே.

இரேணுகாதேவியார் இறந்ததும் பரசுராமர் மனம்பொறுது தாயின் பிறிவாற்றுமைக்காக வருந்திக்கொண்டிருந்த காலத்து, ஸ்ரீ தத்தாத்திரேயர் அவர்முன் தோன்றி நீர் உம்முடைய தாயின் அந்தியக்கடன்களை முறைப்படிசெய்து முடிப்பின், உமது தாயார் மீண்டும் உயிர்பெற்றெழுவர் என உரைத்தனர். அதைக்கேட்ட பரசுராமர் பூமியில் பாணப்பிரயோகஞ்செய்து * பாதாள கங்கையை வரவழைத்து, அதன் தீர்த்தத்தால் தாம்செய்யவேண்டிய கிரியைகளைச் செய்தனர். தாம் தொடங்கிய கருமம் முடிவுபெறுமுன் தம் தாயிடத்திருந்த பேரன்பினுல் "அம்மா!" என்றழைத்தனர். அவ்வம்மையாரும் உடனே "ஏண்டா என்மகனே!" என அளவுகடந்த அன்போடும் ஆதரத்தோடும் பதிலளித்துத் தம் முகத்தளவுமட்டும் வெளித்தோன்றினர். இதுகாரணம்பற்றியே இத்தலத்தில் † தேவியானவர் தம் முகத்தளவே இருந்து தரி

---

* குறிப்பு :—இதுதான் இக்காலத்தில் மாதுர் தீர்த்தம் என்னும் பேருடனிருப்பது.

† குறிப்பு :—இந்த தேவியானவர் நம் தென்னுட்டில் மாரியம்மையெனும் திருநாமத்தோடு கண்கண்ட தெய்வமாக விளங்குகின்றனர். இவர் சிவபூசை, சிவபக்தி, சிவனடியாரைத் தொழுதல், சிவன்சோவிலை வலம்வருதல் முதலியவைகளைச் செய்யாதும், சிவபக்தியில் ஈடுபடாது திரிந்தும், சிவநிந்தை, சிவனடியார்களின்நிந்தை, சிவச்சின்னங்களின் நிந்தை முதலிய நிந்தைகளைச் செய்தும், தம் வாணுளை வீணுளாக்கித் திரிவோரைப் பீடித்து வருத்துவதே தம் கடமையாகக் கொண்டிருப்பவர். இவ்வம்மையின் சினத்திற்கிலக்காகி நோய்கொண்டு வருந்துவோர்க்கு, வைத்தீசுவரன்கோவில் என வழங்கும் புள்ளிருக்குவேளூரில் கோவில்கொண்டுறைபவரும், "தீரா நோய்த் தீர்த்தருளவல்லான்" எனவும் "செடியாய வுடறீர்ப்பான் தீவினைக்கோர் மருந்தாவான் பொடியாடிக் கடிமைசெய்த புள்ளிருக்குவேளூரான்" எனவும் புகழப்பட்டவருமான ஸ்ரீ பாலாம்பிகா சமேத வைத்தியநாத பரமேசுவரர் ஒருவரே வைத்தியராவர். அவர் தலத்திருக்கும் வேப்பமரத்தின் பச்சிலையே இனிய ஓஷதியாகும். பிறவைத்தியர்களும் மருந்துகளும் சற்றேனும் பயன்படா என்பது உலகமறிந்தவிஷயம். இத்தலம் சீகாழிக் கடுத்த ரயில்வேஸ்டேஷன். புள் (ஜடாயு, சம்பாதி), இருக்கு (வேதம்) வேள் (முருகவேள்), ஊர் (சூரியன்) முதலாயினோர் பூசித்தகாரணம்

சனம் கொடுக்கின்றனர். தேவியின் பிம்பம் முகத்தளவே இருப்பினும், இப்பக்கத்தில் இத்தலத்தையும் தேவியின் தரிசனத்தையும் மிக விசேஷமாகக் கொண்டாடுகின்றனர்.

தேவியை தரிசித்தானபிறகு எதிரிலிருக்கும் குன்றின் மேலேறி ஸ்ரீ தத்தாத்திரேயரின் தரிசனம் பெறுதல் அவசியம். தத்தர் கோவிலில் அவருடைய பாதுகைகளிருப்பதுடன் மூன்றடி உயரமுள்ள அவருடைய திவ்விய மங்களவிக்கிரகமும் இருக்கின்றது. இம்மூர்த்தியின் தரிசனம் பூஜைவேளையில் மட்டும் கிடைக்கும். மற்ற வேளைகளில் தரிசிக்கவேண்டுமாயின், அதற்காக ஒரு ரூபாய் கட்டணம் செலுத்தி அக்கோவிலின் விசாரணை கர்த்தாவான மகன்த் (Mahant) என்பவரிடம் அனுமதி பெறல்வேண்டும்.

தேவிதத்த தரிசனத்தையும், செய்யவேண்டிய பிதுர்க்கடன்களையும் செய்து முடித்துக்கொண்டு, மீண்டும் ஹிங்கோலிக்குச் சென்று ரயிலேறி வந்தவழியே திரும்பி மன்மாட்போய், பிரயாணத்தைத் தொடரலாம். வந்தவழியே போகவிரும்பாதோர், மாஹுரிலிருந்து தார்வாமோதிபாக் (Dharwa Moti Bagh) ஸ்டேஷனுக்கு வண்டி பேசிக்கொண்டு சென்று, அங்கு ரயிலேறிப் பிரயாணத்தைத்தொடரலாம். போல்டா அல்லது ஹிங்கோலியைப் போலவே தார்வாவும் மாஹுரிலிருந்து 50 மைல் தூரத்திலிருப்பினும், அங்குப்போவதற்குப் பாதை ஒழுங்காக இருப்பதோடு, வண்டிகள் நல்ல கூண்டு வண்டிகளாய்க் கிடைக்கின்றன. தார்வா என்னும் ஸ்டேஷன் பம்பாய் - மன்மாட் - அலகாபாத் இருப்புப் பாதையில் மன்மாடிலிருந்து 114 மைல் தூரத்திலுள்ள புஸாவல் (Bhusaval) என்னும் ஜங்ஷனிலிருந்து நாகப்பூர் ((Nagpur)

---

பற்றி புள்ளிருக்குவேளூர் என்னும் திருநாமம்பெற்றது. சுவாமி. வைத்தியநாதர். அம்பிகை: தையநாயகி (பாலாம்பிகை). தீர்த்தம்: சாத்தியாமிர்தம். விருட்சம்: வேம்பு. அப்பர்பெருமானும் ஆளுடைபிள்ளையாராலும் பதிகம்பெற்றது. இத்தலத்திற்குச் சம்பாதிபுரம் எனவும் சம்பாதிவனம் எனவும் திருநாமங்கள் இருந்ததாகவும் தெரிகின்றது.

"வெங்கதிர் வெம்மையின் விரிசிறை யிழந்த
சம்பாதி யிருந்த சம்பாதி வனமும்"

(மணிமேகலை மலர்வனம்புக்க காதை).

என இத்தலத்தைப் பண்டைக்கவிஞர்கள் வருணித்திருப்பதை அறிக.

போகிற கிளைப்பாதையில் புஸாவலிலிருந்து 110 மைல் தூரத்திலுள்ள முர்த்துஜாப்பூர் ஜங்ஷனிலிருந்து யோத்மால் (Yeotmal) பட்டினம் போகும் பாதையில் முர்த்துஜாப்பூரிலிருந்து 45 மைல் தூரத்தில் இருக்கின்றது. மாஹுரிலிருந்து போவோர் மன்மாடுக்கும் புஸாவலுக்கும் இடையிலுள்ள ஜல்காவ்ம் (Jalgaon) என்னும் ஜங்ஷனுக்குப் போகவேண்டியிருப்பதால் ஹிங்கோலி வழியாகப் போனால் 50 மைல் சாலைவழியும் 348 மைல் இருப்புப்பாதை வழியும் போதல்வேண்டும். தார்வா வழியாகப் போனால் 50 மைல் சாலைவழியும் 269 மைல் இருப்புப்பாதை வழியும் போகவேண்டும். ஆகவே எல்லா விஷயங்களிலும் தார்வா மார்க்கமாகப் போவதே நலம். எந்த மார்க்கமாகப் போயினும் ஜல்காவ்ம் ஸ்டேஷனில் இறங்கித் தங்கியிருந்துகொண்டு அஜன்டாவிலிருக்கும் கல்வெட்டுக்குகைக்களைப் பார்த்து வரலாம். அவகாசமிருப்போர் ஜல்காவ்ம் பட்டினத்திலிருந்து 25 மைல் தூரத்திலுள்ள அன்வா (Anwa) என்னும் சிற்றூருக்குப் போய் அங்கிருக்கும் அழகிய சிவன்கோவிலைப்பார்த்து வரலாம். அன்வா என்னும் ஊர் ஜுவா (The Juwa) என்னும் நதியின் கரையில் இருக்கின்றது.

## நண்டுரா (Nandura).

புஸாவல் (Bhusaval) போவதற்கு முன்னம் முர்த்துஜாப்பூருக்கும் புஸாவலுக்கும் இடையிலுள்ள நண்டுரா என்னும் ஸ்டேஷனில் இறங்கி, அங்கு பூமிக்குள் கட்டப்பட்டிருக்கும் காளிகாதேவியின் கோவிலையும், அங்குறையும் தேவியையும் தரிசித்துச் செல்லலாம்.

## அஜன்டா (Ajanta).

அஜன்டா என்னும் சிற்றூர் மன்மாட் ஜங்ஷனிலிருந்து 99 மைல் தூரத்திலும், பம்பாயிலிருந்து 261 மைல் தூரத்திலுமுள்ள * ஜல்காவ்ம் (Jalgaon) என்னும் ஜங்ஷன் ஸ்டேஷனிலிருந்து சுமார் 38 மைல் தூரத்தில் இருக்கின்றது. போவதற்கு நல்ல கற்சாலை இருக்கின்றது. வாடகை வண்டிகளும் மோட்டார் வண்டிகளும் ஏராளமாய்க் கிடைக்கின்றன. குகைகளிருக்குமிடம் ஊரிலிருந்து 4 மைல் தூரத்திலிருக்கின்றது. இவைகளும் எல்

* குறிப்பு :—ஜல்=நீர் ; காவ்ம்=ஊர்.

லோரா குகைகளைப்போலவே அதிக வேலைப்பாடுள்ளவை. இக் குகைகளை ஆழ்ந்து நோக்கின், புத்தமதம் நம் நாட்டில் தோன்றின காலம் முதல், இந்நாட்டைவிட்டு வெளியேறின காலம்வரை, அம் மதம் எவ்வித ஸ்திதியில் இருந்துவந்ததென்பதையும், காலக்கிர மத்தில் எவ்வித மாறுதல்களை அடைந்துவந்தது என்பதையும், ஒருவாறு ஊகித்து அறிந்துகொள்ளலாம். இவைகளுள் பழமை யான குகை கிறிஸ்து பிறப்பதற்குமுன் சுமார் இருநூறு வருஷங் களுக்குமுன்னர் செதுக்கப்பட்டிருக்கலாம் என்றும், புதிய குகை கி. பி. ஆறுவது நூற்றாண்டில் செதுக்கப்பட்டிருக்கலாம் என்றும் கருதப்படுகின்றது. இவைகளில் அனேகமாய் கௌதம புத்தருடைய விக்கிரகங்களும், போதிசத்துவர்களுடைய விக்கிர கங்களுமே இருக்கின்றன. இக்குகைகளில் அருமையான சித் திரவேலைகள் செய்யப்பட்டிருக்கின்றன. குகைகளைப்பற்றி விவ ரித்துச் சொல்லுவோர் (Guides) அவ்வூரில் அனேகர் இருக்கின் றனர். கூலிபேசி அழைத்துச்செல்லலாம்.

இவ்வூரில் சாப்பாட்டு வசதிகள் இல்லாததால் இங்குப்போக விரும்புவோர் சாப்பாட்டிற்குத் தகுந்த ஏற்பாட்டுடன் போதல் அவசியம். ஜல்காவ்ம் பட்டினத்தில் தங்குவதற்குச் சாவடிகளும் பிரயாணிகள் தங்கும் கட்டிடமும் (Travellers' Bungalow) இருக் கின்றன. ஜல்காவ்ம் பட்டினத்திற்கு மேற்கில் கிர்ஞ என்னும் ஆறு ஓடி தப்திநதியிற் கலக்கின்றது.

ஜல்காவ்ம் ஜங்ஷனிலிருந்து காண்ட்வா (Khandwa) ஜங் ஷன்வழியாக ஓங்கார க்ஷேத்திரம் போவதற்குமுன், ஜல்காவ்ம் ஸ்டேஷனிலிருந்து சூரத் (Surat) பட்டினம்போகிற கிளைப்பாதை வழியாகச்சென்று, எரண்டோல் (Erandol), அமல்னேர் (Amalner), பிரகாஷா (Prakasha), முதலிய ஸ்தலங்களைப்பார்த்து மீளு தல் நலம். காலம் தாழ்க்கவியலாதோர் நேராகச் செல்லலாம்.

## எரண்டோல் (Erandol).

இவ்வூர் ஜல்காவ்ம் ஜங்ஷனிலிருந்து 19 மைல் தூரத்திலுள்ள எரண்டோல் ரோட் ஸ்டேஷனிலிருந்து 7 மைல் தூரத்தில் இருக் கிறது. ஸ்டேஷனில் எக்காலத்தும் வண்டிகள் கிடைக்கும். மோட்டார்வண்டிகள் ஓடுகின்றன. ஊரிலிருந்து சுமார் 18 மைல் தூரத்தில் அதவாத் (Adavad) என்னும் ஊருக்கு வடக்கில் 3

ணம்மலில் உனபேதேவ் (Unabedev) என்னும் உஷ்ண நீர்ச்சுனை இருக்கின்றது. சாத்பூரா மலைத்தொடரைச்சேர்ந்த குன்றுகளுள் ஒன்றின் அடிவாரத்திலுள்ள கோவிலின் கீழிருக்கும் பெருங் கற்பாறையிலுள்ள ஓர் கோமுகத்தின் வழியாக எக்காலத்தும் உஷ்ணஜலம் வந்துகொண்டிருக்கின்றது. நல்ல வெந்நீராய் வரும் அந்நீர் எங்கிருந்து வருகிறது என்று சொல்ல முடியவில்லை. எரண்டோலில் பிரயாணிகள் தங்குவதற்கு வசதியான தர்மசாலை ஒன்று இருக்கின்றது.

## அமல்னேர் (Amalner).

இவ்வூர் ஜல்காவ்ம் ஜங்ஷனிலிருந்து 35 மைலிலும், எரண்டோல் ரோட் ஸ்டேஷனிலிருந்து 16 மைலிலும் இருக்கின்றது. இங்கு சக்காராம் பாபா மகாராஜ் என்னும் பெரியார் அடங்கியுள்ளார். தரிசனம் விசேஷம்.

## பிரகாஷா (Prakasha).

இவ்வூர் போவோர் அமல்னேரிலிருந்து சூரத் (Surat) போகும் பாதையில் உள்ள தோண்டாய்ச்சே (Dondaiche) அல்லது ராஞலா என்னும் ஸ்டேஷன்களுள் ஒன்றில் இறங்கிப்போகலாம். இத்தலம் பரமபவித்திரமான தப்தி நதிக்கரையில் இருக்கின்றது. இங்கு கௌதமேசுவர மகாதேவர் கோவிலிருக்கின்றது. தரிசனம் விசேஷம்.

அஜன்டா, எரண்டோல் முதலிய ஊர்களுக்குப்போக விரும்பாதோர், மூர்த்துஜாப்பூரிலிருந்து புஸாவல் (Bhusaval) வந்தவுடன் ஜல்காவ்ம்போகும்வண்டியில் ஏருது, காண்ட்வா (Khandwa) போகும் வண்டியில் ஏறி, காண்ட்வா ஜங்ஷனில் வண்டிமாற்றி அங்கிருந்து அஜ்மீர் போகும் வண்டியில் ஏறி, காண்ட்வாவிலிருந்து 38 மைல்தூரத்திலிருக்கும் மோர்ட்டக்கா (Morttakka) ஸ்டேஷனில் இறங்கி, நர்மதாநதி தீரத்திலிருக்கும் ஓங்காரமாந்தாதா க்ஷேத்திரம் போதல்வேண்டும்.

# அத்தியாயம். 7.

எழுவகைப் பிறவிகளு ளெப்பிறவி யெய்துகினு
　　மெய்துக, பிறப்பி லினிநான்
எய்தாமை யெய்துகினு மெய்திடுக, இருமையினு
　　மின்ப மெய்தினு மெய்துக,
வழுவகைத் துன்பமே வந்திடினும் வருக,
　　மிகுவாழ்வு வந்திடினும் வருக,
வறுமைவரு கினும்வருக, மதிவரினும், வருக,
　　அவமதி வரினும்வருக, வுயர்வோ
டிழிவகைத் துலகின்மற் றெதுவரினும் வருக,
　　வலதெது போகினும் போகநின்
னிணையடிகண் மறவாத மனமொன்று மாத்திர
　　மெனக் கடைதல் வேண்டுமரசே
கழிவகைப் பவரோக நீக்குநல் லருளெனுங்
　　கதிமருந் துதவு நிதியே
கனகவம் பலநாத கருணையங் கணபோத
　　கமலகுஞ் சித பாதனே.

ஓங்காரமாந்தாத்தா.

இப்புண்ணிய க்ஷேத்திரம் மோர்ட்டக்கா ஸ்டேஷனிலிருந்து 7 மைல் தூரத்தில் இருக்கின்றது. நல்லசாலை இருக்கின்றது. வாடகைக்கு மாட்டுவண்டிகள் கிடைக்கின்றன. தற்காலத்தில் மோட்டார்வண்டிகளும் ஓடுகின்றனவெனத் தெரிகிறது.

இத்தலம் பரமபவித்திரமானதும், உலகத்திலுள்ள புண்ணியமெல்லாம் திரண்டு ஜலவுருவந்தாங்கி ஓடிக்கொண்டிருப்பதாய்க் கருதப்படுவதும், இந்தியநாட்டின் அச்சாணியாய் விளங்கும் விந்தியமலையின் உன்னத சிகரங்களுள் ஒன்றாகிய * அமரகண்டக சிக

* குறிப்பு:—அமரகண்டக சிகரம் என்பது விந்தியமலையின் ஓர்பாகமான பேண்ட்ரா மலைத்தொடரில் (The Pendra Ghats) இருக்கின்றது. இங்குப் போகவிரும்புவோர், பம்பாயிலிருந்து அலகபாத் போகும் இருப்புப்பாதையில் பம்பாயிலிருந்து 673 மைல்தூரத்திலுள்ள கட்னி (Katni) ஜங்ஷனிலிருந்து பிலாஸ்பூர் (Bilaspur) போகும் கிளைப்பாதையில் கட்னியிலிருந்து 135 மைலிலுள்ள பேண்ட்ராரோட் ஸ்டேஷனில் இறங்கி,

ரத்தில் ஸோன், மகாநதி, முதலிய புண்ணியநதிகள் உற்பத்தியாகுமிடத்தில் உற்பத்தியாகி, மேற்குநோக்கித் திரும்பி, நதம் என்னும் விசேஷமான கௌரவமுள்ள நாமத்தோடு, தான் பிரவகிக்கும் பூமியின் இருகரைகளையும் வடக்கில் 30 மைல் தூரமளவும், தெற்கில் 18 மைல் தூரமளவும் புனிதமாக்கிக்கொண்டு போவதுமான நர்மதா நதியின் இருகரைகளிலும் மிக அழகாக அமைந்திருக்கின்றது. இதற்கு * விரஜாக்ஷேத்திரம் என்னும் திருநாமமும் உண்டு. நர்மதையின் ஜலமானது ஆழ்ந்தும், தெளிந்தும், நல்ல மரகதம் போன்ற பச்சை நிறத்தோடும் ஓடிக்கொண்டிருக்கும் ஜலத்தில் பகற்காலத்தில் இருமருங்கிலுமிருக்கும் நூற்றுக்கணக்கான உன்னதமான மாடமாளிகைகளும், கூடகோபுரங்களும், செழித்து வளர்ந்து ஆகாயத்தையளாவி நிற்கும் ஆயிரக்கணக்கான விருட்சங்களும் பிரதிபலிப்பதையும், இராக்காலங்களில், அம்மாளிகைகளில் பிரகாசிக்கும் அளவற்ற தீபங்களும், ஆகாயத்திலிருக்கும் நட்சத்திரக் கூட்டங்களும் பிரதிபலிப்பதையும் பார்த்தால் அளவு கடந்த நேத்திரானந்தம் உண்டாகின்றது. ஆற்றில் அன்னப் பேடுகளைப்போன்ற முகங்களுடனும், அதிகம்பீரமான தோற்றத்துடனும், சற்றும் அசைந்தாடாமலும் போய்க்கொண்டிருக்கும் நூற்றுக்கணக்கான நீராவிப்படகுகளிலும், பாய்மரக்கப்பல்களிலும், தோணிகளிலும் ஏறிச்சென்று இருகரைகளிலுமுள்ள இயற்கைக் காட்சியைக் கண்டு களித்தல் அவசியம். சிருஷ்டிகர்த்

---

மேற்கில் 25 மைல் தூரம் போகவேண்டும். நல்ல கற்சாலை இருக்கின்றது. மலைமீதிருக்கும் அமரநாதர் கோவில் தரிசனம் மிக்கவிசேஷம். அருகிலிருக்கும் மேகலாபர்வதமும் (The Maikal Mountains), உலகப் பிரசித்திபெற்ற துலேபகாவலியின் அழகிய அரண்மனையும் பார்க்கத்தக்கவை. சூரியசந்திர கிரகண புண்ணியகாலங்களிலும் மகா சிவராத்திரி தினத்திலும் இங்கு ஆயிரக்கணக்கானஜனங்கள்வந்துகூடுகின்றனர். இப்புண்ணிய தலமே மகா கவியாகிய காளிதாசருடைய ஜன்மஸ்தானமென்று கருதப்படுகின்றது. இத்தலத்தில் மூன்று உலோகங்களினால் ஒன்றனுள் ஒன்றாகக் கட்டப்பட்டிருந்த கோட்டைகளுக்குள் வசித்து வந்த ஓர் அரக்கனை மகாவிஷ்ணுவானவர் கொன்றனர் என்று சொல்லப்படுகிறது.

* குறிப்பு:—விரஜை என்பது பரமபதத்திற் கருகிலுள்ள ஓர் புண்ணிய நதி. ஆகவே நருமதை விரஜையாகவும், இப்புண்ணிய தலம் பரமபதமாகவும் கருதப்படுகின்றன.

தாவே தாம் இருக்க நினைத்து இத்தலத்தை நிருமித்தனரோ வென நினைக்கவேண்டி யிருக்கின்றது. இதற்குச் சமமான காட்சி ஜீவன் முக்த க்ஷேத்திரமாகிய காசிப்பட்டினத்தில் கங்கையின் மேல் கரையில்மட்டும் கிடைக்கின்றது என ஒருவாறு சொல்லலாம். அங்கும் ஜலம் பச்சை நிறமாக இருப்பதில்லை.

## நர்மதையின் பிரபாவம்.

அமரகண்டகம் என்றும் மேகலம் என்றும் அழகிய திருநாமங்களையுடைய பர்வதத்தில் அமர்ந்திருக்கும் அமரநாதன் திருவடியில் பிறந்து, நம்மெல்லோருக்கும் நல்லமுதூட்டி வளர்க்கும் பாரதமாதாவிற்கு மேகலாபரணம்போல் விளங்கும் மேகலதேசத்தின் வழியோடி, கங்கை, யமுனை, சரசுவதி, நர்மதை, கோதாவிரி, சிந்து, காவிரி ஆகிய சப்த புண்ணிய நதிகளிலும் இது ஒன்றே புருஷநதியெனும் அபூர்வமான கௌரவத்தைப்பெற்று, ப்ரோச் என்னும் ஜில்லாவின் எல்லையில் மேல்கடலிற் கலக்கின்றது. எல்லா நதிகளுக்கும் உள்ள இயற்கை குணத்திற்கு மாறாக, இது கிழக்கிலிருந்து மேற்குநோக்கி ஓடுவதால், மேற்சொல்லிய புண்ணியநதிகள் ஏழில், மற்ற ஆறும் பெண்களாக, இவ்வாறுமட்டும் ஆணாகி, பசுநிரைகளில் நின்று கர்ஜிக்கும் ரிஷபராஜன்போல் விளங்குகின்றது. தவிர மற்ற ஆறுகளுக்கும் ஒவ்வோர் குறையுண்டு. தீர்த்தங்களில் சர்வோத்கிருஷ்டமானதாகக் கருதப்படும் கங்கையானது சில பெண்கள் பிறந்த வீட்டிலிட்ட பெயரை இழந்துப் புகுந்தவீட்டில் வேறுபெயர்கொள்ளுவதுபோல், பிறந்த இடத்தில் கங்கையெனும் பெயரின்றி, நடுவிற்கிடைத்த பெயரோடு விளங்குகின்றது. உற்பத்தியில் பாகீரதி, மந்தாகினி, விஷ்ணு கங்கையெனப்படும் அளகநந்தை, நந்தகங்கை, பிண்டாரகங்கை ஆகிய ஐந்து கிளைகளாகப் பிறந்து, இமயமலையின் மீதிருக்கும் * தேவபிரயாகை யெனவழங்கும் திருக்கண்டங் கடிநகரெனும் புண்ணிய க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கும் தன் பிதாவான புருஷோத்தமன் திருப்பாத கமலங்களின் ஸ்பரிசம் பெற்ற பின்பே தன் திவ்விய திருநாமம்பெற்று இமயமலையினின்றிழிகின்றது. இரண்டாவதான யமுனையோ, தன் இயற்கைப் பெயரோடு

* குறிப்பு :—இத்தலத்தைப்பற்றிய விவரம் இப்புத்தகத்திற்குப் பின்வரும் பாகத்தில் காணலாம்.

சிறிதுதூரம் வந்து, பிரயாகையெனும் அலகபாத்தில் அட்சய வடத்தின் எதிரில், தன் மூத்த சகோதரியான கங்கையோடு கலந்துத் தன் சுயரூபத்தை இழந்துவிடுகின்றது. ஆகவே, கங்கை யமுனை ஆகிய இவ்விரு புண்ணிய நதிகளும், இராகு கேதுக்களைப் போல், ஒன்றுக்குத் தலையின்றியும், ஒன்றுக்கு வாலின்றியும் இருந்து வருகின்றன.

மூன்றாவதாகிய சரசுவதியானவள் எல்லாம்வல்ல இறைவனாகிய சிவபிரானுக்கே புத்திரியாகப்பிறந்தும், தன் அளவுக்கு மிஞ்சிய அழகென்னும் ஆயுதத்தால் தன் தந்தையையே தனக்குப் பகைவனாக்கிக்கொண்டு, ஓடியொளிந்து, இறுதியில் மேற் சொல்லிய பிரயாகை க்ஷேத்திரத்தில் தன் மாற்றாந் தாயாகிய கங்காதேவியுடன் கலந்து கரந்துறையும் துர்ப்பாக்கியத்தைப் பெற்றவள்.

நான்காவதான கௌதமியானவள் தான் சர்வேசுவரனை சம்புவின் சடையினின்றுதித்தும், உடனே முகத்தை வெளியில் காட்டவொண்ணாது சிறிதுதூரம் அந்தர்வாகினியாய்வந்து கௌதமராசிரமத்தில் பிரகடமானவள்.

ஐந்தாவதான சிந்துவோ, பாரதமாதாவின் ஓர் மூலைக்காட்டிற் பிரவகித்து, சத்ஜனர்களுக்குப் பயன்படாதும், தன்னைக் கடப்போர் மகா பாதகர்களாவரெனும் நிந்தைச்சொல்லைப் பெற்றும், புறமதத்தினரின் ஆசிரயத்தில் இருந்துத் துன்புறுகின்றது.

அகஸ்தியமுனிவர் கமண்டலத்தினின்று பிரவகித்து மண்ணிற் சிறந்த சோழமண்டலத்தில், மகாலட்சுமியென்று பொருள் படும் பொன்னி என்னும் நந்நாமத்தோடு பிரவகிக்கும் காவிரியோவெனில், தம்மைப்பெற்ற தாய்மாரையே புறக்கணிப்பாளையொத்து, தனக்கும் தன்னைப்போன்ற மற்றும் அனேக நதிகளுக்கும், புனல் கொடுத்துதவும் கடலை மறந்து, கடலிற் சேர்வதாய் பாவனைமாத்திரம் செய்து, மண்ணிற் பிறந்தோர் மண்ணில் மாய்வதுபோல் * மண்ணிலேயே மாய்ந்து விடுகின்றது.

---

* குறிப்பு:—காவிரியின் நீர் கடலிற் சேராது மண்ணிலேயே மாய்வது தஞ்சைஜில்லா வாசிகளுக்குப் பிரத்தியட்சமாய்த் தெரிந்தவிஷயம். "அடல்விடையின்மேல் வருவார் அமுதுசெய்ய வஞ்சாதே விடமளித்த

ஆனால் நம் நர்மதையோ, * அமரநாதன் திருவடியிற் பிறந்து † அமரேசன் திருவடியில் வளர்ந்து அரபிக்கடலிற் சேர்வதன்றியும், தனது உதரத்தினின்றும் பரமோத்கிருஷ்டமான சிவலிங்கபாணங்களைப் பிறப்பிக்கும் பெரும்பேற்றைப் பெற்றுள்ளது. இந்த மகத்தான புண்ணிய க்ஷேத்திர எல்லையில் கடலிலிருந்து முத்துச்சலாபம் எடுப்பதுபோல், நர்மதையின் அடியிலிருந்து பல்வித நிறங்களோடும், பல்வித உருவங்களோடும், பல்விதத் தோற்றங்களோடும் உள்ள சிவலிங்க பாணங்களை எடுக்கின்றார்களெனின் இதைவிடப் புண்ணியதாயகமான நதி வேறுளது என்று கூறுவது வீண்கூற்றாகாதோ. இங்குக்கிடைக்கும் பாணங்களில் அனேகம் ‡ நீறுபூசிய நெற்றியோடும், நூல்பூண்ட மார்பினோடும் கிடைப்பதை யாத்ரீகர்கள் இக்காலத்தும் பிரத்தியட்சமாய்க் காணலாம். இத்தகைய அதியபூர்வமான சாட்சியங்கள் நம் கண்ணெதிரிலிருக்கும்போதே கடவுளில்லையென்று சாதிப்பது தான்றோன்றித்தனகுறும்பரின் குதர்க்கக்கட்சியாகுமேதவிர, அறிவிற் சிறிதும் உடையோர் ஒப்பத்தக்க கோட்பாடாகாது.

மேலும் யமுனையில் ஏழுதினங்களும், மாதுர்கயை எனப்பிரசித்திபெற்ற $ சித்தபூரில் இருக்கும் சரசுவதி நதியில் 3 தினங்களும், பாகீரதியில் ஓர்தினமும் ஸ்நானம் செய்வதால் உண்டாகும் பலன், இத்தலத்திருக்கும் நருமதையின் தரிசனமாத்திரத்தால் கிடைக்கின்றதென்பதும், தீர்த்தங்களிற் சிறந்ததாகப் பெரும்பாலாராலும் கருதப்படும் கங்கையின் புண்ணியதாயக சக்

---

தெனககருதி மேதினிக்கு வளநிறைத்தே கடல்வயிறுநிறையாதகாவிரி" என்னும் ஆன்றோர் மொழியையும் ஒப்பிடுக.

* குறிப்பு:— அமரநாதன் என்பது நர்மதை உற்பத்தியாகும் மேகலா பர்வதத்தின் சிகரத்திலுள்ள ஈசுவரன் பெயர்.

† குறிப்பு:—அமரேசன் ஓங்காரமாந்தாதாவில் கோவில் கொண்டுறையும் ஈசன்.

‡ குறிப்பு:—நீறுபூசியநெற்றி என்பது: பாணத்தின் மேற்பாகத்தில் குறுக்காக (Horizontal) மூன்று அவெண்மையானகோடுகள் இருப்பது. நூல்பூண்டமார்பு என்றது: பாணங்களின் நடுப்பாகத்தில் சாய்ந்தாப்போல் (Oblique) 3 வெள்ளைக்கோடுகள் இருப்பது.

$ குறிப்பு:—இத்தலத்தைப்பற்றிய விவரம் இப்புத்தகம் பிற்பாகத்தில் காணலாம்.

தியானது கலியுகாதி 5000 வருஷங்களோடு முடிவடைந்துவிடு கிறதென்பதும், 5001 ம் ஆண்டாகிய சார்வரி வருஷம் சித்திரை மாதம் முதல் தேதிக்குச்சரியான கி.பி. 1900ளு ஏப்பிரல்மீ 13உ யன்று கங்கை அவ்வபூர்வசக்தியை இழந்து விட்டதென்பதும், கங்கையின் இடதுகரைமட்டுமே பவித்திரமானதாகக் கருதப் படுவதால், அக்கரையில் ஸ்நானம்செய்வோர்க்குமட்டுமே நற்கதி கிடைக்குமென்பதும், நர்மதை அவ்விதமன்றி, எக்காலத்தும், புண்ணிய தாயகமாயிருப்பதுடன், மேற்சொல்லியிருக்கும் வண் ணம் வடக்கில் 30 மைல் விஸ்தீரணத்திற்கும், தெற்கில் 18 மைல் விஸ்தீரணத்திற்கும் இடையிலுள்ள பூமிமுழுவதையும் புண்ணிய பூமியாக்கி, அதில் வசிக்கும் பெரும்பேறு பெற்ற வானவர், மனி தர், நாகர், புள், விலங்கு, மாசுணம், சிதலெறும்பாதியான பல் சரமும், மலை, மரம், கொடி, செடி, புற்பூண்டாதியாமசரமும் தங் கள் தங்கள் பிறவிப்பிணியினின்றும் நீங்கி முத்திபெறும்படி செய் யும் திறனுடையதென்பதும் புராணப்பிரசித்தம்.

## ஸ்தலமகாத்மியம்.

ஆதிகாலத்திலிருந்த நம்முன்னோர்கள் அனைவரும் இயற்கைக் காட்சியின் அழகைக்கண்டு களித்து ஆனந்திப்பதில் எவ்வளவு விசேஷமான கவனத்தைச் செலுத்திவந்தனர் என்பதையும், அத் தகைய இயற்கையான கண்காட்சி அமையப்பெற்றிருக்கும் தலங் களையே தங்கள் கண்ணுதலாகிய கடவுள் உறைவதற்குரிய இட மெனத் தேர்ந்தெடுத்திருக்கின்றனர் என்பதையும், இவ்வரிய க்ஷேத்திரத்தையும், அதன் நடுவில் அதிகம்பீரமானதோற்றத் துடன் கலைமாண்ட கேள்விவல்லார்கவிபோல் ஆழ்ந்து, தெளிந்து, படுகடலுடை முதுபார் நெடுமுதுகிருபிளவுற்றதெனப் பிரவகித் தோடிக்கொண்டிருக்கும் நர்மதையையும், அதன் இருமருங்கிலு முள்ள நூற்றுக்கணக்கான மாடமாலையும், மேடையும், மாளிகை நிரையும், வானத்தையளாவி வளர்ந்திருக்கும் விருட்சங்கள் நிறைந்த சோலைகளையும், நருமதையின் நடுவில் நீராழிமண்டபம் போல் அமைந்திருக்கும் சிறுதீவையும், அன்னப்பேடுகள் உலவு வதுபோல் அழகுடன் அசைந்தாடிக்கொண்டு போகும் ஆயிரக் கணக்கான படகுகளையும், அவ்வாற்றில் சற்றேனும் அஞ்சாது ஒன் றோடொன்று கூடிக் குலாவிக்கொண்டு, யாத்ரீகர்கள் போடும்

கடலை, பொரி முதலிய தின்பண்டங்களைத் தின்னும்பொருட்டு மனிதர்களிருப்பதையும் மறந்து, ஸ்படிகம்போன்ற ஜலத்தில் ஓடியாடி விளையாடும் இலட்சக்கணக்கான மீன்களையும் நேரிற்பார்ப்போர் எளிதில் அறிந்துகொள்வர். கல்வி கேள்விகளிலும் நாகரிக முதிர்ச்சியிலும் தம்மைவிட உயர்ந்தோர் ஒருவருமில்லை யெனக் கருதியிருக்கும் மேல் நாட்டாரும் இத்தலத்தை அடியிற்கண்டவாறு புகழ்ந்திருக்கின்றனரெனின், நாம் புகழ்வதேன்!

"Emerging from the horrid wilds, the Narbudda again becomes beautiful, crashing in grand turmoil over dark trap rocks, then flowing quietly down the shadow of the wall-like ridges, and then surrounding the sacred island in Omkar Mandhata, the heights of which are covered with temples and priestly buildings. Here again the river forms itself into deep pools of still water in which are imaged all the forms of rocks and structures."

அதிரமணியமானதும், அதியற்புதமான இயற்கையழகைக் கொண்டதுமான இவ்வழகிய இடத்தை பாரதபூமியின் பூஷண பூதர்களுள் சிறந்தவனுன * மாந்தாதாவெனும் மகாசக்கரவர்த்தியானவன் இத்தலத்தைத் தன் இராசதானியாகக் கொண்டிருந்தனன் என்னும் காரணத்தால் இதற்கு மாந்தாதா என்னும் பேர் கிடைத்திருக்கிறது. மாந்தாதாவின் அரண்மனையிருந்த சின்னங்கள் இக்காலத்தும் அழியாமல் இருக்கின்றன. அந்த சக்கரவர்த்தியின் வமிசத்தார் இன்னமும் இருந்துகொண்டு, இங்கு வரும் யாத்ரீகர்களிடமிருந்து தங்களுக்குச் சேரவேண்டிய கட்டணங்களை வசூலிக்கின்றனர். ஸ்ரீ ஓங்காரேசுவரர் கோவிலில் மாந்தாதாவின் விக்கிரகம் பூசிக்கப்பட்டு வருகிறது.

நர்மதையின் ஓர் கரையில் பிரமதேவரும் பொருளறியாது விழித்த சூட்சுமப்பிரணவமான ஓங்காரத்தையே தன் திருநாம

---

* குறிப்பு:—மாந்தாதா என்னும் சக்கரவர்த்தி இராமர்பிறந்த இக்ஷ்வாகு வம்சத்தினன். உபோஷிகன் எனப்படும் இரண்டாம் யுவனுசுவன் நெற்றியிலிருந்து உதித்தவன். சசிபிந்துவின் மகளான இந்துமதியின் கணவன். புராணப்பிரசித்திபெற்ற சக்கரவர்த்திகளான புருகுற்சன், முசுகுந்தன், அம்பரீஷன் இவர்களுடைய தந்தை. சௌபரி முனிவருக்குத் தன் ஐம்பது பெண்களையும் விவாகம்செய்து கொடுத்தவன்.

மாகக்கொண்டுள்ள ஓங்காரேசுவரரின் ஆலயமும், மற்றக்கரையில் அமரர்களுக்கும் ஈசனெனப் பொருள்படும் அமரேசுவரர் ஆலயமும் மிக அழகாக அமைந்திருக்கின்றன. இம்மூர்த்தியை அமலேசுவரர் என்றும் சொல்லுகின்றனர். இது 12 ஜோதிலிங்கங்களுள் ஒன்றானதால் தரிசனம் மிக்க விசேஷம்.

இவ்விரண்டு கோவில்களைத்தவிர வைரீயமணி பர்வதம் என்னும் குன்றின்மேல் கௌரி சோமநாதரின் ஆலயம் இருக்கின்றது. இதிலிருக்கும் சோமநாதரின் மூர்த்தி சுமார் 5 அடி உயரத்திற்குக் குறையாமல் இருக்கின்றது. இம் மூர்த்தி பூர்வத்தில் ஸ்படிகம்போன்று தூவெண்மை நிறத்தோடு இருந்ததாகவும், அதன் முன்னின்று தரிசிப்போரின் முற்பிறப்புகளும், பின்னின்று தரிசிப்போரின் பிற்பிறப்புகளும், இம் மூர்த்தியில் நிலைக்கண்ணாடியில் தெரிவதுபோல் தெரிந்துகொண்டிருந்ததாகவும், இந்துக்களின் கோவில்களை இடித்துத் தகர்ப்பதையே தம் தொழிலாகக் கொண்டிருந்த அவுரங்கசீப் பாதுஷாவானவர் இங்கு நடக்கும் அதிசயத்தைக் கேள்வியுற்று, இங்குவந்து, இம் மூர்த்தியின் முன்னின்றதாகவும், அவர் தம் முற்பிறப்பில் வராகமாயிருந்து தின்னத்தகாத வஸ்துவாகிய மலத்தைத் தின்று திரிந்ததாக அம்மூர்த்தியில் தெரிந்ததாகவும், அவர் அதைக் கண்டவுடன் அடங்கா முனிவுகொண்டு, அக்கணமே அம்மூர்த்தியைத் தீக்கிரையாக்கின காரணத்தால், அம்மூர்த்தி தன் சுயரூபம் விட்டு மாறிக் கறுத்துப்போனதாகவும், அக்காலம்முதல் அம்மூர்த்தி பூசைக் கருகமின்றிப்போய்விட்டதாகவும் சொல்லப்படுகின்றது. காரணம் எதுவாயினும், இத்தகைய புண்ணியதலத்தில் உன்னதஸ்தானத்தில் எழுந்தருளியிருக்கும் அழகிலும் உருவத்திலும் தனக்கொப்பில்லாத திவ்வியமங்கள மூர்த்தியும், அதன் கோவிலும், பூசிப்போரும், போற்றுவோருமின்றி, இடிந்தும் விழுந்தும் கிடப்பதைப் பார்ப்போர் மனம் பதறுகின்றது.

இக்கோவிலிருக்கும் குன்றின் கீழ்புறத்தில் சுமார் 90 அல்லது 100 அடிக்குக் கீழ் பைரவசிலை என்னும் பேர்கொண்ட ஓர் பெருங்கற்பாறையிருக்கின்றது. முற்காலத்தில் யாத்ரீகர்களுள் தங்கள் ஊனுடம்பை விடுத்து முத்திபெற விரும்பினோர் குன்றின் உச்சியிலிருந்து மேற்சொல்லியபைரவசிலை என்னும்பெரும்பாறையின்மேல் தலைகீழாய்க்குதித்து உயிர்துறக்கும் வழக்கம் இருந்து

வந்ததென்றும், உடன்கட்டையேறுதல் என்னும் வழக்கத்தை நிறுத்தின நம் அரசாங்கத்தார் இவ்வழக்கத்தையும் நிறுத்திவிட்டனர் என்றும் தெரிகிறது. குன்றின் உச்சியில் மூன்று செங்குத்தான படிகள் இருக்கின்றன. உயிர் நீக்க விரும்பினோர், அங்கு வந்து முதற்படியில் நின்றுகொண்டு, ஈசுவரனை நினைத்து வணங்கி வழிபட்டபின், இரண்டாவது படியில் இறங்கிக் கீழிருக்கும் பைரவசிலையை உற்றுநோக்கும் காரணத்தால் மதிமயங்கி மூன்றும்படிக்குச்சென்று, அங்கிருந்து தலைகீழாய் விழுந்து மடிந்துபோவது வழக்கமாயிருந்தது என்றும், இச்சம்பவம் நடந்த தினம் இரவே நருமதை பெருகி அங்குச் சிதறுண்டு கிடக்கும் தசை, எலும்புத் துண்டங்களைத் தனக்குள் ஐக்கியமாக்கிக் கொண்டிருந்தது என்றும், மறுநாள் காலையில் அங்கு ஓர் எலும்புத்துண்டும் காணக் கிடைக்காது என்றும் சொல்லப்படுகின்றது.

இத்தலத்திற்றான் ஆதிசங்கராசாரிய சுவாமிகளுடைய குருநாதரான ஸ்ரீகோவிந்ததீர்த்தசுவாமிகள் வசித்துவந்தனர் என்றும், ஸ்ரீசங்கராசாரிய சுவாமிகள் அவரிடம் சந்நியாசம் பெற்றனர் என்றும் தெரிகின்றது.

## மோர்ட்டக்கா.

கங்கையினும் சிறந்த நருமதையில் ஸ்நானஞ்செய்து, கைலையினும் சிறந்த ஓங்கார க்ஷேத்திரத்திலுறையும் அமலேசுவரரை தரிசித்துவிட்டு, மீண்டும் மோர்ட்டக்கா ஸ்டேஷன் சென்று ரயிலேறிப் பிரயாணத்தைத் தொடருதல் வேண்டும். மோர்ட்டக்காவின் அருகிலும் நருமதை ஓடுகின்றது. அதன் கரையில் ஓர் அழகிய இராமர்கோவில் இருக்கின்றது அக்கோவிலில் இரமாபாய் என்னும் ஓர் துறவுபூண்ட பெண்மணி இருந்துகொண்டு, இராமபத்தியில் ஈடுபட்டவராய், அங்குப்போகும் யாத்ரீகர்களுக்கு அன்னம் முதலியன அளித்துப் போற்றிவருகின்றனர். இங்கு நருமதைக்குக் கட்டியிருக்கும் ரயில் பாலமானது மிகப்பெரிது. அது ஒன்றன்மேலொன்றாக விருக்கும் இரண்டுபாகங்களாகக் கட்டப்பட்டிருக்கின்றது. கீழ்பாகத்தில் கட்டைவண்டிகள் முதலிய வண்டிகளும், மேற்பாகத்தில் ரயில்வண்டிகளும் போகின்றன. இந்த சாலைவழியே சென்றால், மகேசுவரம் எனவழங்கும் மாஹிஷ்மதி பட்டினம் போகலாம். இது அக்கினியைச் சிறையிலிட்ட அதி

பராக்கிரமசாலியான நீலன் என்னும் அரசனும், இலங்கை மன்னனை இராவணனை வென்று முதுகுகாட்டி ஓடும்படிச்செய்தவனும், பிற்காலத்தில் தன்காமவெறியினால் ரேணுகையைத்தீண்டின காரணத்தால் பரசுராமரால் கொல்லப்பட்டவனுமான சஹஸ்ரார்ச்சுனன் என்றும், கார்த்தவீரியார்ச்சுனன் என்றும் பேர்கொண்ட சக்கரவர்த்தியும் அரசாண்டிருந்த புண்ணியநகரம். மோர்ட்டக்காவில் ரயிலேறி அங்கிருந்து 50 மைலிலும், காண்ட்வா ஜங்ஷனிலிருந்து 87 மைலிலும் உள்ள இந்தோர் (Indore) பட்டினம் போதல்வேண்டும்.

## இந்தோர் (Indore).

இப்பட்டினம் புராணவாயிலாகப் புண்ணியக்ஷேத்திரமெனும் புகழ்பெறாவிடினும், சரித்திரமூலமாக இச்சம்புத்தீவிற் சிறந்த நகரெனக் கீர்த்திபெற்றது. மகாராஷ்டிர மன்னர்களுள், கோலாப்பூரிலிருந்து அரசுபுரியும் போன்ஸ்லே (Bhonsle) வமிசத்தாரும், குவாலியர் நாட்டை ஆளும் சிந்தே வமிசத்தினரும், பரோடாதேசாதிபதிகளான காயிக்கவாட் (Gaikewar) வமிசத்தினரும், இப்பெரும்பட்டினத்திலிருந்து செங்கோல்செலுத்திவரும் ஹோல்கார் வமிசத்தினருமே நாடறியப் புகழ்பெற்றவர்கள். இந்நகரம் கான் (Kan) என்னும் புண்ணிய நதியின் இடதுகரையில் அமைந்திருக்கின்றது. இந்நகரமானது, அனேகம் புண்ணிய க்ஷேத்திரங்களில், கணக்கற்ற கோவில்களையும், தர்மசாலைகளையும், அன்ன சத்திரங்களையும், மடங்களையும் கட்டியும், வாவிகூப தடாகங்களை வெட்டியும்,

> "கற்றறி யந்தணாளர் விருத்திகள் கடவுட்டானத்
> தற்றமில் பூசைச்செல்வ மறப்புற நடக்கையேனைச்
> செற்றமில் குடிகண்மற்று மமைச்சராற் றெளிந்தும்வெவ்வே
> றொற்றுவிட் டுணர்ந்தும்வேறு குறையுண்டே லொறுத்துத்தீர்த்தும்

எவ்வாறு பாண்டியநாட்டின் தலைநகராகிய தென்மதுரைப்பட்டினத்தில் பார்வதி தேவியாரே தடாதகைப் பிராட்டியாராய் அவதரித்து அரசாண்டிருந்தனரோ, அவ்வாறே இந்நகரிலும் அதிவீரதீர பராக்கிரமத்துடன் செங்கோல் நடாத்தின அஹலியாபாய் அரசியால் இப்பட்டினம் நிருமிக்கப்பட்டதெனத் தெரிகிறது. இப்பட்டினம் சமுத்திரமட்டத்திலிருந்து சுமார் 2000 அடிக்கு

மேல் இருக்கும் ஓர் மேட்டுப்பாங்கான இடத்தில் இருப்பதால், சீதோஷ்ண ஸ்திதி எக்காலத்தும் சமமாக இருந்து வாசத்திற்கு மிக வசதியாக இருக்கின்றது. இப்பட்டினத்திற்கு நடுநாயக மாய் விளங்கும் அரண்மனையும், லால்பாக் (The Lal Bagh) என்னும் அழகிய தோட்டமும், அதிலுள்ள வசந்தமாளிகையும், உயிர்ப்பிராணிகளின் தொகுதியும் (The Menagerie), நாணய சாலையும் (The Mint), மார்க்கெட்டும், கணக்கற்ற பருத்திநூற் சாலைகளும், ஓர் அழகிய பூங்காவின் நடுவில் அமைந்திருக்கும் கற்கோட்டைபோன்ற ரேசிடேன்ட் (The Resident or the Agent of the Governor - General for the Central Indian States) துரையவர்களின் வாசஸ்தானமும் பார்க்கத்தக்கவை.

பிரயாணிகள் தங்குவதற்கு ரெயில்வே ஸ்டேஷனுக்குப் பின் புறத்தில் சுமார் 500 கெஜ தூரத்தில் ஒரு தர்மசாலையும், பட்டினத் திற்குள் இரண்டு பெரிய தர்மசாலைகளும் இருக்கின்றன. தரும சொரூபியான அஹலியாபாய் மகாராணியார் அரசாண்ட நகரில் தருமத்திற்கும், தருமசாலைகளுக்கும் குறைவிருப்பின், தருமமே அழிவுற்றதென்று எண்ணல்வேண்டுமன்றோ.

இந்தோர் பட்டினத்தைப் பார்த்துவிட்டு, மீண்டும் ரயிலேறி உஜ்ஜயினி பட்டினம் போதல்வேண்டும். இந்தோர் ஸ்டேஷனி லிருந்து பதேபாத் சந்திராவதி கன்ஜ் (Fatehbad Chandravati Ganj) ஜங்ஷன் 25 மைல். அந்த ஜங்ஷனில் வண்டிமாற்றி உஜ் ஜயினிபோகும் வண்டியேறிப் போகவேண்டும். சந்திராவதி கன் ஜுக்கும் உஜ்ஜயினுக்கும் 15 மைல்.

# அத்தியாயம் 8.

திருவண்ண நதியும்வளை யொருவண்ண மதியும்வளர்
செவ்வண்ண நண்ணு சடையும்
தெருள்வண்ண நுதல்விழியு மருள்வண்ண வதனமுந்
திகழ்வண்ண வெண்ணகையு மோர்
மருள்வண்ண மணிகுவளை மலர்வண்ண மிடறுமலை
மகள்வண்ண மருவு மிடமும்
மன்வண்ண மிருதுணைப் பொன்வண்ண வடிமலரு
மாணிக்க வண்ண வடிவும்
இருவண்ண வெனதுமன தொருவண்ண மாகியே
யிடைவிடா தேத்தும் வண்ணம்
எவ்வண்ண மவ்வண்ண மிவ்வண்ண மென்றிவ
ணியம்பலுன் கருணை வண்ணம்
கருவண்ண மறவுளம் பெருவண்ண முறநின்று
கடல்வண்ண னெண்ணு மழுதே
கனகவம் பலநாத கருணையங் கணபோத
கடவுண் மாகாளேசனே.

## உஜ்ஜயினி.

இது சப்த மோட்சபுரிகளுள் ஒன்ருகிய அவந்திகை என்பது. இது மாளவ தேசமென வழங்கும் அவந்திநாட்டின் தலைநகராக இருந்தது. இந்த மாளவதேசம் கி. பி. 13 வது நூற்றுண்டின் இறுதியில் டில்லியில் அரசாண்டிருந்த அலாவுத்தீன் பாதுஷாவால் டில்லி தேசத்தோடு சேர்க்கப்பட்டு, கி. பி. 1531 ம் வருஷம் வரையில் டில்லி சக்கரவர்த்திகளின் ஆளுகைக்குட்பட்டிருந்தது. கி. பி. 1531 ம் வருஷத்தில் பஹதூர்ஷா என்னும் நவாப்பினுல் குஜராத் தேசத்தோடு சேர்க்கப்பட்டது. கி. பி. 1571 ம் வருஷத்தில் அக்பர் சக்கரவர்த்திகாலத்தில் மீண்டும் டில்லி சமஸ்தானத்தோடு சேர்ந்தது. 1792 ம் வருஷத்தில் இந்தோர் தேசத்து மன்னர்களால் பிடிக்கப்பட்டு, பிற்காலத்தில் குவாலியர் தேசத்தையாளும் சிந்தே (Scindia) வமிசத்தாரின் ஆளுகைக்குட்பட்டு, 1810-ம் வருஷம்வரையில் அந்நாட்டின் தலைநகராக இருந்து வந்ததெனத் தெரிகிறது.

ஆதிகாலத்தில் சந்திரசர்மனென்னும் அந்தணன் மனுநீதி சாஸ்திரத்தில் விதித்துள்ளபடி, நான்கு வருண மங்கையரையும் ஒருங்கே மணந்து, நான்கு புதல்வர்களைப் பெற்றனன். அவர்களுள் உஜ்ஜயினி புரத்தரசனான சுருதகீர்த்தியின் மகளிடம் பிறந்த விக்கிரமார்க்கன் என்பான் கடுந்தவம் புரிந்து, இத்தலத்துறையும் மகா காளியின் அருள்பெற்று, தன் தந்தைக்கு வைசியப் பெண்பாலுதித்த மகா புத்திமானும், அறனறிந்தான்றமைந்த சொல்லானுமாகிய பட்டியென்பானைத் தன் மந்திரியாகக்கொண்டு, நாடாறுமாதம் காடாறுமாதமாக இரண்டாயிரம் வருடங்கள் வரை செங்கோல் செலுத்தி, இறுதியில் ஆதிசேஷனுக்கு சுமித்திரை என்னும் வேதியப்பெண்பாற்பிறந்த சாலிவாகனனால் வெல்லப்பட்டு மரணமடைந்தான். இம் மண்ணுலகிற் பொன்றாப்புகழ் பெற்ற இவ்விருமன்னர்களின் பேராலும் சகாப்தங்கள் தொடங்கி இக்காலத்தும் நடந்துவருகின்றன. விக்கிரமாதித்த சகாப்தம் நருமதைக்கு வடக்கிலிருக்கும் பிரதேசங்களிலும், சாலிவாகன சகாப்தம் நருமதைக்குத் தெற்கிலிருக்கும் தேசங்களிலும் அனுஷ்டானத்தில் இருந்து வருகின்றது.

இப்பட்டினமானது சிப்பிரா நதியின் இடதுகரையில் அனேகம் அழகிய ஸ்நானகட்டங்களோடும், பெருத்த சீமான்களுடைய மாளிகைகளோடும், அதிரமணியமான இயற்கைக் கண்காட்சியோடும் அமைந்திருக்கின்றது. இதன் தீரத்தில், பிரசித்திபெற்ற 12 ஜோதிலிங்கங்களுள் ஒன்றான மகாகாளேசுவரர் கோவிலும், அன்னபூரணியம்மன் கோவிலும், ஸ்ரீ ஓங்காரேசுவரர் கோவிலும் இருக்கின்றன. நகரத்தின் மத்தியில் இராதாகிருஷ்ணர் கோவில் வெகு அழகாக அமைந்திருக்கின்றது.

ஊருக்குச் சுமார் ஒருமைல் தூரத்தில் மாள்வா என்னும் புராதனப்பட்டினம் இருக்கின்றது. அதைச் சுற்றிலும் விக்கிரமாதித்தனால் கட்டப்பட்ட கோட்டையின் சின்னங்கள் பல இருக்கின்றன. அக்கோட்டைவாயிலின் அருகில் பத்திரகாளியென்றும் ஓங்காளியென்றும் சொல்லப்படும் காளிகாதேவியின் கோவில் இருக்கின்றது. இவ்வம்மனைப்பற்றிய சரித்திரம் இரண்டுவகையாகச் சொல்லப்படுகின்றன.

முதலாவது சரித்திரம்:— ஆதிகாலத்தில் தேவகியின்வயிற்றில் எட்டாவது குழந்தையாகப் பிறந்த கிருஷ்ணபரமாத்மாவானவர்

தம்தந்தையாரான வசுதேவரைநோக்கி அக்கரையிலுள்ள கோகுலத்தில் நந்தகோபன்வீட்டில் யசோதையம்மையாரிடம் தம்மைத் தூக்கிச்சென்று வளர்த்திவிட்டு, அவருக்கு அப்பொழுது பிறந்திருந்தபெண்குழந்தையை எடுத்துவந்து தம் தாயாரிடம்போடும்படிச் சொல்லினர். வசுதேவரும் அவ்வாறே செய்தனர். தேவகியம்மைக்கு எட்டாவது குழந்தை பிறந்ததெனக் கேள்வியுற்ற கம்சனுனவன் தேவகியம்மை அடைபட்டிருந்த சிறைச்சாலைக்கு வந்து, அப்பெண்குழந்தையைக் கேட்டுவாங்கி, அதைக்கொல்லும் எண்ணத்துடன் ஆகாயத்தில் எறிந்து தன் வாளையேந்தினன். அச்சமயத்தில் ஆகாயத்தில் எறியப்பட்ட குழந்தை ஆகாயமார்க்கத்திற் கிளம்பி, எட்டுக்கைகளோடு விளங்கி, "அடா கம்சா! என்னைஏன் வீணுகக்கொல்ல நினைத்தாய். உன்னை முற்பிறப்பில் கொன்ற திருமால் இப்பிறப்பிலும் உன்னைக்கொல்வதற்காக வேறு இடத்தில் வளருகின்ருர்" எனச்சொல்லி மறைந்து, இந்த உஜ்ஜயினி பட்டினம் வந்து சேர்ந்து காளிரூபங் கொண்டுறைந்தது.

இரண்டாவது சரித்திரம்:—ஆதிகாலத்தில் இலங்கை மன்னனுகிய இராவணன் திக்விஜயஞ்செய்து, குபேரனை வென்று, அவனிடமிருந்த புஷ்பக விமானத்தைக் கைப்பற்றி, அதிலேறிக்கொண்டு கைலைக்கு நேராகச் செல்ல, அங்கு நந்தியெம்பெருமானுல் புஷ்பகம் தடைபட்டு நின்றதைக்கண்ட இராவணன் சீற்றங்கொண்டு, கைலையங்கிரியை வேரோடு பறிக்க முயல, அதைக் கண்ட சிவபெருமான் தம் இடதுகாற் பெருவிரலால் அம்மலையை அழுத்தி, இராவணனையும் அதன்கீழ் அகப்பட்டு அவதியுறும்படிச்செய்தனர். அங்கிருந்தபடி சாமகானஞ் செய்து சிவபிரானை மகிழ்விக்க, சிவபிரானும் மகிழ்ந்து, அவன் தனக்கு முன் செய்த தீங்கினையும் மறந்து, அவன் கேட்டதைக் கொடுப்பதாக வரமளித்தனர். அவ்வரம் பெற்ற அரக்கன் தன் இராக்கத குணமேலீட்டினுல், சிவபிரானை நோக்கி, அவர் மனைவியாகிய பார்வதி தேவியாரைக் கொடுக்கும்படி வேண்டியதாகவும், சிவபிரானும் அவன் கேட்டவாறு அவனிடம் உமாதேவியை ஒப்படைக்க, அதைக் கண்டு மனம்பொருத தேவர்கள் மகாவிஷ்ணுவினிடம் சென்று முறையிட, அவரும் இராவணன்முன் ஓர் பிராமணவுருக்கொண்டு சென்று, அவனை நோக்கி, அவன் தூக்கிச்செல்லும் கோர ரூப

முடைய ஸ்திரீ யார் என்று கேட்க, அவன் அவ்வுரையைக்கேட்டு வியப்படைந்து, தன் தோண்மேலிருக்கும் தேவியை நோக்கினன். அச்சமயத்தில் பராசத்தியானவள், அஷ்ட புஜங்களுடனும், கோரைப்பல்லுடனும், வெளி நீட்டின நாக்குடனும் அதிபயங்கரமான ரூபத்தோடுகூடிய பத்திரகாளியாய்த் தோன்றினள். உடனே அவன் அவ்வம்மையை அந்த இடத்திலேயேவிட்டு, மீண்டும் கைலைக்குச்சென்று, ஆத்மலிங்கத்தைக் கேட்டு வாங்கிச் சென்றனன். அவ்வாறு இராவணன் கைலையினின்று கொண்டு வந்து விடப்பட்ட பத்திரகாளியம்மையே இங்குறையும் காளிகா தேவி என்று சொல்லிக்கொள்ளுகின்றனர்.

பத்திரகாளி தேவியார் இப்புண்ணிய தலத்தைத் தம் உறைவிடமாகக்கொண்டதன் மூலகாரணம் எதுவாயினும், இவர் மகா வரப்பிரசாதி என்பதும், விக்கிரமாதித்தனோடு நேரிற் பேசிக் கொண்டிருந்த பிரத்தியட்ச தெய்வமாக விளங்கிவந்தனர் என்பதும் மறுக்கத்தகாத விஷயங்கள்.

இந்த தேவியாரின் உதவியினால் விக்கிரமாதித்தன் தேவலோகம் சென்று, தேவேந்திரனுக்கு உதவிபுரிந்து, அவனிடம் பரிசாகப்பெற்ற 32 பதுமைகளும் 32 படிகளும் உள்ள ஓர் தெய்வீக சிம்மாசனத்திலிருந்து செங்கோல் செலுத்தினன் என்பதும், விக்கிரமாதித்தன் இறந்ததும் அச்சிம்மாசனம் பூமிக்குட் சென்று மறைய, அப்பக்கம் வேட்டையாடச் சென்ற போஜ மகாராஜன், அச்சிம்மாசனம் புதைபட்டிருக்கும் மண்ணிற் கிருந்த அபூர்வசக்தியை, அவ்விடத்தில் பயிர் செய்யப்பட்டிருந்த கம்பங்கொல்லையைக் காத்திருந்த சிறுவர்களாலுணர்ந்து, அச்சிம்மாசனத்தைத் தோண்டியெடுத்து, அதன் மீதிருந்து அரசு புரிய முயன்றபோது, ஒவ்வோர் நாளும் ஒவ்வோர் பதுமையாக 32 பதுமைகளும், 32 நாட்களில், விக்கிரமாதித்தனுடைய அபூர்வமான பராக்கிரமச்செயல்களை போஜனுக்கறிவித்தான பிறகு, 33-ம் நாள் அச்சிம்மாசனம் ஆகாயமார்க்கமாகப் பறந்து மீண்டும் தேவலோகம் போய்ச் சேர்ந்தது என்பது புராணப்பிரசித்தம்.

விக்கிரமாதித்தன் தந்தையான சந்திர சருமருக்கு அந்தணப் பெண்பால் உதித்த வரருசியும், சூத்திரப் பெண்பாற் பிறந்த பர்த்துருஹரியும், காதந்திரம், கலாயம் என்னும் வடமொழி இலக்கணங்களையும், வாக்யப்ரதீபம் என்னும் வியாகரணத்தையும்,

ராஹட காவியம் என்னும் காவியத்தையும், நீதி சதகம், சிருங்கார சதகம், வைராக்கிய சதகம் என்னும் மூன்று சதகங்கள் அடங்கிய சுபாஷிதரத்நாவளி என்னும் மகாகிரந்தத்தையும் இயற்றி, மகாகவிகளாய் விளங்கினர். இவர்களைத்தவிர, வடமொழியில் கவிபாடுவதில் தமக்கு ஒப்பாரும், தம்மில் மிக்காருமின்றி விளங்கியவரும், சாகுந்தலம், விக்கிரமோர்வசீயம், இரகுவம்சம், குமார சம்பவம் முதலிய நாடககாவியங்களை இயற்றியவரும், கலைவாணியின் அம்சமே எனக்கருதப்பட்டவருமான காளிதாசமகாகவியும், கவிகளில் தண்டியேசிறந்தவன் என்று வாக்தேவியாராலேயே புகழப்பட்டவரும், தசகுமார சரிதம், காவியாதரிசம் முதலிய அருமையான நூல்களை இயற்றியவருமான தண்டிமகாகவியும், விதர்ப்ப தேசத்தில் காசிப க்ஷேத்திரத்தில் பிறந்து, போஜராஜ சபையில் ஸமஸ்கிருத பாஷையில் மகாகவியாய் விளங்கிய பவபூதி முதலியவர்களும் இருந்துப் புகழ்பெற்ற புண்ணிய ஸ்தலம் இதுவே.

இத்தகைய உலகப்பிரசித்திபெற்ற சக்கரவர்த்திகளும், கவீசுவரர்களும் இருந்து வாழ்ந்ததும், பிற்காலத்தில் அசோகா சக்கரவர்த்தியின் திக்விஜய ஜயபேரிகை முழங்கியதுமான இந்நகரம், கண்களில்லா மனிதனைப்போலவும், குழந்தைகளில்லா வீட்டைப்போலவும், சந்திரனில்லா வானம்போலவும், தாமரையில்லாத் தடாகம்போலவும் ஒளிமழுங்கி, தன் அபூர்வ தேஜஸை இழந்து, அமங்கலரூபந்தாங்கிப் பார்ப்போர் மனதைப் பரதவிக்கச்செய்கின்றது.

மேலும் துவாபரயுகத்தில், ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா, பலராமர், குசேல முனிவரென வழங்கும் சுதாமாதேவர் முதலியோர் * சாந்தீபமுனிவரிடத்தில் வித்தை பயின்ற ஸ்தலம் இதுவே.

* குறிப்பு:—கண்ணன், பலராமன், சுதாமா ஆகிய மூவரும் வித்தை பயின்று முடிந்தவுடன் தங்களிருப்பிடம் செல்ல நினைத்து, தங்கள் குருநாதனைப்பார்த்து குருதட்சிணை என்னவேண்டுமெனக் கேட்க, அவர் தம் மனைவியுடன் கலந்து யோசித்துச் சிலகாலத்திற்குமுன் முதலைவாய்க்கிரையான தம் புதல்வனை வரவழைத்துக் கொடுக்கவேண்டுமென வேண்ட, உடனே கண்ணனும் தன் அண்ணனுடன் தேரேறிக் கடலிற் சென்றுழக்கிப் பாஞ்சஜன்யன் என்னும் அசுரனைக்கொன்று, அவன்பாலிருந்த பாஞ்சஜன்யம் என்னும் சங்கத்தைக் கைப்பற்றிக்கொண்டு, யமலோகம் சென்று சங்கினைப்பூரித்து, யமனிடம் அச்சிறுவனைப் பெற்று முனிவரிடம் காணிக்கையாகக் கொடுத்துப் போந்தனர் என்று புராணவாயிலாய்த் தெரிகிறது.

சாந்தீபமுனிவர் ஆசிரமம் இருந்த இடத்தைக் காட்டுகின்றனர். ஆனால் இந்நகரில் மற்றப் புராதன அரசர்களின் ஆளுகையின் சின்னங்களின்றி எவ்வாறு அழிந்து போயினவோ, அவ்வாறே இம் முனிவர் ஆசிரமமிருந்த அடையாளம் யாதொன்றும் காண வில்லை. “ **காலாயதஸ்மைநம :** ” என்னும் ஆன்றோர் வாக்கு இப் பட்டினத்திற்கே முற்றும் பொருந்தும் என்பதில் ஐயமில்லை.

சிப்ரா நதியின் கரையில் இருக்கும் மகா காளேசுவரர் ஆல யத்தின் எதிரில் **கோடிதீர்த்தம்** என்னும் ஓர் புஷ்கரணி இருக்கின் றது. அதிலிருக்கும் ஜலமானது பச்சோந்தியைப்போல் சமயோ சிதமாக அனேகம் வர்ணங்களாக மாறுகின்றது. இது ஒரு விசே ஷமே இப்புண்ணிய தலத்தின் மகிமையை இனிது விளக்குகின்றது.

ஸ்ரீ வாதிராஜ முனிவரால் இயற்றப்பட்ட யசோதர **காவி யம்** என்னும் சிறந்த நூலில் **அசோகன், யசோதரன், யசோமதி** முதலிய மன்னர்கள் ஆண்டிருந்ததாகச் சொல்லப்படும் புண்ணிய ஸ்தலமும் இதுவே.

இத்தலத்தில் அனேகம் புராதனமான பெருங்கட்டிடங் களும், அகண்டு நீண்டிருக்கும் ஆவண வீதிகளும், நகருக்கு நடு நாயகமாய் விளங்கும் ஓர் சிறு குன்றும் நகரின் அழகை விருத்தி செய்கின்றன. வடநாட்டில் எங்கும் கிடைக்காத * புளி இங்குக் கிடைக்கின்றது.

இப்பட்டினத்தில் நடக்கும் திருவிழாக்களை அதிவிமரிசை யாகவும் விந்தையாகவும் நடத்துகின்றனர். உதாரணமாக நர சிம்மஜயந்தியன்று, நரசிம்ம மூர்த்தியைப்போலவும், இரணியகசிபு வைப்போலவும் இருவரை வேடந்தரிக்கச்செய்து, நாடகத்தைப் போல நடித்துக் காட்டுகின்றனர்.

பிரயாணிகள் தங்குவதற்காகப் பட்டினத்திற்குள்ளும், சிப்ரா நதிக்கரையிலும், அனேகம் தர்மசாலைகளும் மடங்களுமிருப்பி னும், ரெயில்வே ஸ்டேஷனுக்கருகில் இருக்கும் குவாலியர் மன்ன ரின் தர்மசாலையே மிகச் சிறந்தது. இது மிகப் பெரிதாகவும் அழ காகவும் கட்டப்பட்டுள்ளது. பார்வைக்குப் பாராளும் மன்னர்க

---

* **குறிப்பு :—நாம் யாத்திரை சென்றிருந்தபோது இத்தலத்திற்றான் புளியைக் கண்டுபிடித்து, 4-5 வீசையளவு வாங்கிவைத்துக்கொண்டோம். தென்னாட்டிலிருந்து யாத்திரை போவோர் இதை விசேஷமாகக் கவனித் தல் வேண்டும்.**

ளின் அரண்மனைபோலவே தோற்றுகிறது. பெரிதும் சிறிதுமாக அனேகம் அறைகள் இருக்கின்றன. ஒவ்வோர் அறைக்கும், மின் சாரவிளக்கு போடப்பட்டிருக்கிறது. ஸ்திரீபுருஷர்களுக்குத் தனித் தனியாக ஸ்நான அறைகளும், கக்கூஸ்களும் கட்டப்பட்டிருக்கின் றன. அங்கிருக்கும் குழாய்களில் ஜலம் தட்டின்றி வருவதால் ஜலக் கஷ்டம் சற்றேனும் இல்லை. தர்மசாலையின் கட்டிடத்திற் குள் ஓர் பெரிய மளிகைக்கடை இருப்பதால், யாத்ரீகர்கள் தங்க ளுக்கு வேண்டிய பொருள்களை வாங்குவதற்கு வெளியில் போய் அலையவேண்டியதில்லை. தர்மசாலையின் அதிகாரியும், சேவகர்க ளும் அந்தக் கட்டிடத்திலேயே ஓர் பாகத்தில் வசிப்பதால் யாத்ரீ கர்கள் எந்நேரத்திலும் போய்த் தங்கலாம். யாத்ரீகர்களுக்கு வேண்டிய பாத்திரங்கள் தர்மசாலையில் கிடைக்கின்றன. சுருங்கச் சொல்லின், இவ்வளவு வசதியான தருமசாலை இந்தியாவிலேயே வேறெங்கும் கிடையாது என்று நிச்சயமாய்ச் சொல்லலாம். இத் தலத்திலிருந்து ஹிந்திபாஷை ஆரம்பித்து விடுகின்றது. இந்தோ ருடன் மகாராஷ்டிர பாஷை மறைந்துவிடுகின்றது.

வடநாட்டிலுள்ள மற்ற ஸ்தலங்களைப்போல் இங்கு பண் டாக்களின் உபத்திரவம் அதிகமில்லை. அவர்களாக நம்மைத் தேடிப் பிடித்து உபத்திரவிப்பதில்லை. நாமாக அவர்களைத் தேடிப் பிடித்து நம்முடைய காரியங்களைச் செய்துகொள்ளவேண்டி நேரிடு கின்றது. சிப்ரா நதியின் ஸ்நானத்தையும், மகா காளேசுவரர், அன்னபூரணி, மகா காளி முதலியோருடைய திவ்விய தரிசன மும் செய்துகொண்டு, மீண்டும் ரெயில்வே ஸ்டேஷன் சென்று ரயிலேறி, நகதா (Nagda), ரட்லம் (Rutlam), கோத்ரா (Godhra) ஜங்ஷன்கள் வழியாக டாக்கோர் என வழங்கும் டங்கபுர க்ஷேத் திரம் செல்லல்வேண்டும். நகதாவிலும் கோத்ராவிலும் வண்டி மாற்ற நேரிடும். டாக்கோர் போகும் முன், வழியிலிருக்கும் துவா (Tuwa) என்னும் ஸ்டேஷனில் இறங்கி அருகில் இருக்கும் அற்புதமான உஷ்ண நீர்ச்சுனைகளைப் பார்த்துச் செல்லலாம்.

## துவா (Tuwa).

இது கோத்ரா—ஆநந்த் (Anand) கிளைப்பாதையில் கோத்ரா ஜங்ஷனிலிருந்து 9 மைல் தூரத்தில் இருக்கும் ஓர் ரெயில்வே ஸ்டேஷன். உஜ்ஜயின் ஸ்டேஷனிலிருந்து நகதா ஜங்ஷன் 34

மைல். நகதாவிலிருந்து கோத்ரா ஜங்ஷன் 142 மைல். ஆகவே உஜ்ஜயினிலிருந்து துவா 185 மைல். ஊர் சிற்றூராதலாலும் கடை கடைத் தெருக்கள் அருகில் இல்லாமையாலும், இங்குப் போவோர் தங்களுக்கு வேண்டிய எல்லாப் பொருள்களையும் குறைவின்றி வாங்கிக்கொண்டு போகவேண்டும். ஸ்டேஷனுக்குப் பக்கத்தில் ஓர் சிறு தர்மசாலை இருக்கின்றது. * அதைச் சுத்தமாக வைத்திருப்பாரின்றி அசுத்தமாய்க் கிடக்கின்றது. ஸ்டேஷனுக்குத் தென்கிழக்கில் சுமார் 2 பர்லாங்கு தூரத்தில் ஓர் சிறு குளம்போன்ற பள்ளம் இருக்கின்றது. அதன் விஸ்தீரணம் சுமார் 50 அடிச்சதுரமிருக்கலாம். அதைச்சுற்றிலும் இருக்கும் பூமி கரடு முரடாகவும், கற்கள் செடி கொடிகள் நிறைந்து உறுதியாகவும் இருப்பினும், அந்தப் பள்ளமானது ஊற்றுக்கண்கள் நிறைந்த மணற்பாங்கான சதுப்பு நிலத்தை ஒத்திருக்கின்றது. நம் தென்னாட்டிலுள்ள காவிரி, வைகை முதலிய ஆறுகளில் நீரோட்டத்திற்கருகில் கையால் தோண்டினால் எவ்வாறு ஜலம் ஊறுகின்றதோ, அவ்வாறே இப்பள்ளத்திலும் கையால் மணலைத் தோண்டினால் ஜலம் ஊறுகின்றது. ஆனால் ஓரிடத்தில் கையினால் தொடமுடியாத அளவு உஷ்ணமுள்ள வெந்நீரும், அதற்கருகிலேயே மற்றோரிடத்தில் சாதாரணமாகப் பொறுத்துக்கொள்ளக் கூடிய அளவு உஷ்ணமுள்ள நீரும், மற்றோரிடத்தில் உஷ்ணமும் குளிர்ச்சியுமின்றி நடுத்தரமான நீரும், மற்றோரிடத்தில் குளிர்ந்திருக்கும் தண்ணீரும் ஊறுகின்றது. இத்தகைய அதிசயமான வேறுபாடுகள் ஒன்று அல்லது இரண்டு அடி தூரத்திற்குள் தென்படுகின்றன. அப்பள்ளத்தின் நடுவில் செங்கல் சுண்ணாம்பினால் நான்குதொட்டிகள் கட்டிவைத்திருக்கின்றனர். அந்தத் தொட்டிகளுக்கிடையில் உள்ளது ஒரு செங்கல் முறையுள்ள முக்காலடிச் சுவரேயாயினும், நான்கு தொட்டிகளிலும் நான்கு விதமான நீர் நிறைந்திருக்கின்றது. இயற்கை அமைப்பில் இத்தகைய அபூர்வமான வேறுபாடுகள் (Phenomena) இருப்பது பார்க்கத் தகுந்தது. ஆனால் இவ்வரிய தலத்தைப் போற்றுவாரின்றிப் பாழடைந்திருக்கின்றது.

* குறிப்பு :—நாம் இங்கு சென்றிருந்தபோது இந்த தர்மசாலையில் இருக்க மனங்கொள்ளாமல், ரெயில்வே ஸ்டேஷனிலிருக்கும் ஓர் பெரிய வேப்பமரத்தின் நிழலில் தங்கியிருந்து சமைத்துச் சாப்பிட்டோம்.

அதன் அருகில் இருக்கும் சிவன் கோவிலும் இடிந்துபோய், செடிகொடிகளால் மூடப்பட்டிருக்கின்றது. வேறெங்கும் காண்டற்கரிய இவ்வரிய நீர்த் தொட்டிகளில் ஜனங்கள் இஷ்டம்போல் அழுக்குத் துணிகளையும் அசுத்தமான வஸ்துக்களையும் போட்டுக் கெடுதி செய்கின்றனர். காருணியம் நிறைந்த கவர்ன்மெண்டாராவது, அங்குள்ள ஜில்லா தாலுக்கா நாட்டாண்மைக் கழகத்தாராவது (The District and Taluk Boards) இதைக் காவல் போட்டுப் பாதுகாத்து வருதல் நலம். மீண்டும் ரயிலேறித் துவாவிலிருந்து 21 மைலிலும், கோத்ராவிலிருந்து 30 மைலிலும் உள்ள டாக்கோர் (Dakhore) போதல் அவசியம்.




1 நீர் தொட்டியில் கையிடக்கூடாதவளவு உஷ்ணமான வெந்நீரும், 2 நீர் தொட்டியில் சாதாரணமாக ஜனங்கள் உபயோகிக்கிறவளவு உஷ்ணமுள்ள ஜலமும், 3 நீர் தொட்டியில் உஷ்ணமும் குளிர்ச்சியும் சமமாக விருக்கும் நீரும், 4 நீர் தொட்டியில் குளிர்ந்த தண்ணீரும் நிறைந்திருக்கின்றது.

# அத்தியாயம். 9.

நெற்றிமேல் கண்ணுனும் நிறைமொழிவாய்
நான்முகனும் நீண்ட நால்வாய்
ஒற்றைக்கை வெண்பகட்டி னொருவனையும்
உள்ளிட்ட அமர ரோடும்
வெற்றிப்போர்க் கடலரையன் விழுங்காமல்
தான்விழுங்கி உய்யக் கொண்ட
கொற்றப்போ ராழியான் குணம்பரவாச்
சிறுதொண்டர் கொடிய வாறே!

(பெரிய திருமொழி 11-ம் பத்து 6-ம் திருமொழி)

தந்தைமன முந்துயர் நந்தவிருள்
வந்தவிறல் நந்தன் மதலை
எந்தையிவ னென்றமரர் கந்தமலர்
கொண்டுதொழ நின்ற நகர்தான்
மந்தமுழ வோசைமழை யாகவெழு
கார்மயில்க ளாடு பொழில்சூழ்
நந்திபணி செய்தநகர் டங்கபுர
விண்ணகரம் நண்ணு மனமே.

(பெரிய திருமொழி 5-ம் பத்து 10-ம் திருமொழி)

## டங்கபுரம்; தாக்கோர் (Dakhore).

இது இப்பங்களிலுள்ள ஓர் பிரபலமான கிருஷ்ண க்ஷேத்திரம். நம் தென்னுட்டிலுள்ள * உடுப்பிக்கு ஈடாகச் சொல்லலாம். விஜயசிம்மராமதாசர் என்னும் பக்தரின் வேண்டுகோளின்படியும், டங்கமகரிஷிக்குக் கொடுத்திருந்த வரத்தை நிறைவேற்றும் பொருட்டும், துவாரகாபதியே தம் இருப்பிடமாகிய துவாரகையைவிட்டு, இங்குவந்து கோவில்கொண்டுறைவதாகச் சொல்லிக்கொள்ளுகின்றனர்.

---

*குறிப்பு:—இத்தலத்தைப்பற்றிய முழுவிவரமும் இப்புத்தகம் முதற்பாகம் 95 முதல் 120 வரை பக்கங்களில் காணலாம்.

## டங்கமுனிவர் வரம் பெற்றது.

டங்கபுரம் என்றும் டாக்கோர் என்றும் வழங்கும் இத்தலத்தெல்லையில் ஆதிகாலத்தில், ஜிதேந்திரியரும் சுசீலருமான டங்க மகரிஷியானவர் 12 வருஷ காலம் ஊணுறக்கமின்றி சிவபிரானை நோக்கிக் கடுந்தவம் புரிந்தனர். அவர் தவத்திற்கிரங்கி, அடல் விடையூர்தியும் அவர்முன்தோன்றி, "உமக்கு வேண்டுவதென்ன?" எனக் கேட்டருளினர். பார்வதி சமேதராய், ரிஷபாரூடராய்த் தம்முன் தோன்றின தாணுவைப் பார்த்து ஆனந்தங்கொண்ட டங்கமுனிவர், அவர்முன் வேரற்ற மரம்போல் வீழ்ந்து நமஸ்கரித்து, அநேகவிதமாக ஸ்தோத்திரம் செய்து, கலியுகத்தில் பிறந்து நற்கதியடைய வழி தெரியாது விழிக்க இருக்கும் ஜீவ கோடிகள் எளிதில் உய்ந்துக் கடைத்தேறுமாறு, அத்தலத்தில் நிரந்தரவாசம் செய்து அடியார்களை உய்விக்கும்படி வேண்டினர். வேண்டுவார் வேண்டுவதை வேண்டுங்காலத்தில் வேண்டுமிடத்தில் வேண்டுமளவு ஈயும் கருணாமூர்த்தியாகிய கைலாசபதியானவர், அம்முனிவர் வேண்டுகோட் கிணங்கி அத்தலத்திலேயே டங்கேசுவரர் என்னும் திருநாமத்தோடு இலிங்கரூபங் கொண்டுறையலாயினர். இஃதிங்ஙனமாக, அர்ச்சுனனுக்குப் பௌத்திரனும், அபிமன்யுவின் புத்திரனும், ஜனமேஜய மன்னனின் பிதாவுமான பரிட்சித்துவின் உபநயன மகோற்சவத்தைக் கண்டு களிக்க அஸ்தினபுரம் சென்ற கண்ணபிரான் துவாரகைக்குத் திரும்புங்கால் பீமசேனனையும் தம்மோடு அழைத்துவந்தனர். அவர்களிருவரும் இத்தலத்தருகில் வந்தபோது, பீமசேனன் தாக விடாயினால் பீடிக்கப்பட்டு, கிருஷ்ண பரமாத்மாவை ஜலம் இருக்கும் இடத்தைக் காட்டும்படிக் கேட்டனன். அவர் அவனை டங்க முனிவர் ஆசிரமத்தினருகில் அழைத்துச் சென்று, அங்குள்ள ஓர் சிறு கூபத்தைக் காட்டினர். அதைக் கண்ட பீமசேனன், அளவற்ற ஆனந்தங்கொண்டு, தென் மதுரையில் சோமசுந்தரக் கடவுள் வரவழைத்த அன்னக்குழியிலுள்ள அன்னத்தையெல்லாம் உண்ட குண்டோதரனுக்குண்டான தாகத்தைத் தணிக்க அதே சொக்கலிங்கக் கடவுளால் வரவழைக்கப்பட்ட, சிவகங்கை, சிவஞானம், வேகவதி, கிருதமாலை எனப்பல திருநாமம் பூண்ட வைகைநதியைக்கண்டதும், அக்குண்டன் எவ்வாறு

* அந்நதியின் நடுவில் நின்றுகொண்டு, இருகரைகளுக்கும் தன் பெருங்குறுங் கைகளை நீட்டி, ஆற்றின் நீரைத் தேக்கி, வைகை நதியின் ஜலம் முழுவதையும், அதிலுள்ள அனேகங் கோடி மீன் முதலிய உயிர்ப்பிராணிகளுடன் கடலுண்ணு மழையும் நாணும் படி, தன் வாயாகிய பெரும்புழையின் உள்ளிட்டடைத்தனனோ, அவ்வாறே பீமசேனனும் அச்சிறு கூபத்திலுள்ள ஜலம் முழுவதையும் பருகினன். அப்படியும் அவன் தாகம் தணியவில்லை. ஆதலின் அவன் அக்கூபத்தைத் தன் கதையாற் புடைத்து, அதைப் பெருந் தடாகமாக்கித் தன் அடங்காத தாகத்தை அடக்கவேண்டியவளவு நீரைப்பருகி விடுத்தனன். கதையினுற் புடைத்த சத்தம் கேட்ட டங்க முனிவர் அவ்விடம் வந்து, அங்கிருந்த கிருஷ்ண பரமாத்மாவைக் கண்டு நமஸ்கரித்து எழுந்து கைகூப்பிக்கொண்டு, "ஹே புருஷோத்தமா! நீர் சர்வஜகத்தையும் இரட்சிக்கக்கூடிய சர்வேசுவரனுயிருந்தும், உமது மாய விளையாட்டினுல் மனிதரூபங் கொண்டு, இந்த உலக முழுவதையும் மோஹிதமாக்குகின்றீர். அடியேன்மீது கிருபைகூர்ந்து என் ஆசிரமம் வந்து ஒரு நாளாவது தங்கியிருந்து போக அனுக்கிரகிக்க வேண்டும்." என்று வேண்டிக்கொண்டனர். அதைக்கேட்ட கண்ணபிரான் அம் முனிவரை நோக்கி, "ஹே! வேதங்களின் கரைகண்ட விப்பிரோத்தமரே! உமது ஆசிரமத்தில் ஒரு நாள் தங்கினுல் கலி தீருமா? கோரமான கலியுகத்தில் அபூர்ண அறிவையுடைய ஜீவகோடிகள் உய்தற்பொருட்டு நாம் இங்கு வந்து அநேக வருஷ காலம் வசிப்போம். அச்சமயத்தில் வனமாயிருக்கும் இந்த புண்ணிய ஸ்தலமானது ஓர் பெரும் நகரமாக விளங்கும்." என வாக்களித்தனர். அச்சமயத்தில் அங்கு வந்த டங்கேசுவரரும் ருக்குமணி வல்லபனைக் கண்டு பிரணும்செய்து, "ஹே பகவான்! தாமே ஜகத்ரட்சகர். தாமே எல்லா தேகதாரி ஜீவர்களிடமும் அந்தர்யாமியாய் விளங்குகின்றீர். தாமும் அனேகவித சரீரங்க

---

* குறிப்பு :—

"அடுத்தா னதி யின்னிடை புக்கிருந் தாற்ற லோடும்
எடுத்தான் குறுங் கையிரண் டுங்கரை யேற நீட்டித்
தடுத்தான் மலைபோ னிமிர் தன்புனல் வாயங் காந்து
மடுத்தான் விடாயுங் கட லுண்ணு மழையு நாண"

என்னும் திருவிளையாட்டற் புராணச் செய்யுளை ஒப்பிடுக.

ளைக்கொண்டு நானாவித லீலைகளை நடாத்தி எங்களையும் களிப்பித்துத் தாமும் களிக்கின்றீர். தாம் அவசியம் இத்தலம் வந்துறைந்து, கலியுகத்தில் கண்ணிழந்து வருந்தி யுழலும் ஜீவகோடிகளைக் காத்து இரட்சிக்கவேண்டும்." என வேண்டி நின்றனர். துவாரகா நாதனும் "ததாஸ்து" என மொழிந்து, பீமசேனனையும் உடன் கொண்டு துவாரகையை நோக்கிச் சென்றனர்.

## கண்ணபிரான் டங்கபுரம் வந்து சேர்ந்தது.

கலியுகவாரம்பத்தில் க்ஷத்திரியகுலத்திலுதித்த விஜயசிம்மர் என்பார் தம் தர்மபத்தினியான கங்காபாயி யம்மையாருடன், டங்கபுரமென்னுமித்தலத்தில் சுசீலராயும், ஜிதேந்திரியராயும், ஸ்ரீ ஹரியினுடைய அகணிதகுண விசேஷங்களிலும், நாமசங்கீர்த்தனங்களிலும் ஆழ்ந்த அருமையான விஷ்ணுபக்தராயும் இருந்து வந்தனர். அவருடைய விசேஷமான இராம பக்தியினால், அவருக்கு இராமதாசர் என்னும் பேரும் விளங்கிற்று. அவர் சிறிது காலத்தில், யாத்ரீகர்களோடு துவாரகாபுரிக்குச் சென்று, அங்கு பக்தவத்ஸலனாய்ப் பரம தயாளுவாய்ப் பிரசன்னமாகி யிருக்கும் துவாரகாநாதனை தரிசித்து, தமக்கு அவர் நேரில் காட்சிகொடுத்து இரட்சிக்குமளவும், தாம் துவாரகாபுரி யாத்திரையை நிறுத்துவதில்லையெனத் தம்முள் உறுதிசெய்துகொண்டு, ஆண்டிற் கிருமுறை ஆண்டு சென்று ஐயனுக்குத் துளசிபூசை செய்து வந்தனர். இவ்வாறாக 83 வயது நிறைந்த தொண்டு கிழவராகியும், தாம் கைக்கொண்ட நியமத்தைக் கைவிடாது சுமார் 200 மைலுக்கு மேலிருக்கும் துவாரகாபுரிக்கு வருஷத்திற் கிருமுறை சென்று வரும் வழக்கத்தை நிறுத்தாது அனுஷ்டித்து வந்தனர். அவருடைய திடபக்தியைக் கண்டு மனமுருகிய கோபிகாரமண கோபால கிருஷ்ணமூர்த்தியானவர் அவர்முன் தோன்றி, "ஹே! இராமதாசரே! நீரே பாக்கியவான். நீரே புண்ணிய புருஷர். உமது பக்திவலையிற் கட்டுப்பட்டுவிட்டோம். ஆதலின் நீர் இனி இங்கு வந்து அவதியுறவேண்டியதில்லை. நாமே நீரிருக்குமிடம் வந்து வசிக்க நினைந்துள்ளோம். விரைவிற் சென்று ஓர் வண்டிகொணர்க." என்று அருளிச்செய்து மறைந்தனர். அவ் வற்புதக் காட்சியைக் கண்டும், அமிருதம்போன்ற மொழிகளைக் கேட்டும், விஜயசிம்மர் தம்மை மறந்து அவன் அருட்கடலிலாழ்ந்து எழு

ந்து தம் இருகரங்களையும் தலைமேற் கூப்பி நின்று, "ஹே! ஸ்ரீ துவாரகாதீசா; ஜகந்நிவாசா; ஹே ஸ்ரீநிவாசா; சுவயம்பிரகாசா; ஹே கோவர்த்தனோத்தாரகா! உமது இணையற்ற இணையடிப் பொற்பாத கமலங்களைச் சரணடைகின்றேன். பிறவிகளிற் சிறந்த மானிடப்பிறவி யெடுத்ததன் பலன் இன்றே கிட்டிற்று. நான் என்னிருப்பிடம் சென்று அதிசீக்கிரம் வண்டியுடன் திரும்புவேன்." எனச் சொல்லிப் பன்முறையும் அவர் திருப்பாதங்களில் வீழ்ந்து வணங்கி, தம்முடைய முயற்சியின்றித் தமக்குக்கிடைத்த விசேஷ உற்சாக பலத்தோடு வீடு சென்று, தம் பத்தினியிடம் நடந்ததை நவின்று களிக்கடலிலாழ்ந்தனர்.

அதன்பிறகு தம்முடைய கிராமத்தில் வண்டிமாடுகள் வைத்திருப்பவர்களிடம் சென்றுத் தம்முடைய இல்லத்திலுள்ள ஆடையாபரணாதிகள் முதலியவை எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு, துவாரகை வரையில் போய் வருவதற்கு ஓர் வண்டியும், அதற்கு வேண்டிய மாடுகளையும் கொடுத்துதவும்படி வேண்டிக்கொண்டனர். ஒருவரும் அவர் வேண்டுகோளுக்கு இணங்கவில்லையாயினும், அவர்களில் ஒருவன் தன்னிடம் ஒரு பழைய வண்டியும், இரண்டு கிழ எருதுகளும் இருப்பதாகவும், வேண்டுமாயின் கொண்டுபோகலாமென்றும், அவைகளுக்குத் தகுந்தபடி தீனிபோட்டுக் காப்பாற்றவேண்டும் என்றும் சொன்னதைக் கேட்ட விஜயசிம்மர் ஆனந்தங்கொண்டு, அவனில்லம் சென்று அங்கிருந்த பழ வண்டியையும், கிழ மாடுகளையும் கொண்டுவந்து, தன் மனைவியிடம் சொல்லிக்கொண்டு, துவாரகையை நோக்கிப் புறப்பட்டனர். வண்டியையும் மாடுகளையும் வழியிற் கண்டவர்கள், கிழக் கழுதையைச் சந்தைக்கு ஓட்டிச் சென்ற கிழவனையும் பையனையும் பார்த்துப் பலவாறு பேசியதுபோல், விஜயசிம்மரை நோக்கி "மாடுகளிரண்டையும் வண்டியிலேற்றிவிட்டு, நீர் வண்டியை இழுத்துச் செல்லலாகாதா!" எனப் பரிகசிக்கலாயினர். அவர் அதையெல்லாம் பொருட்படுத்தாது, துவாரகாநாதனையே முழுதும் நம்பினவராய் வண்டியை ஓட்டிச் சென்றனர். எருதுகளும் சற்றும் களைக்காமல் அதிவேகமாய் வண்டியை இழுத்துச் சென்றன.

ஆதிகாலத்தில், தண்டகாரணியப் பிரதேசத்தில் *ஜனஸ்தான க்ஷேத்திரத்தில் ஸ்ரீகண்டர், சோமேசர் என்னும் திருநாமங்

---

குறிப்பு:—ஜனஸ்தானம்—நாசிக் பஞ்சவடி.

கொண்ட இரண்டு வைதீக பிராமணர்கள் இருந்தனர். அவர்க் ளிருவரும் காலையில் கௌதமியில் ஸ்நானம்செய்து நித்திய கர்மானுஷ்டானங்களை முடிப்பதும், பகலில் பஞ்சவடியிலுள்ள கோதண்டராமர் ஆலயத்தில் வேதமோதுவதுமே தங்கள் நித்தியக்கடனாக நினைத்துச் செய்துவந்தனர். அதேகாலத்தில் நீலகண்டர் என்னும் ஓர் விப்பிரோத்தமர் ஸ்ரீராமர் கோவிலில் தினந்தோறும் புராணப்பிரசங்கம் செய்துவந்தனர். அப்படியிருக்க, நீலகண்டர் ஓர்நாள் ஓர் சுருதியைப்படித்துப் பொருள் சொல்லத் தொடங்கினர். அதை அருகிலிருந்து கேட்ட ஸ்ரீகண்டரும் சோமேசரும், சுருதியைப் படித்ததில் ஓர்மொழி விட்டுப் போயிற்று என்று எடுத்துக்காட்டினர். நீலகண்டர் தாம் செய்த பிழையை ஒப்புக்கொள்ளாது, சுருதியும் பொருளுக்கேற்ப வேறுபடும் என வாதாடினர். ஸ்ரீகண்டரும் சோமேசரும், வேதம் அநாதியென்றும், அபௌருஷேயமானதென்றும், எப்புருஷனும் அதை எள்ளளவும் மாற்றவல்லான் அல்லன் என்றும், வேதத்தைப் பொருளுக்கேற்ப மாற்ற நினைப்பவன் விப்பிரனாகமாட்டான் என்றும் தர்க்கித்தனர். அதைக்கேட்ட நீலகண்டர், அவ்விரு வேதியர்களையும் நோக்கி, நீங்கள் வேதத்தின்பொருளை அறிந்து கொள்ளாது வேதத்தைப் படித்திருக்கின்றவர்களாதலின், "நீங்களிருவரும் வண்டிபோகும் இடமும் வழியும் தெரியாது வண்டியை ஈர்த்துச்செல்லும் எருதுகளாய்ப் பிறக்கக்கடவீர்கள்." என்று கடுஞ்சாபமிட்டனர். அச்சாபத்தையேற்ற அந்தணரிருவரும் சினந்து, நீலகண்டரை விளித்து, "நீர் தானென்ற அகம்பாவ மேலீட்டினால் புராணப்பிரபுவான புருஷோத்தமனாலும் மாற்றத்தகாத வேதத்தை மாற்றத்துணிந்தீர். ஆதலின் தன் நாமத்தையே கா(க்)கா என்று ஓலமிட்டுக்கொண்டிருக்கும் காக்கையாகப் பிறந்து, தின்னத்தகாத வஸ்துக்களைத் தின்று திரிவீர்." என எதிர் சாபமீந்தனர். சற்று நேரத்தில் சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லியினின்றும் விமுக்தமடைந்த அம்மூவரும் கலந்து யோசித்துத் தங்களுடைய மதியீனத்தை நினைந்து வருந்தி, பிறகு நடக்கவிருப்பதைப்பற்றி நினைந்துத் தங்கள் தங்கள் சாபங்களின் கொடுமையைக் கூடியவரையில் குறைத்துக்கொள்ள வழிதேடினர். முதலிற் சாபமிட்ட நீலகண்டர் மற்ற இருவர்களையும் நோக்கி, "நீங்கள் இருவரும் எருதுகளாய்ப் பிறப்பினும், தூர்

பலமான எருதுகளாய்ப்பிறந்து, கடும்பாரமேற்றிய வண்டியை ஈர்த்துச்செல்ல நேராது, இறுதியில் எல்லாம்வல்ல இறைவன் பிரயாணத்திற்காகப் பயன்பட்டு முத்தியடைவீர்கள்." என மொழிந்தனர். ஸ்ரீகண்ட சோமேசரும் அதைக்கேட்டு மனமகிழ்ந்து, "நீர் காக்கை யுருவந்தாங்கிப் பிறப்பினும் கண்ணனுறையும் கடிநகரங்களொன்றினில் பிறந்து உயிர் வாழ்ந்திருந்து, இறுதியில் அக்கண்ணன் திருவருளால் எம்மோடு வைகுந்தஞ் சேர்வீர்." எனப்பகர்ந்தனர். அந்த ஸ்ரீகண்ட சோமேச எருதுகளே நம் விஜயசிம்மருக்குக் கிடைத்தவை.

ஓரடியும் எடுத்துவைக்க இயல்பில்லாத எருதுகளையும், அச்சு வேறு, ஆணி வேறு, கட்டைவேறு, கால் வேருக ஆடிக்கொண்டிருந்த பழைய வண்டியையும் பெற்ற விஜயசிம்மர் கண்ணன் திருவருளால் கடிதில் துவாரகைசேர்ந்து, அங்குள்ள அந்தணரில்லங்களுள் ஒன்றில் தங்கிக்கொண்டு, பரப்பிரமசொரூபியாகிய பார்த்தசாரதியை நாடோறும் சென்று வணங்கிவரலாயினர். அவரைக் கண்ட கோவிற்பூசை செய்வோர், சிறிது காலத்திற்குமுன் வந்து போனவர் மறுபடியும் வண்டியுடன்வந்து காத்திருக்கவேண்டிய காரணமென்னவென யோசித்து, ஒருவேளை கண்ணனைக் கவர்ந்து செல்ல வந்திருத்தல்கூடுமென யூகித்து, அந்நாள்முதல் கண்ணன் கோவிலின் திருவாயில்களை இருப்புக் கதவுகளால் திருக்காப்பிட்டுச் சிறந்த பூட்டுகளாற் பூட்டிக்கொண்டுச் செல்லலாயினர். அங்ஙனமிருக்க, ஓர்நாள் நள்ளிரவில் எம்பெருமான் விஜயசிம்மர்முன் தோன்றித் தாம் அவருடன் வரக்காத்திருப்பதாகவும், தம்மை வந்து எடுத்துச் செல்லும்படிக்கும் சொல்லிச் சென்றனர். விஜயசிம்மரும் கண் விழித்துக்கொண்டு, கண்ணன் கோவிலுக்குக் கடுகிச் சென்று, அங்குத் தாளிட்டுப் பூட்டியிருந்த கதவுகளைத் தொடவே, முற்காலத்தில் தேவகியின் வயிற்றில் பிறந்த குழந்தையான கோபால கிருஷ்ணனை கோகுலத்திற்கு எடுத்துச்சென்ற வசுதேவருக்குச் சிறைச்சாலைக் கதவங்கள் எவ்வாறு ஒருவர் முயற்சியுமின்றித் திறந்துகொண்டு வழி விட்டனவோ, அவ்வாறே திருக்கோயிற்கதவங்கள் தாமாகவே திறந்துகொண்டன. விஜயசிம்மரும் அஞ்சாது உட்சென்று, அங்கிருந்த துவாரகாநாதமூர்த்தியை எடுத்துத் தன் அரையில் வைத்துக்கொண்டு சென்று, வண்டியில் வைத்து, வண்டியை ஓட்டிச்சென்ற

னர். நகரத்தின் எல்லையைக் கடந்து சென்றதும், முற்காலத்தில் விஜயனுக்குத் தேரோட்டிய விஜய சாரதியானவர் விஜய சிம்மருக்கும் சாரதியாக உடன்பட்டுத் தாம் அவ்வண்டியை அதிவேகமாக ஒட்டத்தொடங்கினர். தேவாதிதேவன் திருக்கரங்களின் ஸ்பரிசம் பெற்றதும் அக்காளைகளும் வாயுவேகமாய்ப் பறக்கலாயின. விஜயசிம்மரோ வண்டி எவ்விதம் போகிறது என்பதையும் அறியாது வண்டிக்குள் மூர்ச்சையாய் விழுந்து உறங்கலாயினர். வண்டியும் பொழுதுபுலருமுன் டங்கபுரத்திலிருந்து இரண்டு மைல் தூரத்திலுள்ள சீமலோஜம் என்னும் கிராமம் போய்ச் சேர்ந்தது. உடனே பகவான் விஜயசிம்மரிடம் வண்டியை ஒப்புவித்துத் தாம் உட்சென்று விக்கிரக ரூபமாயிருந்தனர். இராமதாஸரும் வண்டியை ஒட்டிக்கொண்டுபோய்த் தம் வீடு சேர்ந்தனர்.

அங்குத் தம் கணவர் வரவை எதிர்ப்பார்த்திருந்த கங்காபாயியானவர், தம் கணவர் துவாரகாபதியுடன் வந்துசேர்ந்தது கண்டு, ஆனந்தக்கடலிலாழ்ந்து, மெய்ம்மறந்து, மயிர்சிலிர்த்து, இருகைகூப்பிப் பன்முறையும் தம் கணவர் திருப்பாதங்களினும், எம்பெருமான் திருவடிகளினும் மாறிமாறி வீழ்ந்து வணங்கித் தம் இல்லத்தில் முன்னமேயே பெருக்கி மெழுகிச் சுத்தஞ்செய்து வைத்திருந்த ஓர் பாகத்தில் பிரபுவை ஏழச்செய்து, பலவித நைவேத்தியங்களைச்செய்து சமர்ப்பித்தும், திருத்துழாய் முதலிய பத்திரபுஷ்பாதிகளால் அருச்சித்தும், நித்திய பூசையை விதிவழுவாது நடத்திவந்தனர்.

இஃதிங்ஙனமாக, ஆங்கு துவரையம்பதியில் வழக்கப்படி பூசைசெய்யப்போன பூசுரர்கள் பூதரனைக்கோவிலிற் காணாது வருந்தி, விஜயசிம்மர் தங்கியிருந்த வீடுசென்று விசாரித்து, அவர் நள்ளிரவிலேயே நழுவி விட்டனரென்றறிந்துகொண்டு, அந்நாட்டையாளும் மன்னனிடம் சென்று நடந்ததை நவின்றனர். அது கேட்ட அரசன் அடங்கா முனிவுகொண்டு, அசுவாரூடர்களான அனேக வீரர்களை யனுப்பி, இராமதாசரையும் துவரேசரையும் கொண்டுவரும்படிக் கட்டளையிட்டனன். இராமதாசர் கொண்டுவந்திருந்த எருதுகளைப் பார்த்திருந்தோர் அவைகள் வண்டியை இழுத்துக்கொண்டு அரைமைல் தூரமும் போயிராவென நினைத்து அதிவேகமாய்ச் சென்றனர். அரைமைலன்றி ஐம்பதுமைல் போயும் வண்டிதென்படவில்லை. ஆயினும், டங்கபுர மார்க்கத்தைப்

பிடித்துப் பின்தொடர்ந்து சென்று 14-வது தினம் காலையில் சீமலோஜம் போய்ச்சேர்ந்தனர்.

இதற்குள்ளாக துவாரகாநாதன் டங்கபுரத்தில் வந்து வசிக்கின்றார் என்பதைக் கேள்வியுற்ற டங்கபுரவாசிகள் பலர் பலவாறு பேசலாயினர். டங்கமகாமுனிவரும் ஸ்ரீ டங்கேசுவரரும் உண்மையை அறிந்துகொண்டவர்களாய் இராக்காலங்களில் இரகசியமாய்வந்து துவாரகாபதியை தரிசனம் செய்துகொண்டிருந்தனர். இலட்சுமிபதியான துவாரகாநாதன் துவாரகையை விட்டு டங்கபுரம் சென்றனர் எனவறிந்த இலட்சுமி முதலிய சகல பரிவாரங்களும் டங்கபுரம்வந்து சேர்ந்தார்கள். கோமதியும் நதிரூபத்தை விட்டுத் தடாகரூபத்தை அவலம்பித்து, அங்கு உறையலாயினள். இலட்சுமி சமேதரான ஸ்ரீமந் நாராயணனே டங்கபுரத்தைத் தம் உறைவிடமாகக் கொண்டனரெனின், டங்கபுரகிராமத்தில் இலட்சுமியின் கடாட்சம் அதிகரித்து கிராமம் பெரும்பட்டினமாக மாறியது என்று இயம்பவும் வேண்டுமோ ! இளையவள் வந்ததும், மூத்தவள் விலகினாள். மிடியென்பது இடிவீழ்ந்திடிந்த வீட்டைப்போல் இருக்குமிடந் தெரியாது அடியோடு விலகிற்று.

துவாரகையிலிருந்து மன்னனும் அவன் சேனைகளும் டங்கபுரத்தைநோக்கி வருவதையறிந்த புருஷோத்தமன் விஜயசிம்மரை அருகிலழைத்து, "ஹே ! பக்த சிகாமணியே ! உன்னையும் எம்மையும் பிடித்து துவாரகைக்குக் கொண்டுபோக துவரையம்பதி மன்னனும், பூசைசெய்யும் வேதியர்களும் ஏராளமான சேனைகளோடு வருகின்றனர். நீ எம்மை யாருக்கும் தெரியாமல் கோமதிபுஷ்கரணியிற் போட்டுவிட்டு யுத்தத்திற்குச்சென்று, அங்கு உனக்காக வரும் விமானத்திலேறிக்கொண்டு வைகுண்டம் போய்ச்சேர். உன் மனைவி இங்கிருந்து என் ஊழியங்களைச் செய்யட்டும். மூன்று வருஷங்கள் கழித்து கங்காபாயியும் உன்னிருப்பிடம் வந்து சேர்வள்." எனச் சொல்லி மறைந்தனர். அதைச் செவியுற்ற இராமதாஸரும் தம் மனைவியை அழைத்து நடந்ததைச் சொல்லி அவளிடம் விடைபெற்றுக்கொண்டு, தாம் துவாரகாதீசனைத் தோளிற்றூக்கிச்சென்று கோமதியில் போட்டுவிட்டு துவாரகாவாசிகள் வருகையை எதிர்நோக்கி இருந்தனர். அச்சமயத்தில் அங்குவந்து சேர்ந்த துவாரகாவாசிகள் அவரைக்கண்டு கடுஞ்சினங்கொண்டு அவரை சூலத்தினாற் குத்திக்

கொன்றனர். விஜயசிம்மரும் ஊனுடம்பைவிட்டு வானுலகம் சென்று பரமபதத்தில் பரந்தாமன் திருவடி நீழலில் வசித்தனர். விஜயசிம்மர் இறந்தனரேயொழிய, அவர் சரீரத்திலிருந்து ஒரு சொட்டாவது உதிரம் வெளிவரவில்லை. அதைக்கண்ட துவாரகா வாசிகள் ஆச்சரியமடைந்து அவர் உண்மையான பக்தரென மெச்சிக் கொண்டாடினர். விஜயசிம்மர் இறந்ததைக் கேள்வி யுற்ற டங்கபுரத்தார் கங்காபாயியம்மைக்கு நடந்ததைத் தெரிவித்து, அவரையும் உடன்கொண்டு சென்று, விஜயசிம்மருக்குச் செய்யவேண்டிய ஈமக்கடன்களைச் செய்துமுடித்தனர். அச்சமயத்தில் கோமதிபுஷ்கரணியில் ஸ்நானம் செய்யப்போன கங்காபாயி அம்மையார் அந்த புஷ்கரணியின் அடியிற்கிடந்த துவாரகாநாதரையும், அவர் நெஞ்சிற்பட்டிருந்த காயத்திலிருந்து உதிரம் ஆறுய்ப் பெருகுவதையும் கண்டு மிகவும் மனம்வருந்திப் புலம்பலாயினர். அதைக்கண்ட கருணாநிதியாகிய கண்ணபிரான் அவரைத்தேற்றி வீட்டிற்கனுப்பினர்.

விஜயசிம்மரை வீடுபெறச்செய்த துவாரகாவாசிகள் டங்கபுரத்தினுள் நுழைந்து விஜயசிம்மர் வீடு தேடிச்சென்று, வீட்டை வளைந்துகொண்டு உட்புகுந்து சோதிக்கலாயினர். அது கண்ட கங்காபாயி யம்மையார், துவரை நாயகன் தம் நாயகனோடு வெளிச்சென்றவர் கோமதி புஷ்கரணியில் வசிக்கின்றனர் என்று உண்மையை ஒளியாதுரைத்தனர். அதைக்கேட்ட துவாரகா வாசிகள் களிகொண்டு கோமதி தீரம் சென்று, புஷ்கரணியின் ஜலம் முழுவதும் உதிரமயமா யிருப்பதைக்கண்டு வியந்து மயங்கிப் பின்னும் எவ்வகையாலாவது துவாரகாநாதனைத் தம் ஊருக்கு எடுத்துச் செல்லவேண்டுமெனத் தீர்மானித்து, அவர்களுள் வாலிபர்களும், சரீர திடகாத்திரர்களாகவும், தண்ணீரில் மூழ்கும் திறமையுடையவர்களுமான அனேகர் புஷ்கரணியில் மூழ்கி, பாற்கடல் மத்தியில் பன்னகசயனத்திற் பள்ளிகொள்ளும் பரமபுருஷன் அங்கு உதிரக்கடலின் அடியில் கற்களின்மேல் தாங்கள் விஜயசிம்மர் நெஞ்சிற் குத்தின குத்தைத் தம் நெஞ்சில் தாங்கினவராய் உருண்டு கிடப்பதை உணர்ந்தனர். அக்கணமே அவர்கள் எல்லோரும் ஒன்றுசேர்ந்து அம்மூர்த்தியை வெளியில் எடுக்க முயன்றும் பயன்படவில்லை. தாங்கள் பட்ட பெரும்பாடு வெறும் பாடாய் முடிந்ததைக்கண்ட வேதியர்கள், வேதநாயகனை வைகு

ண்டபதியை அங்குவிட்டுத் தாங்கள் மீளுவதில்லையென்னும் நியமத்தோடு உண்ணுவிரதம் பூண்டு கோமதி தீரத்திலேயே தங்கியிருந்தனர். அதைக்கண்ட டங்கபுர வாசிகளும்கங்காபாயியம்மையும் கவலைமிகுந்து, கண்ணனைத் துதிசெய்து காலங்கழித்தனர். இவ்வாறு சின்னுட்கள் சென்றபின் ஓரிரவில் எம்பெருமான்,

நீயும்பாங் கல்லைகாண் நெஞ்சமே நீளிரவும்
ஓயும் பொழுதின்றி யூழியாய் நீண்டதால்
காயும் கடுஞ்சிலையென் காகுத்தன் வாராஞல்
மாயும் வகையறியேன் வல்வினையேன் பெண்பிறந்தே.

பெண்பிறந்தா ரெய்தும் பெருந்துயர் காண்கிலேனென்று
ஒண்சுடரோன் வாரா தொளித்தானிம் மண்ணளந்த
கண்பெரிய செவ்வாயெங் காரேறு வாராஞல்
எண்பெரிய சிந்தைநோய் தீர்ப்பாரா ரென்னையே.

(திருவாய்மொழி).

என்று இடைவிடாது புலம்பிக்கொண்டிருந்த கங்காபாயியின் முன் தோன்றி, அவரைத்தேற்றி, அவரிடமிருந்த பழம் பட்சணங்களை ஆவலோடு வாங்கியுண்டு, கங்காபாயியம்மைக்குத் தம் தரிசனங்கொடுத்து அருள்புரியவேண்டுமென்னும் தம் கொடும் பசியைத் தீர்த்துக்கொண்டுப் பின்னும் அவ்வம்மையாரை நோக்கிச் சொல்லலாயினர். "ஹே பரமபக்த சிகாமணியே, முற்காலத்தில் நம் நண்பர் குசேலமகாமுனிவரின் தருமபத்தினியான சுசீலாதேவி பேரன்போடு கொடுத்தனுப்பின அவலைத் தின்று எவ்வாறு ஆனந்தமடைந்தோமோ, அவ்வாறே இன்று உன்னிடம் பெற்ற பட்சணங்களை உண்டு பரம சந்தோஷமடைகிறோம். துவாரகாவாசிகளான பிராமணர்களுக்காக நீ சற்றேனும் துக்கப்படவேண்டிய அவசியமில்லை. ஏனெனின், கலியுகத்திற்கு முன் அவர்கள் அனைவரும் நம்மிடம் அதிகமான அன்புகொண்டே இருந்தனர். நாமும் அவர்களை விட்டு அகல மனமில்லாதிருந்தனம். கலி பிறந்து அவர்களைக் களிகொள்ளச்செய்தபின், அவர்கள் கள்ளுண்ட பித்தர்கள் போலாகித் தங்கள் சுயநலத்தைக் கருதி, சுய தருமத்தைவிட்டு விலகி, மண் பெண் பொன்னென்னும் மூவாசையால் ஏவப்பட்டு நெறிபிறழ்ந்து நின்று கெட்டலைகின்றனர். வேதமோதும் தொழிலை விட்டு, சாதமேற்குந் தொழிலைக் கொண

டனர். சந்திசெய்யும் தொழிலை விட்டு, சந்திதோறும் திரிகின்ற னர். காயத்திரியைவிட்டு மாயத்திரியைக் கைக்கொண்டனர். ஆகவே, அவர்கள் பிறப்பால் அந்தணரே யொழிய, குணத்தா னும், கொள்கையானும் அந்தணர்களன்று. ஆதலின் நீ அவர் கள் பொருட்டுச் சற்றேனும் வருந்தற்க. வேண்டுமாயின் நாளைய தினம் நீ உன் கிராமத்தாரை அனுப்பி, அவர்களுக்கு வேண்டிய பொன் அளிப்பதாகச் சொல்லும்படி செய். அவர்கள் தங்கள் உண்மையான நிறத்தோடு வெளிவருவார்கள். அவர்களுக்கு என் ஆராதனையினால் கிடைக்கும் பொருளின் பொருட்டு என்னிடம் அன்புள்ளவர்களாக நடிக்கின்றார்களே தவிர, அவர்களுக்கு என் மேல் உண்மையில் பற்றில்லை என்பதை நீயே பிரத்தியட்சமாய்க் காண்பாய்.'' என்றுரைத்து மறைந்தனர். துவாரகா வாசிகளான வேதியர்கள் போடும் வெளிவேட படாடோபங்களையும், நடிக்கும் கபட நாடகத்தையும் அறியாத தூய சிந்தையோடு கூடிய கங்கா பாயியானவர், தாம் கண்டதும் கேட்டதும் கனவோ நனவோ எனச் சற்றுத் தயங்கிப்பின்னும் மனதை திடப்படுத்திக்கொண்டு, தம் ஊரிலுள்ள பெரியோர்களிடம் சென்று, கண்ணன் சொல்லிப் போனவாறு துவாரகாவாசிகளின் மனத் தூய்மையை ஆராயச் சொல்லினர். அவர்களும் அதைக் கேட்டு வியந்து, கோமதி தீரத் தில் பட்டினிகிடந்துப் பழிபோடும் பார்ப்பனர் முன் சென்று, "ஹே! வேதங்களின் கரைகண்ட விப்பிரோத்தமர்களே! துவாரகா நாதனுக்குத் தொண்டுபுரியும் பெரும் பாக்கியத் தைப் பெற்ற பெரியோர்களே! எங்கள் கிராமத்தின் எல்லை யில் இருந்துகொண்டு அன்னபானாதிகளின்றி இறக்கும் பழியை ஏன் வீணாக எங்கள் தலையில் சுமத்துகிறீர்கள். துவாரகாநாதனை இங்கு கொண்டுவந்தவரும் இறந்து போய்விட்டார். நீங்கள் இது வரையில் ஆராதித்து வந்த பரமபுருஷன் எங்கிருக்கின்றார் என் பதையும் நீங்கள் நன்கு அறிவீர்கள். அங்ஙனமிருக்க, நீங்கள் அவரை எடுத்துச்செல்ல முடியுமாயின் எடுத்துச்செல்லுங்கள். இன்றேல் உங்கள் ஊரை நோக்கி ஓட்டம் பிடியுங்கள். இஃதி ரண்டில் ஒன்று செய்வதே முறை.'' என மொழிந்தனர். அம் மொழிகளைக் கேட்ட அந்தணர்கள் யாதும் விடையளிக்கவிய லாது, சற்றே யோசித்து, "ஹே! டங்கபுரவாசிகளே! எக்கார ணம் பற்றியோ எங்களை இதுவரையில் அன்னமளித்து இரட்

சித்து வந்த ருக்குமணிபதியானவர் எங்கள் கிராமத்தையும்விட்டு, எங்களையும் அநாதைகளாக்கி இங்கு வந்து இவ்வுதிரப் புனலில் வீழ்ந்து கிடக்கின்றார். நாங்கள் ஊருக்குப்போய் என் செய்வோம். எவ்வாறு பிழைப்போம். ஆண்டிகளாகப் போய் எங்கள் அருமையான மனைவிமக்கள் முகங்களில் விழிப்பதைவிட இங்கு உயிர் விடுவதே நலமெனத் தீர்மானித்துள்ளோம்." என்றுகூறினர். அதைக் கேட்ட டங்கபுரவாசிகள், அவர்களைநோக்கி, "நீங்களும் உங்கள் மனைவிமக்களும் ஒருகவலையுமின்றி ஓராண்டளவு உயிர் வாழ்வதற்கு வேண்டிய அளவு பொன் கொடுக்கின்றோம். அதை எடுத்துச் செல்லுங்கள். அவ்வாண்டின்பின் உயிர்வாழ்வதற்கு வேண்டிய வழியை நீங்கள் தேடிக்கொள்ளலாம்." எனப்பகர்ந்தனர். "பணமெனின் பிணமும் வாய்திறக்கும்" என்பதற்கிணங்க, பொன்னெனும் மொழிகேட்ட அந்தணர்கள் துண்ணென வெழுந்து, "நாங்கள் ஓராண்டளவு உயிர் வாழ்வதற்குரிய பொன்னின் அளவு நீங்கள் எவ்விதம் அறிவீர்கள். கோமதியிற் கிடந்துறங்கும் கோபாலனை வெளியில் எடுத்து, அவர் நிறையளவு பொன்னீந்தால் நாங்கள் மனமகிழ்வோடு பெற்றுச்செல்வோம்." என விடை பகர்ந்தனர். துவாரகாவாசிகளில் அனேகர் கூடித் தங்களால் இயன்றவரை முயன்றும் வெளிவராத மாயவனைத் தாங்கள் வெளியிலெடுப்பது முடியாதகாரியமென்றும், அப்படி ஒருக்கால் எடுப்பினும், அகிலலோக ரட்சகனும்,மூவுலகிலும் காணப்படும் பொன்னையளிக்கும் பொன்னாகிய திருவுறை மறுமார்பனுமான தாமோதரனளவு நிறையுள்ள பொன் அவரிடத்தே இருக்குமன்றி, கேவலம் கிராமவாசிகளிடம் இருத்தலரிது என்றும் நினைந்து வருந்தி, நடந்ததை கங்காபாயியினிடம் நவின்றுச் சென்றனர். அது கேட்ட கங்காபாயியும் கவலை மேற்கொண்டு கருணாசாகரப் பிரபுவான கருங்கடல் வண்ணனைக் கமலக்கண்ணனைக் கருத்தினுன்னிக் காலங் கழித்தனர். கோமதிக்குள்ளிருந்த கோவிந்தன் அன்றிரவே அவர்முன் தோன்றி, "என்பால் ஓயாத அன்புடையார் யாவரினும் பேரன்புடைய பெண்கள் சிகாமணியே! வன்பென்பதெல்லா மறுத்தென்றூட் பூசிக்கும் அன்பென்பது இன்னதென்றறியாத இவ்வேதியர்களுக்காக நீ ஏன் வீணே வருந்துகின்றாய்? என்னைவிட்டுப் பொன்னைக்கொண்டேக விரும்பினோர் என்பாலன்புகொண்டோராவ தெங்ஙனம். உனக்கு என்

மீது உண்மையான பற்றுண்டு என்பதை யான் நன்கறிவேன். ஆதலின், நீ அதிகாலையிற் சென்று உன்னிடம் இருக்கும் பொன்னை வேதியர்கட்கீந்து, என்மேல் அவர்கள் வீணுகக் கொண்டாடும் பாத்தியத்திலிருந்து என்னை மீட்டு இங்கு வைத்துக்கொள்." என்று தம் மண்ணுண்ட பொன்வாயால் திருவாய் மலர்ந்தருளினர். அதைச் செவியுற்ற கங்காபாயியும், அதிகமாய்க் கவலை கொண்டு, துவாரகா நாதனை நோக்கி, "ஹே! புருஷோத்தமா! என்னை ஏன் இவ்வாறு பரிசோதிக்கின்றீர். ஏழையாகிய என்னிடம் நீர் கரைகடந்த அன்பு காட்டுவதால் உமது நாயகியாகிய இலட்சுமிதேவி என்னை வெறுத்து என் இல்லத்தில் தம் தமக்கையைக் குடிபுகச் செய்திருக்கின்றதை நீர் அறிந்திருந்தும், என்னிடமிருக்கும் பொன்னை ஈயும்படி எவ்விதம் உரைத்தீர். உம்முடைய திருமார்பிலுறையும் பொன்னை என்னிடமனுப்பினுல் எனக்கும் பொன் கிடைக்கும். நீரும் உமது நிறையிற் குறைவீர்." என்று மிகப் பணிவோடு விடை பகர்ந்தனர். வறுமையால் சிறுமை கொண்டிருக்கும் அப் பெண்மணியின் மணிவாசகத் தேனைத் தம் செவிவாய்மடுத்துண்டு களித்த இலட்சுமிகாந்தன் புன்முறுவல் புரிந்து, "ஹே! கங்காபாய்! உன்னிடமிருக்கும் பொன்னை யறியாது நான் உரைக்கவில்லை. உன் கணவனிறந்தபிறகு உனக்குப் பயனற்றிருக்கும் உன் பொன் மூக்குத்தியைக் கொண்டுபோய்க் கொடு. நான் முன்னமேயே உன் மனக்கோயிலிற் குடிவந்து விட்டேனுதலின், உன் மூக்குத்திப் பொன்னின் நிறையும் நானிரேன்." என்றுரைத்து மறைந்தனர்.

விண்ணவரும் மண்ணவரும் வேண்டித்தேடினும் காணுத வேலையிற் றுயின்ருேன் தன்மீது கிருபைகூர்ந்துரைத்த மொழிகளைக் கேட்டு அடங்கா மகிழ்ச்சிகொண்ட கங்காபாய் பொழுது புலர்ந்ததும் தம் ஊராரை உடன்கொண்டு சென்று, துவாரகா வாசிகளான பிராமணர்களைக் கண்டு, அவர்களிடம் துவாரகா நாதன் நிறையளவு பொன் கொடுத்தால் தாங்கள் பெற்றுக் கொண்டு அவ்விடம்விட்டகல்வதாக வாக்குறுதி பெற்று, அவர்களையும் அழைத்துக்கொண்டு கோமதிதீரம் சென்று, முன்பின் யோசியாது தண்ணீரில் மூழ்கி அங்கிருந்தோர் அனைவராலும் வெளியிற் கொண்டுவர வியலாதிருந்த அந்த கிருஷ்ண விக்கிரகத்தைத் தான் எளிதில் ஓர் நெட்டிக் கட்டையை எடுத்து வருவது

போல் வெளியில் எடுத்து வந்து, அங்குக் கட்டியிருந்த தராசின் ஓர் தட்டிலிட்டுத் தன் முன்றானையில் முன்னமே முடிந்துவைத்திருந்த பொன் மூக்குத்தியை மற்றத் தட்டிலிட்டனர். அப்போது அப் பொற்றொடியிட்ட பொன்னணித் தட்டு பூமியிலாழ்ந்தது. வைகுண்டபதியை வைத்த தட்டு வானுலகம் நோக்கி மேற்சென்றது. அவ் வதிசயத்தைக் கண்ணுற்ற டங்கபுரவாசிகள் அனைவரும் கங்காபாயியின் உண்மையான பக்தியை மெச்சிக் கொண்டாடினர். வானவரும் தானவரும் வானுலகினின்று மலர் மாரி வழங்கினர்.

தம் பதியை இழந்த பெருங்குறை நீங்க வைகுண்டபதியைப் பெற்ற தவத்திற் சிறந்த கங்காபாயி அம்மையாரும் தம் தவம் தாம் சற்றும் எதிர்பாராத விதமாக ஈடேறியதைக் கண்டுப் பெரிதும் மகிழ்ந்து, தம்மை மறந்து, மெய் சிலிர்த்து, இருகை கூப்பி,

விண்ணுறு சுடரே யென்னுள் விளங்கிய விளக்கே போற்றி
கண்ணுறு மணியே யென்னைக் கலந்தநற் களிப்பே போற்றி
பண்ணுறு பயனே யென்னைப் பணிவித்த மணியே போற்றி
எண்ணுறு மடியார் தங்கட் கினியதெள் ளமுதே போற்றி.

மணப்புது மலரே தெய்வ வான்சுவைக் கனியே போற்றி
தணப்பற வடியார்க் கின்பம் தருமொரு தருவே போற்றி
கணப்பெருந் தலைவ ரேத்துங் கழற்பதத் தரசே போற்றி
குணப்பெருங் குன்றே போற்றி கோகுலக் கொழுந்தே போற்றி.

எனப் பலவாறு துதித்துக் குதித்துக்கொண்டாடுவாராயினர். துவாரகாவாசிகளும் சர்வாந்தர்யாமியாயிருக்கும் சர்வலோகநாயகன் உண்மையான உயர்ந்த பக்திவலையிற் சிக்குறுவானேயொழிய, தம் வெளி வேடங்களுக்கும், வெளிப் பகட்டுகளுக்கும் மயங்கிக் கட்டுப்படான் என்னும் அதிநுட்பமான உண்மையை உணர்ந்து வெட்கித் தலைகுனிந்து வெளியேறினர். அவ்வாறு வெளியேறின விப்பிரர்களும், தங்களிடம் சித்தசுத்தி இல்லாதிருந்தமையின் துவாரகாநாதன் தங்களைவிட்டு அகன்றனர் எனத் தெரிந்துக்கொண்டவர்களாய்,

அன்பரிதய மலர்க்கோயி லமர்ந்தபர மானந்தத்தைத்
துன்பமகலச் சுகமளிக்குந் தூயதுணையைச் சுயஞ்சுடரை
வன்பரிடத்தின் மருவாதமணியை மணியார் மிடற்றானை
இன்பநிறைவை யிறையோனை யென்னே யெண்ணா திருந்தோமே.

என மிகவும் மனம் வருந்தி, அம்மாதவனை நினைந்து மாதவம் புரியலாயினர்.

கங்காபாயியும், கிருஷ்ண விக்கிரகத்தைக் கைக்கொண்டு தம் மில்லம் சென்று, அதை ஓர் தகுந்த விடத்தில் பிரதிஷ்டைசெய்து வழக்கம்போல் பூசித்துவந்தனர். அங்ஙனமிருக்க ஓர் நாள் கங்காபாயி காட்டிலுறைந்து கடுந்தவம் புரியும் அந்தணர்களின் கதியை நினைந்து மனமுருகி, அவர்களை எவ்வகையானும் காப்பாற்றும் படிக் கண்ணனிடம் விண்ணப்பம் செய்து நின்றனர். பரோபகார சிந்தையால் பரிதபித்திருந்த கங்காபாயியின்முன் தோன்றின கோபாலன், தாம் சென்று பிராமணர்களுக்கு அனுக்கிரகம்செய்து வருவதாய்ச் சொல்லிவிட்டு, அவ் வேதியர்களிடம் விரைவிற் சென்று, "ஹே விப்பிரோத்தமர்களே! நீங்கள் கவலையுறவேண்டாம். நீங்கள் மீண்டும் துவாரகைக்குச் சென்று, வருகிற கார்த்திகை மாதம் பௌர்ணிமியன்று அங்கிருக்கும் சாவித்திரி வாபியில் மூழ்கிப் பார்ப்பீரேல், நம்முடைய புராதனமூர்த்தி உங்களுக்குக் கிட்டும். நீங்கள் அதை எடுத்துக் கோவிலிற் பிரதிஷ்டை செய்து உண்மையான பக்தியோடு வணங்கி வருவீரேல், உங்களுக்கு ஒருகாலத்தும் ஒரு குறையும் வாராது. நாமும் அங்கும் இங்குமாக இருந்து நம்மை நாடிவரும் பக்தகோடிகளுக்கு அவரவர்கள் மனத்தூய்மைக் கேற்ப, வேண்டிய மனோபீஷ்டங்களைப் பூர்த்திசெய்து வைப்போம்." எனப் புகன்று அகன்றனர். வேதியர்களும் கண்ணன் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி அவன் திருவருள்பெற்றுச் சென்றனர்.

துவரையம்பதியில் வேதமாதாவான சாவித்திரி தேவியானவர் ஓர் வாபிரூபந்தாங்கி வந்துறைந்து, வேதகர்ப்பமாகிய தம் தூய கர்ப்பத்தினின்று பத்தரை மாதங்கழித்துக் கார்த்திகை பௌர்ணிமிதினத்தன்று பத்தரைமாற்றுத் தங்கம்போன்ற ஒளியோடு துவாரகாதீசனை வெளியிட்டனர். தேவதுந்துமி முழங்கிற்று. தேவர்கள் புஷ்பவர்ஷம் பொழிந்தனர். அயோத்திமாநகரில் தசரதசக்கரவர்த்திக்கு தாசரதி பிறந்தகாலத்தும், கோகுலத்தில் கோபாலன் தோன்றின காலத்தும், ஆங்காங்குள்ள நகரவாசிகள் எவ்வாறு மனமகிழ்ந்து திருவிழாக்கொண்டாடினரோ, அவ்வாறே துவாரகாபுரி வாசிகளும் தம் நகர்ப்பதியைப் பெற்று அளவில்லா ஆனந்தங்கொண்டனர். வைகுண்டபதியும் துவாரகையில் கண்

ணுகவும், டங்கபுரத்தில் விஜயசிம்மருக்குத் தம் வைகுண்ட பத வியளித்து அவருடைய அளவு கடந்த பக்தியாகிய இரணத்தி னின்றும் தம்மை விடுவித்துக் கொண்ட காரணம் பற்றி, ரண் சோட்ஜி (Ranchodjee) என்னும் திருநாமத்தோடும் கலியுக வரதனுய் விளங்கிவந்தனர்.

ஆதிகாலத்தில் துவாபரயுகத்தில் கிருஷ்ண பரமாத்மாவான வர் தேவகிவயிற்றிற் பிறந்து, கம்சனுடைய கொலையாணையினின் றும் நீங்கும்பொருட்டு, வசுதேவரால் *மதுராபுரியினின்று *கோகு லத்திற்குக் கொண்டுபோகப்பட்டு, அங்கு நந்தகோபனுடைய அரண்மனையில், யசோதாதேவியின் புத்திரனுக வளர்ந்திருந்த காலத்தில், ஓர் பங்குனிமாதம் பௌர்ணிமியன்று, கோபாலர்கள் எல்லோரும் ஒன்றுசேர்ந்து, யமுனநதிதீரத்தில் ஹோலி(காமன்) பண்டிகை சம்பந்தமான பல விளையாட்டுகளை விளையாடிக்கொண் டிருந்தனர். அவர்கள் விளையாட்டைக் கண்டு ஆனந்திக்குமாறு, அனேக ஜனங்கள் கூடியிருந்தனர். அக் கூட்டத்தினிடையி லிருந்த விஜயநந்தன் என்னும் கோபன் தான் வயது சென்றவனு யிருந்தும், தன்னை யாரும் அக் கூட்டத்தில் மதிக்காது, வயதிற் சிறியவனுன கண்ணனைப் பலரும் சிறப்பித்துக் கொண்டாடுதலைக் கண்டு மனம் பொருது, அங்குள்ளோரை விளித்து, முதலில் எம் பெருமானையும், அதன் பின்பு வயது முதிர்ந்தோர்களையும் பூசனை செய்வது முறையே யொழிய, வயதிற் சிறியவனும், மாய விளை யாட்டில் நிபுணனும், ஸ்திரீ லோலனுமான கிருஷ்ணனை கௌர வித்துக் கொண்டாடுவது முறையன்றென மொழிந்தனன். அழுக் காற்றினுற் பிறந்த அவ்வார்த்தைகளைக் கேட்ட உபநந்தன் என் பான் விஜயநந்தனை நோக்கி, "நீர் சொல்லுவது ஒருவாறு ஒப்பத் தக்கதேயாயினும், தன் இல்லத்திலுள்ளோரை அடக்கியாண்டு தன் வயப்படுத்த வியலாத ஒருவன் பொது ஜனசமூகத்திற் போதிக்க முன் வருவது, தன் அவயவங்களே தனக்கு சுவா தீனமில்லா திருக்கப் பிறன்பால் குறை கண்டு கடிவதற்கு முன் வருவது போலிருக்குமன்ருே! ஆகவே உமது வீட்டில் உம்மைப் பூசிக்கக் கடமைப்பட்ட உமது மனைவியே உம்மை மதியாது கிருஷ்ணனைப் பூசிக்கின்றனளே! அங்ஙன மிருக்க நீர் இங்குவந்து

* இத்தலங்களின் வருணனை இதற்குப்பின் வெளிவரும் பாகத்திற் காணலாம்.

நாணயம் பேசுவதிற் பயனென் ?" எனக்கூறி அடக்கினன். விஜய நந்தனும் உடனே தன்னில்லத்திற் கேகி, அங்கு சுதா என்னும் தன் பத்தினி கிருஷ்ண பூஜை செய்துகொண்டிருந்ததைக்கண்டு, சினங்கொண்டு அவளைப் பலவாறு தூஷித்து, அங்கிருந்த கோல் கொண்டு தாக்கினன். பக்தவத்ஸலரும், பரமகருணா மூர்த்தியு மாகிய கண்ணபிரான், விஜயநந்தன் தடியடிகள் அவன் ஸ்திரீயின் மேற்படாது காத்தனர். அது காரணம்பற்றி அவன் உபயோகித்த தடி, உலக்கை முதலியவை எல்லாம் அம்மாதின்மேற் பட்டதும் பொடிப் பொடியாய்த் தகர்ந்து உதிர்ந்தன. அதைக் கண்ட விஜயநந்தனும் மிக வியந்து, மற்றோர் பெருங் கோலைத் தாங்கினவனாய் கிருஷ்ணன் வருகையை எதிர் நோக்கித் தன் தலைவாயிலிற் காத்திருந்தனன் அச்சமயத்தில் மாயலீலைகளில் நிபுணரான கிருஷ்ண பரமாத்மாவானவர், விஜயநந்தனின் ஆப்த சினேகிதனான சநந்தன் என்பான் வேடம் பூண்டு, அங்குச் சென்றனர். அவனைக் கண்டு களிகொண்ட விஜயநந்தனும் அவனோடு அளவளாவி, அவனைத் தன்னில்லத்தில் தனக்காகக் காவலிருக்கச் சொல்லிவிட்டு, தான் காமதேவன் பூஜைக்காகப் போயினன். விஜயநந்தன் வெளியேறினபின்பு, கண்ணபிரான் தம் சுயவுருக் கொண்டு சுதாவின் முன் சென்று, அவள் பூசனைகளை ஏற்று அனுக்கிரகித்துவிட்டு, மீண்டும் சநந்தன் வேடம்பூண்டு வாயிலிற் காத்திருந்தனர். அக்காலத்துப் பூஜை செய்யப்போன விஜயநந்தன் அக்கூட்டத்தில் கிருஷ்ணனில்லாதிருந்ததைக்கண்டு, ஒரு சமயம் அவன் தானில்லாதசமயத்தில் தன்னில்லத்திற்கே போயிருப்பானோவென ஐயங்கொண்டவனாய்த் தன் வீடுநோக்கி விரைந்தோடி வந்தனன். அவனைக் கண்ட சநந்தன் வேடத்தோடிருந்த ஜகந்நாதன், அவனைத் தன் கையிலிருந்த கோலாற்புடைத்து "என் நண்பனான விஜயநந்தன் பூஜைக்குப் போய்ச்சிறிது நேரமும் கழியவில்லை. நீ அதற்குள் அவன் வேடங்கொண்டு இங்கு வரத்துணிந்தனையோ. ஏ! கண்ணா! நான் உன் மாயத்தை நன்கறிவேன். யான் இடையனாயினும் மடையனன்று." எனச்சொல்லிக் கொண்டே, விஜயநந்தன் அடி பொறுக்காது கீழேவிழும் வரை தம் கோலால் தாக்கினர். விஜயநந்தன் தான் கிருஷ்ணனல்லவென்றும், உண்மையில் விஜயநந்தனே யென்றும் எவ்வளவு சொல்லியும் அவன் மொழி செவிடன் காதில் ஊதின சங்கா

யிற்று. பிறகு தன்னிடம் அன்பு கொண்ட சுதாவின் வேண்டு கோளின்படி, விஜயநந்தனைப் புடைப்பதை விட்டுத் தம் தாமரை மலர் போன்ற திருக்கரங்களால் தடவி அவனை எழுப்பிவிட்டுச் சென்றனர். விஜயநந்தனும், வெட்கித் தலைகுனிந்து யமுனா தீரத் திற்கேகி, கண்ணனுடைய மாயத்திருவிளையாட்டையும், அவன் செய்யும் அகணிதலீலாவிநோதங்களையும் நினைந்து நினைந்து மன முருகலாயினன். அத்தருணத்தில் எம்பெருமான் அவன் முன் சங்கு சக்கர கதாபத்மதாரியாய், இலட்சுமிசமேதராய்க் காட்சி கொடுத்தருளினர். அதைக் கண்டதும் விஜயநந்தன் அவர் திருப் பாதங்களில் அடியற்ற மரம்போல் வீழ்ந்து பணிந்து "ஹே! பக வன்! ஹே! தயாசிந்தோ! தீனபந்தோ! ஹே கருணாசாகரா!

சேணுடர் முனிவ ருயர் திசைமுகனு முருத்திரனும் திரளோர்சற்றும்
காணுத காட்சியை நான் காண்கின்றே னிந்நதியின் கண்ணேபன்னாள்
ஆணுகப் பிறந் தடியே னருந்தவமென் புரிந்தேனே வறிகிலேன்முன்
பேணுத பிறப் பெல்லாம் பிறப்பலவிப் பிறப்பேயென் பிறப்பாமந்தோ.

வேறு

நான்கண்ட போதுசுயஞ் சோதிமய மாகி
நான்பிடித்த போதுமதி நளினவண்ண மாகித்
தேன்கொண்ட பாலெனநான் சிந்திக்குந் தோறும்
தித்திப்ப தாகியென்றன் சென்னிமிசை மகிழ்ந்து
தான்கொண்டு வைத்தவந்நாள் சில்லென்றென் னுடம்பும்
தகவுயிருங் குளிர்வித்த தாண்மலர்கள் வருந்த
வான்கொண்டு நடந்திங்கு வந்தெனையு மளித்தாய்
வைகுந்தத் தரசேநின் மாகருணை வியப்பே.

உமது மாயலீலைகளைச் சிற்றறிவினனாகிய யான் எவ்வாறு அறிய வல்லேனாகுவேன். உமக்கு வைகுந்தமும் கோகுலமும் ஒன் ருக இருக்கின்றது. பாற்கடல் யமுனையாக இருக்கின்றது. உமது பக்த கோடிகளும் இங்கிருக்கும் கோபிகைகளும் ஒன்ரு யிருக்கின்றனர். யான் என் அறியாமையினால் கிருஷ்ணன் என் னும் ஓர் புத்திரன் நந்தகோபனுக்கிருக்கின்றனன்; அவன் மகா தூர்த்தன்; என் மனைவியைப் போன்ற ஸ்திரீகளை மயக்கித் தன் கைவசப்படுத்திக் கொள்ளுகின்றனன் என்றும், சாரசோர கிருத் தியங்களில் சிறந்து விளங்குகின்றனன் என்றும் நினைத்திருந்து

கெட்டேன். என்னைப்போலவே இன்னமும் எத்தனையோபேர் உமது உண்மைநிலை யறியாது கெட்டழிகின்றனர். 'பெண்ணின் புருஷன் பெண்ணைக் கொண்டுபோவதில் பிரியாது என்ன?' என்னும் உலகவழக்கிற்கிணங்க, நீர் உமது உண்மையான பக்தர்களோடு கூடியிருந்து அவர்களுடைய மனோபீஷ்டத்தை நிறைவேற்றிவைப்பதில் யார் குறைகூற முடியும்! நாரதாதி முனி சிரேஷ்டர்களும் உமது மாயையில் மயங்கி மருள்கொண்டன ரெனின், சிற்றறிவினனாகிய யான் என் மதியீனத்தால் உம்மீது அபசாரப்பட்டது ஓர் விந்தையாகுமோ! சரணாகத ரட்சகராகிய உமது பாதுகாப்பில் அகப்பட்ட அனந்தங்கோடி ஜீவராசிகளுள் யானொருவனன்றோ. யானும் என் மனைவியும் உம்மையே நம்பிச் சரணடைகின்றோம்.

"பிறந்தோ ருறுவது பெருகிய துன்பம்
பிறவா ருறுவது பெரும்பே ரின்பம்
பற்றின் வருவது முன்னது ; பின்ன
தற்றோ ருறுவது."

(மணிமேகலை ஊரலநுரைத்தகாதை.)

என்று கூலவாணிகன் சாத்தனார் என்னும் தென்னாட்டுப்புலவர் ஒருவர் கூறியுள்ளவாறு, நாங்கள் இருவரும் பெருந்துன்பத்திற் கிடமான இப் பிறவிக்கடலினின்று கரையேறும்பொருட்டு, முத்தியொன்று வியத்தியொன்று காண்மினென்றாகமத்தின் முடிகண்முடித்துரைக்கின்றவையும், இம்மையினோ டம்மையினும் எய்துகின்ற வின்பம், எனைத்தொன்றும் வேண்டாத இயற்கை வருந்தருணம், எம்மையினும் நிறைசொருப சுத்தசுகாரம்பம், இயற்சொருப சுத்த சுகவனுபவ மென்றிரண்டாய்ச் செம்மையிலே விளங்குபவையும், ஆறாறு தத்துவத்தின் சொரூப முதலனைத்தும் அறிவிக்கும் ஒன்று, அவற்றின் அப்பாலேயிருந்த வீறாய தற்சொருப முதலனைத்தும் அறிவில் விளக்குவிக்கும் ஒன்று, என விளைவறிந்தோர் விளம்புகின்றவையும், ஆதியிலே கலப்பொழிய ஆன்மசுத்தி அளித்து, ஆங்கது வதுவாக்குவதொன்றாகும், அதுவதுவாயாக்கும் சோதியிலே தானாகிச் சூழ்வதொன்றாகும் எனச் சூழ்ச்சியறிந்தோர் புகல்பவையும், ஆதியுமாய், அந்தமுமாய், நடுவாகி, ஆதியந்தமில்லாத மந்தண வான் பொருளாய்ச் சோதியுமாய்ச் சோதியெலாம் தோன்றுபரமாகித்

துரியமுமாய் விளங்குபவையுமான உமது பொற்பாத கமலங்களாகிய இணையற்ற தெப்பத்தில் எங்களை ஏற்றிக்கொள்ளும். ஹே! மாதவா! ஹே! கேசவா! எங்கள்மீதிரங்கிக் கிருபைபுரிந்து எங்களையும் உம் அடியார்கள் திருக்கூட்டத்தில் சேர்த்துக்கொள்ளும்.'' எனப் பன்முறையும் வேண்டினன். அதைக்கேட்ட அனந்தசயனர் ஆனந்தங்கொண்டு, "ஹே! விஜயநந்தா! அவ்வாறேயாகட்டும். நீயும் உன் தருமபத்தினியும் கலியுகவாரம்பத்தில் டங்கபுரம் என்னும் புண்ணியக்ஷேத்திரத்தில், விஜயசிம்மன் கங்காபாயி என்னும் நாமத்தோடு பிறந்து, ஒருவரையொருவர் மணந்துகொண்டு, இயல்பினால் இல்வாழ்க்கை வாழ்ந்து, முயல்வாருள் எல்லாம் தலையாக நின்று, கலியுகத்தில் வெளிவேஷமும் வெளிப்பகட்டுமின்றி, உண்மையான திடபக்தியினால்மட்டும் நம்மை வசப்படுத்தலாம் என்னும் உண்மையை உலகத்துள்ளோர் உணரச்செய்து, இறுதியில் நம் திருவடி நீழலில் வந்து சேர்வீர்கள்.'' என்று அனுக்கிரகித்து மறைந்தனர். ஆதலின் முற்பிறப்பிற் செய்திருந்த நல்வினைப்பயனே நம் விஜயசிம்மருக்கும் கங்காபாயிக்கும் பிற்பிறப்பிற் கைகொடுத்துதவிக் கரையேற்றியதெனப் புராணவாயிலாய்த் தெரிகிறது.

## இத்தலத்திருக்கும் கோவில்களின் பிரதிஷ்டை.

மேற்சொல்லியவாறு மகாவிஷ்ணுவானவர் டாக்கோர் என வழங்கும் டங்கபுர க்ஷேத்திரத்தில், ஹரிபக்தியிற் சிறந்த கங்காபாயியின் பூசனையைப் பெற்றுக்கொண்டு நட்சத்திரமண்டலம் போன்ற அவர் பழைய கூரைவீட்டிலிருந்து வந்தனர். ஆனால், அவர் கலியுகவரதராயிருந்து கண்ணெதிரில் செய்த அனேக அற்புதமான லீலைகளைக் கேள்வியுற்ற ஜனங்கள் தூர தேசங்களிலிருந்தும் திரள் திரளாகவந்து தரிசித்துத் தங்கள் தங்கள் இஷ்டசித்திகளைப்பெற்றுப் போகலாயினர். எம்பெருமானும் அத்தலத்தில் ஸ்ரீரண்சோட்ஜி (Ranchodjee), ஸ்ரீ டங்கபுரேசுவரர், டாக்கோரேசர், துவாரகேசர் என்னும் பல திருநாமங்களோடு பக்தாபீஷ்ட தாயகராய் விளங்கிவந்தனர். இவ்வாறு மூன்று வருடங்கள் கழிய, கங்காபாயியம்மையும் பரமனருளினால் அவன் திருப்பதஞ் சேர்ந்தனர். பின்பு அவர் வம்சத்தவர்கள் ஸ்ரீரண்சோட்பிரபுவைப் பூசித்துவந்தனர்.

இஃதிவ்வாருக, ஓர்நாள் மகாலட்சுமியானவர் தம்பதியை நோக்கி "ஹே! நாதா! திரிபுவனங்களிலுமிருக்கும் ஜீவகோடிகளுக்கு சகல சம்பத்துகளையும், போகபோக்கியங்களையும் கொடுக்க வல்ல என்னுடைய நாதனுயிருக்கும் நீர் இத்தகைய பழய கூரைவீட்டிற் குடியிருக்கின்றீர். அல்லும் பகலும் சந்திர சூரியர்கள் உம்மிடத்திலேயே வாசம் செய்கின்றனர். பூஜாரிகள் கொண்டு வரும் நீர் புனிதமற்றதென நினைத்து, வருணன் தானே அபிஷேகம் செய்கின்றனன். இவையெல்லாம் உமக்கேற்றதாக இருப்பினும், உம்மைநாடிவரும் பக்தகோடிகள் நிற்க இடமின்றி வருந்துகின்றனரே. அவர்கள் முகத்தையாவது பார்க்கவேண்டாமா. ஹே! பிரபு! யான் உமக்காக ஓர் புதிய கோவில் கட்டும்படிச் செய்ய நினைந்துள்ளேன். உமது உத்தரவை எதிர்பார்க்கின்றேன்." எனத் தாழ்மையோடும் அன்போடும் கூறினர். அதுகேட்ட ஸ்ரீமந்நாராயணன், "ஹே! பிரியே எம்முடைய உண்மையான பக்தர்களுடைய இல்லம் சிற்றில்லமாயிருப்பினும், கூரையோடிருப்பினும், கூரையில்லாதிருப்பினும், அதே நமக்குப் பிரியமான வாசஸ்தானமாகும். அது நமக்கு எவ்வளவு சுகத்தையும், இன்பத்தையும் தருகின்றதோ, அவ்வளவு சுகத்தைத் தருவதில்லை அபக்தர்களான தனவந்தர்கள் பெருமைக்காகக் கட்டும் கோவில்கள். இக்கலியுகத்தில் மறநெறியிலீட்டிய பொருளை நாம் அங்கீகாரம் செய்யோம். பூர்வஜென்மங்களிற்செய்த நற்றவத்தின் பயனுய் இப்பிறப்பில் நல்வழியிலீட்டின பொருளை நாம் அன்போடு அங்கீகரிப்போம். ஆதலின் உன் இஷ்டம்போல் செய்யலாம்." என விடை கூறினர். அதுகேட்ட இலட்சுமிதேவியானவர், "ஹே! பிராணபதே! இதே தேசத்தில் கம்பாத் (Khambad) என்னும் கிராமத்தில் நந்தனன் என்னும் ஓர் வைசியனிருக்கின்முன். அவன் ஐசுவரியத்தில் குபேரனுக்கொப்பானவன். அவன் பொருள் முழுவதும் தீவினைவிட்டீட்டினது. அவன் முன் ஜன்மத்தில் பரம ஏழையாயிருந்தும் என்னிடத்தில் நிறைந்த பக்தியோடு என்னைக் குறித்துத் தவம் புரிந்தமையின், யான் அவன் முன் தோன்றி அடுத்த ஜன்மத்தில் கோடீசுவரனுகப் பிறந்து, இம்மையிலனுபவிக்கும் எல்லா சுகங்களையும் அனுபவித்து, அவன் பொருளின் பெரும்பாகத்தை அகிலலோக நாயகரான உமக்கு எவ்விதத்தானும் சமர்ப்பித்து, உமது அருள்பெற்று உய்வான்

என்னும் வரம் கொடுத்தேன். அவ்வரத்தின் பயனாய் அவன் இக்கலியிற் பிறந்தும் நல்வழியில் தேடிய திரவியத்தை உம்மிடம் எவ்விதத்தில் சேர்ப்பிப்பது என ஏக்கங்கொண்டுள்ளான். யான் அவனைக்கொண்டு உமது திருக்கோவில் திருப்பணி செய்விக்கின்றேன். என் வரமும் பயனீந்ததாகும். உமது பக்தர்களின் குறையும் நீங்கும். அருள்புரியவேண்டும்." எனப் பணிவாய்க் கூறினர். தம் தேவியின் அமுதமொழிகளைச் செவியுற்ற தாமோதரன், "ஹே சுபானனே! நீ எவ்வாறு உன் பக்தனை நந்தனனுக்கு வரதானம் செய்திருக்கின்றனையோ, அவ்வாறே நாமும், நமது பக்தன் சிவன் என்னும் பிராமணனுக்கு வாக்தானம் செய்திருக்கின்றோம். இந்நாட்டின் தென்பாகத்திலுள்ள சரச என்னும் கிராமத்தில் சிவன் என்னும் திருநாமங்கொண்ட ஓர் வேதியன் சீரிய குணங்களையுடையவனாகவும், சுசிலனாகவும், வேதசாஸ்திர விற்பன்னனாகவும், ஜிதேந்திரியனாகவும் இருந்தான். அவன் ஓர் நாள், அகஸ்தியர் கமண்டலத்தை ஐங்கரன் கவிழ்த்ததால் ஆறுய்ப்பெருகியதும், உனது திருநாமமாகிய பொன்னி என்னும் பேர்கொண்டதுமான புண்ணிய நதியாற் சூழப்பட்ட * திருவரங்கம் பெரிய கோயிலுக்கிணையாகச் சொல்லக்கூடியதும், உன் கடைக்கண் வீட்சணியத்தால் அஷ்ட ஐசுவரியங்களிற் குறைவற்றதுமான † திருவேங்கட

* குறிப்பு:—ஸ்ரீரங்கம் எனவழங்கும் திருவரங்கம் என்னும் திவ்வியதேசம் இருக்குமிடம் உலகப்பிரசித்தம். கோயில்: பெரிய கோயில். பெருமாள்: ஸ்ரீரங்கநாதன்; நம்பெருமாள். தாயார்: ஸ்ரீரங்கநாச்சியார். விமானம்: பிரணவாகிருதி. சிருங்கம்: வேதம். தீர்த்தங்கள்: காவேரிநதி; சந்திர புஷ்கரணி. விருட்சம்: புன்னை. புஜங்கசயனம். தெற்கே திருமுக மண்டலம். தருமவர்மனுக்கும், ரவிதர்மனுக்கும் பிரத்தியட்சம். ஆழ்வார்கள் பதின்மராலும் கோதைநாயகியாலும் மங்களாசாசனம்.

† குறிப்பு:—திருவேங்கடம் என்னும் திருப்பதி காட்பாடியிலிருந்து ரேணுகுண்டா போகும் இருப்புப்பாதையில், காட்பாடியிலிருந்து 64 மைலிலுள்ள ஓர் ரெயில்வே ஸ்டேஷன். கோவில் சேஷாத்திரி என்னும் மலையின்மேல் கட்டப்பட்டிருக்கின்றது. சுமார் 7 மைல் தூரம் மலையின்மேல் ஏறிப் போகவேண்டும். பெருமாள்: திருவேங்கடத்தான். தாயார்: அலர்மேல் மங்கை. விமானம்: ஆநந்த நிலயம். பர்வதம்: சேஷாசலம். தீர்த்தம்: சுவாமி புஷ்கரணி. கிழக்கே திருமுக மண்டலம். நின்ற திருக்கோலம். தொண்டைமான் சக்கரவர்த்திக்கும்

மென்னும் திருப்பதிக்குச்சென்று, ஆங்குறையும் ஸ்ரீநிவாசனை சேவித்து, அவருக்கிருக்கும் அழகிய திருக்கோயிலையும், அளவற்ற செல்வத்தையும், விலையுயர்ந்த திருவாபரணங்களையும், நாடோறும் நாட்டின் நாற்றிசைகளிலிருந்தும் வந்துகூடும் பக்தகோடிகள் சமர்ப்பிக்கும் பெருங்காணிக்கைகளையும் கண்டு களித்துப் பின்பு தனிமையான ஓரிடத்திலிருந்துகொண்டு நம்மை நினைந்து, "ஹே தயாநிதே! துவாரகேசா! உமது திருவருளினால் தனவான்களாகப் பிறந்தோர் மட்டுமே இவ்வுலகத்திற் பெறற்கரிய பிறவியைப்பெற்றதன் பயனை எய்துகிறார்கள். நினைத்த தருமங்களைக் குறைவறச்செய்து முடிக்கின்றனர். உமக்குத் திருக்கோயில் கட்டுகின்றனர். திருவாபரணங்களைச் சூட்டுகின்றனர். அபிஷேக அருச்சனாதிகளைச் செய்கின்றனர். உம்மை அவரவர் களிஷ்டப்படி அனேகவிதமான திருக்கோலங் கொள்ளச்செய்து கண்குளிர சேவிக்கின்றனர். நினைத்த வாகனங்களில் ஏழச்செய்து திருவிழா நடத்துகின்றனர். என்போன்ற ஏழைகள் என்ன செய்ய முடியும். "பொருளிலார்க் கிவ்வுலகமில்" என்னும் ஆன்றோர்மொழி வேதமொழியாயிற்றே. பொருளில்லாதவன் மருள்கொண்டு மாய்வதே நலம்." எனப் பலவாறு வருந்தித் துதித்துக்கொண்டிருந்தனன். அச்சமயத்தில் நாம் அவன்மீது கருணைகொண்டு, ஸ்ரீவேங்கடேச ரூபத்தோடு அவன் முன் தோன்றி, அவனுக்கு வேண்டிய வரங்களை ஈந்து ஐசுவரியவானாகச் செய்தோம். அவன் தனக்குக் கிடைத்த தனத்தைக்கொண்டு அனேக வித தானதருமாதிகளைச் செய்து பரமபதம் சேர்ந்து பரமசுகத்தோடு காலம் கழிக்கின்றான். அவனுக்குக் கொடுத்த அனேக வரங்களுள் அவன் அடுத்த ஜன்மத்தில் நல்ல சீமானாய்ப் பிறந்து எனக்காக ஓர் கோவில்கட்டும் திருப்பணியை மேற்கொண்டு முடிப்பான் என்று ஓர் வரதானம் செய்துள்ளோம். அந்த வரம் வீண்போகாதபடி அவன் வைகுந்தத்தில் வசிக்கவேண்டிய காலம் முடிந்தவுடன், தட்சிணத்தில் தாமிரம் என்னும் கிராமத்திற் பிறந்து நம் கோவிலைக் கட்டுவான்." என்று மொழிந்

---

**ஆறுமுகப் பெருமானுக்கும் பிரத்தியட்சம். ஆழ்வார்கள் ஒன்பதின்மராலும் சூடிக்கொடுத்த நாச்சியாராலும் மங்களாசாசனம். இத்தலத்துறையும் பெருமாளை வடநாட்டார் பாலாஜீ என்னும் திருநாமமிட்டழைக்கின்றனர்.**

தனர். அதுகேட்ட தாயார் குறுநகைபுரிந்து, தம் நாதனைத் தழுவிக்கொண்டு, "ஹே புருஷோத்தமா! நீர் உம்முடைய வரம் இனிது முடிவடைவதைப்பற்றிக் கவல்கின்றீரே தவிர, உம்மைச் சரணடைந்திருக்கும் என் வரம் ஈடேறும் வழி தேடுபவராய்க் காணவில்லை. உம்முடைய பக்தன் தற்சமயத்தில் தான் செய்த நல்வினைகளின் பயனாக சுவர்க்கபோகங்களை அனுபவிக்கின்றான். அவனுக்கு சுவர்க்கபோகம் இன்னமும் 200 வருஷங்கள் வரையில் இருக்கின்றது என்பதை நீர் நன்கு அறிவீர். அப்படியிருக்க அவ்விருநூறு ஆண்டுகள் முடியும்வரை இந்த நாளிகேரபர்ன கூடத்தில் வசிக்கவா நினைத்திருக்கின்றீர். ஆழ்கடல் நடுவில் ஆலிலைமேல் பள்ளிகொள்ளும் உமக்கு எங்கிருப்பினும் ஒன்றேயாயினும், உம்மை நாடிவரும் பக்தகோடிகள் என்செய்வார்கள். அவர்கள் வெய்யிலினாலும் மழையினாலும் வருந்தி அவதிப்பட்டால் நீர் பார்த்திருப்பீரோ. உமது பக்தன் சுவர்க்கத்தினின்று மீண்டு வந்து பூவுலகிற் பிறந்து பொருளீட்டி உமக்கோர் திருக்கோயிலமைக்குமளவும் எனது பக்தன் நந்தனனைக்கொண்டு ஓர் கோவில் கட்டும்படிச் செய்கின்றேன். நமக்கும் திருக்கோயிலாகும். அவன் அபீஷ்டமும் நிறைவேறும். என் வரமும் ஈடேறும்." எனக்கனிந்தமொழிகளால் தம் பதியின் மனம் கனியுமாறு சொல்லினர். அதுகேட்ட இலட்சுமிகாந்தனும் "ததாஸ்து" என்று திருவாய்மலர்ந்தருளினர்.

இஃதிற்றாக, கம்பாத் கிராமவாசியாகிய நந்தனன் என்பான் தன் தனத்தின் பெரும்பாகத்தைப் புண்ணியக்ஷேத்திரமாகிய துவாரகாபுரியில் நல்வழிகளிற் பயன்படுத்துமாறு சென்று கொண்டிருந்தவன், வழியிலுள்ள * சாபர்மதி என்னும் புண்ணிய நதியின் கரையில் தங்கியிருந்தனன். அச்சமயத்தில், சாட்சாது பகவதி இலட்சுமிதேவியானவர், ஓர் சுந்தரவனிதையின் ரூபங்கொண்டு, நந்தனன் கனவில் தோன்றி, "ஓ! நந்தனா! நீ எந்த பரமாத்மாவை நினைத்து துவாரகைக்குப்போகின்றனையோ, அவர்

* குறிப்பு:—இப்புண்ணிய நதிதீரமே நமது மகான் காந்தியடிகளின் வாசஸ்தானமாகவிருக்கும் கண்ணியம் பெற்றது. மகாலட்சுமியின் பரமபக்தனான நந்தனன் தங்கும்படி நேர்ந்த சாபர்மதிநதி தீரத்தை நம் மகரிஷியானவர் தம் வாசஸ்தானமாகக்கொண்டது ஓர் வியப்பாகாது.

துவாரகையைவிட்டு கோமதிமுதலிய தம் பரிவாரசகிதமாய் தாக்கோர் என்னும் புண்ணியக்ஷேத்திரத்தில் வந்து உறைகின்றனர். ஆங்கு வசித்திருந்த விஜயசிம்மன் என்னும் ஓர் சிறந்த பக்தனுக்காக வந்து அவன் இல்லத்தில் தங்கியிருக்கின்றனர். நீ அவருக்காக ஓர் தக்க ஆலயம் கட்டி அவரை ஆங்கெடுத்துச்சென்று பிரதிஷ்டைசெய்வையேல் உன் பெருந்திரவியம் மேலான வழியிற் செலவழிந்ததாகும். நீயும் அவர் கிருபாநோக்கத்திற்கு இலக்காகுவை." எனக் கூறி மறைந்தனர். அவ்வதிசயமான கனவு கண்ட நந்தனன், அதியாச்சரியங்கொண்டவனாய், தான் வழிபடும் தெய்வமாகிய ஜகதம்பிகையையே தான் நேரிற்காணும் பெரும் பாக்கியத்தைப் பெற்றதற்காகப் பேரானந்தங்கொண்டு, தேவியைப் பலவாறு துதித்து, டங்கபுரம் சென்று, விஜயசிம்மன் இல்லத்தில் எழுந்தருளியிருந்த இலட்சுமிசமேத ஸ்ரீ ரண்சோட்ஜி (Ranchodjee) யை தரிசித்து, இப்போது தேவியின் கோயிலாக இருக்கும் கோவிலைத் திருப்பணிசெய்து முடித்தனன். இறுதியில் விஜயசிம்மனில்லம் சென்று, ஸ்ரீ துவாரகாநாதனைப் பல்லக்கிலேற்றிக்கொண்டு போக நினைத்து மூர்த்தியை எடுக்க, முன்பு கோமதியின் அடிப்பாகத்தினின்று எடுக்க துவாரகாபுரிவாசிகள் அநேகர் முயன்றும் எவ்வாறு பயன்படவில்லையோ அவ்வாறே, அநேக வலிமைநிறைந்த வாலிபர்கள் சென்று எடுத்தும், பரமாத்மாவானவர் தம் இருப்பிடத்தினின்று, எள்ளளவும் எழும்பவில்லை. அதைக்கண்ட நந்தனனும் துக்காகிராந்தனாய்த் தன் திருப்பணியில் தான் ஏதாவது அபசாரம் செய்திருத்தல் கூடுமோவென நினைந்து வருந்தினன். அச்சமயத்தில் ஸ்ரீதேவியானவர் மறுபடியும் அவன் கனவில்தோன்றி, "பகவான் விஜயசிம்மன் வேண்டுதற்கிணங்கி அங்குவந்தாராதலின், அவனில்லாவிடினும், அவன்குலத்திலுதித்தோர் ஸ்பரிசமின்றி பகவான் அவ்விடம் விட்டு எழமாட்டார். ஆதலின் அக்குலத்துதித்தவர்களுள் கடவுள் மாட்டுக் கரைகடந்த பக்தியுடைய ஒருவனைத் தேர்ந்தெடுத்து அழைத்துச்செல்." எனப்பணித்தனர். அகிலலோகசரண்ணியனான ஆண்டவனுக்குத் தம் அடியார்களிடம் இருக்கும் அளவு கடந்த அன்பை நினைந்து விஸ்மிதங்கொண்ட நந்தனன் உடனே எழுந்து, அங்குள்ளோரைக்கொண்டு, அக்குலத்துதித்த தீபசிம்மன்என்னும் ஓர் சத்புருஷனை அழைத்துச்சென்று ஸ்ரீகோபிகாரமணனை எடுக்க

முயன்றனன். தீபசிம்மன் கரங்கள் பட்டதும் தாமே எழுந்து வருபவர்போன்று துவாரகாநாதன் எளிதில் ஏழலாயினர். அதைக் கண்டு ஆச்சரியமும் ஆனந்தமும் கொண்ட டங்கபுரவாசிகள், பெருமாளை சகல வைபவத்துடனும் திருப்பல்லக்கில் எடுத்துச் சென்று, புதிய கோயிலிற் பிரதிஷ்டைசெய்து, பூசித்து வரலாயினர். நந்தனனும் பின்னுளிருந்து பரமபதமடைந்தனன்.

இவ்வாறு இருநூறு ஆண்டுகள் கழிந்தபின்ன பரமபதத்தில் சுகவாசம் செய்திருந்த சிவன் என்னும் பிராமணோத்தமர் தட்சிணதேசத்தில் * தாமிரம் என்னும் கிராமத்தில் † கோபாலநாயக் என்னும் திருநாமத்துடன் பிறந்து அளவற்ற ஐசுவரியத்தோடும், கடவுள்மாட்டுக் கரைகடந்த பக்தியோடும், ஏழைகளின் இடுக்கணை எக்காலத்தும் தீர்த்துவைக்கும் தருமமூர்த்தியாகவும் காலங்கழித்து வந்தனர். அப்படியிருக்கத் தமது பூர்வஜென்ம வாசனையினால் கண்ணனிருக்குமிடத்தை நண்ணி, அங்கு வேண்டிய புண்ணியச்செயல்களைச் செய்யநினைத்து, துவாரகையை நோக்கிப் புறப்பட்டனர். வழியில் ஓர்நாளிரவில், ஸ்ரீரண்சோட்ஜியான

---

* குறிப்பு.—தாமிரம் என்னும் கிராமம் இக்காலத்தில் சென்னைக்கும் செங்கல்பட்டிற்கும் இடையில் சென்னையிலிருந்து 18-வது மைலிலுள்ள ஓர் ரெயில்வே ஸ்டேஷனாக இருக்கின்றது. அங்கு கோபாலநாயக் என்னும் ஓர் வேதியர் எக்காலத்திலாவது இருந்ததுண்டா என்பதையும், அப்படி இருந்திருந்தால் அவர் வடதிசைக்கு யாத்திரை சென்று டாக்கோரில் தேவாலயத் திருப்பணி செய்தனர் என்பதை நிரூபிக்கக்கூடிய ஆதாரம் ஏதாவது கிடைக்கின்றதா என்பதையும் சரித்திர ஆராய்ச்சிக்காரர் தக்கபடி ஆராய்ச்சி செய்து கண்டுபிடிப்பார்கள் என்று நம்பப்படுகின்றது.

† குறிப்பு:—கோபாலநாயக் என்னும் பேர் பிராமணராகிய ஒருவருக்கு இருந்திருத்தல் கூடுமோ எனச் சிலர் ஐயுறல் கூடும். நாயக் என்னும் பட்டப்பெயர் பூண்ட அனேக பிராமண குடும்பங்கள் தஞ்சாவூரிலும் புதுக்கோட்டையிலும் இருந்திருக்கின்றன. தற்காலத்தும் இருக்கின்றன. சக்காநாயக் தெரு என்னும் ஓர் தெரு தஞ்சையில் தற்காலத்தும் இருக்கின்றது. அத்தெருவுக்குத் தம் பெயரையீந்த சக்காநாயக் என்பார் ஓர் பிரபலமான பிராமணகுல திலகர். நாயக் என்னும் மொழி சேனாதிபதி என்னும் பொருள்படுதலிலிருந்து அக்குடும்பத்தார் அக்காலத்தில் ஆண்டிருந்த அரசர்களின் சேனாதிபதிகளாக இருந்திருக்கலாமென ஊகிக்கவேண்டியிருக்கின்றது.

வர் ஓர் விப்பிர வேடம்பூண்டு, கோபாலநாயக் கனவில் தோன்றி, மகாலட்சுமியானவர் தம் பக்தனை நந்தனனுக்குச் சொல்லிய வாறு அவர் துவாரகைக்குச் செல்லவேண்டிய அவசியமில்லை யென்றும், கூர்ஜரநாட்டிலிருக்கும், டங்கபுரத்திற்குச் சென்று, அங்கெழுந்தருளியிருக்கும் பகவானுக்கு ஓர் சிறந்த கோவிலைக் கட்டி முடிக்கும்படிக்கும் புகன்று மறைந்தனர். பிராமணோத்த மரும் கண்விழித்துத் தாம் கண்ட கனவை நினைந்து வியப்புற்று, தம்மைத் தடுத்தாட்கொண்ட தேவாதிதேவனைப் பல்வகையானும் ஸ்தோத்திரம் செய்து, உடனே டாக்கோர் போய்ச் சேர்ந்து தம் முடைய அளவற்ற திரவியத்தைக் கொண்டு திருக்கோவில் கட்டி, அதில் துவாரகாநாதனைப் பிரதிஷ்டை செய்யலாயினர். அக்காலத் தும் முன்போலவே கண்ணன் தம் இருப்பிடத்தினின்று சற்றும் அசையாதிருந்ததைக் கண்டு மனம் வருந்தி, அதன்பிறகு முன் நடந்த விருத்தாந்தங்களைக் கேள்வியுற்று, விஜயசிம்மன் குலத் துதித்திருந்த பரமபக்தனை **இராமசிம்மன்** என்பாரை அழைத்து வந்து வைகுண்டபதியைப் பல்லக்கில் ஏழச்செய்து தம் புதிய கோயிலிற்கெடுத்துச் சென்று அதிவைபவத்துடன் பிரதிஷ்டை செய்தனர். பார்த்தசாரதியின் ஆணையின்படி, இலட்சுமி தேவியை அவர் பக்தனை நந்தனன் திருப்பணிசெய்த ஆலயத்திலேயே இருக்கச் செய்தனர். ஆகவே நந்தனன் கட்டி முடித்த திருக் கோயிலில் இலட்சுமி தேவியும், கோபால நாயக் கட்டிமுடித்த கோவிலில் கோபாலனும் கோவில்கொண்டுறைந்து தங்களை நாடிவரும் பக்தகோடிகளுக்கு சேவை சாதிக்கின்றனர்.

இங்கிருக்கும் பண்டாக்களுக்குள் ஏற்பட்ட மனஸ்தாபத் தால், இக்கோவிலை அரசாங்கத்தார் தங்கள் சொந்த விசாரணை யில் எடுத்துக்கொண்டிருக்கின்றனர். ஆதலின் யாத்ரீகர்கள் கோவிலில் செலுத்தும் காணிக்கைகள் யாவும் அந்நாட்டு மன்ன ருக்குச் சேர்கின்றன. இத்தலம் துவாரகையைப்போல் பரோடா நாட்டு மன்னரைச் சேர்ந்திருக்கிறது. கோவில்வருமானத்தில் * பூஜாரிகள் பாத்தியம் கொண்டாடவியலாது போகவே, அவர் கள் யாத்ரீகர்களிடம் கேட்டு வாங்குகின்றனர். ஆகவே யாத்ரீகர் கள் கண்ணபிரானுக்குக் காணிக்கை செலுத்துவதோடு, பூஜாரிக

*** குறிப்பு:—வடநாட்டில் பெரிய கோவில்களில் பூசைசெய்வோ ரும் பூஜாரிகள் என்றே அழைக்கப்படுகின்றனர்.**

ளுக்கும் காணிக்கை செலுத்தவேண்டி நேரிடுகின்றது. ஆனால் சிறிதே கொடுப்பினும், அதை மரியாதையாகப் பெற்றுக்கொண்டு, யாத்ரீகர்களை கோபாலன் அருகிற் கொண்டுபோய்விட்டு, அவரவர்கள் கையினால் பூசை அருச்சனை முதலியவைகளைச் செய்விக்கின்றனர்.

இக்கோவிலில் இரண்சோட் நாதருக்குப் போட்டிருக்கும் பீடம் சுத்த தங்கத்தினாற் செய்யப்பட்டிருக்கின்றது. அதைச் செய்வதற்குச் சுமார் $1\frac{1}{4}$ லட்சம் ரூபாய்கள் செலவழிந்தன என்று சொல்லுகின்றனர். குங்குமப்பூ கலந்த தீர்த்தமும், குங்குமப்பூ கலந்த சந்தனமும் அதிகமாக உபயோகிக்கின்றனர்.

## இத்தலத்திலும் அருகிலுமுள்ள தீர்த்தங்களும் கோவில்களும்.

**கோமதி தீர்த்தம்:—**துவரையம்பதியில் நதிரூபமாயிருக்கும் கோமதிதீர்த்தம் இத்தலத்தில் புஷ்கரணியாக இருக்கின்றது. கோமதியென்பது தென்னாட்டில் திருநெல்வேலிஜில்லாவிலுள்ள *சங்கரநயினார் கோவில் என்னும் சங்கரநாராயண க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கும் அம்பாள் பெயராதலின், சாட்சாது ஜகதம்பிகையின்பேர்கொண்ட இத்தீர்த்தம் அதிமேம்பாடான மகிமையையுடையது என்பது சொல்லாமலே விளங்கும். இப்பெயர் கொண்ட நதி துவாரகையி லிருப்பதைத்தவிர, நமது ஜம்புத்தீவிலேயே பரமபவித்திரஸ்தானமாகக் கருதப்படும் † நைமிசாரணியத்திலும் † இலட்சுமணபுரியிலும் (Lucknow) இருக்கின்றது. இந்நதி கங்கையின் உபநதிகளுள் ஒன்று. மகாவிஷ்ணுவின் காற்பெரு விரலினின்று பிரவகித்த கங்காநதியானது தீர்த்தங்களுள் சிறந்ததாகக் கருதப்படும்போது, அவளைத்தனக்குள் ஒருபட்சம் வரை ஐக்கியம் செய்துக்கொண்டிருந்த கோமதியின் மகிமை அளவிடற் பாலதாமோ! கார்த்திகைமாதமும், மற்ற மாதங்களில் ஞாயிற்றுக்கிழமைகளும், வியதிபாததினங்களும், ஏகாதசி, அமாவாசை, பௌர்ணிமி, கிரகணதினங்கள் முதலிய பருவகாலங்களும் கோமதி ஸ்நானத்திற் கெடுத்தவை. அந்நாள்களில்

* குறிப்பு:—இந்த ஸ்தலத்தைப்பற்றிய விவரம் இப்புத்தகம் முதற் பாகம் 29-வது பக்கத்திற் காணலாம்.

† குறிப்பு:—இத்தலங்களைப்பற்றியவிவரம் இதற்குப் பின்வரும் பாகத்தில் காணலாம்.

கோமதியில் முறைப்படி ஸ்நானம் செய்து ஸ்ரீரண்சோட்ஜீ பெருமாளை தரிசனம் செய்வோர், தாங்கள் செய்திருந்த பிதுர்ஹத்தி, கோஹத்தி, பிரமஹத்தியாதி பஞ்சமகாபாதகங்களினின்றும் விமுக்தமடைந்து வைகுண்டத்தில் வாசம் செய்வார்கள். இந்த தீர்த்தம் கண்ணன் கோவிலுக்கருகில் இருக்கின்றது. இதில் ஸ்நானம் செய்வதற்கு, டங்கேசுவரர்கட்டம், கலேசுவரி தேவிகட்டம், ரத்னகிரிகட்டம் (பட்ஜி மகாராஜர்கட்டம்) முதலிய ஸ்நான கட்டங்கள் இருக்கின்றன. இதில் கண்ணன் தம் நெஞ்சிலிருந்த இரத்தக் காயத்தோடு தங்கியிருந்தமையானும், அவர் இரத்தம் ஆறுகப் பெருகி அந்த தீர்த்தத்தில் கலந்தமையானும், இந்தத் தடாகத்திலுள்ள ஜலம் எக்காலத்தும் பாசி பிடித்தும், இரத்தக்கரைபோன்ற பாசக்கட்டிகள் நிறைந்தும், உதிர வீச்சம்போன்ற ஓர்வகையான துர்நாற்றம் வீசிக்கொண்டும் இருக்கின்றது. இதில் நாரை, கூழைக்கடா, வாத்து முதலிய நீர்ப்பறவைகள் நிறைந்திருக்கின்றன. அவைகளை ஒருவரும் சுடுவதுமில்லை. பிடிப்பதும் இல்லை. ஆதலின் அவைகள் மனிதர்களைக்கண்டு அஞ்சுவதில்லை. இதன் கரையில் இருக்கும் ஓர் மரத்தில் இலை தெரியாமல் நூற்றுக்கணக்கான பழந்தின்னி வௌவால்கள் தொங்குகின்றன. அவைகளையும் ஒருவரும் இம்சிப்பதில்லை.

(2) சுரதீர்த்தம்:—தாக்கோரிலிருந்து வாயுதிசையில் 4 மைல் தூரத்தில் சுரபுரம் (தேவபுரம்) என்னும் கிராமம் இருக்கின்றது. அதில் சுரதீர்த்தமும் சுரேசுவரர் கோயிலும் இருக்கின்றன. சுரமுனி என்னும் மகான் தவஞ்செய்து சிவபிரானிடம் அனுக்கிரகம் பெற்றவிடம். சுரதீர்த்த ஸ்நானத்திஞல் சுரலோக பிராப்தி.

(3) ரேணுகா தீர்த்தம்:—இது முற்காலத்தில் சுரபுரத்திலேயே இருந்ததாகத் தெரிகிறது. தற்காலத்தில் சொரூபத்திலில்லை.

(4) ஆஞ்சனேயர் கோவில்:—தாக்கோரிலிருந்து அக்கினிதிக்கில் 8 மைல் தூரத்தில் நைஷதவனம் என்னும் ஓர் வனம் இருக்கின்றது. அதில் கோவில்கொண்டுறையும் பவனபுத்திரர் மகாவரப்பிரசாதி. இம்மூர்த்தி ஸ்ரீ ஸமர்த்த ராமதாஸ் சுவாமிகளால் பிரதிஷ்டை செய்யப்பட்டதெனத் தெரிகிறது.

(5) ஸ்ரீ நீலகண்டேசுவரர் கோவில்:—இக்கோவில் நைஷதவனத்திலிருந்து மேற்கில் 8 மைலில் கலத்பூர் (Khaladpur) என்னும் ஓர் கிராமத்தில் இருக்கின்றது. தரிசனம் விசேஷம்.

(6) இரணமுக்த தீர்த்தம்:—இது தாக்கோருக்குக் கிழக்கில் இருக்கின்றது. இதன் கரையில் இரண முக்தேசுவரர் ஆலயம் இருக்கின்றது. சர்வரண நிவாரணம்.

(7) காலவ தீர்த்தம்:—இரண முக்த தீர்த்தத்தின் கிழக்கில் சுமார் 12 மைல் தூரத்தில் காலவி என்னும் புண்ணிய நதியும், அதன் கரையில் ஸ்ரீ காலவேசுவரர் கோவிலும் இருக்கின்றது. முற்காலத்தில் விசுவாமித்திர மகரிஷியின் புத்திரராகக் கருதப் படுபவரும், தவசிரேஷ்டருமான காலவமுனிவர், அனேக வருஷ காலம் சிவபிரானை நோக்கிக் கடுந்தவம் புரிந்தனர். பரமசிவனும் அவர் தவத்திற்கிரங்கி அவர்முன் தோன்றி வேண்டும் வரங் களைக் கேட்கும்படிக் கட்டளையிட்டனர். காலவரும் காளகண் டரை வலம்வந்து நமஸ்கரித்து, “ஹே! சம்போ! மகாதேவா! எனக்குப் பசிப்பிணி அதிகமாயிருத்தலின் காலாகாலத்தில் ஸ்நான சந்தியா வந்தனாதிகள் செய்து உம்மை தியானிக்க முடி கிறதில்லை. ஆதலின் என்னுடைய க்ஷுத்பாதையை நிவர்த்தி செய்தருளல் வேண்டும்.” என வேண்டினர். அதுகேட்ட அம லன், “ஹே காலவரே! உமது தந்தைக்கிருந்த பசிப்பிணி உமக்கு எங்ஙனம் இல்லாதிருக்கும். ஆதலின் நீர் வருஷத்திற் கொருமுறை கொடும்பசியால் துன்புறுவீர். அச்சமயத்தில் நீர் உமது பசியைத் தீர்த்துக்கொள்ளும் பொருட்டு எந்த மிருகத் தைக் கொன்று தின்றாலும் உமது கமண்டலத்தின் நீரை அம்மிரு கத்தின் அஸ்தியின்மேல் புரோட்சணம் செய்வீராயின் அது உடனே உயிர்பெற்றெழும்.” என உரைத்து மறைந்தனர். கால வரும் அவ்வாறே ஆண்டிற்கொருமுறை மிருக மாமிசம் புசித்துக் காலங் கழித்தனர். ஓர்நாள் கௌதமாதி மகரிஷிகள் தீர்த்த யாத்திரை செய்துவந்தவர்கள் காலவர் ஆசிரமத்தின் வழியே போக நேர்ந்தது. காலவர் அவர்களைக்கண்டு அர்க்கிய பாத்தி யாதிகளால் உபசரித்து, அன்று தம் ஆசிரமத்தில் தங்கி உணவு கொண்டுபோம்படி உபசரித்தனர். அவர்கள் காலவர் மிருகங் களைக் கொன்று தின்னும் கொள்கையுடையவர் என்பதை அறிந் தவர்களாதலின், அவரிடத்து உணவு கொள்ள மனமில்லாதவர் களாய், தங்கள் ஆசனம் பூஜாபாத்திரங்கள் முதலியவைகளைக் காசியில் வைத்திருப்பதாகவும், அங்குச் சென்றபிறகு கங்காஸ்நா னம் செய்து உணவுகொள்ளும் நியமத்தோடு வந்திருப்பதாகவும்

விடைபகர்ந்தனர். அவர்களுடைய சூழ்ச்சி மொழிகளைத் தம் தவ வலிமையால் கண்டறிந்த காலவர் உடனே ஓர் தருப்பைப் புல்லை எடுத்தெறிந்து, காசிக்குப்போய் கங்கையை அம்முனிவர்கள் பூஜா பாத்திரங்களுடனும், ஆசனங்களுடனும் அழைத்து வரும்படி ஏவினர். காலவரிட்ட கட்டளையை அறிந்த கங்கை, அம்முனிவர்களுடைய ஆசனம் முதலியவைகளை ஏந்திக்கொண்டு அங்கு வந்து சேர்ந்தனள். அதைக்கண்ட கௌதமாதி முனிவர்கள், மறுமொழியொன்றும் புகலவியலாது கங்கையில் ஸ்நானம் செய்து, தங்கள் தங்கள் பூசைகளை முடித்துக்கொண்டு காலவர் ஆசிரமத்திற்கேகினர். அங்கு எல்லோரும் இருந்து புசிக்குந் தருணத்தில், காலவர் போஜன பாத்திரத்தைத் தவிர மற்றவர்கள் பாத்திரங்களிலிருந்த அன்னமெல்லாம் புழுக்களாய் நெளிந்தது. அதைக்கண்ட காலவர் தம் கண்ணெதிரில் நூற்றுக்கணக்கான புழுக்களைத் தின்னும் மகரிஷிகள் தாம் ஒரு பிராணியைக் கொன்று தின்றுவிட்டு மீண்டும் அதை அரன் திருவருளால் உயிர்ப்பித்து விடுவதை அறிந்திருந்தும், தம் உணவைப் பழித்தது தகுமோவென வாதித்தனர். மகரிஷிகள் வெட்கித் தலை குனிந்தனர். பிறகு காலவர், தாம் செய்வது தாணுவின் ஆணைப் படியாதலின் தம்மைப்பழித்தல் அவனைப் பழித்தலாகும் என்றும், இந்நிலவுலகிலுள்ள அனந்தங்கோடி ஜீவராசிகளும், அண்ட பிண்ட சராசரங்களும், சேதன சேதனப் பொருள்களும் எல்லாம் வல்ல இறைவன் ஒருவன் கட்டளையை மேற்கொண்டொழுகுகின்றன வென்னும் உண்மையை உணர்த்தி, ஒருவரை யொருவர் பழித்தல் தகாத காரியமென எடுத்துக்காட்டினர். அக்காலத்தில் அங்கு வந்த கங்கையானவள் இக்காலத்தும் காலவி என்னும் நாமத்தோடு பிரவகிக்கின்றனள். காலவருக்குக் காட்சி கொடுத்த கறைமிடற்றண்ணலும் காலவேசுவரர் என்னும் திருநாமத்தோடு ஆங்குறைந்து அருள் புரிகின்றனர்.

இத்தலத்தில் பிரயாணிகள் தங்குவதற்கு அனேகம் தர்மசாலைகள் இருக்கின்றன. அவைகளுள் ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து கோவிலுக்குப் போகும் சாலையில் கோவிலுக்கருகில் இருக்கும் தர்மசாலை தங்குவதற்கு வசதியானது. ஜலவசதியுண்டு. இத்தலத்திலும் * பண்டாக்கள் என்னும் பிராமணர்கள்

* குறிப்பு:— நாம் இத்தலம் சென்றிருந்தபோது மணிலால் பீதாம்

ரெயில்வே ஸ்டேஷனுக்குவந்து ஒவ்வொருவண்டிக்கும் காத்திருந்து பிரயாணிகளை அழைத்துச்சென்று அவர்களுக்கு வேண்டிய காரியங்களைச் செய்து வைக்கின்றனர். அவர்களால் அதிகத் தொந்தரவில்லை.

வட இந்தியாவில் உள்ள மற்றக் கோவில்களைப்போலவே இக்கோவிலிலும் யாத்ரீகர்கள் சுயமாகவே, அபிஷேக அருச்சனுதிகளைச் செய்துகொள்ளலாம். மடியுடனிருப்பின் நைவேத்தியமும் கொண்டுபோகலாம். இத்தலத்தில் குங்குமப்பூ கலந்த ஜலத்தால் அபிஷேகம் செய்வதை அதி விசேஷமாகக் கருதுகின்கின்றனர். கேரளநாட்டில் * குருவாயூரிலுள்ள துலாபாரக் காணிக்கை செலுத்தும் வழக்கம் இத்தலத்திலும் இருக்கின்றது. கன்னட தேசத்திலுள்ள † உடுப்பியிற் செய்வதுபோல் இங்கும் யாத்ரீகர்களுக்கு சங்குசக்கர முத்திரா தாரணம் செய்கின்றனர்.

பரமபவித்திரமான கோமதி ஸ்நானத்தோடும், ஸ்ரீரண்சோட்நாத் பிரபுவின் தரிசனத்தோடும் இப் புத்தகத்தின் இரண்டாம்பாகம் முடிவடைகிறது. கண்ணன் திருவருளிருப்பின் பிற்பாகங்களும் கூடியசீக்கிரம் வெளிவரும்.

வற்ரு வருள்சேர் துவரேசன்வண் காதைதன்னைச்
சொற்ருரு மாராய்ந் திடுவாருந் துகளுமே
கற்ருருங் கற்பான் முயல்வாருங் கசிந்துகேட்க
லுற்ருரும் வீடுநெறிப் பாலி னுறுவரன்றே.

வேறு

புன்னெறி யதனிற் செல்லும் போக்கினை விலக்கி மேலா
நன்னெறி யொழுகச் செய்து நவையறு காட்சி நல்கி
என்னையு மடிய ஞக்கி யிருவினை நீக்கி யாளும்
மன்னவன் துவரை வள்ளல் பாதபங் கயங்கள் போற்றி.

ஓம் ஸ்ரீ பகவதீம் வாசுதேவார்ப்பணமஸ்து.

---

பர் பட் என்னும் பண்டாவைத் தேர்ந்தெடுத்தோம். அவர் வயதிற் சிறியவராயினும். பொறுமையிற் பெரியவராக இருந்தனர். பேராசை இல்லாதவர்.

* குறிப்பு :—இத்தலத்தைப்பற்றிய முழு விவரமும் இப்புத்தகம் முதற்பாகம் 79 முதல் 82 வரை பக்கங்களில் காணலாம்.

† குறிப்பு :—இத்தலத்தைப்பற்றிய முழு விவரமும் ஷை முதற்பாகம் 95 முதல் 120 வரை பக்கங்களில் காணலாம்.

# ஸ்தல விவர அட்டவணை.


| ஸ்தலங்களின் பெயர். | பக்கம். | ஸ்தலங்களின் பெயர். | பக்கம். |
|---|---|---|---|
| அமரகண்டகம் | 207 | ஓங்காரமாந்தாத்தா | 207 |
| அமல்னேர் | 206 | ஓங்காரம் | |
| அம்பர் நாத் | 34 | ஓஜர் | 33 |
| அவுரங்கபாத் | 175 | கங்காப்பூர் | 139 |
| அவுரங்கபாத் சையத் | 176 | கணேசகிண்ட் | 27 |
| அனந்தசயனம் | 119 | கலத்பூர் | 256 |
| அன்வா | 204 | கல்யாண் | 35 |
| அஜன்டா | 204 | காஞ்சாரணியம் | 187 |
| இகத்புரி | 61 | காளஹஸ்தி | 157 |
| இந்தோர் | 216 | காஸாரா | 59 |
| இராமகயை | 88 | கிரிஜாத்மகிரி | 32 |
| இராமக்ஷேத்திரம் | 75 | குலசனுபாத் | 66 |
| உஸ்மானுபாத் | 4 | குல்தாபாத் | 176 |
| உஜ்ஜயினி | 218 | குஷ்ணேசுவர் | 179 |
| எரண்டோல் | 205 | கோதா க்ஷேத்திரம் | 75 |
| எலிபான்டா | 53 | கோரேகாவ்ம் | 56 |
| எல்லோரா | 176 | கோவர்த்தனம் | 139 |
| ஏஹேள்காவ்ம் | 196 | சப்தசிருங்கி | 168 |

| ஸ்தலங்களின் பெயர். | பக்கம். | ஸ்தலங்களின் பெயர். | பக்கம். |
|---|---|---|---|
| சம்பாதிபுரம் } | 203 | தாருகாவனம் | 185 |
| சம்பாதிவனம் } | | தாணு | 35 |
| சாண்டோர் (Chandore) | 173 | திரயம்பகம் | 147 |
| சீத்தடேக் | 9 | திரிகண்டகம் | 75 |
| சித்தப்பூர் | 195 | திருக்கடவூர் | 82 |
| சிவனேரி | 33 | திருக்காழிச் சீராமவிண்ணகரம் | 68 |
| சீகாளத்தி | 157 | திருக்காளத்தி | 157 |
| சூரபுரம் | 256 | திருக்கோவலூர் | 68 |
| சுவாமிமலை | 120 | திருக்கோளிலி (திருக்குவளை) | 184 |
| டங்கபுரம் | 227 | திருப்பதி (திருவேங்கடம்) | 249 |
| டாங்களி | 139 | திருப்புன்கூர் | 187 |
| டைகூர் | 56 | திருமறைக்காடு | 188 |
| டோலவ்லி | 34 | திருவண்ணாமலை | 156 |
| தபோவனம் | 136 | திருவரங்கம் | 249 |
| தவுலத்தபாத் (தேவகிரி) | 173 | திருவிடைமருதூர் | 8 |
| தாக்கோர் | 227 | திருவீழிமிழலை | 85 |
| தாடாளன் கோவில் | 68 | துவா | 224 |
| தாதர் | 53 | துளஜாப்பூர் | 3 |
| தாமிரம் | 253 | தேவபுரம் | 256 |
| தாராசி | 3 | | |

| ஸ்தலங்களின் பெயர். | பக்கம். | ஸ்தலங்களின் பெயர். | பக்கம். |
|---|---|---|---|
| தேவூர் | 9 | பூனு | 9 |
| நண்டேரா | 204 | போரிவ்லி | 56 |
| நல்லஸோப்பரா | 57 | பைக்கல்லா | 52 |
| நாசிக் | 62 | பைட்டன் (பிரதிஷ்டானம்) | 182 |
| நிர்மலம் | 57 | மகேசுவரம் (மாஹிஷ்மதி) | 215 |
| நிவாசம் (நேவாசே) | 182 | மறைக்காடு | 188 |
| நைஷதவனம் | 256 | மன்மாட் | 172 |
| பஞ்சவடி | 62 | மஸரூள் | 146 |
| பத்மநகரம் | 66, 75 | மாதாப்பூர் (மாஹுர்) | 191 |
| பம்பாய் | 38 | மாத்துங்கா | 37 |
| பரலி | 182 | மாந்தாத்தா | 207 |
| பாஞ்சாலங்குரிச்சி | 14 | மோமினுபாத் | 7 |
| பார்ஷி | 2 | மோர்ட்டக்கா | 215 |
| பாலி | 34 | ராஞ்சணகாவ்ம் | 33 |
| பிம்ப்ரி | 61 | ரோஸா | 176 |
| பிரகாஷா | 206 | லோஹோகாட் | 36 |
| பீமசங்கரம் | 33 | வானவடி | 31 |
| புள்ளிருக்கு வேளூர் | 202 | விஜாப்பூர் | 36 |
| புந்தாம்பே (புண்ணியஸ்தம்பம்) | 182 | வேதாரணியம் | 188 |
| புஷ்கரம் | 155 | வேரூள் | 179 |

| ஸ்தலங்களின் பெயர். | பக்கம். | ஸ்தலங்களின் பெயர். | பக்கம். |
|---|---|---|---|
| வைத்தீசுவரன்கோவில் | 202 | ஜனஸ்தானம் | 76 |
| ஹரிஹரக்ஷேத்திரம் | 75 | ஜுன்னர் | 32, 34 |
| ஸால்ஸெட் | 56 | ஜோகாயி | 7 |
| ரக்ஷயிஸ்தேபுரம் | 24 | ஸ்ரீரங்கம் | 249 |





## சீகாழி டாக்டர் இராஜாராம் ராவால் தயார் செய்யப்பட்ட ஔஷதங்கள்.

(1) ஆபத்துக்காத்தவர் பால சஞ்சீவி மாத்திரை. குழந்தைகளுக்கு அஜீர்ணத்தினல் உண்டாகும் பலவித மாந்தங்களுக்குக் கை கண்ட ஔஷதம். 50 மாத்திரைகள் :—0—6—0

(2) ஆபத்துக்காத்தவர் மகா கட்டுவாதி மாத்திரை. குழந்தைகளுக்கு ஏற்படும் உஷ்ணத்தினல் குடலைப்பற்றி வரும் எல்லாவித நோய்களுக்கும் உதவும். 50 மாத்திரைகள் :— 0—6—0

(3) ஆபத்துக் காத்தவர் மகா கோரோஜனை மாத்திரை. குழந்தைகளுக்குக் காணும் ஜலதோஷம், இருமல், ஜுரம் முதலியவைகளுக்கு மருந்து. 75 மாத்திரைகள் :— 0—8—0

(4) ஆபத்துக்காத்தவர் சமய சஞ்சீவி மாத்திரை. குழந்தைகளுக்கு மாந்தத்தினல் வரும் இழுப்பு (Couvulsion) ஜலதோஷத்தினல் வரும் ஜுரம், மலபந்தம் இவைகளுக்குக் கொடுக்கலாம். 50 மாத்திரைகள் :— 0—8—0

(5) ஆபத்துக் காத்தவர் கணை எண்ணெய். குழந்தைகளுக்குக் காணும் நீர்க்கணை, தெற்கத்திக்கணை முதலிய எல்லாவிதக் கணை நோய்களுக்கும் ஒப்பற்ற ஔஷதம். ஒரு அவுன்ஸ் :—0—4—0

மேற் சொல்லிய மருந்துகள் ஓர் வீட்டில் இருந்தால் எத்தனைக் குழந்தைகளிருந்தாலும் வைத்தியரைத் தேடவேண்டிய அவசியமே இராது.

மருந்துகள் கிடைக்குமிடம் :—

**T. S. Rajaram Row & Sons.**

*Shiyali.*